

சிவத்திருமன்றம்

# சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்
## (ஆன்மார்த்தம்)

செ. சொர்ணலிங்கம்



வெளியீடு : சிவத்திருமன்றம், கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூசை முறைகளிற்
# சித்தாந்த விளக்கம்
## (ஆன்மார்த்தம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியரின் ஏனைய வெளியீடுகள்**

1. கந்தசஷ்டி விரதமும், கந்தபுராணக் கருவும் - 1997
2. அந்தணரும் அக்கினி காரியமும் - 1997
3. திருப்புகழை விருப்பமொடு - 2009
4. ஏழிசையாய் இசைப்பயனாய்
   (சிவ முத்தமிழ், வாக்கியகாரர், இசையாளர்) - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NL/BRL/3062

# சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்

## (ஆன்மார்த்தம்)

**ஆக்கியோன்**

சித்தாந்த செம்மல்

சிவத்திரு ஈசான சொர்ணலிங்க தேசிகர் B.Sc

**வெளியீடு**

சிவத்திருமன்றம் - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

சிவபூசைமுறைகளிற் சித்தாந்த விளக்கம். (ஆன்மார்த்தம்)
© செ. சொர்ணலிங்கம் BSc
முதற்பதிப்பு : 2017
ISBN 978–955–4767–01–0

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டுப் பட்டியற் தரவு.

சொர்ணலிங்கம், செ.
சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம். / செ.சொர்ணலிங்கம். -
கொழும்பு : சிவத்திருமன்றம் 2017.-
ப. xlvi, 485; செ.மீ. 21.
ISBN 978-955-4767-01-0.
i. 294.5513 டிவி 23 ii. தலைப்பு
1. சைவம் - இந்து சமயம்

அட்டை வடிவமைப்பு : கரிகணன் (தனியார்) நிறுவனம்

பதிப்பு : கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு : சிவத்திருமன்றம், 32B ஸ்ரீசுமங்கலாவீதி, ரத்மலானை

விலை : ரூ. 1200 / -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இளமைக் காலந் தொட்டு

கலை சமய விஞ்ஞானத் துறைகளில்

வழிகாட்டிகளாய்த் திகழ்ந்தும்,

கனா மூலம் இருவருமாய்க் காட்சி தந்து

சிவராசாக் குருக்களிடம் விசேட தீட்சை பெற்று

சிவபூசை ஆற்றும்படி அருளியும்,

இந்நூல் எழுதக் காரணமாயும் விளங்கிய

ஆசிரிய மணிகளான

அண்ணா திரு. செல்லையா சதாசிவத்திற்கும்,

அக்கா திருமதி பாக்கியம் மகாதேவாவுக்கும்

இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இந்நூலாசிரியர் பற்றி

இந்நூலாசிரியரான சிவத்திரு. செ. சொர்ணலிங்கம் அவர்கள் செல்லையா பொன்னம்மா தம்பதியினருக்கு யோகர் சுவாமிகளின் எதிர்வுகூறற் பிரகாரம் 1947 சித்திரையில் இளையபுத்திரனாகப் பிறந்தார். இளவயதிலேயே ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலைக் கல்வியுடன் முதற்தீட்சை பெற்று திருமுறைப்பயிற்சி, இசைப்பயிற்சி என்பவற்றிலும் ஈடுபட்டார். தாய்மொழியிற் கலைப்பாடங்களைக் கிளிநொச்சி ஏழாம் வாய்க்கால் உருத்திரபுரம் இந்து மகா வித்தியாலயத்திற் பயின்றும் ஆங்கில மொழியில் விஞ்ஞானபாடங்களைத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் பயின்று இரண்டிலும் தனித்தனியாகச் சாதாரண பரீட்சைச் சித்திபெற்று, தொடர்ந்து பெரதெனியாவிற் பௌதிகவிஞ்ஞானப் பட்டம் பெற்றார். அதன் பின்னர் தொழிலாற்றிக் கொண்டே லண்டன் பொறியியற் பரீட்சைகளிலும் சித்திபெற்றார்.

தெய்வாதீனமாக அக்கல்வியைத் தொடராது சைவசித்தாந்தம், திருமுறை முற்றோதல், புராணபடனம், சித்தாந்தம் என்பவற்றிலேயே அதிக ஊக்கமாயிருந்தார். யாழ்ப்பாண இந்துக்கல்லூரியிலும், மத்திய கல்லூரியிலும் ஆசிரியராயிருந்த பின்னர் அரச கூட்டுத்தாபனத்திலும் பின்னர் இடம்பெயர்ந்ததால் கதிர்காமம் உட்படப் பல்வேறு சமய ஸ்தாபனங்களிலும் நிறைவேற்று அதிகாரியாக இருந்துள்ளார். மாலை தீவிற் கணித ஆசிரியராயும் பின் இலைசியம் முதலிய இலங்கைச் சர்வதேச பாடசாலைகளின் ஆசிரியராயும் இருந்துள்ளார்.

உலகளாவிய 'டான்ரிவி' யில் பல காலமாக சைவ நற்சிந்தனை ஆற்றி வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்களின் வழிகாட்டலிலும் சித்தாந்தி சங்கரப்பிள்ளை அவர்களின் அரவணைப்பிலும் 2000ம் ஆண்டிற் கொழும்பிற் சிவத்திருமன்றம் நிறுவிப் பன்முக சிவசேவையாற்றி வருகின்றார். 2010ல் கனவுமூல அநுமதியுடன் இரண்டாம் தீட்சைபெற்று 'ஈசானதேசிகர்' எனும் தீட்சாநாமத்துடன் சிவபூசையாற்றும் இவர் சைவசித்தாந்தத்தின் செயல்வடிவாகவே சிவபூசை யமைந்ததனை மகிழ்ந்து நோக்கிப் பிறர்க்குங் கூறுவார். அதன் விளைவாயமைந்ததே இந்நூல் ஆகும்.

சைவ சித்தாந்தக் கட்டுரைகளை உலக சைவப்பேரவை, மற்றும் இலங்கைப் பத்திரிகைகள் என்பவற்றில் எழுதியும், திருக்கேதீஸ்வர மான்மிய 3ம், 5ம் காண்டங்களை வெளியிட மன்றத் தலைவர் புராணவித்தகர் திரு மு. தியாகராசா அவர்களுடனும், உபதலைவரும், சட்டத்தரணியும், தற்புருஷதேசிகரெனும் தீட்சா நாமமுமுடைய தம் பாரியாருடனும் சேர்ந்து செயற்பட்டுமிருந்தார். சில கையேட்டு நூல்களுடன் 612பக்க சிவமுத்தமிழின் ஆய்வுமுறையில் அமைந்த 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்ற நூலும் எழுதி கொழும்புத் தமிழ்ச்சங்கத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வெளியிட்டார். இது அண்ணாமலையுட்பட்ட பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள நூலகங்களில் இடம்பெற்றுள்ளது. பல இசையாளர்களைச் சேர்த்து உபகுழு அமைத்து 'திருப்புகழிசை அறுபது', 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்ற பெயரில் 70 தமிழிசைப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு என்பன மன்றினால் வெளிவரத் தமது முக்கிய பங்களிப்பினை ஆற்றியுள்ளார்.

சைவத்தின் தூய்மை பேணப்பட வேண்டுமாயின் அதனை இந்துவெனும் பெயரால் அழைத்தல் பொருத்தமற்றது என்ற மன்றக் கொள்கையினைத் துணிவுடன் செயலாக்கி வருகின்றார். மேற்படியான சைவ சித்தாந்த சேவைகளுக்காக 2017ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகம் இந்துநாகரிகத்துறையினர் தமது இரண்டாம் உலகச் சைவ மாகா நாட்டில் இவரைக் கௌரவிக்கின்றனர்.

**திருமதி கலைமதி சுஜந்தன்** (B.M.S)
சிவத்திருமன்ற நிர்வாகசபை உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பதிப்புரை

சைவத்தின் தூய்மை பேணல், தரமான சைவநூல்களைப் பதிப்பித்தல் சைவசாத்திர தோத்திரங்களைப் போற்றி வளர்த்தல் ஆகியவற்றை 2001ம் ஆண்டிலிருந்து கொழும்புச் சிவத்திருமன்றம் ஆற்றிவருகின்றது. ஸ்தாபகர் கலாநிதி பண்டிதர் மு.கந்தையா, முன்னாட் போஷகர் திரு வி.சங்கரப்பிள்ளை ஆகியோரின் மறைவின் பின்னும் இத்தொண்டினை மன்றம் முன்னெடுத்து வருகின்றது. மன்ற நடவடிக்கைகள் சமகாலத் தேவை கருதியே ஆற்றப்படுகின்றன. இவ்வகையில் செயலாளர் சிவத்திரு ஈசான சொர்ணலிங்கதேசிகர் 20014ல் சைவசித்தாந்தப் பொருளுடைய எழுபது பாடல்களை இசைக்குழு மூலம் ஏழிசையாய் 'இசைப் பயனாய்' என்ற பத்துக் கச்சேரிகளடங்கிய இறுவட்டும் அதே தலைப்பில் சிவமுத்தமிழ் எனும்படியான 612பக்க ஆய்வுநூலும் எழுதிக் கொழும்பிலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் வெளியிட்டுள்ளார்.

சைவசித்தாந்த அறிவு பரார்த்தத்திற்கு முன்னாகச் செய்யவேண்டிய ஆன்மார்த்த சிவபூசைக்கும் பரார்த்தபூசைக்கும் அவசியமாதலை உணர்ந்து 'சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்' என்ற இந்நூலை ஆய்வுடன் மிக விரிவாக எழுதியுள்ளார். சிவபூசை யாற்றியதாலாய அனுபவமும் குருமூலமான சித்தாந்த விளக்கமும், திருமுறை யோதல், புராணபடனம், ஆலயத்தொண்டு ஆகியவற்றாலாய அனுபவமும் இந்நூலிற் றுலங்குகின்றன. வேதாகமங் கற்றோரும், மரபுவழிச் சிவபூசையாளரும் விரும்பும்படி பலவிதமான ஆதாரங்களுடன் எழுதியுள்ளார். சிவபரத்துவத்திற்குக் குந்தகமின்றிச் சமயவாழ்வு வாழ நாம் சைவர் ஆவோமன்றி வேறெந்தப் பெயருக்கும் உரித்தானவர்களல்ல என்ற மன்றக் கருத்தை நூலில் வெகுவாக உணர்த்தியுள்ளார்.

மடாலயமமைத்து அதிகார சிவபூசையாற்றிக் கிராமப் புறங்களில் சைவம் வளர்க்கும் தொண்டினை பிற்கால உள்நோக்கமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றும் அவரின் சிவப்பணியைச் சிவத்திருமன்றம் பாராட்டி மகிழ்கின்றது. அண்மையில் வைசத்தின் தூய்மை பேணுவதற்காக அமைக்கப்பட்ட சைவத் தமிழ் பண்பாட்டு நிறுவனங்களின் ஒன்றியம் என்ற அமைப்பின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சைவ அர்ச்சகர், சித்தாந்த மாணவர்- ஆசிரியர், சிவப் பணியாளர்கள், ஆலய நிர்வாகிகள் யாவரும் இந்நூலைப் பெற்றுப் பயனடைய சிறந்த பதிப்பாக மன்றம் இதனை வெளியிடுகின்றது. சிவமுத்தமிழ் எனும்படி தமது முன்னைய நூலைப் பல்வித கோணங்களில் ஆய்வு செய்ததைப் பலரும் பாராட்டியதால் இந்நூலையும் அதே பாணியைக் கையாண்டு எழுதியுள்ளார். இந்நூல் சைவ உலகிற்கு ஒரு நற்பிரசாதமாகி, சிவம் பெருக்குந் தொண்டாகி. சைவத்தின் தனித்துவமும் பெருமையும் காப்பதாகுக.

"நான்மறைச் சைவமோங்கிப் புல்குக உலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க"

**திருமதி புவனராணி இரகுநாதன் M.Sc.**
சித்தாந்தரத்தினம், உபசெயலாளர்,
சிவத்திருமன்றம், கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு**

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இத்துமத அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவர்களின் வாழ்த்துச்செய்தி**



சிவத்திருமன்றத்தால் வெளியீடு செய்யப்படுகின்ற “சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்” என்ற இந் நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நாம் சிவபூமியில் வாழ்கின்றோம் . “அன்பே சிவமயம்” என வாழும் பக்தர்கள் ஏராளம். சிவாலயங்கள், சிவவழிபாடு, சிவபூசை எல்லாமே எமது சொத்துக்கள். சைவர்களாகிய நாம் அன்றாடம் கைக்கொள்ளும் சமயப் பழக்கவழக்கங்களை முறையாக எவ்வாறு ஒழுக வேண்டும் என்ற தேடலைச் செய்கின்றபோது இந்நூல் கலங்கரை விளக்காய் வழிகாட்டு என்பது எனது நம்பிக்கை.

சிவத்திரு சொர்ணலிங்கம் அவர்கள் சைவசித்தாந்தம் தொடர்பாக ஆழ்ந்த புலமையுடையவர், சைவசமய நெறிநிற்பவர். இத்தகைய ஒருவர் ஆக்கிய “சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்” என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் ஆத்மார்த்த பூசையில் ஈடுபடும் ஒவ்வொரு சைவனுக்கும் பயனுள்ளதாய் அமையும்.

இந்நூல் அனுபவ பூர்வமாகவும் விரிவாகவும் அமைவதுடன் தீட்சை முறைகள், சிவபூசை, சூரியபூசை, போசனவிதி, திருமுறையோதல் முதலான பலவிடயங்களை அறிமுறை, செய்முறை விளக்கத்தோடு அமைவதுடன் சிவத்திருவடிவங்கள், அத்துவாக்கள், 36 தத்துவங்கள் போன்ற சித்தாந்த விளக்கங்களுடன் இணைந்துள்ளமையும் சிறப்பான விடயமாகும்.

வேதாகமம் கற்றோரும் மரபுவழிச் சிவபூசையாளரும் விளங்கும் வண்ணம் பலவித ஆதாரங்களுடன் அமையப்பெற்ற இந்நூல் அனைவருக்கும் பயனுள்ளதாய் அமையவும், இந்த நல்ல கைங் கரியத்தைச் செய்த நூலாசிரியர் சிவத்திரு சொர்ணலிங்கம் அவர்களது பணி சிறக்கவும், எல்லாம்வல்ல சிவப்பரம்பொருளை வணங்கி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டி. எம் சுவாமிநாதன்**
**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,**
**புனர்வாழ்வளிப்பு,மீள்குடியேற்றம்,**
**மற்றும் இந்துமத அலுவல்கள்**
**அமைச்சர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாள்: 22-07-2016

## அருள் வாழ்த்துரை

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க.

**கிரியை என மருவும் அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும் உண்மைச்
சரியைக் கிரியா யோகத் தன்மையோர்க்குச்
சாலோக சாமீப சாரூபங்கள்
மருவியிடும் உயர்ஞானம் இரண்டாம் மாறா
மலமகல அகலாத மன்னு போதத்
திருவருளொன்று ஒன்றதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என்று உலகறியச் செப்பும் நூலே.**

**- சிவப்பிரகாசம்.**

*சிவத்திரு. ஈசான சொர்ணலிங்க தேசிகர் அவர்களால் எழுதப்பெற்ற "சிவபூசை முறைகளில் சித்தாந்த விளக்கம்" என்ற நூலானது ஈழத் திருநாட்டில் கொழும்பு சிவத்திருமன்றத்தினால் வெளியிடப் பெறவுள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை என்று பெரியபுராணம் கூறுமாறு சிவபூசையே ஆன்ம லாபத்திற்கு வழிவகுக்கும்.

பரார்த்த பூசைக்கு ஆன்மார்த்த பூசை இன்றியமையாத சாதனமாதலையும், இப்பூசைக் கிரியைகள் சித்தாந்த ஞானத்திற்கு வழிவகுப்பன ஆதலால் இவற்றின் தத்துவ அடிப்படையை நன்குணர வேண்டியிருத்தலையும் தெளிவுபடுத்தி இந்நூல் சிறப்பாக இயற்றப்பெற்றுள்ளது. சிவத்திரு. ஈசான சொர்ணலிங்க தேசிகர் அவர்களின் இந்நூற்பணி பாராட்டத்தக்கது.

வழிபாட்டு நெறிநிற்கும் அடியார் பெருமக்கள் இந்நூலை வாங்கித் தாமும் பயின்று பிறருக்கும் பயில்வித்துச் சிவநெறி தழைக்கத் தொண்டாற்றுதல் கடன்.

கொழும்பு சிவத்திரு மன்றத்தின் சைவ வளர்ச்சிப் பணிகள் மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ ஞான மாநடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

**இணைப்பு** : **திருநீற்றுத்திருக்காப்பு**

பெறுநர் : **சைவத்திருவாளர். ஈசான சொர்ணலிங்க தேசிகர் அவர்கள், செயலாளர் - சிவத்திரு மன்றம், கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

உ

சிவமயம்

ஓம் ஸ்ரீ குருப்யோ நம, ஸ்ரீ கணேசாய நம

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.;

சிவத்திரு ஈசான சொர்ணலிங்க தேசிகர் அவர்கள் "சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்" என்று எழுதிய இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிவபூசை முறைகளை சித்தாந்த விளக்கத்துடனும், திருமுறை முற்றோதல், சிவபூசை, புராணபடனம், ஆலயத்தொண்டு முதலிய சிவபுண்ணியங்களினூடாகப் பெற்ற அநுபவங்களுடனும் ஆய்ந்து எழுதியுள்ளார். இந்நூல் அனுபவ பூர்வமாகவும், விரிவாகவும், அமைவதுடன் முத்திரைகளின் விளக்கப் படங்கள், மற்றும் சிவபூசைக்கு ஆதாரமான படங்களுடன் கூடிய கருத்துக்கள், சித்தாந்த அட்டவணைகள் எனப் பலவற்றை உள்ளடக்கியதாக மிளிர்கின்றமை சிறப்பம்சமாகும். மேலுமிது யாவரும் விளங்கி உணர்ந்து கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளமை போற்றற்குரியதாகும்.

இந்நூல் சைவக்குருமாருக்கும், சைவசித்தாந்தம் கற்கும் மாணவர்க்கும், ஆசிரியர்க்கும், மற்றுமுள்ள சைவத் தொண்டர்களுக்கும், சிவாலய தர்மகர்த்தாக்களுக்கும் மிகவும் பயனுடையதாக அமைந்துள்ளது. அன்னாரின் இச் சிவகைங்கரியம் மென்மேலும் வளர்ச்சியடைந்து, இன்னும் பல நூல்களையும் ஆராய்ந்து, சிவதொண்டாற்றும் வண்ணம் எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானின் பாதார விந்தங்களை வணங்கி வேண்டி அவரை வாழ்த்தி நிற்கின்றேன்.

**ஆகமசூடாமணி ச. விஸ்வநாதகுருக்கள்**

பழைய கதிர்வேலாயுதஸ்வாமி நகரத்தார் கோயில்

பம்பலப்பிட்டி, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற கந்தபுராண மகுடவாசகத்தின் வழித்தடத்தில் வாழ்ந்து வரும் சித்தாந்தச்செம்மல் சிவத்திரு ஈசான சொர்ணலிங்க தேசிகர், B.Sc அவர்கள் எழுதிய "சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம் ஆன்மார்த்தம்" என்னும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"கிரியை என மருவுமவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்பது சைவசித்தாந்த நிலைப்பாடாகும். சிவாகம முறைப்பட்ட கிரியைகள் யாவும் சைவசித்தாந்தப் பொருள் பொதிந்தவையாக விளங்குகின்றன.

சிவாச்சாரியாராக இல்லாத ஒருவர் இப்படியான ஒரு தலைப்பில் நூல் எழுதியமை பாராட்டுதலுக்குரியது. நூலாசிரியர் சிவபூஜைக் கிரியைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவராக விளங்குவதையும் சைவசித்தாந்த அறிவுத் தெளிவுடையவராக இருப்பதையும் இந்நூல் நன்கு எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. நூலாசிரியர் இதற்கு முன்னர் இசைபற்றி ஓர் அரிய நூலை வெளியிட்ட பெருமைக்குரியவர்.

பலருக்கும் பயன்படத்தக்க இதுபோன்ற நூல்களை நூலாசிரியர் மென்மேலும் எழுதி வெளியிடத் திருவருளைப் பிரார்த்திப்பதோடு நூலாசிரியர் இன்னும் பல்லாண்டுகள் வளத்துடன் வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்**
**தலைவர், இந்து நாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சைவத்தின் மேன்மையை உலகறியச் செய்வதற்கும் மக்கள் ஆத்மீக நலன் பெறுவதற்குமான வழிமுறைகளில் சாஸ்திர பூர்வமான விடயங்களுக்கு விளக்கமான நூல்கள் எழுதி வெளியிடுவது புனிதமான பணியாகும். இத்தகைய பணிகளின் பெறுபேறாகச் சைவசமயத்தினதும் சைவசித்தாந்தத்தினதும் உட்பொருளை அறிந்து அவரவர் தத்தமது வாழ்வியலில் கடைப்பிடித்தொழுக வாய்ப்பேற்படுகின்றது. சமகாலத்தில் வாழ்பவர்கள் மாத்திரமன்றி எதிர்காலச் சந்ததியினரும் இத்தகைய அரிய விளக்க நூல்களால் பெரும் பயனடைவர் என்பது திண்ணம்.

மனிதன் தன்னைப் பற்றியும் தன்னைச் சார்ந்துள்ள பொருள்களைப் பற்றியும் எப்பொழுது அறியவும் உணரவும் தொடங்கினானோ அன்றே அவன்பால் சமய உணர்வு உதயமாயிற்று எனலாம். தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும், தன்னைச் சூழவுள்ள அனைத்துப் பொருள்களையும் படைத்தும் காத்தும், அழித்தும், மறைத்தும், அருளியும் வருகின்ற பரம்பொருளை இறைவன் எனவும் கடவுள் எனவும் கருதத் தொடங்கியதோடு இறைவனுக்கும் தனக்குமுரிய இயைபையும் அவ்விறையை அடைவதற்குரிய நெறியையும் அடைவதற்குத் தடையாக உள்ளவற்றையும் ஆராயத் தலைப்பட்ட உணர்வே சமய உணர்வாயிற்று. சமய நூல் உணர்வின்றேல் சமய ஒழுக்கம் சித்தியாது என்பது நாவலர் பெருமான் வாக்கு. இவ்வகையில் சிறப்புப்பெறுவது தொன்மையும் சிறப்பும் வாய்ந்த சைவசமயமாகும். முழுமுதற் கடவுளாகிய சிவப்பரம்பொருளைத் தலைவனாகக் கொண்டு அப்பரம்பொருளை வணங்கி உய்யும் நெறியை வகுத்துக் கொடுக்கும் சமயமே சைவசமயம். அச்சமய மரபில் சிவனை உள்ளன்புடன் வழிபட்டு உய்வதற்கு எமக்கு சிவாகமங்களும் திருமுறைகளும் மெய்கண்ட சாஸ்திரங்களும் பெரிதும் உதவி வருகின்றன. இவை கூறும் வழிபாட்டு முறைகளில் சிவனை ஆன்மார்த்தமாக வழிபடும் சிவபூசை சிறப்புடையது. இச்சிவபூசை மகிமை பற்றி சிவத்திரு. செல்லையா சொர்ணலிங்கம் அவர்கள் "ஆன்மார்த்த சிவபூசை முறைகளின் சித்தாந்த விளக்கம்" என்ற அரிய நூலினை எழுதி வெளியிட முன்வந்திருப்பது அறிந்து மகிழ்ச்சியடைவதோடு அவருக்கு எனது நல்வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக. விஞ்ஞான பட்டதாரியான ஆசிரியர் சைவசமய வழிபடுமுறைகளை வெளிக்கொணரும் வகையில் நூற்பணியில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அவரது ஆன்மார்த்த பூஜா பலனும் சமய நம்பிக்கையும் சமய அபிமானமுமே இத்தகைய முயற்சிக்குரிய காரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர் கொழும்பு சிவத்திருமன்றத்தின் செயலாளராவார். சைவமரபிற்கேற்ப விசேடதீக்சை பெற்று ஈசான தேசிகர் என்ற திருநாமத்தைப் பெற்று ஈசான சொர்ணலிங்க தேசிகர் எனத் தமது சமயப்பற்றினை உறுதியுடன் வெளிப்படுத்தி நிற்பவர். கொழும்பு சிவத்திருமன்றத்தின் பணிகள் சைவத்தினைப் பேணிப் பாதுகாக்கும் இலட்சியத்தைக் கொண்டவை. சைவத்தின் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தல், மக்களுக்குத் தேவையான பொருத்தமான சைவநூல்களை இனங்கண்டு பதிப்பித்தல், சைவ சாத்திரங்களையும் தோத்திரங்களையும் பாதுகாத்தல் போன்றவை இம்மன்றத்தின் முக்கிய பணிகள். இம்மன்றத்தின் ஸ்தாபகராக விளங்கிய பெருமைக்குரியவர் இலக்கியக் கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களாவர். அவர் சைவசித்தாந்தத்தில் சிறந்த புலமையாளர். அரிய பல நூல்களை ஆக்கியளித்த பெருமை மிக்கவர். இம்மன்றத்தின் போஷகராக விளங்கியவர் திரு. வி. சங்கரப்பிள்ளை. இவர்களிடம் திரு. சொர்ணலிங்கம் குருசீட முறையில் சமயக்கல்வியைப் பெற்றவர். இப்பெரியார்களது மறைவின் பின்னர் அவர்கள் காட்டிய வழியில் திரு. சொர்ணலிங்க தேசிகர் இம்மன்றத்தின் இலட்சியங்களை முன்னெடுக்கும் வகையில் **2014** ஆம் ஆண்டில் சைவ சித்தாந்தப் பொருளுடைய எழுபது பாடல்களை இசைக்குழு மூலம் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்ற பெயரில் பத்துக் கச்சேரிகள் அடங்கிய இறுவட்டையும் அதேபெயரில் சிவமுத்தமிழ் கூறும் **612** பக்க ஆய்வு நூலினையும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வெளியிட்டவர். தமது குருமார் மூலம் மெய்கண்ட சாத்திரங்கள் பெரும்பாலான வற்றைக் கற்கும் வாய்ப்பினைப் பெற்றவர். திருமுறை முற்றோதலில் பல வருடகால அனுபவமிக்கவர். தமது வாழ்நாளில் நிர்வாகத் துறையிலும் சர்வதேசபாடசாலைகளில் ஆசிரியப்பணியிலும் தம்மை இணைத்து அனுபவத்தை வளர்த்துக் கொண்டவர். விசேட தீக்சைக்குப்பின் கடந்த ஐந்து வருடங்களாகத் தமது துணைவியார் சகிதம் சிவபூசையாற்றி வருபவர் **2001** ஆம் ஆண்டு முதல் கொழும்பு சிவத்திரு மன்றத்தின் பணிகளை முன்னெடுத்து வருபவர். தமது குருநாதராகிய ஏழாலை பண்டிதர் மு, கந்தையா அவர்களின் மூன்று நூல்களை வெளியிட்டுத் தமது குருபக்தியை வெளிப்படுத்தியவர். இத்தகைய அநுபவத்தின் பெறுபேறாக அவர் வெளியிடும் இந்நூல் சிவபூசை தொடர்பான பல விளக்கங்களையும் சிவனது தெய்வீகப் பெருமைகளையும் உள்ளடக்கியதாக மூன்று பாகங்களைக் கொண்டு **485** பக்கங்கங்களுடன் வெளிவருகின்றது.

சைவ சித்தாந்தம் பற்றிய அறிவுத்தேடல் எமது பிரதேசத்தில் பன் னெடுங்காலமாக அறிஞர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வரிசையில் திருநெல்வேலி ஞானியாகிய ஸ்ரீ ஞானப்பிரகாசரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் சைவ சித்தாந்த அறிவுப் பரம்பலுக்குப் பெருந்துணை புரிவன. சைவ சித்தாந்தக் கருவூலமாகிய கந்தபுராணத்திற்கு நாவலர் பெருமானது கந்தபுராண வசனநூல் மற்றும் பல நூல்கள் இத்துறையில் குறிப்பிடற்பாலன. காசிவாசி செந்திநாதையரது நூல்களும் சைவசித்தாந்த அறிவுத்தேடலுக்குப் பெரிதும் உதவுவன. சைவத்தின் மேன்மையையும் திருக்கோயில் வழிபாட்டில் சைவ சித்தாந்த மரபுகள் இழையோடியிருக்கும் சிறப்புக்களையும் சிவபூசையின் மகத்துவத்தையும் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களது நூல்கள் சிறப்புற எடுத்துக் கூறுகின்றன. இம்மரபில் நாவலரைத் தொடர்ந்து வந்த ஞானபரம்பரையினர் சைவசித்தாந்த அறிவு விளக்கத்திற்கான பல நூல்களை வெளியிட்டு உதவியுள்ளனர். ஆசிரியரின் குருநாதர் பண்டிதர் மு. கந்தையா அவர்களும் சிவாலயக் கிரியைகளின் சைவசித்தாந்த விளக்கத்தைக் கொண்ட நூல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடற்பாலது.

இம்மரபின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாக அமைவதே சிவத்திரு சொர்ணலிங்கம் அவர்களது இந்நூலாகும். சைவசித்தாந்த அறிவு சைவசமய மரபில் இடம்பெறும் பரார்த்த பூசைக்கும் அதற்கு முன்பாக இடம் பெறவேண்டிய ஆன்மார்த்த பூசைக்கும் அவசியமாகும். (ஆன்மார்த்த பூசை சிவபூசைக்கும் பரார்த்த பூசைக்கும் முன்னோடியாக அமைவது).

“சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்

அவனருளாலே அவன் தாள் வணங்கி”

எனும் மணிவாசகப் பெருமானது திருவாக்கிற்கேற்ப சிவபூசையின்வழி சிவானுபவம் பெறுவது உன்னதமான சிவப்பேறாகும். எனவே இத்தகைய முக்கியத்துவம் கருதி ஆன்மார்த்த சிவபூசை முறைகளில் சித்தாந்த விளக்கம் என்ற இந்நூலை ஆசிரியர் உருவாக்கியுள்ளதை சைவ உலகம் உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலைச் சிறப்புற எழுதுவதற்கு ஆசிரியர் தனது ஆசான்கள் மூலம் பெற்ற மெய்கண்ட சாஸ்திரங்களின் விளக்கமும் மற்றும் புராணங்கள் திருமுறைகள் கூறும் சிந்தனைகளும் பெரிதும் உதவியுள்ளமை புலனாகின்றது. சிவபூசையில் ஈடுபட விரும்பும் அனைவருக்கும் நன்கு பயன்படும் படியாகப் பல்வேறு விளக்கப் படங்களுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் முதலாம் பாகத்தில் சிறப்பாக சிவபூசைக்குரிய தகுதியைத்தரும் தீக்கை பற்றியும் தசகாரியம் சிவபூசையின் சிறப்பு, மந்திரங்களின் சிறப்பு ஆகியவை பற்றியும் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது பாகத்தில் செய்முறை விளக்கம் இடம் பெறு கின்றது. பல்வேறு பூசைமுறைகள் சிவபூசையின் விரிவு ஆகியன விளக்கப்பெறுகின்றன. மூன்றாம் பாகத்தில் அறிமுறை செய்முறை பற்றிய மேலதிக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. "கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்ற சைவசித்தாந்தக் கருத்துக்கியைய இந்நூல் சிவபூசைபற்றிய விளக்கத்தைத் தருகின்றது. சிவனது வடிவங்களின் சிறப்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது மற்றும் அனுட்டான முத்திரைகள் படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. இந் நூலுக்குச் சிறப்புச் சேர்ப்பது ஆசிரியர் பயன்படுத்திய நூல்களின் பட்டியலாகும், ஆசிரியரது மொழிநடை தெளிவாகவுள்ளது. எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப பிரமாணங்கள்காட் டி விளக்கந் தரப்பட்டுள்ளமை பாராட்டிற்குரியது. ஆசிரியர் பல காலம் பெற்ற பல்வேறு அனுபவ வெளிப்பாடே இந்நூல் ஆகும்.

சிவத்திரு சொர்ணலிங்கம் இவ்வரிய நூலின் வழி மேற்கொண்டுள்ள சைவப்பணியால் எம்பெருமானது திருவருளுக்கும் அவரது ஆசான்களது குருவருளுக்கும் பாத்திரராகி உள்ளார். அவரும் அவரது துணைவியாரும் இவ்வரிய பணியினைச் செய்வதற்குரிய வாய்ப்பினைப் பெற்றமை இறைவன் திருவருளன்றி வேறில்லை. ஆசிரியர் சிவத்திரு சொர்ணலிங்கம் இது போன்ற அரிய பல நூல்களை எதிர்காலத்திலும் எழுதி வெளியிட்டு சைவசமயத்தைப் பாதுகாக்கும் தூய்மையான பணியில் சிறப்புற அவருக்கும் அவரது துணைவியாருக்கும் நீண்ட ஆயுளும் சகல வளங்களும் கிட்டுவதற்கு எல்லாம் வல்ல தில்லை நடராஜப் பெருமானது திருவருள் பொலிவ தாகுக என வாழ்த்தி ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அவரது இந்நூலின் வெளியீடு சகல நிலைகளிலும் சிறக்கவும் வெற்றி பெறவும் வாழ்த்துகின்றேன்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**பேராசிரியர், இலக்கிய கலாநிதி**
**கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
**வாழ்நாள் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அரிது அரிது மானிடராகப் பிறத்தல். அதனிலும் அரிதாகிய சைவசமயத்தவராகப் பிறந்ததை எண்ணி நாம் பெருமை யடைய வேண்டும். அநாதியான எமது சைவசமயத்திற்கு இன்று பெயர்கள் உருவங்கள் மாற்றப்பட்டாலும் அதன் அடிப்படை சைவசித்தாந் தம்தான் என்பதை யாராலும் மாற்றவோ, மறுக்கவோ ஏன் மறைக்கவோ முடியாது. ஏனெனில், இது எமது முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமான் தோற்றுவித்த நெறியாம். சைவசமயக் கிரியைமுறைகள், வழிபாட்டுமுறைகள், அநுஸ்டானமுறைகள் என்பவற்றை எமது வாழ்வியலோடு இணைத்துத் தருவன சித்தாந்த நூல்கள். இவ்வரிய நூல்கள் மூலமாக ஆன்மார்த்த வழிபாடு (தனக்காகச் செய்யும் சிவபூசை) பரார்த்த வழிபாடு (மற்றவர்களுக் காகச் செய்யப்படும் வழிபாடு) என்பனவற்றைச் செவ்வனே செய்து இறையின்பத்தை உணர்ந்து பேரின்ப முற்று வீடுபேறடைதலே இப்பிறவியின் பயன்.

இதனையே இந்நூலாசிரியரும், கொழும்புச் சிவத்திருமன்ற செயலாளரும், விசேடதீட்சையின் போது ஈசானமூர்த்தியின் திருநாமத்தைப் பேறாகப்பெற்றவருமான ஈசான சொர்ணலிங்க தேசிகர் அவர்கள் "சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம், எனுமோர் அரியபொக்கிஷத்தை எம்மக்களின் இக்கால தேவையை யுணர்ந்து வழங்கியுள்ளார். இதில் ஆன்மார்த்த நெறிகளைச் செப்புகின்ற சித்தாந்த நூல்கள் முதலிய வற்றை ஆராய்ந்தும், மேலும் திருமுறைகள், புராணங்கள் என்பவற்றுடன் ஏழாலையூர்ப் பண்டிதமணி கலாநிதி மு.கந்தையா பன்னாலையூர்ச் சித்தாந்தி வி. சங்கரப்பிள்ளை, யாழ்ப்பாணத்து வடமராட்சியைச் சேர்ந்த ஈசானசிவனார் (திக்கம் செல்லையா) போன்ற சைவச் சான்றோர் பலரின் நூல்களினூடாக சித்தாந்த முத்துக்குளித்து, சிவ பூசையினூடாகச் சீவன்முத்தியடையும் வழிசமைத்துள்ளார் நூலாசி ரியர். மூவாயிரந்தமிழ் என்று போற்றப்படுந் திருமந்திரத்தையும் பல இடங்களிற் சுட்டிக்காட்டப்பட்டு மிகநுட்பமான ஆய்வுடன் சிவபூசை முறைகளைச் சித்தாந்தத் தெளிவோடு சைவர்களுக்கென வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் இந்தளவிற்கு இறையின்பத்தைத் தாங்கி நிற்பதற்கு திருவருள் அவருக்குக் கிடைக்கப்பெற்றது அவரின் ஆன்மார்த்த பூசைப் பலனேயெனலாம். ஏனெனில் சித்தாந்தம் இறைவன் தந்த நூல். இதனைத் திருவாதவூரடிகள்புராண திருப்பெருந்துறைச் சருக்கத்தில் கடவுள்மாமுனிவர் உருத்திரநற் றிருமணியை... என ஆரம்பித்து, திருத்திகழும் வேதியனா ரம்பொன்மேனி திகழ்வதுகண் டகமகிழ்வார் செங்கைமீது பொருத்தமுறும் புத்தகமே தையாவென்னப் பொய்மையிலாச் சிவஞான போதமென்றார் என முடிக்கின்றார். சிவஞானபோதம் ரௌரவ ஆகமத்தில் ஒரு பகுதியாகும். சிவம் - சுத்த சித்தனாகிய பரம்பொருள். ஞானம் - அதனருட்பட்டு நின்று, உள்நுளைந்து அதனை உள்ளவாறுணர்தல். போதம் - அவ்வா றறிந்ததை அநுபூதியில் நிறுத்தி நிட்சயஞ்செய்தல். இதனை இறைவனே பரமாச்சாரியராக எழுந்தருளி வந்து திருவாதவூரடிகளுக்கு உபதேசித்தார் என்பது நிஜம்.

இவ்வாறான அரிய நூல்களை ஆராய்ந்து, சிறந்த குருவருளையும் பெற்று, ஆன்மாரத்த பூசையில் லயித்து இறையின்பத்தினையும் அடைந்துள்ளார் நூலாசிரியர். சைவர்கள் இத்தகு நன்நெறி கைக்கொண்டு வாழவேண்டும் என்ற இவரின் சிவசிந்தனையும், பெருவிருப்பும் நூலில் வெளிப்படுகின்றது.

அத்தோடு சிவபூசையின் விளக்கப்படம், முத்திரைகளின் படங்கள், சடத்துவாக்களின் அட்டவணை என்பவற்றுடன் விளக்கவுரைகளும் சேர்ந்துள்ளமை மேலுஞ் சிறப்பாகவுள்ளது. இவரின் பணி மென்மேலுந் தொடர இறையருள் பரிபூரணமாகக் கிடைக்கட்டும். இத்தகு ஆன்மார்த்த சிவபூசை பற்றிய விளக்கமான நூல் வெளிவருவதையிட்டு நாம் மிக அகமகிழ்கின்றோம்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

**சிவஸ்ரீ சதா மகாலிங்கசிவக் குருக்கள்**
செயலாளர் - சைவக்குருமார் அர்ச்சகர் சபை,
பிரதமகுரு - அரசடிப்பிள்ளையார் ஆலயம்,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயப்புரை

## சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்.

## (ஓர் அறிவியல் நூல்)

நமது இலங்கையைச் சிவபூமியெனப் போற்றிப் புகழ்ந்தவர் திருமூலநாயனார். இலங்கையைச் சுற்றிவர நகுலேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம், கோணேஸ்வரம், கேதீஸ்வரம், மாமாங் கேஸ்வரம், மீனாட்ஷி சுந்தரேஸ்வரம், பொன்னம்பல வாணேஸ்வரம், முன்னேஸ்வரம் முதலாய சிவாலயங்கள் அரணங்கள் போலமைந்து அருள்பாலிக்கின்றன. இலங்கையை ஆண்ட இராவணேஸ்வரன் ஒரு சிவபூஜாதுரந்தரர். அவன் தாயும் மனை வியும் அவ்வாறே சிறந்த சிவபக்தர்கள். தேவாரப் பதிகங்கள் கோணேஸ்வரம், கேதீஸ்வரம் என்பவற்றைப் போற்றுகின்றன. ஆனமையின் சிவாலயங்கள், சிவவழிபாடு, சிவபூசை எல்லாமே எமது சொத்துக்களாம்.

ஆம். சிவனடியாருக்கு உரியவை மூவேளை சந்தியாவந்தனம், சிவபூசை, சிவாலய தரிசனம், ஆகியனவாகும். இவைகளை நம்முன் னோர் வழுவாது கிரமமாக பக்தியுடன் ஆற்றினார்கள். எம்மையும் ஆற்றுப்படுத்தும் வகையில் சிவவழிபாட்டு முறைகள், சிவபூஜா முறைகள் என்பவற்றை எமக்குஞ் சொல்லித் தந்தமையால் நாம் சைவர்களாக வாழ்ந்து வருகின்றோம். அன்னியர் ஆட்சியில் சைவ வழிபாட்டிற்கு இடையூறுகள் இருந்தன. அதனால் வீட்டினுள் ஒழிந்தே அன்று சிவபூசையினை ஆற்றினர். எனவே சிவ வழிபாடு என்றுமே இருந்து வந்துள்ளது.

இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தோன்றினார். அவரது பிரசங்கம் நம்மவர்களை ஆன்மீகநெறிக்கு இட்டுச்சென்றது. அவரின் சைவவினாவிடை, பால பாடங்கள், திருவிளையாடற் புராண வசனம் மற்றுமுள்ள சைவசித்தாந்த நூல்கள் முதலானவை ஆன்மிக அறிவுக் களஞ்சியமாக அமைந்தன. அவரின் வழிகாட்டலில் அமைந்த சைவப்பாடசாலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரையும் சைவசமய வாழ்விற்கு இட்டுச்சென்றன. நாவலர் பெருமானோடும் அவரைத் தொடர்ந்தும் ஏழாலை - சிறுப்பிட்டி சி. வை. தாமோதரம்பிள்ளை, குப்பிழான் காசிவாசி செந்திநாதையர், சுன்னாகம் குமாரசாமிப்புலவர் மட்டுவில் ம.க. வேற்பிள்ளை மற்றும் அண்மைக் காலத்தினராய மட்டுவில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, ஏழாலை கலாநிதி, பண்டிமணி மு. கந்தையா, பன்னாலை சித்தாந்தி வி சங்கரப்பிள்ளை முதலாய பலரும் சைவத்தைக் குறிப்பாகச் சைவசித்தாந்தத்தை வளர்த்து வந்துள்ளார்கள். அவருட்பலர் முறைப்படி விசேடதீக்கை பெற்றுச் சிவபூசையும் ஆற்றினர். உடுவில் சங்கரசுப்பையர் அவர்கள் முதன்முதலில் பக்கவாத்திய சகிதம் பிரசங்கஞ்செய்து சைவம் வளர்த்தார். புராணபடனம் உள்ளிட்ட இத்தகு நடைமுறைகளால் யாவரும் சித்தாந்தசைவ அறிவினைப் பெற்றனர்.

ஈழத்தில் முதன்முதலாக அச்சுவேலிக் குமாரசாமிக் குருக்கள் திருமுறைகள் சகிதம் 'சிவபூசை விளக்கம்' எழுதியுள்ளார். சைவசித்தாந்த செம்மல் அன்பர், நண்பர், ஏழாலை சிவத்திரு செ. சொர்ணலிங்கம் அவர்கள் திருமுறைகள், புராணங்கள், மெய்கண்ட சாத்திரங்கள் என்பவற்றினை ஆதாரமாக்கி சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்' எனும் அரியநூலை மிக விரிவாக யாத்துள்ளார். காலத்திற்கேற்ப இந்நூல் வெளிவருவதை வரவேற்கின்றேன்.

தீக்கை, சந்தியாவந்தனம் முதலாக சிவபூஜைவரை ஒவ்வொரு பகுதியினையும் தத்துவரீதியாக ஆராய்தல் சிறப்பம்சமாகும். அதற்கு ஆதாரமாக தசகாரியம், பரசிவமேன்மை, ஞானநிமித்த மெனக்கொண்டு கிரியையாற்றல், சிவத்திருவடிவம் 36 தத்துவங்கள் முதலாய பல்வேறு விடயங்களை அந்தந்த இடந்தோறும் பொருந்தவும் மூன்றாம் பாகத்தில்வைத்து ஆய்வாகவும் எழுதியமை விசேட அம்சமாகும். இரண்டாம்பாக பூசை அறிமுறைகளில் அட்டவணைகள் பயன்படுத்தியமை நல்லதோர் யுக்தியாகும். செய்முறைகளுக்கு ஆதாரமாக, தமிழ் செழிப்புறும் வண்ணம், புராணங்களிற் பாவாக வருவனவற்றைத் தொகுத்தளித்தமையும் போற்றுதற்கு உரியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூசைச் சிறப்பு பற்றி (அத்.4ல்) குறிப்பிடுகையில் பல்வேறு நூலாதாரங்களைக் காட்டுகின்றார். அதிலொன்று, சிவதருமோத்திரம் கூறுவது: 'அணு(உயிர்)பக்கப் பிரமனையும் நாராயணனையும் கொள்ளாது, சம்புபக்கத்தராய பிரமனையும் நாராயணனையும் அரனோடு சேர்த்து மும்மூர்த்திகளையும் ஒரு கடவுளாகக் கருதி மேலான பெருமானை ஒன்பதுநாட்கள் தொடர்ச்சியாக மலர்தூவி வணங்கினால் அவர் வைகுந்தப்பேறு பெறுவார்.' என்பதாம்.

இதனை மெய்ப்பிப்பதாக, நூலாசிரியர் செயலாளராகவுள்ள சிவத்திருமன்றப் போஷகராக விளங்கி, அவரின் மானசிக குருவாயிருந்தவரும், கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் பிரதம சிவாச்சாரியாராக 58 வருடகாலம் விளங்கியவருமான சுண்ணாகம் மயிலணி சைவசித்தாந்த பிரதிஷ்டா கலாநிதி சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்குருக்கள் வைகுந்த ஏகாதசியன்று வைகுந்தம் திறக்கும் வேளையான அதிகாலை நாலுமணிக்கு சிவநாமம் சொல்லியபடி சிவகதி எய்தினார். இதனை இலங்கை இந்திய சிவாசாரியார்கள், 'குஞ்சிதபாதம் வைகுந்தம் சென்றுவிட்டார். அவர் வாழும்போதும் சிவகதி எய்தியபோதும் குஞ்சிதபாதமே. அதுவே அவரின் சிவபூசைப் பலன்' எனப் போற்றியமை சிவனடியார்களுக்கு நல்லதோர் உதாரணமாக இதில் நினைவுகூரத் தக்கதாகும்.

இதுகாறும் நாம் சிவபூசையிற் சித்தாந்தம் பற்றி ஆசிரியரின் பன்முக ஆய்விற் சிலவற்றை நோக்கினோம். இதிற் பக்திமயமான சிவவழிபாட்டினை சித்தாந்த அறிவியற் பார்வையால் அவர் காட்டியுள்ளமை நூலை முழுமையாகப் பயிலின் புலனாகும் என்பதனை வாசகர்களுக்கு நினைவுறுத்துகின்றோம்.

'சைவம் வெறுமனே நம்பிக்கையின் அடிப்படையிலான கொள்கையல்ல. இது மனிதனைத் தேவனாக்கி அதன் மேலும் சிவபதம் பெறவைத்து இறவாத இன்ப அன்புக்கு அவனை ஆளாக்கும் வாழ்வுநெறி' யென்பதனை குருமுலம் சித்தாந்தம் கற்றுணர்ந்த ஒரு விஞ்ஞானப் பட்டதாரி தன் சிவபூசை அனுபவ வாக்காலும், கல்வி கேள்விகளாலும் நூலில் உணர்த்துகின்றார். இவ்வழியில், இந்நூலிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் பலவித முயற்சிகளுமே சிவத்திருவினையாக அமைந்துள்ளன. சகலரும் இந்நூலாற் பயனுறுவரென்பது உண்மை. ஆசிரியரின் சிவப்பணி மென்மேலும் வளர எமது நல்லாசிகள்.

'சிவோகம் பாவயேத்', 'சிவம் பவது'

**சிவாகம பண்டிதர் பிரம்மஸ்ரீ சோ. குஹானந்த சர்மா**
புன்னாலைக்கட்டுவன், ஆயாக்கடவைச்
சித்திவிநாயகர் குருவும் ஆதீனகர்த்தரும்
உபதலைவர் - சர்வமத சம்மேளனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதப்புரை

*திருச்சிற்றம்பலம்*

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்,
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்,
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே,
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. – அப்பர்

ஆதிமுதலான எம்பெருமான், சிவபெருமான் சர்வான்மாக்கள் மீதுங்கொண்ட பெருங் கருணையினால் அவற்றிற்குத் தநு கரண புவன போகங்களை வழங்கி, அவற்றால் அவை செய்யும் வினைகளுக்கேற்பப் பலபிறவிகளைக் கொடுத்து, பக்குவப்படுத்தி, மலபரிபாகம் வரச்செய்து தனது திருவடியின்பமாகிய முத்தியைத் தந்தருளுகின்றான். முத்தியை யனுபவிக்க உரிமையுள்ள சர்வ ஆன்மாக்களும் குரு லிங்க சங்கம வழிபாட்டின் மூலம் அதை அடைய முடியும் என்பது சைவசமயப் பிரமாண நூல்களின் முடிந்த முடிபாகும்.

ஆன்ம ஈடேற்றப் பாதையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு நிலைகள் ஆகமங்களிற் கூறப்படுகின்றன. இவற்றிற் கிரியையாவது, தக்க குருவிடம் சிவதீக்கை பெற்று முறைப்படி அனுட்டானஞ்செய்து சிவாகமவிதிப் பிரகாரம் சிவபூயையினை யாற்றுவதாகும். மானிடப் பிறவியின் பயன் அரனை வழிபடுதலே என்பது ஞானநூல்களில் வலியுறுத்தப் பட்டுள்ளது. இது மாபெரும் உண்மையாயினும் இவ்வாய்ப்பினைப் பெற்றும் சிவபூசை செய்வோர் மிகச் சிலரே. மறுபுறம் அதனை ஆற்ற முற்படுவோரும் சிவபூசை விளக்கங்களை அறியா திருத்தலும் இப் பின்னடைவினுக்கு ஒரு காரணமாகும். தமிழ்ச் சமூகம் மூலப் பரம்பொரு ளாகிய சிவப்பரம்பொருளை மெல்லவே மறக்கத் தொடங்கியமையும், வேத சிவாகமங்கள் கூறும் மரபு வழிமுறைகளைக் கைக்கொள்ளாமையும் இதற்காய மூலகாரணமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் பிரபஞ்ச (கன்மக் கோட்பாட்டு) விதிக்கமைய காலங்காலமாக நடப்பதெல்லாம் சிவாகமங்களின் பெருமையை மாயைவசப்பட்ட ஆன்மாக்களுக்கு உணர்த்தும் திருவிளையாடலேயாம். ஒருதாரணம், சமணஞ் சார்ந்த பாண்டியனை இறைவன் ஞானசம்பந்தர் மூலம் ஆட்கொண்டமையாம். காலத்திற்குக் காலம் இங்ஙனமாக இறையருள் பெற்ற அருளாளர்கள் தோன்றிச் சமூகத்தைச் சீர்ப்படுத்தி சிவாகம உண்மைகளை அவ்வக்காலப் பகுதிகளில் வாழும் ஆன்மாக்களின் அறிவுக்குப் புலனாகும்படி போதனைகள், நூல்கள் மற்றும் அற்புதங்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

காலநோக்கில் அவர்கள்: திருமூலர், காரைக்காலம்மையார், சமய, சந்தான குரவர்கள், அருணகிரியார் முதலாய அநுபூதிமான்களும் மற்றுமுள்ள சித்தர் ஞானியர்களுமாம். அண்மைக் கால வரலாற்றில் யாழ்ப்பாண ஆறுமுகநாவலரும் அவர் வழிவந்தோரையும், கடையிற்சுவாமி வழிவந்த யோகசுவாமியையுங் குறிப்பிடலாம். மேலும் சிவபூசைநோக்கில் அகோர சிவாசாரியார் முதலான பத்ததி ஆசிரியர்கள் மறக்க முடியாத அரிதினுமரிய சேவை புரிந்துள்ளனர்.

எச் சமூகம் சிவனடியார்களை, அவர்தம் வேத, சிவாகம, சைவசித்தாந்த உண்மைகளை ஏற்காது, ஆணவத்தின் குணங்களான செருக்கு. அகங்காரம், பொறாமை, போட்டி, துவேசம் முதலான தீக்குணங்களை முன்னிறுத்தி அவரையும் அவரின் ஆக்கங்களையும் மறுதலித்து அவமானப் படுத்துகின்றதோ அச்சமூகம் உருத்திர கணங்களாலும் அவரின் கீழுள்ள தேவ ரிக்ஷிகளாலும் சபிக்கப்படும். அதனாற் சிவனதருளும் அத்தகையோரை விட்டு விலகும் என சிவாகம, பதிணெண்புராண இதிகாசங்கள் சான்றுபகர்கின்றன. அவ்வகையில் நாம் வாழுஞ் சமூகமும் இதற்கு விதிவிலக்கல்ல என்பது நன்றாக உணரப்பட வேண்டும்.

ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேடனாலும் விவரித்துக் கூறமுடியாதளவு நற்பலன்களையும் லோகபோகத்தையும் அதன்மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சத்தையும் தரக்கூடிய பூசையொன்று உண்டெனில் அது நிட்சயமாகச் சிவலிங்க பூசையே என்பது மறக்க முடியாத உண்மை.

சிவபெருமான் பக்தர்களுக்காகப் பற்பல திருமேனிகளைத் தாங்கிய மூர்த்தங்கள் கொண்டு அருள்பாலிக்கின்றார். அவற்றில் உத்தமோ உத்தமமானது சிவலிங்கத் திருமேனியாகும். உலகம் முழுவதும் சிவமயம். பரசிவனே ஆதிமுதல்வனும், பரமாத்மாவுமாய் இருந்து, தன்னைத் தடத்த (பக்தற்கருளக் கீழிறங்கும்) நிலைக்காக்கி முதலிற் பூசையினை ஏற்கும் சாதாக்கிய - இலிங்க (சதாசிவர் மனோன்மணியாக) உருவெடுக்கின்றான். அருவுருவ ரூபியான அக்கோலத்தில் சிவசக்தி லிங்கத்தின் ஆவுடையாரின் மேற்பீடமாகின்றாள். அதற்பின் மேலும் இறங்கிவந்து உயிர்களுக் கருளும் தாயும் தந்தையுமாகும் பார்வதி பரமேஸ்வர உருவங் கொள்கின்றான். இவ்வடிவங்களிற் சிறப்பாக சிவலிங்கத்தில் தனது இச்சா ஞானக் கிரியா சக்திகளால் எம்மோடு ஒன்றாயும் உடனாயுமிருந்து எமது பூசைப்பலனாக போக மோட்சங்களைத் தந்தருளுகின்றான். ஆதலின் சிவலிங்கத்தை ஆகம விதிப்பிரகாரம் ஸ்தாபித்து அச்சொரூபத்தில் பரசிவனை எழுந்தருளப் பண்ணிச் சகல உபசாரங்களுடனும் ஆதரித்து வணங்குவோர்க்கு அவனருளுந் தன்மை சொல்லுந் தரமன்று.

நால்வேத ஆகம உண்மைகள். :-

1) 'எல்லா உலகங்களுக்கும் தானே முதல்வனாகி முத்தொழிலையும் நடாத்துபவன் எவனோ அவனே சிவபெருமான்' - றிக் வேதம்
2) 'சிறந்த பாசுரங்களாலும் யோக சாதனங்களாலும் உலகத்தோரால் துதிக்கப்படும் பொருளா யுள்ளவன் எவனோ அவனே சிவபெருமான்' - யசுர் வேதம்.
3) 'எவன் மூன்று உலகங்களையும் இயக்குகின்றானோ எவன் யோகநிஷ்டையில் இருக்கும் முனிவர்களால் துதிக்கப்படு கின்றானோ எவன் தன் ஒளிப்பிளம்பால் எல்லா உலகங்களையும் விளக்கு கின்றானோ அவனே சிவபெருமான்.' - சாம வேதம்.
4) 'ஆநந்தபாஷ்பம் சிந்தவும், உரோமம் சிலிர்க்கவும், மனம் நெக்குவிட்டுருகு மன்பினால் எக்காலத்திலும் தன்னையுணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுடையோர் தியானித்துத் துதிக்கத் தனது திரு வருளாற் தன்னையறியச் செய்பவன் எவனோ அவனே சிவபெருமான்.'
-அதர்வண வேதம்

நீங்கள் விரும்பும் தத்துவப் பொருளும் அவனே யென இந்நான்கிலும் சேர்த்துவாசிக்க.

'பஞ்சாட்சர மந்திரமே வேதங்களின் உயிர் ஆகும், ஸ்ரீருத்ரம் மகாமந்திரம்'- யசுர்வேதம்

சிவபெருமான் ஆதிமுதல்வன் தனக்குவமை இல்லாதவர். அறுவகைச் சமயத்திற்கும் எல்லா வழிபாட்டு முறைக்கும் வேதாகமங்களுக்கும் அப்பாற்பட்ட பரம் பொருள் - சிவாகமங்கள். 'ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும், ஒன்றுகண் டீர்உல குக்குயி ரானது, நன்றுகண் டீர்நல் நமச்சிவா யப்பழந், தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே என்பது திருமந்திரம். இவ்வாற்றாற் சிவனின் எல்லையற்ற பெருமை விளங்கும்.

புண்ணியஞ் செய்தார்க்குப் பூவுண்டு நீருண்டு என்றும், மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம் ஆனிடத் தைந்துமாடும் அரன்பணிக் காகவன்றோ என் றும் சைவசாத்திரங்கள் கூறியபடி உயிரோடு ஒன்றாயும் உடனாயும் இருந்து அவற்றை வினைகளிற் செலுத்தி ஈடேற்றும் அவன் பெருமையையும் சிவபரத்துவ மேன்மையையும் உணர்ந்த உமை விநாயகர் முருகன் விட்டுணு பிரமா உள்ளிட்ட அனைத்துத் தேவர்களும் நவகோள்களும் சிவபூசை செய்ததை நாம் உணரல் மிகப்பிரதானம். பிறவாப் பெருநிதியெனும் பேரின்பத்திற்கு இட்டுச்செல்லும் பூசைமுறை யொன்று உண்டென்னில் அது நிட்சயமாக ஆகம விதியிலமைந்த சிவபூசை ஒன்றேயாம்.

இக்காலத்தில் இத்தகு சிறப்புமிக்க சிவபூசையினைச் செய்வோர் மிகக் குறைவாயுள்ளனர். இந்நிலை விரைவில் மாறி, சிவபூசை மகிமையை மேலுமுணர்ந்தோர் தம்மைத் தகுதிப் படுத்தி அதனையாற்றத் தூண்டும் வகையில், காலத்தின் தேவையுணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் உந்தப் பெற்றே இந்நூல் எழுதப்பட்டுள்ள தென்பது எளிதிற் புலனாகின்றது. அதி உத்தமமான சைவசித்தாந்த சிவாகம, சைவாச்சார குருசீட பாரம்பரியத்தில் வந்த ஈசானதேசிகர் சொர்ணலிங்கம் அவர்கள் எழுதிய இந்நூல் சைவ உலகுக்கொரு பெரும் பொக்கிஷ மாகும். மிகவும் மதிநுட்பமான முறையில் வாசிப்பவர்களுக்கு மிகத் தெளிவாகவும் இலகுவாகவும் விளங்கும் வண்ணம் சிவபூசை விதானத்தை சிவாகம முறைப்படி அகோரசிவாச்சாரியார் மரபு, சோமசம்புசிவாசாரியார் பத்ததிமரபு ஆகியவற்றை யாராய்ந்து நல்லைநாவலரின் சைவாசார முறைகளையும் மனதிற்கொண்டு இந்நூலை எழுதியுள்ளார். திருமுறை மந்திரங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள் என்பவற்றை மேற்கோள் காட்டி சித்தாந்த விளக்கத்துடன் இந்நூலை அமைத்திருத்தல் அருமையிலருமை. குருவருளும் திருவருளும் இந்நூலை ஆக்குவதற்கு நூலாசிரியருக்குப் பெரிதுந் துணைநின்றமை வெளிப்படை. முறையான குருசீட பரம்பரைச் சங்கிலித் தொடராக வந்தவர்களுக்கு என்றுஞ் சிவனருள் நீங்காதிருக்கும் என்பதற்கு இவர் ஒரு சாட்சியாக அமைந்துள்ளார்.

மந்திரங்கள், 36 தத்துவ விளக்கங்கள், மூர்த்திபேத விளக்கங்கள் என எல்லாவற்றையும் விரிவாக விளக்கியுள்ளார். பூசையாற்றும் ஒருவர் முழுமையான மன சுத்தியுடன் (சுத்த வித்தியா தத்துவத்தை யடைந்து) மேற்குறித்த விளக்கங்களோடு கிரியாபாகம் தவறாது ஆற்றும் பூசையே முழுமையான பலன்தர வல்லது. ஆதலின் இந்நா லை முழுமையாக வாசித்து உணரவேண்டும். அந்தர்யாகம், பூத, சூக்கும தேக சுத்திகள், சிவோகம் பாவனை யென்பவற்றை ஆகம, சித்தாந்த, புராண நூல் விளக்கங்களுடன் தரும் உரை நடை மிக அற்புதம். அவருள் இருந்து எம்பெருமான் இதனை எழுதவைத்ததாக யாம் உணர்கின்றோம். மேலும் இன்று சைவம் குறிப்பாக நல்லூர் நாவலர் காட்டிய சைவமரபு எதிர்கொள்ளும் இடர்களை மிகத் தெளி வாகச் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக யானை தன் தலையில் மண்ணை அள்ளிக் கொட்டுவது போல நம்மவர் பலர் செய்யும் அநாசார, சிவத்துரோக செயல்களை அஞ்சாது, துணிவுடன் தனது தனித்துவமான எழுத்துப் பாணியில் சாடியிருப்பது பாராட்டற்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க முத்தி வழங்கும் எமது குலதெய்வம், இஷ்டதெய்வம், மாலயற்கும் அரிய பரம் பொருளாம் திருவண்ணாமலையானை நெஞ்சிருத்தி இந்நூல் பற்றி யாம் கூறும் அறுதியும் இறுதியுமான கருத்தாவது,

'அதிக நோயுற்றவர்க்கு அந்நோய் நீங்கவெனக் கொடுக்கும் மருந்து கசக்கவே செய்யும். அதுபோலப் பிறவிப்பிணி கடுமையாக வுள்ள மானிடர்க்கு இந்நூற் கருத்துக்கள் கசக்கும். அதேவேளை யாருக்கெல்லாம் இந்நூலை வாசிக்கும் போது உள்ளம் இனிக்கின்றதோ அவர்கள் பிறவிப் பிணியினின்றும் விடுபட்டு வருகின்றனர் என்பது நிட்சயமாகும்.'

மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலும் பிரதிபலனை எதிர்பாராதும், அர்ப்பணிப்புடனும். அஞ்சாதும் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற உயர் நோக்குடன் இந் நூலை யெழுதி வடிவமைத்து வெளிவிடும் சிவத்திருமன்ற செயலாளர் ஈசானதேசிகர் சொர்ணலிங்கம் அவர்களுக்கு மூலப் பரம்பொருள், ஆதிநாயகன் திரு உண்ணாமுலை அம்பிகை உடனுறை திருவண்ணாமலை ஈசனின் திருவருள் என்றுந் துணை நிற்பதாகுக.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்'
'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

**ஸ்ரீ ருத்ரவைணீக ஸ்ரீ மஹாராஜ ஸ்ரீ சாதகாச்சார்ய திலகம்**
**சிவஸ்ரீ தர்ஷக சிவாச்சார்யார்,** LL.B (cont.) LL.N (cont.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூசை தொடர்பான வேதாகம, உபநிடத, புராணக் குறிப்புக்கள்

1. அ) பஞ்சசுத்தி இல்லாத **பூசை**, பூசை செய்யப் படாததற்குச் சமம்.

   ஆ) **ஆசநாதி** (ஆசனம் ஆதியான) **பூசைகள்** இல்லாதிருந்தால் உலகில் கெட்ட நிலைகள் மேலோங்கும்.

   இ) சிவஸம்ஸ்காரம் **(சிவதீக்ஷை)** இல்லாவிடில் மனிதர்கள் கெட்ட நடத்தை உள்ளவர்களாவார்கள் - உத்தர காமிக ஆகமம்

2. ஆன்மார்த்த பூசையான சிவலிங்க பூசையில் பூஜா ஹீநம் **(பூசையிற் குறைகள்)** நேர்ந்து விட்டால் இரு மடங்காகப் பூசையாற்றவும். ஒரு மாதம் பூஜா ஹீநம் நேர்ந்து விட்டால் ஸ்நபநாபிஷேகம் செய்யவும்.

   - ஸந்தாஸந ஸம்ஹிதை

3. **சிவபெருமானே** ஓங்காரவடிவே, இப்பிறவியின் இன்பங்களாய் உள்ளவரே, பிறவியில்லாப் பெருவாழ்வின் சுகங்களாய்த் தோற்று பவரே, முன்னோர்கள் வடிவாக இருந்து மறுமை இன்பங்களை உணர்த்துபவரே, சிவமே (மங்கள வடிவே) சிவதரனே (எமக்கு மங்களங்களை அருளி எம்மை மங்கள வடிவினராக்குபவரே) உமக்கு நமஸ்காரம். - யஜுர் வேதம்

4. அ) **இலிங்கம்** என்னும் சொல்லுக்கு தன்னுள் இலயித்திருக்கும் (மறைந்திருக்கும்) ஒரு பொருளைக் குறிக்கும் குறி (அடையாளம்) என்பது **பொருள்.**

   ஆ) எல்லாமும் எதனுள் ஒடுங்குமோ, எதிலிருந்து அவை எல்லாம் மீண்டும் தோன்றுமோ அந்த மூலப்பொருள் **இலிங்கம்** எனப்படும் - அஜிதாகமம்

5. எல்லா ஆகமங்களை அறிந்தவனும் அமைதியானவனும் சிவலிங்க வழிபாட்டில் ஈடுபட்டவனும் நித்ய ஹோமத்தோடு கூடியவனும் சிவபெருமானுக்கு நிவேதனம் தயார் செய்பவனும், பிச்சை அளிப்பவனும் நிந்தனை இல்லாதவனும் ஆன **சிவாச்சாரியாரைச்** சிவனாகவே அறிய வேண்டும். - உத்தர காமிகம் - மஹோற்சவ படலம்

6. அ) பாவத்தைச் செய்து பதிதன் ஆகாமல் தடுத்து நிறுத்துவது பவித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) அலங்காரம் ஆகி தூப, தீப ஆராதனை முடிந்த பிறகு அட்சதை அறுகு, வில்வம் இம் மூன்றையுஞ் சேர்த்து சிவ மூல மந்திரங் கூறி சிவபெருமானின் சிரசில் சாத்துவதே நித்திய **பவித்ரம் சாத்துவது** என்பதாகும். - ஸகலாகம ஸங்கிரகம்

7. அமரர் தலைவனான சிவபெருமானுக்கு (நம் வழிபாடுகளிலுள்ள குறைகளால்) இழைக்கப்பட்ட பாவத்தை அகற்றி (அதன் மூலம் அவனருள் பெருகும்படி செய்து) அனைத்து அசையும் அசையாப் பொருள்களையும் சுத்தமாக்குவதே **பவித்திர சமர்ப்பணம்.**

- உத்தர காமிகம்

8. அந்தகாசுரனை அழித்தவரே, பந்த பாசங்களைப் போக்குபவரே, ஜெயம் கொண்ட வீரரே, திரிபுர சம்ஹாரம் செய்தவரே, சகல தேவதைகளுக்கும் அதிபதியான பிரம்மாவின் சிரசைப் பயங்கரமான வைரவ அவதாரஞ் செய்து சேதித்தவரே, மஹா சாமர்த்தியம் உள்ள மன்மதனை நெற்றிக் கண்ணாற் தகித்தவரே, விஷ்ணுவினுடைய அவதார தேகங்களைப் போக்கடித்தவரே, கால கூட விஷத்தை அபகரித்து விழுங்கியவரே, மஹா சுழலோடுகிறவராயும், நினைத்த வண்ணம் ரூபத்தைக் காட்டுகிறவராயும், ஆனந்த ஸ்வரூபராயும், பிரம்ம ஸ்வரூபராயும் அஞ்ஞான மில்லாதவராயும், ஞானதேகம் உடையவராயும் ஸ்வபிரமாணத்தால் (பதிஞானத்தால்) அறியப்படுபவராயும், ஸ்வரூபப் பிரகாசகராயும், கர்த்தாவாயும், ஆன்மாக்களுக்கு பஞ்ச கிருத்தியங்களை நடப்பிப்பவராயும் உள்ள உமக்கு **நமஸ்காரம்.** - ரௌரவ ஆகமம்

9. மரணம் **எதுவரையில்** வரவில்லையோ, எதுவரையில் கிழத்தன்மை வரவில்லையோ, எதுவரை புலன்கள் கெடவில்லையோ அதுவரையும் **சங்கரனைப் பூசிப்பாயாக.**

- ஸ்கந்த புராணம் - மலயாசல படலம்

10. ஈசானாதி பஞ்ச முகங்களுக்கும் தேனு, பத்மம், திரிசகல மகர, சிருஸ்க **முத்திரைகளும்** அங்கங்களுக்கு நமஸ்கார **முத்திரையும்** காட்டுக.

- க்ரியாக்ரம த்யோதி - அகோர சிவாச்சாரியார்

**தொகுப்பு - தர்ஷக சிவாச்சாரியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

உலகினர் என்றும் இன்பமே வேண்டிநிற்பது இயற்கை. அவ்வின்பத் தேடல் அவர்களின் ஆன்மீக நிலைக்கேற்ப மாறுபடும். மண் பெண் பொன் இன்பமே நிலையானது என்போர் பூமியையே பிருதிவி தத்துவ முத்தித் தானமாகக்கொண்ட உலகாயதர். அவற்றால் வருவது என்றும் துன்பமேயாதலால், இவற்றைவிடப் பெரிதான சுவர்க்கலோக இன்பநுகர்ச்சி யாகம் முதலிய கருமங்களால் மறுமையிற் கிட்டும் என்போர் இருபத்திநாலாம் பிரகிருதிதத்துவ முத்தித்தானமுடைய மீமாம்சகர். உருவம், ஞானம், வேதனை, குறி, வாசனை யென்ற பஞ்சகந்தம் அறக்கெடுதலே முத்தியென்பர் புத்தரில் ஒருசாரரான சௌத்திராந்திகர். இவர்களின் முத்தித்தானம் இருபத்திரண்டாம் புத்திதத்துவம். சமணரில் - ஆருகதரில் நிகண்டவாதிகள் ஞானாவரணீயம், தரிசனா வரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்ற எட்டுத் தீக்குணங்கள் அடங்கி அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷம், சம்நியதா பாவம் என்ற எட்டு நற்குணங்களை அடைதலே முத்தியென்பர். (ஆவரணீயம் - மறைப்பது. வேதநீயம் - வேதனையானது. ஆயுஷ் - ஆயுள், அந்தராயம் - இடையூறு, அநந்தம் - வரம்பற்றது, நிர் - இல்லாதது). இவரின் முத்தித்தானம் 23ஆம் குணதத்துவம்.

வைசேடிகர் விஷேடமாகச் சிந்திப்பவர். அவர்கள் திரவியம், குணம், தொழில், சாதி, விசேடம், சமவாயம், இன்மையென ஏழுபதார்த்தங்கள் உண்டென்பர். அதிற் திரவியமானது பஞ்சபூதம், காலம், திசை, ஆன்மா, மனம் என ஒன்பது. இந்த எழுவகைப் பொருள்களின் இயல்புகளை உணரவே உடலின் வேறாய ஆன்மாவின் இயல்பு விளங்கும். அதனால் நான் உடல் முதலியன அன்று என்பதால் முயற்சி யில்லாது போகவே அறம் பாவங்கள் இல்லாது பிறவியொழியும். அதனால் இன்பதுன்பங்கள் இல்லாது உடலூழ் அநுபவித்துக் கழியவே, இறுதித் துன்பமுங் கெட்டு மனத்தோடுகூடுங் காரணமின்மையால் அறிவின்றிப் பாடனம்-கல்போற் கிடப்பதே முத்தியென்பர். இவர்களுக்கும் முத்தித்தானம் 23ஆம் புத்திதத்துவமாம். (தத்துவம், சமயம் அத்.3, 7.10, 7.23 பார்க்க). இனி, சாங்கியர் விவேகஞானமே முத்தியென்பர். விவேக ஞானமாவது சடசித்து உலகமாகிய பிரகிருதியையும் அதிற் கருமமாற்றும் ஆன்மாவாகிய புருடனையும் பகுத்துணரும் அறிவென்பர். அன்றி மாயாவாதிகள் பிரமமொன்றே மெய்ப்பொருள் ஏனையவெல்லாம் பிரமத்தின் விவர்த்தனமாய் - சுழற்சியாய் இப்பியில் வெள்ளிபோல (சிப்பியினிடத்து முத்துப்போல) அவிச்சை-அறியாமையினாற் காணப்படுவனவாதலின் பொய்யாம். இத்தகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமுள்ள உலகத்திற்கு முதற்காரணமாகிய பிரகிருதிமாயை பிரமம்போலச் சத்துமன்றி முயற் கொம்புபோல அசத்துமின்றி அநிர்வசனமாய் (கூறமுடியாததாய்) இருப்ப, இந்த மாயைக்கு வேறாகிய பிரமமே யான் என ஆய்ந்தறிவதே முத்தியென்பர். இவரின் முத்தித்தானம் 22ம் புத்தித்தானமும் 24ம் பிரகிருதியுமாம். சிவசமவாதிகள் சித்தாந்தத்திற்கு அண்மையானவர்கள். (36 தத்துவங்கடந்ததே சைவசித்தாந்த முத்தி). ஆனாலவர்கள் கூறுவது, சிவானுக்கிரகத்தால் ஆன்மாக்களின் மும்மலங்களும் நீங்க அதனால் அவற்றின் சொரூபமாகிய இச்சாஞானக் கிரியைகள் விளங்கப்பெற்று சர்வஞ்ஞத்துவம் (முற்றுமுணர்தல்) முதலிய அறு குணங்களோடு சிவசமமாயிருப்பதே முத்தியென்பர். அவரின் முத்தித்தானம் 33ஆம் ஈசுரதத்துவம்.

இனிவருவதே இறுதியு மறுதியுமான தத்துவங் கடந்த சிவசாயுச்சிய, சுத்தாத்துவித சைவசித்தாந்தமுத்தி. இதனையடைந்து இனிப் பிறவியிற் தோயாது நிரந்தர இன்பம் அனுபவிப்பதே உயிர்களின் முடிந்த முடிவாம். இது, 'ஊனடைந்த உடம்பின் பிறவியே தானடைந்த உறுதியைச் சாருமால் தேனடஞ்செய் மலர்ப்பொழிற் தில்லையுள் மாநடஞ்செய் வரதர்பொற் தாழ்தொழ' என்ற பெரியபுராணப் பாவாற் தெளிவுறும். இதில் ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களும் நீங்க ஆன்மா திருவருளைக் கூடிச் சிவத்தோடு ஒன்றிநின்று (சிவாத்துவிதமாய்) பேரானந்தத்தை அனுபவிக்கும் நிலை சித்திக்கும். இதனைச் சிவனடியைச் சேரும் முத்தியென்பர். அது, சிவஞானம் கைவரப்பெறுதலால் அறியாமை நீங்கி பேரின்பம் எய்துதலைக் குறிக்கும். இதனை, 'இறவாத இன்ப அன்பு', 'ஆரா இன்பம்', 'இன்பில் இனிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம் அன்பு நிலை', 'சேவடிபடரும் செம்மல் உள்ளமொடு நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும் செலவு' என முறையே காரைக்காலம்மையார், மணிவாசகர், உமாபதிசிவாசாரியார், நக்கீரர் போன்ற பலரும் பலவாறான செந்தமிழ் வார்த்தைகளாற் புகழ்ந்து போந்தனர். இதில் அன்பு, திருவடிஞானமெனும் மெய்யறிவு, இன்பம் என்பன பின்னிப்பிணைந்த சொற்களாகவுள்ளன. அத்துடன் சுந்தரர் 'இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வு' என வாழ்வையும் சேர்த்தமை சிந்திக்கற்பாலது. மேற்கூறிய வெவ்வேறான சமயக்கொள்கைகளும், அவற்றாலாம் முத்தியின்ப வேற்றுமைகளும், 'அங்கையு ளனலும் வைத்தார் அறுவகைச் சமயம் வைத்தார்' என்ற அப்பர் வாக்குப் பிரகாரம் இறைவனால் ஆக்கப்பட்டவையே. உயிரினம் பல் பிறப்புகளுக் கூடாக மேற்கொண்டுவரும் ஆன்ம ஈடேற்றப் படிமுறைகளாகிய அவை சிவானுபூதிபெற்ற மகான்களின் சிந்தனை வளர்ச்சிகளாதலின் அவை ஒவ்வொன்றினையும் குறித்தவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் தள்ளாது கடந்து வரவேண்டுமென்ற நியதியும் நோக்கற்பாலது. இதனைச் சிவஞானசித்தியார் கூறும் விதம் :-

'புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்,
புகன்(ஸ்)மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம,
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் ,
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்,
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத,
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்,
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்,
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்'.

புற, அகச்சமயங்கள், ஸ்மிருதியென்பன நூலினிறுதிப் பகுதியில் வரும். பேரின்ப முத்தியும் அதுதரும் சமயநெறியும் இதுவெனக்கூறி, அந்நெறி பயிலும் நாடு எது வென்பதையும் சித்தியார் கூறும்.

'நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்,
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியத்தா னாகும் ,
ரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து,
பரசம யங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே.'

சமயம், நாடு, சாதியாவும் உத்தமமாதல் விரும்பத்தகும். உயர்ந்த சாதியினும் உயர்ந்த குடிப்பிறப்பே மீளப் பிறந்திறந்து உழலாமைக்கு வாயிலாம். அத்தகு குடியிற் பிறந்து சைவத்தினெய்திச் சித்தாந்த நெறியுணர்ந்து சிவனை வழிபடுவோர் மலநீக்கம் பெற்று முத்தியடைவர். ஆதலின்,

'மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்,
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ,
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்,
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ'.

இதனால், சரியை, கிரியாயோக ஞானங்கள் சித்தித்து வீடுபேறடைதற்கு வேண்டுவன, 1) பிறவி விசேடமாய மானிடப்பிறவி, 2) தேயவிசேடமான நான்மறை பயிலும் நாடு, 3) குடி விசேடமாய முற்புண்ணியப் பேறாலாங்குடி. 4) குடிக்காய சமயம் உண்மைச் சமயமல்லாத பூர்வபக்க சமயந் தவிர்ந்த மெய்ச்சமயமாம் சித்தாந்த சைவம். இவை பொருந்தப்பெறல் அவசியம். ஆதலின் அன்னார்க்கென்றே இந்நூல் எழுதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தமென்பது நூல்வழி ஞானபாதம் கூறுவது. கிரியாயோகம் கைவரப் பெற்றாலும் அடுத்த பிறப்பிலோ இப்பிறப்பின் முதிர்விலோ ஞானம் கைவரல் முத்திக்கு அவசியமாம். மேலே நூல் என்றது சிவஞானபோதம். இதிற் சிவமென்பது நித்தமுத்த சித்தாகிய ஒரு வஸ்து. ஞானமாவது, அவ்வஸ்துவைச் சந்தேகவிபரீதக் காட்சிகளின்றி உள்ளவாறு அறிதல். போதமாவது அங்ஙனம் ஆகம அளவையில் வைத்தறிந்ததனை அனுபூதி நிலையில் வைத்து நிட்சயித்தல். செல்லும் நெறியினை நூல்வாயிலாக அறிந்தவனே சந்தர்ப்பங் கைகூட அவ்விடத்தை இலகுவிற் சென்றடைதல்போல, நூல்வழிஞானம் மிகவும் பிரதானம். ஆதலின் சைவசித்தாந்தத்தினூடாகக் கிரியை அணுகப்படுதல் சிறப்பம்சம். இந்நூல் அணுகுமுறையும் இதுவே. குடிவிசேடம் என்பது பிறப்பால் மட்டுமல்ல என்பது குடிமை, பிராமணீயங் காத்தல் என்ற இந்நூலின் மூன்றாம் பாகத்தில் வரும் அத்தியாயங்களால் விளக்கப்பட்டுள்ளன. பூர்வபக்கச் சமயம் பற்றியும் சமயங்கள் என்ற மூன்றாம்பாக இறுதி அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளது. இரண்டிற் கூறிய தேயவிசேடம் 'தென்னாடுடைய சிவனே போற்றி' யென்பதாற் பெறப்படும். அது நான்மறை பயிலும் நாடென்று கூறப்படினும், அது, மறைப் பொருளுணர்த்தி அற்புதங்களும் ஆற்றிய திருமுறைகள், ஆகமப் பொருளுணர்த்தும் மெய்கண்ட சாத்திரங்கள் திருமந்திரம் போன்ற தமிழ்நூல் பயிலும் செந்தமிழ் நாடாம்.

சிவபூசைக்காய் சித்தாந்தவிளக்கத் தமிழ் நூலெதுவும் இற்றைவரை யாங்கண்டதில்லை ஆதலின் இவ்வழியை ஆவலுடன் தெரிந்து, பிறர்க்குந் தெரிவிக்க விளைகின்றோம். மேற்கண்ட வரைபின் படியும் இந்நூலின் 7.15, 10.15இற் கூறியபடியும் சிவப்பிராமணியங் காத்து முப்போதும் திருமேனி தீண்டுவார் பாதம் பணிந்தும், ஏனையோர் இந்நூலை ஆய்ந்தறிந்து அறிவு பெற்றடங்கி உய்ந்து, இவ் வரைபினுள் வந்து, சைவங்காக்கப் பரார்த்தத்திற்கு முன் ஆன்மார்த்தமாக சிவபூசையாற்றி, உலக உய்திக்காக சிவாக்கினி வளர்த்துத் தமக்கும் பிறர்க்கும் பேரின்பம் அளிக்கும் வகையறிய இறையருளை இறைஞ்சியும் அமைகின்றோம். 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு.' மெய்ப்பொருள் என்பது ஆன்மாவுக்கு உறுதி தரும் சிவப்பொருள் ஆதலின் இந்நூலை முற்றுமாய் வாசித்த பின் சந்தேகங்கள், தவறுகள் இருப்பின் தமது தியானத்தாலும் ஏனைச் சிவாசாரியார்களுடன் கூடியும் அவற்றினை ஆய்ந்துணர்ந்து தெரிவிப்பின் நன்றியுடன் அதனையேற்று மறுபதிப்பிற் திருத்துவோம்.

**நூலாசிரியர் - சிவத்திரு செ. சொர்ணலிங்கம்**

இரத்மலானை, ஏழாலை, தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## பாகம் 1 (தீட்சை, பூசை அறிமுறை)


| | | பக்கம் |
|---|---|---|
| i. | இந்நூலாசிரியர் பற்றி | vi |
| ii. | பதிப்புரை | viii |
| iii. | வாழ்த்துச் செய்திகள் | x |
| iv. | அணிந்துரைகள், நயப்புரை, விதப்புரை | xvi |
| v. | சிவபூசை தொடர்பான வேதாகம புராணக் குறிப்புக்கள் | xxxiii |
| vi. | முகவுரை | xxxv |
| *1.* | *முன்னுரை-பஞ்சசாதாக்கிய விளக்கத்துடன் நுவலுவது* | *1* |
| *2.* | *தீக்கையும் கிரியையும், 2.1 தீக்கைப் பெருமை, 2.2 தீக்கை விபரம், 2.3 கிரியைஅறிமுகம்* | *9* |
| *3.* | *தசகாரியம், சித்தாந்தம் - 3.1. சிவப்பிரகாசம், 3.2. உண்மைநெறி விளக்கம், துகளறுபோதம் 3.3 சித்தாந்தப்பட ஆதாரம், 3.4 சித்தாந்தங் கற்போர் தரம், 3.5. அவத்தைகள் மூன்றாதல் 3.6 தக்ஷணகைலாய மான்மிய பிரமாவின் சிவபூசை.* | *30* |
| *4.* | *பூசை - அறிமுகம், சிவபூசைச் சிறப்பு, பூசைவகை, பூசைஇடம், பூசைப்பொருட்கள, ஆன்மார்த்த பூசைவகை, சூரியபூசை* | *72* |
| *5.* | *மந்திரங்கள். சூர்யபூஜா மந்திரங்கள்: 1- துவார, 2- பரிவார, 3-ஆசன 4- சூர்யாசன, 5- மூர்த்தி, 6- மூல, 7- சூர்யஷடங்க, 8- தேவி, 9- கிரக, 10,11,12 - தேஜச்சண்ட, ஆசன, மூர்த்தி, மூல, 13- சிவத்துவார, 14- கணேச, கமலா குரு, 15- க்ஷுடுத்தாசன, 16- ஸ்திராசன, 17,18,19- சிவாசன, மூர்த்தி, மூல, 20- வித்யா, 21- சக்திமூல, 22- ஆத்ம, 23- அத்(து)வ, 24- மநோந்மநி, 25- விபூதி, 26,27- பவாதி, 28,29- குரு,வித்யா, 30- ஆவரண, 31- த்வநிச்சண்ட மூர்த்தி, மூல, 32- சிவகாயத்திரி, 33- ஸம்ஹிதா 34- பஞ்சகலா ஆதியன* | *81* |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பூசை -சூரியபூசை, சிவபூசை,த்வநிச்சண்டர் பூசைமுதலியன91

6.1 சூரியபூசை,

6.1.1 கணபதி, குருவணக்கம்.

6.1.2. ஜலசுத்தி, பவித்திரதாரணம், ஸங்கல்பம்.

6.1.3. சூரியசகளீகரணம், அர்க்கியங்கள், விக்னோச்சாடனம்,

6.1.4. சூரியத்துவார, ஆசன, மூர்த்தி பூசைகள், ஆவாஹனாதி, திக்பந்தனம், அவகுண்டம்,

6.1.5. சூரியதேவியர், பாத்தியாதி, அபிடேகம், லயாங்க, போகாங்க, கிரக பூசைகள், தூபாராதி,

6.1.6. ஜெபம், தோத்திரம், பிரார்த்தனை, ஒடுக்கம்

6.1.7. தேஜச்சண்டர் பூசை

6.2 சிவபூசை 102

6.2.1 விநாயக, குரு வணக்கங்கள், பிராணாயாமம், சிவ சகளீகரணம், ஸங்கல்பம்,

6.2.2 கங்காபூசை, அர்க்கியாதி, 107

6.2.3 சிவத்துவாரபூசை, பஞ்சசாதாக்கியம்,மேற்குத்துவார பூசை, விக்நோச்சாடனம், துவாரபாலக, வாஸ்வதி,

6.2.4 பஞ்சசுத்தியில் (1) பூதசுத்தி - ஜீவரக்ஷ்ண விளக்கம், பிராணாயாமம், ஜீவரக்ஷ்ணம், சரீரசுத்தி முறை 1- ஆலமர அமைப்புப் பாவனை, சரீரதகனம், சரீர சிருஷ்டியும் அமிர்தப் பிலாவணமும், சரீரசுத்தி முறை 2 - சூக்ஷ்ம, தூலதேகசுத்திகள், ஆத்மஸ்தாபனம்,112

6.2.5 அந்தர்யாகம் - அகப்பூசை, ஆசனங்கள், ஆவரணங்கள், மண்டலங்கள், சிவமூர்த்தி தியானம், நியாசங்கள், ஆவாஹனாதி, பாத்தியாதி, பாவனாபிடேகம். லயாங்க போகாங்க பூசைகள் அஷ்டபுஷ்பம்சாத்தல், சிவோகம்பாவனை, 119

6.2.6 பகிர்யாகம் - புறப்பூசை - சிவபூஜாக் கோட்டம், பஞ்ச சுத்தியில் (2) ஸ்தான சுத்தி : விஷேசார்க்கியம் (3) திரவிய சுத்தி: கணபதி, கமலா (திருமகள்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு தொகுதிப் பூசை, ஆத்மபூசை,
சிவபூசாக் கோட்டம் பக்91,92 (4) மந்திரசுத்தி
(5) இலிங்கசுத்தி 139
6.2.7. சிவாபிஷேக ஆசன பூசை.
6.2.8. சிவமூர்த்திபூசை. தண்டபங்கிநியாசம். 38 கலா
நியாசங்கள்,
6.2.9. ஷடுத்தாசன பூசை. முண்ட, வக்த்ர, பஞ்சகலா
பங்கி நியாசங்கள். புவன, வர்ண, மந்திர, பத,
தத்துவ,அத்(து)வ,வித்யாதேக, பிற நியாசங்கள். 148
6.2.10 சதாசிவத் தியானம். 151
6.2.11. ஆவாஹனாதி,விஞ்ஞாபனம்,பரமசிவ நியாசங்கள்
6.2.12. பஞ்சகெளவிய முதலானவை
6.2.13 அபிஷேகங்கள், ஒப்பனைகள். 161
6.2.14. ஸ்திராசன பூசை. 168
6.2.15 சிவை பூசை
6.2.16. லயாங்க.போகாங்க-முதல்ஆவரணபூசைகள்.
- பஞ்சப்பிரம மந்திரங்களை நியசித்தலும்
பூசித்தலும் 169
6.2.17. புஷ்பாஞ்சலியும் நாமகரணமும்.
6.2.18. தூப தீபாதி, பவித்திரதாரணம். ஆராத்திரிகாதி. 171
6.2.19 பவாதிநாம, மற்றும் நாமாவளி அர்ச்சனைகள்.
6.2.20. ஜெபசமர்ப்பணம்.
6.2.21. குரு, வித்யாபீட பூசைகள். 176
6.2.22. புஷ்பாஞ்சலி முதலியன.
6.2.23. மற்றைக்கால பூசைகள், இஷ்டகாமியமூர்த்தி பூசை
6.2.24. அக்கினிகாரியம் - வைதிகாக்கினி, சிவாக்கினி 184
6.2.25. அஷ்டபுஷ்பம் சாத்தல். 6.2.26 ஒடுக்கங்கள் -
போகாங்க மூர்த்திகள். ஆசனமந்திரம் லிங்கபீடத்தில்
சேர்ப்பு. பிழைபொறுக்க வேண்டல். சிவை, சுவாமி,
பரிவாரதேவ ஒடுக்கங்கள். பெட்டகத்திற் சேர்த்தல். 185
6.3. த்வநிச்சண்ட பூசை, அகோரசெபம் கபிலபூசை,
திருமுறையோதல், போசனவிதி முதலியன 189



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் 3

## அறிமுறை, செய்முறை பற்றிய மேலதிக விளக்கம்


7. முற்பாக மேலதிக விபரங்கள். சிவத்திருவடிவம், அத்துவாக்கள், 36தத்துவங்கள் முதலிய சித்தாந்த விடயங்கள் 193

7.1. முதலிரு பாகங்களுக்குத் தொடர்பான பல்குறிப்புக்கள் 194

7.2. ஆலயத் தெய்வீகம் காக்கப்படல் 229

7.3. பரசிவ உணர்வே மேன்மையான பேறாகும். 231

7.4. கிரியையென மருவுவனயாவும் ஞானத்தின்நிமித்தமே 235

7.5 புராணங்களில் வரும் சிவபூசை, தோத்திரங்கள் 239

7.6 'நிலத்தளவே யாகுமாம் நீராம்பல்' 241

7.7 'பிணியே பிணிக்கு மருந்தே' - திரோதானம் 250

7.8 அட்ட மூர்த்தம், 7.9 மந்திர வடிவும் 251

7.10 சிவத்திரு வடிவங்கள், 36 தத்துவங்கள்- தொகுப்பு
பதியுண்மை, சொரூப தடத்தங்கள், நவந்தருபேதம்.
சக்திபேதம், அருவுரு, சாதாக்கியம், உரு,
மகேஸ்வர மூர்த்தங்கள், சிவகுமாரர், அத்துவாக்கள்,
கலைகள், மந்திரங்கள், அட்டமூர்த்தம்
பஞ்சகிருத்தியம், தத்துவப்பிரகாசிகையும் சிவஞான
மாபாடியமும், உண்ணிலைத் தத்துவங்கள்,
சித்தாந்தப்பட விளக்கம்.
(சுருக்கிய திருவாவடுதுறை ஆதீனப் படம்) 253

7.11. சைவம் சிவசம்பந்தம். 332

7.12 சைவ நாற்பாதங்கள் - சைவசித்தாந்த விளக்கம். 340

7.13 பிரபஞ்ச தோற்ற முறைமை, அத்துவா மூர்த்தம் 349

7.14. சமயத் தளம்பல்கள் 351

7.15. கலைகளில் தத்துவங்கள் 354

7.16 ஆவாஹனாதிகளின் மேலதிக விபரம் 355

7.17 கந்தபுராண உமை கயிலை நீங்கு படலம் 357

7.18 புத்தர்கால வேதத்தின் ஞானகாண்ட எழுச்சி 361

7.19 வேண்டும் வரம் தருவாய்; 363




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.20 நித்தியாக்கினி, அக்கினி காரியம் 365
7.21 பாவானியன்ற சிவபூசை. திருக்கேதீஸ்வரமான்மிய கேது, துவஷ்டா பூசை, சிவோஹம்பாவனை முதலியன 367
7.22 சந்தியாவந்தனம் 379
7.23 சமய பேதங்கள், உண்மைச்சமயம், சமய கர்த்தாக்கள், சமய தத்துவங்களும் தெய்வங்களும், சமய தாரதம்மியம், சமயங்கள் அதிகமாதல், தாய்ச்சமய அறிவுரை. 387
8. முத்திரைகள். 406
9. ஒழிபு நிலைக் குறிப்புகள் 415
10 பின்னிணைப்பு
10.1 குஞ்சிதபாதம், 2 ஆகம சித்திரம் 433
3 கற்பூரமகிமை, 4 தத்துவ விளக்கப்படம் (ப. 467)
5 பிராமணியம் காத்தல் மேலதிகம்
6 கிரியை என மருவுவன யாவும்
7 பிரணவ யோகம் - திருமந்திரம் (ப.470)
8 காயத்திரி மந்திரம்
9 சிவவிளக்கம் - நாவலர்
10 இந்துபற்றி மேலதிகக் குறிப்பு
11 மந்திரமும் வடமொழியும்
12 பல்குறிப்புக்கள்
நன்றி மறத்தல் நன்றன்று (ப. 466)
சிவத்திருமன்ற வெளியீடுகள் (472)
உசாத்துணை நூல்கள் (ப. 464)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பாகம் 1

## அத்தியாயம் 1. முன்னுரை

உயிர்கள் பலவாய்ப் பல்வேறு சமயக்கொள்கைகளிற் பயின்று வருகின்றன. சிறப்பாகச் சிவனை முழுமுதலாகக்கொண்ட சைவத்திற் பிறந்த உயிரானது தனது விருப்பு வெறுப்புகளால் ஆற்றப்பட்டவினை, நல்வினை தீவினைகளாயும் அதனால் பாவ புண்ணியங்கள் பதிவாகித் தான் இன்ப துன்பங்களை நுகர்வதாக உணர்கின்றது. இங்ஙனமாகப் பிறவிதோறும் பெற்ற கன்ம அனுபவத்தால் முன்னைய சரியைமுதலாய சிவபுண்ணியங்களால் திருவருள் கைகூடித் தன்செயல்களில் விருப்புவெறுப்பற்று யாவுஞ் சிவமயமெனும் இருவினையொப்பு நிலைவர, அதற்கு யானெனதென நின்ற மலம் பரிபாகப்படும். படவே, முன்னை நல்வினை கைகூட இதுவரை இருந்த திரோதமறைப்பு நீங்கி பராசக்தி பதிதலாகிய சத்திநிபாதம் கைகூடும். கைகூடவே சிவம் மானிடகுருவாகி எதிர்வந்து ஞானதீக்கையளித்து உபதேசித்து அவ்வழி நிற்பித்து ஞானநிட்டை கூடச்செய்து பிறவித்துயர் கெடுப்பர். ஆதலின் முன்னர் சிவபுண்ணியம் ஆற்றாவிடில் இப்பிறவியிலாவது தீட்சாகுருவை அடைந்து சமய, விசேட தீட்சை பெற்று உண்மைச் சரியை கிரியா யோகமான சிவபூசை செய்பவர்க்கும், முயல்பவர்க்கும் சித்தாந்தம் பற்றிய தெளிவினை இந்நூல் வழங்குவது உறுதியெனலாம்.

உபநயனப் பேறுடையாரே வேதம் ஓதுதற்கு உரியராதல் போல சிவதீக்கை யுடையாரே (சரியைமுதலிய சைவாசார வாழ்விற்கும்), திருமுறைகள், ஆகமங்கள், மெய்கண்ட சாத்திரங்கள் ஓதுதற்கும் கிரியைகள் ஆற்றுதற்கும் தகுதியுடையோராவர். சரியையானது முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்சையால் அதிகாரம்பெறும். கிரியாவான்கள் யாவருக்குமுரிய ஆன்மார்த்தம், மற்றும் மடாதிபதிகளுக்கு உரிய அதிகாரமானவை விசேடதீட்சையாற் பெறப்படும். ஆலயங்களில் பிறர்பொருட்டாற்றும் பரார்த்தம் நிர்வாணதீட்சையாலும், தகுந்தோற்குத் தீட்சையளித்தல், இலிங்கப் பிரதிட்டையாதிய செய்தல் ஆசாரியாபிடேகத்தாலும் அதிகாரம் பெறும். உலக ஒடுக்க தோற்றத்தைச் சித்திரிக்கும் சிவபெருமானின் பரமேஸ்வரப் பிரவாகமே அருவுருவத் திருமேனியாயமைந்த சிவலிங்கம். சிவம் வாக்குமனாதீத கோசரப்பொருள். கோசரம் என்பது கண்முதலாய பொறிகளாலன்றி மெய்ஞ்ஞானத்தால் உணரப்படுவது. எவ்வாற்றானும் மெய்ஞ்ஞானம் பெறாத உயிர்களுக்கு சிவன் எட்டாவிடில் உயிர்கள் உய்யும் வழியேது? ஆதலால் இறைவன் தடத்த நிலையெனும் படிகளில் இறங்கி கண்காணும் படியான இலிங்கவுருவில் அடியாரின் பூசை வழிபாடுகளை ஏற்றருளுவான்.

ஒன்றாய் இருதிறமாய் ஓரைந்தாய், ஐயைந்தாய்
அன்றா தியின் மீட்டும் ஐந்தாய் அளப்பிலவாய்,
நின்றாய் சிவனேயிந் நீர்மையெலாந் தீங்ககற்றி
நன்றா விகட்கு நலம்புரிதற் கேயன்றோ - (கந்தபுராணம்)

**ஒன்றாய்** - ஏகனாய், (இது தனது ஒப்பற்ற ஏகநிலை அல்லது சொரூபநிலை), **இருதிறமாய் -** அம்மையப்பராய், **ஓரைந்தாய்** - உலகைப் படைத்தலாகிய புனருற்பவத்தின் போது சிவம், சக்தி, சாதாக்கியம் (இலிங்க தத்துவம்), ஈசுரம், சுத்தவித்தை என 5 சிவ தத்துவங்களாய், **ஐயைந்தாய்** - இவை கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் உள்ளிட்ட சிவபுராணங்களில் வரும் பூசித்தற்குரிய (பராவுசிவர் எனும்) **25 மகேஸ்வர மூர்த்தங்களாய்.** (அவையாவன : சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாண சுந்தரர், பிட்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியத்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கயாமுகானுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்பனவாம்.) **மீட்டும் ஐந்தாய்** - பக்குவப்படாத உயிர்களின் முற்றுறாத கன்மவினைகள் காரணமாக மீளவும் அவற்றிற்காய புனருற்பவத்தின் போது முற்குறித்த 5 சிவ தத்துவங்களாய், **அளப்பிலவாய் -** அண்டபகிரண்டமும் (அகண்டாகாரமும்) தானேயாய், **இந்நீர்மை -** இவ்வாறு நின்ற தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நின்ற திருத்தாண்டகம்), **தீங்ககற்றல்** - ஆன்மாக்களின் ஆணவமல அறியாமை காரணமாகச் செய்யும் தன்முனைப்போடுள்ள கன்மங்களால் வித்தும் மரமும் போல மீளமீள வரும் பிறவித் துயரகற்றல். இனி, சம்பந்தர் கூறுவதாவது, (பண் நட்டபாடை - நாட்டை)

'ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே'

ஒன்று முதல் எட்டு வகையாய் உலகே தானாய் (**ஒன்றாய்**) இருந்த இறைவன், அவற்றினின்றும் நீங்கித் தனது ஒப்பற்ற நிலையில் **வேறாயும்** நின்று பஞ்சகிருத்தியங்களைச் செய்வான். அவ்வாறு தூல, சூக்கும பஞ்சகிருத்தியங்களை ஆற்றும்போது உயிர்கள் தம் வினைகளையறிந்து அனுபவிக்க வழிகாட்டியாய் உடன் நின்றருளுவான் என்பதால் **உடனாய்** என்றார். அகண்டாகாரமாயுள்ள இறைவன். வேதாகம காலந்தொட்டுள்ள முனிவர்கள் ஞானிகள் வாயிலாகத் தன் பல்வேறுபட்ட வடிவங்களைக் காட்டி அருளுகின்றான். அவை சொரூபம், தடத்தம் எனப்பட்டு அதில் தடத்தம் அரு, அருவுரு, உரு என முத்திறப்பட்டு நிற்பன். அவற்றின் மேலும் விரிவாய்ச் சிவதத்துவம் என நின்ற முற்கண்ட ஐந்தும் **நவந்தருபேதம் என** ஒன்பதாகின்றன. **அவை அருவம்** 4 - சிவம், சக்தி, நாதம், விந்து, **அருவுருவம்** 1- சதாசிவம். **உருவம்.** 4 - மகேசுரன், உருத்திரன், விட்டுணு, பிரமன் என்பன. இவையொன்றி னொன்றாகத் (தடத்தமாய்த்) தோன்றி வேற்றுமையின்றி ஒவ்வோர் தொழிலைச் செய்யும். இவற்றையெல்லாங் கடந்து நின்று அருள் பாலிப்பவன் சுத்தசிவன், பரசிவன் என்றெல்லாம் புகழப்படுவான்.

இனி, பூசையென்றால் அது (சைவர்களுக்குச்) சிறப்பாகச் சிவபூசையைக் குறிப்பதால் பூசித்தற்குரிய பொருளாக சிவலிங்கத்தைக் கொள்ளும் விளக்கத்தை நோக்கலாம். அருவுருவத் திருமேனி சாதாக்கியம் என்பதன் பொருள் என்றும் புகழப்படுவது என்பதாம். எனவே நாமரூபாதிகள் இல்லாத சுத்தசிவனார் நாமரூபாதிகள் உடையவராய்த் தம்மைத் தொழும் அன்பர்களால் புகழப்படுபவர் என்பதாம். பொதுவில் இது பஞ்ச சாதாக்கியங்களைக் குறிக்கும். தாயின்றிப் பிள்ளை-உரு ஏது எனும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவுருவத் திருமேனியாக இலிங்கங்கள் இருப்பினும் அவை பராசக்தி முதலிய பஞ்ச சக்திகளிடமிருந்தே தோன்றியவையென கந்தபுராணங் கூறும். 7.12, 10.12 பார்க்க

பஞ்சசாதாக்கியங்கள் 7.9, 7.10,10.6,10.12 பார்க்க. 1. **சிவசாதாக்கியம்** - சாந்தியதீதை எனும் பராசக்தியின் அம்சமாய்த் தோன்றியது. இது அதிசூக்குமமாய், அளவிலாச் சோதிமயமாய் மின்னல்போல் விளங்கி வியாபித்து இருப்பதாகும்.

**2. அமூர்த்தி சாதாக்கியம்** - சாந்தி எனும் ஆதிசக்தியின் அம்சமாய்த் தோன்றியது. இது கோடிசூரியப் பிரகாசமாய், அரூபியாய் இலிங்காகாரமாய் (இலிங்வடிவாய்) சோதிக்குள் அமர்ந்த மூர்த்தியாயிருக்கும்.


**3. மூர்த்தி சாதாக்கியம்** - வித்தை எனும் சக்திகலையின் அம்சமாய் தோன்றியது. இது காலாக்கினியை நிகர்த்த பிரகாசமுடையதாய், இலிங்கவடிவாகி, அதன் மேற்பாகத்தில் ஒரு திருமுகமும், அதிலமைந்த முக்கண்களும் உடையதாயிருக்கும்.

**4. கர்த்திரு சாதாக்கியம்** - பிரதிட்டை எனும் சக்திகலையின் அம்சமாய்த் தோன்றியது. இது பளிங்கொளியாய், திவ்விய இலிங்கமாய், மத்தியிலே நான்குமுகங்களும், பன்னிரு கண்களும், எட்டுக் கரங்களுமுடையதாய், குறைவற்ற இலக்கணமுடையதாயிருக்கும்.

**5. கன்ம சாதாக்கியம்** - நிவிர்த்தி எனும் சக்திகலையினம்சமாய், தோன்றியது. முன்னைய நான்கும் ஒன்றையொன்று பற்றி ஐந்தாம் கன்ம சாதாக்கியத்தை அடைந்திருத்தலின் மிக விசேடமுடையது. இது நாதமயமான லிங்கமும், பிந்துமயமான பீடமும் கூடியதாய், பஞ்ச கிருத்திய கர்த்திருத்துவம் உடையதாயிருக்கும். இது இலிங்கமும் பீடமுமாய் இருப்பினும், 5 திருமுகமும், 10 திருக்கரங்களும், உடையதாய், சிந்திக்கப்படும் தியானரூபியாய் இருக்கும். லிங்கம் : லி - ஒடுக்கம், கம் - தோற்றம். சிருட்டி - தோற்றம், சங்காரம் - ஒடுக்கம். சங்காரகாலத்தில் லிங்கத்தில் லயமடைந்த சேதனா சேதன (உயிர்களும் சடமும்) ஆகிய பிரபஞ்சமானது, பின் சிருட்டியின்போது லிங்கத்திலிருந்து உற்பவிப்பதால் லிங்கம் எனப்படுகின்றது. பரமேஸ்வரப் பிரபாவம் எனும் இறைகீர்த்தி உலகை ஒடுக்கவும் தோற்றவும் மூலமாயுள்ள லிங்கத்தாற் பெறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ஞானசக்தியாகிய சிவலிங்கத்தின் கீழிருக்கும் ஆவுடையார் கிரியா சக்தியைக் குறிக்கும். பரவெளியைக் குறிக்கும் லிங்கத்திலே (அது சிவாகமப் பிரகாரம் அமைக்கப்பட்டு கிரமாகப் பூசிக்கப்படின்) எப்பொழுதும் அதில் அசைவுண்டு. அசைவு சக்தியினாலாதலின் அது பராசக்தியைக் குறிக்கும். சக்தியுடனான திருவிளையாடலில் இறைவன் இவ்வுண்மையை நிகழ்த்திக் காண்பித்தமையினைக் கந்தபுராணம், திருவிளையாடற் புராணங்களிற் காண்க. இதனாற் போலும் ஆவுடையார் லிங்கத்தைச்சுற்றி (லிங்கம் சுழல் பம்பரம் போலமைந்து) இருப்பதைக் காணலாம். **குறிப்பு** : சூரியனைச் சுற்றிக் கிரகங்கள் அசைவதும், அணுக்கருவைச் சுற்றி இலத்திரன்கள் ஓடுவதும், தலைவனைச் சுற்றி குடிகள் இயங்குவதும் ஆகிய இயற்கை நிகழ்வுகளும் இதற்கு ஆதாரமாகின்றன. ஐன்ஸ்ரீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் அணுவிஞ்ஞானியும் இச் சுழல்வை நடராசரின் ஆட்டத்துடன் ஒப்பக் கண்டுள்ளாராம். சைவம் சிவசம்பந்தம் என்பதும், பரசிவ உணர்வின்றி பிறவித்துயர் தீராதென்பதும் வெளிப்படை. ஆயினும் அடிக்கடி யேற்படும் சிவபரத்துவ ஆசங்கையினை நீக்கும்பொருட்டு பிரமா தக்கனுக்கு உபதேசித்தமையும் அடிமுடி தேடிய வரலாறும் சான்றாம். (கந்தப்புராணம் தக்ககாண்டம். இதில் அத்தியாயம் ஏழில் வரும்

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. (திருமந்திரம்)

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே (திருமந்திரம்)

சற்சமயமாகிய சைவஞ் சார்ந்தோர் படிமுறைகளாலே சாதித்து உயர் பயனாகிய சிவப்பேறடைதற்குரிய நெறிகளாகவுள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் சைவநாற்பாதங்களாம். நான்காவதாகிய **ஞானம்** உயர் சிவப்பேற்றினை நேரே தருவதா கும். ஏனைய மூன்றும் படிமுறைக் கிரமத்தில் அச்சிவப்பேற்றிற்குத் தகுதி அளிப்பன. **சரியை** என்பது உடலையும் உறுப்புக்களையும் சிவப்பணியில் நிறுத்துவதாகவும், **கிரியை**யென்பது சிவப்பணியில் நிற்கும் புறத்திலுள்ள உடலுறுப்புக்களின் இணக்கத்தோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரமெனும் உள்ளுறுப்புக்களாகிய இந்திரியங்களை நெறிப்படுத்திக் கொண்டு உள்ளத்தைச் சிவஸ்தானமாக்கி **சிவபூசை**மூலம் சிவ ஆராதனையில் நிறுத்துவதாகும். **(கிரியா) யோ**கமென்பது, அங்ஙனம் சிவப்பணி வசப்பட்ட உடல், உள்ளங்களின் அனுசரணையுடன் மனமுதலாய அந்தக்கரணங்களை நெறிப்படுத்தி உயிரைப் பாசப்பற்று விட்டுச் சிவப்பற்றிற் சென்று லயிக்கச் செய்வதாகவும் அமையும். சைவ நாற்பாதங்களில் ஒருவர் நிலைப்பதற்கு குருவும் (ஆரியனும்) தீட்சையும் இன்றியமையா தென்பதனை மெய்கண்ட சாத்திரங்கள் வலியுறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
**ஆரியன்** தோற்றமுன் அற்ற மலங்களே - திருமந்திரம்.

'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே' - போதம். 8ம் சூத்.

'மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்தொல் லுயிரை
மன்னும் அருட் குருவாகி வந்(து)அவரின் நீக்கி
மலம்அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்'
- சித்தியார்.பா 253

ஞானமென்பது பாசஞானம், பசுஞானம், பதிஞானம் - திருவடிஞானம் என மூவகைத்தாகும். மேலான பதிஞானம் உண்மைச் சரியை, கிரியாயோகத்தின் முதிர்விலும், திருவருட்டுணையால் இருவினையொப்பு, மலபரிபாகம் சத்திநிபாதம் நிகழ்ந்து சிவகுருவந்து வழிகாட்டுவதிலும் நிகழ்வது. இது தன்முயற்சி கெட்ட பூரண சரணாகதி நிலையில் குரு காட்டக் காண்பது. (பாகம் 3ன் 7.1, 7.2, 7.10, முதலியவற்றிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும் பார்க்க)

சிவபூசைத்திரட்டு, சோமசம்பு பத்ததி, சிவாக்கிர பத்ததி, பன்னிரு திருமுறைகள் என்பவற்றின் தொகுப்பாக எழதப்பட்ட 'சிவபூசை முறைகள்' எனும் மகாவித்தவான் சி. அருணைவேலு முதலியாரால் 1983ல் கோவில்பட்டி திருமுறை மன்றத்தால் வெளியிடப்பட்ட நூலையும், மற்றுமுள்ள துணை நூல்களையும், சிவபுராணங்கள், மற்றும் சித்தாந்த சாத்திரங்களையுங் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 'கிரியையென மருவுவனயாவும் ஞானத்தின் நிமித்தமே' (சித்தியார்) என்பதால் தீக்கைப் பெருமை, குரு, சிவபூசைச் சிறப்பு, தசகாரியம் போன்றவற்றின் விளக்கங்கள் சித்தாந்த சாத்திரங்களின் வாயிலாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கப்பட்டுள்ளன. மேலும் பல பன்முக விளக்கக் குறிப்புகள், கட்டுரைகள் போன்றவை 3ம் பாகத்தில் கூறப்பட்டுள்ளன. ஆங்காங்கே பொருந்து மிடந்தோறும், நாவலர் நெறியிற் பயின்று, பயிற்றுவித்த ஏழாலை கலாநிதி பண்டிதர் மு. கந்தையா, மற்றும் பன்னாலைச் சித்தாந்தி வி. சங்கரப்பிள்ளை அவர்களது வழியில், சித்தாந்த மற்றும் சைவத்தை தூ யநிலையிற் பேணுதற்காய குறிப்புகளும், கருத்துக்களும் ஆங்காங்கும் பாகம் மூன்றிலும் தரப்படுகின்றன. இவற்றை நேரிதாகக்கொள்ள சிவயோக சுவாமிகளின் தோன்றாத்துணை யமையட்டும்.


ஆன்மார்த்த - அக, புற மற்றும் சிவத்திரு மடங்களுக்கான அதிகாரபூசைகளுக்கே முக்கியத்துவங் கொடுக்கப்பட்டுள்ளது. அக்கினிகாரியத்துடன் ஆற்றும் ஆன்மார்த்தமின்றித் தொழிலாகப் புரியும் பரார்த்தம் ஆன்மீக பலனைத் தராது. சிவதீட்சை கொடுக்க முடியாதவர் சிவப்பிராமண ராகார். சிவாலயங்களிலோ, சிவக்குடும்ப சைவாலயங்களிலோ அத்தகையோர் கிரியைகள் செய்தலும் தகாதது மட்டுமின்றி அது சித்தியுமாகாது. மேலும் அது நாட்டிற்கும் கெடுதியுமாம். இவை ஆகமச் செய்திகள். வேதமந்திரமும், ஆகமங்களும், தமிழ் வேதத் திருமுறை மந்திரமும், சிவபுராணங்களுஞ் சேர்ந்து வேதநெறி தழைக்கவும், மிகுசைவத் துறைவிளங்கவும் திருஞானசம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு சிவத்தொண்டினை ஆற்றுவோமாக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத். 2. தீக்கையும் கிரியையும்



விபூதி தரிக்கும் இடங்களையும் தொடும் இடங்களையும் காட்டும் பட



(அ) விபூதி தரிக்கும் இடங்கள் அவையுகளைக் காட்டும் படம்
(பின்புறம்)

**2.1 தீக்கை(தீக்ஷை)ப் பெருமை,** சிவஞான மாபாடிய சிறப்புப்பாயிரத்திற் கண்டபடி சுருக்கம் : **சிவஞானபோத வரலாறு** :- மகாசங்காரகால முடிவில் உலகங்களை மீளப் படைத்தற் பொருட்டு பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை (பிரணவத்தை) நோக்கியவழி, வேதாகமங்கள் குடிலையில் நின்றும் நாதவடிவாயும், அதன்பின் விந்துவடிவாயும், அதன்பின் அக்கரவடிவாயும் முறையே தோன்றின. பின் அவற்றைச் சொற்றொடர்ப் படுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க்கு அருளிச்செய்தற் பொருட்டுப் பரமசிவன் ஈசானமுதலிய பஞ்சப்பிரம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மநுக்களாகிய சத்திகளே திருமுடி முதலிய அவயவங்களாகச் சகள நிட்களத் திருமேனி கொண்டருளிச் **சதாசிவமூர்த்தியாய்** நின்று, தற்புருடமுதலிய நான்கு திருமுகங்களால் வேதங்களைத் தோற்றுவித்து, மேலுள்ளதாகிய ஈசானமுதலிய ஐந்து திருமுகங்களாலுங் காமிகமுதலிய இருபத்தெட்டு ஆகமங்களையுந் தோற்றுவித்து, **வேதங்களை** அநந்ததேவர் வழியாலே **பிரமனுக்கு** அருளிச்செய்து, **சிவாகமங்களை** வேறுவேறாக வகுத்து **பிரணவர்**முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதலிய பதினெண்மருமாகிய இருபத்தெண்மருக்குஞ் **சிவபேதம் உருத்திரபேதம்** எனப் பகுத்து ஓரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச்செய்து, பின்பு தொகுத்தல் முறையாலே அவ் விருபத்தெட்டினையும் அட்ட வித்தியேசுரரில் முதல்வராகிய அநந்ததேவருக்கு அருளிச் செய்தார். அவற்றை அநந்தர் 118 உருத்திரரில் முதல்வராகிய ஸ்ரீகண்டருக்கு அருளிச் செய்தார். ஸ்ரீகண்டர் அவற்றைக் கணங்களுக்கும் தேவர் முனிவர்கட்கும் அருளுதற்பொருட்டு முதலில் நந்திபெருமானுக்கு அருளினார். (நந்திபெருமான் வழியினை திருமந்திர குரு வரலாற்றிற் பார்க்க. இது பின்னர் வரும் குரு பூசையிற் குறிப்பாகத் தரப்படும்).




சிவஞானபோத உபதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திபெருமானின் சந்தேகமாகிய ஆகமவேறுபாட்டை நீக்கிய ஸ்ரீகண்டர், 'கற்பந்தோறும் படைப்பு வேறுபாடும் கேட்போர் கருத்து வேறுபாடும் பற்றி அவற்றிற் கிரியை சரியை முதலிய மூன்று பாதங்களும் ஆகமங்களில் வெவ்வேறாகக் கூறப்பட்டன. ஆதலால் அவற்றுள் எவ்வாகமத்தின்படி யார் **தீக்கை** பெற்றார் அவ்வாகமத்தின் வழி அவர் ஒழுகற்பாலர் என்றார். இனி, ஞானபாதமாவது பொருட்தன்மை யுணர்த்துதலால் அது பலதிறப்படுதல் பொருந்தாமையின் **இரௌரவ ஆகமத்துட் பன்னிரு சூத்திரத்தாற் கூறப்பட்டது சிவஞானபோதம்** என்பதோர் படலம். அது கேட்டார்க்கு எல்லா ஆகமப் பொருள்களும் மாறுகோளின்றி இனிது விளங்கும்' என்றார். அதன்பின் சிவஞானபோதத்தை நந்திபெருமானுக்கு அருள அவர் சனற்குமாரருக்கும், சனற்குமாரர் சத்தியஞான தரிசினிகளுக்கும், பின் பரம்பரையாக பரஞ்சோதி மாமுனிவர்க்கும் அருளினார். இவர்கள் அகச் சந்தனாசாரியார்கள் எனப்படுவர். இதன் தொடராகப் பூவுலகில் மெய்கண்டார் முதலிய புறச்சந்தனாசாரியர் நால்வர் 13, 14ம் நூற்றாண்டில் உதித்து மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கினையும் செய்தனர். கிரியை ஞானத்திற்கே இட்டுச்செல்ல வேண்டும் என்பதால் இந்நூலில் ஞானபாதமாகிய சித்தாந்தமும் அதன் குருபாரம்பரியமும் விபரிக்கப்படுகின்றன. ஞானநிலையில் நிற்போர்க்கும் மயர்வு - சந்தேகம் அறுத்தற்குச் சாதகமாகிய சரியை முதலியன செய்யவேண்டு மாதலின் ஞானநூல்களை அறிந்து பயிலவேண்டும்.

**வேதாகமங்கள் -** 'தந்திரவழி யொழுகுதல் பொய்த்தொழில் உணர்ந்து வெகுண்ட கவுதமன் சாபப் பயன்' - சூதசங்கிதை, 'அறுமுனிவர் இட்ட சாபத்தாலே வேட்பித்தல் முதலியவற்றில் அதிகார மின்மையால் விருத்தியின் பொருட்டு தந்திரஞ் செய்யப்பட்டது. - கூர்மபுராணம். வேதத்துடன் மானிடராற் செய்யப்பட்ட தந்திரங்கள் சைவருக்கு ஆகா. வேதாகமங்களில் அந்தந்த ஆகமங்களைச் சம்பிரதாயங்களாகச் சுட்டும் பெயரால் அழைக்கப்படும் காபாலிகர் (பெரியபுராணம்), காஸ்மீரர், பாசுபதர், ஆதிசைவர் முதலியோரில் சித்தாந்திகள் ஆதிசைவரைக் கொள்வர். வேதத்துள் விதிக்கப்படும் சிவபூசை முதலியவற்றிற்கு அவற்றை வகுத்துக் கூறும் காமிகம் முதலானவை இன்றியமையாது வேண்டப்படும். தீக்கைப் பேறுகளும் ஆன்றோராற் தழுவப்பட்டன. சுவேதன், உபமன்யன், அகத்தியன் முதலியோர்பாற் கண்ணன், இராமன் முதலியோர் தீக்கைப்பேறு பெற்றதைப் பாரதம் முதலியவற்றிற் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி வேதம் ஆகமம் இரண்டும் முதல்வனால் அருளப்பட்டவை யெனினும் அவை பயன்பாடு கொள்வோரின் ஆன்மீக தாரதம்மியத்திற் கேற்ப வேறாதல் காண்க.

'வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅம லன்தருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநி பாதர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்' - சித்தியார், 267

வேதம் பொது, ஆகமம் சிறப்பு. வேதம் ஐயாவென ஓங்கி நிற்க, இறைவன், ஆகமத்தில் நின் றண்ணிப்பான். அண்ணித்தல் - சிவபூசை முதலிய சிவபுண்ணியங்கள் வழிநின்று அண்மித்தல். வேதம் **உலகோற்காம்.** ஆகமம், பல் பிறப்புகளில் நின்றும் பெற்ற அனுபவங்களாகிய இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாத மெனும் குரு பதிந்து, தீட்சை வழங்கி ஆட்கொள்ளலின் அது **சத்திநிபாதற்காம்.**

'உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும், நிலவுமெய்ந் நெறி சிவநெறிய தென்பதும் கலதிவாய் அமணர் காண்கிலார்க ளாயினும் பலர்புகழ் தென்னவன் அறியும் பான்மையால்', என்பதும், 'வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத் துறைவிளங்க' 'என்பதும் பெரியபுராணம்.

**`வேதசாரஞ் சிவாகமம் (சித்தாந்த சைவாகமம்) ஆதலாற் சைவாசாரத்திற் குரியோன் வைதிகன்'** எனவும். ''வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம் ' (சிவப்பிரகாசம்) எனவும், 'வேதப்பயனாஞ் சைவமும்போல' (பெரியபுராணம்) எனவும், 'பிறநூல் பிறபொருளைக் கூறும்' எனவுங் கூறலின் வேதத்தோடு ஒற்றுமையுடைமை பற்றியே சிவாகமங்கள் பிரமாணம் ஆகின்றன. **மீமாம்சை** வேதத்தின் கர்மகாண்டத்தையே ஆராய்தலின் முழுமையான வேதமன்று. **பாசுபதம்** என்பது காரணப்பெயரால் சைவாகமங்கட்கும், இடு(இட்ட)குறிப் பெயரால் பாசுபத ஆகமங்கட்கும் ஆவதுபோல. **வேதாந்தம்** என்பது காரணப்பெயரால் வேதமுடிபாகிய உபநிட தங்களையும், இடுகுறிப்பெயரால் அவற்றை மானிடரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச்செய்த ஏகான்மவாத நூலையுங் கூறும். (இடுகுறிவேதாந்தமே சைவசித்தாந்தத்துடன் பொருந்துவதில்லை.)

'சைவாசாரத்திற் குரியோன் வைதிக(சைவ)ன்' என கூறப்படுவதால் சிவதீக்கை பெற்று நியமமாக வாழ்பவன் வைதிகசைவன் என்பது துணிபு. 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்'- குறள். 'வேதம் ஓதி வெண்நூல் பூண்டு வெள்ளை எருதேறி'ய சிவனே, 'அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்' என்றபடி, ஆகமத்தைச் சுந்தரர் வாயிலாக திருமுறைகளின் ஒரு பகுதியாகத் தந்தார். அர்ச்சனை, அர்ச்சித்தல், அர்ச்சகர் என்பன உருவிலமைந்த இறைவனை மந்திரங்கள், மற்றுமுள்ள துதிகளால் வழிபடலாம். இயலாதவர் அர்ச்சகரைக் கொண்டு அவ்வழிபாட்டை நிகழ்த்துவார். வழிபாடின்றி வெறுமனே தீபங்காட்டல் அர்ச்சித்தல் அல்ல. **(குறிப்பு** - தமிழிலிருந்த ஆகமங்கள் கடற் கோளால் அழிந்திருந்தும் மரபுவழி பேணப்பட்டதால் பின்னர் வடமொழியிற் செய்யப்பட்டன என ஆய்ந்துள்ளனர். திருமந்திரமும் தமிழாகம நூலே). உபநயனம். சிவ தீக்கை இரண்டும் தத்தமளவிற் சிறப்புடையனவேயாம். **'வட மொழியுந் தென்தமிழும் ஆயினான் காண்', 'ஆரியன் காண் தமிழன் காண்' -** அப்பர். இறைவன் இனமொழி வேறுபாடற்றவன்.

'தீக்கை' யென்ற சொற்பொருளாவது 'பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்பதாம்'. விபூதி (திரிபுண்டகம்), உருத்திராக்கம். சடாமுடி ஆகிய சிவசின்னங்கள் தீக்கை பெற்றோராலேயே அணியப் படுவதனால் தீக்கை பெறாதவன் சைவனாகான். நடைமுறையில் தீக்கை பெறாதோர் நெற்றியிற் பரந்து உத்தூளனமாகவும், தீக்கை பெற்றோர் சந்தியாவந்தனத்தில் பதினாறு இடங்களில் முக்குறியெனும் திரிபுண்டகமாகவும் நீறணிவர். தீக்கை யென்பது ஆசாரியமூர்த்தி வாயிலாய் நின்று முதல்வனே அத்துவசுத்தி செய்து மலமகற்றி சிவம் பிரகாசிக்கச்செய்து ஞானம் உதிப்பித்து சிவமூலமந்திரம் ஓதி வீடளிக்க உற்ற முறையாகும். **தத்துவப் பிரகாசிகை நூல் தீக்கைபற்றிக் கூறுவது :** சம்சாரத்தில் துன்பமடைந்த அநேகமான இந்த உயிர்களுடைய இளைப்பு நீக்கத்தின் பொருட்டும், கன்மத்தின் பரிபாகத்தின் பொருட்டும், பரமசிவன், கிருபையினால் மகாப் பிரளயத்தைச் செய்கின்றார். உயிர்களிடத்து வைத்த இச்சாசக்தியெனும் மாறாக் கருணையினால் திரும்பவும் இவ்வுலகில் சிருட்டியைச் செய்து அந்த உயிர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மங்களை முதிர்வித்துப் பக்குவப்படுத்துகின்றார். பின்னர் முறையே மலபரிபாகம் உண்டானவுடன் போகத்தால் கன்மத்தை நாசஞ்செய்து **தீஷையெனும் பெயருடைய தன் சக்தியால்** பரமசிவன் எல்லா உயிர்களையும் பாசத்தினின்றும் விடுவிக்கின்றார். **விளக்கம்:** தீக்ஷை யென்னும் தன் சக்தியால் ஒரேகாலத்தில் கன்ம பக்குவத்தால் ஆணவமலம் பக்குவப்பட்டவுடன் ஆசிரியனிடத்து விளங்கும் வியாபாரத்தில் (ஆசிரியத் தொழிலில்) விளங்கித்தோன்றும் தன் சக்தியினாலாவது, அல்லது கேவலம் (பிறவற்றோடு கூடாத) தன் சக்தியினாலாவது ஒரேகாலத்தில் அநேக போகங்களை அனுபவித்தல் என்னும் கன்மநாசத்தைச் செய்து மலங்களினின்றும் உயிர்களை விடுவிக்கின்றார். 'அநேக பிறப்புக்களில் உயிர்களாற் சம்பாதிக்கப்பட்ட கன்மமானது வறுக்கப்பட்ட வித்துப்போல எதனாற் தடைப்பட்டதோ' என்பது சிரணாகமம். அத்தடை தீக்கையினால் என்பதை உய்த்துணர்க. ஆளுடையபிள்ளையார்- சம்பந்தர் உபநயனஞ் செய்யப்பெற்ற போது மறையவற்கும் உலகவற்கும் ஓதியது:-

'மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே' - பஞ்சாக்கரப் பதிகம்

அஞ்செழுத்தே மறையானது. அதுவே வேதியர்க்கு முடிவான மந்திரம் என்றார். இதனால் 'சிவயநம ' வின் பெருமையினைத் தமக்குத் தீக்கை வைத்தவர்களுக்கே உபதேசித்தார். ஆதலின் சிவாயநம வென்றோதும் பிராமணரே சிவதீக்கைக் குரியவராதல் காண்க. (அன்றும் சிவமூலத்தை மறந்த ஸ்மார்த்தர்கள் இருந்துள்ளனர்).

அத்துவாக்கள் என்பன உயிர்கள் வினையீட்டும் வழிவகைகள். அவை மந்திரம், பதம்-சொல், வன்னம் - எழுத்து எனும் சொற்பிரபஞ்சத்தாலும், தத்துவம், புவனம், கலையெனும் பொருட்பிரபஞ்சத்தாலும் அமையும். தீக்கையின்போது அத்துவசுத்தியும் (பின் இது வரும்) செய்யப்படும். (மேல்விபரம் 7.10.9,10) ஆசாரியராவார் சீடரது பக்குவம் நோக்கி அவர் மனத்தைக் கசிவித்து தமது சக்தியை அவற்குச் செறிவித்து ஞானம் உதிப்பிக்கும் ஆற்றல் உளராய் மனக்குற்றம் உடற்குற்றம் இரண்டும் அற்றவராய் திரிபதார்த்த (பதி, பசு, பாச) - சைவசித்தாந்த ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையாராய் இருத்தல் வேண்டும் என்பதும் சீடரும் குருவினது குணத்தையே கொண்டு,

'தந்தைதா யாவானும், சார்கதியிங் காவானும்,
அந்தமிலா இன்பநமக் காவானும், - எந்தனுயிர்
தானாகுவானும், சரனாகுவானும், அருட்
கோனாகு வானும் குரு.'

என்று தெளிந்து குருவைப் பூசித்து அவர் உபதேசித்தவாறே மந்திர கிரியா பாவனைகளை நுணுகத் தெரிந்து உச்சரித்து, சாதித்துப், பாவித்து நிட்டை முயலல் வேண்டும் என்பதனை ஆய்ந்து தெளிக. ஆன்மாக்களது **சஞ்சிதம்** ஆசாரியன் திருநோக்காலும் அத்துவ சுத்தியாலும் அழிய, **பிராரத்தம்** உடலோடழிய, **ஆகாமியமும் ஆணவமும்** ஞானத்தாலும் சிவோகம்பாவனையாலும் அழியுமாதலால் வினை நீக்கத்திற்கு அந்த ஞானத்தைத் தரும் **குருவும் சிவதீக்கையும் இன்றியமையாதன** என்பதும் அத்தீக்கைதான் சீடரது பக்குவமும் பரிவும் ஆற்றலும் நோக்கிப் பல வகையாலும் அருளற் பாலதாகும் என்பதும் நோக்கற்பாலது. (சித்தியார் - திருவிளங்கம், சிவஞானமுனிவர் உரை பார்க்கவும்) - இவற்றிற்கு ஆகாமியங்கள் தழுவிய பத்ததிகளே சான்றாம். **குரு தீக்கையின்றி** ஞானநூல்களை ஓதியோ வேறெந்த வழிகளினாலுமோ **ஆணவம் நீங்காததால்** தீக்கையின் விசேடம் சாலவும் பெரிதாம்.

2.2. **தீக்கை விபரம்** தீக்கையென்பது நயனம், பரிசம், வாசகம், மானதம், சாத்திரம், யோகம், ஔத்திரி (ஓமத்தோடு கூடியது) முதலியனவாய் விரியும். அதில் சிவபூசைக்கு அதிகாரமளிக்கும் அவுத்திரி ஞானாவதி, கிரியாவதியென இரண்டாம். ஞானாவதி அகத்தேயும், கிரியாவதி புறத்தேயும் ஆகுதி முதலியன இயற்றுவது. இவையிரண்டுக்கும் மந்திரங்கள் சபீசத்துடனும், நிர்ப்பீஜத்துடனும் உண்டு. சபிசம் பீசாக்கரங்களான ஓம் ஹம் ஹாம் முதலியவற்றுடனும், நிர்ப்பீசம் அவையின்றியும் இயற்றுவது. சபீஜமாவது சைவாசாரத்திலுள்ள சந்தியாவந்தனம், சரியை என்பனவற்றில் வழுவாது ஒழுகும் ஆற்றல் உடையோர்க்கு சைவாசார கன்மத்தை நிறுத்தி மற்றவற்றைச் சுத்திசெய்வது. இது உலோகதர்மினி (பௌதீகம் போககாமிகளுக்கு), சிவதருமினி (நைட்டிகம் - நிட்டையினர் முத்திகாமிகளுக்கு) என இரண்டாம். இவை முறையே சிகாச்சேதத்துடனும் (மொட்டையடித்தல்) அஃதின்றியும் செய்யப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஒவ்வொன்றிற்கும் சமயம், விசேடம், நிர்வாணம், அபிடேகம் என்ற நால்வகைத் தீக்கைகள் உண்டு. சபீசமுறையிற் சமய (பிரவேச அல்லது முதல்) தீக்கைகள் பெற்ற சமயிக்கு அமைந்த அதிகாரம் நித்திய கன்மங்களாகும். ஸ்நானம், தர்ப்பணம், செபம், தியானம் ஆதியவற்றோடு குருசேவை, சிவனடியார்சேவை, சரியைச் சிவதொண்டு செய்தலுமாம்.

இதன்மேல் **விசேடதீக்கை** பெற்ற சாமானிய புத்திரனுக்கு. மேற் குறித்தவற்றுடன் சிவபூசை, அக்கினிகாரியம், அதிதி (சிவனடியார்) பூசை, முதலிய கிரியைத் தொண்டுகளும், சாதகர், ஆசிரியர் ஏவியனசெய்து பரார்த்த கன்மத்து (பிறர்பொருட்டு ஆலயத்தில்) உதவி புரிதலுமாம். **(ஆன்மார்த்தமாக தன்னைச் சிவோகம்பாவனைப் படுத்திச் செய்யும் ஆன்மார்த்த - சிவபூசை யின்றிப் பரார்த்தபூசை செய்தல் தகாது.**) இதன்மேல் **நிர்வாணதீக்கை** பெற்ற விசேட புத்திரனுக்கு மேலவற்றுடன் தனது பிராயச்சித்தத்திலும், தன்பொருட்டுச் செய்யப்படும் நைமித்திகத்திலும் அதிகாரம் உண்டு. இதன்மேல் **நிர்வாணதீக்கை பெற்றுச் சாதக ராயினோர்க்கு** ஆன்மார்த்தமாக சிவாகமவிதிப்படி பண்ணும் நித்திய நைமித்திய கன்மங்களிலும், ஆசிரமவாழ்வில் நிட்டை கூடுதல், முதலாய காமிய கன்மங்களிலும், பரார்த்தத்திலும், பிரதிட்டாங்கமாகிய ஓமாதிகளிலும், அங்குரார்ப்பணம் முதலியவற்றிலும் அதிகாரமுண்டு. இதன்மேலும் **ஆசாரியாபிடேகம்** பெற்ற ஆசாரியார்க்கு ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய இரண்டிலும் நித்திய, நைமித்திய, காமிய கன்மங்களிலும் பிரதிட்டை தீக்கை முதலிய சகல கிரியைகளிலும் ஞானோபதேசம் முதலிய செய்தலிலும் அதிகாரமுண்டு.

மேலுள்ளவற்றின் விபரம் மெய்கண்டசாத்திரங்களான சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் என்பவற்றின் 8ஆம் சூத்திரங்கள், அவை தொடர்பான திருவிளங்கம், சிவஞானமுனிவர், கா.சுப்பிரமணியபிள்ளை உரை விளக்கங்கள், சிவஞானமாபாடிய சிறப்புப்பாயிரத்திற் கூறிய தீக்கை விபரங்கள், சைவாகமங்கள், பத்ததிகள் முதலியவற்றில் உண்டு. தேடிப் பயன்பெறுக. சிவப்பிராமணரின், ஆதிசைவரின், சித்தாந்திகளின் வழிகாட்டலைக் குருநிலையிற் பெறுக. இந்நூல் கிரியையினூடாக ஞானோதய விளக்கத்தினை வற்புறுத்துவதாகலின் கிரியையினை மட்டுமன்றி ஞானவழித்தாய ஞானத்திற் சரியையெனும் ஞான நூல் கேட்பதற்கும் தீக்கைத் தகுதி தேவையென்பதை வலியுறுத்தும் சிவப்பிர காசப் பா : 8 (தீட்சாக்கிரமம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூவகைஆ ருயிர்வர்க்கம் மலத்தார் கன்ம
மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமாம் எனவுருவாய் வந்து நாதன்
திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்
பாவனையால் மிகுநூலால் யோகப் பண்பால்
பரவி வரும் அவுத்திரியாற் பாச நாசம்
மேவஅரு ளுதவும்அவுத் திரியிரண்டு திறனாம்
வியன் கிரியை ஞானமென விளம்பு மாறே'

இதில், அநாதியே பந்தப்பட்ட ஆணவம், கன்மம், மாயை யெனும் மும்மலமுடைய சகலருக்கு பாசமோசனமாகிய பக்குவம் வந்தவிடத்து பரமேசுவரன் ஆசாரியமூர்த்தமாய் எழுந்துவந்து ஏழுவகையாற் தீட்சை வழங்குவார். 1) **திருநோக்கால்** - பார்வையெனும் சட்சுதீக்கை (மீன் பார்வையால் முட்டை பொரித்தல்), 2) **பரிசத்தால்** ஸ்பரிச தீக்கையினால் பறவை முட்டையைத் தழுவுதல் உதாரணம் : (கொன்றை மாலையைச் சண்டேசுவரருக்கு அணிவித்தமை, கண்ணப்பர் வரலாறு, அர்ச்சுணனைக் கட்டித்தழுவியமை, யோகர்சுவாமிகள் அமெரிக்க சிவாய சுப்பிர மணியரை முதுகில் அடித்தமை) 3) **திகழும்வாக்கால்** - உபதேச வாசகதீட்சை (அடித்த யோகர், 'அமெரிக்காவில் சிங்கம்போற் கர்ச்சி' என்றமை, பெரியபுராணத்தில் வரும் 'அர்ச்சனை பாட்டே' போன்ற அசரீரி வாக்குகள்), 4) **பாவனையால்** - தன்னைப்போற் பாவிக்கும் பாவனாதீக்கை (சிவபூசையில் சிவோகம்பாவனை யென்ற பெயரில் ஆற்றுவது - சிவபூசைப் பெருமையும் இதுவே), 5) **மிகுநூலால் -** ஆகம தீக்கையாலும், (சித்தாந்தக் கல்வி) 6) **யோகப்பண்பால்** - அறிவிலே கலப்பிக்கும் சையோக தீக்கை (கூடுதல், சேர்க்கை), 7) பரவிவரும் **அவுத்திரியால்** - விரிந்து விளங்கும் அவுத்திரி தீக்கை. இவ்வேழுவகைத் தீக்கைகளினாலும் மூவகைப் பாசமும் நிவர்த்தி செய்து திருவடியிலே கூட்டும். இதில், அவுத்திரி, கிரியாவதி யெனப் புறத்தே குண்டம் அமைத்தும், ஞானாவதியென அறிவிலே தேடிக்கொண்டும் செய்வதாய் இரண்டாம். இனி, இத் தீக்கையின் முறைமையும் பயனும்:-

'விரும்பியமந் திராதிகாரம் அர்ச்சனா திகாரம்
மேவுமியோ காதிகாரம் எனச்சமய விசேடம்
வரும்பொருவில் நிருவாண மந்திரங்கள் பதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
இரங்கடைவில் தொகைபதினொன் றெண்பத்தொன்
றைம்பத்தொன்
றிருநூற்றோ டிருபத்து நாலாறா றைந்திற்
பரந்தநெறி அறுவகையும் ஒருவிநினை வரிதாம்
பரபதத்துள் உயிர்விரவப் பயிற்று மன்றே.'
- (சிவப்பிரகாசப் பா 9)

பரமேசுவரனது உபசாரத் திருமேனியாக விரும்பிக் கொள்ளப்பட்ட மந்திரத்திற்கு அதிகாரமாகியும், பரமேசுவரன் கிருபையாக விரும்பப்பட்ட அர்ச்சனைக்கு அதிகாரமாகியும், முத்திக்கு ஏதுவான யோகத்திற்கு அதிகாரமாகவும் கூறியவை, சமயம் விசேடம் இரண்டு தீக்கையுள் அடங்கும். **நிர்வாண தீக்கையாவது,** ஆறத்துவாவையுஞ் சுத்தி செய்து வாக்கு மனாதீத கோசரமாகிய (மனங்கடந்த நிலையிற் தோன்றுவதாகிய) சிவானந்த போகத்தில் உயிர் விரவும் (கலக்கும்)படி கூட்டுவிப்பதாம். 11 மந்திரமும், 81 பதமும் (சொற்களும்), 51 அக்கர(எழுத்து) மாகிய மூன்றத்துவாவும் ஒலி வடிவாயிருக்கும், 224 புவனமும், 36 தத்துவமும், 5 கலையுமாகிய மூன்றத்துவாவும் திரவிய (பொருள்) வடிவாயிருக்கும். (தீக்கையினுடைய நைட்டிக முதலிய பேதங்களை மதங்கத்திலிருந்து அறிக.) இவ் விருவகைத் தீக்கையின் பயன் மாறுபாடுள்ளமை பற்றி,

'கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் உண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்குச்
சாலோக சாமீப சாரூ பங்கள்
மருவியிடும், உயர்ஞான மிரண்டாம் மாறா
மலமகல அகலாத மன்னு போதத்
திருவருளொன் றொன்றதனைத் தெளிய வோதும்
சிவாகமமென் றுலகறியச் செப்பும் நூலே'
- சிவப்பிரகாசப் பா 10

கிரியா விதிப்படி தீக்கை செய்து உபாயச்சரியை கிரியை, யோக மனுட்டித்து முடிந்தால், அதன் பிரயோசனம் பின்பு ஞான-உண்மை விதிப்படி யனுட்டிக்கும்படி கூட்டுவிக்கும். கூட்டுவித்தவாறே உண்மைச் சரியை கிரியை யோகம் அனுட்டித்தவர்க்கு அச் சிவபுண்ணிய முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் (பக்குவம்) வருமளவும் முறையே சாலோக, சாமீப. சாரூப பதவிகள் பொருந்தும். பின்பு ஞானத்தை யடைவர். மேலாகிய அந்த ஞானம் இரண்டாம். அநாதியே உயிர்க்குணம் போற் பந்தித்திருக்கிற பாசம் நீங்கும்படி அறிவுக் கறிவாய் உயிரை விட்டு நீங்காதிருக்கும் திருவருள் ஒன்று. அத் திருவருளைத் தெளியும்படி போதிக்கும் சிவாகமம் ஒன்று. அவ்வாறு சரியை, கிரியாயோகம் முற்றுபவர்க்கே (சிவப்பிரகாசமெனும் நூல் முகமாகத்) திருவருள் ஞானவிளக்க முண்டாம். இனி, கிரியையிற் பிரதானமான **அக்கினி காரியம்** அல்லது ஆகுதி வேட்டல் பொருட்செல்வத்திற் கன்றி அருட்செல்வ மெனும் வீடு பேற்றிற்கேயாம் என்பது :-

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
வருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
அருஞ்செல்வத் தாகுதி வேட்க நின்றாரே - திருமந்திரம்

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகி சிவத்தைச் சார்ந்து சிவவண்ண மென நிற்கும். (இன்றேல் மலத்தோடு அத்துவிதப்பட்டு மயங்கும்.) அங்ஙனம் சிவபரம்பொருளாகிய பிரமத்திற்கு மூர்த்தமாகும் போது தானும் பிரமவண்ணமாய் இருப்பது அதன் தனிச்சிறப்பாம். ஆன்மா தனக்கென வண்ணமின்றி பிரமச்சார்பிற் பிரம வண்ணமாயிருப்பது பற்றி உபநிடதங்கள் ஆன்மாவைப் பிரமமென்று மிகுத்துரைத்தல் உபசாரம். முத்தி நிலையிலும் ஆன்மா சிவனின் அட்ட குணங்களைப் பெற்று, இன்பம் கொடுப்பான் சிவனும், கொள்வான் ஆன்மாவும் என, கலப்பினால் இரண்டற்ற இன்பக் கடலுள் மூள்கி சிவத்துள் அடங்கும். இரண்டு மொன்றாய நிலையிலும் பொருட்தன்மையால் சிவமும் ஆன்மாவும் (பரான்மாவும், சிற்றான்மாவும்) இரண்டேயாம்.

**இதனை அறியாது ஆன்மாவைப் பிரமமேயெனல் மகா குற்றம்.** ஆகவே முதல்வன் பரப்பிரமம், பரமான்மா வெனவும் படுவான். பரமான்மாவே அவிச்சை (அறியாமை) காரணமாய் சிற்றான்மாவானது எனும் மந்த அறிவினையுடைய வடஇந்தியச் சார்பானோர் அல்லது சங்கர வாதிகள் ஆங்கில உரைகள் மூலம் மயக்குதலை வரவேற்போமாயின், யார் யாருக்குப் பூசை செய்வது என்ற அடிப்படைப் பிரச்சினை எழும். அது ஆகமமுரண் மட்டுமன்றி நடைமுறைக்கோ, தர்க்கரீதியான ஒப்புதலுக்கோ தகாது. ஆதலால சைவர் இந்துவாயன்றிச் சைவர்களாயே இருந்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து, பதி, பசு. பாசமெனும் முப்பொருள் உண்மையின் அடிப்படை தளம்பாது, உறுதியாய் நின்று சிவபூசை யாற்றவேண்டும். ஆதலினாற்றான் அடிக்கடி சித்தாந்த உண்மைகள் இதிற் சுட்டப்படுகின்றன. **சித்தாந்தத் தெளிவே சந்தேகத் தெளிவாம்; வேதாந்தத் தெளிவுமாம். சைவ, வைதிக நெறிகள் தனித்தனிச் சிறப்புடையன. 'சைவநெறி வைதிகத்தின் தருமநெறி யொடுந்தழைப்ப,** மைவளருந் திருமிடற்றார் மன்னியகோ யில்களெங்கும் மெய்வழிபாட் டர்ச்சனைகள் விதிவழிமேன் மேல்விளங்க..', 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க...' - பெரியபுராணம்.

**அத்துவசுத்திப் பெருமை :** அத்துவாவிரிவு பாகம் 3, 7.9ல் அட்டவணையாற் தரப்பட்டுள்ளது. அத்துவாக்கள் என்பன உயிர்கள் வினையாற்றிக் கடைத்தேறும் ஆறுவழிகள். அவற்றில் கலைகள் ஆறு, தத்துவங்கள் முப்பத்தாறு, புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கு என்ற மூன்றும் பொருளுலகையும், மந்திரம் பதினொன்று, பதம் எண்பத்தொன்று, வன்னம் ஐம்பத்தொன்று என்ற மூன்றும் சொல்லுலகையுங் குறிக்கும். இவ்விரு பிரபஞ்சங்களாலும் நாம் வினையாற்றுகின்றோம். (மேலும் இந்த ஆறுகலைகளும் அண்டம், பிண்டம், தியானம், கோவிலமைப்பு என்பவற்றிலும் வியாபித்துள்ளதை 7.9ல் அட்டவணைகளாற் தெளிக.) விரிந்து பரந்துள்ள இவற்றை முதல்வன் குருவாகி வந்து சுத்திசெய்து மலமகற்றிய பின்னரேயே உயிர் சுத்தியாகி முத்திபெறும். **ஆசாரியன் அத்துவசுத்தி செய்யும் முறைமை**

'அழிவிலாக் கிரியையினான் ஆதல்சத்தி மத்தான்
ஆதல்அத்து வாசுத்தி பண்ணிமல மகற்றி
ஒழிவிலாச் சிவம்பிரகா சித்தற்கு ஞானம்
உதிப்பித்துற் பவந்துடைப்பன் அரன்ஒரு மூவர்க்கும்
வழுவிலா வழிஆறாம் மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
கழிவிலா துரைத்தமுறை யொன்றினொன்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணாம்'

\- சித்தியார் - 258

அரன், குருமூர்த்தியை அதிட்டித்துநின்று மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையிலும் அடங்க ஒடுங்கித், கலையைத் திரோதான சத்தியிலும், திரோதான சத்தியைச் சிவத்திலும் அடங்குமாறு உணர்ந்து அடக்கி, நிர்ப்பீசம் (ஞானாவதி), சபீசம் (கிரியாவதி) எனுமிரண்டினுள் ஒரு தீக்கையால் உத்தமத்தி லுத்தமர், உத்தமர், மத்திமர் ஆகிய தரத்தில் உள்ளவர்களின் அறுவகை அத்துவாக்களையுஞ் சோதித்து, பிறவிக்கு ஏதுவான மலங்கெடுத்து சிவம் பிரகாசித்தற் கேதுவான ஞானமளிப்பர்.
**முதல்வன் குருவாகி வந்து அத்துவசுத்தி செய்து மலம் அகற்றுதல்,**

மூன்றுதிறத் தணுக்கள்செயுங் கன்மங் கட்கு
முன்னிலையா மூவிரண்டா மத்து வாவின்
ஆன்றமுறை யவையருந்தி யறுத்துமல முதிர்வித்
தரும்பருவ மடைதலுமே யாசா னாகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகளறுத்தங் கத்துவாத் துடக்கறவே சோதித்
தேன்றவுடற் கன்மமநு பவத்தினா லறுத்திங்
கினிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்.

- சித்தியார் - 262

1). அநாதி மறைப்பாகிய **ஆணவமல**மும், ஆன்மா தன் பிராரத்தத்தை அனுபவிக்கையில் அது சிவச்செயலென எண்ணாது யான் செய்தேன் பிறர் செய்தார் எனும் எண்ணத்தாலாம் (வாதனைபற்றி யெழும்) **ஆகாமிய** வினையும், ஒளிமுன் இருள்போல குருவாய் வந்த இறைவனது ஞான (திருவருட்) சக்தியால் ஒழியும்.

2). பிறவிதோறும் ஈட்டிய பெரிய அளவிலான **சஞ்சிதவினை** ஆணவத்தைப் போக்க உதவிய பின் எஞ்சியபாகமும் அதுபற்றிநின்ற **மாயேயமும்** (காலம் நியதி கலை வித்தை அராகம் பிரகிருதி புருடன் எனும் 7 வித்யாதத்தவங்கள்) குருவின் கிரியாசக்தியால் ஒழியும்.

3) உடலுடன் பொருந்திய **பிராரத்தகன்மம்** அனுபவத்தால் (உடலூழாற்) கழியும். **தேசிகன் அருள்** : 'சாத்திரத்தை யோதினர்க்கு **சற்குருவின் தன்வசன மாத்திரத்தே வாய்க்கும் நலம் வந்துறுமோ** வார்த்த கடற் தண்ணீர் குடித்தவற்கு தாகந் தணிந்திடுமோ தெண் ணீர்மையாய் இதனைச் செப்பு' - திருக்களிற்றுப்படியார். எனவே கிரியாசக்தி விருத்தியாகிய **குருவின் சிவதீக்கையால்** எஞ்சிநின்ற கன்மங்களைச் சுத்திசெய்தற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு, அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய (ஆதாரமாகிய) **அத்துவசுத்தி** இங்கே கூறப்பட்டது.

2.3. **கிரியை அறிமுகம்** 'கிரியையென மருவுவன யாவும் ஞானத்தின் நிமித்தம்' என்ற சித்தியார் வாக்குப்பிரகாரம் கிரியையினையாற்றவே அதன் பலாபலனாக முதிர்வில் கிரியா ஞானமும் எளிதிற் கைகூடும். ஆதலின் மெய்ஞ்ஞானமாகிய பதிபசுபாச மெனும் முப்பொருள் பற்றிய உண்மை, அவற்றின் இலக்கணம், அதனால் ஆன்மாபெறும் பயன், பயனறிந்து அதனைச் சாதிக்கும் வழிமுறைகள் என்பனபற்றி விலாவாரியாக 14 மெய்கண்டசாத்திரங்களும் அற்புதமாகவும், நேர்த்தியாகவும் தர்க்கரீதியாகவும் விளக்குகின்றன. இது வெறும் புகழ்ச்சி யல்ல. திருவாசகத்தை மொழிபெயர்த்த யேர்மன் பேரறிஞர் போப், மற்றும் தியோஸ்பேனாட் ஆகியோர் தமிழரின் இத்தத்துவத்தை வெகுவாகப் புகழ்ந்து ஆன்மீகநெறியில் இதன்மேற் தத்துவமில்லை யென்றனர். சித் - அறிவு, அந்தம் - எல்லை. ஆதலால் சித்தாந்தம் என்ற சொல்லே அறிவின்- மெய்ஞ்ஞானத்தின் எல்லையாகின்றது. தத்துவமென்பதை மேலை நாட்டவர் பல்வேறு பாடநெறிகளுக்குப் பயன்படுத்தினும் சிறப்பாகச் சைவசித்தாந்தத்தை - சைவ(36) தத்துவத்தையே இங்கு குறிப்பிடுகின்றோம். ஆன்மா பெறும்பயன் என்பது பேரின்பப் பெருவாழ்வே. அதற்காய வழிகளிற் பிரதானமானது சித்தாந்த அறிவோடு கூடிய சிவபூசை.

இவற்றின் சாதனை இனிவரும் ஞானப்படிமுறைகளாகிய தசகாரியங்களால் விளக்கப்படும். இவை சிவகுருவையின்றி நிகழா. இதனால் தசகாரியங்களின் உள்ளீடாய் கிரியாயோகத்தைத் தரும் கிரியை சிறப்புற்று, உயிருக்கு உறுதிபயப்பதாகிய சிவனடிசார்தலைப் படிமுறைகளில் விளைவிக்கின்றது. கன்மபூமியாகிய இவ்வுலகுக்கே சிவபூசையெனும் சிவநல்வினை சாலும். அதனை உபாயமாகவன்றி உண்மைச் சிவபுண்ணியமாக, நெஞ்சகத்து முதல்வனை மந்திரம், கிரியை, பாவனைகளால் முன்னிலைப்படுத்தி விருப்புடன் ஆற்றவேண்டும்.

'கைப்போது மலர்தூவி காதலித்து வானோர்கள்,
முப்போதும் முடிசாய்த்து தொழநின்ற முதல்வனை,
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி,
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே'
.(4ம் தி.மு. பண் காந்தாரம்)

'மனத்துளான்' ஆனவனைப் புறத்தே தற்காலிக - ஷண லிங்கத்திலோ அன்றி நிரந்தர உலோக லிங்கத்திலோ பாவனையால் இறக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலைப்படுத்தி பூசைசெய்யும் வாய்ப்பு வானோர்க்கு இல்லை. ஆன்மார்த்தமான இப்பூசை செய்பவரே பரார்த்தமாகவும் பிறர்க்காக வேண்டிக் கோயில்களிலும் பூசையாற்றலாம் என்பதால் புவியிலோரே அவ் வாய்ப்பினைப் பெறுகின்றனர். அதனாலேயே அவன் வானோர்க்கும் அரியனாகவுள்ளான். அதனையுணர்ந்த வானோர் 'புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே, **'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு'** எனக் கவல்கின்றனர். துறையாகிய முத்திக்கு ஆறு எனும் வழி சிவபுண்ணியம். அது சிவபூசை. 'மன மெனும் தோணி பற்றி, செல்கையில் 'உனையுனும் உணர்வை' நல்குவது சிவபூசையாகும். இத்தகு சிறப்புக்களுள்ள சிவபூசையினை விருப்புடன், ஆனால் நிஸ்காமியமாக நான் செய்கிறேன், செய்தேன் என்ற தன்மைகெட்டு, சண்டேசுவரர்போல சிவபாவனையில் நின்று செய்யவேண்டும். அப்போது அத்தகு சிவகைங்கரியத்தின் பிரதிபலனாக குருவருளால் சஞ்சிதம் நீறாக, பிராரத்தமும் ஆகாமியமும் இனிதே கழிந்து கிரியை, யோகமுமாய்ப் பின் ஞானமுமாய் சாதகருக்கு வீட்டு நிலையை எய்துவிக்கும். (வீட்டுநிலை, படிமுறைகள் அத்.3, தசகாரியம்., 7.1, 7.4 )

### 2.3.1. **புத்திர மார்க்கமெனும் கிரியா மார்க்கம்**

1) 'புத்திர மார்க்கம் புகைஒளி மஞ்சனம்பூ
வைத்தமுது தாம்பூலம் மற்றுளவையும் - உத்தமமாய்
தேடிவைத்துப் பின்னைச் சிவபூசை செய்வதற்கு
நாடவத்தில் செல்லாமல் நாள்' - துகளறுபோதம்.
மஞ்சனம் - தீர்த்தம், நாள் வீணே கழிந்துபோகாது எந்நாளும் சிவ பூசையை விரும்பிச் செய். நாடவம் - நாள் + அவம்

2) 'சுத்திஐந்து செய்து துகள்தீரும் மந்திரத்தால்
அத்தம்அது பத்துமுகம் ஐந்தாக - வைத்துவைத்து
வித்தியா தேகம் விதிப்படியிற் றாபித்துப்
பத்தியால் மேனிதனைப் பார்' - துகளறுபோதம்.
துகள்தீர் - குற்றமற்ற, முகம் ஐந்து, அத்தம் (கை) பத்தாக வைத்து.

3) 'பார்த்ததிரு மேனிப் படிகந் தனிற் பரனைக்
கோத்ததிரு மந்திரத்தாற் கொண்டுவந்து - பார்த்தருளச்
சொல்லிப் பராக்கறுத்துச் சோதிச் சிவாகமத்தின்
சொல்லிற் படியே தொடங்கு' - துகளறுபோதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியபடி, நீ பார்த்த வித்தியாதேகமாகிய படிகத் திருமேனியில் பிரசாத மந்திரத்தோடு துவாதசாந்தத்தில் இருக்கும் இறைவனைக் கொணர்ந்து, திருக்கடைக்கண் நோக்குமாறு விண்ணப்பஞ் செய்து, பராக்கறுத்து (பிராக்கின்றி, மனதை உள்முகப்படுத்தி), சோதி சொரூபியாகிய இறைவனால் அருளப்பெற்ற சிவாகம முறையில் சிவபூசையைத் தொடங்கு.

4) ‘சோராமல் பூசித்துச் சொன்னபடி நில்இதழித்
தாரார் சமீபத்தில் தானிருந்து - வாராமல்
தானே பரன்அளிக்கும் சங்கரனார் இம்முத்தி
தானே தரினும் தரும்.’ - துகளறுபோதம்.

கொன்றை மாலையணிந்த சடாமுடியையுடைய இறைவனுக்குச் சமீபமாக இருந்து சிவாகம விதிப்படி சோர்வின்றிச் சிவபூசையைச் செய்து கிரியா மார்க்கத்தில் வழுவாது நில். பரம் பொருளானவர் நீ மீண்டும் பிறப்பிற் புகாது என்றும் தமக்கு அணித்தாக இருக்கும் **சாமீப்பிய முத்தியைத்** தந்தருளுவார். ஆன்மாக்களுக்கு என்றும் சுகத்தையே செய்யும் பிரானாதலின் **பரமுத்தியையே தந்தருளவுங் கூடும்.** சோராமல் - மந்திரலோபம், கிரியாலோப மின்றி ஊக்கத்தோடும், அன்போடும் பூசித்தல். அந்தர்யாகத்தின் போது ஆன்மா சுத்தியடைந்து, சிவத்தைத் தரிசிக்கும். பின் அந்நிலையினின்றும் சிவத்தோடு கூடுவதாகிய சிவயோகத்தைப் பெற்றும் அதனின்று சிவபோகத்தை யடைந்து பரமானந்தவாரியிற் திளைக்கும். இதனாலேயே சங்கரனார் அம்முத்தி தானே தரினுந்தரும் என்றார். (**குறிப்பு:** இந்நூலில் அடிக்கடி வலியுறுத்தப்படும் இவ்விடயம் பத்தாம் சிவப்பிரகாசப் பாடலாற் தரப்படும். மேற்படி நாலாம் பாடல் தருவதை, இப்பாடல் ‘ஞானமிரண்டாம் மாறா மலமகல அகலாத மன்னுபோதத் திருவரு ளொன்று’ என்கின்றது. ஞானமின்றி பரமுத்தி சித்தியாது, ஆயினும் அது ஞான நூலோதாமலே முறைப்படி கிரியை யாற்றிக் கிரியாயோகம் கைவரப்பெறின் திருவருளாலே அந்த ஞானமுமுண்டாய் அதனாற் பரமுத்தியுஞ் சித்திக்கும் என்றவாறாம். இதனால் சிவபூசையின் உயர் பலன் உணர்த்தப்பட்டதாம்.

கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும்- (முன் கண்டது) இனிச்
சித்தியார், திருவாதவூரடிகள் புராணம் கூறுவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து,
சுத்திசெய்தா சனம்மூர்த்தி மூர்த்தி மானாம்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த,
பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி,
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன் தன் அருகிருப்பர் நினையுங் காலே

- சித்தி, பா 272

கந்த வர்க்கமுங் கிளர்மணப் புகையும்
கவின்கொ டீபமும் புனிதமஞ் சனமுங்,
கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங்
கொண்டு மாயையின் குணங்களொன் றிலரா,
யைந்து சுத்திசெய் தகம்புற மிறைஞ்சி
யங்கி யின்கடன் கழித்தருள் வழிநின்,
றிந்த நற்பெருங் கிரியை யன்புடனே
யியற்ற வல்லவ ரெம்மரு கிருப்பர்.'

- திருவாதவூரடிகள் புராணம்

இந்தப் பாடலுக்காய மட்டுவில் ம.க. வேற்பிள்ளையவர்களின் விரிவுரை விளக்கங்கள் தரப்படுகின்றன. (சித்தியார் பாடல் இனி வரும்) **கந்தவர்க்கம் -** சந்தனம், பனிநீர்(பன்னீர்), குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம், புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி. (வாசனைத் திரவியங்கள்) **திருமஞ்சனம் -** புனித அபிடேகதீர்த்தம். (இல்லத்து ஆன்மார்த்த பூசைகளில் பால், அட்சதை - பச்சையரிசி, அறுகு, பூ, சந்தனம் என்பவற்றுடன் மந்திரசுத்தி செய்த சலம் பாவிக்கப்படும்.)

**ஆலயங்களிலும், ஆன்மார்த்த உடையவர் பூசையிலும் அபிடேகத்திற்காய திரவியமும் ஒழுங்கும் :-** சுத்தோதகம் (சுத்தநீர்), எண்ணெய்க் காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு , பஞ்சகௌவியம் (பால், தயிர், நெய், கோசலம், கோமயம் -முறையே கூடியதிலிருந்து குறைந்த அளவில்), இரச பஞ்சாமிர்தம் (பால், தயிர், நெய், தேன், சர்க்கரை), பழ பஞ்சாமிர்தம் (இரச பஞ்சாமிர்தத்துடன் முக்கனிகளான மா, பலா, வாழைப்பழங்கள்), பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, தமரத்தம் பழச்சாறு, குளஞ்சிப் பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, இளநீர் (செப்புப் பாத்திரத்தில் விடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேராக விடுக), சந்தனக் குழம்பு, உஸ்ணோதகம் - வெந்நீர் முதலியன. நெய் அபிடேகத்தின் பின் இள வெந்நீர் அபிடேகஞ் செய்க. இளநீர் அபிடேகத்தின் பின் 81பத மந்திரமுச்சரித்து சகச்சிரதாரை (ஆயிரந் துளையிட்ட பாத்திரங்) கொண்டு சுத்தோதகத்தால் (நந்நீர்) அபிடேகிக்க. சந்தணக் குழம்பின் நவ கலசத்தாலும், விசேட அர்க்கியத்தாலும் அபிடேகிக்க. (இவை பின்னரும் விபரிக்கப்படும்.) கொத்து (பூங்கொத்து).

அதிகாலையில் சந்தியாவந்தனம் செய்தபின், தூயமனத்துடன் சிவதீட்சை பெற்றவராயின் நமசிவாயவும், 2ஆம் தீட்சைபெற்று முத்தி விரும்பின் சிவாயநமவும் மனதால் உச்சரித்துக் கொண்டு தூய பாத்திரத்தில் அல்லது கூடையில் பூவினைப் பறிக்க வேண்டும். ஆசூசமான இடங்களிலோ, ஆசாரமில்லாதவர்களைக் கொண்டோ பறித்தலாகாது. பூவானது, எம் மனத்திருக்கும் ஆன்மீகச்செறிவைச் சிவனடியில் சேர்ப்பிக்குஞ் சாதனமென்பதால் அதன் முக்கியத்துவம் பெரிது. பூசையென்பது பூவினாற் செய்யப்படும் கருமம். ஆன்மார்த்த பூசைக்கு ஆலய நந்தவனப்பூ எடுத்தலாகாது. பூவினை, நேரத்திற்கும் மூர்த்திக்கும் தகவே விதிப்படி, சாத்துதல் வேண்டும். உதயத்தில் நந்தியாவர்த்தமும், வெள்ளெருக்கும், மத்தியானத்தில் அலரியும், தாமரையும், தும்பையும், சாயங்காலத்தில் மல்லிகையும், கருமத்தமும், சண்பகமும், அர்த்தராத்திரியில் கடம்பும், பொன்மத்தமும், சிறுசண்பகமும், பிச்சியும் உத்தமம். பூப் பறிக்கையில் காம்புடன் சேரவே பறித்தல் வேண்டும். தேன் நடுவுள்ள முழுமையான பூ சிவசக்தி இணைப்பு எனப்படும்.

**தவிர்க்கப் பட்டவை :** விநாயகருக்கு - துளசி, சிவனுக்கு - தாழம்பூ, உமைக்கு - அறுகும், நெல்லியும், வைரவருக்கு - நந்தியாவர்த்தமும், மல்லிகையும். சூரியனுக்கு - வில்வம், விஸ்ணுவுக்கு - அட்சதை. இலக்குமிக்குத் தும்பை, சரஸ்வதிக்குப் பவள புட்பமும், ஆகாதவையாம். சிவனுக்கும், தேவர்களுக்கும், பிதிர்களுக்கும், மனிதருக்கும் மத்தியானத் தெடுத்தபூ ஆகாது.

**வில்வம் எடுக்கத் தகாத நாட்களாவன :-** திங்கள், சதுர்த்தி, அட்டமி நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, மாசப் பிறப்பு என்பனவாம். வில்வமும், கொக்கிறகு மந்தாரையும் 6 மாதத்திற்கும், வெண்டுளசி ஒரு வருசத்திற்கும், தாமரை 7 நாளுக்கும், அலரி 3 நாளுக்கும் வைத்துச் சாத்தலாம். பொதுவாகக் காலை மலர்வன காலைக்கும் மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்வன மாலைக்கும் பூசைக்காகக் கொள்க. (**குறிப்பு** பாவம் அகல வேண்டின் தினம் வில்வத்தடியை அரஹர வெனக் கூறிப் பிரதட்சணம் செய்க. மரிக்கும் போது வில்வத்தடி மண்ணை உடம்பிற் பூசினோர் சிவபுரத் தடைவர். மூவிலை கொண்டதான வில்வம் சிவனது இச்சாஞானக் கிரியைகளைக் குறிக்கும்.). கிள்ளும்போது சத்தமுண்டாகும்படி கிளுவை, நெல்லி, (தெய்வீகமர) பழுத்த இலைகளைக் கொள்க. நீலோற்பலம் தவிர்ந்த நீலப் பூக்கள் தாமச குணத்தவாகலின் ஆகா. கிருஷ்ணர், சநீஸ்வரனுக்கு எடுக்கலாம்) பூவின் முக்கியத்துவம் தில்லை வரலாற்றாற் பின் தரப்படும்.

**உட்பூசைக்கு மலரென்றது-** கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறை. அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு எனும் அட்டபுஷ்பங்களையாம். இனிமேற் கூறப்போகும் அக, புறப் பூசைகளில் இங்கே உட்பூசையென்றது அக அல்லது அந்தர்யாகப்பூசையாம். இதற்கு புறப்பொருள்கள் தேவையில்லை. மனப்பதிவில்நின்று ஆற்றுவது. இதன் முக்கியத்தை உமை கயிலைநீங்கு படலத்தில் பதினொரு உருத்திரர்களின் இராக்காலப்பூசை(7.12) காண்க.

**மற்றுமுள்ள பூசோபகரணங்களாவன :- பாத்திய (பாதநீர்) திரவியங்கள்** (4) : வெண்கடுகு, இலாமிச்சை வேர், அறுகு, சந்தனம். **ஆசமன (பருகுநீர்) திரவியங்கள்** (6) : சாதிக்காய், கிராம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பகமொட்டு, பச்சைக்கற்பூரம். **அருக்கிய (உச்சிமேற் தெளிக்கும் நீர்) திரவியங்கள்** (8) : சலம், பால், தருப்பை நுனி, அக்ஷதை (பச்சரிசி), எள், யவம் (நெல்), சம்பாநெல், வெண் கடுகு.

**குறிப்பு -** விதிமுறை இங்கு பேசப்படினும் ஆன்மார்த்தபூசை செய்பவர்கள் வசதிக்கேற்ப கிடைத்தவற்றைக் கொண்டும் மீதமானவற்றை அன்புகலந்த புஸ்பத்தினாற் கற்பித்தும் கொள்ளலாம்) **நைவேத்தியங்கள் -** சுத்தான்னம், சித்திரான்ன (பயறு, சர்க்கரை, மிளகு, புளி, தயிர், கடுகு, உழுந்து) வகைகள், நெய், காச்சுப்பால், தயிர், முப்பழம், தேங்காய்க்கீறு, சற்கரை, கறியமுது, அபூப(மோதகம், பிட்டு, அப்பம், வடை, தேன்குழல், அதிரசம், தோசை, இட்டலி முதலிய பண்ணிகார) வர்க்கங்கள், **பானகம்** - சர்க்கரை, ஏலம் முதலியன கலந்த குடிநீர், **பானீயம்** - ஏலம், சந்தனம், பச்சைக் கற்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப் பூ என்பன இட்ட சலம். **வெற்றிலை பாக்கு, முக வாசங்கள் -** ஏலம், இலவங்கம், பச்சைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கற்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பவற்றைப் பொடியாக்கி பனிநீருடன் கலந்த குளிகைகளும் பிறவுமாம். (பின்னரும் தரப்படும்.)



**மாயையின் குணங்கள்** - மாயாகாரியமாகிய காமம், குரோதம், லோபம் (கொடாமை), மதம் (செருக்கு), மார்சரியம் (பொறாமை, அழுக்காறு), அவா, வெகுளி, இன்னாச்சொல் எனினுமாம். (இதுகாறும் கூறியவை மட்டுவில் ம.க.வேற்பிள்ளையின் உரைப் பிரகாரமாகும்) **ஐந்துசுத்தி** - பூத, தான, திரவிய, மந்திர, லிங்கசுத்திகள். (விபரம் 'சிவபூசை நூல்' 6.2.2 ல் தரப்படும்)

**அங்கியின்கடன் அல்லது எரியில்வருகாரியம்** என்பது - அக்கினிகாரியம். இதனை அதிகாரமுடைய ஆசாரியார்கள் பிரார்த்தனைசெய்து அனுமதிபெற்று பூஜாஸ்தானத்திற்கு அக்கினிதிக்கில் குண்டம் அல்லது வேதிகை உண்டாக்கி கிழக்காகவோ வடக்காகவோ செய்வர். பிராமணரல்லாத விசேடதீட்சையினரும் கைக்கொள்ளலாமாயினும் அவர் சிலரே. **மூர்த்தி** என்பது யாரை இடமாகக் கொண்டு சிவன் (**மூர்த்திமானாய்**) எழுந்தருளுகின்றாரோ அவரைக் குறிப்பது. உதாரணம் 'அட்டமூர்த்தம்' என்னும் போது இறைவன் பிருதுவி முதலாம் பஞ்சபூதங்களிலும், சூரிய சந்திரரிலும், சிறப்பாக தூய ஆன்மாவிலும் அவற்றை ஆதாரமாகக்கொண்டு பிரகாசிப்பார். 'மூர்த்திமான்' என்பது உடலுக்கு உயிர் போல அங்ஙனம் இடங்கொண்டருளும் பரமசிவனையே குறிப்பது. ஆன்மார்த்த பூசையின்போது சந்தனத்தில் அல்லது பஞ்சலோகத்தாலோ படிகத்தாலோ செய்து நியசித்த லிங்கம் மூர்த்தியாகவும் (தடத்தம்) அதனுள் நியசித்ததால் எழுந்தருளும் பரமசிவன் மூர்த்திமானாகவும் (சொரூபம்) இருப்பார். மூர்த்திக்கு அங்கங்கள், உபாங்கங்கள் என்பன மந்திரத்தால் பாவனையாக அமைக்கப்படும். பின்னதில் எழுந்தருளப்போகும் மூர்த்திமானுக்கும் அவ்வாறேயமைத்தல் வேண்டும். ஆலயங்களில் மூர்த்தி கற்சிலையாகவும் (மூலமூர்த்தியாகவும்) இன்றேல் பஞ்சலோகத்தாலாய உற்சவமூர்த்தியாகவும் மூர்த்திமான் அதற்கு மந்திரபாவனைகளால் அமைக்கும் சிறப்புப்பெயரால் அழைக்கப்படுபவராயும் இருப்பார். (7.2 பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 3. தசகாரியம்

**(ஆன்மீக பயணத்திற் பத்துநிலைகள், படிகள், அவதரங்கள்)**
சித்தாந்தசாத்திர நூல்களில் வரும் சாதனவியல், முன் வினையாகிய சரியை கிரியாயோகச் சிவபுண்ணியப் பலனால், ஆன்மாவிற்கு இருவினையொப்பு, மலபரிபாகம் நிகழ்ந்து, இதுவரை மறைப்பாற்றலாய் திரோதமென சக்திநின்ற நிலைநீங்கி, திருவருட்சக்தி பதிதலைக் கூறும். சத்திநிபாதத்தில், முதல்வன் ஞானகுரு வடிவெடுத்தமை பற்றிக் கூறப்படுகின்றது. இதனை, முதல்வன் பக்குவ ஆன்மாக்களுக்கு **உணர்த்தும் முறைமை என்றும், ஞான வாய்மையின் பயனென்றும்,** 'உண்மைநெறி விளக்கம்' கூறுவதாய **தசகாரியம்** என்றும் பலதாகக் கூறுவர். அப்பத்து (தச) ஆன்மஈடேற்ற நிலைகள் சிவப்பிரகாசத்தில் மூன்றாக ஆன்மாவில்வைத்துத் தரப்பட்ட விபரமும் நோக்கற்பாலது. **பத்தாக வருபவை :**1) தத்துவரூபம், 2) தத்துவதரிசனம், 3) தத்துவ சுத்தி, 4) ஆன்மரூபம் (இந்நாலும் ஆன்மாவின் நின்மல - மலமற்ற சிவசாக்கிரம்), 5) ஆன்மதரிசனம், 6) ஆன்மசுத்தி. 7) சிவரூபம், 8) சிவதரிசனம், 9) சிவயோகம், 10) சிவபோகம் என்பன. பின்னைய ஆறும் ஆன்மாவில் வைத்து சித்தியாரில் மூன்றாயும் அமையும். அவை, 'ஐம்புல வேடரின் அயர்ந் தனை'- ஆன்ம தரிசனம், 'தம்முதல் குருவுமாய்' - ஆன்ம சுத்தி, 'அன்னிய மின்மையின் அரன்கழல் செலும்' - ஆன்ம லாபம்.

**3.1. சிவப்பிரகாசம் தரும் தசகாரியங்கள்** : இந்நூல் உமாபதிசிவாசாரி யாராற் செய்யப்பட்டது. சீர்காழித் தத்துவநாதரின உண்மைநெறிவிளக்கம் தசகாரியங்களை வரைவுசெய்வது போலின்றி இந்நூல் மறைமுகமாகவே அவற்றை விரிவான பாடல்களால் உணர்த்துகின்றது. ஞானநெறி என்பது சரியையாதி சைவநாற்பாதங்களில் நான்காவது. இது ஆணவம் மட்டுமுள்ள விஞ்ஞானகலர்க்கு அறிவில் உள்நின்று உணர்த்தியும், மாயை நீங்கிய பிரளயாகலர்க்கு மைக்களம் மான் மழுவுடன் தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்கண்டார் அருணந்தி சிவம் மறைஞானசம்பந்தர் உமாபதி சிவம்

உணர்த்தியும், சகலர்க்கு மானிடகுருவாய் வெளிப்பட்டு முன்வந்து வாசகதீட்சை வழங்கியும் உணர்த்தும். ஞானத்திலும் சரியையாதியுண்டு. ஞானத்தில் சரியையென்பது ஞானநூல்களைத் தேடிப்பெற்று ஞான - சித்தாந்த ஞான ஆசிரியரையடைந்து ஆசாரத்துடன் குருமுகமாக இருந்து கேட்பது. பின் கேட்டதனைச் (சகமாணவருடன்) சிந்திப்பது. (அல்லது தானாகவே சிந்திப்பது) பின் சந்தேகங்களை ஞானகுருவிடம் வினவித் தெளிவு பெறுவது. இறுதியாக. செய்முறையாக தெளிவில் லயித்துநின்று நிட்டை கூடுவது. இவை. ஞானத்தில் கிரியை, யோகம், ஞானமாம். இதில் முதற்படியாக, அறிமுறையாக பதி, பசு, பாசம் (36 மாயாதத்துவங்கள், மூவகைக் கன்மங்கள், ஆணவம்) என்ற முப்பொருளுண்மை அறிதல். இதில் 36 தத்துவங்களை இவ்வாறு அறிதல் **தத்துவரூபமெனும் முதலாம் தசகாரியம்.** மாயையின் (அத்துவாவிரிவு, அதில் வரும் 36 தத்துவங்கள்) என்பது மிகவும் விரிவானபகுதி. இதுபற்றி ஞானநூல்கள் பாசமெனுந் தலைப்பில் இரண்டாம் சூத்திரமாக அதிக பாடல்களை ஒதுக்கியுள்ளன. அஷ்டப்பிரகடனம் என்ற 8 பிரகடனங்களில் முதலாவதாய தத்துவப்பிரகாசிகை விரிவாக முப்பத்தாறையுங் கூறுவதால் இப் பிரதான அடிப்படை அறிவை அந்நூல்களிற் காண்க. இந்நூலில் 10.1, 10.2 7.10.15 முதலிய இடங்களிலுங் காண்க. **தத்துவம்பற்றித் தத்துவப்பிரகாசிகை கூறுவதன் சுருக்கம் :** எல்லா உயிர்களுக்கும் போகத்தைக் கொடுத்துக்கொண்டு பிரளயம்வரை இருப்பது தத்துவம். விரிவாகக்கூறின் **தத்துவம் என்பது அது இதானது** எனப்பட்டு, படர்க்கையில் அதுவெனும் காணாத முதல்வன் காணும் இதுவாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சங்களாகிச் சுத்த (5) தத்துவத்தில் தானும் சக்தியுமாய் சம்பு பக்கமெனக் கலந்திருப்பன். அசுத்த தத்துவத்தில் (7ம் 24ம் 31) தான் சக்தியுடன் உடனின்று செலுத்தும்- அணு-உயிர்பக்க விஞ்ஞானகலர் (அநந்தர்), பிரளயாகலர் (ஸ்ரீகண்டர்), சகலரிற் பக்குவம் வாய்ந்த (விட்டுணு பிரமா) மூலமும் கீழுள்ள புவனங்களைப் பரிபாலிப்பர். இவ்வாறு அவரோ, அவரால் நியமிக்கப்பட்டவர்களோ மாயையிற் கலந்திருக்காவிடில் 36 தத்துவங்களும் சடமாயழியும். பிரபஞ்ச ஒடுக்கத்தில் நிகழ்வது தூலமாயையின் அழிவாகும். இனி **தத்துவதரிசனம்** முதலாவுள்ள 9 காரியங்களும் இறையருள் கூடினல்லது இயலாது. ஆன்மா கருவிகரணங்களோடு (தத்துவங்களோடு) கூடி அறிகையில் அவற்றில் ஒன்று குறைந்தாலும் (உதாரணம் குருடு) அறியாது. ஆன்மபோதமெனும் சிற்றறிவு பொருந்தினால் மட்டும் கண்முதலிய கருவிகளாலறியும். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாதலின் சடமாகிய தத்துவங்களோடு கூடித் தானும் சடம்போலழியும் தன்மைத்தான அறிவைப்பெற்று நிற்கும். சடமாகிய கண்ணுக்கு ஒன்றையறியும் தேவையில்லை. சர்வமும் அறியும் முதல்வனுக்கும் அத்தேவையில்லை ஆதலால் ஆன்மாவே இறை உள்நின்றுணர்த்த, பொறி புலன்களாகிய தத்துவங்களின் துணையால் அறியும். இங்ஙனம் 36 தத்துவங்களும் சடம் எனவும், அவை ஆன்ம அறிவு விளக்கம்பெற இறைவனாற் தரப்பட்ட கருவிகளெனவுங் காணல் **தத்துவதரிசனம்.** (பா 63, 64).

6ஆம் சூத்திரம் ஞானவாய்மை யெனும் பகுதியிற்கூறும் **ஞானம் வருமுறையாவது** : அறிகருவிகளாகிய கரணங்கள் இல்லையாயின், ஆன்மா ஒன்றையும் அறியவியலாது. இக்கரணங்களாலே உண்மைஞானம் உதிக்கவும் மாட்டாது. இக் காரணங்களைக் கொண்டு பிறவிதோறும் ஈட்டிய சரியை கிரியாயோக விசேடத்தினாலே, பரமசிவன் திருவருளே திருமேனியாகக் கொண்டு குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து, **மலபாகம் வரும்பொருட்டுக் கன்மந் துய்த்து ஒழித்தற்காய் அதனாலே கூட்டப்பட்டுப் பொருந்தியிருந்த தத்துவங்களை இக் கரணங்களுட்பட அத்துவா சோதனையோடு சுத்திசெய்து மீள அதில் ஏகதேச அறிவு விளங்காமல் அதைவிட்டு நீக்கி,** திருவடிநீழலை யடையும்படி அந்த உண்மை ஞானத்தைக் கொடுத்தருளுவார். **அந்த ஞானத்தின் இயல்பு,** படிகமானது ('பிறிசிம்') தன் சுயவன்னத்தை இழந்து தான் வைக்கப்பட்டுள்ள இடத்தின் நிறத்தையே தன்னிறமாகக் கொள்ளும்படி செய்வதும், அவற்றைவிட்டுத் தன் சொந்தநிறத்தையே கொள்ளும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதும், இவ்விரண்டுமின்றி இருளிற் தன் செயலற்றிருக்கச் செய்வதும் பின் முன்போலாக்குவதும் சூரியனது ஒளியேயாம். ஆயினும் சூரியவொளி தான் அவற்றின் தன்மைகளைப் பொருந்தாது, பந்தமுறாது. அதேபோல, பிரபஞ்சத்தில் தன்னிடத்துப் பொருந்தித் தத்தம் எல்லையளவும் காரியப்படுவதாகிச் சங்கற்பித்துச் செயற்படுத்தி நின்றும், அச்சித்தும் சடமுமானவற்றைத் தான் பந்தித்தும் பொருந்தாதும் நிற்கும். இவ்வாறு தோய்வற நின்று செயற்படுத்துங் காரணம் யாதெனில் சர்வ ஆன்மாக்களும் நல்ல பேரானந்தசுகத்தைப் பெறும் பொருட்டேயாம். அணு புதைக்கவும் இடமின்றி எங்கும் நிறைந்த ஞானசொரூபமான பரமசிவன், தன்னைச் சுருக்கி ஏகதேசப்படாது. இதுவே சிவசத்தியினது இலக்கணம். எங்கும் பரந்துள்ள திருவடிஞானமே மேலான ஞானமாம். ஆதலின் சார்ந்ததன் வண்ணமாகும் உயிர்கள் சிவனைச்சாரின் அவன் திருவடிஞானத்தைப் பெறும். இத்திருவடிஞானம் ஆன்மாவினுள் மருள் (மயக்க) நிலையில் மறைந்திருந்து, மாயாகன்மங்களின் இயல்பை அறிந்து நீங்கிய அருள்நிலையில் வெளிப்படும். இனி. **ஞானத்தால் வரும் பயன்களாக** ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி 'ஆன்மலாபம் என்பன கூறப்படுகின்றன. **சிவப்பிரகாசம் :- மூன்று நிலைகள்**

**1. ஆன்மதரிசனம் - ஆன்மதரிசனமும் தத்துவசுத்தியும்** ஞானதரிசனத்தில் நிகழும்.

தன்னறி வதனா லேதுந் தனக்கறி வில்லை யேனுந்
தன்னறி வாக வெல்லாந் தனித்தனி பயன ருந்தும்
தன்னறி வறியுந் தன்மை **தன்னாலே** தனைய றிந்தால்
தன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே. - பா 72

(தன்னாலே என்றது சிவஞானந் தன்னாலே எனக்கொள்க. அது என்றது அருள் அல்லது ஞானம்). ஆன்மாவானது கருவி கரணங்களைக் கொண்டறிந்தாலும் தானேயவற்றை அறிந்து அனுபவிப்பதாக நினைக்கும். ஆனால் அது அறிவிக்கவே அறிவது. பக்குவநிலையில் சிவகுரு உணர்த்துகையில் தனக்கு அறிவு எவ்வாறு நிகழ்ந்ததென்பதையும் தன்னியல்பையும் அக்குருவருளோடு கூடி வேறற நின்றறியும்.)

**2. ஆன்மசுத்தி - சிவதரிசனத்தில் ஆன்மசுத்தி நிகழும்.**

'தத்துவ மான வற்றின் றன்மைக ளுணருங் காலை
உய்த்தறிந் திடவு திப்ப தொளிவளர் ஞான மாகும்
அத்தன்மை யறியு மாறு மகன்றிட வதுவா யான்மாச்
சுத்தமாஞ் சுத்த ஞானத் தொருமுத றோன்று மன்றே' - பா73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்களின் இயல்பை விசாரித்து (உய்த்து) அறியும் போது அவை தனக்கு அந்நியமான சடப்பொருள் என்று அறிவது சிவஞான- குரு உபகாரத்தினாலாம். அப்படியறிகின்ற (யான் அறிகின்றேனெனும்) தற்போதமும் விட்டுநீங்க ஆன்மா அந்த ஞானமேயாய் (ஞான சக்தியோடு அத்துவிதமாய்) சுத்தியடையும். அப்பொழுதே ஞானத்திற்கு முதலாய ஞேயம் **தோன்றும். (ஆன்மா** - ஞாதுரு, அறிபவன், **சிவசக்தி** - ஞானம், அறிவிப்பது, **சிவம்** - ஞேயம், அறியப்படுவது) **(குறிப்பு** : கண்களிரண்டும் அவன் கழல் கண்டு கழிப்பன ஆகாதே'. இதில் மணிவாசகர் குருவருளாற் தன்னையறிந்து குருவருளோடு அத்துவிதப்பட்ட நிலையில் தனக்கென இனியொரு செயலுமில்லை என்கின்றார்.)

**3. ஆன்மலாபம்** - மேற்கண்டவாறு தோன்றிய குற்றமில்லாத சிவசொரூபமாகிய ஞேயத்திலே **அழுந்துதல்.** காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்ற வேறுபாடெனும் திரிபுடிசகித நிலையைக் கடந்து 'ய' எனும் ஆன்மா, 'வ' எனும் ஞானத்திலும், ஞானம் (சி) எனும் சிவத்திலும் பொருந்தி ஏகமென (சிவயவசி, சிவ ஈற்றில், சி யெனவும்) நிற்கும் அத்துவிதநிலை. இது பேரின்பத்தினை விளைவிப்பது . (**குறிப்பு:-** 'ஏகமென' என்பதனால் அவையிரண்டும் சங்கரவேதாந்திகள் கூறும் ஒருபொருள் என்பதல்ல. பதி பசு பாசம் எந்நிலையிலும் வெவ்வேறு. முப்பொருளுண்மை யிதுவாகும். முத்தியில் பாசம் விட்டகல ஆன்மா பதியின் வியாபகத்துள் அடங்கி இன்புற்றிருக்கும். இன்புறுதலே பசுத்துவம் நீங்கிய ஆன்மாவின் செயல். அட்டகுணங்களைப் பெறினும் அது பஞ்சகிருத்தியத்திற்கு அதிகாரியல்ல.

'முந்திய வொருமையாலே மொழிந்தவை கேட்டல்
சிந்தனை செய்தலுண்மை தெளிந்திட லதுதானாக
வந்தவா றெய்தநிட்டை மருவுத லென்றுநான்காம்
இந்தவா றடைந்தோர்முத்தி யெய்திய வியல்பினோரே'

- பா 83

குருவிடம், ஞானாசிரியரிடம் ஆகமப்பொருளைக் **கேட்டல்,** கேட்டதனைச் சிந்தனைத் துணையோடு அல்லது சகமாணவருடன் சேர்ந்து **சிந்தித்தல்,** பின்னவற்றை மீளக் குருவின் வாயிலாக இன்றேல் உண்மை ஞானத்தாற் தரிசித்தறிதல் தெளிதல். **ஞான நிட்டைகூடல்:-** பெத்த (பாசத்தோடு கூடிய) காலமெல்லாஞ் சிவசத்தியுடன் நின்று அறியினும் (பின்) அதனை வேறு காணப்படுமாறின்றி ஆன்மாவாகவே ஒன்றுபட்டு நின்ற அத்துவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையையறிந்து, முத்திக்காலத்து உயிர் கூடநின்று அறியினும் தன்னை வேறு காணப்படுமாறின்றி **அச்சிவமேயாய் அத்துவிதமாக நிற்றலே** நிட்டையைப் பொருந்துவதாம்.

ஆக, ஞானம் நான்கு வகை. இம்முறையைப் பின்பற்றுவோரே முத்தி பெறுவர். ஆன்மலாபம், சிவப்பேறு, நிட்டை, சிவானுபூதி என்பன ஒருபொருட் சொற்கள். விபரங்களை சிவப்பிரகாசத்திற் காண்க.

**குறிப்பு : நமசிவாய** என்பதில் வ உச்சரிப்தற்காக வா என நின்றது. ந - திரோதம் எனும் சத்தியின் மறைப்பாற்றல் (மருள்), இது உயிர் வினையில் அனுபவம் பெறும்வரை அதன் நல்லறிவை மறைக்கும். ம - மும்மலங்கள் (இருள்), சி - சிவம், பதி, வ - திருவருட்சத்தி. இது முன்னைய நல்வினையால் இருவினையொப்பு அடைந்த உயிரின் மலம் பரிபாகம் எய்துகையில் அதன் பக்குவங்கண்டு மறைப்பாற்றலை நீக்கித் திருவருளென நிற்பது. ய - ஆன்மா. நமசிவாய தூலபஞ்சாட்சரம். ந வை முன்னிறுத்திய இதனை உச்சரித்தலால் நமசிவாய குறிக்கும் இறை தோற்றமான முறையே பாதம், வயிறு, தோள், வாய், உச்சி யென்பவற்றை மனத்திருத்தி அவரைத் தியானிப்பதனால் உலகில் வாழ்வாங்கு வாழலாம். சமணர்கள் சுண்ணாம்பு நீற்றறையில் அப்பரைப் பூட்டிவைத்த போது அவர் நமச்சிவாயப் பதிகம் பாடியே அதனை மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலு மாக்கினார். அப் பதிக 2ம் பாடல், நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும், நமச்சி வாயவே நானறி விச்சையும், நமச்சி வாயவே நாநவின் றேத்துமே, நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே'. இதில். நானறி விச்சை யென தானறிந்த வித்தை நமசிவாய ஓதுதலே யென்கிறார். இவ் வித்தையேயன்றி (பின் சமணர் அரசனுக்குக் கூறப்போகும்) சமணமந்திர வித்தையால் தான் காக்கப்படவில்லையாம். ஆணவக்குறியான முயலகனை மிதிக்கும் ந இறைவன் திருவடியாதலின் இணையடி நீழலே என்கின்றார். அதனை நா நவின்று ஏத்தியதால் இவ்வுலகத் தீங்கும் நன்மையாயிற்று, நன்நெறியாகிய மேலைவீட்டு நெறிக்கும் அது **வழிகாட்டும்** என நம்பொருட்டுக் கூறுகின்றார். வீட்டைத் **தருவது** சிவாயநம. உலகவாழ்வில ஈடுபடுகையில் சிவதோற்றமான நமசிவாயவை நாளும் உச்சரிக்கையில் அது தானாகவே நாளடையில் முதிர்ச்சி தோன்ற சிவாயநம வெனப் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நமச்சிவாய வாழ்க' என முதலிற் கூறிய மணிவாசகரும் இறுதியாக வரும் பாடல்களில் தான் வீடுபேறடையும் நிலையைச் சுட்டி 'சிவாய நம வெனப் பெற்றேன்' என்பதுங் காண்க. ஏனைய நாயன்மார்களும் நமசிவாயப் பதிகம் பாடியுள்ளனர். உலகில் துன்பகன்று வாழ்ந்து, பின் இப்பிறப்பிலோ மறுபிறப்பிலோ சிவாயநம வென சிவனை முன்னாக வைத்தோதல் வீட்டுநிலை யடைதற்காம். ஆதலின் இது முத்தி பஞ்சாக்கரம் எனப்படும். முத்தி விரும்பும் **சிவயநம** வைக் குருவருளாற் கொண்ட தீட்சையின்போது ஓதுவிக்கப்பெற்று, சாதனையால் நம (திரோதமும் மலமும்) விட்டு **சிவய** வெனவும், ***சி*** யென்ற முதலு மீறு மாயுள்ள **சிவயவசி** என்றும், ஈற்றில் தன்னை (ய) இழந்து சக்தியோடு அத்துவிதமாய்ச் **சிவசிவ** வென்றும், ஈற்றில் தாயைவிட்டுத் தந்தையைக் கூடிச் ***சி*** யென்ற திருமூலர் கூறும் நாயோட்டு மந்திரத்தால் சிவாத்துவித முத்தி பெறுவதே சைவர் நெறி. அதாவது அந்த அருள் மேலீடாக நிற்கச்செய்தே அவ் விடத்திலோர் இன்பம் விளைதல். இதுவே சைவசித்தாந்த சுத்தாத்துவித முத்தியாம். சிவயநம வில் நமவை இறுதியாக்கி அதில் இறைவன் **ஊன நடனமாடி** உலகில் உயிரை வாழ்விப்பதும். சிவ என முன்னாக்கி வாழ்வாங்கு வாழ்ந்த உயிர்க்கு திருவடிஞானம் அளித்தலாகிய **ஞானநடனம்** ஆடுதலையும் திருவருட்பயன் 'ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம் ஞான நடனம் தான் நடுவே நாடு' என இவ்விரு நடனங்களாலும் ஆட்கொள்ளப்படும் உயிர் ய என சிவயநம வின் நடுவிலுள்ளதை விளக்குகின்றார். பஞ்சாக்கர தரிசனம் பற்றித் துகளறுபோதம் பா 82

> 'அஞ்செழுத்தும் அண்ணலருள் ஆன்மாத் திரோதமலம்
> மிஞ்சி நமத்துரந்து மெய்யருள் வாத் - தஞ்சச்
> சிகாரத்தில் யவ்வைவிடுந் தீதிலா இன்பப்
> புகாரிற் புகுந்தருந்தப் போய்'-
>
> மெய்யருள் 'வ' தஞ்சச் 'சி' என்க

மிஞ்சி....விடும்' என்பதால் திருவருள் மேம்பட்ட ந, ம இரண்டையும் நீக்கி இறைவன் திருவருளாகிய வ, ய எனும் உயிரை என்றும் அவ்வுயிருக்குத் தஞ்சமாயுள்ள சகாரமாகிய சிவத்தில் குற்றம் ஒன்றுமில்லாத அவ் வின்புருவிற் போய்ப்புகுந்து நுகருமாறு விடுத்தருளும். இனி, **தசகாரியம் தொடர்கின்றது.** தசகாரியங்கள் எனப்படும் ஆன்ம ஈடேற்றத்திற்காய பத்துக் காரியப்பாடுகள் மேற்கூறிய ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மலாபம் என மூன்றாக **ஆன்மாவில் வைத்துக்** கூறப்பட்டன. அதில் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், சிவரூபம் என்பன **ஆன்மதரிசனத்திலும்,** சிவதரிசனம், சிவயோகம் என்பன **ஆன்மசுத்தியிலும்,** ஆன்மலாபம் **சிவபோகத்திலும்** அடங்கும்.

3.2. தசகாரியம் பற்றி **உண்மைநெறி விளக்கம்** தருவன: (பாடல்களுக்குச் சிந்தனையுரையும் எமது விளக்கக் குறிப்புகளும்)

மண்முதற் சிவமதீறாம் வடிவுகாண் பதுவே **ரூபம்,**
மண்முதற் சிவமதீறாம் மலம் சடமென்றல் **காட்சி,**
மண்முதற் சிவமதீறாம் வகைதனில் தான்நி லாது,
கண்ணுத லருளால் நீங்கல் **சுத்தியாய்க்** கருதுமன்றே. பாடல் 1

(1) **தத்துவரூபம்** :- பிருதுவி தத்துவமுதல் சிவதத்துவம் ஈறாக வரும் 36 தத்துவத்தின் வடிவை இதேமுறையிற் காண்பது. அதாவது, 'ந' காரத்தை (திரோதமறைப்பை) வ கார அறிவால் (அருட்சக்தியறிவால்) அறிவது தத்துவரூபம்.

**குறிப்பு** (1) இருவினையொப்பும் சத்திநிபாதமும் ஆன்மாவின் தகுதியாகவே, அருட்சக்தி ஞானகுருவாகி வந்து அறிவிப்பது இதுவாம், (2) இந்த முப்பத்தாறில், ஆன்மதத்துவம் 24உம், வித்யாதத்துவம் 7உம், சிவதத்துவம் 5உம் அடங்கும். தினஞ் செய்யும் சந்தியாவந்தனத்தில் இம்மூன்று தத்துவத் தொகுதியினின்றும் நீங்கவென சுவதாவைச் சேர்த்துக்கூறி ஆசமனஞ் செய்வர். (3) சிவாயநம வெனும் மகாமந்திரத்தில் சி - சிவம், வ - அருட்சக்தி, ய - ஆன்மா, ந - திரோதான(மறைப்புச்) சக்தி (இதுவே 36 மாயாதத்துவங்களாக விரிவது), ம - மலம் (ஆணவம், கன்மம், மாயை). சிவாயநமவின் விளக்கமும் அதனைக் குரு விதித்தபடி ஓதுமுறையறிந்து ஓதுதலும் பிரதானம்.

(4) இது சித்தாந்த அடிப்படையாதலின் உண்மைவிளக்கக் குறிப்புகள் தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) ஐம்பெரும் பூதங்களும் அவற்றின் தொழில்களும் -

| பூதங்கள் | வடிவு | நிறம் | எழுத்து | அடையாளம் | அதி தெய்வம் | தொழில் | குணம் |
|---|---|---|---|---|---|---|---|
| நிலம் | நாற்கோணம் | பொன்மை | ல | வச்சிரம் | நான்முகன் | படைத்தல் | திண்மை |
| நீர் | அரைமதி | வெண்மை | வ | தாமரை | மால் | காத்தல் | குளிர்மை |
| தீ | முக்கோணம் | செம்மை | ர | சுவத்திகம் | உருத்திரன் | அழித்தல் | எதித்தல் |
| காற்று | அறுகோணம் | கருமை | ய | அறுபுள்ளி | மகேசுவரன் | மறைத்தல் | பரத்தல் |
| ஆகாசம் | வட்டம் | புகைநிறம் | அ | அமுதத்துளி | சதா சிவம் | அருளல் | நிறைதல் |

(ஆ) **பொறி - புலன் - 10 :**

மெய் - காற்றிடமாக நின்று ஊற்றின்பத்தை யறியும் (ஸ்பரிசம்)
வாய் - நாக்கிடமாகக் கொண்டு சுவையை யறியும் (ரசம்)
கண் - நெருப்பிடமாக நின்று உருவைக் காணும் (ரூபம்)
மூக்கு - மண்ணிடமாக நின்று நாற்றத்தை யறியும் (கந்தம்)
செவி - விண்ணிடமாகக் கொண்டு ஓசையை யறியும் (சப்தம்)

(இ) **தொழிற் பொறிகளும் அவை தொழிற்படுமாறும் - 5**

சொல் - வானிடமாக நின்று ஒலிக்கும்
கால் - காற்றிடமாக நின்று நடக்கும்
கை - நெருப்பிடமாக நின்று இடுதலையும், ஏற்றலையும் செய்யும்
எருவாய் - நீரிடமாக நின்று மலம் நீரினைப் பிரிக்கும்
கருவாய் - மண்ணிடமாக நின்று விந்துவை வெளிப்படுத்தும்.

(ஈ) **உட்கருவிகளும் அவற்றின் தொழில்களும் - 4**

மனம் - பற்றும், புத்தி - உறுதிப்படுத்தும்., ஆங்காரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுறையும் ஒன்றைப் பற்றி (நான் இதை அறிவேனென) எழும், சித்தம் - தம்மிடத்து உற்ற பொருளைச் சிந்திக்கும்.

**(உ) வித்யா தத்துவங்கள் 7**

காலம் - முக்காலத்தையும் விளக்கும்
நியதி - உயிரின் வினைப்பயனை அதுவே சாருமாறு உறுதிப்படுத்தும்.
கலை - ஆணவத்தைச் சிறிது நீக்கி உயிருக்குத் தொழில் செய்யும் ஆற்றலை எழுப்புவிக்கும்.
வித்தை - உயிர் விரைவில் அறியும் ஆற்றலை எழுப்புவிக்கும்.
அராகம் - பெற்றபொருளைச் சிறிதாக்கிப் பெறாத பொருளில் விருப்பத்தை உண்டாக்கும்
புருடன் - உயிர் ஐம்புலன்களை நுகருங்கால் அப்பொருளில் அதனை அழுத்துவிக்கும்.
மாயை - ஒன்றையும் நினைய ஒட்டாமல் மயக்கத்தைச் செய்யும்.

**(ஊ) சிவதத்துவம் 5** (அறிவு என்பது ஞானம், தொழில்- கிரியை)
சுத்தவித்தை - அறிவு மேற்படத் தொழில் குறைந்து நிற்கும்,
ஈசுரம் - தொழில் மேற்பட அறிவு குறைந்து நிற்கும்,
சதாசிவம் - இரண்டும் ஒத்திருக்கும்,(சாதாக்கியம், இலிங்கம்)
சத்தி - தொழிற்படுத்தும்,
சிவம் - அறிவாயிருக்கும்.

ஆக, 36 தத்துவங்களும் விபரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் திருவருளோடுங் கூடி, ஞான நூல்களால் இவ்வாறு அறிதல் **தத்துவரூபம்**

**குறிப்பு (அ)** பதி, பசு பாசம் எனும் முப்பொருள்களில், பாசம் ஆணவம், கன்மம், மாயையென மூன்றாம். இதில் தசகாரியத்தில் வருவன 36 தத்துவங்கள், அவற்றை ஆன்மா கண்டு, அவற்றினின்றும் தான் வேறெனப் புரிந்து, சுத்தியாகி நீங்குதல், பரையினூடாகச் சிவரூபங் காட்டக்கண்டு, சிவதரிசனம் பெற்றுச் சிவப்பேறடைதல் என்பன.

ஆ). **மாயை** (சடசித்துப் பிரபஞ்சம்) : மாயை - **மாயாமலம். மா** - மாய்ந்து (ஒடுங்கிப்) பின் **யா,** ஆ - ஆவது. ஆதலின் பிரபஞ்சத் தோற்றமும் ஒடுக்கமும் நித்தியமான இதனினூடாகவே நிகழும். லி கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(லிங்கம்) என்பதும் இதுவே. இது சடமாய் தூலசூக்கும வடிவுகளாய் வியாபித்து உள்ளது. இறைவனால் உயிர்கட்கு அருளும் பஞ்சகிருத்தியத் தேவையின் பொருட்டுக் காரியப்படுத்தப்படுவதால் மாயை அவனின் பரிக்கிரகசக்தியாம். (எழுதுகோல் சடமாயினும் சிந்திப்பதை எழுத உதவுவது போல்வதே இது.) சிவன் சந்நிதியில் சிவசக்தியின் மாயை மீதான அதிட்டிப்பால்- மறைந்து நின்று செலுத்துவதால் பிரபஞ்சந் தோன்றும். அப்பிரபஞ்சம், ஆன்மாக்கள் வினையினின்றும் ஈடேறி பரகதி யடைதற்காக, இறைவனை அத்துவாமூர்த்தியாகக் கொண்டு, ஆறு அத்துவாக்களெனும் வழிகளைக் கொண்டது. அவை கலை, தத்துவம், புவனம் (பொருட்பிரபஞ்சம்), வன்னம், பதம், மந்திரம் (ஒலிப்பிரபஞ்சம்) என ஆறாம். இதில் 36 தத்துவங்கள் விளக்கப்பட்டன. ஏனைக் கலை முதலான ஐந்தும் விரிக்கிற் பெருகுமாயினும் அட்டவணைகளாக பாகம் 3ன் அதிகாரங்களிற் குறிப்பாக பிரபஞ்சத் தோற்றம், சிவத்திரு வடிவங்கள் என்ற பகுதிகளிற் காண்க. மாயை -விடிவாமளவும் விளக்குப் போல ஆன்மாவின் ஆணவஇருளால் மூடப்பட்ட அறிவைச் சிறிதே கருவி கரணங்களைக் கொண்டு விளக்குவது. ஆயினும் ஆன்மாவின் முன் வினைக்கேற்ப அதனறிவை மயக்கவுஞ் செய்யும். ஞானிகள் இம்மாயை மண், பெண், பொன் எனத் தரும் மயக்க உணர்வினைக் கண்டித்துள்ளனர். இவற்றினுடைய பூரண அறிவே சித்தாந்தத்தின் பெரும் பாகமாம். அவற்றை மெய்கண்ட சாத்திரங்களிற் காண்க. (7.10.15) காணின் அசுத்த மாயையை உதறி சுத்தமாயையின் வித்தியா தத்தவத்தினின்று ஆற்றும் சிவபூசை கிரியாயோகமாகி ஞானத்திற்கும் இம்மையிலேயே வழிசமைக்கும் என்பது உறுதி.

**இ),** மும்மலங்களில் மூலமலமான **ஆணவம்** உயிருக்கு என்றும் அறியாமையைச் செய்யும். அதனால் நான், எனது எனும் தன்முனைப்புடன் மாயையினைப் பயன்கொண்டு உயிர் வாழும். ஆணவமானது, மோகம் (மயக்கம்), மதம் (செருக்கு), இராகம் (ஆசை), கவலை, தாபம் (துன்பம்), வாட்டம், விசித்திரம் (உடைமைச் செருக்கு) ஆகிய எழுவகைக் குற்றங்களை உயிருக்குக் கொடுத்து, அதன் அறிவை மறைத்தே வாழ்விக்கும். இவ்வாறு வாழுகையில் ஆற்றுவது **கன்மம்.** அது உயிர் நுகரும் இன்பதுன்ப விளைவாகி மூன்றாகும். பிறவிதொறும் மூலகன்மம் முதலாக ஈட்டி (சித்திரபுத்தினார் ஏட்டிற் பதிவாகி) இருப்பது **சஞ்சிதம்.** அது பழவினை தொல்வினை எனவும் படும். அதில் ஆன்மா ஒரு பிறவியில் அனுபவிக்கும்படி பக்குவப்பட்டுப் பாபபுண்ணியப் பலனைக் கொடுக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபகுதியே **பிராரத்தம்**- ஊழ் வினை, நுகர்வினை**யென** இப்பிறப்பில் அனுபவிக்கப்படும் அது, இங்ஙனமாக பழைய வினையில் ஒருபகுதியை அநுபவித்துத் தொலைக்குமாறே உடலாதி கருவி கரணங்கள் வினையாற்று மிடங்களாய புவனங்கள், இன்பதுன்ப நுகர்வுகளாகிய போகங்கள் (தநுகரண புவன போகங்கள்) இறைவனாற் தரப்பட்டது என்பதை உயிர்மறந்து, யான் எனதென இறுமாந்து, விருப்பு வெறுப்புடன் நல்வினை, தீவினைகளாற்றி பாப புண்ணியங்களைத் தேடுகின்றது. அதனால் குளிக்கப்போய்ச் சேறுபூசுவதே போல, ஏறுவினையெனும் **ஆகாமிய** வினையைப் பெருக்குகின்றது. இதனால் மரமும் வித்தும்போல வினையாற் பிறப்பும், பிறப்பால் வினையுமெனச் சம்சாரசாகரத்தில் உழன்று பாபபுண்ணியப் பலன்களை இன்பதுன்பங்களாக (போகம்) அநுபவிக்கின்றது. இதற்கெல்லாம் மூலகாரணமான ஆணவமலம் **மூலமலம்** எனப்படுகின்றது.

'யான்செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடஅத் தத்துவன்தான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொழித்திட் டோடும்
நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே' -சித்தியார் 305

யானென தென்னுஞ் செருக்கற்றால் அன்றி இறைவன் தன்னோடு உடனா யிருப்பதை யறிதலும், அதனால் வினை நுகர்ச்சியும் ஈட்டமும் இவனுக்கு இல்லாதாதலும், அதனால் குற்றம் (மலம்) அகலுதலும் நிகழாவாம். ஆதலால் அச் செருக்கறுத்தலை நிகழ்விப்பதும், அவன் இவனாய் (எல்லாமாய் அல்லதுமாய் நின்ற முதல்வன் ஆன்மாவேயாய் அதனுடன் கலந்து ஒன்றாய் அட்டமா மூர்த்தமாய்) நின்ற முறை ஏகனாகி நிற்கும் ஞானமொன்றே யாதலின், ஞானம் ஒரு தலையான் வேண்டப்படும். அற்புத விளக்கத்துடனான பாடலிது.

(2) **தத்துவ தரிசனம்** - இப்படித் திருவருளால் ஆன்மா அறிந்துவந்த தத்துவம் 36ம் ஆன்மா (வ எனுஞ்சக்தியோடு) கூடியறிந்தாலன்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாக அறியாதாகையால் அத்தத்துவங்களைச் சடமென்று காணல். **குறிப்பு** (1) ஆன்மா சார்ந்தன்வண்ணம் சார்ந்தது. சத்தியோடு கூடி ஞானத்தால் அறிவது. (2) கண்ணானது, காணுந்தொழிலை ஆன்ம போதமின்றி ஆற்றாது. ஆதலால் தனக்கென அறிவற்ற சடம். 'கண் கண்டது' என ஒருவர் கூறும்படி கண்ணுக்குக் காட்டி, அக்கருவியால் தானுங்காணும் ஆன்மா சித்துப்பொருள், ஆதலால் கண்ணிந்திரியம் (தத்துவம்) சடமாகின்றது. இதேபோல 36 தத்துவங்களுஞ் சடமே.

(3) **தத்துவ சுத்தி -** சிவன் ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளிவந்து பூதம், பொறி, அந்தக்கரணம், கலாதி சுத்ததத்துவம் என ஐந்தாக வகைப்படும் 36 தத்துவமும் (முன்னிது சந்தியாவந்தனத்தில் மூன்றாக வகைப்படுத்தப்பட்டது) அசத்தாய்ச் சடமாய் அழிந்து போகிறதென்று அறிவிப்பதால் ஒக்கும் என (அது நிகழும் **என ஏற்றுப்) பொருந்தி,** ஆன்மா, பூதமல்ல என்று **பழித்தும்,** பொறியல்லவென **உணர்ந்தும்,** அந்தக்கரணமல்ல என்று **நீங்கியும்,** கலாதிஞானமல்ல என்று **நிராகரணம் (நிறுவல்) பண்ணியுஞ்,** சுத்த தத்துவமல்ல என்று **தூடனம்** (சிவதத்துவத்துள் உறையும் சிவனோடொப்ப நோக்கித் தன் இழிவைப் பழித்தல்) **செய்தும்,** இவற்றில் நில்லாது **நீங்கித்** தத்துவாதீதமாய் இந்தத் தத்துவத்தில் **மீண்டுங் கூடாமல்** விஞ்ஞான கலத்துவம் பிறந்து (மலமாயா கன்மமொழிந்து), (சுத்தநிலையில்) சகலதரிசனமாய் **(தான் வேறே நீங்கி) நிற்றல்** தத்துவசுத்தி. **குறிப்பு** : முன் சொன்ன 'ஆன்மா 36 தத்துவங்களுமல்ல' என்றதில் 'சிவ தத்துவங்களும் நானல்ல' வென்பதும் அடங்குமாயினும் அது கண்ணிந்திரியம்போற் சிந்தித்து ஏற்பதற்குக் கடினமாதலின் இங்கே 'சிவனோடொப்ப நோக்கித் தன்னைப் பழித்தல் செய்தும்' என வருதல் காண்க. ஆதலின் **குருவின்றித் தத்துவசுத்தி நிகழாதாம்**

**பாடல் 2:**

பாயிருள் நீங்கி ஞானந் தனைக்காண்டல் **ஆன்ம ரூபம்,**
நீயும்நின் செயலொன் றின்றி நிற்றலே **தெரிச னந்தான்**
போய்இவன் தன்மை கெட்டுப் பொருளிற்போய் அங்குந்
தோன்றா தாய்விடில் ஆன்ம சுத்தி அருணூலில் விதித்த வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) **ஆன்ம ரூபம் -** தத்துவங்களெல்லாம் நீங்க வரும் தன்னுண்மையாகிய (சுத்தத்தில்) கேவலத்தைத் (செம்பிற் கழிம்பு போலொன்றாய், நீரின் நிழல்போற் தோன்றாது இதுவரை நின்றது இதுவோ - மாயையோ என்று) தரிசித்து அதீதமாய் அவ்விடத்துண்டாகிய ஞானத்தைத் தானென்று காணுதல். (**குறிப்பு :** இது தன்னைப்பற்றிய தெளிவற்ற - இடைப்பட்ட பசுஞானம். 36 தத்துவங்கள் நீங்கியதால் மாயை நீங்கியதேயன்றி எங்கும் பரந்து இருளாய் நின்ற ஆணவ கன்மங்கள் நீங்காமையே அதற்காய காரணம். இதன்மேற் சிந்தியாது, ஆணவக் கொடுமையை ஏற்காது, இந்நாலாம் நிலையில் நிற்கும் ஏகான்ம வாதிகளாய சங்கரமதத்தினர் மாயையினின்றும் நீங்கிய ஆன்மாவே பரம் என்பர். அவர்கள் சைவாகமங் கூறும் ஆணவம் பற்றிய சித்தாந்தக் கருத்துக்களைப் விரும்பிப் படியாதவர்கள். யானெனதெனச் செய்து, அறிவை அணுவாக்கும் ஆணவக் கெடுதியை ஏற்காதவர்கள். ஆணவம், பதிஞானத்தாலாகும் சுத்தத்திற் சுத்தநிலையிலேயே நீங்குமென்பது சித்தாந்தம். சித்தி பா 305 இல் ஊன்செய்யா ஞானம் - பொறிகளாலன்றி இறை காட்டக்காணும் திருவடிஞானம் - பதிஞானம். அதுவே முத்தி தருவது.

(5) **ஆன்ம தரிசனம் -** நீ கண்ட ஞானத்திற்கே செயலெனக் கண்டு உனது செயல் சற்றேனுமின்றி நீயும் அந்த ஞானமுமாய் நிற்றல். (அதாவது மாயைவடிவு நீங்கி ஞானமே சொரூபமாகப் பெற்ற நீ அந்த ஞானத்தோடு ஒத்து உனது போதம் சற்றேனுமின்றி நிற்றல்.)

(6) **ஆன்ம சுத்தி -** அந்தச் சிவஞானத்தோடு (தன்னின் வேறாகக் காணும் 'வ' எனும் - அபரைக் காட்சியுடன்) ஒத்துநில்லாது, மேலான பரையிற் போய், இவன் தன்மையாகிய போதப்பதைப்புக் கெட்டு அவன் தன்மையாய், (அவன்போல இவனும் இப்போது ஞானமயனாதலின்) அதில் அழுந்திச் சிவமெனும் பேறுபெற்றோ மென்னும் பரமானந்தப் பொருளில் (ஞேயமெனும் காட்சிப்பொருளிற்) போய்த் தரிசித்து, அவ்விடத்தில் தான்தோன்றாது ('ய' கெட்டு) அந்தப் பரமானந்தப் பொருளோடு கூடி, ('சி' யென) அதுவாய் விடல். (பரை - மேலானசக்தி. அபரை - உயிர் பொருட்டுக் கீழிறங்கிய தடத்த சக்தி)

**பாடலில், போய் இவன் தன்மை கெட்டு அவன் தன்மையாய் என்றதன் விரிவாவது :** (1) தற்றெரிசனம் பண்ணிநின்ற உன்னிடத்திலே, மலரும் பக்குவமுடைய மரத்தின்மேலே (மலரின்) மணம் பிரகாசித்தாற்போல, உன்னறிவிலே பிரகாசித்து நீ ஒத்து நின்ற **ஞானத்தை** இதுவாகிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு அறிவித்ததென்று **தரிசித்து,** (2) இதுவரை குருடாகி வைத்தியனாற் கண்படலம் நீங்கப்பெற்றுக் கண்பெற்றார் கண்ட கதிரொளிபோல மற்றொன்றையுங் காணாது உள்ளும் புறம்பும் (உள்ளேகாணல் ஞானத்தில் யோகம், புறம்பேகாணல் ஞானத்தில் ஞானமாதலின் உள்ளும் புறம்பும் ஒருமைத்தே காணும்) இந்த ஞானம் பூரணமான **பரையையும் தரிசித்து,** (3) கண்ணிற் கதிரோன் கலந்தாற்போல் தெரிசித்த பரையிலே வியாத்தமாய் (அதனுளடங்கி), ஆகாயத்திற் காற்று வேறற நின்றது போலவும், திரையற்ற நீர்போலவும் விகற்பமற (வேறுபாடின்றி) ஒன்றாய் நிற்கும் **பராயோகமாய்,** (4) அப்படித் திரையற்ற நீர்போல நின்று தெளிவுபெற்றுப் **பராபோகமாய்,** (5) உண்மைஞானப் பயனாந் தசகாரியம் ஒன்றுமில்லாத சுழுத்தியில் உன்னைவிட்டு நீங்காமல் நிற்க. நீ கண்ட பரை பஞ்சகிருத்தியஞ் செய்து உன்னை மோட்சத்திலே விடவேண்டுமென்று விரும்பின அதன் விருப்பத்தை மிகுதியும் நீ பொருந்தினதால் அதைப்போல நாமும் பஞ்சகிருத்தியஞ் செய்யவேண்டுமென நின்ற **சுத்த பராயோகமாய்,** (6) அந்தச் சுழுத்தியிலுள்ள பரையினது விருப்பத்திலழுந்தின மயக்கந்தீர்ந்து கண்ணுஞ் சூரியனும்போல உன்னையும் பரையையுங் கண்டு பரையினது கிரியையைப் பொருந்திப் பணிசெய்து நிற்கும் **முத்திச் சாக்கிரமாய்,** (7) சிவனையன்றிப் பரை செய்யமாட்டாத பஞ்சகிருத்தியத்துக்குப் பரைக்குக் கருவியாயிருந்த நமக்குப் பணி செய்வதற்கும் ஒரு செயலுண்டோவெனப் பணிசெய்யாது விட்டுச் **சாக்கிராதீதமாய்,** (8) இப்படிப் பணியையும் பணியறுதியையும் பாராது பஞ்சகிருத்தியம் பண்ணுதற்குப் பரைக்கு மேலும் ஒரு முதலுண்டோ அதைஎப்படி யறியப் போகிறோமென்று **இச்சை, ஞானம், கிரியை மூன்றையும் விட்டு பரையாதீதமாய்,** (9) ஒன்றுங் குறியாது திகைக்குஞ் சுத்தாவத்தையில் இவன் தன்மையாகிய போதப்பதைப்பற்றுச் சோகம் (சிவோகம்பாவனை) பிறந்தபோது சிவன் தனது தன்மையாஞ் சுகந்தோன்றுவதைஎன்க.

இனி **`பொருளிற் போய் அங்குத் தோன்றாதாய் விடில்' என்றது :** இந்தச்சுகமும் சிவனுக்கு ஓர் இன்பசக்தி யென்று கண்டு, அது நீங்குஞ் சுகாதீதத்தின் உண்மையாஞ் சிவத்தைக் கிட்டி, அதனாலே வரும் பரமானந்த வெள்ளப் பொருளிற் போய்த் தரிசித்து, அவ்விடத்துத் தான் தோன்றாது அந்தப் பரமானந்தப் பொருளதுவாய் விடும் **பரமானந்த யோகத்தை யென விரித்து உரைக்க.** மேலும் துகளறுபோதம் பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) **சிவரூபம்** - பாடல் 3

எவ்வடி வுகளும் தானாம் எழிற்பரை வடிவ தாகிக்
கவ்விய மலத்தான் மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வமீண் டகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவ னென்றே
செவ்வையே உயிருட் காண்டல் சிவரூப மாகு மன்றே '.

சிவன் முதலாகவும் பிரமா ஈறாகவுமுள்ள நவந்தருபேதங்களும் மற்றுமுள்ள வடிவுகளெல்லாம் தானேயாகின்ற சிறந்த பரைவடிவே தனக்கு வடிவாகி, மலத்தைப் பிடித்துக் கிடக்கும் ஆன்மாக்களையும் அவற்றின் வினைகளையும் அறிந்து பொசிப்பிப்பது காரணமாக மாயா காரியமாகிய உடலும் தத்துவங்களும் புவனங்களும் பொசிக்கும் பதார்த்தங்களுமாக விசாரித்து நிறுத்திப் பொசிப்பித்து துலைப்பிக்கும் அளவிலே, இளைப்பாற்றி, மலத்திடைப் பட்டுக்கிடக்கும் துயரந்தீருமளவும் மாயையின் காரியத்தை யொடுக்கிப் பின்னு முண்டாக்கி, அப்படித்தாகு முறைமையை அடைவிலே (இறுதியிலே) தொலைப்பித்து இரட்சிப்பானொரு பரமேசுரன் வடிவு பரையென்றும், அது உயிர்க்குயிராய்த் திருவடிஞானமாய் நின்று அறிவிப்பதைத் திருவருளையே இடமாகநின்று காணுதல் சிவரூபமாம். பொசி - அனுபவி, துலை -நீக்கு. (அடிக்கடி சிவஞானமுனிவரின் விளக்கங்கள் அவர் பாணியிலேயே தரப்படுகின்றன.)

(8) **சிவதரிசனம் -** பாடல் 4

பரைஉயிரில் யானெனதொன் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்,
உரையிறந்த சுகமதுவே முடியாகும் என்றங்
குண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறொன் றின்றித்,
தரைமுதலிற் போகாது நிலையினில்நில் லாது
தற்பரையி னின்றழுந்தா தற்புதத்தி னாகுந்,
தெரிவரிய பரமானந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தெரிசனமாய்ச் செப்பும் நூலே்

(1) முன் உயிர்க்குயிராய் நின்றறிவித்த (திருவடிஞானம்) அடி ஞானமாகிய பரையானது உயிரிலே யானெதென்பதற நின்றது **திருவடியா மென்றும்,** சோகம் (சிவோகம் பாவனை) தோன்றிச் சுகத்திற் பட்டுப் பார்க்கப்பட்ட பாசப்பரப்பெங்குஞ் சோதிக்குட் சோதியாஞ் சிவமாய்த் தோன்றுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகமாமென்றும்,** தரிசித்த அந்தச் சிவப்பேற்றில் வாக்கு மனாதீத மாய் ஓர் ஆனந்தமுண்டாம் அதுவே **முடியாமென்றும்,** சிவனுக்குத் திருவடியென்றுந், திருமுகமென்றுந், திருமுடி யென்றுஞ் சொல்லப்படு மவைகளின் உண்மையை மிகவுந் **தெளிந்து,** (2) அதுவே பொருளாய் மண்முதலான தத்துவங்களில் மீண்டும் போகாது, துறந்துநின்ற நான் பிரமமென்னும் பசுஞானமான தன்நிலையிலேயும் நில்லாது, (3) மேலான பரையிலேயும் **நின்று அழுந்தாது,** (4) சிவப்பேற்றிலாகும் அறிதற்கரிய பரமானந்தத்தே **சேர்தல்** சிவனை உள்ளபடி தரிசிப்பதாஞ் **சிவதரிசனம்** என்றும் சிவாகமங்கள் சொல்லும் என்றவாறாம். (7.3பார்) (**குறிப்பு** : இத்தகு பொருண்மகிமை மிக்க சிவனுருவையே நாம் பாதாதிகேசமாக நியாசம் பண்ணிப் பூசையாற்றுகிறோம் என்பதனை உணர்ந்தின்புறுக.)

(9) **சிவயோகம்** -

எப்பொருள்வந் துற்றிடினும் அப்பொருளைப் பார்த்திங்
கெய்தும்உயிர் தனைக்கண்டிவ் வுயிர்க்கு மேலாம்,
ஒப்பில்அருள் கண்டுசிவத் துண்மை கண்டு
உற்றதெல்லாம் அதனாலே பற்றி நோக்கித்,
தப்பினைச்செய் வதும்அதுவே நினைப்பும்அது தானே
தரும்உணர்வும் பொசிப்பும்அது தானே யாகும்,
எப்பொருளும் அசைவில்லை யெனஅந்தப் பொருளோ
டியைவதுவே **சிவயோகம்** எனும்இறைவன் மொழியே '.

அதாவது (1) அந்தப் பரமானந்தநிலை குலைந்து உலகமே வந்து பொருந்தினும் அந்த உலகப்பொருளை அசத்தாய்ச் சடமாய் அழிந்துபோகிற பாசமெனப் **பார்த்து,** (2) இந்தப் பாசத்துட் பொருந்தாநின்ற (பொருந்திய) உயிருக்குச் சுதந்தரமாய் ஒரு செய்தியும் இல்லையெனப் **பார்த்து,** (3) இவ் வான்மாவிற்கு ஒரு செயலற்றுந் தனக்கு மேலாய் ஒப்பற்ற அருள் கண்ணாக நிற்குமதனைக் **கண்டு,** (4) அவ்வருளினுட் பரையை அடியாகவுஞ், சுகத்தை முகமாகவும் ஆனந்தத்தை முடியாகவுங் கொண்டு நின்ற சிவத்தினது உண்மையைக் **கண்டு,** (இதுவரை நின்றது சிவத்தின் தடத்தமெனக் கண்டு) (5) பொருந்திய உலகப் பொருளாகிய அவன் அவள் அது வென்னுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடசித்துக்க (பிரபஞ்சங்க) ளெல்லாவற்றையும் அந்தச் சிவத்தினாலே தானே பற்றிப் **பார்த்து,** (பசு கரணங்கள் பதி கரணங்களாகி யறிந்து) (6) மறப்பினைச் செய்வதும், நினைப்பினைச் செய்வதும், அறிவிக்க அறியும் ஆன்மபோதமும், கர்மப்பொசிப்புஞ் சிவன்தானேயென (தனக்கொரு செயலில்லையாவும் அவன் செயலெனவும்) **அறிந்து,** (7) அவனை, யொழிய வேறொரு திரணமும் (துரும்பும்) அசைவில்லை (அவனின்றி அணுவும் அசையா தென அறிந்து) அகமும் புறமும் அந்தச் **சிவத்துடனே கூடி, உள்ளும் புறம்பும் ஒருமைத்தே காட்சியராய் நிற்றலே சிவயோகமாம்.** இது சிவாகமக் கூற்று.

(10) **சிவபோகம்**

பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்,
சாதிநெறி தப்பிடினும் தவறுகள்வந் திடினும்
**தனக்கெனவோர் செயலற்றுத் தான்அதுவாய் நிற்கில்,**
நாதன் இவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து
நானாபோ கங்களையுந் தானாகச் செய்து,
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி இதுவே.

இலகுவாய் விளங்கும் இப்பாடல்களின் பொருள்: அந்தச் சிவன், இவனுடலும் உயிருமாய் நின்று, பிராரத்தமாகிய நானாவித விடய போகங்களையும் சிவபோகமாகவே செய்து, இவனைப் பேதமற (அத்துவிதமாய், அவனே தானேயாய்) நின்று, தானாக்கி விடுவன். இது ஆன்மலாபமான பரமானந்தத்தைப் பொசித்து நிரம்பி அது பொங்கிமேலிட்டது கரைபுரண்டு அவசமுறுஞ் **சிவபோக**மென்று சிவாகமங்கள் சொல்லும் வழி இது. (அவசமுறுதல் - தன்வயப்படாது சிவவயப்படுதலாகிய பரவசமாதல்.).

3.3. **சைவசித்தாந்த விளக்கப்பட ஆன்மஈடேற்ற ஒழுங்கு :** குடிலையை (சுத்தமாயையின் மேல் ஆன்மா தனதுடலின் சகஸ்ரதளமாய உச்சியைக்) கடந்தபின் (1) அருட்சக்தி தரிசனம் (2) இச்சாசக்தி தரிசனம் (3) கிரியாசக்தி தரிசனம் (4) ஞானாசக்தி தரிசனம் (5) ஞானா தீதம் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆத்மரூபம்** (7) **ஆத்மதரிசனம்** 8) பரைதரிசனம் (9) பரைவியாப்தி (10) பரை யோகம் (11) பரைபோகம் (12) **ஆத்மசுத்தி** (13) சுகரூபம் (14) சுகாதீதம் (15) சிவரூபம் (16) **சிவதரிசனம்** (17) **சிவயோகம்** (18) சிற்பரானந்த தரிசனம். (19) சிற்பரானந்த யோகம் (20) பரமானந்தாவச சாயுச்சிய **பரபோகம்** (இதில் சிவசூரியனும் பராசக்தியும் சூழ்ந்திருப்பர்.) என்ற படிமுறைகளில் ஆன்மலாபமாய சிவபோகத்தில் அழுந்தும். அதுவே பரமானந்தம்.

3.4. **சித்தாந்தம் கற்போர் தரமும், படிமுறைகளும்** : இவ் வரியபெரிய விடயங்களெல்லாம் சிவ புண்ணியங்களான உண்மைச் சரியா, கிரியா, யோகங்களெனும் முப்படிகளும் முற்பிறப்பிலோ இப்பிறப்பிலோ கடந்து, திருவருளால் இருவினையொப்பு நிகழ்ந்து, மலபரிபாக மடைந்து, சத்தி பதிதலெனும் சத்திநிபாதத்தால் இறைவன் சகலர்க்கு மானிட குருவாகி வந்து தீட்சை (விசேட, நிர்வாண) வழங்கி, முத்தி கைகூட ஞானத்தைத் தலைப்படும் நிலையில் அறியற்பாலன. இங்ஙனம் ஞானநெறி விரும்புவோர் **நையாயிகர்** எனப்படுவர். ஞானசம்பந்தர் முற்பிறப்பிற் சிவபுண்ணியம் ஆற்றி இப்பிறப்பிலும் இகபர ஞானங்களை உண்ணாமுலையாளின் இரு திருமுலைகளிலு மிருந்து கறந்த பாலூட்டப் பெற்றதாலுணர்ந்து **சாமுசித்தர்** ஆயினமையின் அவர்க்கு ஞானநூல் வேண்டிற்றன்று. இனி. **பிராகிருதர்** என்னும் வகையினர் உலக போகங்களையே விரும்பி திரோத மறைப்பினால் சிவஞானம் பற்றியோ மற்றுமுள்ள சிவபுண்ணியங்கள் பற்றியோ எண்ணாராதலின் அவர்க்கு இது உரித்தன்று. எனினும், இந் நூலை விரும்பிப் படிப்போர் அதிகுறைந்தது சமயதீக்கை யாகுதல் பெற்று, சரியையிலும் பின்னர் திருவருள் கைகூடி விசேடதீக்கை பெற்றுச் கிரியையெனும் சிவபூசையிலும் தம்மை ஈடுபடுத்தியிருப்பர் அல்லது இனியாகுதல் அவ்வழிச் சேறுவரெனும் எதிர்பார்ப்புடன் பயனான நற்கருத்துக்கள் தரப்படுகின்றன.

தம் சிற்றறிவையே முன்னிலைப் படுத்தி, தீக்கை ஆசாரம் எதுவுமின்றி, சிவபுண்ணியங்கள் எதிலும் ஈடுபடாது, இந்து சமயம் என்ற போர்வையில் வெறும் ஆய்வுக்காக, போதனைக்காக மெய்ஞ்ஞானம் பயிலும் எத்தகையோர்க்கும் இது உதவுமாறில்லை. காரணம் 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்றவாறு, உள்ளத்துள்ள சிவனை புறத்தே கொணர்ந்து பூசோபசாரங்கள் செய்து மீண்டும் அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் வைப்பதாயின் அவ்வுள்ளம் அமைந்த நெஞ்சு ஆசாரத்தாற் சுத்தியாக வேண்டாமா?. (பஞ்ச சுத்திகளிற் பூதசுத்தி 6.2.4 பார்). ஆயினும் மனபக்குவத்துடனான ஆசாரத்துடன், பயபக்தியுடன் தமது பிறப்பின் அர்த்தத்தை யுணர்ந்து, கற்றுப் பயனடைதல் யாவர்க்கும் வேண்டற்பாலதே. அத்.7.11ல் சைவ நாற்பாதங்களில் ஞானம் பற்றியதில் ஞானநூல் அறிவு யாருக்கு வேண்டப் படுவதென விளக்கப்பட்டுள்ளது,

மேலும், இன்றைய குழப்பமான சூழ்நிலையில், அன்பே சிவமென்ற அடிப்படையில், சமயத்தளம்பலுக்கு ஆளான அன்பர்கள், பல்கலைக்கழகத்தினர், ஏன், அந்தணப் பெருமக்களுங்கூட ஆய்வு உணர்வுடன் இந்நூலைப் பயிலவேண்டும். பயிலின், இதுவரை சித்தாந்தம் அறியாதோர் சந்தேகந் தெளிந்து, சைவசித்தாந்தத்தில் நம்பிக்கையும், மதிப்பும், மேலுங் கற்கவேண்டு மென்ற ஆவலும் அடைவர். **'வேதசாரஞ் சிவாகம மாதலால் சைவாசாரத்திற் சூரியோன் வைதிகன்'**(மாபாடியம்) என்பதும் **'வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்'** (சிவப்பிரகாசம்) என்பதும் **'வேதப்பயனாஞ் சைவமும் போல்'** (திருக்களிற்றுப்படியார்) என்பதும் போன்றவை கற்றறிந்தடங்கிய ஆன்றோர் வாக்குகளாதலின். தம்முட் பிரிந்து சங்கம் அமைத்து, சிவனன்பை நம்பாது அரச செல்வாக்குந் தேடி கிரியையினைத் தொழிலாகப் புரியும் அந்தணரும் இதிற் கூறுங் கருத்துக்களை, அபிப்பிராயங்களை வாசித்து, சைவ, ஸ்மிருதி, வேதாந்த வேறுபாடுகளை சித்தாந்தத்தினுடாகத் தெளிந்து சிவனருள் பெற்றுய்தல் கடனாம். அவர்கள் ஆடம்பரமற்ற சிவதோற்றத்தினராய் சிவஞானியராக அறவோராகுவதற்கு இத்தற்கு சித்தாந்த விளக்கம் அவசியமாகும்.

சமயகுரவர் நால்வரும் அரசுகளை ஆட்டிப்படைத்தனர். நம்மவர் சிவாலய மற்றுமுள்ள ஆலயபூசை புரிந்தும் அரசின் தேவைக்காக வழங்கும் போலிக் கௌரவத்தை விரும்பிப் பெறுகின்றனர். கோவிற்களவுகளை, இடிப்புகளைக் கேட்க ஆளில்லாததும் வியப்புக் குரியதே. 'நாமார்க்குங் குடியல்லோம்'.. தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரற்கே ஆட்பட்டோம்' என்ற வீரவசனங்களை அப்பர் பேசி, தமிழ்நாட்டையே முழுமையான சைவ நாடாக்கியமை வடஇந்திய ஆய்வாளர்களாலும் ஏட்டிலிடப்பட்ட செய்தி. சரித்திரத்தில் அரசுகள் பெரும்பாலும் சமயஞ் சார்ந்ததாய் இல்லாமல், நற்சமயம் எதுவென ஆய்ந்து ஏற்றுள்ளனர். சேக்கிழார் பெரியபுராணஞ் செய்ததன் பின்னணி, சம்பந்தரின் திருநீற்றுப் பதிகத்தால் பாண்டியன் நோய் தீர்ந்து மதம் மாறி சமணரைக் கழுவேற்றியமை, முதலியனவும் மும்மையால் உலகாண்டமூர்த்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பெரியபுராண நாயகரின் செயற்கருஞ் செய்கையால் அரசுகள் சாய்ந்தமை போன்ற உண்மைச் செய்திகளைப் படிப்போரின்மையால் இவ்விழிவு நிலை தொடர்கின்றது. புராணகலாசாரம் மீளவேண்டும்.

ஆயினும், எவராகுதல் ஞானவுணர்வின்றி இந்நாற் கருத்துக்களை கண்டனங்களாக எண்ணி வெறுப்புணர்வுடன் பார்த்து எம்மீதும் பகை கொள்வதில் அர்த்தமில்லை. 'இடிப்பாரை யில்லா ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்' என்பதால் பரஸ்பரம் எம்மிடையுள்ள குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இருவழித் தொடர்பாகக் கருத்துக்களைப் பரிமாற, அவற்றை எழுதித்தரின் நிச்சயம் அதனை மறுபதிப்பில் இடம்பெறச்செய்வோம். **ஞான நூல்களில் நுவலாதது நுவலப் படவில்லை.** கருத்தினாலன்றி மொழியாளுகையாற் பிறழின் அதை மன்னிக்கவும்.. நால்வர் வழி நம்வழி. அன்புடனும், வித்தியாதர்மமான `தாம் பெற்ற வின்பம் பிறரும் பெறக்கண்டு காமுறும்' கற்றறிந்தோரின் அடிகளைப் பின்பற்றுவோம். சமுத்திரமான தாய்ச்சமயத்துள் நின்று சிவகருணையில் மூள்கிப் புலம்பும் எவையும் வேதமெனவுணர்வதால், நம்மனையர் கூறுந் தத்துவ, மற்றும் கிரியை சம்பந்த திருத்தங்களை வேதாகம, திருமுறை, மற்றும் மெய்கண்டசாத்திர ஆதாரத்துடன் தரின் அவற்றை நன்றியுடன் ஏற்போம். மேலும் உயர் சிவபுண்ணியமான இக் கிரியாயோகம் பற்றியவை தரமான நூல்களின் உதவியுடனேயே எழுதப்படுகின்றன. அவற்றின் பொருளுணர்த்தும் சிவஞானமுனிவர் மொழியாட்சியின் திறமறிந்து சற்றே இலகுவாக்கித் தருகின்றோம். பயிலப்பயில இதந் தருவது உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழி.

இனி. படிமுறைகள் என்ற விடயத்தை ஆயின், எல்லாச் சமயங்களையும் சித்தாந்தசைவத் தலைவனான சிவமுதலே ஆக்கியமையால் சைவசித்தாந்தம் எல்லாச் சமயங்களுக்கும் தாயாக விளங்குகின்றது. 'ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும் அத்தன் ஒருவனாம் என்பது அறிந்திலர் அத்தன் ஒருவனாம் என்பது அறிந்திடின் முத்தி விளைக்கும் முதல்வனு மாமே " - திருமந்திரம். இனி 11ம் திருமுறை

'அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனும் தானே - பரனாய
தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவியவாறே விதித்த மைத்தான் - ஓவாதே
எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் - எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோர்க்குங் காண்பரிய எம்பெருமான்.'

- சேரமான்பெருமாள் நாயனார்.

'ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள' என்பதும், 'இருமுச் சமயமும் நன்றிது தீதிது என்றுரை யாளர்கள் குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே' என்பதும் திருமந்திரம். இக்காரணங்களால் பிறசமயங்களைப் பிள்ளைகள்போல மதித்து, அவ்வவற்றின் பெருமை சிறுமைகளைப் பாராட்டி வழிநடாத்திச் செல்வதுதான் தாய்மை என்பதை பல்வேறு நியாயங்களால், அருளாளர்களின் பாடல்களால் மேலும் நிரூபிக்க முடியுமாயினும் இங்கேயது நூலின் நோக்கமன்று. 'ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள' - எனும் சித்தியார் பாடலையும் அதனைத் தொடர்ந்த மூன்று பாடல்களையும் கற்க. கற்று, சைவசித்தாந்தங் கூறும் படிமுறைகளைப் பலவாறு ஆய்ந்து, அப் படிகளில் பிறசமயங்கள் எங்கெங்கே நிற்கின்றன என்பதை ஓரளவாகுதல் அறிக. பிறசமயி யென்றால் அது பிறப்பால் ஆவதென் றில்லை. பக்குவமடையாத எவரும் தத்தம் ஆன்மீக ஈடேற்றத்தில் பல்சமயப் பொருட்கூடாக ஒரு பிறப்பிலோ பல பிறப்புகளிலோ போக்குவரவு செய்கின்றனர். எனினும் சைவனாகிப் பின் அதே பிறப்பில் பிறசமயஞ் சார்ந்து பின்னோக்கிடல் படிமுறை அறியாமையின் விளைவே. அவர்களைப் பேடிகளென்பர் மணிவாசகர். ஒரே பிறப்பில் பிற சமயத்திருந்து தாமே சைவஞ்சாரல் ஏற்றப் படிமுறை.

'புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்**(ஸ்)மிருதி வழியுழன்றும்** புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற் சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்'

- சித்தியார் பா 263

இதில் **புறச்சமயமாவது, 1) புறப்புறம்** - உலோகாயதர், மற்றும் நால்வகைப் புத்தராகிய மாத்திமிகர், யோகசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகரும் ஆருகதர் என்னும் சமணருமாக அறுவர். 2) **புறம்** - தார்க்கிகர், மீமாம்சகர் (ஸ்மிருதியினர்), ஏகான்மவாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சங்கரமதத்தினர்), சாங்கியர், யோகமதத்தினர், பாஞ்சராத்திரிகள் எனும் அறுவர். **அகச்சமயம் - 1) அகப் புறம் -** பாசுபதர், மாவிரதர், காபாலர், வாமமதத்தினர், வைரவமதத்தினர், ஐக்கியவாதசைவர் எனுமறுவர். 2) **அகச்சமயத்தினர் -** பாடானவாதசைவர். பேதவாதசைவர். சிவசமவாதசைவர். ஈசுவரவிகாரவாதசைவர், சிவாத்துவித சைவர் என்றவாறாம். எல்லாமாக (6தரம்4) 24 பிரிவுகள். இவை வேதாகமங்களை முழுமையாக ஒப்புக்கொள்ளல், பகுதியாகக்கொண்டு வேறுபடல். முத்திவரைபு முதலியவற்றால் வேறாவர். விபரம் சிவஞானபோதமாபாடியம் பார்க்க. இவ்வாறு வேறுபடினும் சிவகருணை சமமாயிருந்து படிமுறையில்வைத்து அவர்களை ஆட்கொள்ளுதலே சமரசசன்மார்க்க - சித்தாந்த நெறியாம். (இவ்வறுவகை சங்கரரின் 'ஷண்மத அறுவகை யல்ல.) 'அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறாங் குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்கு அறிவினி(ல்) அருளால் மன்னி யம்மையோ டப்ப னாகிச் செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.' - சித்தியார் பா 2

1) நால்வகைச் சமயத்தில் அகச்சமயந் தவிர்ந்த ஏனை முக்கூறுகளில் தனித்தனி அறுவகைப்பட்ட சமயங்களில் நின்றுகொண்டு, அவற்றுள்ளும் பல்வேறு வகைப்பட ஆராய்ந் துணர்கின்ற அவரவர் கொண்ட முதற் பொருளாய், (குறிப்பு : சிவனின் இப்பெருங் கருணையானது நன்கு சிந்தித்து உணரப்பட வேண்டியது), 2) அவரின் வேறாகிய பாடானவாத முதலிய அகச் சமயத்தார்க்கு தொழில் வேறுபாட்டால் சிவன், சதாசிவன், மகேசன் என்னும் பெயருடைய அருவ, அருவுருவ, உருவ மெனும் தடத்தக் குறியே குறியாக உடைத்தாய், 3) சித்தாந்த சைவர்க்கு அத் தடத்தக்குறியே யன்றி வேதாகமங்களின் கருத்துக் கதீதமாய் (மேலாக) உயிர்க்குயிராய் உயிர்கட்கெல்லாம் அறிவைப் பிறப்பிக்கும் அம்மை யப்பனுமாகி எங்கனும் எக்காலமுஞ் செறிந்து வியாபமாய் நின்ற சிவனடியை தலைமேற் கொள்வாம் என்றவாறாம். குறி என்பது நோக்கு. ஒவ்வொரு சமயத்தினரும் ஒரு குறியைக்கொண்டு, அக்குறிவழி நெறிப்படுவர். அங்கிங்குப் பாரார். இது ஒரு படிமுறை. ஆயினும் அப் படிமுறையில் நின்றே, அதற்கும் மேலாக, பெரியபுராணத்துச் சாக்கியனார் எனும் புத்தர், சிவபரத்துவத்தை முன்னை வினையாலுணர்ந்து தனது இப்பிறப்பின் பிராரத்தங் கழிக்கவென காவியுடையினை மாற்றாது வாழ்ந்து சிவபதம் அடைந்தமையை பெரிய புராணத்தாலறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்' எனக்கொண்டே
'இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுற் கில்லை'என
உய்வகையாற் 'பொருள்சிவன்' என்று அருளாலே
உணர்ந்தறிந்தார்' - சேக்கிழார்.

சித்தாந்தத் திறன் பற்றி, சிவப்பிரகாசத்தின் 'நூல் நுதலிய பொருள்' கூறும் இரண்டாம் பாடல் அதியற்புதமாக சித்தாந்த வரைவு செய்கின்றது.

'புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் யுடலுயிர்க்கண் ணருக்க
னறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் **வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்'**

பதிப்பொருள் :- 1) மூவகைப் **புறச்சமயப்** பதினெண்மரும் (3 தரம் 6) பாச (ஆணவ, கன்ம, மாயாபந்த)க் கட்டுடையராதலின் பதி பசு பாசம் எனும் திரிபதார்த்த நிச்சயம் (தமிழில் இது மெய்கண்டசாத்திரங்களில் மட்டுமுள்ளது) அறியாராதலின் அவர்கள் அறிவிற்குத் தோன்றாமல் இருளிலுள்ள பொருள் போலும், 2) ஏனை **அகச்சமயத்தினர்** அறுவரும் திரிபதார்த்தமுங் கொள்வோராதலின் பாசநீக்கத்திற்கு உரியர் ஆதலின் அவர்கள் அறிவிற்கு அளவுக்கு அளவாய்த் தோன்றும் பிரகாசப் பொருளாயும், (எனினும்), 3) எல்லா நாற்கூற்றுப் சமயத்தோர்க்கும் அவரவர் கொண்ட அளவைப் பிரமாணங்கட்குத் தக்கதாய் அளவுபட்டு அந்தந்த இடமே (புவனங்களே) அவர்களுக்கு மோட்சத்தானமாய்க் கொடுப்பதாயும், 4) **சித்தாந்தமுத்தி** யெனும் பரமுத்தியில் ஒரு பொன் பல ஆபரணங்களானது போல அபேத (வேறுபாடற்ற) பொருளுமல்லவாய், இருளும் ஒளியும்போல பேத (வேறான) பொருளுமல்லவாய், சொல்லும் பொருளும் போல பேதாபேத பேதமும் அபேதமுமான) பொருளும் அல்லவாய், இங்ஙனம் முறையே கூறிய விசிட்டாத்துவிதம், துவிதாத்துவிதம், கேவலாத்துவிதங்கள் இன்றி பெரிய சிவாகமத்துணிவாகிய **சுத்தாத்துவிதப் பொருளாய்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ). **உடலும் உயிரும்** ஒற்றுமை நயத்தால் ஒன்றுபட்டும் உடல் உடலே, உயிர் உயிரேயாயினும். ஒருணவை உடலுக்கு ஊட்ட அது உயிருண்டதென்றும் உடலுண்டதென்றும் பிரிக்கப்படாமையின் உயிர் உடலேயாயும் அல்லவாயும் இருப்பதுபோலக் **கலப்பினால் ஒன்றாயும், ஆ) கண்ணொளியும் சூரியஒளியும்** தம்முள் ஒன்றுபட்டு ஒருவிடயத்தை யறியினும் வெவ்வேறாதல்போல **வேறுமாய், இ)** கண்ணொளி ஒன்றைக் காணினும் உயிர் உடனாய் நின்றால்மட்டுமே காணுமாறுபோல உயிர்க்குயிராய் **உடனாயும்** பதிப்பொருள் நின்று ஆன்மாவிற்குப் பல்லாற்றானும் உபகரிக்கும். மேலும், **அத்துவிதம்** என்பது இருபொருள் கூட்டுறவால் ஒன்றாகிநிற்கும் தன்மை. பழமுஞ் சுவையும், பண் ஓசையும் இசையோசையும் போல ஆன்மாவும் சிவமும் பிரிப்பின்றிக் கலந்திருக்கும். **இச் சைவசித்தாந்தத் திறன் இதுவரை எவராலும் மறுக்கப்படாத உண்மை.**

இனி, இவ்வாறு அவை கலந்திருக்கினும் அக்கலப்பைப் பல்வேறு படிநிலைகளில் வைத்து உணர்ந்தோரே சீவன்முத்தராவர். படிகள் சிறிதாதல் ஏறுவதற்கு இலேசாதல் போல அவற்றை நுணுகி அறிதல் ஆன்ம ஈடேற்றப் பயணத்தைச் சுலபமாக்கும். ஆதலின், ஏலவே கூறிய பத்துப் படிநிலைகள், முப்பதாவதைச் **சீர்காழிச் சிற்றம்பலநாடிகள் அருளிய துகளறுபோதத்தால்** அறியலாம். அதற்கு ஈழத்தவரான திக்கம் செல்லையா வெனும் ஈசானசிவனர் உரையெழுதியுள்ளார். அதன் **முகவுரைச் சுருக்கம் :-** ஆன்மாக்கள், சர்வசங்கார காலத்துக் **கேவலம்** என்னும் ஆணவ இருளில், சற்றேனும் அறிவொளி பெற ஆதாரமாயுள்ள உடல், மனமாதி உட்கரணம், மெய் முதலான புறக் கரணங்களெனும் தநு கரணாதிகள் யாதுமின்றித் துன்புற்றிருக்கையில், இறைவன் நள்ளிருளில் (ஆன்ம அறியாமை இருளில்) சூக்கும ஐந்தொழிலெனும் நட்டமாடி அறியாமையைச் சற்றே விலக்குவான். அந்நிலையில் அவ்வவ் வுயிரின் முன்வினைக் கேற்பவும் அவற்றின் மலபரிபாக தாரதம்மியத்தின் வழியும் நின்று தநுகரணாதிகளை வழங்குகையில் ஆன்மாக்கள் நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின், எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களாகப் பிறந்து கேவலநீங்கிச் **சகல** அவத்தை (நிலை) யடையும். அப்பிறப்புகளில் மானிடப்பிறவி மிக அரிதினு மரிதாகவே கிடைக்கப்பெறும். **அதிலும் வேதாகம வழக்கமுடைய நாட்டில் பிறத்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புண்ணிய வசத்தாலாம்.** அவ்வாறு பிறந்து தவநெறியில் நின்றொழுகும் குடியிற் பிறந்து வேற்றுமதஞ் சேராது சைவஞ் சார்ந்து அந்நெறியினின்றும் வழுவாது நிற்கும் புண்ணியம் மிக்கபேறாகும். அந்நிலையை அடைந்த ஆன்மாக்கள், (1) **அவை அறியாத வண்ணமே** சிவபுண்ணியத்தைச் செய்யுமாறு எம் இறைவனார் செய்வித்தருளி, அப்புண்ணிய விசேடத்தினாலே அதன் பின்னர் (2) அச்சிவபுண்ணியத்தை **அறிந்து செய்யுமாறு** செய்வித்தருளி அதற்பின் (3) எய்தற்குரிய அகச்சமயம் ஆறனுக்கும் பொதுவாயுள்ள **உபாயச்சரியை கிரியாயோக ஞானம்** என்னும் நான்கையும் **அறிந்து ஒழுகுமாறு** மென்மேல் நடாத்துவித் தருளியும், (4) அவ்வொழுக்க நெறிநின்றோர் அடைதற்குரிய சித்தாந்தசைவத்துட் கூறிய சிறப்பாகிய **உண்மைச் சரியை கிரியை யோகம் மூன்றினையும் முறையே ஒழுகுவித்து** அச்சிறப்பியல்பு பொருந்திய தவத்தினாலே தன் சக்திகுன்றி நீங்குவதாகிய **ஆணவ மலபரிபாகம் வரச்செய்து** அதனால் அடையத்தக்க **சத்திநிபாதத்தை விளக்கி** (5) அவ் விளக்கத்தினாலே **குருவினையுஞ் சமமமாக** அறிவிலே **ஒப்பக்** காணுமாறு செய்தருளுவார். மலபரிபாக முதலான இவை **சுத்த அவத்தையிலேயே** நிகழ்வன.

**3.5. அவத்தைகள் மூன்றாதல் :** அவத்தைகள், தநுகரணாதியற்ற **கேவலம்,** தநுகரணாதி பெற்ற **சகலம்,** தநுகரனாதிகள் நீங்கிய இடம் **சுத்தம்** என மூன்றாம். **சகலத்தில் :** கலாதி (நிவிர்த்திகலை முதலாய ஐந்து), குணாதி (சாத்வீக முதலான முக்குணங்கள்), இச்சை, ஞானம், கிரியை, உருவம், முதன்மை, போகப்பற்று, அறிதற் தொழிலுண்டாதல், ஒடுங்குதல் எனும் பத்துக் காரியங்களும் உண்டாகும். இவை கேவலத்தில் உண்டாகா. சுத்தத்தில் இவை நீங்கும். சகலத்தில், நிகழ்வதனைச் **சிவப்பிரகாசம் 37ம்** பாடல், - **'சகலாவத்தை நிகழும் முறையும் சூக்குமை வாக்கின் தொழிலும்'** எனுந் தலைப்பிற்றரும்.

'புகலுமலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை
பொருந்தியிடும் அரனருளாற் போதம் தீபம்
சகலமெலாம் உடனாய வாறு போலும்
தரும்அருளை மலம்உயிர்கள் சாராமல் மறைக்கும்
இகலிவரும் இவையுணரின் இருள் வெளியாந் தன்மை
எய்தும்இவை தன்செய்தி யிலங்கும் விந்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகர்வரிய உணர்வாகி யொளியாய் உள்ளப்
பான்மையினால் ஒருநாதம் படருந் தானே' - சிவப்பிரகாசம்

ஆணவமல மறைப்பை நீக்க சிவனருளால் சுத்தமாயா காரியமான வாக்குகளும் கலையாதி தத்துவங்களும் ஆன்மாவை வந்து பொருந்தும். தீபமானது அதைச்சேர்ந்த தண்டு, தாழி, நெய், திரியாவற்றுடனும் கூடிப் பிரகாசித்து எரிந்தாற்போல ஆன்மாவின் அறிவானது இவ் வாக்குகளோடுந் தத்துவங்களோடும் கூடி விளக்கமுறும். அவ்வாறு வாக்கு, கலை முதலியவற்றால் அறிவைத் தரும் திருவருளை ஆன்மாக்கள் அறிந்து பொருந்தாதபடி ஆணவமலம் மறைத்து நிற்கும். இப்படி மாறுபட்டுவரும் மலமாயைகளின் இயல்பை அறியுமிடத்து இருளும் ஒளியும் போன்ற தன்மையுடையனவாம். ஆன்மா அறிவைப் பொருந்தும் அம்முறையும் அம்மாயாகாரியங்களின் செயலும் என்னவெனில் மூலாதாரத்தில் விளங்கும் விந்து தத்துவத்தில் இருந்த சொலற்கரிய ஞானமாத்திரைக்கு ஏதுவாகியும் பரசரீரத்தினுள்ளாகப் பிரகாசித்து விளங்கியும் ஆன்மா அறியும் அறிவுக்கீடாக சூக்குமைவாக்குத் தோன்றி உந்தித் தானத்திற்குச் செல்லும். அது ஞானமாத்திரைக்கு ஏதுவாயும் பிரகாசமாயும் இருக்கும். இதிலிருந்து பைசந்தி. மத்திமை, வைகரி, யென்னும் வாக்குகள் தோன்றி ஆன்மா சொற்பிரபஞ்சத்தி னூடாக வினையாற்ற உதவுவதை மேலும் **சிவப்பிரகாசம்** விரிக்கின்றது. இவ்வாற்றால் ஆன்மாக்கள் உடலாதி பெற்று கருமமாற்ற முனைவது ஒரளவு விபரிக்கப்பட்டது. இவை **சகலாவத்தை நிகழ்வுகள்.**

இனி, துகளறுபோத செய்தியாகிய சுத்தாவத்தை நிகழ்வுகளை அறிய சிவப்பிரகாசம் துணையாவதனை **சுத்தாவத்தை - 'இருவினை யொப்பும் சத்திநிபாதமும்'** என்ற தலைப்பிலான 48ம் பாடல் தருகின்றது

'இனையபல பிறவிகளின் இறந்துபிறந் தருளால்
இருவினைகள் புரிந்தருந்தும் இதுசகலம் அகலா
முனம்மருவும் இருபயனும் ஒருகாலத் தருந்த
முந்துநுக ருந்துபயன் அந்தமுற வந்த
வினையும்எதிர் வினையும்முடி வினையுதவு பயனால்
நேராக நேராதல் மேவும் கால்முற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே'

மேற்கூறிய பல்வேறு யோனிகளிற் சிறைப்பட்டு மாறிமாறிப் பிறந்திறந்து நல்வினை தீவினைகளை ஆர்ச்சிப்பதும் (ஈட்டுதலும்) பாகப்பட்ட (பக்குவப்பட்டு, அநுபவிக்கப் பங்காகிய) வினைகளைப் புசிப்பதுமாய் (அனுபவிப்பதுமாய்) உழல்வதே **சகலாவத்தை.** பின்னர் **சிவசக்தி சங்கற்பத்தினாலே** (மன நிச்சயத்தால்) முன் காலங்கடந்து அநாதி பந்தமாயுள்ள இரு (நல், தீ) வினையின் காரியமாய் விட்டுநீங்குதற்கரிய **சஞ்சிதகன்மமும்,** புசிக்கின்ற முறைமைக்குப் பாகப்பட்டுச் சஞ்சிதமாகிய புண்ணியபாவத்தின் பயனாய்ப் புசித்து அழிவதாக வந்த **பிராரத்தகன்மமும்,** அந்த பிராரத்தநாசத்தில், விருப்புவெறுப்புடன் ஆற்றியதால் உற்பத்தியாகும் **ஆகாமியகன்மமும்** ஆகிய மூன்றுவகையுளும் சன்மார்க்கத்திற்கு ஏதுவாகிய சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே முடிந்து, **இருவினையொப்பு** வந்தவிடத்து, **மலபரி பாகம்** பிறந்தகாலத்து, முன் மலசக்திகளை ஏவிநின்ற **திரோதானசத்தி** காருணியத்தினாலே (கருணையினாலே) **திருவருளாய்ப் பிரகாசிக்கும்.** இதுவே **சத்திநிபாதம் அல்லது சத்தி பதிதலாம்.** சத்திநிபாதம் பொருந்தும் முறை ஆன்மாவின் பக்குவத்திற் கேற்ப மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்காகும். அவற்றுள் தீவிரதரம் பக்குவர்க்குப் பரமசிவன் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து கேவல சகலங்கள் நிகழாதபடி நிறுத்தி மலத்தை நீக்கியருளுவார். இது **சுத்தாவத்தையாம்.** சரியை கிரியா யோகங்களைச் செய்து புண்ணியப் பேறடைந்தோரே இந் நான்கு சத்திநிபாதத்திற்கும் உரியவராவர்.

### தசகாரியம் முப்பது ஆதல்
### துகளறுபோத ஈசானசிவனார் முன்னுரை ஆதாரம்

1. இருவினையொப்பு எய்தி சுத்தாவத்தையைத் தலைப்பட்ட ஆன்மா **தற்(தன்னைத்) தரிசனம் பண்ண இயலாது** மலவாசனை மயக்கால் நானே பிரமம் எனத் தன் முனைப்புற்று நிற்கும்.

2. அந்நிலையில், இதுவரை உயிர்க்குயிராய் நின்று உணர்த்திய பிரானார் மானுடச்சட்டை சாத்தி ஞானாசாரியராகவும் எழுந்தருளிவந்து, 'உன்னறிவை நீயே உணர்வா யானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலம்வரை பாசத்துடன் பொருந்தி இருந்திருக்க மாட்டாய். ஆதலின் நீரும் இரத்தமும் போல உன்னையென்றும் விட்டுநீங்காது உன்னறிவுக்கறிவாகி நிற்கும் **இறையருள்தான் உன்னையுனக்கு அறிவிக்கும்** என உணர்த்தும். உணர்த்தவே, அம் முனைப்பொழிந்து தன்னைத் தரிசித்து நிற்கும். இது **சுத்தத்தில் சாக்கிர மெய்தல்.** பூதப்பழிப்பு முதல் ஞானதரிசனம் இறுவாயாகவுள்ள 13தத்துவ அவதரங்களும் (நிலைகளும்) சாக்கிரம். இதனுள் தசகாரியங்களில் **தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபமெ**னும் நான்கும் அடங்கும். அதன் பின்னாக,

3. **(சுத்தத்தில்) சொப்பனத்தை** எய்தித் திருவருளோடு நின்று **ஐந்தொழிலும் ஆற்றுபவன் நானே** என முனைந்து நிற்கும். சொப்பனத்துப் பரைதரிசனம் முதல் பரையில் போதம் இறுவாயாக நான்கு அவதரங்களும் அடங்கும். இதில் **சிவரூபமும் ஆன்ம தரிசனமும்** ஒருங்கு நிகழ்வன.

4. அந்நிலையிலும் **ஐந்தொழிலும் அருட்செயலன்றி உன்செயலன்று எனத் தெருட்டி** அம்மயக்கையும் ஒழித்தவிடத்து மல வாசனையாலாய மயக்கமும் அறவே ஒழியச் சுத்தனாய் அருள்வழி நின்று சிவத்தைத் தரிசிக்கும். இது **சுத்தத்தில்** சுழுத்தி. இதில் சுத்தபராயோக முதல் பரையில் அதீதம் இறுவாயாக உள்ள நான்கு அவதரங்களும் அடங்குவன. இதில் **ஆன்மசுத்தியும் சிவதரிசனமும்** ஒருங்கு நிகழும். அதற்பின்.

5. இந்நிலையினின்றும் சிவத்தோடு சேர்ந்து திருவருளையுந் துறந்து ஏகமாய் இறைபணி நின்று பெறற்கரிய பேறாகிய **ஆன்மலாபத்தை ஆன்மா எய்தும். இது சுத்தத்தில் துரியம்.** இதில் சுத்த அவத்தை முதல் பரமானந்த போகம் இறுவாயாகவுள்ள ஆறு அவதரங்களும் அடங்குவன. இது **சிவயோகம்.** இனி.

6. இந்நிலையை அடைந்த ஆன்மா கேவலம் முதல் இதுவரை உடங்க - சேர இயைந்துநின்ற கைமாறு கருதாது செய்தருளிய எம்பிரானார் பெருங்கருணைத் திறத்தை அயராது நினைதொறும் நினைதொறும் எழும் அன்பால் எம்பிரான் திருவடியை யடைந்து அங்கே சிவபோகத்தில் திளைத்து என்றும் நீங்காது இன்புற்றிருக்கும். இது **சுத்தத்தில் துரியாதீதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இதில் பரமானந்தபோகம், பரமானந்தமேலீடு, பரமானந்த அவசம் (பரவசம், தன்வயப்படாமை) என்னும் மூன்றும் அடங்கும். இதுவே **சிவபோகம். இதுவே ஆன்மாக்களின் ஆதியந்தமான நிகழ்சி.** ஆக 13ம், நான்கு நான்கு ஆறு மூன்றும் (4ம், 4ம், 6ம், 3ம்) என 30 அவதரங்கள் விளக்கப்பட்டுள்ளன. அவை முறையே 4, 2, 2, 1, 1 என்ற தச (10) காரியங்களின் விரிவெனவும், மேலும் அவை முறையே சுத்தத்தில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனவுங் காட்டப்பட்டுள்ளன. **நன்றியுடன் தொகுப்பாகக் கூறுவதாயின்** கேவலத்துத் துன்புற்றும். சகலத்துப் பிறந்திறந்தும். சுத்தத்து மயக்குற்றும் ஆன்மாக்கள் நின்றவிடத்துப், பயின்றாடியும் அல்லற்பிறவி யறுப்பானாகியும், என்றும் பிரியாது உடன்நின்று கைமாறு கருதாது செய்தருளிய எம்பெருமானது கருணைத்திறம் போற்றி, இவற்றிற்கெல்லாம் ஆதாரமான குருவை மறக்காது குருவே சிவமென நினைந்து போற்றிப் பெரும்பேறெய்தல் நங்கடனாம்.

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கில் ஆங்காங்கே குறிக்கப்பட்ட தசகாரியங்களை முப்பதாக்கி, 15ஆம் மெய்கண்டசாத்திர மெனும்படியான துகளறுபோத நூல்செய்து, தன் அடியார் அறுபத்திருவருடன் மாயூரத்துப் புகைவண்டி நிலைய மேற்பால் சமாதி கொண்ட பின்னும் தனதடியர் பொருட்டு மீளத்தோன்றித் தன்னுடன் அணைத்து, சமாதியில் மறைந்தருளி, இன்றும் அந்தணப் பெருமக்களாற்றும் பூசையேற்றருளும் **சீர்காழிச் சிற்றம்பலநாடிகளது** தாள் வணங்கி, நாவலர் ஞானப்பரம்பரையில் வந்தவரும், சேர் பொன் இராமநாதனின் நண்பரும், அவர் மூலம் வாதாடி நீதிமன்றில் 'வேதாரணிய அறங்காவலர் பதவி யாழ்ப்பாண வரணி ஆதீனத்திற்கே சொந்தமானது' என நிலைநாட்டியவரும், சிவ, விசேட, நிர்வாண மெனும் மூன்று தீட்சையும் பெற்று சிவபூசை புரிந்து சிவபதமடைந்த வேளாளப் பெருமகனும், துகளறுபோத உரையாசிரியருமான **திக்கம் செல்லையா எனும் ஈசானசிவனார்** திருவடி போற்றி இன்புறுதல் நங்கடனன்றோ. இனி, துகளறுபோதம், ஒழிபுநூ லெனும் திருவருட்பயனிலுஞ் சிறப்பாக, மெய்கண்டசாத்திரங்கேட்டு முத்திபற்றி வினவினோர்க்கு முத்திநிச்சயஞ் செய்தல் மிக அபாரம். (முத்திநிச்சய மென்னும் வேறு நூலொன்று முண்டு). தசகாரியங்களை முப்பதாக்கி விரிவுபடுத்தியமை பதினான்கு மெய்கண்டசாத்திரங் கற்றோராலேயே புரியுமாதலின் அதைப் பதினைந்தாம் சாத்திரமாகக் கொள்வர் பலர். அதன் அதியுயர் விளக்கம் ஞானபாதத் தடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தி வினவுவர்க்கே யாயினும் இந்நூலில் அதன் சுருக்கத்தை மேற் தந்ததுடன், மேலும் கருத்தளவிலாகுதல் அம்முப்பது படிமுறைகளையும் பார்த்தல் அழகென்பதால் அந்நூலடைவின் மூன்றிலிருந்து முப்பத்திரண்டு வரை உள்ளபடி தரப்படுகின்றது. அம் 32ல் சில தாமாகவும் பல குருவுணர்த்தவும் உணரப்பட வேண்டியவை.

1). **பூதப்பழிப்பு** - நாலாம் பா தொட்டு பத்தாம் பா வரை. பூதங்கள் சடமென இகழ்தல்.

2) **பொறியற வுணர்தல்** - (11-13) பொறிகள் சடமாகுவதனை உணர்த்தி அவற்றைத் துறக்கும் (விட்டு நீங்கும்) வழி கூறல்

3) **அந்தக்கரண சுத்தி** - (14-15) அந்தக்கரணங்களும் சடமெனக் கண்டு அவற்றினின்று நீங்கும் உபாயங்கூறல்

4) **கலாதிஞான நிராகரணம்** - (16-17) இம்மைப் பயன்களை நுகருமாறு விபரீத ஞானத்தைப் பயக்கும் அசுத்த மாயையினின்றுந் தோன்றிய கலை, வித்தை, அராகங்களாற் தரப்படும் ஞானமும் உண்மையல்ல வாதலின் அவற்றைத் துறக்கும் உபாயங் கூறல்

5) **சுத்ததத்துவ தூடணம்** - (18-19) சுத்த தத்துவங்களாகிய சிவம், சக்தி, சாதாக்கியம் (லிங்கம்), மகேசுரம் (அம்மையப்ராய்ப் போகந்தரு மூர்த்தம்), சுத்தவித்தை (மும்மூர்த்திகள் தோன்றி அருளுமிடம்) ஆதியன பதமுத்தியையருளி பரமுத்தியைப் பயக்கும் நிட்டைக்குத் தடையாயிருந்த விடத்து அவற்றையுந் துறத்தல்

6) **தத்துவாதீதம்** - (20-21) 36 தத்துவங்களினின்றும் நீங்கிய நிலை யுணர்த்தல்

7) **சகலதரிசனம்** - (22-23) தத்துவங்களைத் தன்னின் வேறாகக் காண்டல்

8) **கேவலம்** - (24-25) மாயாமலம் நீங்கியும் ஆணவம் ஆன்ம அறிவை மறைத்து நிற்க ஆன்மாவும் அதனோடு ஒன்றுகின்றதென வியத்தல்.

9) **கேவல தரிசனம்** - (26-27) ஆணவம் செம்பிற் களிம்பு போல ஆன்மாவை மறைத்து, நீரின் நிழல்போற் தன்னையுங் காட்டாது, தன்னைக்காட்டிப் பொருளை மறைக்கும் இருளிலுங் கொடியதாயிற்று என குருவுணர்த்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10) கேவலாதீதம் -** (28-29) ஆணவம் தன்னின் வேறாயதென வுணர்தல் 11) தன்னுண்மை - (30-31) மும்மலங்களினின்றும் நீங்கி ஆன்மா தன்னைத் தனியாகக் காண்டல். இது நிகழ்ந்தது திருவருளாலே எனல் 12) சைதன்யதரிசனம் - (32-34) இச் சுத்தநிலையில் ஆன்மா தன்னைக் காண்டல். 13) ஞானதரிசனம் - (35-41) மெய்ஞ் ஞானமாகிய திருவருளை அறிதல்

**14) பரைதரிசனம் -**(42-44) பராசத்தியைத் தரிசிக்கும் முறை. அது இச்சா ஞானக் கிரியைகள் தோன்றும் இடமென குருவுணர்த்தல்

**15) பரையில் வியாத்தம் -** (45) எங்கும் வியாபகமான சூரியஒளி கண்ணொளியிலடங்கி வியாப்பியமாதல் போல பராசத்தியின் வியாபக அறிவில் ஆன்ம அறிவு அடங்கி அதுவாய் நிற்றல்.

**16) பரையில் யோகமும் போகமும் -** (46) வியாபகமான ஆகாயத்தில் வியாப்பிமாய காற்று பரந்துநிற்றல்போலக் கலந்து பரையில் அடங்கி, நீர் சலனமற்று இருப்பதுபோல ஆன்மாவும் தனக்கெனச் செயலின்றி நிற்றல் பரையோகம். அவ்வாறு அடங்கி யிருப்பதையும் தெரியாதிருத்தல் பரையில் போகம்.

**17) சுத்த பராயோகமும் முத்திச்சாக்கிரமும் -** (47-48) ஆன்மா சுத்திபெற்றுச் சிவத்தைத் தரிசித்தல். 18) சாக்கிராதீதம் - (49) தன்னை இழத்தலாம் நிலை அமையுமாறு சோர்ந்து நிற்றல்.

**19) பரையிலதீதம் -** (5051) சாக்கிராதீதத்தில் நின்ற நிலையையும் விட்டுப் பரையோடு ஒன்றாய் நிற்றல். (சுத்த பராயோகம். முத்திச் சாக்கிரம், சாக்கிராதீதம், பரையில் அதீதம் என்ற நான்கும் சுத்தாவத்தையிற் சுழுத்தியாம். 20) சுத்தாவத்தை - (52) ஆன்மா இறைவனோடு ஏகனாகி இறைபணிநின்ற மலமாயை கன்மங்களை அறவே ஒழித்து பிறவியில் மீண்டும் செல்லா நிலைடைதல். சிவஞானபோத 10ம் பா. 21) சுகரூபம் - (53-56) இது சுகரூபம் துரியம் எனவும்படும். பதைப்பற்று ஆறியிருந்து சுகசோதியைத் தரிசித்தல்.

**22) சுகாதீதம் -** (57-58) முத்தித் துரியா தீதம். சுகரூபத்தில் அவசமாய் நிற்றல். (அவசம் - பரவசம். தன்வசப்படாது பிறவசப்படல்) 23) சிவப்பேறு - சுகப்பேறு. (59-63) பரசிவத்தோடென்றும் நீங்கா நிற்றல் (24) பரமானந்த தரிசனம் - (64-68) சிவப்பேறு. பரபோகத்திலுள்ள பரமானந்தத்தைத் தரிசித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25) பரமானந்த யோகம் -** (69-70) பரமானந்தத்தோடு ஒன்றாதல். ஆனந்த வெள்ளத் தழுத்தல் என்றார் மணிவாசகர்

**26) பரமானந்த போகம் -** (71-75) 'என்னையும் இருப்ப தாக்கினன்' என மணிவாசகர் கூறியதுபோல இருத்தல் நிலையினை இரண்டாய் நின்று அனுபவித்தல். (இது, ஆயுந்தொறும் ஆயுந்தொறும் இன்பம் பயக்குந் தமிழ் தரும் ஆனந்தம் போல்வதாம்.)

**27) பரமானந்த மேலீடு** (76-78) பரமானந்த அதிகரிப்பால் யாவும் இன்பமாதல். 'சொல்லுவ தறியேன் வாழி முறையோ, தரியேன் நாயேன் தானெனைச் செய்தது தெரியேன் ஆவா செத்தேன் அடி யேற்கு அருளிய தறியேன் பருகியு மாரேன் விழுங்கியும் ஒல்ல கில்லேன் (ஆற்றமாட்டேன்) செழுந் தண் பாற்கடற் றிரைபுரை வித்து உவாக் கடல் நள்ளுநீர் (முழுநிலாக் கடல் பொங்கியெழுந்து கருணைக் கடலெனப் பெருகியென்) உள்ளகந் ததும்ப வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன், கொடியேன் னூன்றழை குரம்பை தோறும் நாயுட லகத்தே குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய அற்புத மான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது உள்ளங் கொண்டோ ருருச் செய் தாங்கெனக்கு அள்ளூ றாக்கை யமைத் தன னொள்ளிய கன்னற் கனிதேர் களிறெனக் (ஆனையுண்ட விழாங் கனிபோல உள்ளீடின்றி) கடைமுறை என்னையு மிருப்ப தாக்கின னென்னிற் கருணை வான் தேன் கலக்க அருளொடு பராவமு தாக்கினன் பிரமன்மா லறியாப் பெற்றி யோனே' - **திருவண்டப் பகுதி - மணிவாசகர்,** 'ஆஆ செத்தேன்' என்று தன்னிலையிழந்தமை கூறியவர் தன்னின்ப அனுபவத்தைக் கூற வைத்தமை நம்பொருட்டென்பதாற் போலும் இவ்வாறு கூற 'என்னையும் இருப்ப தாக்கினன் பிரமன்மால் காணாப் பெற்றியோன்' என்றார். இதற்கு சிவனே சாட்சியாக ஒப்பமிட்டார்

**28) பரமானந்த அவசம்** - (79-80) தன்செலற்று அதுவாய் அடங்கி நிற்கும் நிலை. பரமானந்தமானது சர்வலோகங்களிலும் ஆரவார மின்றிப் பரக்கும். அதில்மூழ்கி நின்செயலற்று அதை விட்டுநீங்காது உருண்டு புரண்டு இன்புற்றிருவெனல். (அவசம்-பரவசம், தன் வயப் படாமை, இங்கு சிவவயப்படல்)

**29) அணுவகை-** (81)மூவகை ஆன்மாக்களுக்கு இறைவன் அருளும்வகை யுணர்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30) பஞ்சாக்கிர தரிசனம் -** (82) இது பாடலினாற் தரப்படும்

'அஞ்செழுத்தும் அண்ணல் அருள் ஆன்மாத் திரோத மலம்
மிஞ்சி நமத் துரந்து மெய்யருள் வாத் - தஞ்சச்
சிகாரத்தில் யவ்வைவிடும் தீதுஇலா இன்பப்
புகாரில் புகுந்து அருந்தப் போய்' - துகளறு போதம்.

பொருள்:- 'வ' என்ற அருளே 'ய' என்ற ஆன்மாவைச் 'சி' என்ற இறையிற் சேர்த்து வாழ்விக்கும். அதுவே 'ந', 'ம' என்பவைகளை நீக்கும். **விளக்கம்** : குரு உணர்த்தியவழி நீ முத்திகாமியாயின் 'நம' வெனத்தொடங்காது 'சிவ' எனத்தொடங்கும் 'சிவயநம' ஓதிப் பின் 'நம'வையும்விடு. 'நமசிவாய' இறையுருவமாம். 'சிவாயநம' முத்திபஞ்சாக்கரமாம். ('வா', 'சி' அருளி, 'ய' வை வாழ் விக்கும் மற்றதுவே ஆசில் உருவமுமாம் அங்கு. திருவருட்பயன்.)

**குறிப்பு -** காரியம் 5ல் தூடணம் என்பது பழிப்பு. சுத்த தத்துவத்தை நோக்கத் தான் கீழ்மைப்படுவதை யுணரல். பா82 வரை 30 படிகள் அடங்கினமை காட்டப்பட்டது. **இனி, பா100 வரை சுருக்கமாக,** குருத்துதி-பா83, சீடவிலக்கணம்- 84, முத்தன் (குருவுபதேசம் நீங்கின்) முத்தியின்மை கூறல்- 85, 'அன்றே அருள் அளித்துச் சோகமெனப் பாவிக்கச் சொன்ன' குருவழிபாடே பொருளெனல் (குரு வேண்டும்போதெல்லாம் தாகந் தணிப்பர்)- 86, திருமேனியருமை கூறல் **('அன்றுமுத லாகவே ஆருயிர்கட் காருயி ராய், நின்றருளும் தம்பிரான் நீங்காமல் - என்றுங், கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ தாமே, குருவாய் அருளாமற் கூறு')** -87, குருவே சிவமென்றல்- 88, குருபணி செய்வாரை வழிபடுதல்- 89, யோகம்- (90-92), கிரியை- (93-96), சரியை- (97-100)

இனி துகளறுபோதம் முப்பது அவதரங்களும் முன்கண்ட **உண்மை நெறிவிளக்கம் ஆறுபாடலிலும் தசகாரியமாய் அடங்கும் வகையாவது :-**

1) பூதப்பழிப்பு முதல் சகலதரிசனமீறான ஏழும் **முதற்பாட்டினுள் (தத்துவரூபம், தரிசனம், சுத்தி)** அடங்குவன. 2) கேவலமுதல் தன்னுண்மையீறான நான்கும் 'பாயிருணீங்கினபின் தானென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானந்தனைக் காண்டல் **ஆன்மரூபம்'** என்பதனுள் அடங்கும். 3) சைதன்ய **(ஆன்ம) தரிசனம்,** ஞான**(சிவ) தரிசன** மிரண்டும் 'பாச வடிவை விட்டு ஞானமே வடிவாம் நீயும் நின்செய லொன் றின்றி நிற்றல்' என்பதனுள் அடங்கும். 4) பரைதரிசன முதல் சிவப்பேறு ஈறான பன்னிரண்டும் 'போய் இவன் தன்மை கெட்டு அவன் தன்மையாய்' என்பதனுளடங்கும். 5) பரமானந்த தரிசனம் பரமானந்தயோக மிரண்டும் 'பொருளிற் போய் அங்குத் தோன்றா தாய் விடில்' என்பதனுளடங்கும். ஆக **இரண்டாம் பாட்டில்** 20 அவதரங்களும் அடங்கும். 6) **சிவரூபம், சிவதரிசனம், சிவயோக** மென்பனவும் **இரண்டாம் பாட்டின் ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி**யி லடங்கும். 7) ஆறாம் பாட்டில் பரமானந்த **(சிவ) போகம்,** பரமானந்த மேலீடு, பரமானந்த அவசமாகிய மூன்றும் அடங்கும். இங்ஙனமாக ஆறு பாட்டாலும் பாச அவதரம் 7உம், பசுவவதரம் 15உம், பதியவதரம் 8உம் என 30 அவதரமுந் தசகாரியத்துள் அடக்கிக் கூறியமை காண்க. (குறிப்பு - இவ்வடக்க முறையில் உண்மைநெறிவிளக்க 1ம், 2ம், 6ம் பாடல்களே தசகாரியங்களை 30 அவதரங்களுக்குள் அடக்க எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும், சுத்தத்தில்- முத்தியிற் சாக்கிர முதலாம் ஐந்து நிலைகளும் இம் முப்பதிலும் அடங்குமாறு:

1) 18- சுத்தபராயோகம், 19- சுத்தபராபோகம் - முத்திசாக்கிரம்,
2) 20- சாக்கிராதீதம் - சொப்பனம்.
3) 21 பரையிலதீதம் - சுழுத்தி
4) 22- சுத்தாவத்தை, 23- சகசொரூபம் - துரியம்
5) 24- சுகாதீதம் - துரியாதீதம்.

ஆக. முத்தி வகையில் 24. இனி. மாணவன் கேட்டுக்கொண்டபடி நாலாம் துரிய அவத்தையின் விரிவே 25- சுகப்பேறு தொடக்கம் 30ம்- பரமானந்த அவசம் ஈறான 6 அவதரங்களுமாம்.

உண்மைநெறி விளக்க ஆறுபாடல்களிலும் தசகாரியங்கள் முன்கண்டவாறுள்ளன. தசகாரியம் பற்றி இதிற் காட்டப்பட்ட சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், தக்ஷிணகைலாய புராணம், துகளறுபோதம், திருவண்டப்பகுதி, சித்தாந்த விளக்கப்படம் என்பன சற்றே வித்தியாசமாக ஆனால் பொருள் முரணின்றி இக்காரியங்களை விபரிக்கின்றன. இது, 'சொல்லுவ தறியேன் வாழி', 'தோற்றிய தோற்றம் போற்றி'' என்றபடியும் 'ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பான் புகிலளவில்லைக் கிழக்க வேண்டாம் ' என்றபடியும் பரமானந்த இன்பசுகம், அதன் படிமுறைகள் என்பன நன்கு வரைவுட் படுத்தப்படக் கூடியனவல்ல. வரைவுட் படுத்தியோர் தத்தமது அனுபவத்திற்கேற்ப நம்பொருட்டுப் புகன்றுள்ளன ரென்பதே தகும். படிமுறைவிரிவு சக்தியைத் திரோத (அபர), பர, இச்சா, ஞான, கிரியா என விரிப்பதாலாயின. படிமுறையிலன்றி உணர்ச்சிபூர்வமாகக் கண்ட மணிவாசகரும் படிகளில் வைத்துக் கண்ட உண்மைநெறி விளக்கத்தினரும் சிவச்சார்பிலேயே புகன்றனர். அருட்சக்தியைக் குரு என்றளவில் வைத்துக் கூறினர்.

3.6. தக்ஷிணகைலாய புராணத்தில் பிரமாவின் சிவபூசை (யாழ்ப்பாணப் புலோலியூர் பொன்னையா வைத்திலிங்க தேசிகன் வடமொழி மச்சேந்தியபுராண தமிழ் மொழிபெயர்ப்பை வளமுற 1916ல் பதிப்பித்த) அர்ச்சனாவிதிச் சருக்கத்தில் வருகின்றது. ஆசனம் முதற் சிவயோகம் ஈறாக விபரிக்கும் **பாக்கள் சந்தி பிரியாது மூல வடிவிற் தரப்படுகின்றன. இவை சற்றே கடின பழைய பாநடையில் இருப்பினும் இதில் அதன் முக்கியபதிவு கருதித் தரப்படுகின்றது.** இயன்றவரை வேண்டிய இடங்களில் விளக்கந் தரப்படுகிறது. ஏனையிடங்களிலும் பிராணாயாமம், தசகாரியங்கள் பற்றித் தரப்பட்டதால் அவற்றுடன் இணைத்துப் பொருள்கொள்க. முதலிற் பிராணாயாமத்திற்கு வசதியான **ஆசனம் பற்றியது,**

19) 'என்றரன்றிருமுன்னரிசைத்துப்பின், றுன்னு**மாசனந்**தோன்றவிருந்தயன்,
மின்றுலங்கிய**மேனிநிமிர்ந்து**சீ, ரொன்றுசானுவினுட்பதம்வைத்தனன்'.

20) 'வைத்தகண்டுளைத்துண்டம்வயங்கிட, முத்தநன்னகை**மெல்லிதழ்மூடிட,**
வத்தமத்திமவங்குலிநாசிமீ, துய்த்தருஞ்சிவமந்திரமுன்னினான்.'

பா20ன் விளக்கம்:- சானு - முழந்தாழ், பதம் - பாதம், துளைத்துண்டம் வயங்கிட - துளையுடைய மூக்குநுனியைப் பார்த்தல், அங்குலி - நெற்றிப் பொட்டு.

**பிராணாயாமம், கரநியாசம் (பா21,22)**

21) 'உன்னுநன்மைபிராணனொடுட்புகப், பன்னுபாவம்பரன்றனோடேகிட
வின்னநாசியியற்றிப் பொருமினன், கன்னமீதுமுக்காற்கரம்வைத்தரோ'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:- பிராணனை உள்ளிழுக்கையில் ஆறாதார அதிதெய்வங்களை உன்னும் நல்லெண்ணம் மேலிடவும், பரன் வீற்றுள்ள சகஸ்ரதளத்தை நோக்கி ஆன்மா ஒன்றுகையில் அதன் பாவம் பறிந்தோடவும் பூரக, கும்பக, இரேசகங்களைச் செய்து மந்திர சகிதம் வலக்காதை மூடினான்.

22) 'கரத்துடன் கரந்தைவரக்காட்சியா,'லுரைத்தவங்குலி யொன்றுடனொன்றுறப், பரத்துளீசர்பதினொருமந்திரம், நிரைத்தகை யினியாசமுடித்தனன்.' (குரு நேரிலுணர்த்தியவாறு கரநியாசஞ் செய்தனன்) தத்துவதரிசனம். அங்கநியாசம் தத்துவ தரிசனமாம். (பா 23, 24)

23) 'முடியின்மிக்கமுகத்தினிநெஞ்சினின், வடுவினாபியிற்சானுவின் மற்றுள, வடைவினங்கநியாசமமைத்தபின், உடலினுட்படுமுண்மை யுணர்ந்தனன்.' விளக்கம் :- சானு - முழந்தாழ். அடைவின் - முறையாக. அங்கநியாசஞ் செய்து உடளுள் இறையிருப்ப துணர்ந்தான்.

24) 'தன்னுரந்தருசானுவிநாபியின், மின்னிலங்குமிடற்றினிநெற்றியிற் சென்னிமீதிற்செறிபடலந் தெறப், பன்னுபாசுபதத்தையுணர்த்தினான்.' விளக்கம் :- உரந்தருசானு - தோள், செறிபடலந்தெற - நாபி, தோள், மிடறு (அடிநா), நெற்றி, சென்னியாகிய இடங்களிற் செறிந்துள்ள (தத்துவ) அடுக்குகள் நெரிய, (அவை ஆன்மப்பிடியைத் தளர்க்க) முதல்வன் திருவடியைச் சென்னிமேற் காண இருத்தினான். பாசுபதம் - பசுபதி, சிவாஸ்திரம். (சிவகணை ஆறாதாரங்களைத் துளைத்து குண்டலியாகிய சிவசத்தியை மேலேற்றியது என்க.)

தத்துவசுத்தி (பா25) (பிராணாயாமம், ஜீவரக்ஷை, பின் பூதசுத்தி) குறிப்பு : தத்துவ நியாசத்தில் பிருதிவி முதல் நாதமீறாயுள்ள 36 தத்துவங்களை அவற்றின் மந்திரத்தால் திவ்ய முத்திரையால் மூர்த்தியின் சப்த தாதுக்கள் ஐந்தில் தோல்- வர்ணம், இரத்தம்- மந்திரம் தவிர்ந்த எலும்பு, மச்சை - மூளை, சுவேதை - வியர்வை, நிணம் - கொழுப்பு, இறைச்சி யென்பவற்றில் நியசிக்கப்படும். அண்டம், பிண்டம், லிங்கம் யாவும் 36 தத்துவங்களை உடையதால் மூர்த்திக்குக் கூறிய சப்த தாதுக்களில் ஐந்தும் உடலிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால் அவற்றைச் சுத்தியாக்கல் - அவற்றினின்றும் ஆன்மாவை விலத்தல்.

25) 'உணங்குமண்புனறீவளியொண்விசும், பிணங்குமேனியுளேகபுருஷனை, யணங்கிலா வெளிக்கப்புறத்தப்புற, மணங்கொள்காலுடன் வாங்கியிருத்தினான்.' விளக்கம் :- இது ஜீவரட்சை- பஞ்சபூதங்களிற் பொருந்திய ஏகபுருடனான சீவான்மாவை, உருவமற்ற ஆகாச வெளிக்கு அப்புறத் தப்புறமான பிரமரந்திரத்தின் மேற் துவாதசாந்தம் வரை மணமுடைய பிராணவாயுவுடன் ஏற்றி அங்குறைகின்ற பரசிவத்துடன் இருத்தினான். பூதவுடல் சுத்தியாகி, சிவதநுவாகும் வரை ஆன்மாவை அதனின் நீக்கிச் சிவத்தினிடங் காப்பாக ஒப்புவித்தல்.

பூதசுத்தி - (பா26,27) (இச் செய்யுளின் முறையைத் தத்துவப்பிரகாசம் கிரியையிற் கிரியை 61ம் பா விரித்துக் கூறும். எமது இந்நூலில் பூதசுத்தி (6.2.4 ல்) விளக்கத்தைப் பயின்றபின் இப் பாவினாலும் அதனைப் பயிலலாம். பூதசுத்தியில் ஜீவரக்ஷணம், பிராணாயாமம், சூக்கும, தூலதேகசுத்தி, அமிர்தப்பிலாவணம். ஆத்மஸ்தாபனம் என்பனவும் நிகழ்ந்தபின் அந்தர்யாகம் நிகழும். (6.2.3, 6.2.4 பார்)

26) 'இருத்திநாபியின்கீணின்றிலங்கழல், திருத்துகாலுடன்சேரவெழுப்பியு ளுருத்தபோதிலுடலமனற்படும், புரிக்குநேரெனப்போதனிருந்தனன்.' விளக்கம்: இலங்குஅழல், திருத்துகால், அனற்படும் புரி என்பன முறையே உதராக்கினி (குண்டலினி சக்தி), வெப்பதட்ப குணங்களற்ற வாயு, அக்கினிக்கண் என்னும் நெற்றிப்பொட்டு.

27) 'இருந்துவானத்திலங்கிதழாயிரம், விரிந்தபங்கயமீதனல்வீசலுஞ் சொரிந்துவீழமுதத்துளி தோய்தலாற், றெரிந்துமேனிசிவதனுவாக்கினன்' விளக்கம்:- இதழாயிரம்விரிந்தபங்கயம் - பராசக்தி வீற்றிருக்குஞ் சகஸ்திரதள கமலம், 'ஓம் ஹௌம் சக்தயே வௌஷட்' என மந்திரிப்பதால் சக்தியினின்றும் பெருகும் அமிர்த தாரகையில் முழுகி சரீரம் தூய்மை யாயிற்றென்க. சிவதனு - திவ்விய தேகம். நின்மலசுழுத்தி ( பா 28,29,30), (விரிவு வாயுசங்கிதை, தத்துவப்பிரகாசம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28) 'ஆக்குபன்னிரண்டங்குலத்தப்புறம், போக்குவானிற்புறத்திடுமாவியை, நீக்கிமீண்டொருநெஞ்செனுமெட்டிதழ், வீக்குபங்கயமீதிலிருத்தினான்.'
விளக்கம் :- முன்னர் ஜீவரக்ஷை செய்ததாற் தூய்தான ஆன்மாவை சிவனிடமிருந்து மீட்டு நெஞ்சகத்து எட்டிதழ்க் கமலத்திற் செலுத்தினான்.

29) 'இரும்பினிட்டவிரசகுளிகையாற், றிரும்பவங்கதுசெம்பொனதாவபோ, லரும்புசீவனறி வொடணைந்தபின், றுரும்பிடாவிளக்கிற்றுளங்கினான்.
விளக்கம் :- இரசவாதி இரும்பை ரசமிட்டுப் பொன்னாக்குவது போல (ஆணவத்தால் அறிவு சுருங்கியிருந்த சீவன் அமிர்தத்துளியாற் தூய்தாகியதால் அதனறிவு விரிந்து) ஆறாதாரங்களி லொன்றான இருதய அதிதெய்வமான அனாகத மூர்த்தியிலணைந்து தூ ண்டாமணி விளக்காயினன்.

30) 'நாலுமாறுநயந்தருபத்துமே, லேலுமாறிரண்டெண்ணிரண்டோரிரண், டாலமுண்ட வற்கன்புறுமெல்லிதட், கோலமண்டபங்கண்டுகுலவினான்.
விளக்கம் :- தாமரையிதழ் : 4 - மூலாதாரம், 6 - சுவாதிட்டானம், 10 - மணிபூரகம், 12 - அநாகதம், 16 - விசுத்தி, ஒரிரண்டு - ஆக்ஞை இவை ஆதார சந்நிதி முறையாம். எண்கள் தாமரை இதழ்களைக் குறிக்கும். இவற்றில் திருநீலகண்டனுக்கு அன்பாய் மேற்கண்ட எண்களாலமைந்த ஆதாரகமலங்களின் இதழ்களில் தெய்வமண்டபங்கண்டு மகிழ்ந்தனன். அந்தர்யாகக் கிரியை (பா31)

31) 'குலாவுமைம்பதொடொன்றெனக்கூறிய, நிலாவுமக்கரமேவுநியசமுங், கலாநியாச முஞ்செய்திடுகாட்சியால், மலாதிதீபத்திருளின்மருண்டவே.'
விளக்கம்:- அக்கரநியாசம் - மாதிருகாநியாசம். அது: 'அம்' முதற் பஞ்சாக்கரஞ் சேர்த்து நியசித்தல். கலாநியாசம் - கலைகள் 38ற்கும் பஞ்சாக்கரஞ் சேர்த்து நியசித்தல். மாதிருகா என்பது அகர முதலான தமிழ் நெடுங்கணக்குப் போல ஆறத்து வாவில் வரும் வன்ன - எழுத்து - ஆத்துவாவாகிய வடமொழி அகரமுதல் 51 அட்சரங்கள். இவை உலக மொழிகளுக்கே ஆதாரமாய் உடலின் பல்வேறு பாகங்களின் அதிர்வாக்கத்தால் ஆனவை. மூர்த்திக்குப்போல உடலிலும் நியசிக்கப்படும். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியசித்தலால் மலங்களானவை ஒளிகண்ட இருள்போல் ஆயின. கிரியையில் ஞானம் (பா32) (வித்யாதேகம் - ஞானமய தேகம்)

32) 'உண்டெனும்பிரமங்களொரைந்தினாற், றெண்டபங்கியுஞ் செய்துவலக்கரத், தண்டர்நாயகற்காசனமிட்டபின், முண்டகத்தலை வாசலை மூடினான்.' விளக்கம் :- பிரமங்களைந்து - பஞ்சப்பிரம மந்திரங்கள். தெண்டபங்கி - வித்யாதேகம் வருவித்தல். என்னை (இது ஆதார நூலின் அடிக்குறிப்பு. இது சிவனையென்க) இலிங்கத்தின் மேல் அக்கினி ஸ்தம்பமாகத் தியானித்து, ஓம் ஹாம் வித்யாதேகாயநம வென்று சாத்துதல். குமாரசாமிக்குருக்களின் 'சிவபூசை விளக்கம்' கூறும் வித்தியாதேக நியாசம்.

**வித்தியாதேக நியாசம் :-** சிவபெருமான், பிருதிவி தத்துவம் முதல் சிவதத்துவாந்தமான மந்திர சிங்காசனத்தின் மீது ஐந்து திருமுகங்களும் பதினைந்து திருக்கண்களும் பத்துத் திருக்கரங்களும் இரண்டு திருவடிகளும் உடையவராய் முப்பத்திரண்டு இலக்ஷணங் கள் அமைந்தவராய் வீற்றிருந்தருளுவர். புஸ்பங்களினால் அஞ்சலியை நிறைத்து இருதயதானத்தில் வைத்துக்கொண்டு, 'உச்சிமுக மீசான..', 'திருவுருவந் தெளி பளிங்கு..' (6.2.10ல்) என்று, சத்தி மாத்திரத்தாற் சகளீகரித் திருப்பவராயிருக்கிற பரமேசுவரனை மூர்த்தியினிடத்தில் நினைந்து ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேகாய நம என்றுச்சரித்து அப் புஸ்பாஞ்சலியைப் பிரமரந்திரம் வரையும் உயர்த்திக்கொண்டு போய் அவ்விடத்தினின்றும் அவ்வித்தியாதேகம் மின்னிறமுடையதாகித் தனது புஷ்பாஞ்சலியினுள்ளே வந்ததாகத் தியானித்து இருதயத்தானம்வரை மெல்லென இறக்கிக்கொண்டு வந்து சிவலிங்காகாரத்தைப் பாவியாது விடுத்து மேற்சொல்லிய ஐந்துமுக முதலியவற்றையுடைய வித்தியாதேக பரமேசுவரனையே பாவித்து சிவலிங்கத்தினது நெடுமையான மூர்த்தியிலே நியாசஞ் செய்க. ஈசானமுதலிய ஐந்து முகங்களிலும் நடுவிரல் மூன்றினாலும் ஓம் ஹாம் நேத்ரோப்யோ நம என்று நியசிக்க.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவரூபம்** (பா33)

33) 'மூடினானிருகண்ணைமுகிழ்த்துளே. நாடினான்சிவஞானவிழிச்சுடர்,
வீடினான்வினையாவும்விருப்புறக், கூடினானரன்குஞ்சிதபாதமே'

**சிவயோகம்** (பா34)

34) 'பாதியாமதியார்தம்பதியினிற், சோதியார்பசுமேயத்தொடர்ந்தபின் வாதியாரிடுபாதம்வருதலா, லாதியார்பசுவாகத்திகழுவான்.' **விளக்கம்** :- பாதியா(ம்)மதியார் - பிறைசூடி. பதி - தகராலயம், தகர் - மேட்டுநிலம் - இதிற் தலையுச்சி. சோதியார்பசு - அதனொளியமைந்த ஆன்மா, மேயத்தொடர்தல் - தகுதியாக அறிவின் பின்தொடர்ந்து லலாடத்தான தியானத்திருத்தல், வாதியாரிடும் - ஆணவமலநீக்க ரசவாதியான பரசிவமமைந்த, பாதம் வருதல் - சத்திநிபாதம் வரல், ஆதியார்பசு - தனக்கென வியஞ்சக (அடையாள)மின்றி, அறிவிக்க அறியும் ஆதிமுத்தன் (பக்குவகாலத்தில் முத்தியெய்திய ஆன்மா). சிவன் அநாதி(யே)முத்தன்.

**குறிப்பு** - இது உடலிலாகும் சிவயோகம் ஆதலின் குண்டலியெழுப்புதல், பிராணாயாமம் என்பவற்றாற் சாதித்த உச்சிமேற் காணும் ஒளிபற்றியது என்பதால், அதற்கேற்பப் பொருள்கொள்ளின் மதியார்தம்பதி யென்பது நெஞ்சகத்துச் சூரிய மண்டலமேலுள்ள சந்திரமண்டலமென்க. பிறைசூடியின் இடமுமாம். அதுவும் அட்டமாமூர்த்தமாம். அண்டமும் பிண்டமும் லிங்கமும் ஒன்றே). இப்பாடல் பூதசுத்தியில் ஆன்மாவை சகஸ்ரதளச் சிவனிடம் ஒப்படைத்து தூலவுடலைத் தூய்தாக்கியபின் (அடுத்தடுத்த பாடல்களால்) சிவனிடமிருந்ததாற் தூய்தான ஆன்மாவை மீள அழைத்து பூசையைத் தொடங்கியமை கூறல். (6.2.4, 6.2.5 பார்)

**சிவயோகம்** (பா35,36)

35) 'கழுவுநீரிற்கலந்திடுமுப்பென, வொழுகுபாலுடனொண்புனல்புக்கென, வெழுதுமோவியமென்னவிருந்துதன், வழுவிலாவிபரத்தில் வணங்கினன்.' **விளக்கம்** : இருத்தல் - சிவோகம்பாவனை செய்திருத்தல். பரம் - ஆனந்தவடிவின் திருவடி. இது உப்பானது கழுவப்படும் நீரிற்கலந்து நீராகும் சிவாத்துவித தனைமறந்தநிலை.

36) 'வணங்குவானும்வடிவுமில்லாதரு, விணங்குநுண்பரமாணுவிலெய்திய, வணங்கிலாவியைமீளவழைத்தன, னுணங்குநீண்மடையூர்புன லொப்பவே.' **விளக்கம்** :- உச்சிமேற் சிவத்துடன் இன்புற்றிருந்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிலைநீங்கி, மீள ஆன்மாவை பள்ளம்பாய் நீர்போல இருதயத்தில் விரைந்து பதித்தல்.

37) 'வேதியன்சிவன்மெல்லடிமேல்விடுஞ், சோதிமீளவிழித்துச்சுடர்முகப், போதிநோக்கிவினையிருள்போக்கியங், காதிசூர்யவர்ச்சனை பண்ணினான்.' **விளக்கம்** :- இரசவாதியான சிவனால் பொன்மயமெனும் ஒளிவடிவான சீவான்மா. தனது சிவோக (மௌன) பாவனை நீங்கி விழித்து வினைநீங்கி சிவபூசையில் முதலாவதான சிவசூர்யார்ச்சனை பண்ணத் தொடங்கினான். (விபரம் அந்நூலில்.)

குறிப்பு - 9.2இல் எழில் ஞானபூசை பார்க்க









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 4.

# பூசை அறிமுகம்

**4.1 சிவபூசைச் சிறப்பு -** சிவனின் வரதகரத்தில் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒப்புவிப்பது சிவபூசை. இதில் மந்திரம், கிரியை, பாவனைகள் மனம் ஒத்துச் செய்யப்படும். **விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு, மலர், காய், கனி போல்வ தன்றோ பராபரமே'** - தாயுமானவர். **சித்தாந்தம்** : குருவுணர்த்த உணர்ந்த உயிர் பாசத்தோடு அத்துவிதப் பட்டுநின்ற தன் சிறுமையையும், தன் உண்மைத் தன்மையாகிய சிவபுத்திரன் என்னும் பெருமையினை உணர்த்திய சிவனின் பெருங்கருணையையும் உணர்ந்து, இதுவரை தனக்கு **'ஆடி மீள்கென'** உள்நின்று உணர்த்திய சிவமுதலே இன்று தன் பூர்வபுண்ணியத்தால் குருவாக முற்பட்டு உணர்த்திற்று என நன்றிப் பெருக்குடன் நினைதொறும் நினைதொறும் அன்பு மேம்பட அவனைத் தன் உடலுள்ளவரை சலம் பூவொடு முறைப்படி ஆராதிக்க விளைகின்றது. விசேடதீக்கை இதற்கு வாயிலாகவே குருகாட்டிய வழியில் பத்ததிகளை ஆதாரமாக்கி தன்னியல்புக்கேற்ப சுருக்கியோ விரித்தோ பூசையை நிகழ்த்துகின்றது. சரியையினை முதற்தீக்கை பெற்று நிகழ்த்திய உயிர் கிரியாயோகங்களை இரண்டாம் (விசேட) தீக்கையாற் புரிகின்றது. கிரியையெனும் பூசையின் முதிர்வு தானாகவே அவ்வுயிரை யோகத்திற் சேர்க்கும். இதற்கு கிரியையில் வரும் ஆசனம், பிராணாயாமம், பஞ்சசுத்தி, சிவோகம்பாவனை முதலிய செயல்கள் உதவியாயிருக்கும். (பின்னர் விளக்குதும்). **'சிவபூசை செய்யுமுன் மற்றொன்றும் செய்யேல்.'** - சைவசமயநெறி. சனன, மரண செளசங் களிற் சிவபூசையினை விடலாகாது. 'சிவாயநம' வெனச்செபித்து நீராட ஆசெளசம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் க்ஷண - தற்காலிக லிங்கமாக சந்தன, அரிசிமா, திருநீறு, ஆற்றுமணண், அன்னம் உருத்திராக்கம், கூர்ச்சம், கோமயம் என்பவற்றில் ஒன்றுகொண்டு, வழக்கப்படி லிங்கபூசை செய்யலாம். பூசைநிறைவில் சந்தனமாயின் நெஞ்சிற் பூசியும், உருத்திராக்கமாயின் கழுவியும். ஏனையவற்றைச் சேகரித்தபின் அதை ஆற்றிலோ சமுத்திரத்திலோ விடலாம். நிரந்தர இஸ்டலிங்க (உடையார்) பூசை செய்பவர் ஆசௌசம் உடையவராயின் தாம் மண்டபத்திற் புறத்தே நின்று தகுதிவாய்ந்த பிறரையோ குருவையோகொண்டு செய்வித்துத் தாம் புஷ்பாஞ்சலி செய்யலாம். (சிவபூசை விளக்கம்) அதேபோல வியாதியுடைய காலங்களிலும் ஒத்தபிறரைக் கொண்டு செய்வித்துத் தாம் அந்தர்யாகம் செய்யலாம். இஸ்டலிங்கம் தொலைந்தால் அந்தர்யாகம் நாற்பது நாட் செய்து பால் பழத்துடன். விரதங்காத்து கிடைக்கப் பெறாவிடின் குருமூலம் புதிதாகப் பெற்றுத் தொடர்க. கிடைப்பின் அதனையும் சேர்த்து மூன்றாக (இரண்டு தகாது) வைத்துப் பூசிக்குக.

'போக மோக்ஷங்களை அடைய இச்சிக்கின்ற அடியவர்கள் சிவாகம நெறிபற்றியே ஆன்மார்த்த பூசை, ஆலய பரார்த்தபூசை முதலியனவும் செய்தல்வேண்டும். இவைகள் வெறெந்த நூலிலும் விதிக்கப்பட்டில.' - சிவபூசை விளக்கம். இதிலிருந்து அறிவது இக, பர வாழ்விரண்டிற்கும் சிவாகமத்தை (சித்தாந்தத்தை) அறிமுறையாயும், சிவபூசையை செய்முறையாயும் விளக்கத்துடன் செய்யாவிடில் அப்பூசைப் பயனாய இகபர பேறுகள் கிட்டாதென்பதாம்.

**உதாரணம்1) பெரியபுராணம் :- 'வெள்ளிமால் வரை தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய உள்ளவாறு கேட்டருளினாள் உலகை ஆளுடையாள்'. பின்னர், 'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை எனவுரைத்தருள அண்ணலார்தமை அர்ச்சனை புரியஆதரித்தாள் பெண்ணின் நல்லவ ளாயின பெருந் தவக் கொழுந்து.'**

**2) சிவஞானசுவாமிகள் - 'இருண்மலத்து மிக்குஞ் சிவாகம முறையிணீரிரு பாதமு மனுட்டித் தருள்பெறுமாதி சைவர்களாதி அவாந்தரசை வரீறானோர் மருவிவாழ்' புரிசைக்கம்பம்.** ஆன்மார்த்த பூசை செய்யாது பரார்த்த பூசை செய்தவர்கள் பூசையின் பயனை இழப்பதுமன்றி நரகத் துன்பமடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3) சிவதருமம், காந்தம் செப்புவன :- 'சிவபூசை செய்யாதவன் உண்ணுமுணவு புழுவும், பிணமுமாம். பான நீரானது சிறுநீராம். அவன் சிவார்ச்சனையினின்றும் நீங்கிய முப்புரத் தவுணர் போலவும் தக்கனைப் போலவுந் தண்டிக்கப்படுவான். அவன் மேற் குலத்திற் பிறந்தோனாயினும் சிவபூசை செய்யும் அன்பர்கள் அவனைத் தீண்டினும், நினைக்கினும், காண்கினும் அவன் பற்றிப் பேசினும் பாவமாம்.'**

**4) ஆன்மார்த்தபூசை மகாத்மியம், சூஷ்மம், புராண, இதிகாசங்கள் :-** ஆன்மார்த்த பூசையை மனவுறுதியுடன் செய்தவர்கள் பிரமகத்தி முதலிய பாவங்களையும் (இராவண சங்காரத்தின்பின் இராமர் சிவபூசை), பகைகளையும் நீங்குவார்கள். மூவுலக ஐசுவரியங்களையும், பல்வகைத் தானங்கள் யாகங்களாலெய்தும் பலன்களையும், வெற்றி, செல்வம். கீர்த்தி ஆரோக்கியம் என்பனவும் பெறுவர். ஆணவமல நீக்கத்தினால் மோட்சமும் அடைவர்.

**5) சூதசங்கிதை :-'இத்தகைய சிவபூசை யியற்று னரைப் பணிவோரும் ஏற்றுவோருஞ் சித்தமுற நினைவோரும் மேலாய சிவலோகஞ் சேர்ந்து வாழ்வர் அத்தனுரைத் தருளிய நல்லாரணமா கமமிவ்வா றறையாநிற்கும் உத்தமமா முனிவீர்கா ளிதனா லுண்டாகாத தொன்று மின்றே'.**

**6) சிவதருமோத்திரம் :- அ). அணு (உயிர்) பக்க** பிரமனையும் நாராயணனையும் கொள்ளாது **சம்புபக்கத்**தாராகிய பிரமனையும் நாராயணனையும் அரனோடு சேர்த்து மும்மூர்த்திகளையும் ஒருகடவுளாகக் கருதி மேலான சிவபெருமானை அன்போடு ஒன்பது நாட்கள் தொடர்ச்சியாக மலர்தூவி வணங்கினால் அவர் **வைகுந்தப்** பேறுபெறுவர். **ஆ)** இவ்வைகுந்தத்தின்மேல் சிவலோகம் உண்டு. அதில் தனக்கு யாரும் நிகரில்லாத சிவன் வீற்றிருப்பார். அவரை மன ஒருமையோடு பூசைசெய்து வணங்கிய சிவவிரதிகள் **சிவ லோகத்தை** யடைந்து, இன்னதெனக் கூறமுடியாத பயனெதுவாயினும் பெற்று இன்புறுவர். **மேலும், தில்லைத்தல வரலாற்றால் வரும் சிவபூசைச் சிறப்பு:-** தில்லையில் அநாதிச் சுயம்பு லிங்கத்துடன், 25 மகேஸ்வர மூர்த்தங்களில் மிக்க சிறப்புடைய பஞ்சகிருத்தியங் காட்டும் நடராசர் கோயில் கொண்டருளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோயில்' என்றால் அது சிதம்பரம் எனும்படியாக, அரசாட்சி செய்தல் பாரறிந்த உண்மை. இத்தலம் உலகத்தின் நடுநாடி- நெடுங்கோடு நடு வாக இருப்பதுவும். உடலிற் சிவன் இருதயத்தானத்தில் இருதயத் துடிப்பினூடாக, சித்தத்திற் தித்திக்குந் தேனாக, உயிரை உள்நின் றியற்றுவதும் விஞ்ஞானத்தாலும் பொருந்து முண்மை. (உயிர் தானாகவே உயிர்க்குமாயின் அது ஏன் தன்னுயிர்ப்பை நிறுத்தவேண்டும். ஆதலின் ஊனில் உயிரைப் புகுத்திப் பின் பிரிப்பது எல்லாம்வல்ல சிவமே). 'சித்' சபை என்பதால் அது அண்டத்திற் தில்லையையும் பிண்டத்தில் இருதய - சித்தவெளியையுங் குறிக்கும். ஆதலின் அது சித் - சிற்றம்பலமாம்.

தில்லை வனத்துத் தில்லைத்தல வரலாற்றில் சிவ பூசை பிரதான இடம் வகிக்கின்றது. வசிட்டர் வழிவந்த மாத்யந்தினர் ஆன்மஞானம் பெறத் தந்தையின் வழிகாட்டலில் தில்லைவனத்துச் சுயம்புவான சிவலிங்கத்தைத் தில்லைமர நீழலிற் கண்டார். அருகிருந்த சிவகெங்கையில் நீராடி, சிவனை வணங்கி, சிவனுக்குப் பாதுகாப்பாக பர்ணசாலையும் அமைத்தார். தமதுணவு, சிவபூசைப் பொருள் யாவற்றையும் தானே தேடினார். கண்தெரிய விடிந்தபின் மலர் பறித்தால் அவை வண்டுகளால் அரிக்கப்பட்டும் பூசைக்கு நேரம் பிந்தியும் இருந்ததால் மனம்மிக வருந்தினார். பனிமிகுந்ததால் ஒருநாள் பூசைதடங்கவே நிலத்திற் புரண்டழுதார். இதனையுணர்ந்த பெருமான் அவரெதிரிற் தோன்றிக் குறை கேட்டறிந்து, **குழந்தாய் மரங்களில் ஏற வழுக்காதும் விடியுமுன் கண் தெரியவும் உனக்குப் புலி உறுப்புகளைத் தந்தோம், இன்றுமுதல் நீ வியாக்கிர (புலி) பாதர் எனப்படுவாய். இவ்வூரும் புலியூர் என்றும் வியாக்கிரபுரம் என்றும் வழங்கட்டும்** எனத் திருவாய் மலர்ந் தருளினார். (இவ்விரு சொற்களும் வட- தென் மொழிச் சிறப்பை யுணர்த்துதல் காண்க) இவ்வாறு மகிழ்வுடன் திருமூலநாதருக்குப் பூசையாற்றி வருநாளில் தந்தையார் வசிட்டர் தங்கை அருந்ததியை மணம்செய்துவைக்க அதனால் உபமன்யு பிறந்தார். காட்டில் குழந்தைக்குப் பாலில்லாததால் வசிட்டர் தன் ஆச்சிரமத்திற்கு அழைத்து காமதேனுவின் பாலை ஊட்டி வளர்த்தார். மகனைப் பிரிந்து வாடிய தந்தை அதனை மீளப் பெற்றுக்கொண்டார். ஆயினும் பாலின்றிக் குழந்தையழவே, 'பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற் கடலீந்த பிரான்' எனும்படி பாற்கடலை இறைவன் வரவழைத்தான். இவ்வாறாக வளர்ந்து வேதம் முதலியவற்றைக் கற்றிருந்த உபமன்யுவிடம் கிருஸ்ணர் சிவதீட்சைபெற்றுச் சிவோகம்பாவனையில் வல்லவராய் அதனால் அருச்சுனனுக்குத் தன் திருப்பெருவடிவினைக் காட்டினார். (இது, சைவ- வைணவ குழப்பந் தீர்க்கும் நிகழ்வுமாகும்.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணனைத் தாங்கும் ஆதிசேடன், கிருஸ்ணன் மூலம் தாருகாவனத்து முனிவர்களை அடக்கியபின் சிவனாடிய நடனப்பெருமை யறிந்து அந்நடனங்காண அவர் அனுமதியுடன் கைலைசென்று சிவனைநோக்கித் தவமிருந்தான். சிவன் தவத்திற்கிரங்கி அவன் வேண்டு கோளையேற்று, **'பூலோகத்திலுள்ள வியாக்கிரபுரத்தில் வியாக்கிரபாதனும் ஆனந்தநடனங் காண ஆசைப்படுகிறான். நீ உனது 1000 தலைகளின்றி மானிடவுருவோடும் ஐந்து பாம்புத்தலையோடுஞ் சென்றிரு. நாம் அங்கு வருவோம்'** என்றார். மேலும், அவ்வுருவினைப் பெற 'அத்திரி முனிவரும் அவர் பத்தினி அனுசூயையும் முன்னர் உன்னைப் பிள்ளையாகப் பிற தவமிருந்ததால் நீ அவர்களின் கையிலுள்ளநீரிற் குழந்தையாய்ப் போயிரு. அவர்கள் அஞ்சிக் கீழேபோட நாம் கூறியவுருவை நீ பெறுவாய். அவர்களும் மகிழ்ந்து பதஞ்சலியெனப் பெயரிட்டழைப்பர்' என்றுங்கூறினார். அதன் பிரகாரம் பிலத்துவாரமூடாக தில்லையை யடைந்து நிட்டையிலிருந்த வியாக்கிரபாதரையும் திருமூலநாதரையும் சிவகங்கையையுங் கண்டு வணங்கியபின் தம் நோக்த்தினை வியாக்கிரபாதருக்கு தெரிவித்தார். இருவரும் மகிழ்ந்து இறைவனை வணங்கிப்பின் குறித்த நன்நாளை எதிர்பார்த்திருந்தனர். அந் நாளில் இந்திரராதி தேவர்கள் வந்து குழுமியபின், தேவதுந்துபி முழங்க பானுகம்பன் முதலாய வாத்தியக்காரரும் பிரம விட்டுணுக்களும் திரிசகஸ்ர முனீசுவரர்கள் எனும் தில்லைமூவாயிரவரும் வந்தார்கள். தொடர்ந்து பேரொளிவீச கையிற்பொற்பிரம்புடன் இரண்டாம் பரமேசுவரரான நந்திகேசுவரர் வந்தார். அவர் பிரமவிட்டுணுக்கள் ஆதியோருடன் அளவளாவிப் பின் வியாக்கிரபாதர் பதஞ்சலி உபமன்யு மூவரையும் நடன ஸ்தானத் தருகில் நிறுத்தினார். (நந்தியெம் பெருமானின் நிர்வாகத்திறன் இருந்தவா றென்னே). குறித்த நேரத்தில் ஞானசபையின் அஞ்ஞானமாகிய திரையை எடுக்கவும் ஒளிவடிவாகிய வெளியில் கருணை வடிவாகிய பராசத்தியோடு ஆனந்த நடராஜமூர்த்தி காட்சியளித்தார். எல்லோரும் தலைமேற் கைகூப்பி ஆனந்தக்கண்ணீர் சொரிந்து தோத்திரிக்கையில், பெருமான் வலக்கையிற் தமருகத்தை அடித்தும், வல மறுகையில் அபயமளித்தும், இடக்கையில் அக்கினியினை ஏந்தியும், வலக்காலை அபஸ்மார னெனும் முயலகன் முதுகுமேல் வைத்தும், குஞ்சிதபாதமெனும் இடக்காலைத் தூக்கியும் அதனை இடமறுகையாற் சுட்டியும் திருச்சடைகள் எட்டுத்திக்கிலும் விரிந்தாட தேவதுந்துபிகள் ஒலிக்கத் திருநடனஞ் செய்தருளினார். நெடுநேரமாடிய இந்நடனத்தை யாவருங்கண்டு மிகக்கழித்தபின் வியாக்கிரபாதருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதஞ்சலிக்கும் வேண்டும் வரமளித்தார். 'எமது பூசையைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதுடன் இந்த ஞானசபையில் எக்காலமும் யாவருங்கண்டு அதனால் அறம் பொருளின்பங்கள் பெற்றுய்ய அருளவேண்டும்' என வேண்டவும் அவ்வாறே யாகுக என்றருளி, 'நீங்களும் இங்கே தேவர்கள் சகிதமாய் இருந்து எம்மைத் தரிசித்துக் கொண்டிருங்கள் என திருவாய் மலர்ந்தருளினார். பின்னர் சிம்மவர்மனால் தில்லை பொன்னால் வேயப்பட்டுப் பல் சிறப்பும் பெற்றமை வரலாறு. சிவபூசைப்பலன் இருந்தவாறாம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்முக(புற) கிரியாபூசையைப் பிரதானமாய் அந்தர்யாகத்தில் (அகப்பூசையில்) சிறிது தரிசனமுங்கூடி அந்தர்யாகமென்றும் பகிர்யாகமென்றும் பூசிப்பது **கிரியாபூசையாம்.** பகிர்முகமாகிய கிரியாபூசையினும் தரிசனம் விட்டுநீங்காதிருத்தலால் இவ்விருவகைப்பட்ட பூசைகளும் ஒரேதன்மையினவாய் அறிந்துசெய்தல் **ஞானபூசையாம்-** சிவபூசை விளக்கம் பார்க்க. **குறிப்பு** 1). குமாரசாமிக்குருக்கள் நாடறிந்த சிவானந்த குருகுல அதிபர். அவர் **'கிரியையென மருவு வன யாவும் ஞானத்தின் நிமித்தம்'** என்ற வாக்கினை மெய்ப்பிப்பதாக இவ்வாக்கியங்களை எழுதியுள்ளார். அன்று சிவாக்கினியை பௌதிகத் தீயின்றி வளர்த்தவர்களும் இருந்துள்ளனர். அத்தகு சிவாச்சாரியார்களின் பிற்சந்ததியினரும் ஞானநிமித்தமாக கிரியை யினையாற்றின் அவ்வரிய மரபுகாக்கும் சிவச்சார்பான தொண்டானது, தமக்கும் பிறர்க்கும் நன்மைகளையன்றி, அழிவுகளைத் தரா.

2) சரியையாதி சைவநாற்பாதங்களில் கிரியையினை மையமாகக்கொண்டு கிரியாயோகம் (யோகநிட்டை) வாய்க்கப்பெறின் குருவாய்த்து, தீக்கைபெற்று சித்தாந்தம் பயின்று ஞானநெறி நின்று ஞானநிட்டை கைவரவும்பெறலாம். 7.12 பார்

**4.2. கிரியாபூசையின் வகைகள்** 1. ஆன்மார்த்தம் - அவரவர் தம்பொருட்டாகத் தம் இருப்பிடத்தில் இருந்தே செய்வது. 2. பரார்த்தம் - உலகநலத்தின் - பிறர் பொருட்டுச் சிவாலயங்களில் சிவனைப் பூசித்தற்கு உரிமையுடையவரால் ஆற்றப்படுவது. 3. அதிகாரபூசை - ஆசிரியத்தன்மை அதிகாரம் பெற்றோர் பீடாதிபத்தியம் பெற்றிருப்பின் பீட நிலைபேற்றினுக்கும், பீடத் தொண்டர்கள் நலத்திற்கும் பீடபூசைச் சிவமூர்த்தியைப் பூசித்தல். பீடலிங்கம் ஆதி குருமூர்த்திகளால் நிறுவப்பட்டிருப்பார். (**குறிப்பு :** ஆன்மார்த்தத்தில் துவாராதி சண்டேஸ்வரர் ஈறான பூசையே உத்தமம். துவாராதி நைவேத்தியம் மத்திமம், ஸ்நானம் நைவேத்தியம் அதமம்.) ஆன்மார்த்த பூசை, ஏனைய பூசைகளுக்கு முதற் செய்யவேண்டும் ஆதலின், பூசகர்களுக்கு ஆன்மார்த்தபூசையே மிகமிகப் பிரதானமாம்

**4.3. சிவபூசை :- பூசை இடம்** : ஆலயமாயின் தெற்காக, இடம் பூந்தோட்டம், புண்ணிய தீர்த்தக்கரை, தூயஇல்லமாயின் ஈசானமூலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.4. பூசைப்பொருட்கள்:- (நிலையானவை)** (1). ஆசனப்பலகை . 3 அங்குல உயரமும், ஒருமுழ அகலமும், ஒன்றரைமுழ நீளமுமுடையது, 2) பூசாபீடம்- ஒருசாண் (9அங்) உயரம், மேற்கூறிய அகல நீளங்கள். (3). அந்த அளவிற் கோமுகம் உடைய அபிடேகவேதிகை (பீடம்). (4) ஒருசாண்சதுர 3அங் உயர சூரியபீடப்பலகை. (5) பரிவட்டங் கள் (ஆடைகள்). (6) திருமஞ்சனக்குடம் (செம்பு), அபிடேககலசம் (சிறுசெம்பு), அர்க்கியவட்டகைகள் (பாத்தியம். ஆசமனம், அர்க்கியம் என்பவற்றிற்காய சிறுகிண்ணங்கள்) (7) கைமணி (8) 4, 5 சிறுதாம்பாளங்கள். (9) தூப, தீபக்கால்கள் (10) சங்கு முதலியன. **குறிப்பு** :- இவை நேர, இட வசதிபற்றி அவரவர் குரு ஆலோசனைப்படி வகுத்துக் கொண்ட பூசைமுறைப் பிரகாரம் சற்றே மாற்றி அமைக்கலாம் பலகைகளில் இரும்பு ஆணி கூடாது. (யோகிக்கு புலித்தோல், துறவிக்கு மான் தோல், பிறர்க்கு பட்டுச் சுற்றிய பலகை)

**அன்றாடப் பொருட்கள்:** தூயநீர், திருநீறு, சந்தனம், பத்திர புஸ்பம், அட்சதை (பச்சையரிசி), எள், கோதுமை, வெண்கடுகு, விலாமிச்சை வேர், ஏலம், இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, அறுகு, தருப்பை, மாவிலை, தேங்காய், எலுமிச்சம்பழம், பிற பழவகைகள், அபிடேகப் பொருட்கள், வெற்றிலை பாக்கு முதலியன. (தாம் குருமூலம் சுருக்கமாக செய்வதாயின் அதற்கேற்ற பொருட்களைக் கொள்க).

**4.5 ஆன்மார்த்த பூசை வகை -** ஆன்மார்த்தபூசை மூன்று வகை. (1). சுத்தபூசை - லிங்கம் மட்டும் பூசிக்கப்படுவது. (பிரயாணிகளுக்கு) (2) கேவலபூசை - லிங்கம், உமை. கணபதி, முருகன், இடபம்

(3) மிச்சிரம் - சௌராதி சண்டாந்தம். முதலிற் சூரியனையும் பின் மேற்படி முறையே ஐந்தையும், இறுதியில் சண்டேசுரரையும் பூசிப்பது. இதுவே அதிகமானோராற் பின்பற்றப்படுவது. துவாரதேவர், துவாரபாலகர், சப்தகுரவர், குருமூர்த்தி, வித்தியா பீடம் ஆகிய பூசைகள் ஒவ்வொரு மலர்கொண்டு முடியும்.

**4.6 சூரியபூசை (அறிமுகம்) : 1) 'அருக்கனாவான் அரனுரு அல்லனோ' 2) 'அங்கதி ரோன வனை யண்ணலாக் கருதவேண்டா, வெங்கதி ரோன்வழியே போவதற் கமைந்து கொள்மின், அங்கதி ரோனவனை உடன்வைத்த ஆதிமூர்த்தி, செங்கதிரோன் வணங்குந் திருச்சோற்றுத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறையினாரே'** - அப்பர். சிவனுக்கு மூர்த்தமாய் (அதிட்டமா)யுள்ள சூரியனை சிவசூரியனென வழிபடுக. பூசைக்காக வரைந்த சூரிய சக்கரத்தை அல்லது சிவந்ததாமரை, செவ்வரத்தம்பூ போன்றவற்றைக் கொள்ளலாம்.

**பொருள்களை (வசதியாக) வைத்தல்** : ஆசனப்பலகைக்கு எதிரில் வடக்காக (சிவ)மூர்த்திக்காயபீடம். அதன்மேல் நனைத்துப்பிழிந்த பரிவட்டம்(துணி) விரிக்க. கிழக்கில்(வலம்) அபிடேகவேதிகை. அதன்தெற்கில் திருமஞ்சனக்குடம். அதன்பக்கலாக அபிடேககலசம். மஞ்சனக்குடத்தின் கிழக்கில் பாத்திரங்களில் அபிடேகப்பொருட்கள். தூபதீபக்கால்கள், குடத்தின்மேற்கில் (பீடத்தின் தெற்குவிளிம்பில்) பத்திரங்களின்மேல் அர்க்கியபாத்திரங்கள். அவற்றிற்கு மேற்கில் (இடமாக) மணி, பூ. பீடத்தின்மேற்கில் விளக்கு. ஆன்மார்த்தமூர்த்தி பீடத்தின் தென்கிழக்கில் சூரியமூர்த்திபீடம். அதன்(வலமிடமாக) பூசைப்பொருட்களை வைக்க.

**கிருகசுத்தி :** வேறோர் பாத்திரத்திலுள்ள நீரை அனுட்டானபாத்திரத்தில் எடுத்து மண்டப மேல், கீழ், பக்கப் படிகளிலும் உள்ளும் அஸ்த்திரத்தாற் தெளிக்க. (பாவானியன்ற சிவபூசைச் சுருக்கம் 7.16 பார்க்க.)

நின்போல் அமரர்கள் நீண்முடி சாய்த்து நிமிர்த்து(உ)குத்த,
பைம்போ துளக்கிப் பவளந் தழைப்பன பாங்கறியா,
என்போ லிகள்பறித் திட்ட இலையும் முகையுமெல்லாம்,
அம்போ தெனக்கொள்ளும் ஐயன்ஐ யாறன் அடித்தலமே - அப்பர்

குறிப்பு - நல்வினைகளின் ஏற்றப்படிமுறைகள்

1. உலகவினை - கிணறு, நீர்ப்பந்தல் முதலியன அமைத்தல்
2. வைதீகவினை - வேள்வி முதலியன செய்தல்
3. அத்தியான்மிக வினை - **சிவபூசை** முதலியன செய்தல்
4. அதிமார்க்க வினை - யோகம் செய்தல்
5. மாந்திரவினை - மந்திரம் செபித்தல், ஞானநூல் ஓதல்

இவை முறையே நிவர்த்தி முதல் சாந்தீயதீதைகளில் அடங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

## மந்திரங்கள் (ஆன்மார்த்தம்)

**'ஓம்'** என ஒவ்வொன்றின் ஆரம்பத்திலும் சேர்க்க. அதிகமான எண்ணிக்கைகள் கொண்டவற்றின் முதலும் இறுதியும் தரப்பட்டுள்ளன. ஆதாரம்:'சிவபூசை முறைகள்', பிற்காலத்தில் இடைப்புகுத்தப்பட்ட 'ஹரிஓம்' சைவருக்காகாது. (சுருக்கமாய்ச் செய்வதாயின் குரு பணித்ததின்படி கொள்க). அத் 9.4, 10.11 இலும் மேலதிக விளக்கங்களுண்டு.

மந்திரங்கள், 1) வாசக-சொல் மந்திரம், 2) வாச்சிய-பொருள் மந்திரம் என இருவகைத்தது. பன்னிரு திருமுறைகளும் வேதாகமங்களும் வாசகமந்திரங்களாம். **'கண்ட- தூல பெருமந்திரமே மூவர்பாடல், கைகாணா - சூக்கும மந்திரம் கண்ணுதலோன் கூறல்' -** திருமுறைகண்டபுராணம்.

**சப்த கோடிகளின்** (7) **அந்தங்களில் வருவனவற்றின் பொருள்: நம** - வணங்குதல், தேவதைகளை அழைத்தல், ஐசுவரியங்களைத் தேவதைகளுக்கு அளித்தல். **ஸ்வதா-** கொடுத்தல், தைரியத்தையும் வசீகரத்தையும் தருதல். **ஸ்வாஹா-** திருப்திசெய்தல், **வஷட் -** தேவதைகளை வசியமாக்கல், இழுத்தல். **வௌஷட் -** அசைவற்று இருத்தல், **ஹும் -** சலனப்படுத்தல், சீவராசிகளை ஒடுக்குதல். **பட்** - விக்கினங்களை நீக்குதல். **ஹும்பட் -** விரைந்து செயல்முடித்தல். பீஜங்களின் வித்தெழுத்துக்களில் குறில்கள் பாபநீக்கத்தையும், நெடில்கள் சுப ஆக்கத்தையும் (வீடுபேற்றையும்) தரும். **குறிப்பு - 1)** ஸ்வாஹ என்பதை மந்திரநியாசத்திற்கு நீட்டாமலும், ஓமத்திற்கு ஸ்வா(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நீட்டியும் உச்சரிக்குக. **2)** நம: என்பதை நமஹ எனவும், **3)** ஹ: என்பதை ஹஅ எனவும் உச்சரிக்குக.

**சூரியபூசை மந்திரங்கள்** (மந்திர வடிவு - பொது 7.9 பார்)

**1) சூரியத் துவார பூசை** -(2): ஓம் அம் தண்டிநே நம: ஓம் அம் பிங்களாய நம: **2) சூரிய பரிவார பூசை** -(2):ஓம் அம் கணபதேய நம: ஓம் கும் குருப்யோ நம:

**3) ஆசன பூசை** - (15):

1) ஓம் அம் ப்ரபூதாஸநாய நம: 2) ஓம் அம் விமலாய நம:
3) ஓம் அம் ஸாராய நம: 4) ஓம் அம் ஆராத்யாய நம:
5) ஓம் அம் பரமஸுகாய நம: 6) ஓம் அம் பத்மாய நம:
7) ஓம் ராம் தீப்தாயை நம: 8) ஓம் ரீம் ஸுக்ஷ்மாயை நம:
9) ஓம் ரூம் ருஜாயை நம: 10) ஓம் ரூம் பத்ராயை நம:
11) ஓம் ரேம் விபூத்யை நம: 12) ஓம் ரைம் விமலாயை நம:
13) ஓம் ரோம் அமோகாயை நம: 14) ஓம் ரௌம் வித்யுதாயைநம:
15) ஓம் ர: ஸர்வதோ முக்யை நம:

4) **சூர்ய ஆசன மந்திரம்** : ஓம் அம் அர்க்காஸநாய நம:

5) **சூர்யமூர்த்தி மந்திரம்** : ஓம் கம் கஷோல்க்காய ஸுர்யமூர்த்தயே நம:

6) **சூர்யமூல மந்திரம் -** ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவஸுர்யாய நம:

7) **சூர்யஷடாங்க மந்திரம் -** (6):

1) ஓம் அம் ஹ்ருதயாய நம:
2) ஓம் அம் அர்க்காய சிரஸே நம:
3) ஓம் அம் பூர் புவஸ்வரோம் ஜ்வாலிநீ சிகாயை நம:
4) ஓம் ஹ்ரூம் கவசாய நம:
5) ஓம் பம் பாநு நேத்ராப்யாம் நம:
6) ஓம் ர: அஸ்த்ராய பட்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) **சூர்ய தேவியர் மந்திரம் -** (2):

1) ஓம் ஹாம் உஷாதேவ்யை நம:

2) ஓம் ஹாம் ப்ரத்யுஷா தேவ்யை நம:

9) **கிரக பூசை மந்திரம்** (8) :

1) ஓம் ஸம் ஸோமாய நம: அல்லது ஓம் ஸம் சந்த்ராயநம:

2) ஓம் அம் அங்கார காய நம:

3) ஓம் பும் புதாய நம:

4) ஓம் கும் குரவே நம: அல்லது ஓம் ப்ரும் ப்ருஹஸ்பதயே நம:

5) ஓம் சும் சுக்ராய நம: அல்லது ஓம் பம் பார்க்கவாய நம:

6) ஓம் சம் சனைச்சராய நம:

7) ஓம் ரம் ராஹவே நம:

8) ஓம் கம் கேதவே நம:

10) தேஜச் சண்ட ஆசன மந்திரம்

- ஓம் அம் தேஜச் சண்டாஸநாய நம:

11) தேஜச் சண்ட மூர்த்தி மந்திரம் -

- ஓம் அம் தேஜச்சண்ட மூர்த்தயே நம:

12) தேஜச் சண்ட மூலமந்திரம்

- (மூர்த்திமான்) ஓம் அம் தேஜச் சண்டாய நம:

சிவபூசை மந்திரங்கள்

13. சிவபூசை பச்சிமத்வார மந்திரம் (10): ஓம் ஹாம் (பெயர்) நம:

1) ஓம் ஹாம் கணபதயே நம:

2) ஓம் ஹாம் ஸரஸ்வத்யை நம:

3) ஓம் ஹாம் மஹாலக்ஷ்ம்யை நம:

4) ஓம் ஹாம் நந்திநே நம:

5) ஓம் ஹாம் கங்காயை நம:

6) ஓம் ஹாம் மஹாகாளாய நம:

7) ஓம் ஹாம் யமுநாயை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) ஓம் ஹ்ராம் அஸ்த்ர த்வார பாலாய நம:

9) ஓம் ஹ்ராம் வாஸ்த்வதிபதயே ப்ரஹ்மணே நம:

10) ஓம் ஹ்ராம் பச்சிமத்வார பாலேப்யோ நம:

14. **கணேச கமலா குருபங்க்தி (தொகுதி) மந்திரம்** - (9):

1) ஓம் ஹ்ராம் மஹாகணபதயே நம:

2) ஓம் ஹ்ராம் மஹாலக்ஷ்ம்யை நம:

3) ஓம் ஹ்ராம் ஸதாசிவ குரவே நம:

4) ஓம் ஹ்ராம் அநந்த குரவே நம:

5) ஓம் ஹ்ராம் ஸ்ரீ கண்ட குரவே நம:

6) ஓம் ஹ்ராம் அம்பிகா குரவே நம:

7) ஓம் ஹ்ராம் ஸ்கந்த குரவே நம:

8) ஓம் ஹ்ராம் விஷ்ணு குரவே நம

9) ஓம் ஹ்ராம் ப்ரஹ்ஹ்ம குரவே நம:

ஓம் ஹ்ராம் ஸதாசிவாதி ஸப்தகுருப்யோ நம:

15. **ஷடுத்தாஸந மந்திரம்** - (6): ஓம் ஹ்ராம் (பெயர்) நம:

1) ஓம் ஹ்ராம் அநந்தாய நம:

2) ஓம் ஹ்ராம் தர்மாய நம:

3) ஓம் ஹ்ராம் ஜ்ஞானாய நம:

4) ஓம் ஹ்ராம் வைராக்யாய நம:

5) ஓம் ஹ்ராம் ஐசுவர்யாய நம: 6) ஓம் ஹ்ராம் பத்மாய நம:

16. **ஸ்திராசன மந்திரம்** (40): ஓம் ஹ்ராம் (பெயர்) நம:

(லிங்கம், தாமரை இரண்டிலும் அமைத்தல் காண்க)

1) ஓம் ஹ்ராம் ஆதாரசக்தயே நம: (ஆவுடையாரின் கீழ் ஆசனநடு)

2) ஓம் ஹ்ராம் அநந்தாஸநாய நம:

3) ஓம் ஹ்ராம் அநந்தாய நம: (2ம்,3ம் ஆவுடையார் கீழ்ப்பாதி)
அதே இட எட்டுத் திசைக்கும் 4இலிருந்து 11வரை முறையே
தெ.கி, தெ.மே, வ.மே, வ.கி, கிழ, தெற், மேற், வடக்கு

4) ஓம் ஹ்ராம் தர்மாய நம: தெ.கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) ஓம் ஹாம் ஜ்ஞாநாய நம:

6) ஓம் ஹாம் வைராக்யாய நம: வ.மே.

7) ஓம் ஹாம் ஐசுவர்யாய நம:

8) ஓம் ஹாம் அதர்மாய நம: கி.

9) ஓம் ஹாம் அஜ்ஞாநாய நம:தெ.

10) ஓம் ஹாம் அவைராக்யாய நம:

11) ஓம் ஹாம் அநைசுவர்யாயநம: ('அ' சேர்ப்பதால் நற்குணங்களற்று புருஷாமிருகம் ஆதலாம்)

12) ஓம் ஹாம் சிம்மாஸ நாய நம: (ஆவுடையாரின் கீழ்ப்பாதி நடுவில்)

13) ஓம் ஹாம் யோகாஸ நாய நம: (ஆவுடையாரின் மேல் கீழ்ப்பாக சுருங்கிய நடு)

14) ஓம் ஹாம் அதச் சதநாய நம: (அதம் - ஆவுடையார்கீழ், கீழ்த் தென்மேற்கில்.,

15) ஓம் ஹாம் ஊர்த்வச் சதநாய நம: (ஊர்த்வ - ஆவுடையார்மேல். வடகிழக்கில்.)

16) ஓம் ஹாம் கந்தாய நம: (கந்தம் - தாமரைக் கிழங்கு உள்ளீடு)

17) ஓம் ஹாம் பீஜாய நம: (பீஜம் - தாமரை விதை - கிழங்கின் அடியமைப்பு)

18) ஓம் ஹாம் அங்குராய நம: (அங்குரம் - தாமரை முளை)

19) ஓம் ஹாம் நாளாய நம: (நாளம் - தாமரைத் தண்டு)

20) ஓம் ஹாம் கண்டகேப்யோ நம: (தாமரைத் தண்டு முட்கள்)

21) ஓம் ஹாம் தளேப்யோ நம: (மலரின் எட்டிதழ் - இலிங்கப் பிழம்பின் அடியில்)

22) ஓம் ஹாம் கேஸரேப்யோ நம: (கேசரம் - இதழ் நடுவிலுள்ள நாக்கு, பூந்தாது)

23) ஓம் ஹாம் கர்ணிகாயை நம: (கர்ணிகை - தாமரைப் பொகுட்டு - கொட்டை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) ஓம் ஹாம் பீஜேப்யோ நம: (பீஜம் - மூலம், விதை. இது சப்தப் பிரபஞ்சத்தில் வரும் 11 மந்திரம், 51 வன்னம், 81 பதம் என்பவற்றில் பூ - எழுத்துக்களை, பீஜங்களைக் குறிக்கும்.

25) ஓம் ஹாம் பத்மாயை (பத்மாஸ நாய)நம: (பத்மம் - தாமரை, இதழ்வட்டநடு)

26) ஓம் ஹாம் வாமாயை நம:

27) ஓம் ஹாம் ஜ்யேஸ்டாயை நம:

28) ஓம் ஹாம் ரௌத்ரியை நம:

29) ஓம் ஹாம் காள்யை நம:

30) ஓம் ஹாம் கலவிகரண்யை நம:

(31) ஓம் ஹாம் பலவிகரண்யை நம:

(32) ஓம் ஹாம் பலப் பிமதிந்யை நம:

33) ஓம் ஹாம் ஸர்வபூததமந்யை நம:

34) ஓம் ஹாம் மநோந்மந்யை நம: (இவை 9ம் கேசரங்களின் கிழக்கு முதலாகவுள்ள 8 திசைகளின் 8 சக்திகளுடன் பொகுட்டின் வ.கி. லுள்ள மநோந்மநியுமாக 9- நவசக்திகள்)

35) ஓம் ஹாம் ஸூர்யமண்டலாய நம:

36) ஸூர்யமண்டலாதி பதயே ஓம் ஹாம் ப்ரஹ்மணே நம: இதழின் நுனிவட்டத்தில்.

37) ஓம் ஹாம் ஸோமமண்டலாய நம:

38) ஸோமமண்டலாதி பதயே ஓம் ஹாம் விஸ்ணவே நம: (கேசரங்களின் நுனி வட்டத்தில்)

39) ஓம் ஹாம் அக்நிமண்டலாய நம:

40) அக்நிமண்டலாதி பதயே ஓம் ஹாம் ருத்ராய நம: (தாமரைக்காவின் வெளிவட்டத்தில்)

41) ஓம் ஹாம் சக்திமண்டலாய நம :

42) சக்திமண்டலாதி பதயே ஓம்ஹாம் ஈசுவராய நம: (பொகுட்டு வட்டத்தில்) குறிப்பு- 12ம் 13ம் சிவபூசைமுறை நூலில் தவறி விடப்பட்டுள்ளது. ஆக 42 மந்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. **சிவாசன மந்திரம்** : ஓம் ஹாம் **சிவாஸநாய** நம:

18. **சிவ மூர்த்தி மந்திரம்** : ஓம் ஹாம் ஹம் ஹாம் **சிவ மூர்த்தயே** நம:

19. **சிவ மூல மந்திரம் :** ஓம் ஹாம் ஹெளம் **சிவாய** நம: (மூர்த்திமான்)

20. **வித்யா தேஹ மந்திரம் :** ஓம் ஹாம் ஹெளம் வித்யா தேஹாய நம:

21 **சக்தி மூல மந்திரம்** : ஓம் ஹாம் சக்தயே நம:

22. **ஆத்ம மந்திரம் :** ஓம் ஹூம் ஹாம் ஹாம் ஹாம் ஹூம் ஆத்மநே நம: குறிப்பு - 'சிவபூசைமுறை' யில் மேற்கண்டதுபோல ஆத்ம மந்திர நடு, 'ஹாம்' எனவுண்டு. ஆத்ம மூலம் ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம: ஆகலாம்.

23. **அத்வ மந்திரம் : (6)**

1). ஓம் ஹாம் மந்த்ராத்வநே நம:,

2) ஓம் ஹாம் பதாத்வநே நம:

3). ஓம் ஹாம் வர்ணாத்வநே நம:

4) ஓம் ஹாம் புவனாத்வநே நம:

5) ஓம் ஹாம் தத்வாத்வநே நம:

6) ஓம் ஹாம் கலாத்வநே நம:

24. **மனோன்மணி பூசை மந்திரம்**

(3): (ஆசனம், மூர்த்தி , மூர்த்திமான்)
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் மநோந்மந்யாஸநாய நம : ஓம் ஹ்ரீம் மநோந்மநி மூர்த்தயே நம : ஓம் ஹ்ரீம் மநோந்மந்யை நம:

25. **விபூதிபூசை மந்திரம் :** ஓம் ஹாம் லகுளீசுவராய நம:

26. **பவாதி நாமார்ச்சனை மந்திரம்** : (8) ஓம் ஹாம் (பெயர்) தேவாய நம:

1) ஓம் ஹாம் பவாய தேவாய நம:

2) ஓம் ஹாம் ஸர்வாய தேவாய நம:

3) ஓம் ஹாம் ஈசாநாய தேவாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஓம் ஹாம் பசுபதயே தேவாய நம:
5) ஓம் ஹாம் ருத்ரார்ய தேவாய நம:
6) ஓம் ஹாம் உக்ராய தேவாய நம:
7) ஓம் ஹாம் பீமாய தேவாய நம:
8) ஓம் ஹாம் மஹதோ தேவாய நம:

**27. பவனாதியோர் தேவியர் மந்திரம் :** (8) ஓம் (பெயர்) தேவஸ்ய பத்நியைநம:

1) ஓம் பவஸ்ய தேவஸ்ய பத்நியை நம:
2) ஓம் ஸர்வஸ்ய தேவஸ்ய பத்நியை நம:
3) ஓம் ஈசாநஸ்ய தேவஸ்ய பத்நியை நம:
4) ஓம் பசுபதேச தேவஸ்ய பத்நியை நம:
5) ஓம் உக்ரஸ்ய தேவஸ்ய பத்நியை நம:
6) ஓம் ருத்ரஸ்ய தேவஸ்ய பத்நியை நம:
7) ஓம் பீமஸ்ய தேவஸ்ய பத்நியை நம:
8) ஓம் மஹத தேவஸ்ய பத்நியை நம:

**28. குருபூசை மந்திரம் :** (3) (ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான்) ஓம் ஹாம் சிவகுரு ஆஸநாய நம: ஓம் ஹாம் சிவகுரு மூர்த்தயே நம: ஓம் ஹாம் சிவகுரவே நம:

**29. வித்யாபீட பூசை மந்திரம் :** (2)ஓம் ஹாம் யோக பீடாஸநாய நம: ஓம் ஹாம் வித்யா பீடாய நம:

**30. ஆவரணபூசை மந்திரம் :** (ஆவரணம் - மதில். 5,4,3,2,1 என்பன தத்துவங்களில் அல்லது அதன் புவனங்களில் கீழிருந்து மேலான அல்லது வெளியிலிருந்து உள்ளாக அமைந்த மதில்கள். முதலாம், இரண்டாம் ஆவரணங்கள் சதாசிவருக்கு அண்மையானவை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2ம் ஆவரணம் :** ஓம் ஹாம் (பெயர்) நம: ஈறான 8. (சுத்தமாயையிலுள்ள அட்ட வித்தியேசுரர் வதியும் ஈசுரதத்துவ புவனங்கள்) அநந்தாய, ஸுக்ஷ்மாய, சிவோத்தமாய, ஏகநேத்ராய, ஏகருத்ராய, திரிமூர்த்தயே, ஸ்ரீகண்டாய, சிகண்டிநே (203 ஆவது முதல் 208 ஆவது வரையான புவனவாசிகள்)

**3ம் ஆவரணம்** : 8, ஓம் ஹாம் (பெயர்) நம: ஈறான 8. நந்திநே, மஹாகாளாய, பிருங்கிணே, விநாயகாய, வ்ருஷபாய, ஸ்கந்தாய. தேவ்யை, சண்டாய

**4ம் ஆவரணம்** : ஓம் ஹாம் (பெயர்) நம: ஈறான 10. (அட்டதிக்குப் பாலர்கள், பிரமா, விட்டுணு) இந்த்ராய, அக்நே, யமாய, நிருதயே, வருணாய, வாயுவே, குபேராய, ஈசாநாய, ப்ரஹ்மணே, விஷ்ணவே.

**5ம் ஆவரணம் :** ஓம் (பெயர்) நம: ஈறான 10 (4ம் ஆவரண இந்திரனாதியோரின் தசாயுதங்கள்) வஜ்ராய சத்தயே தண்டாய கட்காய பாசாய த்வஜாய கதாயை சூலாய பத்மாய சக்ராய.

**31. த்வனிச்சண்ட ஆஸன, மூர்த்தி, மூர்த்திமான் மந்திரம் :** ஓம் ஹாம் த்வநிச் சண்டாஸநாய நம : ஓம் ஹாம் த்வநிச்சண்ட மூர்த்தயே நம : ஓம் ஹாம் த்வநிச் சண்டாய நம :

**32. சிவகாயத்ரீ மந்திரம் :**

ஓம் தந்மஹேசாய வித்மஹே

வாக்விசுத்தாயதீ மஹி

தந்நோசிவ: ப்ரசோதயாத்.

**33. ஸம்ஹிதா மந்திரம் பீஜத்துடன் :** (11) **பஞ்சப் பிரம்ம மந்திரம்** (5)**:**(குறில் பீஜம், பாப நீக்கம்) 1) ஓம் ஹொம் ஈசானமூர்த்தாய நம: 2) ஓம் ஹெம் தத்புருஷவக்த்ராய நம: 3) ஓம் ஹும் அகோர ஹிருதயாய நம : 4) ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம : 5) ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம : **ஷடங்க** (ஷட் அங்க) **மந்திரம்** (6) (நெடில் பீஜம் சுப ஆக்கம்) 6) ஓம் ஹாம் ஹ்ருதாய நம : (அங்கம்) 7) ஓம் ஹீம் சிரஸே நம : (அங்கம்) 8) ஓம் ஹூம் சிகாயை நம: (பிரத்தியங்கம்) 9) ஓம் ஹைம் கவசாய நம: (சாங்கம்) 10) ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம : (பிரத்தியங்கம்), 11) ஓம் ஹ: அஸ்த்ராய நம : சாங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**34 பஞ்சகலா மந்திரம் :** (நெடில் பீஜம், சுப ஆக்கம்).

ஓம் ஹ்லாம் நிவர்த்தி கலாயை நம:

ஓம் ஹ்வீம் ப்ரதிஷ்டா கலாயை நம:

ஓம் ஹ்ரூம் வித்யா கலாயை நம:


ஓம் ஹைம் சாந்தி கலாயை நம:

ஓம் ஹௌம் சாந்தியதீத கலாயை நம:

**35. ஆசமன மந்திரம் :** ஓம் ஹாம் ஆத்மதத்துவாய சுவதா, ஓம் ஹீம் வித்யாதத்துவாய சுவதா, ஓம் ஹூம் சிவதத்துவாய சுவதா.

**கோடிகள்-அந்தங்கள்:-** 1) நம- வணங்குதல், 2) ஸ்வதா- கொடுத்தல், 3) ஸ்வாஹா- திருப்திசெய்தல், 4) வஷட்- வசியமாக்கல், 5) வௌஷட்- அசைவின்றியிருத்தல், 6) ஹூம்-சலனப்படுத்தல், 7) பட் - நீக்குதல்.

80ஆம் பக்கத்திற் கூறிய வினைகளின் முதலிரண்டும் அசுத்த போகங்களைத் தருவன. நடு இரண்டும் சுத்த, அசுத்த போகங்களைத் தருவன. இறுதியானது சுத்த போகத்தைத் தரும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 2 (செய்முறை)

## அத்தியாயம் 6. பூசை

**(சூரிய, சிவ, த்வநிச்சண்ட முதலான பூசைகள்)**

புருடனைச் செலுத்தும் மகாதேவராகிய சதாசிவமூர்த்தி சாதாக்கிய தத்துவத்தினர். சிவபூசைக்காக கன்ம சாதாக்கியமெனும் லிங்கத்திருமேனி கொள்பவர். அவர் சூரியமண்டலத்திற் சிறப்பாக விளங்குகின்றார். இக்கருத்தினால் அனுட்டானத்தில் சூரிய நமஸ்காரம் சிறப்பிடம் பெறுவது போலவே சிவபூசையிலும் சூரியபூசை முதலில் இடம்பெறுகின்றது. இதில் சிவன் அட்டமாமூர்த்தமென அதிட்டிக்கும் சூரியனாக- சிவசூரியனாகவே கருதப்படுகின்றான். **'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில் அருக்கனாவான் அரனுரு அல்லனோ'** - அப்பர். நக்கீரர் **'பலர்புகழ் ஞாயிறு'** எனத் திருமுருகாற்றுப்படையிற் குறித்த சூரியனுள் எல்லாக் கிரகங்களும் அடங்குதலால் சூரியபூசை கிரகபூசையுமாகின்றது.

**குறிப்பு** 1) பூசையில் மந்திரம் பாவனை செய்கை (கிரியை) என்பன அடங்கும். முற்கூறியபடி தத்தமக்குரிய நேர, சந்தர்ப்ப சூழலை விளக்கி, குருவின் ஒப்புதலுடன், சுருக்கியோ விரித்தோ செய்யலாம். ஆரம்பத்தில் சூரியன், சிவன், த்வனிச்சண்டர்பூசை செய்யலாம். பின் படிப்படிவிரித்து துவார, கணேச கமலா குரு (தொகுதி), ஸ்திராசன, அத்வ, வித்யாபீட, ஆவரண, பஞ்சகலா என்பவற்றைச் செய்யலாம். இடைநிலையாக எது விடப்படுகின்றதோ அதை அவ்வவ்விடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது மனதால் நினைந்து ஒவ்வொரு பூ இட்டுப் பின் தொடரலாம். அதற்கு பூசைவிபரம் முழுவதுமே அறிந்து கொள்ளவேண்டும். மேலும் அறிமுறையில் விளக்கமும், செயல்முறையில் ஆர்வமும் வேகமும் உண்டாயின் தாமாகவே ஒழுங்கினை அறிந்து கூட்டிக் கொள்ளலாம்.

2) சரியைத்தொண்டில் உறைப்பும், நகர்ச்சூழலால் இயலாவிடின் புராணபடன, திருமுறையோதும் பயிற்சியும் இருந்தால் தானாகவே சிவபூசையிற் பற்றுறுதியேற்படும். புராணங்களிற் பலர் சிவபூசையாற்றி இறைவன் வெளிப்படக் கண்டு தோத்தரித்த பாடல்கள் பலவுள்ளன. பூசகர் முறைப்படி ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனத்துடன் 'இரண்டுடை உடீஇ' என திருமுருகாற்றுப்படையில் கூறியபடி வேறு பாடான தோய்த்துலர்ந்த இரு வஸ்திரந்தரித்து (**சிவக்கோலத்துடன்**) பூசை ஸ்தானத்தை அடைந்து தொடங்கும்போது அஸ்திர மந்திரமயமான விமானத்தின் மத்தியை அடைந்தவனாய், 31 ஆன்ம, வித்யா தத்துவங்களைச் சோபான- படிமுறையில் மனதாற் கடந்து, மேற் (சிவதத்துவத்திலுள்ள ஐந்தாம்) **சுத்தவித்யா தத்துவத்தை அடைந்ததாகவும்,** தம்மைச் **சிவாஸ்திர மந்திரம் சூழ்ந்திருப்பதாகவும் பாவித்து** பூசைப் பொருட்களைச் சரிபார்த்து கணபதி, குரு வணக்கத்துடன் ஆரம்பிக்கவும். (மந்திரங்கள் : முன் தரப்பட்டுள்ள மந்திர அட்டவணை இலக்கங்கள் அடைப்புக்குறிக்குள் வருகின்றன. முத்திரைப் படம் நூலின் இறுதியில் இலக்கத்துடன் உண்டு) ஆன்மார்த்தம் வடக்குநோக்கி, அதிகாரம் மேற்குநோக்கி, பரார்த்தம் கிழக்குநோக்கி இருந்து தொடங்குக. 36 தத்துவங்களில் **சுத்தவித்தை** கீழிருந்து, ஒடுக்க முறையில் 31ஆம், அல்லது, மேலிருந்து, படைப்பு முறையில் 5ஆம் தத்துவம். இது, மும்மூர்த்திகள் தோன்றுமிடமும் சப்தகோடி மகாமந்திரர் வாசமுமாம். **ஆசனபலன்:** தருப்பை - கீர்த்தி, யாகமரப் பலகை - சம்பத்து, வஸ்திரம் - வியாதிநீக்கம், கம்பளம் - சௌக்யம், புலித்தோல் - சம்பத்தும் மோட்சமும், மான்தோல் - ஞானம், கூர்மாசனம் - போக மோட்சம். **மந்திரங்கள்** யாவும் சூரியனுக்கு உரியனவாதல் வேண்டும். உதாரணம், மூலமென்றால் இதில் சூரிய மூலமந்திரம் எனக்கொள்க.

## 6.1 சூரிய பூசை

**6.1.1 கணபதி வணக்கம் :** சூரியபூசைக்கு, கிழக்காக ஆசனத்தில் பத்மாசனமாக அமர்ந்து, விநாயகரைக் கணபதி மூலமந்திரம் (**'ஓம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணபதயே நம:'**) சொல்லி, **சிகா**(1) முத்திரையால் நெற்றிமேல் 3 முறை குட்டி. நமஸ்கார(2) முத்திரையை நெற்றிக்கு நேராகப் பிடித்துக் கும்பிடுக. **குருவணக்கம்** - விஷேட தீட்சாகுருவை **'ஓம் கும் குரவே நம:'** எனக் குருமூலத்தாலும் அவரது திருப்பெயரை உதாரணமாக 'சிவத்திரு தத்புருஷ சிவராச தேசிகாய நம:' என அவரின் தீட்சாநாமத்துடன் கூறி **நமஸ்கார** (2) முத்திரையை மூக்கிற்கு நேராகப் பிடித்து வணங்கவேண்டும். (முத்திரை எண்களாற் தரப்படும்.)

**6.1.2.1 ஜலசுத்தி** (சூரிய, சிவ பூசைக்களுக்கு வெவ்வேறான பாத்திரங்களில் நீரெடுக்க வேண்டும். அல்லது பாத்திரங்களைக் கழுவிப் புதிதாக நீர் கொள்ளலாம்.) எண்சுத்தி விபரம் 7.22ல் உண்டு.

**(அ).** திருமஞ்சனக்குட ஜலத்தை வலக்கைச் **சம்ார** (24) முத்திரையால் சூரிய அஸ்த்திரம் (**ஓம் ர: அஸ்திராய பட்**) சொல்லி அதன் மாசுக்கள் நீங்கியதாகப் பாவித்து 1. <u>நிரீட்சணம்</u>(4) மூலத்தாற்பார், 2. <u>புரோட்சனம்</u> (ஓம்ர: அஸ்த்ராயபட்- நெற்றிநடு விந்துவை எடுத்து (38) தெளி (17) 3. <u>தாடனம்</u> (அதேமந்திரத்தால் இடகையில் வலச்சுட்டால் தட்டல் -9) 4. <u>அப்பியுக்ஷணம்</u> (ஓம்ஹ்ரூம் கவஸாய வௌஷட்) மூடல் (8), 5. <u>தாளத்திரயம்</u> (இடகையில் வலக்கை சுட்டு, நடுவாற் படாந்தஅஸ்திரம்-தட்டல்), 6. <u>திக்குப்பந்தனம்</u> (படாந்த அஸ்திரம்- சுற்றிச்சுண்டு - 10), 7. <u>அவகுண்டம் வௌஷடாந்த கவசத்தால்</u> (வலச்சுட்டால் - (11) சுற்று, 8. <u>தேனுமுத்திரை</u> (12) வௌஷடாந்த மூலம்- கொடுத்தல் எனும் எண் சுத்திகளை அநுட்டானத்திற் போலச்செய்து, **(ஆ)** நீரில் சந்தனம், விலாமிச்சைவேர் இட்டு,

**(இ) கங்கேச்ச யமுநேச்சைவ கோதாவரீ ஸரஸ்வதீ, நர்மதா ஸிந்து காவேரீ ஜலேஸ்மிந் சந்நிதிம் குரு** என்று புஸ்பங்களையும் அட்சதையையும் நீரிலிட்டு **(ஈ)** அபிடேககலத்தை(சிறுசெம்பு) சூரிய **அஸ்திரத்தால்** அலம்பி அதில் மூன்று முறை நீரெ டுத்து மீளக் குடத்தில் ஊற்றி புண்ணியநதிகள் வந்து கலந்ததாகப் பாவிக்கவேண்டும்.

**6.1.2.2 பவித்திர (மோதிர) தாரணம்.** வலது மோதிரவிரலில், பொன் அல்லது வெள்ளிப் பவித்திர மோதிரம், இன்றேல் தர்ப்பையாற் செய்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியலாம். **அ).** பவித்திரத்தை இலையில் அரிசியுடன் வைத்து, **ஆ).** அவற்றை **சூரியஅஸ்திரம்** (7இறுதி) சொல்லி மிருகமுத்திரையுடன் (19) திருமஞ்சன நீரில்தோய்த்தபூவாற் புரோட்சித்து எடுத்து அட்சதையை சூரிய **சிகா** (7ல்3) மந்திரத்தால் சிரசிலிட்டு, **இ) பவித்திரத்தைச் சூரிய ஹ்ருதயத்தால்** (7-1) வலமோதிரவிரலில் அணிந்து **நமஸ்கார**(2) முத்திரையால் **சூரியமூல**(6) மந்திரத்தாற் சூரியனைத் தியானிக்க. (துறவிக்கு இது தேவையில்லை).

**6.1.2.3 ஸங்கல்பம்.** : சிவபெருமானது அருளாணையால் இப்பொழுது என்னுடைய ஆன்மார்த்த சிவபூஜாங்கத்தில் சிவசூரியபூசை செய்கின்றேன் என **'ஓம் சிவசிவச் சம்போ ராஜ்ஞாத் தக்காலே மமாத்மார்த்த சிவ பூஜாங்கே சிவசூர்ய பூஜாம் கரிஷ்யே')** என புஸ்பாஞ்சலியுடன் கூறிப் பூவினை நிர்மாலியமாக நிலத்தில் விடுக.

**6.1.3 சூரியசகளீகரணம்** கரசோதனை கரநியாசம் அங்கநியாசம்

1) **கரசோதனை** : (அ) சூரிய **அஸ்திரத்தால்** (7-6) **ஓம் ர: அஸ்திராய பட்** என **சாண**முத்திரை (18) இனால் உள்ளும் புறம்புமாக வலதால் இடதையும், இடதால் வலதையும். மீள வலதால் இடதையும் துடைக்க. ஆ) **வெளஷடாந்த** சிவசூர்ய மந்திரத்தால் (6) **(ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவசூர்யாய வெளஷட்)** என கைகள் விந்து - புருவநடு அமிர்தத்தால் நனைந்ததாகப் பாவித்து **நமஸ்கார** முத்திரை(2)யால் வணங்குக.

(2) **கரநியாசம் (அ) ஆவாகன** (46,47) முத்திரைகொண்ட நிமிர்த்திய இருகைகளாலும் **உஷ்ணீக**(27,28) முத்திரையால் இருபெருவிரல்களிலும் சுட்டினால் **சூரிய இருதய** மந்திரத்தையும் (7ல்1), **ஓம் அம் இருதாய நம:** (ஆ) **ஆக்ர** (31) முத்திரையால் இரு சிறுவிரல்களிலும் சூர்ய **சிரோமந்திரத்தை** (7ல்2)யும், **ஓம் அம் அர்க்காய சிரசே நம: (இ) திவ்யமுத்திரையால்** (17) இரு மோதிரவிரல்களிலும் **சூரியசிகாவையும்** (7ல்3) **ஓம் அம் பூர்ப்புவஸ்வரோம் ஜ்வாலி நீ சிகாயை நம:** கூறி (ஈ). இரு கைகளினதும் நடு, சுட்டு விரல்களை மட்டும் இரு உள்ளங்கைகளில் மடக்கி **பாநு** நேத்திரத்தையும் (7ல்5) **ஓம் பம் பாநு நேத்ராப்யாம் நம: (உ) சின்மய** முத்திரையால் (29) இரு சுட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**சூர்ய அஸ்திரத்தையும்** (7ல்6) **ஓம் ர: அஸ்த்ராய பட்** (ஊ) **ஆன்மலீக** (33) முத்திரையால் இருகைகளையும் **சூரியகவசத்**தால் (7ல் 4) ஓம் ஹ்ரூம் கவசாய நம: என அவகுண்டனமாகச் சுற்றி, **(எ) நமஸ்கார** (2) முத்திரையால் **வெளகூடிாந்த சூர்ய மூலத்தால்** (6) **ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவசூர்யாய வெளஷட்** எனக் கும்பிடவும்.

(3) **அங்கநியாசம் : (அ)** கரநியாசத்தாற் சுத்தியான கைகளால் உடலைத் தடவிச் சுத்திசெய்வதாகப் பாவித்து, **திவ்ய** (தெய்வீக) (17) முத்திரைகொண்ட வலக்கையால் கரநியாசத்திற் கூறிய சூரியனின் ஹ்ருதயம் சிரசு சிகை ஆகியவற்றின் மந்திரங்களை முறையே மார்பு. உச்சித்தலை, குடுமி இவைகளிலும், **(ஆ)** அங்கநியாச **நாராச** (35) முத்திரையால் வல இட கழுத்துமுதல் மார்புஈறாக சுற்றித்தடவிச் **சூர்யகவசத்தையும்** (7ல்4) **(இ)** நேத்ரத்தால் இருகண்களிலும் **பாநுநேத்திரத்தையும்** (7ல்5), **(ஈ) உஷா**(36)முத்திரையால் இரு உள்ளங்கைகளிலும் **சூர்யாஸ்திர**மந்திரத்தையும் நியசித்து, **(உ)** உடலைச் சுற்றித் தாளத்திரயம் திக்பந்தனம் அவகுண்டனஞ்செய்து, **(ஊ) வெளஷடாந்த** சிவசூர்யமூலத்தால் அங்க நியாஸ **மகாமுத்திரை**(22) கொண்டு பாதாதிகேச பரியந்தம் (காலிலிருந்து தலைவரை) காட்டி சூரியனானதாகப் பாவித்துப் பூசை தொடங்குக.

6.1.3.2. **தர்ஷனார்க்கியம்** (வெளிச்சென்று சூரியனை நேரிற்கண்டு அர்க்கியங்கொடுத்தல்) **(அ)** அர்க்கியகிண்ணத்தைச் **சூரியஅஸ்திரத்தால்** அலம்பி நீரெடுத்து, அதில் சிவப்புச் சந்தனம், சிவந்தபூ இட்டு சூரியன் முன் கிழக்காக இரு முழங்கால்களையும் பூமியில் ஊன்றி, சலத்தைச் சிரசுவரை கொண்டுபோய் சிவசூர்யமூலத்தால் **(ஓம் ஹ்ராம் ஹரீம் ஸ: சிவசூர்யாய நம:)** எனத் தரிசித்து சிறிது நீரை நிலத்தில் விட்டு, **(ஆ)** பத்துவரை அம்மந்திரத்தைச் செபித்தபின் மந்திரத்தை இருதயத்தில் **(ஓம் ஹ்ராம் ஹரீம் ஸ: சிவசூர்யாய ஹ்ருதாய நம:)** என ஒடுக்கி **(இ)** அதன்பின் சலத்தை நிர்மாலியமாக நிலத்தில் விடுக. சூரியன் தென்படாவிடில் பூசைக்காக இருந்த இடத்திற் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சூர்யச் சக்கரம்

**சூர்யார்க்கியம் :** (திருமஞ்சனத்திற்கு சிறுசெம்பு, அபிடேகத்திற்கு சிறுசெம்பு, அர்க்கியத்திற்கு வட்டகை - சிறு வட்டக்கிண்ணம்) **(அ)** ஆசனத்தில் கிழக்காக அமர்ந்து, அர்க்கிய பாத்திரத்தை **அஸ்திரத்தால்** அலம்பிப் பீடத்தில் வைத்து, அபிடேககலசத்தையும் அவ்வாறு அலம்பி, நீரை முகந்து, இருகைகளாலும் நெற்றிவரை கொண்டுபோய் அங்குள்ள அமிர்தம் சிவப்புநிறமாய் வந்து கலந்ததாகப் பாவித்து, வட்டகையில் **ஓம் கம் கஹோல்க்காய வௌஷட்** எனஊற்றி, **(ஆ) கவசத்தால்** சிவப்புச்சந்தனம், சிவப்புப்புஸ்பம் கோதுமை இட்டு **(இ) சூரிய அங்கத்தினாலும் (7) மூலத்தினாலும்** (6) பூ இட்டு, அர்ச்சித்து, **கவசத்தால்** (7ல்4) கவிழ்பதாகை கொண்டு (கீழாகக் கவிழ்த்து) மூடி, அதே மந்திரங்களாலே மௌனமாக அபிமந்திரித்து. **ஓம் ர: அஸ்த்ராய பட்** என திக்பந்தனமும், **ஓம்ஹ்ரூம் கவசாய நம:** என அவகுண்டமுஞ் செய்து, ஓம் கம் கஹோல்க்காய வௌஷட் என தேனு(12)முத்திரையும் கொடுத்து (அமிர்தீகரணம்-காமதேனுவின் பால் வந்ததாகப் பாவித்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) அர்க்கியசலத்தை மிருகமுத்திரை (19) கொண்டு புஸ்பத்திற் தோய்த்தெடுத்து தம் சிரசிற்கும், பூசைஇடம், திரவியங்கள் மேடைஎன்பவற்றிற்கும் தெளிக்குக.

(உ) பீடத்தின் நடுவில் கழுவிய சூரியசக்கரத்தை அல்லது சிவந்த(செவ்வரத்தை, தாமரைப்பூவை வைத்து அதனையும் புரோட்சித்து, சூரியசக்கர படத்திற் காட்டியவாறுள்ள இடங்களில் பத்திரக்கிள்ளுகளை (கிளுவை, நொச்சி, நுணா இன்றேல் பூமர, செடிஇலைகளை) ஆசனங்களாகவும் அவற்றில் ஒவ்வோரு பூ அல்லது சந்தனப்பொட்டு மூர்த்திகளாகவும் வைக்க. **(குறிப்பு**- சுருக்கமாக முதலிற் செய்துபழக விரும்புவோர் சூரியனை மட்டும் பீடநடுவில் சிவந்தபூவையோ சந்தனத்தையோ இலையில் வைத்து மூர்த்தியாகக் கொள்ளலாம்).

6.1.3.3 **விக்நோச்சாடனம்.** ஒரு புஸ்பம் அல்லது பத்திரத்தை (இலை) இரண்டாகக் கிள்ளி **'ஓம் ர: அஸ்த்ராய பட்'** என விக்நநீக்க **நாராசத்தால்** (35) கைகளை வலமிடமாக மாறிமாறி சுழற்றி பூக்களை வீசிவிடவும்.

6.1.4 **சூரியத்துவார பூசை** :- சக்கரத்தின் மேற்கு வாயிலுக்கு வெளியில் தெற்காகவுள்ள தண்டியை **ஓம் அம் தண்டினே நம:** என்றும், அதன் வடக்காகவுள்ள பிங்களரை **ஓம் அம் பிங்களாய நம:** என்றும், பீடத்திற்கு வடகிழக்கிலுள்ள கணபதியை **ஓம் அம் கணபதயே நம:** என்றும், சக்கரத் தென்கிழக்கிலுள்ள தம் குருமாரை **ஓம் அம் குருப்யோ நம:** என்றும் தியானித்து அர்ச்சிக்க.

6.1.4.1 **சூரியாசன பூசை** 8 இதழ்த் தாமரை சூரியமூர்த்திக்கு ஆசனம். 8 இதழ்களிலும் 8 சக்திகள் இருப்பர். மலர்நடுவுள்ள பொகுட்டு ப்ரபூதாஸநம் ஆகும். அதனை வெண்மை நிறமுள்ளதாகப் பாவித்து **ஓம் ப்ரபூதாஸநாய நம: முதல் ஓம் ர: ஸர்வதோ முக்யை நம: ஈறான 15 மந்திரங்களால்** (3) அர்ச்சித்து **விஸ்புர** முத்திரை (54) காட்டுக. எண்சக்திகளும் சிவப்பு நிறத்தையும், வலதில் சாமரமும், இடதில் தாமரையுங் கொண்ட கைகளை யுடையவர்களாகத் தியானிக்கப்படுவர்.

**6.1.4.2 சூரியமூர்த்தி பூசை : 'ஓம் அம் அர்க்காஸநாய நம:'** வென (ஆசனபூசை 6.11 செய்யாவிடினும்) ஆசனத்தைப் பொதுவாக அர்ச்சித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மேல் (முன்கூறியவாறு) சூரியமூர்த்தியாக ஒரு சிவந்தபுஸ்பத்தை வைத்து **வெண்டாமரையின் மேலுள்ள பேரொளியான சிவந்த விருத்த மண்டலத்தில் நடுவிருப்பவரும், சிரசில் ஒளிவட்ட முள்ளவரும், மாதுளம்பூ நிறத்தவரும், இரு தாமரைகளை தோள்களிற் சாத்திய கைகளை உடையவரும், ஒருமுகமும் இருகண்களும் செம்பட்டுடை சிறக்கவும் வாழ் சிவசூரியனை அகம் நினைவாம்** எனத் தியானித்துத் துதித்து, **திவ்ய** (17) முத்திரையால் **ஓம் கம் கக்ஷோல்க்காய சூர்ய மூர்த்தியே நம:** என அப்பூவில் நியசித்து **நேத்ர** முத்திரையால் (சுட்டும் நடுவும் நீட்டிய கவிழ் வலக்கை) **பாநுநேத்ர** மந்திரத்தால் (7ல் 5) நேத்ரம் - கண் கொடுத்து ஆவாகனம் செய்க.

6.1.4.3**. ஆவாகனம் :** 1). இருகைகளிலும் நிறைய (சிவந்த) புஷ்பங்களை நெற்றிவரை உயரத் தூக்கிக் கும்பிட்டு, சூரியதேவரின் சக்தி அந்த (புஷ்ப) அஞ்சலிக்குள் வந்ததாகப் பாவித்து இறக்கிக்கொண்டு வந்து **சூரியமூலத்தால்** மூர்த்தியின் (பூ, சந்தனம்) உச்சிவழியாக இருதயத்தில் ஆவாகன முத்திரையால் (46 அல்லது 47) ஆவாகித்து,

2). **ஸ்தாபன** முத்திரையை (48) உச்சிமேற் காட்டி.

3) **சந்நிதான** முத்திரையை (49) எதிரே காட்டி,

4). **சந்நிரோதன** முத்திரையை(50) நேரே காட்டவும். (இந் நாலினாலும் மூர்த்தியை எழுந்தருளச்செய்து - அழைத்து, இருத்தி, பூசையை திருநோக்கம் செய்து, முடியும்வரை நிலைகொள்ளுமாறு வேண்டல்). 5) அவரைப் பிரீதிப்படுத்தும் பொருட்டுப் பிம்பமுத்திரை(53) காட்டவும்.

6.1.4.4. **நியாசம்** :நேத்திரம் தவிர்ந்த ஷடாங்கங்களால் இருதய முதலான உறுப்புக்களில் அங்கநியாசத்திற் செய்ததுபோல நியசிக்குக. பின் மூலத்தால் ஏகத்துவஞ் செய்க. (இரு கைகளையுங் கூப்பி மகாமுத்திரை(22) காட்டி. 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம்ஸ: சிவ ஸுர்யாயை நம' என மேலவற்றை ஒன்றாக்குக.

6.1.4.5. **திக்பந்தனம், அவகுண்டம், தேனு, மகாமுத்திரைகள்:** அஸ்திரத்தால் திக்பந்தனமும் (சுண்டி ஒலியெழுப்பல்), **வௌஷடாந்த சூரியகவசத்தால்** அவகுண்டமும் (சுட்டுவிரலாற் சுற்றல்), **வௌஷடாந்த மூலத்தால்** தேனு முத்திரை(12)ம், மகா முத்திரை (22)ம் கொடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.1.5 **சூரிய தேவியர் (உக்ஷா, பிரத்யுக்ஷா) பூசை :** உஷாவை மூர்த்திக்கு தெற்கிலும், பிரத்யுஷாவை வடக்கிலும் இலைகளில், அல்லது யந்திரத்தில் வைத்து, சந்தனம், புஷ்பஞ் சாத்தி தேவியர் மந்திரம்(8)கூறி நமஸ்கரிக்கவும்.

6.1.5.1 **பாத்தியம், ஆசமனம், அர்க்கியம், பூ, அறுகு, அட்சதை:** அர்க்கிய சலத்தால் 'ஓம் கம் கஷோல்க்காய நம: என இருபாதங்களில் பாத்தியமும். 'ஓம் கம் கஷோல்க்காய ஆசமனம் ஸ்வதா' என அருந்துதற்கு இருதடவை ஆசமனமும், 'ஓம் கம் கஷோல்க்காய அர்க்கியம் ஸ்வாஹா' என சிரசில் மந்திரநீர் தெளித்தலும் செய்க. அதே மந்திரத்தை வௌஷடாந்தமாகச் சொல்லி ('ஓம் கம் கஷோல்க்காய வௌஷட்') பூ, அறுகு, அட்சதைகளைச் சாத்தவும்.

6.1.5.2 **அபிஷேகம் :** செப்புத்தகட்டில் சூரியசக்கரம் வரையப்பட்டுப் பாவித்தால் அபிஷேகம் உண்மையாகச் செய்யலாம். இல்லாவிடில் பாவனையாகவே செய்க. 1). பீடத்தின் இலையில் அபிடேகப் பொருட்களை வைத்து முறைப்படி ஒவ்வொன்றாக எடுத்து மூர்த்தி முன் காட்டி ஊற்றவும். அல்லது நீரையே எல்லா அபிடேகப் பொருளாகவும் கருதி 'ஓம் கம் கஷோல்க்காய ஸ்வஹா' என ஊற்றவும். 2). வௌஹட் அந்தமாக ஒற்றாடை - நீரொற்றச் சாத்தி, வஸ்திரம் தரித்ததாகப் பாவிக்க. 3). 'ஓம் கம் கஷோல்க் காய நம:' என சந்தனம், புஸ்பம், அறுகு, அட்சதை சாத்தி, மூலத்தால் 3 தரம் புஸ்பாஞ்சலிசெய்க. 4) அதே மந்திரத்தால் அர்க்கியங் கொடுத்து, பிம்ப(53) முத்திரைகாட்டுக. (பிம்பமுத்திரை - பதும(51) முத்திரையாகப் பிடித்த கைகளில் நடுவிரல்களை வில்லாக வளைத்து தொடுதல்.)

6.1.5.3. **சூரியலயாங்கபூசை** : நியாசத்தின்போது சூரிய மூர்த்தியின் உறுப்புகளுக்குச் சொல்லிய ஷடாங்க மந்திரங்களை நம: அந்தமாகச் சொல்லி பூவால் அர்ச்சிக்குக. (சூரிய மூர்த்தியிடம் இதனைச் செய்தபின் அந்த மந்திர தேவர்களைப் போகாங்கமாக வைத்து பூசிப்பதற்கான அனுமதியை அவர்களிடம் பெறுதலே இதுவாகும்.)

**சூரிய போகாங்கபூசை** : மூர்த்தியின் ஆணையால் இருதயம் முதலிய உலகிற்சென்று செயலாற்றல். சூரியமூர்த்தியின் இருதயமாதி உறுப்புக்களிலிருந்து 6 அங்க மந்திரங்களையும் முறையாகச் சங்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரையால் வாங்கி திவ்விய முத்திரையால் தாமரை யிதழ்களிலுள்ள சக்திகளின் மேல் நியசித்து பத்திரங்களால் அர்ச்சித்து, இருதயமுதலிய நான்கிற்கும் தேனுவும் நேத்திரத்திற்கு கோவிஷாண(9) முத்திரையும் அஸ்திரத்திற்கு நிராசனி முத்திரையுங்(6) காட்டி அர்க்கியங் கொடுக்கவும்.

6.1.5.4 **கிரகபூசை** - எட்டிதழ்க் கமலாசனத்தின் நடுவிலுள்ள சூர்ய மூர்த்தியைச் சூழ்ந்து தீப்தை முதலிய சக்திகளுக்குப் பின் இதழ்களின் நுனியில் கிழக்குமுதல் வலமாக 1 ஸோமன் (சந்திரன்) 2 அங்காரகன் (செவ்வாய்), 3 புதன், 4 சனி, 5 குரு, 6 ராகு, 7 சுக்கிரன், 8 கேது ஆகியோர் சூரியனை நோக்கி வீற்றிருப்பர். அவர்களை அவரவர் மூல மந்திரத்தால் அர்ச்சித்து. அர்க்கியங் கொடுத்து, சந்தனம், புஷ்பம் சாத்தி, நமஸ்கார முத்திரையை மூக்கிற்குநேரே பிடித்துக் கும்பிடல் கிரக பூசையாம். **முறை(1).** கூறிய முறையில் கிழக்கிலிருந்து வடகிழக்குவரை ஒரே தடவையாகச் சுற்றிப் பூசித்தல் - சோமசம்பு பத்ததி. **முறை (உ).** முதலில் வலமாக பெருந்திசை சுபக்கிரகங்களையும் பின்னர் மற்றை தென்கிழக்கு முதலான மூலைத்திசைகளில் மீண்டும் வலமாகப் பாபக் கிரகங்களையும் பூசித்தல் - அகோரபத்ததி முறை.

6.1.5.5 **தூபாராதி, செபம், தோத்திரம். ஒடுக்கம்.** நைவேத்தியத்தை பீடத்தின் தெற்கில் வைத்து அர்க்கியத்தாற் புரோட்சித்து சக்கரத்தின் மேற் புஷ்பங்களைத் தூவி ஓம் கம் ஸர்வ கஷோல்காய தூ பம் ஸ்வாஹா என பொதுவில் தூபங்காட்டவும். அவ்வாறே தீபமுங் காட்டவும். நைவேத்தியத்தையும் அவ்வாறேகாட்டி, பின் திவ்வியத்தால் எல்லாருக்கும் தெறித்து, மிருக(19) முத்திரையுடனாய புஷ்பத்தால் அவ்வாறே பானீயமும் தாம்பூலமுங் கொடுத்து, எல்லோருக்கும் ஆசமனம், அர்க்கியங் கொடுத்து, தூபதீபங் காட்டி மணியைக் கீழேவைத்து இருகைகளாலும் 'ஓம் கம் ஸர்வ கஷோல்காய கற்பூரதீபம் ஸ்வாஹா' என எல்லோருக்குங் காட்டி நீறளித்து கண்ணாடி. குடை, கொடி, சாமரம், ஆலவட்டம் முதலியவற்றைப் புஷ்பங்களால் உபசாரமாகக் காட்டிச்சாத்தி முன்போல ஆசமன அர்க்கியங்கள் கொடுத்து ஜெபசமர்ப்பணம் செய்க.

**6.1.6 ஜெப சமர்ப்பணம்.** இடக்கையில் ஒரு பத்திரத்தின் மேல் புஷ்பத்தை வைத்து 'ஓம் ர: அஸ்த்ராய பட்' என அர்க்கிய ஜலத்தைப் புரோட்சித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலக்கையால் மூடி, 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவ ஸூர்யாய நம' என பத்துரு செபித்து. புஷ்பத்தை வலக்கையில் வாங்கி, அந்த மந்திரத்தை வௌஷடாந்தமாக 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவ ஸூர்யாய வௌஷட்' என சொல்லி, அர்க்கியஜலத்துடன் உற்பவ முத்திரையால் (வலச்சுட்டை மடக்கி சுண்டுவிரலை நீட்டி ஏனையவற்றைச் சிறிது வளைத்துப்பிடிப்பது. இந்நூலில் வரும் முத்திரைகளில் இது அடங்கவில்லை.) சூர்யமூர்த்தியின் வலக்கையிற் சேர்ப்பதாகப் பாவித்து விடுத்து, புஷ்பத்தை மூர்த்திக்குச் சாத்திவிடவும். பின்னர் ஷடங்கங்களையும் இவ்வாறு இயன்றளவு அவ்வம் மூர்த்திகளிடம் சமர்ப்பிக்கவும். தோத்திரம் 1) 'வேயுறு தோழி பங்கன் - சம்பந்தர் 2) 'இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத் தெழுகின்ற' திருவாசகம். **பிரார்த்தனை** : பின்னர் எழுந்து, விழுந்து நமஸ்கரித்து, ' ஓம் கம் கஷோல்க்காய நம' என அர்ச்சித்து, 'ஓம் கம் கஹோல்க்காய பராங் முகார்க்கியம் ஸ்வாஹா' என பராங்முகார்க்கியங் கொடுத்து, **'சுவாமி பூசையில் அடியேன் அறிந்தும் அறியாமலும் நிகழ்ந்த குற்றங் குறைகளைப் பொறுத்தருள் புரியவேண்டும்'** எனப் பிரார்த்திக்கவும்.

**சூரியஒடுக்கம்.** 'ஓம் ர: அஸத்ராயபட்' என இருதயாதி ஷடங்க மந்திரங்களை நாராச (64, 35) முத்திரையால் எழுப்பி 'ஓம் கம் கஷோல்க்காய சிவஸூர்ய மூர்த்தயே நம என சூர்யமூர்த்தியிடத்தில் திவ்ய(17)முத்திரையாற் சேர்த்து, சூர்யமூர்த்தியை 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவஸூர்யாய ஹ்ருதாய நம: என திவ்யத்தால் இருதயத்தில் ஒடுக்குக.

**சூரிய தேவியர் கிரகங்களின் ஒடுக்கம். :** 'ஓம் ஹாம் உஷாதேவ்யை பராங் முகார்க்கியம் சுவாஹா', 'ஓம் ஹாம் பிரத்யுஷா தேவ்யை பராங் முகார்க்கியம் சுவாஹா' எனவும், 'ஓம் ஸம் ஸோமாய பராங் முகார்க்கியம் சுவாஹா' எனவும், மற்றுமுள்ள அங்காரகன் (மந் 9) முதலாய எல்லாக் கிரகங்க்கும் அவ்வாறே பராங் முகார்க்கியம் கொடுத்துத் தமது இருதயத்தில் ஒடுக்கவும். (கிரகங்களும் இனிவரும் சிவன் முதலானோரும் அண்டத்திற் போலப் பிண்டத்திலு முள்ளனர்).

6.1.7 **தேஜச்சண்ட பூசை :** சூரியச் சக்கரத்திற்குத் தென்கிழக்கில் ஜலம் தெளித்து, பத்திரமிட்டு அதிற் பூவுமிட்டு 'ஓம் அம் அஸ்த்ராய பட்' என அர்க்கியத்தினாற் தெளித்து, தேசச்சண்ட ஆசன(10) மூர்த்தி(11) மூல(12) மந்திரங்களால் நம: என அர்ச்சித்து, அவற்றிற்கு முறையே சுவாஹா என அர்க்கியங்கொடுத்து, மேலும் இனிச் சிவபூசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்வநிச்சண்டருக்குப் செய்யப்போவது போல ஆவாஹனம் முதல் ஒடுக்கமீறாக தேஜச்சண்டரின் மந்திரத்தால் ஆற்றுக. பெரும்பாலானோர் சிவபூசையில் வரும் ஒடுக்கத்தின் பின்னாற்றும் த்வநிச்சண்டபூசையோடு தேஜச்சண்டபூசையைச் சேர்த்துச் செய்கின்றனர். அவர்கள் சிவபூசை முடிவில் நிரோதார்க்கியங் கொடுத்து சிவபூசை முடியுமட்டும் வீற்றிருக்க வேண்டுவர். இதனால் வியாபகசூரியன் சிவபூசையைத் தரிசித்தருளுவார். (சூர்ய பூசாமூர்த்தி ஏலவே இருதயத்தில் ஒடுக்கப்பட்டுள்ளார்.)

## 6.2. சிவபூசை

6.2.1. **விநாயக, குரு வணக்கங்கள்**. சூரியபூசையின் பின் வடக்காக பத்மாசனத்தி லமர்ந்து, கையலம்பித் துடைத்து, நீற்றை உத்தூளனமாக சிவசிவ என அணிந்து, விநாயகரைத் தியானித்து, ஓம் கம் கணபதயே நம: வென நெற்றியின் மேல் சிகா(1) முத்திரையால் மூன்றுதரங் குட்டி, நமஸ்கார(2) முத்திரையால் நெற்றி நேராகப் பிடித்துக் கும்பிட்டு.

> 'திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
> பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
> ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
> காதலாற் கூப்புவர் தம் கை'
>
> - 11ம் தி.மு. வெண்பா - சங்கராபரணம்).

எனத்துதித்து, 'விநாயகப் பெருமானே அடியேன் இப்பொழுது செய்யும் சிவபூசை இடையூறின்றி இனிது நிறைவேற அருள்புரி வீராக' என ஆவாகன(46,47) முத்திரையால் வேண்டி, குருவணக்கம் - (முன்போல) தீக்ஷா குருமூர்த்தியைத் தியானித்து, ஓம் ஹம் குரவே நம வெனவும் அவரது விஷேட நாமமந்திரத்தாலும் சொல்லி நமஸ்கரித்து. மூக்குநுனிக்கு நேராகப் பிடித்துக் கும்பிட்டு, 'குருவே சிவம் எனக் கூறினன் நந்தி, குருவே சிவம் என்பது குறித் தோரார், குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும், குருவே உரையுணர் வற்றதோர் கோவே'. (திருமந்திரம்) எனவும், 'தோடுகூற்றுப் பித்தாமூன்றும் பீடுடைத்தேசிகன் பேரருளாகும்' என்றும் கூறிப் பின்வரும் தனிவெண்பாவையுஞ் சொல்க.

> 'தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்,
> அந்தமிலா இன்பம்நமக் காவானும் - எந்தமுயிர்,
> தானாகுவானும் சரணாகுவானும்,
> அருட்கோ னாகுவானும் குரு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றில் சுருக்மாயின் ஏதேனுமொன்றைக் கூறிச் சிவபூசை தொடங்கலாம். (கேவலபூசை செய்பவர்கள் சூரியபூசையின்றி, கணபதி, குரு வணக்கத்துடன் சிவபூசை தொடங்குவர்.)

**பிராணாயாமம்** : மனதை அலையாது பூசையில் நிறுத்த பிராணாயாமம் அவசியம். இது அனுட்டானத்தில் அறிந்தது. எனினும் விளக்கிக் கூறப்படுகின்றது.

**முறை** (1) நாவலர் : வலச்சுட்டையும் நடுவிரலையும் உள்ளே மடக்கி, பெருவிரலினால் வலமூக்கைப் பெருவாற் பிடித்துக்கொண்டு ஒருதரமும், மூக்கின் இருபக்கங்களையும் பெரு, நடுவிரலால் பிடித்து ஒருதரமும், அணிவிரலினால் இடதைப் பிடித்துக்கொண்டு ஒருதரமுமாக ஈசாநாய நம: முதலிய 11 - சம்கிதா மந்திரங்களையும் மும்முறை உச்சரித்து நமசிவாய என வலக்காதைப் பொத்துக., (சுருக்கமானது) விரிவானது,

**முறை** (2) நாவலர் கூறியதுபோல விரல்களை வைத்து, 1) அசுத்தவாயுவை, இடதை பெருவிரலால் மூடி வலதால் வெளிவிட்டபின் வலதைமூடி இடதால் உள்ளிழுக்க (பூரகம்), 2) இருமூக்கையும் மூடிக் காற்றை உள்வைக்க (கும்பகம்) 3) ஆரம்பந்திற் போல வெளிவிடவும் (ரேசகம்). பூரகம் 1 பங்கும், கும்பகம் 4 பங்கும் இரேசகம் 2 பங்குமாக நேரம் எடுக்க வேண்டும். அணிவிரலால் இடமூக்கை அமர்த்தி வலதால் உள்ளிருக்கும் அசுத்த காற்றை வெளிவிடல் (சூரியமார்க்கம், பிரமா). விளக்கம் கீழே தரப்படும். அசுத்தவாயுவை கூறியபடி வெளிவிட்டபின்

**விளக்கப் படிமுறைகள்.** 1. பெருவிரலால் வலமூக்கை மூடி இடதால் தூயகாற்றைப் பூரித்து உள்ளிழுத்தல் (சந்திரமார்க்கம் விட்டுணு). 2. அணிவிரல் பெருவிரல்களால் இருபக்க மூக்கையும் மூடி வாயுவை வெளிவிடாது அடிவயிற்றிற் கும்பித்தல் - நிறைத்தல். அப்பொழுது மூலாதாரத்தினின்றும் சுழுமுனை நாடிவழியே ஆறாதாரங்களையுந் தாண்டி சகஸ்ராரம் - உச்சந்தலைவரை ஒளிப்பிழம்பாக பிராணசக்தி 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம' வென்ற மந்திர உச்சாடனத்துடன் மேலேறுவதாகப்பாவித் தல். (குண்டலியில் உறங்கும்சக்தி - விநாயக வணக்கத்தால் ஊக்கமாகி, நாகம் படமெடுத்துப் பாய்வது போலப் பாய்ந்தபின், சிவமகுடமாக நாகாபரணம் காட்சிப்படுவது போன்று, பிண்டத்திலும் காட்சிப்படல்.) 3. கும்பித்த வாயுவை இடதைமூடி வெளிவிடல். (ரேசகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு** !) முற்கூறியவாறு முதலில் அசுத்தவாயுவை வெளிவிடல் தவிர்ந்த பூரகம் கும்பகம் ரேசகம் மூன்றும் முறையே 1க்கு 4க்கு 2 என்ற நேரக்கணிப்பில் இடம்பெறவேண்டும். 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: வென 8 : 32 : 16 என அல்லது 10 : 40 : 20 என இயன்றபடி மனதால் மந்திரித்துக் கணிப்பிடலாம். 2) அடுத்தடுத்து வரும்போது பயிற்சியால் நேரத்தையோ எண்ணிக்கையையோ கூட்டலாம். பழகுவதற்கு சுவர்க்கடிகார நிமிடங்களை அல்லது இலக்கங்களை எண்ணலாம். 3) கும்பித்தலே பிரதானமாகி ஆறாதார நிலைகளை தாமரை மலர்வதுபோலாக்கி ஒளியூட்டுவதால் அவை விரிதற்கேற்றவாறு முற்கூறிய இலக்கங்களுடன் கும்பித்தலில் விரைவுநோக்கி ஹூம்பட் என பலமுறை மந்திரித்தல் சிறந்தது. அவ்வாறாயின் குண்டலி மூலாதாரத்திலிருந்து அடிக்கிழம்பி ஊர்ந்து நெஞ்சு, தொண்டை, அடிநா, நெற்றி உச்சந்தலை- சகஸ்ராரம் வரை செல்லுகையில் அவ்வத்தானத்துத் தாமரை மேலாகவிரிந்து அதில் அதிதெய்வங்கள் வீற்றிருப்ப, அவைமீது உச்சிமேற் 12 அங்குலத்தில் கீழாக நோக்கி மலர்ந்திருக்கும் (பரசிவ) தாமரையின் அமிர்தத்துளி வீழ்வதால் அவை ஒளிர்வதை உணரலாம். **முறை** (3) இந்நூலின் 6.2.2. ஜீவரக்ஷண விளக்கத்தின்பின் வருவது.

**ஸங்கல்பம் : 'ஓம் சிவசிவ சம்போராஜ்ஞாத் தக்காலே மமாத் மார்த்தஞ்ச அஸ்மாஹம் ஸஹ குடும்பாநாம் ஸர்வபாப க்ஷயத்வாரா சதுர்வித புருக்ஷார்த்த சித்யர்த்தம் இதம் சிவபூஜாம் ஹரிஸ்யே'** எனச் சங்கல்பித்து. அட்சதையைச் சிரசிலிட்டு அதில் புட்பமொன்றைச் சிவபீடமாகவைத்து மீளவும் பிராணாயாமஞ் செய்க.

**சகளீகரணம்** : கரத்தில் அங்கத்தில் சிவசொரூபம் அமைத்தல்

**கரநியாசம் : 1**) 'ஓம் ஹ: அஸ்த்ராய பட்' என வல (அக்கினி) கையால் இடதையும் (கங்கை) பின் மாறியும் தடவி, 2) பெருவிரல் அக்கினியை 'ஓம் ஹாம் சக்தயே வௌஷட்' என இரு கைகளையும் சேர்ப்பதாற் தகித்து, 3) இரு பெருவிரல்களையும் மடக்கி 'ஓம் ஹாம் சிவாசநாய நம' வென சிவாசனமமைத்து அதில் 'ஒம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம:' என சிவமூர்த்தியை எழுந்தருளச் செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) **கரத்தில் பஞ்சமூர்த்திகளின் சிரசுமுதலிய உறுப்புக்கள் அமைத்தல்:-** 'ஓம் ஹொம் ஈசான மூர்த்தாய நம: ' என சுட்டினால் பெருவிரலிலும், 'ஓம் ஹெம் தத்புருஷ வக்த்ராய நம: ' என பெருவாற் சுட்டிலும், 'ஓம் ஹும் அகோர ஹிருதாய நம' என பெருவால் நடுவிரலிலும், 'ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம' என பெருவால் அணியிலும். 'ஓம் ஹம் சத்யோயாத மூர்த்தயே நம:' என பெருவாற் சிறுவிரலிலும் நியசி.

ஆ) **வித்யாதேகம் அமைத்தல்**: பெருவிரலினால் உள்ளங்கையில் "ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேகாய நம:' என நியசிக்குக.

இ) **நேத்ரம் அமைத்தல்**. : (ஞான, இச்சா, கிரியா நேத்ரங்கள்) "ஓம் ஹௌம் நேத்ரேப்பியோ நம:' என நடு மூன்று விரல்களாலும் உள்ளங்கையில் நியசிக்குக.

ஈ) **மூர்த்தியில் சிவனை ஆவாகித்தல்** : 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம:' என பெருவிரலினால் உள்ளங்கையில் நியசிக்குக.

உ) **நேத்ரம் தவிர்ந்த அங்கமமைத்தல்**: 'ஓம் ஹாம் ஹிருதாய நம:, ' ஓம் ஹீம் சிரசே நம: ', 'ஓம் ஹூம் சிகாயை நம: ', 'ஓம் ஹைம் கவசாய நம: ', என பெருவால் முறையே சிறுவிரலில், அணியில், நடுவில், சுட்டிலும், 'ஓம் ஹ: அஸ்த்ராய நம ' என சுட்டினால் பெருவிரலிலும் நியசிக்குக.

ஊ) **மதிலாக்குதல்**- அவகுண்டம் 'ஓம் ஹைம் கவசாய வௌஷட் ' சுட்டினாற் சுற்றுக.

எ) **பரமீகரணம்- ஏகீபாவம்**: இருகைகளையுங் கூப்பி மகாமுத்திரை (தாமரைமொட்டுபோல) காட்டி. 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: ' என மேலவற்றை ஒன்றாக்குக.

**அங்கநியாசம்** :- இருதயத்தில் சிவாசனம் அமைக்க, 'ஓம் ஹாம் சிவாசநாய நம: என திவ்யமுத்திரையால் (17) நியசித்து, அதில் மூர்த்தியை எழுந்தருளப்பண்ண அதே திவ்யமுத்திரையால் 'ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தியே நம: ' என நியசித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ) சிவ அவயவங்கள் அமைக்க** : சிரசில் பொத்திய வலப்பெருவிரலினால் 'ஓம் ஹொம் ஈசான மூர்த்தாயே நம: ' எனவும், பெருவிரலோடு கூடிய சுட்டு நடு அணி சிறு விரல்களால் முறையே 'ஓம் ஹெம் தத்புருஷ வக்த்ராய நம ' என முகத்திலும், 'ஓம் ஹூம் அகோர ஹிருதாய நம:' என இருதயத்திலும், 'ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: ' என கொப்பூழிலும், 'ஓம் ஹம் சத்யோதாய மூர்த்தாயே நம ' என காலிலும் நியசிக்குக. **ஆ) சிவ வித்யாதேகம் அமைக்க** : சின்முத்திரை(29)யால், இருதயத்தில் 'ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேகாய நம:' என நியசித்து,

**இ) சிவநேத்திரம் அமைக்க** : வல நடுவிரல்கள் மூன்றினாலும், 'ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: ' என நெற்றியில் 'ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தாயே நம: ' என நியசிக்க. **(ஈ) சிவனை ஆவாகிக்க** சின்(29) முத்திரையால், 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: ' என இருதயத்தில் நியசிக்க.

**ஈ) சிவனுக்குச் சிரசு முதலியன அமைக்க** : பெருவிரலுடன் சிறு, அணி, நடு விரல்களை தனித்தனி சேர்த்து முறையே இருதயத்தில் 'ஓம் ஹாம் ஹிருதாய நம: ' , சிரசில் 'ஓம் ஹீம் சிரசே நம: ', சிகையில் 'ஓம் ஹூம் சிகாய நம: ' என நியசிக்குக.

**உ) மந்திர கவசமமைக்க** : 'ஓம் ஹைம் கவசாய நம:' என இரு சுட்டுவிரல்களினால் (அதோமுகி-7) வல, இடத் தோள்களிலிருந்து நெஞ்சுவரை கழுத்தைச் சுற்றவும்.

**ஊ) சிவாஸ்திரம் அமைக்க :** 'ஓம் ஹ: அஸ்த்ராய நம: ' என (உஷ) இட அணி விரலால் வல உள்ளங்கையையும் மாறி வலஅணியால் இட உள்ளங்கையிலும் நியசிக்குக.

**எ) அசுரரைத் துரத்திக் காக்க :** அதே மந்திரத்தால் 1. இடக்கையில் வலச்சுட்டு, நடுவால் (கோவிஷாண) தட்டி தாளத்திரயம் செய்க. 2. காவலுக்கு, திக்பந்தனம் -சுற்றிச் சுண்டுக. 3. மதில் உண்டாக்க - ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் என அதிதீக்கண முத்திரையால் (சுட்டு நீட்டிக் கவிழ்த்து) சுற்றுக.

**ஏ) ஏகீபாவம் செய்ய** : 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: ' என மகா (22) முத்திரையால் நியசிக்குக. (சகளீகரண முடிவில் பூசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனாந்தன்மையினைப் பாவனையாற் பெற்றுச் சிவபூசைக்குத் தயாரானவர் ஆவார்.)

**6.2.2. கங்காபூசை** : திருமஞ்சனக் குடத்தில் நீரெடுத்து அதில் சந்தனம் விலாமிச்சை வேர் இட்டு நிரீட்சனம் முதலிய அட்டசுத்தி, அர்ச்சனை, நவகங்கை அர்ச்சனை செய்யவும்.

**நீருக்கு அர்ச்சனை** - 1). 'ஓம் ஹாம் ஹிருதாய நம: ' என பூ இடவும். 2). சிவ காயத்திரியால் : 'ஓம் தந்மஹேசாய வித்மஹே வாக் விசுத்தாய தீமஹீ தந்நோசிவ: ப்ரசோதயாத்' என பூ இடவும். **நவகங்கை தியானமும் அர்ச்சனையும் கலப்பும் :** ஓம் ஹாம் கங்காயை நம, ஓம் ஹாம் யமுநாயை நம:, ஓம் ஹாம் கோதாவர்யை நம:, ஓம் ஹாம் ஸரஸ்வத்யை நம:, ஓம் ஹாம் நர்மதாயை நம:, ஓம் ஹாம்

| இல | செய்கை/முத்திரை | விரற் செய்கை | மந்திரம் |
|---|---|---|---|
| 1 | நிரீட்சணம் | வலஅணிமீது பெரு விரல் சேர்த்து (4) இடையிற் பார் | ஓம் ஹாம் ஹம் சிவாய நம : |
| 2 | புரோட்சணம் அங்குச, பதாகை - 16 | விந்து அமிர்தம் தெளி. | ஓம் ஹம் அஸ்ராய பட் |
| 3 | தாடனம் (அதோமுகி) -7 | வலசுட்டால்இடக்கையிலடித்தல் | ஓம் ஹம் அஸ்ராய பட் |
| 4 | அப்பியுக்ஷணம் கவிழ்பதாகை | வலக்கையால்மூடல் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| 5 | தாளத்திரயம் கோவிஷானம். | வலசுட் நடுவால் இடக்கையிலடித்தல் | ஓம் ஹம் அஸ்ராய பட் |
| 6 | திக்பந்தனம் சோடிகா - 10 | சுண்டுதல்,சோடிகா-10 | ஓம் ஹம் அஸ்ராய பட் |
| 7 | அவகுண்டம்,அத்தியுக்ஷம் | சுண்டுவிரலாற் சுற்றல் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| 8 | தேனுவின்பால் | தேனு (12) | ஓம்ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தவே நம:, ஓம் ஹாம் காவேர்யை நம:, ஓம் ஹாம் வேகவத்யை நம:, ஓம் ஹாம் தாமிரவர்ணியை நம: என தியானித்துப் புஷ்ப மிட்டு, அபிஷேக கலத்தால் 3 முறை நிரம்ப முகந்து உயரத்தூக்கி 'ஓம் ஹாம் ஹிருதாய நம: ' என ஊற்றி, ஜலங்களுடன் விந்து ஸ்தானத்து அமிர்தமும் வந்துகலந்ததாக பாவித்து திருமுறையோதி அர்ச்சிக்வும்

ஒன்றா யுலகனைத்தும் ஆனார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி யெங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே
கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப்பழனை யுடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே
திருவாலங் காடுறையும் செல்வர் தாமே.

**அர்க்கிய பாத்திய ஆசமனங்கள் :** பாத்திரங்களை (சூர்யபூசைக்குப் பயன்படுத்தியவை அல்லது வேறு) அலம்பி அஸ்திரத்தாற் புரோட்சிக்கவும். சாமான்யஅர்க்கியம் பரிவார தேவர்களுக்கெனப் பொதுவானது. சிவார்க்கியம் சிவனுக்கேயுரியது. பூசையில் கொடுப்பது பூசார்க்கியம். பூசைமுடிவில் தேவர்களை ஒடுக்கமுன் கொடுப்பது பராங் முகார்க்கியம். பராக்கு - அயற்பார்வை. இவற்றுடன் நிரோதார்க்கியம் (சிறிது தாமதிக்க வேண்டிக் கொடுப்பது.), சுவாகதார்க்கியம் (இனியும் வேண்டும்போது வரும்படி கொடுப்பது)

சிவபூஜாசக்கர (6.2.6) பிரகாரம் பாத்திரங்கள் முதலியவற்றை அவ்வவ் விடத்தில் வைத்து, **சாமான்யார்க்கியம்** - 1) அபிஷேககலத்தில் திருமஞ்சனக் குடநீரை 'ஓம் ஹாம் ஹிருதாய வௌஷட்' என முகந்து, 2) இரு கைகளாலும் கலசத்தைப் பிடித்துப் புருவநடுவரை உயர்த்தி, அங்குள்ள அமிர்தம் அதிற் கலந்ததாகப் பாவித்து 3) இறக்கிக் கொணர்ந்து **சாமான்ய வட்டகையில்** விட்டு, 4) அதில் சந்தனம் புஷ்பம் அட்சதை அறுகு இவற்றை இட்டு, 5) 'ஓம் நம ' வெனும் பிரணவத்தால் பத்திர புஷ்பங்களால் எழுமுறை அர்ச்சித்து, 6) பதாகை(16) முத்திரையால் மூடி மீள அதேமந்திரத்தை எழுதரம் மௌனமாகச் சொல்லி 7) 'ஓம் ஹூம் அஸ்த்ராய பட்' என திக்பந்தனமும். 8) 'ஓம் ஹைம் கவசாய நம: 'என அவகுண்டனமுஞ் செய்து. 9) 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் ' என தேனு(12)முத்திரை கொடுத்து அமிர்தீகரணஞ் செய்க. சாமான்யார்க்கியப் புரோட்சணம். சிவபூஜா சக்கரப் பிரகாரம் அமைத்த சாமான்யார்க்கிய வட்டகையை இடக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கொண்டு, ஜலத்தை ஒரு புஷ்பம் அல்லது பத்திரத்தால் 'ஓம் ஹ: அஸ்த்ராய பட் என தன் தலையிலும் பின் பூசாத்திரவியங்களின் மேலும் புரோட்சிக்க.

### 6.2.3 **சிவத்துவார பூசை** (துவாரம் - வாசல்)

(1) சிவபூசாபீடமே ஆன்மார்த்த பூசாச் சிவகோட்டம் (கோயில்) ஆகும். அது மேற்கு நோக்கிய துவாரத்தை யுடையது. ஆன்மார்த்த பூசை பிரதானமாக வடக்கு நோக்கியே, சுவாமி பூசகரைப் பார்க்கும்படியாக, இருந்து செய்யப்படும். (2) பரார்த்தபூசையில் கருவறையைச் சூழ்ந்த முதல் ஆவரணம் முக்கிய சிவகோட்டம். அது பெரும்பாலும் கிழக்கு நோக்கியும் சில மேற்கு நோக்கியும் வாயில் கொண்டிருக்கும். பரார்த்த்தில், பக்தரின் சுவாமி தரிசனம் பொருட்டாக, பூசகர் வடக்கு நோக்கி சற்றே விலகி பூசைசெய்வர். (3) அதிகார (திருமடங்கள், ஆதீனங்கள்) பூசையில் கருவறையே சிவகோட்டம். அது பெரும்பாலும் தெற்காகவும் சில கிழக்காகவும் வாயில் கொண்டிருக்கும். அதிகார பூசையில் சிலவற்றை நின்று செய்யினும் பூசகர் சுவாமிக்கு எதிராக இருந்தே செய்வார்.

**பஞ்ச சாதாக்கியம் .** (இதன் அறிமுறை விபரம் 7.11ல் சிவத்திருவடிவத் தொகுப்பின் இறுதியிலுள்ளது.) சதாசிவமூர்த்தியின் பஞ்சமுகங்களும் பஞ்ச சாதாக்கியங்களும் : ஈசானம் - சிவ சாதாக்கியம், சத்தியோசாதம் - அமூர்த்தி சாதாக்கியம், வாமதேவம் - மூர்த்தி சாதாக்கியம், அகோரம் - கர்த்திரு சாதாக்கியம், தற்புருஷம் - கன்ம சாதாக்கியம்.

அமூர்த்தி சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியத்திலும், பின் அது, அடுத்துள்ள அகோரத்திலும், அது, தற்புருஷத்திலுஞ் சார்ந்து முடிவில் யாவும் சிவசாதாக்கியத்தில் சாய்ந்திருக்கும். இவைகளில் கன்ம சாதாக்கியத்தில் -தற்புருஷமுகத்தில் பூசையாற்றப்படும். அங்ஙனமாயின் அப்பூசை ஏனையவற்றிற்கும் ஆகும். வாயில் வேறுதிசையை நோக்கியிருந்தால் தற் புருஷமுகம் அத்திசையில் வர, அத்திசையிலுள்ள முகம் 180பாகை சுற்றவேண்டியதால் கிழக்காக வரும். மேலும் தேவைப்படும் சில வழிமுறைகளை 'சிவபூசை' நூலிற் காண்க. ஆன்மார்த்த பூசையில் மேற்குவாயில் என்பது பீடத்தில் பாவித்துக் கொள்ளப்படுவதேயாம். எனவே மேற்குத் துவாரபூசையும் பீடத்தில் விரிக்கப்பட்ட பரிவட்டமீதே செய்யப்படும். அதற்குமுன் பூசைப்பெட்டகத்தை அந்தப் பீடத்தின் நடுவில் வைக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பச்சிம (மேற்குத்) துவாரதேவர் பூசை:** சிவபூஜா சக்கரம் பார்

1). கணபதி : முதலில் மேற்குத் துவாரத்தில் மேல், கீழ்ப் படிகளைப் பாவித்து அவைமீது சாமான்ய அர்க்கியத்தால் மிருக முத்திரையால் பட் அந்த அஸ்த்திரத்தால் புரோட்சித்து, பின் துவாரத்திற்குள் தென்பக்கம் பத்திரமும், பூவை அல்லது சந்தனத்துளியை மூர்த்தியாகவும் துவார மேற்படியில் வெளிநோக்கி வைப்பதாக வைத்து. 'ஓம் ஹாம் கணபதயே நம:' என கணபதியை அர்ச்சித்து,

2). அப்படியே துவாரநடுவில் (சக்கரப்படம்) ஆசனமும் மூர்த்தியும் வைத்து, "ஓம் ஹாம் சரஸ்வத்யை நம: ' என அர்ச்சித்து,

3). மகாலக்ஷ்மியினிடத்தில் முன்போல ஆசனம். மூர்த்தி வைத்து, ' ஓம் ஹாம் மகா லஷ்மியை நம: ' என அர்ச்சித்து,

4). நந்தியினிடத்திலும் ஆசனம் மூர்த்தி வைத்து, 'ஓம் ஹாம் நந்திநே நம:' என அர்ச்சித்து,

5). அவ்வாறே கங்கையை, 'ஓம் ஹாம் கங்காயை நம: ' என அர்ச்சித்து,

6). மஹாகாளரை, 'ஓம் ஹாம் மஹாகாளாய நம: ' என அர்ச்சித்து,

7) யமுனாதேவியையும் அவரிடத்தில் வைத்து, 'ஓம் ஹாம் யமுனாயை நம:' என அர்ச்சித்து, அம்மந்திரங்களாலே அவர்களுக்கு நல்வரவு கூறும் சுவாகதார்க்கியங் கொடுத்து,

'ஓம் ஹாம் சர்வேப்யோ த்வார பாலேப்யோ நம' என பொதுவில் சில பத்திரபுஷ்பங்களைத் தூவி, நமஸ்கார(2)முத்திரையை மார்புநேராகப் பிடித்துக்கொண்டு, 'நீங்கள் பூசாஸ்தானத்தை யாதோர் இடையூறும் வராமல் பாதுகாத்தருளுக' என வேண்டவும். இவ்வேழு பேரும் வெளிநோக்காக நோக்கிப் பாதுகாப்பவர்கள். இதில் சுவாகதார்க்கியம் சிலர் செய்வதில்லை.

'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை பொலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே'
'ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே'

'கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பியென் னுள்ளே நயந்துவைத் தேனே'

தண்டி குண்டோ தரன் பிங்கிருடி சார்ந்த புகழ்நந்தி சங்கு கன்னன்,
பண்டை யுலகம் படைத்தான் றானும் பாரை யளந்தான் பல்லாண் டிசைப்பத்,
திண்டி வயிற்றுச் சிறுகட் பூதம் சிலபாடச் செங்கண் விடையொன் றூர்வான்,
கண்டியூர் கண்டியூர் என்பீ ராகில் கடுகநும் வல்வினை கழற்ற லாமே '

**விக்நோச்சாடநம்** (விக்கினங்களை ஓட்டுதல்) : 1) நேத்ர(34) முத்திரையால் 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம' என இரு கண்களிலும் நியசித்து ஆகாயத்தைச் சிவநோக்காகப் பார்க்கவும். 2) சூரியபூசையிற் செய்ததுபோல 'ஓம் ஹ: அஸ்த்ராய பட்' என இருபூக்களை நாராச(35) முத்திரையால் எறியவும் 3) 'ஓம் ச்லீம் பம் சும் பாசு பதாஸ்த்ராய ஹூம் பட்' என வலதுகுதியால் பூமியை மூன்றுதரம் தட்டுக. இவற்றால் முறையே ஆகாய,கிருஹ, பூமியிலும் அதன்கீழும் வரும் இடையூறுகள் விலகும் என பாவித்து, திருமுறை ஓதவும்.

'எத்திசை புகினும் எமக்கொரு தீதிலை
தெத்தே யெனமுரண்று எம்முன் உழிதர்வர்
முத்தீ யனையதோர் மூவிலை வேல்பிடித்து
அத்தீ நிறத்தார் அரநெறி யாரே'

**துவாரபாலக பூசை** (வாயிற்காவலர் பூசை) : இதுவரை பீடக்கோட்டத்திற்கு வெளியிலிருந்து யாவும் செய்வதாகப் பாவித்தமையால் இனி உட்புகுவதாகப் பாவித்து, சுவாமியின் இடப் பக்கமாக - வடக்காக வலக்காலை முன்னேவைத்துப் புகுந்ததாகப் பாவித்து, படத்தில் சரஸ்வதிக்குக் கீழ்கீழ்ப்படியில் வடக்காக அஸ்திர துவாரபாலர் தெற்குநோக்கி நிற்பதாகப் பாவித்து, ஆசனம், மூர்த்திகளை வைத்து "ஓம் ஹாம் அஸ்த்ர த்வார பாலாய நம:' என அர்ச்சிக்க.

**வாஸ்துபதி (வாஸ்து அதிபதி) பூசை :** அப்பால் வலமாகவந்து (படம்) தென்மேற்கை யடைந்ததாகப் பாவித்து, அன்ன வாகனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருப்பவராகப் பாவித்து, 'ஓம் ஹாம் வாஸ்த்வதி பதயே ப்ரஹ்மணே நம:' என அர்ச்சித்து, முதலில், 'ஓம் ஹாம் அஸ்த்ர த்வார பாலாய ஸ்வாஹா' என அர்க்கியங் கொடுத்துப் பின், 'ஓம் ஹாம் வாஸ்த்வதி பதயே ப்ரஹ்மணே ஸ்வாஹா' என அவரவர்க்கு அர்க்கியங் கொடுத்து, நமஸ்கார முத்திரையால் மூக்கிற்கு நேராகப் கும்பிட்டு,

'மூவெ யில்செற்ற ஞான்றுய்ந்த மூவரில் இருவர் நின்திருக் கோயிலின்
வாய்தல் காவலாளரென் றேவிய பின்னை ஒருவன் நீகரி காடரங்காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ மணி முழாமுழக்க அருள் செய்த
தேவ தேவநின் திருவடி அடைந்தேன் செழும் பொழிற்திருப் புன்கூர் உளானே

7ம் தி.மு. பண் - தக்கேசி (காம்போதி)

**வ்ருஷதேவர் (இடபதேவர்) பூசை :** படத்தின்படி திரும்பி சுவாமிக்கு வலமாக தெற்காக வந்ததாகப் பாவித்து, கோயிலில் இடபதேவர் இருப்பதுபோல இங்கிருப்பதாகப் பாவித்து. ஆசனம் மூர்த்திகளை வைத்து, 'ஓம் ஹாம் வ்ருஷபாய நம' என்று அர்ச்சித்துக் கும்பிட்டு, 'ஓம் ஹ: அஸ்த்ராய பட்' என சாமான்ய அர்க்கியத்தால் பூசைத் தானத்தைப் புரோட்சித்து. திக்பந்தனம். அவகுண்டங்களைச் செய்து, கரநியாசம் செய்து, பஞ்சசுத்தி தொடங்குக.

**6.2.4 பஞ்சசுத்தியில் பூதசுத்தியும், அகப்பூசையும் :- (1) பூதசுத்தி** - இதில் தூலவுடலின் கூறுகளாகிய பிருதிவி முதலிய தூல பஞ்ச பூதங்களையும், சூக்குமவுடலின் கூறுகளான சுவை முதலான பஞ்ச பூத நுட்பங்கள், மனம், புத்தி, அகங்காரமெனும் அந்தக் கரணங்கள் கூடிய புரியட்டகத்தையும் சுத்தி செய்தல். அதற்கு முன் ஆன்மாவை அச் சரீரத்திலிருந்து வெளியேற்றிப் பாதுகாத்தல் எனும் ஜீவரக்ஷை செய்தல் வேண்டும்.

**ஜீவரக்ஷ்ணம் விளக்கம்** : ஜீவன் இருதயத்தில் 'ஹம்' எனும் பீஜ எழுத்துருவில் நட்சத்திரம்போல் இருக்கின்றது. இருதயம், கண்டம், அடிநாக்கு, புருவநடு, உச்சந்தலை எனுமிடங்களில் 5 தாமரைகள் கீழ்நோக்கி மலராய், அரும்பாய் இருக்கின்றன. அவை பிராணாயாமத்தினால் மேல்நோக்கி மலருமாயின் அவ்வத் தானங்களில் முறையே பிரமா, விஸ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய காரணேஸ்வரர் ஐவரும் விளங்கி வீற்றிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(**குறிப்பு** : இவர்கள் பஞ்சகிருத்திய அதிபர்களாயும் இருப்பதை சிவத்திருவடிவ அட்டவணையில் 7.10ல் காண்க. ஆறாதாரங்களையும், அவை முள்ளந்தண்டுடன் தொடர்பாவதையும், ஆறாதார அதி தெய்வங்களையும், மேற்படி ஐந்து தானங்களினின்றும் வேறுபடுத்தி யுணர்க. சிவபூசை மேலாலவத்தை நிகழும் இருதயமுதல் உச்சி வரையான தானங்களில் என்பதும் கீழாலவத்தை நெற்றி முதல் மூலாதரம் வரை என்பதுங் காண்க. அந்தத் தாமரை அரும்புகள் சுழுமுனாநாடி மேல் அடுக்காகவுள்ளன. சுழுமுனா - நடுநாடி இருகாற் பெருவிரல்களிலும் இருந்து மேற்சென்று மூலாதாரத்தில் ஒன்றாகி உள்ளே துளையுடையதாய் முதுகந் தண்டின் மேலே இருதயம் முதலிய 5 இடங்களிலும் சென்று (முதுகந் தண்டிலிருந்து கூறிய 5 இடங்களுக்கும் நாடிநரம்புத் தொடர்புகளுண்டு) உச்சந்தலையில் முடிவாய் நிற்கும். அச் சுழுமுனாநாடியின் உள்ளும் புறமும் குண்டலினி சக்தி வியாபித்து அதில் அமிர்தத்தைப் பொழியும். குண்டலியின் இருதய பீஜமான 'ஹூம்' விளக்கொளியுடன் பிரகாசிக்கும். இயல்பாக, மூச்சுக் காற்றானது, வலமூக்கு - பிங்கலை, இடமூக்கு - இடைகலை வழியாக இரு நாடிகளில் இயங்குகின்றது. இதன் போக்கைப் பூசகர் தமது விருப்படி அடக்கி இயக்குவதே பிராணாயாமம். பிராணன் - மூச்சுக்காற்று, ஆயாமம்- அடக்குதல். இதனாற் சிவோகம்பாவனை கைகூடலும் எளிதாகும்.

**பிராணாயாமம்** (முன்னர் குரு வணக்கத்தின் பின்னுங் கண்டோம்) விளக்கங்களை சிந்தித்துக் கொண்டு, மனதை ஓடவிடாது உள்ளே, மேற்சொல்லிய குண்டலியின் இருதய பீஜமாகிய 'ஹூம்' எனும் பீஜத்தில் ஊன்ற வைத்து, அநுஸ்டானத்திற் போற் பிராணாயாமஞ் செய்தல் வேண்டும். (வலமூக்கால் அசுத்தகாற்றை வெளியிட்டபின் இடமூக்கால்) தூயகாற்றை உள்வாங்கி (பூரகஞ்செய்து), நடுநாடியாகிய சுழுமுனா நாடியின் உட்துளையால் இருதயத்திலிருந்து மேலே கண்டம், அடிநா, நெற்றி, உச்சந்தலை ஆகிய தானங்கள் வழியாக துவாதசாந்தமெனும் உச்சிக்குமேலே 12அங்குலத்திலுள்ள தானம் வரை ஏற்றி, சோடிக(10)முத்திரையால் (வலசுட்டுவிரல் கீழ்நோக்கிய பெருவிரலின் நடுவைத்தொட்டும், ஏனையவை மடக்கியும்) 'ஹூம்பட்' என 5 முறை சொல்லி ஒவ்வொரு முறையும் (5 தரம் 5 ஆக 25 முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி) இருதயம் முதலிய இடங்களிலுள்ள அரும்புகளை (அவ்வவ் விடங்களில் சோடிக முத்திரையாற் தொட்டு) மலரச்செய்து அங்ஙனம் மலர்ந்ததாகப் பாவித்து அடக்கிய (கும்பகஞ் செய்த) வாயுவை வல (பிங்கலை) நாடி வழியாக வெளிவிட (இரேசகம் செய்ய) வேண்டும். 7.5ம் பார்க்க) பெரு, அணி விரல்களின் உதவியின்றி பிரணயாமம் செய்து பழகுதல் வேண்டும். இது பூத சுத்தியின்போது மிகவும் வேண்டப்படும்.

**ஜீவரஷணம்** - பிராணாயாமத்தின் பின்னர் பூசகர் தனது ஆத்மா சூக்கும-புரியட்டக தேகத்தினின்றும் பிரிந்து ஹிருதய கமலத்தின் நடுவில் அறிவுருவாய் 'ஹம்' எனும் ஆத்மபீஜ வடிவாய், நட்சத்திரம் போலப் பிரகாசிப்பதாகத் தியானித்து, மீண்டும் முன்போல பிராணவாயுவைப் உள்வாங்கி (பூரித்து) அதனை (ஆன்மாவை)ச் சம்கார (பெருவிரல் நீட்டி 24) முத்திரையால் 'ஓம் ஹூம் ஹாம் ஹம் ஹாம் ஹூம் ஆத்மநே நம ' எனும் ஆத்ம(22) மந்திரத்தால் வாங்கி, பூரிக்கப்பட்ட வாயுவோடு, முன்போல கண்டம் முதலாக மேலேற்றி (கும்பித்து) துவாதசாந்தத்தில் விளங்கும் சிவனிடம் ஒப்புவிக்கவும். (ஆன்மா மீண்டும் வந்து சரீரத்திற் புகுந்து வினைப்பயன்களை அனுபவிக்கவுள்ளதாக நினைந்தே சிவனிடம் பாதுகாப்பாக 'உன் கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்றவாறு ஒப்புவித்தலைச் செய்யவேண்டும்.) 4ம் திருமுறை குறுந்தொகை, நாதநாமகிரிய. 'ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம், நான்றி லாவி யிருப்பனென் நாதனைத், தேன்றி லாவிய சிற்றம் பலவனார், வான்றி லாவி யிருக்கவும் வைப்பரே'.

பூதசுத்தியின் மற்றோர் அங்கமான **சரீரசுத்தி :** பத்ததிகளிற் பல முறைகள் இருப்பினும் இரு முறைகளே இங்கு கூறப்படுகின்றது. **ஒருமுறை:-** பத்மாசனத்தில் அமர்ந்து இரு கைகளையும் மடித்த முழங்கால்களின் மேல் சின்முத்திரையாக வைத்துக் கொண்டு, வடக்காக நிமிர்ந்து (கண்களைச் சிறிதே மூடி) இருந்து கொண்டு, தமது உடலை, வேர் மேலாகவும் கிளைகள் கீழாகவும் உள்ள ஆலமரமாகப் பாவிக்கவும்.

**குறிப்பு : ஆலமர அமைப்புப் பாவனை** :- இம்மரம் பஞ்ச பூதங்களின் தொகுதியாகிய விதையிலிருந்து பிரமவிட்டுணுக்களால் முளைப்பித்து வளர்க்கப்பட்டது. இதன்தன்மை : **1). வேர்கள்** :- ஆணவ காரியங்களான ஆசையெனும் இராகம், கோபமெனும் துவேசம், தர்மம், அதர்மம், மயக்கமெனும் மோகம், **2) வளர்ப்போர்**:- விஞ்ஞானகலராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தவித்தியா தத்துவத்திலுள்ள சப்தகோடி மகாமந்திரேசுரர்களும், ஈச்சுர தத்துவத்திலுள்ள அட்ட வித்தியேசுரர்களும். **3). உள்ளார்ந்த சாரம் :-** வித்தியா தத்துவங்கள், **4). கிளைகள்** :- சப்தம் முதலிய 5 தன்மாத்திரைகள், செவி முதலிய 5 ஞானேந்திரியங்கள், பாதமுதலிய 5 கன்மேந்திரியங்கள், **5) தளிர் :-** சப்தம் முதலிய விடய தன்மாத்திரைகள் (புலன்கள்), **6) புஸ்பம் :-** தர்மம் ஞானம் முதலிய புத்திகுண பாவங்கள் (இவை சிவபூசையின் முதலாம் ஆவரணங்கள்), **7) பழம் :-** புத்தி மன வியாபாரங்கள், **8) பழத்தை உண்ணும் பறவை :-** ஆன்மா, **9) தெவிட்டாத சுவை :** (மேற் கூறப்பட்டவற்றின் இயல்புகள்.). மாயை மேலிருந்து கீழாக 1). சுத்தமாயை யெனும் சிவ தத்துவத்தில் உள்ளதாய், உயிரை வளர்ப்போராய சப்த(7)கோடி மகாமந்திரர்கள், அட்டவித்தியேசுரர் ஆதியோர் வதியும் புவனங்களைக் கொண்டது. 2), சுத்தாசுத்தமாயை வித்தியா தத்துவங்களின் இடம். 3). அசுத்தமாயை தளிர், புஷ்பம் முதலியனவாகக் கூறப்பட்ட 24 ஆன்ம த்துவங்களின் இடம். ஆதலால் பிரபஞ்ச முதற்காரணமான மாயை மேலானமையால் மரப்பாவனையில் வேர் மேலாகின்றது (பிறவிக்கு மாயை வித்துப் போல , மரத்திற்கும் வித்து உண்டு).

**சரீரதகனம் :** இவ்வாறு பாவிக்கப்பட்டதாகிய ஆலமரத்தை எரிப்பதாகப் பாவித்தல். இதற்காக, 1). பிராணவாயுவை 6 மாத்திரை காலம் இடமூக்கால் முற்பாதியாக பூரித்து (உள்வாங்கி) நிவர்த்திகலா பீஜத்தை (ஓம் ஹ்லாம்) 5தரம் சொல்லி, வலக்லகையை உச்சிமேல் உயர்த்தி, மரத்தின் இலைகளும், பூக்களும் உதிர்ந்துபோக மரம்மட்டும் உள்ளதாகப் பாவித்து, 2.) முன்போல 6 மாத்திரை வாயுவைப் பிற்பாதியாக பூரித்து, பிரதிஸ்டாகலா பீஜத்தை (ஓம் ஹ்வீம்) 4தரஞ்சொல்லி, வலக்கையை மீண்டு முயர்த்தி உதிர்ந்தவை தழைத்து நிற்பனவாகப் பாவித்து, 3), வாயுவைக் கும்பித்து (உள்நிறுத்தி), வித்யாகலா பீஜத்தை (ஓம் ஹ்ரூம்) 3 தரம் சொல்லி வலக்கையை மீண்டும் உயர்த்தி வலக்காற் பெருவிரலில் இருந்து கிளம்பிய காலாக்கினியால் மரம் யாவும் எரிந்துபோக நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகள் மட்டும் நிற்பதாகப் பாவித்து, 4) பிராணவாயுவை வலதால் முற்பாதியாக இரேசித்து சாந்திகலா பீஜத்தை (ஓம் ஹ்யைம்) இருதரம் சொல்லி வலக்கையை உயர்த்தி எரிந்த மரச்சாம்பல் 10 திசைகளிலும் பறந்து போனதாகப் பாவித்து, 5) மீளவும் வாயுவை 6 மாத்திரை வலதால் பிற்பாதியாக இரேசித்து சாந்தியதீதகலா பீஜத்தை (ஓம் ஹ:) ஒருதரஞ் சொல்லி வலக்கையை உயர்த்தி பறந்த சாம்பல்கள் சுத்த ஸ்படிக (பளிங்கு) ரூபமாயும், நித்தியமாயும் உள்ள பரமாகாசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபித்துத் தூய்மையானதாகப் பாவித்து, பின் **சரீர சிருஸ்டியும் அமிர்தப் பிலாவணமுஞ்** செய்க.

அதற்காக 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்' என்ற மந்திரத்தைச் சொல்லி அதனாலே இயல்பாகவே துவாதசாந்தத்தில் கீழ்நோக்கி மலர்ந்திருக்கும் தாமரை மலரிலிருந்து ஒழுகுகின்ற அமிர்த தாரகையால் அச்சாம்பல் முழுவதும் நனைந்து, சரீரம் முன்போலவே உண்டாகிப் பின்னும் அச்சரீரம் அமிர்தப் பிரவாகத்தால் நன்றாய் நனைந்து அமிர்த மயமானதாகப் பாவிக்கவேண்டும். இதனால் எல்லாத் தத்துவங்களும் தூய்மையாகி விடுவதால் சூக்கும, தூல மெனும் இரு சரீரங்களும் சுத்தியாகி விடுகின்றன.

**மற்றொரு முறை சோமசம்பு பத்ததி)** இதில் சூக்கும, தூல தேகமிரண்டும் வேறாகப் பிரிக்கப்பட்டுச் சுத்தம் செய்யப்படுகின்றன.

**சூக்குமதேக சுத்தி** : முதல் முறையிற் கூறியதுபோல அமர்ந்து கொண்டு பஞ்ச தன்மாத்திரைகளில் சப்தமும் பரிசமும் பிரமாவிடத்திலும், ரசம் விஸ்ணுவிடத்திலும், ரூபமும், கந்தமும் உருத்திரனிடத்திலும், அந்தக்கரணங்களில் புத்தியும், அகங்காரமும் மகேஸ்வரனிடத்திலும், மனமும் விந்துவும் சதாசிவரிடத்திலும் ஒடுங்கியதாகப் பாவிக்கையில் இத் தத்துவங்களாலாய சூக்குமதேகம் சுத்தியாகும்.

**குறிப்பு**: விஞ்ஞான உண்மைகள் இங்கும் பேசப்படுகின்றன. நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் என்ற பஞ்சபூதங்களை திண்மம், திரவம், வெப்ப-சக்தி, வாயு, வெளி என்ற சொற்களால் அழைக்கலாம். எவ்வாறு அழைத்தாலும் இவையே உடலுக்கும் உலகுக்கும் தோற்றத்தைக் கொடுப்பன. அதனால் அவை தூலமாகத் தென்படுகின்றன. இதில் நிலத்தில் அதன் குணமாய கந்தத்துடன் ஏனைய 4 பூதங்களின் குணங்களான நீர் - ரசம், தீ - ரூபம், வாயு - பரிசம், ஆகாயம் - சத்தம் என்பனவும் அடங்கும். 'பாரினில் ஐந்தாய்ப் பரந் தாய் போற்றி'' மணிவாசகர்), நீரில் கந்தம் தவிர்ந்த நான்காயும், அவ்வாறே தீயில் மூன்றாயும், காற்றில் இரண்டாயும், வெளியில் ஒன்றாயும் உள்ள குணங்களில் இறைவன் (அட்ட மூர்த்தத்தில்) ஐந்தாகப் பரந்துள்ளான்.

**தூலதேக சுத்தி :**கண் முதலாய ஞானேந்திரியங்கள், கை முதலாய கன்மேந்திரியங்கள் ஐம்பூதங்களில் அடங்குவனவாக வைத்து அவ் வைம்பூத சுத்தியே ஸ்தூலதேக சுத்தியாம். சப்த, ஸ்பரிச,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூப. ரச, கந்தமெனும் ஐந்து குணங்களும் பிராணவாயுவால் நீங்க அக்குணங்களையுடைய பஞ்சபூதங்களும் ஒன்றால் ஒன்று (பரஸ்பரம்) சுத்தியாகும். பிருதிவி வாயுவில் ஒடுங்கி அதன் மயமானதாகவும், இவ்வாறே அப்பு-நீர் தேயுவிலும், தேயு அப்புவி லும், வாயு பிருதுவியிலும், ஆகாயம்-வெளி விந்துவாகிய பரமாகாசத்திலும் ஒடுங்கி அதன் மயமானதாகவும் பாவிக்கவேண்டும். பிருதுவி - பொன்மை, அப்பு - வெண்மை, தேயு - செம்மை, வாயு - கருமை, ஆகாசம் - புகைமை (தூய்மை கருதிப் படிகம் அல்லது பளிங்கு எனலாம்) ஆகிய நிறங்களைக் கொண்டன. பிராணாயாமத்தில் இப்பூதங்களைத் தியானிக்கும்போது தன்தேகத்தை அவ்வப் பூத வடிவுடையதாகத் தியானிக்கவேண்டும். நிவிர்த்தி, பிரதிட்டை, வித்யா, சாந்தி. சாந்தியதீதை ஆகிய பஞ்சகலைகளுக்குரிய பீஜங்களாகிய ஓம் ஹ்லாம், ஓம் ஹவீம், ஓம் ஹ்ரூம், ஓம் ஹைம், ஓம் ஹௌம் என்பவையே பிருதுவி முதலாய 5 பூதங்களுக்கும் உரியன.

இச் சுத்தியின் பின்னர் மேற்சொன்ன சரீரதகனமும் அமிர்தப்பிலாவணமும் செய்தல் வேண்டும். 'ஓம் ஹ: அஸ்திராய பட்' என்று வலக்காற் பெருவிரலிலுள்ள காலாக்கினியை எழுப்பி அதனால் இருவகைச் சரீரங்களையும் பிராரத்த கன்மத்தால் வந்து பற்றியிருந்த குற்றங்கள் எரிந்து போனதாகப் பாவிப்பதே இங்கு சரீரதகனமாம்)

**ஆத்ம ஸ்தாபனம்** : இவ்வாறு சுத்தியான சரீரத்தில் முன்பு சிவனிடம் ஒப்புவித்த ஆன்மாவை மீளக் கொணர்ந்து ஸ்தாபித்தல். படிமுறைகள்: (1). தண்டு, இலை, விதை இவைகளோடு கூடியிருக்கின்ற இருதயகமல மலரை, அகார, உகார, மகாரமாதிய 3 கலைகளோடு கூடிய பிரணவமந்திரத்தால் உண்டாகி, சுத்தவித்தையெனும் சுத்ததத்துவமாயுள்ள, ஆசனமாகப் பாவித்து, 2) அதன்மேற் சூக்கும சரீரத்தை அ, உ, ம மூன்றினுடன் விந்துவுங் கூட நாற்கலைகளாலாகிய பிரணவரூபமாகப் பாவித்து, 'ஓம் ஹாம் ஹ்ருதாய நம: ' என்று திவ்ய (17) முத்திரையால் நியசித்து, (3). சிவனுடனிருந்ததால் சிவத்தன்மை யடைந்த ஆன்மாவை, மேலானவற்றுடன் நாதமுங்கூட வரும் ஐங்கலைப் பிரணவ ரூபமாகப் பாவித்து, (4) பூரகத்தால் 'ஓம் ஹாம் ஹம் ஹாம் ஆத்மநே நம' என்று ஆத்ம (22) மூலத்தால் சங்கார (24) முத்திரையால் வாங்கி, சுழுமுனாநாடியுட் செலுத்தி, சூக்கும தேகத்தில் ஒளிவடிவினதாகத் தாபித்து, (5) 'ஓம் கௌம் சக்தியே வௌஷட் " என்று (குண்டலி) சக்தியினின்றும் பெருகி வருகின்ற அமிர்த தாரகையில் முழுகித் தூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ய்மை பெற்றதாகப் பாவிக்கவேண்டும். முதலாம் தி.மு. பண் - நட்டபாடை (நாட்டை). தலம் - திருமறைக்காடு. (பூதங்கள் ஒன்றாலொன்று சுத்தியாதல்)

'இருநில னதுபுன லிடைமடி தரஎரி புகஎரி யதுமிகு
பெருவலி யினில்அவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட
இருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு வுடையவன் இனமலர்
மருவிய அறுபதம் இசைமுரல் மறைவனம் அமர்தரு பரமனே'.

கந்தபுராணத்தில் சூரன் படைகளை முருகன் அழித்த ஒழுங்கு : பிருதிவிப் படைகளை அப்பு (நீரத்தாரை)யினாலும், அப்புப் படைகளை தேயுவினாலும, தேயுப் படைகளை வாயுவினாலும், வாயு - நாகாஸ்திரப் படைகளை 'ஹூம்'கார ஆகாசத்தொனி யெனும் படையாலும் அழித்தார். வியன் எனும் ஆகாசமே பரந்து இடமளித்தல் எனும் ஒரு குண முடைத்தாகி தன்னுள் ஏனைப் பூதங்களைக் கொண்டிருப்பது. ஆக, ஆகாசத் தொலியாகிய மந்திரங்களே மிக்க வலுவாகின்றன.

குறிப்பு :- **1) அந்தர்யாகத்திற்கு முன் அறியவேண்டியது-** அகப்பூசை நினைவு மாத்திரையாற் பூசிக்கப்படும். அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் என்றபடி புறத்தில் ஜலம், புஷ்பம் முதலியவற்றை அகத்திலிருந்து எண்ண மாத்திரையால் எடுத்து பூசலார் மனக்கோவில் கட்டியதுபோல இங்கே அகப்பூசை ஆற்றப்படுகின்றது.

2) பரீட்சைக்குச் செல்லும் மாணவன் பாடக்குறிப்புகளை ஏலவே மனதிற் பதித்து, தெளிவான உள்ளத்துடன மறுநாட்சென்று பரீட்சை எழுதிச் சித்தியாவது போன்றதுடன் ஒப்பீடு செய்தலும் பொருத்தமானது. ஆகையால் அந்தர்யாகம் பகிர்யாகத்திற்குப் பிரதான முன்னோடியாம்.

3) இதற்குப் பூரண சைவசித்தாந்த தத்துவ விளக்கம் அவசியம். இறைவன் 36 தத்துவங்களையும் (அண்டத்திலும், பிண்டத்திலும்) கடந்து அவற்றையே தாமரையாசனமாக்கி இருதயத்திலிருந்து பிரமாமுதலிய தடத்தவடிவில் உச்சியீறாக சதாசிவனாக வீற்றிருக்கின்றான் என சரீரசுத்தியிற் கண்டோம். பிண்டத்தில் (அகத்தில்) உச்சந்தலைவரை பிரணவங் குறிக்கும் 36 தத்துவங்களும் உளவாதலின் அவன் தலையுச்சி மேல் இருப்பான். அப்பர் இதனை, வஞ்சித்தென் .... அஞ்சிப்போய் கலிமெலிய அழலோம்பும் அப்பூதிக் குஞ்சிப்பூவாய் நின்ற சேவடி.. யெனக் குறிக்கின்றார். 'சிவபூசையில் அப்பூதியடிகள் உச்சிக்குடுமி மீதிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவில் அமர்ந்துள்ள சிவனைக் கூவியழை அன்னமே' என்கின்றாளாம் சிவன்மீது காதல்வசப்பட்ட ஒருத்தி. 'ஆதாரத் தாலே நிராதா ரத்தே சென்று மீதானத் தேசெல்க வுந்தீபற விமலற்கி டமதென் றுந்தீபற' - திருவுந்தியார். ஆதாரம் - உடலின் ஆறாதாரம். மீதானம் - தலையுச்சி. 'ஊனில் உயிர்ப்பை யொடுக்கி ஒண்சுடர் ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்து ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர் ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே'- பிராணாயாமம், சிவோகம்பாவனை என்பன பற்றிச் சம்பந்தர் கூறியவையே இவையாம்.

### 6.2.5. அந்தர்யாகம்- அகப்பூசை:-

நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே - தாயுமானவர். அகப்பூசையில் சிவனுக்கு ஆசனமாவது இதயத்தாமரையே. அகப்பூசையில் இருதயம் பூசாஸ்தானம், நாபி ஓமஸ்தானம், புருவநடு தியானஸ்தானம். ஆகவே 1) இருதய கமலத்திலிருக்கும் சுவாமியை மனதாற் கொணர்ந்து புஷ்ப முதலியவற்றால் சத்தியாதி சத்திபரியந்தம் பூஜித்து, ஆவாஹனாதிகளும் மனதாற் செய்து, 2) விந்து ஸ்தானத்திலிருந்து பெருகும் அமிர்த தாரகையாகிய நெய்யினால் நாபிகுண்டத்தில் ஹோமம் செய்து சுவாமிக்கு அர்ப்பணித்து, 3) புருவ மத்தியில் சுவாமியை பிரகாசிக்கும் நட்சத்திர வடிவமாகத் தியானித்து, சுவாமி உம்மை வெளியிற் பூசிக்க வேண்டுகிறேன். எனப் பிரார்த்தித்து அனுமதி பெற்று ஸ்தானசுத்தி முதலாய புறப்பூசை தொடங்குக.

இனி :-36 தத்துவங்களையுங் கடந்த தத்துவாதீதனாய் நிற்பவன் சிவன். ஆகையால் 36 தத்துவங்களும் அவனுக்கு (ஓங்கார பீடமெனும்) ஆசனமாம். அகத்தில் பிண்டதத்துவங்களும், புறத்தில் அண்டதத்துவங்களும் தாமரைமலராகி சிவாசனமா யமையும். அதனால் இதயத்தாமரையை 36 தத்துவங்களாலான தாமரையாகப் பாவிக்க வேண்டும். **இதயத்தாமரையை 36 தத்துவ வடிவிலான தாமரையாகப் பாவித்தல் : (நூல் இறுதிப் படம் 10.1 பார்க்க)**

**(1) பிருதுவி தத்துவம் :-** சிவனது சக்தி ஆதாரசக்தியாய் அனைத்துப் புவனங்களையும் (ஏழுலகினையும்) ஆமை (கூர்ம) வடிவாயிருந்து தாங்குகின்றதால் அவ்வாசனம் கூர்மாசனமாம். கூர்மாசனத்திலேயே சிவலிங்கப் பிரதிக்ஷ்டை செய்யப்படும். கூர்மாசனத்திற்குள் பிருதிவியெனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஒடுக்கமுறையில் முதலாம்) தத்துவமே இருதயகமலம் முளைப்பதற்காய கிழங்காகும். (எல்லாமாகவுள்ள 224 புவனங்களில் இதில் 108 புவனங்களுள்ளன). ஸ்திராசன 40 மந்திரங்களில் இதற்கு மந்திரம் ' ஓம் ஹாம் ஆதாரசக்தியே நம: ' ஆகும்.

(2) **24 ஆன்ம தத்துவங்களில்,** பிருதிவிக்குமேல் படிமுறையாக உயர்ந்துள்ள அப்புமுதல் குணமீறான 23ம் கிழங்கினின்று முளைத்த 8 விரற்கிடையளவு வளர்ந்த தாமரைத் தண்டாகும். அத் தத்துவங்களிலுள்ள (164 -108) 56 புவனங்கள் அதிலுள்ள முட்களாகும்.

(3) குணத்தின் மேலுள்ள 25ஆம் **மூலப்பிரகிருதி** (வெளிப்படாத, அவ்வியக்தமான) தண்டினையும் பூவினையும் இணைக்கும் கிரந்தி (முடிச்சு). இது சுத்த, சுத்தாசுத்த மாயையையும் அசுத்த மாயையையும் இணைப்பது. (குறிப்பு-சித்தத்தை தத்துவமாகக் கொள்ளாது மூலப்பிரகிருதியைக் கொள்ளின் அது 24ம் தத்துவம். சித்தத்தைக் கொள்ளின் பிரகிருதி (24அ) என சித்தாந்த விளக்கப் படங்களிற் காண்க.)

(4) பிரகிருதியின் மேலுள்ள **7 வித்யா தத்துவங்களும்** சுத்த தத்துவங்களின் கீழ் - ஐந்தாவதாக வரும் சுத்தவித்தை ஒன்றுமாக 8 தத்துவங்களும் 8 இதழ்களாகும்.

(5) சுத்தவித்தைக்கு மேலுள்ள **ஈசுரமும் சாதாக்கியமும்** இதழ்களின் நடுவிலுள்ள கேசரங்கள். அவை நாக்கு (உளை)எனப்பட்டு மகரந்தங்களைக் கொண்டிருக்கும்.

(6) **சக்திதத்துவம் 64** கேசரங்களாற் (8 திக்குகளிற்கும் எட்டெட்டாக) சூழப்பட்டு அதன் நடுவிருக்கும் பொகுட்டாகும்.

(7) **சிவதத்தவம்** பொகுட்டினுட் புதைந்துள்ள கர்ணிகை (விதை) களாகும். மேலும் அவை 51 அட்சரங்களையுங் வன்னம் அல்லது (வர்ணம்) குறிப்பன. இவ்வாறமைந்த இருதய கமலாசனத்தில் சக்தி மூர்த்தியாகவும், சிவன் மூர்த்திமானாகவும் உயிர்களை உய்விக்கும் பொருட்டு எழுந்தருளியுள்ளதனை நினைந்து அகத்திற் பூசிக்கவேண்டும்.

**பஞ்சாசனம் :** இந்தத் தொகுப்பான ஓர் ஆசனமே (கூர்மாசனத்தின் மேலாக) அனந்த, சிம்ம, யோக, பத்ம (கமல), விமல எனும் 5 பிரிவாயும் உள்ள ஆசனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1). **அநந்தாசனம்** (17 தத்துவம்) கூர்மாசனத்தின் மேல் முளைத்துவந்த தண்டாகி கன்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, தன்மாத்திரை 5, மனம், அகங்காரம் எனும் 17 தத்துவங்களின் மேல் அநந்ததேவர் வீற்றிருக்கின்றதால் இது அநந்தாசனம் எனப்படுகின்றது. இவர் வித்தியேசுரர்களின் தலைவரில்லை, வேறானவர். ஆயிரந்தலையுடைய ஆதிசேடன் எனப்படுபவர். அநந்தன், வாசுகி, தட்சகன், கார்க்கோடன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகாபத்மன் எனும் அட்டமாநாகர்கள் முறையே கிழக்கிலிருந்து வடகிழக்கு ஈறான 8 திக்குகளிலும் அமர்ந்து இவரையே நோக்கியிருப்பர். (**குறிப்பு** - பஞ்சபூதங்களில் இங்கே பிருதுவி கிழங்காக எண்ணப்பட்டு , ஏனை நீர், தேயு, வாயு, ஆகாசம் ஆகிய நான்கும் முளைப்பதற்கு தேவையேயாயினும் அவை தாமரையின் அமைப்புள் அடங்காததால் எண்ணப்படவில்லை). ஸ்திராச 40 மந்திரங்களில் இதற்காயவை 2ஆம், 3ஆம் மந்திரங்களான 'ஓம் ஹாம் அநந்தாஸநாய நம', 'ஓம் ஹாம் அநந்தாய நம'

2). **சிம்மாசனம் -** (ஒரு தத்துவம்) புத்திதத்துவம். தண்டின் நுனி. அகங்காரத்தின் மேலுள்ள புத்தி தத்துவத்தில் தர்மம், ஞானம் முதலாய புத்தியின் எட்டுப் பாவங்களும் 8 சிங்கங்களாய் தமக்கு மேலுள்ள தத்துவங்களைத் தாங்கியுள்ளன. தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், எனும் 4 சிங்கங்களும் முறையே தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆகிய திசைகளிலும், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் எனும் நாலு சிங்கங்களும் (புருஷாமிருகம்) முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் நின்று தாங்குகின்றன. 40 ஸ்திராசன மந்திரங்களில் நாலுமுதல் ஒன்றுவரை. சுருக்கமாக 'ஓம் ஹாம் தர்மாய, ஜ்ஞாநாய, வைராக்யாய, ஐசுவர்யாய, அதர்மாய, அஜ்ஞாநாய, அவைராக்யாய, அநைசுவர்யாய நம' (விபரம் மந்திரங்கள் 16ற் பார்க்க.)

**குறிப்பு** : தாமரையின் ஏனைப் பாகங்களைக் குறிக்கும், இனிவரும், 3ஆம், 4ஆம், 5ஆம் ஆசனங்களுக்கு, 40 ஸ்திராசன மந்திரங்களிற் பொதுவாக 12இலிருந்து 23வரையான மந்திரங்கள் அமையும். அதன்மேல் மண்டலர்களுக்காம். 24இலிருந்து 32 வரை சக்தி மண்டல நவசக்திகளுக்கும், ஏனையவை மந்திரங்களின் பெயர்ப்படி முறையே சூர்ய, ஸோம, அக்னி மண்டலங்களுக்கும், அதிபதிகளுக்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்திராசனம் என்பது, கூர்மாசனம் முதல் விமலாசனம் வரையானவற்றை ஒரே வடிவிற்றருவது விளக்கத்திற்காக இயன்றவரை பிரித்து மந்திரங்கள் காட்டப்பட்டன.)

3).**யோகாசனம் -** ஒரு தத்துவம். புத்திமேலுள்ள குணதத்துவம். தாமரைத் தண்டின் முடிவு. அதன்மேல் பிரகிருதிமுடிச்சு. அதன்மேல் ஸ்ரீகண்டருத்திரர் சிவசிந்தையுடன் தமக்குக் கீழுள்ள விட்டுணு பிரமாக்களை அவரவர் தொழிலில் ஏவியிருப்பதால் அவ்விரு தத்துவங்களும் யோகாசனம் எனப்படும். (தத் - தத்துவம் என்றதன் சுருக்கம்)

4). **பத்மாசனம் -** (எட்டு தத்) வித்யாதத்துவம் ஏழும் சுத்த வித்தையுமான எட்டும் எட்டிதழ்த் தாமரையாயிருப்பதால் பத்மாசனம் எனப்படும்.

5). **விமலாசனம் -** (4 தத்) தாமரை நடுவுள்ள கேசரம் (தாது), மகரந்தம். பொகுட்டு, விதை (பீஜம்) என்ற நான்கும் விமலாசனம். கேசரம் இதில் (நாக்கு), மகரந்தம் என்பன ஈசுரமும் சாதாக்கியமும், கர்ணிகை (பொகுட்டு) - சக்தி தத்துவம், விதை - சிவதத்துவம். **(குறிப்பு** : அதாவது, 36 தத்துவங்களில், நாத, பிந்து, சாதாக்கியம், ஈசுரமாகிய மேல் நான்கும், கீழே, பிருதிவி நீங்கலாக, பஞ்சபூத நான்குமாக 8 நீங்கலாக 28 தத்துவங்கள் பல ஆசனங்களாக உள்ளன. ஏனைத் தத்துவங்களில் தெய்வங்கள் வீற்றிருக்கும். இதனைக் கீழ்வரும் ஆவரணங்கள், மண்டலங்கள் என்பவற்றுடன் சேர்த்து உணர்க).

**பஞ்சாவரணங்கள்** (ஆசனங்களுக்கு மதில்கள் அல்லது கோட்டைகள். இவை தாமரை வடிவுடனும் இலிங்கவடிவுடனும் சம்பந்தமானவை). **குறிப்பு** : இதில் முதலாம் ஆவரணபூசை, சிவபூசை முடிவில் போகாங்கபூசையாக, ஆன்மார்த்த அதிகாரபூசை செய்யும் விசேடதீட்சை பெற்றவற்காம். முழுமையான பஞ்சாவரண பூசை ஆசாரியற்காம். (மந்திரங்கள் 30ல் )

**5ஆம் ஆவரணம்** : (5ஆம்) கூர்மாசனத்தின் மேலுள்ளது. கிழக்குத்தொட்ட எட்டுத் திசைகளிலு முள்ள ஆயுதங்களாவன:- இந்திரனின் வஜ்ரம், அக்னியின் சக்தி, யமனின் தண்டம், நிருதியின் கட்கம் - வாள், வருணனின் பாசம், வாயுவின் துவசம் - கொடி, குபேரனின் கதை, ஈசானரின் சூலம். மேலும் ஈசானத்தில் பிரமனின் தாமரையும், நிருதியில் விஸ்ணுவின் சக்கரமும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4ஆம் ஆவரணம்:** இது ஆவுடையாரின் கீழ்ப் பகுதியைச் சுற்றியுள்ளது. அதில் கிழக்கு முதலாய எண் திக்குகளிலும் அத்திசைக்காவலராகிய இந்திரனாதி அட்ட திக்குப் பாலகர்களும் தம் தேவியருடன் வீற்றிருப்பர்.

**3ம் ஆவரணம்:** ஆவுடையாரின் கீழ் மேல் பகுதிகளுக்கு இடைப்பட்ட நடுவில் கிழக்கில் நந்தி, தென்கிழக்கில் மஹாகாளர், தெற்கில் பிருங்கி, தென்மேற்கில் கணபதி, மேற்கில் இடபதேவர், வடமேற்கில் ஸ்கந்தர், வடக்கில் சகிதாதேவி, வடகிழக்கில் சண்டேசுவரர் ஆகியோர் தத்தம் தேவியருடன் வீற்றிருப்பர்.

**2ம் ஆவரணம்:** இவை தாமரையின் 8 இதழின் நுனிகளாம். அதில் கிழக்கிலிருந்து 8 திக்குகளிலும் அநந்தர், ஸுக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டியாதிய அட்டவித்தியேஸ்வரர் தேவியருடன் வீற்றிருப்பர். (குறிப்பு இவர்களின் புவனங்கள் முறையே, இறங்குவரிசையில் 208. 207. 206, 205, 204, 203, 202, 201 என்பனவாம்.)

**1ம் ஆவரணம்:** தாமரை மலரின் எட்டிதழ்களே முதல் ஆவரணம். அதில் போகாங்கபூசை செய்யப்படும். லயாங்கமென்பது சிவனோடு ஒன்றுபட்டிருக்கும் உறுப்புக்கள். அவை உடல் முதலாய 5 அங்கங்களும் எண்குணங்களுமாக ஆறாய் இருதயாதி 4 பிரத்தியாங்கங்களும், கவசம். அஸ்திரமாகிய இரு சாங்கங்களுமாம். இவ்வாறு உறுப்புகளாக வைத்துப்பூசிக்கப்பட்ட அங்கதேவர்களைத் தனித்தனி பூசித்தல் போகாங்கபூசை. இது, சிவபூசையிறுதியில் வரும்)

**ஆசாரியார் அல்லாதவர்** யாவரும் முதல் ஆவரண பூசையுடன் (ஏகாவரண) பூசையை முடித்தல் வேண்டும். ஆசாரியர் செய்வது பஞ்சாவரண பூசையாம். நிர்வாணதீட்சை பெற்றவரும் செய்யலா மெனவும் சில இடங்களிற் கூறப்பட்டுள்ளன. சோமசம்பு பத்ததியில் விசேஷதீட்சை பெற்றவர்களும் 5 ஆவரணமும் செய்யலாம் என்றுளது. இந்த எட்டு இதழ்களின் நடுவில் கிழக்குமுதல் வலமாக 8 திக்குகளிலுமுள்ள கேசரங்களில் - நாக்குகளில் வாமை, சேஸ்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி. ஸர்வ பூததமனியாகிய எண்சக்திகளும், கர்ணிகைக்கு ஈசானத்தில் (சதாசிவரின் சக்தியாகிய மனோன்மணியும் சேர்ந்த) **நவசக்திகள்** வீற்றிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்டலங்கள்:** சதாசிவருக்குக் கீழுள்ள பிரமன் ஆதியோருக்காய தாமரை மேற்பாக வட்டங்கள் இவற்றில்) 1). இதழ்களின் நுனிவட்டம் சூரியமண்டலம். 2). கேசரங்களின் (பூந்தாதுக்களின்) நுனிவட்டம் சந்திரமண்டலம். 3). கர்ணிகை (விதை) களின் வட்டம் அக்கினி மண்டலம். 4).கர்ணிகைகளின் நடு சக்திமண்டலம். இவற்றின் அதிபதிகள் முறையே பிரமா, விட்டுணு, உருத்திரன், ஈசுரன் ஆவர். ஆதாரசக்தி முதல் சக்திமண்டலம் முடிவாக இவ்வாசனம் அமைவதால் இப்பூசை **சக்தியாதி சக்திபரியந்த** பூசையாம். இது நிலையாக அமையின், (உதாரணமாக அதிகார பூசையேற்கும் திருமடம் போன்றவற்றிலுள்ள இலிங்கமாயின்), **ஸ்திராசனம்** என்றும், அபிடேகத்திற்கு மட்டுமெனில், (இலிங்கத்தைத் தனியாக அபிடேக மேடையில் வைத்துச் செய்வதாயின்,) **சலாசனம்** என்றும் கூறப்படும். (சலம் - அசைவது). இவற்றை இங்ஙனம் ஆசனங்கள், ஆவரணங்தள், மண்டலங்கள் எனப் படிமுறையாகப் பூசிக்கும்போது 40 ஸ்திராசன (16 பார்க்க) மந்திரங்கள் ஓதப்படும்.

**சிவமூர்த்தி** (அகப்பூசைத் தொடர்)

இதயத்தில் ஆசனபூசையை முடித்து அதன்மேல் சிவமூர்த்தி மந்திரத்தால், ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தியே நம என சிவனது உருவத்தை **முகம்முதலிய உறுப்புக்கள் யாதொன்றுமின்றிப்** பேரொளி மயமான பிழம்பு வடிவினதாகத் தியானித்து அர்ச்சித்து நியாசங்கள் செய்க.

**நியாசங்கள்** கீழே சொல்லப்படும் 1) தண்டபங்கி நியாசம் (பக் 95 - 6.2.8), முண்டபங்கி நியாசம், வக்ரபங்கி நியாசம், கலாபங்கி நியாசம் வித்யாதேகநியாசம் ஆகியவற்றைச் செய்து 2) நேத்திரங் கொடுத்து 3) சிவனை ஆவாகன, ஸ்தாபன. சந்நிதான, சந்நிரோதனங்களால் மூர்த்தியினிடத்தில் இருக்கச்செய்து, 4) இருதயம் முதலிய ஷடங்க மந்திர நியாசத்தைச் செய்து, 5) பாத்திய ஆசமன அர்க்கியங் கொடுத்து, 6) அபிடேகத்தை முறையாகப் பாவனையாற் செய்து, ஒற்றாடை சாத்தி, சிவமூலமந்திரத்தால் வஸ்திரம் சந்தனம் அறுகு புஸ்பம் இவைகளால் அலங்கரித்து, 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்' என அட்சதைசாத்தி, மீட்டும் பாத்திய ஆசமன அர்க்கியங்கொடுத்து, 7) லயாங்க போகாங்க பூசைகளையும் அம்பிகைபூசையையும் முறையாகச் செய்து, அம்பிகை யோடு சுவாமிக்கு அவரவர் பூசிக்கும் ஆன்மார்த்தசுவாமியின் பெயரால் நாமகரணஞ் செய்து, தூபதீபங்காட்டி, நைவேத்தியம் பாவனையாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, மீட்டும் ஆசமன அர்க்கியங்கொடுத்து, தூபதீபம் பவித்திர தாரனம் உபசாரங்கள் பவாதிநாம அர்ச்சனை, ஜெபசமர்ப்பணம், குருபூசை, வித்யாபீட பூசை, 2ஆம் 3ஆம் காலபூசைகள் யாவற்றையும் செய்தல்வேண்டும். ஆசாரியர்களா யுள்ளவர்களும் ஆதிசைவர் மகாசைவர்களும் அக புற அக்கினிகாரியஞ் செய்தே இருவகை (இதுவரை பாவனையாகச்செய்த அக, இனி புறத்தே செய்யப்போகும் புற) பூசையையும் முடிக்கவேண்டும். ஏனையோர் 3ஆம் கால பூசையை முடித்து, அஷ்டபுஸ்பஞ் சாத்தவேண்டும், அஷ்டபுஸ்பமாவன : ஆசனம், மூர்த்தி, மூலம், (நேத்திரம் தவிர்ந்த ஏனை) 5 அங்கமந்திரங்கள் ஆகிய எட்டினாலும் அர்ச்சிக்கும் புஷ்பங்களாம்.

**குறிப்பு** : இருதயம், சிரசு, சிகை, நேத்ரம் என்பன பிரத்தியாங்கமெனவும், அங்கமாகிய சிரசு, முகம், இருதயம் தவிர்ந்த பஞ்சேந்திரிய முதலான உடலின் ஏனை உறுப்புகள் பிரத்தியாங்கமென்றும் வேறுபட நூல்கள் கூறினும் யாவும் அங்கமே. சாங்கம் அங்கத்தோடு உடனானது. பிரத்தியென்பது வேறான அங்கம் எனலாம். உதாரணம் முக்கண், நீலகண்டம்.

ஓம் ஹாம் சிவாஸநாய நம:
ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவ மூர்த்தயே நம:
ஓம் ஹாம் ஹம் சிவாய நம (மேலும் ஷடங்க மந்திரம் (6)ல் 5)
ஓம் ஹாம் ஹ்ருதாய நம: (அங்கம்)
ஓம் ஹீம் சிரஸே நம: (அங்கம்)
ஓம் ஹூம் சிகாயை நம: (பிரத்தியங்கம்)
ஓம் ஹ: அஸ்த்ராய நம: (சாங்கம்)

**அகத்தில் அவை** 1). கொல்லாமை, 2). பொறியடக்கம், 3). பொறை, 4). அருள், 5). அறிவு, 6). வாய்மை, 7). தவம், 8). அன்பு. என்பனவாம் அக்கினிகாரியஞ்செய்ய உரிமையிருந்தும் செய்ய இயலாதவர்கள் கையிற் பூவினைவைத்து சிவமூலத்தை 'ஓம் ஹாம் ஹம் சிவாய நம' என 108 உருவும், சம்மிதாவை (11)இயன்றளவுஞ் செபித்து, சுவாமியின் வலக்கரத்தில் அர்க்கிய நீரால் மூலத்தால் ஜெபசமர்ப்பணஞ் செய்து, "சுவாமீ அக்கினி காரிய பலனையும் அடியேனுக்குத் தந்தருள வேண்டும்' என பிரார்த்திக்குக. ஆச்சாரியார்கள் நாலாங்கால பூசையாற்ற வேண்டும்.

அருவ சிவமூர்த்தி தியானம், அகப்பூசைக்கு (மேற்கூறிய) பாவனையால் ஆற்ற வேண்டிய தண்டபங்கி நியாசம் முதலியவும் ஆவானாதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றும் விபரங்கள்:- விளக்கம் 'சிவபூசை முறை' 7.16ம், 'சிவபூசை விளக்கம்' அட்டவணைக் கீழ்வரும் குறிப்பிலுமுண்டு. இரண்டின் சுருக்கமும் அட்டவணையாகவுண்டு.

<u>அருவ தியானம்</u> "ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம என தியானித்து ஆர்ச்சிக்குக.

"சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே சொல்லுதற்கரிய,
ஆதியே நடுவே அந்தமே பந்தம் அறுக்கும் ஆனந்தமா கடலே,
தீதிலா நன்மை திருவருட் குன்றே திருப்பெருந் துறையுறை சிவனே,
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய் வந்துநின் இணையடி தந்தே

| விடயம் | முத்திரை அல்லது முறை | செய்கை (பாவனையால்) | மந்திரம் (மனதால்) |
|---|---|---|---|
| அர்க்கயத்தால் புரோட்சித்தல் | மிருக (21) முத்திரை | புஸ்பத்தை அர்க்கியத்தில் தோய்த்து புரோட்சிக்க | ஓம் ஹ : அஸ்த்ராய பட் |
| சிவகாயத்திரி அர்ச்சனை | மந்திரத்தை மெதுவாக சொல்லல் | வலகை மேலாக நிவிரதி வைத்து புஸ்பமிடுக | ஓம் தந்ம கேசாய வித்மஹே வார்க்விசுத்நாய தீமஹி தந்நோ சிவ: பிரசோதயாத் |
| சந்தனமாதி சாத்தல் | வலக்கை மேலாக வை | சந்தனம், புஸ்பம், அறுகு, அட்சதை | ஓம் ஹைம் கவசாய நம |

வக்ரபங்கியின் பின் அட்டவணையில் விடப்பட்ட அத்வ நியாசத்தினைச் செய்வதாயின் திவ்ய முத்திரையால் பாவனையாக மூர்த்தியின் இரத்தம் முடி, தோல், உரோமம், சப்ததாதுக்கள், அவயவங்கள் என்பவற்றில் முறையே மந்திரம், பதம், வர்ணம், தத்துவம், கலைகள் என்பவற்றை வரும் பக்கத்தில் காட்டியபடி நியசிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தண்டபங்கி நியாசம் - மூர்த்திக்கு முகமுதலிய உறுப்புக்கள் வெளிப்படல் (பூசகருக்கு முன்னான-திசை) | வலப் பெரு விரல் சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் | சிரசில் நியசிக்க, முகத்தில் நியசி-க்க, மார்பில் நி-யசிக்க, குறியில் நியசிக்க, பாதத்-தில் நியசிக்க | ஓம் ஹொரம் ஈசான மூர்த்-தா யநம, ஓம் ஹெம் தத்புருஷ வக்த்ராயநம, ஓம் ஹூம் ஹிருத யாய நம, ஓம் ஹிம் வாமதே வகுஹ்யாய நம, ஓம் ஹம்ஸத்யோ ஜாதமூர்த்தாயநம |
| மூர்த்திக்கு முண்டபங்கி நியாசம் ஐந் து திசைக-ளில் ஐந்து சிரசு அமை-த்தல் | சின்முத்திரை (29) சுட்டும் பெருவிரல் நுனியும் சேர் | உச்சிச்சிரசில் கிழக்குச் சிரசில் (பூச கருக்குமுன் னாக) தெற்குச் சிரசில் (இடமாக) வடக்குச் சிரசில் (வலமாக) மேற் குச் சிரசில் (மூர்த்தத்திற்கு பின்னாக) | ஓம் ஹொம்ஈசாந மூர்த்தாய நம ஓம்ஹெம் தத்புரு ஷ மூர்த்தாயநம ஓம் ஹூம் அகோ ரமூர்த்தாய நம ஓம்ஹிம் வாமதே வ மூர்த்தாய நம ஓம்ஹம்ஸத்யோ ஜாத மூர்த்தாய நம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வக்ர பங்கி நியாசம் (பஞ்ச முகம் கற்பித்தல்) | வலப்பெரு விரல்<br><br>சுட்டு விரல்<br><br>நடுவிரல்<br><br>அணிவிரல்<br><br>சிறு விரல் | உச்சிச் சிரசின் கீழ்<br><br>கிழக்குச் சிரசின் (முன்னாக) கீழ்<br>தெற்குச் சிரசின் (இடமாக) கீழ்<br>வடக்குச் சிரசின் (வலமாக) கீழ்<br>மேற்குச் சிரசின் (பின்னாக) கீழ் | ஓம் ஹொம் ஈசாந வக்த்ராய நம:<br><br>ஓம் ஹெம்தத்புருஷ வக்த்ராயநம:<br><br>ஓம் ஹூம் அகோர வக்த்ராய நம<br>ஓம்ஹிம்வாமதேவ வக்த்ராயநம<br>ஓம்ஹம் ஸத்ஜாத வக்த்ராயநம |
| மூர்த்திக்கு வித்யா தேகம் அமைத்தல் அடிக்குறிப்பு பார் | சின்முத்திரை (29) சுட்டும் பெருவிரல் நுனியும் சேர் | உச்சிச் சிரசு | ஓம்ஹாம் ஹௌம் வித்யா தேகாயநம என நியசித்தபின் ஓதுக, சங்கரனே நின்பாதம் போற்றி |
| நேத்திரம் (கண்) அமைத்தல் | அக்ரண்ட, நேத்ர, திரிசூல (34,57) | பெருவிரலால் சிறு விரலை தொட்டு நடுவிரல் மூன்றையும் நீட்டல் | ஓம் ஹௌம் நேத்ரேப்யொ நம |

பக்கம் 155 இல் உள்ள அட்டவணை சிறிய எழுத்தில் அமைந்திருப்பதால் அதே பொருளுள்ள அட்டவணை பக்கம் 127, 128, 129 என்பவற்றில் தெளிவாக உண்டு.

1. மந்திரமே சோரியா - ஓம் ஹாம் மந்திராத்வநே நம:
2. வான்பதமே மாமுடியா - ஓம் ஹாம் பதாத்வநே நம:
3. வன்னமே தொக்காக - ஓம் ஹாம் வர்நாத்வநே நம:
4. புவனத் துருவே உரோமமா - ஓம் ஹாம் புவனாத்வநே நம:
5. தத்துவங்களே சத்ததாதுவா - ஓம் ஹாம் தத்வாத்வநே நம:
6. கலையே அவயவமா - ஓம் ஹாம் சர்வாத்மநே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஆவா ஹனம் பூசையை ஏற்றருள சிவனை அழைத்தல் (அடிக்குறிப்பு பார்) | ஆவாஹன (460 அல்லது 47) முத்திரை | இரு கைகளில் நிறைய புஷ்பங் களைவைத்து அஞ்சலியாக்கி சிவ மூலத்தை மெள்ள உச்ச- சரி த்துக்கொ ண்டு பேரொளி ஞானானந்தம், சுயம்பிரகாசம் என விளங்கும் பரம சிவனை தியானித்து சிவோகம்பாவ- னையோடும் பெருமான் பூச- கரின் பூசைக் கேற்ற அளவில் வந்ததாகப் பாவி- த்து அஞ்சலியாக இருகரங் கூப்பி பெருவிரலை மடக்கி பூசொரி- தல். | ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம<br><br>ஓம்ஹம் ஹிருதா ய நம (திருவா- சகம் 'மாறிநின்- றன்னை மயக்கி டும்...' |
| ஸ்தாபனம் | ஸ்தாபன முத்திரை (48) | பரமசிவனை மூர்- த்தியில் இருக்கச் செய்தல் | ஓம்ஹம் ஹிரு- தாய நம தேவாரம் 'செங்கணா- னும் பிரமனும் தம்முளே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சந்நிதானம் | சந்நிதான முத்திரை (49) | பூசையை திரு-நோக்கம் செய்ய சாந்நித்தியமாயி ருக்க வேண்டல் | ஓம் ஹம்ஹிரு-தாய நமதிரு-த்தாண்டகம் 'அண்டம் ஏழன்று....' |
| சந் நிரோத-னம; | சந்நிரோத-னமுத்திரை (50) | பூசை முடியும-ளவும், திருநே-ாக்கத்தை நீட்ட வேண்டல் | ஓம் ஹம்ஹிரு-தாய நமதிருவா-சகம் முத்தனே முதல்வ |
| ஷடங்க மந்-திர நியாசம் | உஷ்ணக முத்திரை 28 (இருபத் தெட்டாவது) | பிரத்தியங்கம் -இருதயம், பிரத்-தியங்கம் - சிரசு பிரத்தியங்கம் - சிகை சாங்கம் - கவசம் (அங்கத்-துடனாவது) பிரத்-தியங்கம் - கண் சாங்கம் - (அஸ்-திரம்) – அங்கத்-துடனாவது) | ஓம் ஹம், ஹ்ருதாய நம, ஓம் ஹீம் சிரஸே நம: ஓம் ஹீம் சிகாயை நம: ஓம் ஹைம் கவசாய நம: ஓம் ஹௌம்நேத் ரோ-ப்யோ நம: ஓம் ஹ : அஸ்த்ராய நம: |
| பாத்தியம; | இருதரம் | இருபாதங்களு-க்கு பாத்திய நீர் விடல் | ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்த-யே நம |
| ஆசமனம் | மூன்று முறை | திருவாயில் உள் அருத்துதல் | ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்த-யே ஸ்வதா |
| அர்க்கியம் | ஒருமுறை | முடிமேல் விடல் | ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்த-யே ஸ்வாஹா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு- 1) பிரத்தியங்கம் என்றிருப்பதை அங்கம் எனவும் கொள்ளலாம். 2) வக்ரபங்கியின் பின் கலாபங்கி சுருக்கமாகச் செய்வதாயின் பக்கம் 128 அத்வனியாசம் பார்க்க. 3) ஆவாஹனம் முதல் புஷ்பாஞ்சலி ஈறானவை பரமசிவனுக்காய பூசை.

**அட்டவணையின் வித்யாதேகமமைத்தல் சம்பந்தமானது :** மேற்சொல்லிய நியாசங்கள் யாவும் மாயாசம்பந்தமானவை ஆதலின் அவற்றாலமைந்த சரீரத்தை நிர்மல ஞானமயமான **சக்தி(ஞான) சரீரம்** ஆக்குதற்கு வித்யாதேகநியாசம் இன்றியமையாதது. **அருளுரு உயிர்க்கென்றே ஆக்கினன் அசிந்தன்** என்பதும், '**அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம், எத்திறம் ஈசன்நின்றான் அத்திறம் அவளும் நிற்பாள்**' போன்ற சித்தியார் வாக்குகள் இதிற் சிந்திக்கற்பாலன. மாயையன்றி சத்திவடிவமே அரு, அருவுரு, உரு என இறைவனுக்கு வடிவங்களாம். அருவடிவு ஞானியர்க்கன்றி சிவபூசை ஏற்பதற்கு அல்ல. உருவடிவு 25 மகேஸ்வரமூர்த்தங்கள் எனப்பல. அவை காமியபூசைக்குரியன. ஆதலால் பலவகைநியாசங்கள் செய்யப்பட்ட திருமேனியில் சதாசிவமூர்த்தியைத் தியானித்து வருவித்து நியாசம் செய்வதே வித்தியாதேகநியாசம். அருவுரு(லிங்கம்) சதாசிவத்திருமேனி மட்டுமேயாதலின் அத்திருமேனியை விபரிக்கும் பாடலில் வரும் உருவைச் **சதாசிவத் தியானமாக்கி** (பாடல்முடிவிற் கூறியபடி) **வித்யாதேக நியாசம்** செய்யவேண்டும். பின் 'சங்கரனே நின் பாதம் போற்றி' - திருத்தாண்டகம் ஓதலாம்.

1) 'உச்சிமுக **மீசான** மொளிதெளியப் பளிங்கே (பளிங்குநிறம்)
யுத்தரபூ ருவதிசையை நோக்கியுறு முகந்தே (ஈசானம்நோக்கி)
நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி (கிழக்குநோக்கி)
நிகழுமுகந் **தற்புருடங்** கோங்கலர் போனிறமே (நெல்லிப்பூநிறம்)
யச்சுறுத்து **மகோர** முக மறக்கரிது கராள (கராள-பயமான)
அவிழ்தாடி வலத்தோளிற் றென்னோக்கி யமரும் (தெற்குநோக்கி)
செச்சைநிறத் தெரிவைமுக மிடத்தோண் மேல் **வாமஞ்** (சந்திரமுகம்)
சிறுபுறத்தின் முகஞ்**சத்தி யோசாதந்** திகழ்வால்.' (புறம்-மேற்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) 'திருவுருவந் தெளிபளிங்கு சடாமகுடத் திதழி
சிறுபிறையு மூவைந்து திருநயனம் வலப்பாற்
கரதலத்திற் சத்தியப யஞ்சூலம் நீண்ட (சத்தி, அபயம், சூலம்)
கட்டங்கந் தமருகமு மற்றையிடக் கரத்தின்
வரதமுமா துளங்கபலம் போகிசெப மாலை (வரதம் மாதுளம் கபாலம்)
மணமலிநீ லோற்பலமு முடையர் வயதீரெட்
டுருவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமா தனந்தா
னுறவிருப்பர் சதாசிவ தத்துவ தவிசினுகந்தே'

உத்தர(வட)பூர்வம்(கிழக்கு) - வடகிழக்கு, செச்சை - வெட்சிப்பூ, தெரிவை - பெண், புறம் - முதுகு, பால் - வெண்மை, இதழி - கொன்றை மாலை, கட்டங்கம் - மழு, தமருகம்- உடுக்கை, பலம் - பழம். போகி - பாம்பு, நீலோற்பலம் - கருங்குவளைப்பூ, இரட்டி - 16 தரம் 2 என 32 உறுப்புக்கள் லட்சணம். பதம்- பாதம், தவிசு - ஆசனம். இடத்தோள் என்பது - தற்புருடம் கிழக்குநோக்கிப் பூசைகொள்வதால் வடக்குத்திசையாக, புறம்- பூசை முகத்தின் புறம் மேற்கு. இத்திசைகள் ஆன்மார்த்தபூசையில் 90பாகை வலமாகத் திரும்பும்

3. 'நடுவு கிழக்குத் தெற்கு உத்தரம் மேற்கு (ஈசான முதலிய திசைகள்)
நடுவு படிகம் நற்குங்கும வன்னம் (ஈசான முதலான வர்னங்கள்)
அடைவுள அஞ்சனம் செவ்வரத்தம் பால் (மேற்படி வர்னத் தொடர்)
அடியேற் கருளிய முகமிவை அஞ்சே' - திருமூலர் காட்சி 1

4) 'அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினோ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பிஎன்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே' - திருமூலர் காட்சி 2.

என ஓதி, சத்திமாத்திரத்தாற் சகளீகரித் திருப்பவராகின்ற நாலாந்தத்துவ ஈசுரனெனும் மகேஸ்வரனுக்கு மேலான பரமேசுவரனை சதாசிவரை மூர்த்தியினிடத்தில் நினைந்து **'ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேகாய நம'** என்றுச்சரித்து, அப்புஷ்பாஞ்சலியைப் பிரமரந்திரம் வரையும் மெல்லென உயர்த்திக்கொண்டு போய், அவ்விடத்தினின்றும் வித்தியாதேகம் மின்னிறமுடையதாகித் தனது புஷ்பாஞ்சலிக்குள்ளே வந்ததாகத் தியானித்து, இருதய தானம் வரை மெல்லென இறக்கிக்கொண்டுவந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிவலிங்காகாரத்தைப் பாவியாது விடுத்து) மேற்சொல்லிய ஐந்துமுகம் 15 கண். முதலியவற்றையுடைய வித்தியாதேக பரமேஸ்வரனையே பாவித்து, சிவலிங்கத்தினது நெடுமையாகிய மூர்த்தியிலே நியசிக்கவும். ஈசான முதலிய 5 முகங்களிலும் நடுவிரல் மூன்றினாலும் **'ஓம் ஹாம் நேத்ரோப்யோ நம:'** என நியசிக்கவும்.

இனி **9ம் ஆவாஹனம் பற்றிய குறிப்பு 1):** பரமசிவனை ஆவாஹனம் செய்யுமிடத்து மூலாதாரத்தில் இருந்து பிரகாசிக்கும் பிரசாத-அருட் சத்தி மயனாகத் தன்னைப் பாவித்து, **பிரசாதமந்திர செபானுஷ்டானக் கிரமமாகவே** ஆவாகனஞ் செய்தல்வேண்டும். அது பலவகையாயினும் **சோடசகலைப் பிரசாதம்** விசேடமானது. (பிரசாததீபிகை பார்). அது, கோஷகலையோடு கூடிய 1-மேதா, 2-இரச. 3-வி'ஷ 4-விந்து, 5-அர்த்தச்சந்திர, 6-நிரோதி, 7-நாத, 8-நாதாந்த 9-சத்தி, 10-வியாபினி, 11-வியோமரூபை, 12-அநந்த, 13-அநாதா, 14-அநாசிருதா, 15-சமனா, 16-உன்மனா என (மேதாகலை முதலாக உன்மனாகலை யந்தமாக) 16 கலை(பகுப்புக்)களுடையது. **ஆறாதாரப் படம் பக்137** பார்க்க.

**குறிப்பு** 2) ஆவாஹனம் செய்யமுன் அ, உ, ம(ம்), விந்து, நாதம் எனும் பஞ்சகலாப் பிரணவமந்திர (வியட்டியெனும் விரிந்தபிரணவ) நிலை தெரிதல் அவசியம். அவ்விரிவு ஒவ்வொன்றும் பிரமா முதலான அதிதெய்வங்களையுடையன. முதலில் புஷ்பாஞ்சலியை மூலாதாரந் தொடங்கிக் கிரமமாக உயரக்கொணர்ந்து இருதயத்தானத்தில் நிறுத்தி 1) அகாரத்தைவிட்டுப் **பிரமத்தியாகஞ்**செய்து, 2) மேல் கண்டத்தானத்தில் நிறுத்தி உகாரத்தை விட்டு **விஷ்ணுத்தியாகஞ்**செய்து 3) அதன்மேல் தாலு (அடிநா)த்தானத்தில் நின்று மகரத்தை விட்டு **உருத்திரத்தியாகஞ்** செய்து, 4) புருவநடுவில் நின்று விந்துவைவிட்டு **ஈசுவரத் தியாகஞ்**செய்து 5) பிரமரந்திரத்தில் நின்று நாதத்தைவிட்டு **சதாசிவத் தியாகஞ்செய்து,** மூலமந்திரத்தைத் துவாதசாந்தம் வரை கொண்டுபோய் துவாதசாந்தத்தில் நின்று **உன்மனி** அந்தத்திலிருக்கும் **பரமசிவத்தில்** பாவனையினாலே ஒருமைப்பட்டு இரண்டற்றதாகத் தியானித்துச் சிருஷ்டிக்கிரமமாக துவாதசாந்தத்தில் நின்றும் சூரியன்போல் ஒளியுள்ளதாக தியானித்து நெற்றிவரையுங் கொணர்ந்து கோடிசந்திர ஒளி யுள்ளதாகவும் குறுக்கே அமிர்தபிண்டம் போன்று வெண்ணிறமாகவும் தியானித்து வலமூக்கு வாயிலாக இரேசக பாவனையினாலே புறப்பட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பாஞ்சலிக்குள் வந்ததாகப்பாவித்து இலிங்கத்தில் ஆவாஹனஞ் செய்க. **சோடசோபசாரங்கள்** 1- ஆவாகனம், 2- தாபனம், 3- சந்நிதானம், 4- சந்நிரோதனம், 5- அவகுண்டம், 6- தேனுமுத்திரை, 7-பாத்தியம், 8- ஆசமனீயம், 9- அருக்கியம், 10- புஷ்பதானம், 11- தூபம், 12- தீபம், 13- நைவேத்தியம், 14- பானீயம், 15- ஜெபசமர்ப்பணம், 16- ஆராத்திரிகம்.

**விளக்கம்:-** ஆவாகனமாவது பூசையின்பொருட்டுச் சிவபெருமானை இலிங்கம் முதலியவற்றில் வரவழைத்து அபிமுகமாக - முன்னிலையாகச் செய்வதெனும் பாவனையாம். மூலமந்திரத்தினாற்தரிசிக்கப்பட்ட பரிபூரணத்தை ஆன்மா சிவப்பிரகாசமாகிய அருளினாலறிந்து அதில் அழுந்துதலே இதுவாம். (சிவபூசைவிளக்கம்). சோடசோபசாரங்களும் அதிற் கூறப்பட்டுள்ளன.

17. **அந்தர்யாகத்தில்** அபிடேகம் பாவனையாகச் செய்யப்படுவதனால் பாடலிற் கூறிய பொருட்களை **மனதாற் கற்பித்து** அவை பிண்டமாகிய நம் **உடலில் இருந்து வெளிப்பட்டு** இருதயகமலத்து வாசியான சிவனுக்கு அபிடேகிக்கப் பட்டதெனக் கொள்க.

'சுத்தஜலம் அபிடேகம் நல்லெண்ணெய் அரிசிமா
தூள்மஞ்சள் நெல்லி முள்ளி
தூபஞ்ச கௌவியமொடு ஆவின்நெய் பால் தயிர்
சுவையான பஞ்சாமிர்தம்
உத்த பல மா கதலி மாதுளையும் எலுமிச்சை
ஓங்கு தமரத்தை நார்த்தை
ஒண்கனிச் சுளை குளஞ்சித் தேன் திரட்டுபால்
உயர் கருப்பஞ்சாற்றுடன்
மெத்தும் இளநீர் அன்னம் வில்வநீர் தபனநீர்
மிளிர்பொன் இரத்தோதகம்
மென்பசுங் கற்பூர நற்பன்னீர் சந்தனம்
விளங்கு தாராபிடேகம்
அத்தநிற் கித்தகைய அபிடேக மதுபுரிந்
தருள்பெறு சைந்தராய்
அண்ணாவினில் துதிசெய் உண்ணா முலைக்குரிய
அண்ணாமலைத் தேவனே'. (துடிசைக்கிழாரின் 'தயிலமுடன்''
என்ற பாவில் சிலமாறும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபனநீர் - ஸ்பநநீர், முள்ளி - உலர்ந்தபொருட்கள் அல்லது மருதோன்றி, உத்தபல - உத்தமமான பலா, நார்த்தை - நாரத்தை, திரட்டுபால் - நன்குகாச்சி ஏடாக்கப்பட்ட பால். அல்லது வெண்ணெய், இரத்தோதகம் - குங்குமநீர், பசுங்கற்பூரம் - பச்சைக்கற்பூரம்.

18. ஒற்றாடை- ஈரமகற்றச் சாத்தி, சிவமூலத்தால் வஸ்திரம், சந்தனம், அறுகு, புஷ்பம் என்பவற்றால் பாவனையாக அலங்கரிக்க. 19. **ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்** என அட்சதைசாத்தி மீண்டும் பாத்திய, ஆசமன, அர்க்கியங் கொடுக்கவும்.

இனி, முற்கூறிதுபோல் லயாங்க போகாங்க பூசைகளையும் அம்பிகை பூசையையும் முறையாகச் செய்து, அம்பிகையோடு சுவாமிக்கு அவரவர் பூசிக்கும் ஆன்மார்த்த சுவாமியின் பெயரால் நாமகரணஞ் செய்து, தூ பதீபங் காட்டி, நைவேத்தியம் **பாவனையாற்** செய்து, மீட்டும் ஆசமன அர்க்கியங் கொடுத்து, தூபதீபம் பவித்திரதானம் உபசாரங்கள் பவாதிநாம அர்ச்சனை, ஜெப சமர்ப்பணம் குருபூசை, வித்யாபீட பூசை, 2ம், 3ம் கால பூசைகள் யாவுஞ் செய்க.

ஆசாரியர்களாய் உள்ளவர்களும் ஆதிசைவர் மகாசைவர்களும் அக, புற அக்கினிகாரியஞ் செய்தே இருவகை (இதுவரை பாவனையாகச் செய்த அக, இனி புறத்தே செய்யப்போகும் புற) பூசையையும் முடிக்கவேண்டும். ஏனையோர் 3ம் கால பூசையை முடித்து **அஷ்ட புஸ்பஞ்சாத்தி 'சுவாமீ அக்கினிகாரிய பலனையும் அடியேனுக்குத் தந்தருள வேண்டும்'** என பிரார்த்திக்கவும். (**அஷ்டபுஸ்பமாவன:** ஆசனம், மூர்த்தி, மூலம், நேத்திரம் தவிர்ந்த ஏனை 5 அங்கமந்திரங்கள் (33). அகத்தில் அவை கொல்லாமை, பொறியடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன. அத்.6.2.3 அக்கினிகாரியம், அட்டபுஷ்ப பூசையிலுங் காண்க). அக்கினிகாரியஞ் செய்ய இயலாதவர்கள் கையிற் பூவினை வைத்து சிவமூலத்தை 108 உருவும், சம்மிதாவை இயன்றளவும் செபித்து, சுவாமியின் வலக்கரத்தில் அர்க்கிய நீரால் மூல மந்திரத்தால் ஜெபசமர்ப்பணம் செய்து, மேற்கூறியபடியாக விண்ணப்பிக்க வேண்டும். ஆச்சாரியார்கள் 4ம் கால பூசையாற்ற வேண்டும்.

**சிவோஹம்பாவனை (அகப்பூசையின் இறுதி, புறப்பூசைத் தகுதி):** அகப்பூசையில் அக்கினிகாரியம் அல்லது அஷ்டபுஷ்பம் சாத்திய பின் சந்திரமண்டலமாகிய புருவநடுவில் வெள்ளொளி வீசி விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிட்களசிவத்தை**, பிராணனை சுழுமுனைநாடி வழியாக மேலேற்றித் தியானித்து, உச்சியிலொரு பூ வைத்துக்கொண்டு **'சிவோஹம்' 'சிவன்யான்'** எனப் பாவிக்கும் பாவனையில் மனதை மூலமந்திரத்தைப் பத்துருச் செய்யுங் கால அளவில் நிறுத்தி, பின்பு சிவமூலத்தால் 21 முறை மானதமாகச் செபித்து வணங்கி, 'சுவாமி, அடியேன் உம்மை **அகத்திற் பூசித்தவாறே புறத்திலும் பூசிக்க அருள்தர வேண்டும்** என மனதால் விண்ணப்பித்து இறை இசைந்ததாகப் பாவித்து, கண் விழித்துக் கும்பிட்டு இயன்றவரை **'உள்ளம் பெருங் கோயில் -** திருமந்திரம் **'காயமே கோயிலாக', 'உடம்பெனும் மனைய கத்துள்', 'மெய்மையாம் உளவைச்செய்து'** இம்மூன்றும் திருநேரிசை - நவரோஸ், அப்பர், மேலும் சுந்தரரின், பண் தக்கேசி (காம்போதி),

'வழித்தலைப் படுவான் முயல்கின்றேன்,
உன்னைப்போல் என்னைப் பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப் பட்ட நீரது போலச்
சுழல்கின்றேன் சுழல்கின்றதென் னுள்ளம்
சுழித்தலைப் பட்ட நாயது போல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீ அருளாயின செய்யாய்
ஒற்றியூர் எனும் ஊருடையானே.' பாடலையும் ஓதவும்.


**ஆறாதாரப்பட விளக்கம்**

1- மேதா கலை - பிரமா, அடிவயிறு,
2. இரசகலை - விஷ்ணு, தொப்பூழ்,
3. விஷ* கலை - உருத்திரன், நெஞ்சு,
4. விந்து கலை - மகேசன், கழுத்து,
5. அர்த்தச்சந்திரன் - சதாசிவன், நெற்றி

**நெற்றியிலிருந்து உச்சந்தலையீறாகவுள்ள 6 இலிருந்து 16 வரையும் முறையே பின்வரும் பெயர்களைப் பெறும்.** 6. நிரோதிகலை, 7. நாதகலை, 8. நாதாந்தகலை, 9. சக்திகலை, 10 வியாபிணிகலை, 11. வியோம ரூபிணிகலை, 12. ஆநந்தகலை, 13. அநாதகலை, 14. அநாசிருதகலை. 15. சமனாகலை, 16. உன்மனாகலை - உச்சந்தலை, அபரசிவன் (தடத்தம்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கு - குண்டலினி சக்தி

அ - அபானன்

பி - பிராணசக்தி

→ - பாயும்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன்மேற் 12 அங்குல நிலையில் பரசிவன் தனக்கோர் ஆதாரமற்று, தளமற்று, களமற்று நிர்க்களமாய் சுவதந்திரனாய் நிற்பன். உடலில் சகளன் என நிலைகொண்டு பரதந்திரனாய் நிற்பன். எனினும் உயிர்கள் போல மாயையிற் தோய்ந்தழுந்தான்.

கு - குண்டலிசத்தி. முள்ளந்தண்டிலிருந்து பூ வடிவாகக் காட்டப்பட்ட 7 (5, சுவா 2) ஆதாரங்களுக்கும் சகஸ்ரதளத்திற்கும் (8இடம்) பாய்ந்து செல்வது, அ - அபானன். அவ்வெட்டு இடங்களின் அபானன் என்ற வாயு, பி - பிராணசத்தி. சுவாதிட்டான மறை. வயிற்றின் நடுவிலுள்ள பூ போலக் காட்டப்பட்டதில் உள்ளது. ஆறாதாரங்களும் தாமரையிதழ்களும்:- 1, மூலாதாரம் எருவாய், கருவாய்க் கிடைப்பட்ட உள்ளிடம். கணபதி. - 4 இதழ், 2. சுவாதிட்டானம் - அடிவயிறு, பிரமா. 6 இதழ், 3) மணிபூரகம் - தொப்பூழ், விட்டுணு, 10 இதழ், 4) அநாகதம் - நெஞ்சு, உருத்திரன், 12 இதழ், 5) விசுத்தி - கழுத்து, மகேசுரன், 16 இதழ், 6) ஆஞ்ஞை - உச்சந்தலை, ஆயிரஇதழ்த் தாமரை.

அண்டமும் பிண்டமும் இலிங்கமும் ஒத்த உருவுடையவை. இதில் (பிண்டத்தில்) முதுகின் பின்னால் வரைந்திருப்பது அண்டகோச எல்லையாகும். இவ்விளக்கங்களை அறியின் சிவபூசையினை அந்தர்யாகமாக, உள்முகமாக ஆற்றுகையில் புறத்திற் தேவைப்படும் பொருட்களை அகத்திலிருந்தே பாவனையாற் பெறலாம். பூசலாரின் மனக்கோயிலும் இவ்வாறே கட்டப்பட்டது. இராசராசன் கட்டிய மாபெருங் கோயில் அபிடேக முன்பாக, சிவன் பூசலாரின் கும்பாபிடேகத்திற்கே பாண்டியனுக்குத் தெரிவித்துச் சென்றார் - பெரியபுராணச் செய்தி. பிராணாயாமம், சிவோகம்பாவனை என்பவற்றிற்கும் இவ்விளக்கம் பிரதானமானது.

குறிப்பு :- சிவோஹம்பாவனையில் சிவனின் எண்குணங்களாகிய தன்வயத்தினனாதல், தூயஉடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல் முற்றும் உணர்தல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை யாவும் தன்னில் அமையுமாறு எண்ணவேண்டும்.

**6.2.6. பகிர்யாகம் - புறப்பூசை** :- மேலவற்றைச் செய்தபின், பஞ்சசுத்தியில் ஆத்மசுத்திபோக ஸ்தானசுத்தி முதலாம் நான்கு சுத்திகளுடன் புறப்பூசை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2) ஸ்தானசுத்தி** :- 'பட்' அந்த அஸ்திரத்தால் (**ஓம் ஹ: அஸ்த்ராய பட்'**) பூஜாஸ்தான நடுவில் தாளத்திரயமும், அதன் எட்டுத் திக்குகளிலும் திக்பந்தனமுஞ் செய்து நான்குபக்கத்திலும் அக்கினி உண்டானதாகப் பாவித்து கவசத்தால்(33) மூன்றுமுறை அவகுண்டஞ் செய்து மூன்ற அகழி உண்டாக்கியதாகப் பாவித்து வௌஷடாந்த சக்தி மூலத்தால்(21) மேலுங் கீழும் தேனு முத்திரை(12) கொடுத்து பூசகர் தான் இடையூறின்றி இருப்பதாகப் பாவிக்கவும்.

**விசேஷ அர்க்கியம்** சிவனுக்கேயுரியது. ஏனையோர்க்கு சாமான்யார்க்கியம். அர்க்கியத்தில் பாத்தியமும் ஆசமனமும் அடங்குவதால் ஒரே வட்டகையிலுஞ் செய்வர். அவ்வாறாயின் பராங்மு கார்க்கியத்திற்கு தனியாக வேறுவட்டகை வேண்டும். தனித்தனியாயின் கிழக்கிலிருந்து தெற்காகப் பின்வருமாறு (திருமஞ்சனக்குட நீர் வேறாக) அமைக்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 5. விசேஷ அர்க்கியம் | 4. ஆசமனம் | 3. பாத்தியம் | 2. சாமான்ய அர்க்கியம் | 2. சாமான்ய அர்க்கியம் |

வட்டகை(5), அபிஷேக(1)பாத்திரங்களை படந்த அஸ்திரத்தால் திருமஞ்சனநீரைப் புரோட்சித்து- தெளித்து, வட்டகையை (**விசேஷ அர்க்கியம்**) 5ல் பத்திரத்தின்மேல் வைத்து, வௌஷடாந்த ஹிருதயத்தால்(33-6) பாத்திரம் 1ல் நீரைநிரப்பி இருகைகளாலும் அதனைப் புருவநடுவரை உயர்த்தி அங்குள்ள அமிர்தம் அதிற் கலந்ததாகப் பாவித்து இறக்கி 5ல் நிரப்பி அதில் கவசத்தால் (33-9) சந்தனம், புஷ்பம், அறுகு, அட்சதை, பால், கோதுமை, தருப்பைநுனி இவைகளையிட்டு சிவாசன, மூர்த்தி மந்திரங்களாலும் (17,18), ஈசானாதி பஞ்சப்பிரம மந்திரங்களாலும் (33-1,..5), வித்யா தேகத்தினாலும்(20), நேத்திரத்தினாலும்(33-10) சிவமூலத்தினாலும்(19), நேத்திரந் தவிர்ந்த அங்கத்தினாலும் (33-6,7,8.9,11) மீள சிவமூலத்தாலும் எல்லாமாகப் 16 மந்திரங்களால் அர்ச்சித்து,

கவசத்தால் அப்யுக்ஷணமும் (வலதால்மூடல்) சம்கிதாவால் (33-1..5) ஒருமுறை அபிமந்திரித்து, திக்பந்தனம் அவகுண்டனஞ் செய்து சிவமூலத்தால் தேனுவுங் கொடுக்கவும். (இதில் பாத்திய ஆசமனங்களும் பராங்முகார்க்கியமும் அடங்குகின்றன. தனித்தனியானதே சிறப்பாம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனியாயின் அவ்வட்டகைகளை அஸ்திரத்தால் புரோட்சித்து, மேலட்டவணையிற் காட்டியபடி வைத்து நீர் நிரப்பிய **பாத்திய**(3) நீரில் சந்தனம் விலாமிச்சை வெண்கடுகு இட்டு ஷடங்க மந்திரத்தால் அர்ச்சித்து அபிமந்திரித்து திக்பந்தனமும் அவகுண்டமுஞ் செய்து தேனுமுத்திரை கொடுக்கவும். **ஆசமன**(4) நீரில் ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு பச்சைக்கற்பூரம் இட்டு சம்ஹிதாவினால் அர்ச்சித்து முன்போல அபிமந்திரித்து திக்பந்தனம் அவகுண்டனஞ்செய்து தேனுமுத்திரை கொடு. 2ல் சாமான்யர்க்கியம்

(3) **திரவிய சுத்தி** வலக்கை மிருகமுத்திரையாற் பிடித்த புஷ்ப்பம் அல்லது பத்திரத்தால் விசேஷ அர்க்கியசலத்தை நமோந்தர அஸ்திரத்தால் சிரசிலும் பின் பூஜாஸ்தானம் பத்திரம் புஷ்பம் அபிடேகப்பொருள் முதலியவற்றைப் புரோட்சித்து, பத்திர புஷ்பங்களைக் கவசத்தால் அப்யுக்ஷணஞ் செய்து, ஹ்ருதயத்தால் பத்து தரம் மந்திரித்து, திக்பந்தனம் அவகுண்டனங்களையும் செய்து, வௌஷடாந்த சிவமூலத்தால் தேனுமுத்திரை கொடுக்கவும்.

புஷ்பத்தால் விசேஷசலத்தில் நனைத்து திருமஞ்சனக்குடநீரில் அஸ்திரங்கூறி இட்டு கவசத்தால் அப்பியுக்ஷணஞ் செய்து, நமோந்த ஹ்ருதயத்தால் 10முறை மந்திரித்து புஷ்பத்திற்குப் போல திக்பந்தனம் அவகுண்டஞ் செய்து தேனு கொடுத்து, பின் அபிடேக கலசத்தால்(1) அந்தநீரை முகந்து **ஓம் ஹாம் கங்காய நம** வென ஊற்றி அபிடேக கலசத்தால் முகந்து வைக்கவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருநந்திதேவர் | சனற்குமாரர் | சத்தியஞான தரிசினிகள் | பரஞ்சோதியார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மகா கா ளர் | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | இட் ட மூர் த்தி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ய மு னை | | மக க ண பதி | மகா லட் சு மி வி ளக் கு | பிர ம் ம குரு | விஷ் ணு கு ரு | ஸ் கந் த கு ரு | அம் பிகா குரு | ஸ்ரீ கு ண் ட கு ரு | அந ந்த குரு | 9.ச தா சிவ குரு | மன தால் தீட் சா குரு |
| சர ஸ் வதி | அ ஸ் ரது வார | | | சிவ | பூ | ஜா | அம் பா | | | | த் வ னிச் சண் டர் |
| மகா லட் | | | | பீ | ட | ம் | இட பதே | | | | |
| கண பதி | வா ஸ்த் வதி | | வித் யா பீட ம் | | | | செப மா லை | | | | |
| சங் | | | | | சங் | | | | கு | | |
| நந் | | | | | | | | | | | |
| | புஷ் | | ம ணி | வி சே | ஆச ம னம் | பாத் தி யம் | சா மான் ய அர் | | | | திரு மஞ் ச னம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவபூஜா சக்கரம்

**கணபதி, கமலா- திருமகள், குருபங்க்தி (தொகுதி) பூசை**

பீடகோட்டத்தில் சுவாமிக்கு வடக்காக சாமான்ய அர்க்கியத்தால் அஸ்த்திரங் கூறிப் புரோட்சித்து படத்திற் காட்டியபடி மேற்கிலிருந்து வரிசையாக 9 பத்திரமும் அவற்றின்மேல் புஸ்பம் அல்லது சந்தனப்பொட்டும் ஆசனமும் மூர்த்திகளுமாக வைத்து **ஓம் ஹாம் மஹா கணபதயே நம: ஓம் ஹாம் மஹா லஷ்மியை நம:** என அர்ச்சித்தபின், **ஓம் ஹாம்** (பெயர் - **சதாசிவ, அநந்த, ஸ்ரீகண்ட, அம்பிகா, ஸ்கந்த, விஷ்ணு, ப்ரஹ்ம**) **குரவே** நம: என பர அபர ஞான சப்தகுரவர்களையும் அர்ச்சித்து, **ஓம் ஹாம் மஹா கணபதயே... ஓம் ஹாம் மஹா லஷ்மியை... ஓம் ஹாம் சதாசிவாதி குருப்யோ - சந்தனம் ஸ்வாஹா, புஸ்பம் ஸ்வாஹா, தூபம் ஸ்வாஹா, தீபம் ஸ்வாஹா, நைவேத்யம் ஸ்வாஹா, அர்க்கியம் ஸ்வாஹா** என இவற்றையெல்லாம் சமர்ப்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு நைவேத்தியம் சாமான்யார்க்கியம் கொடுத்து மீட்டும் அவ்வாறே தூ பதீபங் கொடுத்து சதாசிவராதி சப்த குரவர்களையுங் கும்பிட்டு **'அடியேன் உங்கள் அனுமதி பெற்றுக் கூடிய அளவு திரவியங்களால் இயன்றளவு சிவபெருமானைப் பூசிக்கின்றேன்'** என விண்ணப்பித்து அனுமதி பெற்றதாகப் பாவிக்கவேண்டும். சதாசிவர் முதலாய குரு பரம்பரையைப் பூவாற் பூசித்தது போல தீட்சாகுருவை மனதாற் (சதாசிவராதி மூவரில் ஒருவராக) பூக்களாலும் அர்க்கியத்தாலும் பூசிக்கவும்.

**ஆத்மபூசை:-** (தன்னைத் தான் பூசித்தல்) மீண்டும் கர அங்க நியாசங்களைச் செய்தபின் ஆத்மபூசையைத் தொடங்கவும். பூசகர் தமது ஆசனத்தைச் சிவாசனமாகக் கருதி சிவாசன மந்திரத்தால் **'ஓம் ஹாம் சிவாஸநாய நம':** என ஒருமுறை அர்ச்சித்து, சிவமூர்த்தி மந்திரத்தால் **'ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவ மூர்த்தியே நம:' என மார்பில் சந்தனமிட்டு** அதேமந்திரத்தால் அதில் பத்திரம் அல்லது **புஷ்பம் வைத்து** சிவநேத்திரத்தால் (33.10) சிவனது நெற்றிக்கண்ணென தமது **நெற்றியில் சந்தனதிலகமிட்டு** சிவமூலத்தால் ஒரு புஷ்பத்தைத் தமது **சிரசில்** வைத்து தமதுடலைச் சிவதனுவாகப் பாவிக்கவும்.

(4). **மந்திர சுத்தி :** மௌனநிலையிலிருந்து, கைகளில் ஒரு புஷ்பத்தை வைத்து மார்பிற்கு நேராகக் கும்பிட்டுக்கொண்டு **சம்ஹிதா (33) மற்றும் சிவமூலம்**(19) என்பவைகளை (ஹ்ரக, தீர்க்க, புலுத என இசையில் வரும் உந்திமுதல் தலையுச்சியீறான துவாதசாந்தம் வரை கிரமமாக குறில், நெடில், அளபெடை பொருந்த நிதானமாக சரியாக ஓம்காராதி நமோந்தரமாக உச்சரித்து முடிக்க.

(5) **இலிங்கசுத்தி**:- முதலில் **இலிங்கங்கள் பற்றியவை** : ஒன்றையே என்றும் வைத்துப் பூசிப்பது **உடையவர் (இஷ்ட) லிங்கம்**. அது பஞ்சசூத்திர விதிப்படி தேய்தல் இல்லாத ரத்தினம் பொன் வெள்ளி செம்பு கருங்கல் (மரம், மண் - சண்டேசர் பூசையாற்றியது) என்பவற்றாலாயது. கணப்பொழுதிற்கு (பூசையின்போது) பாவிப்பது **க்ஷணிகலிங்கம்.** இது சந்தனம் பச்சைமண் அரிசி உருத்திராட்சம் என்பவற்றால் ஆயது. அன்றாடம் பூசை முடிந்ததும் ஜலவாசம் செய்விக்கப்படும். சிறப்பாக நர்மதை மற்றும் கங்கை யமுனை என்பவற்றில் எடுக்கப்பட்ட கூழாங்கற்கள் இஷ்ட, க்ஷணிக ஆகிய இரண்டிற்கும் ஆகலாம். இது **பாணலிங்கமாகும்.** இவை ஆயிரங்கைகளுடைய பாணன் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரனால் அவ்வப்பொழுது அவ்வவ்விடங்களிற் சிவனைப் பூசித்தபின் ஜலவாசஞ் செய்யப்பட்டவை. மீளவும் இந்திராதி தேவர்களும் அசுரர்களும் எடுத்துப் பூசிக்கப்பட்டபின் ஆற்றில் விடப்பட்டன. அவரவர் தத்தமது அடையாளங்களை (ஆயுதங்களை) தாம் பூசித்த கற்களில் விட்டுச் சென்றுள்ளனர். அவற்றை யெடுத்துப் பூசிப்போர் நற்பேறு பெறுவர் என்பது ஆகமம்.

பாணலிங்கத்தை இஷ்டலிங்கமாகக் கொள்ளில் ஆவுடையாரிற் பொருத்தி அஷ்டபந்தனம் சாத்திக்கொள்ள வேண்டும். பின் வேண்டும்போது மீளவுஞ்சாத்தி ஸ்நபனபூசை செய்யவேண்டும். க்ஷணிகமாகக் கொள்ளின் ஆவுடையாரில் பத்திரபுஷ்பங்களால் அசையாது வைத்துப் பூசித்தசுவாமியை உத்வாசனம் செய்தபின் லிங்கத்தைமட்டும் சிறிய பூசைப்பெட்டியில் இடவும் (பஞ்சசூத்திர விதி). யாத்திரை செய்வோர் க்ஷணிகலிங்கத்தையே கொள்வர். உடையவருக்கு மகாநிவேதனம் - சுத்த, சித்ரான்னங்கள் இன்றேல் 2ம் பட்சமாக நெற்பொரி, அவல், தேங்காய், பாயாசம் தனித்தோ கூடவோ நிவேதிக்கலாம். க்ஷணிகத்திற்கு பால், பழம், கற்கண்டு, சர்க்கரை கலந்த பாசிப்பயிற்றம் பருப்பு, (அன்னமும்) நிவேதிக்க.

ஜலத்தாற் சுத்திசெய்யப்பட்ட ஸ்நானவேதிகைமேல் ஓர் ஆசனப்பலகையிட்டு, நனைத்துப் பிழிந்த பரிவட்டம் விரித்து, அஸ்திரங்கூறி, சாமான்யார்க்கியந் தெளித்து, சுவாமியின் அணுக்கக் காவலர்களுக்கு **ஓம் ஹாம் பீமாய நம:, ஓம் ஹாம் ருத்ராய நம:** எனப் பெட்டகத்தின் கிழக்கில் பத்திரபுஷ்பத்தின்மேல் அர்ச்சித்து, பூசைமுடியும்வரை சற்றே விலகியிருக்க வேண்டி, 'பண்ணினேர் மொழி ' பாடி பெட்டகத்தைத் திறந்து இலிங்கத்தை ஸ்நானவேதிகை மேலுள்ள ஆசனப்பலகையின்மேல் மடித்துவைத்த பரிவட்டத்தில் வைக்கவும்.

கோமுகத்தைக் கிழக்காக(சிவாக்கிரர்) வைக்கவும். பலரும் வடக்காக வைக்கின்றனர். எவ்வாறாயினும் ஆன்மார்த்தத்தில் தற்புருஷம் தெற்காக (கோமுகம் கிழக்காக) வைக்கப்படும். பின்னர் முன்பு சிவமூர்த்திக்குச் செய்ததுபோல அஷ்டபுஷ்பம் (சிவமூர்த்தி பக்124) சாத்தி சிவகாயத்திரியால் (32) ஒருமுறை அர்ச்சித்து, சத்யோஜாதம் முதல் ஈசானம் ஈறாகப் பஞ்சப்பிரம மந்திரங்களால் (33-1-5) விசேஷார்க்கியங் கொடுத்து **'ஓம் ஹாம் ஹெளம் சிவாய தூபம் ஸ்வாஹா'** எனத் தூபமும், அவ்வாறே தீபமும் காட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு வலக்கையில் சிறுவிரல் முதல் பெருவிரல் முடிய சத்யோஜாதி பஞ்சமந்திரங்களையும் நியசித்து அக்கையைச் சுவாமியின் சிரசில் வைத்து அம்மந்திரங்களை அதேமுறையில் உச்சரித்து, முதலில் சுட்டுவிரல் நடுவிரல்களால் நிர்மாலியங்களில் ஒன்றை எடுத்து வேதிகையில் வைத்து, பின் திவ்யமுத்திரையால் (17) அனைத்த நிர்மாலியங்களையும் நீக்கி அவற்றைப் பின்பு சண்டசமர்ப்பணத்தின் பொருட்டு சுத்தமான தட்டில் ஹ்ருதயம்(33-6)கூறி இட்டு வேதிகைக்கு வடகிழக்கில் சேமித்து வைக்கவேண்டும். பின்பு சுவாமியின் சிரசிலுள்ள பத்திரம், வில்வம், புஷ்பம் தவிர வஸ்திரம், ஆபரணம் என்பவற்றைக் களைந்து அப்புறப்படுத்த வேண்டும். சிரசிலுள்ளவை அபிடேகத்தின்போதும் இருக்கவேண்டும். அவ்வாறு வைத்து **'ஓம் ஹ: அஸ்த்ராய பட்'** எனத் தண்டாகாரப் பிழம்பையும், **'ஓம் ச்லீம் பம் சும் பாசுபதாத்ராய நம:'** என ஆவுடையாரையும் சுத்தமாக குச்சுப்புல் சாத்தி அலம்பி அர்க்கியங் கொடுக்கவும்.

**6.2.7 சிவாபிஷேக ஆசனபூசை** இது இலிங்கத்தின் கீழும் ஆவுடையாரிலும் செய்யப்படுவது. அகப்பூசையில் இருதயதாமரை எவ்வாறு அனைத்துத் தத்துவங்களாலும் அமைந்துள்ளதோ அவ்வாறே புறப்பூசையிலும் சிவாசனம் அமைந்துள்ளது. க்ஷணிகலிங்கத்திற்கு ஷடுத்தாசனம் மட்டும். பின்னர் கூறப்படும். (அத் 5)

**1) 'ஓம் ஹாம் ஆதாரசக்தியே நம:', 'ஓம் ஹாம் அநந்தா ஸ நாய நம:', 'ஓம் ஹாம் அநந்தாய நம:'** என்று இவ்வாறு ஆவுடையாருக்குக் கீழுள்ள ஆசனத்திலும், **2) 'ஓம் ஹாம்'.. நம:'** சேர்த்து ஆவுடையாரின் கீழ்ப்பகுதி 8 திக்குகளிலும் **தர்மாய** (தெ.கி), **ஜ்ஞாநாய** (தெ.மே), **வைராக்யாய** (வ.மே), **ஐசுவர்யாய** (வ.கி), **அதர்மாய** (கி), **அஞ்ஞாநாய** (தெ), **அவைராக்யாய** (மே), **அநைசுவர்யாய** (வ), என்பவற்றிலும், 3) ஆவுடையாரின் கீழ்ப்பாதிநடுவில் **சிம்மாஸநாய வும்.** 4) சுருங்கியபகுதியில் **யோகாசஸ நாயவும்,** 5) ஆவுடையாரின் கீழ்ப்பகுதியின்கீழ் தெ.மே. **அதச்சதநாயவும்,** 6) ஆவுடையாரின் மேற்பகுதியின் வ.கி. **ஊர்த்வச்சதநாயவும்,** 7) ஆவுடையார் மேற்பகுதி நடுவில் **கந்தாய** (கிழங்கின் உள்ளீடு), **பீஜாய** (கிழங்கின் அடி-வித்து), **அங்குராய** (முளை), **நாளாய** (தண்டு), **கண்டகேப்யோ** (தண்டின் முட்கள்), மலரின் 8 இதழ்கள் (இலிங்கப் பிழம்பினடி) **தளேப்யோ** வும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) கேஸரங்களில் **கேஸரேப்யோ** வும், , 9) கர்ணிகையிற் **கர்ணிகாயை** யும், 10) விதைகளில் **பீஜேப்யோ** வும்., 11) இதழ்வட்டநடுவில் **பத்மாஸநாய** வும். 12) கேசரங்களில் கிழக்கு முதலாக நவசக்திகளை **வாமாயை, ஜ்யேஸ்டாயை, ரௌத்திரியை, காள்யை, கலவிகரண்யை. பலவிகரண்யை, பலப்பிரமநின்யை, ஸர்வபூததமன்யை** எனவும், பொகுட்டின் வ.கி. **மநோந்மந்யை** எனவும். (எல்லாமாக 9 சக்திகள்) 13) இதழின் நுனிவட்டத்தில் **சூர்யமண்டலாய, சூர்ய மண்டலாதி பதயே ஓம் ஹாம் ப்ரஹ்மணே நமவும்,** 14) கேசரங்களின் நுனி வட்டத்தில், **ஸோம மண்டலாய, ஸோம மண்டலாதிபதயே ஓம் ஹாம் விஷ்ணவே நமவும்**, 15) 'பொகுட்டு வட்டத்தில் **அக்நிமண்டலாய, அக்நி மண்டலாதிபதயே ஓம் ஹாம் ருத்ராய நம:வும்,** 16) பொகுட்டின் நடுவில் **சக்தி மண்டலாய, சக்தி மண்டலாதி பதயே ஓம் ஹாம் ஈசுவராய நம: வும்** (ஸ்திராசன மந்திரம் அத் 5 பார்), 17) ஈற்றிற் பொதுவாக. **ஓம் ஹாம் சிவாஸநாய நம:** என அர்ச்சிக்க. (தாமரை வடிவான இருதயகமலம் போல இலிங்கம் அமைந்துள்ளது) இந்த அளவும் செய்ய முடியாவிடின்,

'ஓம் ஹாம் அநந்தாஸநாய நம' 'ஓம் ஹாம் சிம்மாஸநாய நம:, ' ஓம் ஹாம் யோகாஸநாய நம:', 'ஓம் ஹாம் பத்மாஸநாய நம:', 'ஓம் ஹாம் விமலாஸநாய நம:' எனப் பஞ்சாசனம் பூசித்தபின்பு 'ஓம் ஹாம் சிவாஸநாய நம:' எனப் பூசித்து விடலாம். இதுவும் நேரங்கருதிச் செய்யமுடியாவிடின் **'ஓம் ஹாம் சிவாஸநாய நம:'** எனப் பூசிக்கலாம். இது க்ஷணிக லிங்கத்திற்கு பொருந்துவது.

**6.2.8. சிவமூர்த்தி பூசை** முன்னர் (பக் 124ல்) சிவாசனத்தில் சிவன் ஒளிப்பிழம்பாக (அருவம்) அமர்ந்ததாகப் பூசிக்கப்பட்டது. **தண்டபங்கி நியாசம்** : இனி அதில் **'ஓம் ஹம் ஹாம் சிவ மூர்த்தயே நம:'** என அவர் உருவத்திருமேனியாகிய சிவமூர்த்தியைப் பூசித்து, அதில் அங்கங்களாக பிழம்பின் சிரசில் வலப் பெருவிரலால் **'ஓம் ஹாம் ஈசான மூர்த்தாய நம:'** என சிரசும், சுட்டினால் தமக்கெதிராக **'ஓம் ஹாம் தத்புருஷ வக்த்ராய நம:'** என முகமும், நடுவிரலால் அதன்கீழே **'ஓம் ஹீம் ஹ்ருதாய நம:'** என இருதயமும், அதன்கீழ் மோதிரவிரலால் **'ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம'** என குறியும், சிறுவிரலால் இலிங்கத்தின் அடியில் **'ஓம் ஹாம் ஸத்யோஜாத மூர்த்தயே நம:'** எனப் பாதங்களும் வெளிப்பட்டதாகப் பாவித்து நியசிக்குக. சுருக்கமாக இதனுடன் மூர்த்திபூசையை முடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனினும் 38 கலாநியாசங்கள் சிறப்பாகவுள்ளன.** அவை ஈசான முதற் பஞ்சசக்திகளின் கலைகளாம். ஈசானி 5, பூர்ணி 4, ஆர்த்தி 8, வாமை 13, மூர்த்தி 8. இவற்றை முறையே ஓம் ஹொம், ஹெம், ஹூம், ஹிம், ஹம் **என்ற அதததற்காய பீஜங்களுடனும்** மந்திரங்களுடனும் திவ்யமுத்திரையால் கூறப்பட்ட உறுப்புகளில் நியசிக்குக. **க்ஷணிக லிங்கத்திற்கு இம் 38ம் செய்யாமல் (ஏலவே செய்யப்பட்ட தண்டபங்கியுடன்) முண்டபங்கி, வக்த்ரபங்கி நியாசங்களையே செய்யவும்.**

**6.2.9. ஷடுத்தாசன பூசையும் நியாசங்களும்** பரிவட்டம் விரிக்கப்பட்ட ஒரு பீடத்தின்மேல் ஒரு பத்திரத்தை வைத்து விசேஷார்க்கியத்தால் **'ஓம் ஹ : அஸ்திராய பட்'** கூறித் தெளித்து ஷணிகலிங்கத்தை வைத்து ஷடுத்தாஸன பூசை செய்க.

1) 'ஓம் ஹாம் அநந்தாய நம:' 2) 'ஓம் ஹாம் தர்மாய நம:
3) 'ஓம் ஹாம் ஜ்ஞாநாய நம:' 4) 'ஓம் ஹாம் வைராக்யாயநம:'
5) 'ஓம் ஹாம் ஐசுவர்யாய நம:' 6) 'ஓம் ஹாம் பத்மாய நம:'

என அர்ச்சித்தபின் லிங்கத்தின்மேல் **'ஓம் ஹ : அஸ்த்ராய நம:'** என்று விசேஷார்க் கியத்தாற் புரோட்சித்து, சிவ காயத்திரியை (32) மெல்லச் சொல்லி அர்ச்சித்து, **'ஓம் ஹைம் கவசாய நம:'** என சந்தனம், புஷ்பம், அறுகு, அர்ச்சதை சாத்தி தண்ட, முண்ட, வக்த்ரபங்கி நியாசங்களைச் செய்க. **(தண்டபங்கி 6.2.4ற் காண்க)**

**முண்டபங்கி நியாசம் -** மூர்த்திக்கு ஐந்து சிரசுகளைக் கற்பிப்பது. இது சின்முத்திரையால் (29) (பெருவும் சுட்டும்) செய்யப்படும்.

சிரசின் : உச்சியில் - 'ஓம் ஹொம் ஈசான மூர்த்தாய நம:'
கிழக்கில் - 'ஓம் ஹெம் தத்புருஷ மூர்த்தாய நம:'
தெற்கில் - 'ஓம் ஹூம் அகோர மூர்த்தாய நம:'
வடக்கில் - 'ஓம் ஹிம் வாமதேவ மூர்த்தாய நம:'
மேற்கில் - 'ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தாய நம:'
என நியசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வக்த்ரபங்கி நியாசம் :** 5 முகங்களை (வக்த்ரம்) கற்பிப்பது. முன்னைய மந்திரங்களில் மூர்த்ததாய என்பதற்குப் பதில் வக்த்ராய என பாவிக்குக. வலக்கைப் பெரு, சுட்டு. நடு, மோதிர, சிறுவிரல்களை முறையே அவ்வவ்மந்திரங்களாலும் அவ்வத் திசைகளிலும் நியசிக்க. **குறிப்பு : பொருட்பிரபஞ்சத்தின் கூறுகளான (பங்கிகள்) கலை, தத்துவம், புவனம் மற்றும் சொற்பிரபஞ்சத்தின் கூறுகளான மந்திரம், பதம், வர்ணம் என்பவற்றை அறியும் கடப்பாடு கிரியாவான்களுக்கு அவசியமானதாதலின் 7.10.10ன் படி பூசையைத் தொடர்க.**

**1. பஞ்சகலா பங்கிநியாசம்** 34ம் மந்திரமாகிய பஞ்சகலா மந்திரங்களால் சாந்தியதீதை முதலிய 5 கலைகளையும் முறையே மூர்த்தியின் சிரசு. முகம், இருதயம், நாபி, பாதம் ஆகிய 5 உறுப்புகளில் பெரு, சுட்டு முதலாம் 5 விரல்களாலும் நியசிக்குக.

ஓம் ஹௌம் சாந்தியதீதகலாயை நம : - சிரசு - பெருவிரல்
ஓம் ஹைம் சாந்திகலாயை நம : - நெற்றி - சுட்டுவிரல்
ஓம் ஹ்ரூம் வித்யாகலாயை நம : - இருதயம் - நடுவிரல்,
ஓம் ஹ்வீம் பிரதி'ஷ்டாகலாயை நம : - நாபி - மோதிரவிரல்,
ஓம் ஹ்லாம் நிவிர்த்திகலாயை நம : - பாதம் - சிறுவிரல்.

**2. புவனநியாசம்.** பஞ்சகலைகளிலுள்ள 224 புவனங்களின் பெயர்களையறிந்து மேற்படி நிவர்த்தி முதலியவை நியசிக்கப்பட்ட உறுப்புக்களிலுள்ள உரோமங்களில் அதனதன் மந்திரத்தால் அதேவிரல்களைக் கொண்டு நியசித்து பின் **'ஓம் ஹாம் புவநாத் மநே நம:'** என மகா(22)முத்திரையால் முழுவதுமாக நியசி.

**3. வர்ணநியாசம்** - இவை அ முதல் ஷ ஈறான 51 எழுத்து அல்லது அட்சரங்கள். அவற்றை மூர்த்தியின் தோலில், **'ஓம் ஹாம் அகாராய நம:', 'ஓம் ஹாம் ஆகாராய நம:'** என்பன முதலாகச் சொல்லி திவ்யமுத்திரையால் ஐம்பத்தொன்றையும் நியசித்து, முடிவில் **'ஓம் ஹாம் வர்ணாத்மநே நம:'** என பொதுவாக நியசிக்குக. (**குறிப்பு**- சக்தி 51 அட்சர ரூபமாயுள்ளாள். சொற்பிரபஞ்சமாய் மொழியாற் பகிரப்படுதலால் - சொல்வதால் இவை **பகிரட்சரங்கள்** எனவும், ஆதாரகமலங்களில் (உள்ளக்கமலம்) இருப்பதால் **அந்த ரட்சரங்கள்** எனவும், சிவாசன பத்மத்தில் (தாமரை பீஜங்கள் - விதைகள்) இருப்பதால் **மாத்ருகா அட்சரங்கள்** எனவும்படும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. மந்திரநியாசம்.** சத்யோஜாத முதல் 11 சம்ஹிதா மந்திரங்களால் மூர்த்தியின் இரத்தத்தில் திவ்ய முத்திரையால் அவ்வம் மந்திரங்களைச் சொல்லி முடிவில் **'ஓம் ஹாம் மந்திராத்வநே நம:'** என பொதுவாக நியசிக்குக. 5. **பதநியாசம்** - சிவாகம ஞானபாதங்களிற் தோற்ற (ஆரோகண) முறையில் ஓம் முதலாகவும் முடிவாகவுமுள்ள எண்பத்தொரு மூலப்பதங்கள் பற்றியறிந்து அவைகளை அவற்றின் மந்திரங்களால் திவ்யமுத்திரையால் மூர்த்தியின் சிரசு முதலாகச் செல்லும் நாடி நரம்பு தசைகளில் சிரசில் நியசித்து முடிவில், **'ஓம் ஹாம் பதாத்வநே நம:'** எனப் பொதுவாக நியசிக்குக.

**6. தத்துவநியாசம் :** ஒடுக்க (அவரோகண) ரீதியில் பிருதிவி (நிலம்) முதல் நாதம் ஈறாகவுள்ள 36 தத்துவங்களை அவற்றின் மந்திரத்தால் திவ்யமுத்திரையால் மூர்த்தியின் சப்ததாதுக்களில் மந்திரத்திற்குச் சொல்லிய இரத்தம், வர்ணத்திற்குச் சொல்லிய தோல்தவிர மற்றை 5 தாதுக்களில் நியசித்து முடிவில் **'ஓம் ஹாம் தத் வாத்வநே நம:'** என பொதுவாக நியசிக்க. (சப்ததாதுக்கள் : எலும்பு. மச்சை, (வெண்மையான) சுவேதை. நிணம்(கொழுப்பு), இறைச்சி, இரத்தம், தோல்.). மேல் ஆறும் அத்துவா(அத்வ) நியாசங்கள்.

மந்திர முதலாய 6 அத்துவாக்களையும் நியசித்த பின் 'ஓம் ஹாம் ஸர்வாத்மநே நம' எனப் பொதுவாக நியசிக்க. இங்ஙனமாக விரிவாகச் செய்ய இயலாவிடின்

1. ஓம் ஹாம் மந்த்ராத்வநே நம: - மந்திரமே சோரியா
2. ஓம் ஹாம் பதாத்வநே நம: - வான்பதமே மாமுடியா
3. ஓம் ஹாம் வர்ணாத்வநே நம: - தொந்தமுறும் வன்னமே தொக்காக
4. ஓம் ஹாம் புவனாத்வநே நம: - பந்தனையால் ஒத்தபுவனத்துருவே உரோமமா
5. ஓம் ஹாம் தத்வாத்வநே நம: -தத்துவங்களே சத்ததாதுவா
6. ஓம் ஹாம் கலாத்வநே நம: - (வைத்த) கலையே அவையவமா
7. ஓம் ஹாம் ஸர்வாத்வநே நம: (காட்டும்) அத்துவாவின் நிலையே வடிவமாய் நின்றோய் - குமரகுருபரர்) என நியசிக்குக. இதில் சோரி - இரத்தம், தொக்கு - தோல், சத்ததாது, மூளை, கொழுப்பு முதலாய ஏழு தாதுக்கள்.

(பஞ்சாக்ஷசர நியாசம், கோளகை நியாசம், சிவாகம நியாசம், தத்துவ தத்துவேஸ்வர நியாசம், மூர்த்தி, மூர்த்தீஸ்வர நியாசம் என்பன உள்ளதாயினும் அன்றாடம் இவை செய்தற்கு அரியவை. ஆதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலவே சொல்லப்பட்ட 38 கலைநியாசத்தில் எல்லாம் அடங்குதலின் 38ஐயும் செய்யின் இவற்றைச் செய்யாது விடலாம்.) அட்டவணையில் அத்வ (மந்திரம், பதம், வர்ணம், தத்துவம், புவனம், கலை) நியாசம் சேரவில்லை. (க்ஷணிக லிங்கத்திற்கு சுருக்கமாகக் கற்பித்து நியசிக்கவும்.)

**வித்யாதேஹ நியாசம்.** (குறிப்பு : அகப்பூசையில் கூறப்பட்டாலும் தொடர்ச்சி கருதி மீளவுங் கூறப்படுகின்றது.) மேற்சொல்லிய நியாசங்கள் யாவும் மாயாசம்பந்த நியாசங்க ளாதலின் அவற்றாலாய சரீரத்தை நின்மல ஞானமய சக்தி சரீரமாக்குதற்கு வித்யா(ஞான)தேக நியாசம் வேண்டற்பாலது. தன் சுயநிலையில் வடிவற்ற சிவன் ஆன்மாக்கள் வணங்கும்படியாக தடத்த வடிவங்களைத் தன் ஞானசக்தியாற் கொள்வான். அவை அரு, அருவுரு, உருவென அமையினும் அருவம் புலனாகாததாலும், உருவங்கள் மகேஸ்வர மூர்த்தங்கள் 25 இவற்றுடன் அட்டமாமூர்த்தம் என பல வகைத்தாதலின் ('பிறருருவும் தன்னுருவும் தானேயாகி' என்றபடி உரு எண்ணிலி யாதலாலும்) அருவுருவ சதாசிவ (இலிங்க) மூர்த்தியை (முன் நியாசங்கள் செய்யப்பட்ட திருமேனியில்) தியானித்து வரவழைத்து நியசித்தலே வித்யாதேஹ நியாசமாம்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய் நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம் '. என்பது சாக்கியநாயனார் புராணப் பாடல். (பிற்குறிப்பு 2, 3, 8 பார்க்க)

**6.2.10 சதாசிவத்தியானம்:** இறைவனின் அங்க உபாங்கங்களும் திசைகளும் பாவினாற் தரப்படுகின்றன. (முனனுங் கண்டோம்)

1) உச்சிமுகம் ஈசானம், ஒளி தெளியப் பளிங்கே, பக் பார்.

2). திருவுருவம் தெளிபளிங்கு சடாமகுடத்து இதழி பக் பார்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி,
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி,
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி,
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி,
அங்கமலத் தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி,
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி,
திருமூலட்டானனே போற்றி போற்றி. (அப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.2.11.** (1)**ஆவாஹனம்** : (அகப்பூசையில் கூறப்பட்டாலும் தொடர்ச்சி கருதி மீளவுங்கூறப் படுகின்றது (7.11). சோதிரூபியான பரமசிவனைப் பூசையை யேற்றருளுமாறு அழைத்தல்

**இரு கைநிறையப்** புஷ்பங்களை எடுத்து அஞ்சலியாக **'ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம:'** வென மெல்ல உச்சரித்துக்கொண்டு, பேரொளியாய், ஞானானந்தமாய், சுயம்பிரகாசமாய் விளங்குஞ் சிவனைத் தியானித்து, சிவோகம்பாவனையோடும் பூசைக்கேற்றவாறு பெருமான் புஷ்பாஞ்சலியில் ஒளிமயமாய் வந்ததாகப்பாவித்து, அஞ்சலியை நெற்றிவரையிறக்கி, பெருமான் கோடி சந்திரப்பிரகாசத்தை உடையவரானதாகவும் நெற்றியின் அமிர்ததாரகையால் வெளுப்பாய்விட்ட திசைகளைப் பெற்று விளங்குவதாகவும் பாவித்து, அஞ்சலியை மார்பிற்கு நேராக இறக்கி, இருதயஒளி பிங்கலைநாடியின் இரேசகத்தால் வந்துடன் கலந்ததாகப் பாவித்து, இலிங்கத்தின் உச்சியில் **'ஓம் ஹாம் ஹிருதாய நம:'** வென ஆவாஹன(46,47) முத்திரையாற் புஷ்பத்தைச் சொரிந்து, பெருமான் மூர்த்தியின் இருதயத்தை அடைந்ததாகப் பாவித்து.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்,
புலனைந்தின் வழியடைத் தமுதே,
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி,
யுள்ளவா காணவந் தருளாய்,
தேறலின் தெளிவே சிவபெரு மானே,
திருப்பெருந் துறையுறை சிவனே,
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த,
இன்பமே என்னுடை யன்பே - திருவாசகம்

(2) **ஸ்தாபனம்** :- மேற்படி இருதயமந்திரத்தால் ஸ்தாபன முத்திரை(48) காட்டி பரமசிவனை மூர்த்தியில் இருக்கச் செய்தல் இது.

செங்க ணானும் பிரமனும் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே (கந்தப் புராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) **சந்நிதானம் :** அதேமந்திரத்துடன் சந்நிதான(49) முத்திரைகாட்டி **பரமசிவன் பூசகரையும், பூசையையும் திருநோக்கஞ் செய்யுமாறு வேண்டல்.** (சாந்நித்திமாய் இருக்கச் செய்தல்)

அண்டம் ஏழன்று கடந்தாய் போற்றி,
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி,
பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி,
பாரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி,
தொண்டர் பரவும் இடத்தாய் போற்றி,
தொழில் நோக்கி ஆளும் சுடரே போற்றி,
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி,
கயிலை மலையானே போற்றி போற்றி. - (திருத்தாண்டவம்)

(4) **சந்நிரோதனம் :** அதே மந்திரத்துடன் சந்நிரோதன (50) முத்திரை காட்டித் திருநோக்கத்தைப் பூசைமுடியுமளவும் நிலைத்திருக்கச் செய்தல்.

முத்தனே முதல்வா முக்கணா முனிவா மொட்டறா மலர்பறித்
திறைஞ்சிப், பக்தியால் நினைந்து பரவுவார் தமக்கு பரகதி
கொடுத்தருள் செய்யும், சித்தனே செல்வத் திருப்பெருந் துறையுள்
செழுமலர் குருந்தம் மேவிய சீர், அத்தனே அடியேன் ஆதரித்
தழைத்தால் அதெந்துவே என்றருளாயே. (திருவாசகம்)

**விஞ்ஞாபனம்** : (விண்ணப்பஞ் செய்தல்) **'ஸர்வலோக நாயகராகிய மகாதேவரே உமது வரவு நல்வரவாகுக.'** என, அவர், **'குழந்தாய் நன்றாக எழுந்தருளி வந்தோம் மகிழ்ச்சி'** என்றதாகப் பாவித்து, **'ஸ்வாமி அடியேன் தொடங்கும் இப்பூசை முடியுமளவும் இவ்விலிங்கத்திற் தேவரீர் சாந்நித்தியமாக மகிழ்ச்சியுடன் வீற்றிரும்'** என வேண்டி காளகர்ணி (52), நமஸ்காரம் (2), இலிங்கம்(55) ஆகிய முத்திரைகள் காட்டவும். **குறிப்பு** இனி வருபவை சில அகப் பூசையிலுங் கூறப்பட்டவை

**பரமசிவனுக்கு நியாசங்கள்** விஞ்ஞாபனத்தின் பின்னர் முன்பு மூர்த்திக்குச் செய்தது போல பரமசிவனுக்கு **இருதயம் முதலிய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கங்களை** நியாசஞ் செய்து, சிவமூலத்தால் ஏகத்துவம் பாவித்து, திக்பந்தனம், அவகுண்டனம், தேனு(12)முத்திரை ஆகியவைகளைச் செய்து, மகா(22)முத்திரை பஞ்சமுகி(58)முத்திரை காட்டி, இரு திருவடிகளிலும் பாத்தியமும், பஞ்சமுகங்களில் தனித்தனி ஆசமனமும், ஐந்து சிரசுகளிலும் தனித்தனி அர்க்கியமுங் கொடுத்துப் பின் அபிடேகஞ் செய்யவும். (உடையவருக்கு அபிடேகம் உண்மையானது, க்ஷணலிங்கத்திற்குப் பாவனையானது) முன்னர் உட்பூசையிற் கூறிய (அட்டவணை) மீளவும் முழுமையாக மாற்றங்களுடன் பின்னர் தரப்படும்.

**தண்டபங்கி நியாசம்** : **'ஓம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம:'** என அவர் உருவத் திருமேனியாகிய சிவமூர்த்தியைப் பூசித்து, அதில் அங்கங்களாக பிழம்பின் சிரசில் வலப் பெருவிரலால் **'ஓம் ஹாம் ஈசான மூர்த்தாய நம:'** என சிரசும், சுட்டினால் தமக் கெதிராக **'ஓம் ஹாம் தத்புருஷ வக்த்ராய நம:'** என முகமும், நடுவிரலால் அதன் கீழே **'ஓம் ஹீம் ஹ்ருதாய நம:'** என இருதயமும், அதன் கீழ் மோதிரவிரலால் **'ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம:'** என குறியும், சிறுவிரலால் இலிங்கத்தின் அடியில் **'ஓம் ஹாம் ஸத்யோஜாத மூர்த்தயே நம:'** எனப் பாதங்களும் வெளிப்பட்டதாகப் பாவித்து நியசிக்குக. இதனுடன் மூர்த்திபூசையை முடிக்கலாம்

**முற்கூறிய அருவ சிவமூர்த்தி தியானம்,** அகப்பூசைக்கு பாவனையால் ஆற்றவேண்டிய **தண்டபங்கி நியாசம் முதலியவும் ஆவாஹனாதிகள் ஆற்றும் விபரங்களும் சற்றே மாறுதலுடன் புறப்பூசைக்கு மீளவுந் தரப்படுகின்றது.** குறிப்பு 1. அகப்பூசையின் கீழ் வரும் விளக்கங்கள்- ஆவாஹனம், சதாசிவத்தியானம் 6.2.10,11பார். 2. மறுபக்க அட்டவணை 6ல் ஆவாஹனத்தின் பின் (சொரூப) பரமசிவனுக்கே யாவும் ஆற்றப்படும்.

**அருவ தியானம் : 'ஓம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம:'** என தியானித்து, அர்ச்சிக்குக.- திருவாசகம்

"சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே சொல்லுதற்கரிய,
ஆதியே நடுவே அந்தமே பந்தம் அறுக்கும் ஆனந்தமா கடலே,
தீதிலா நன்மை திருவருக் குன்றே திருப்பெருந் துறையுறை சிவனே,
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய் வந்துநின் இணையடி தந்தே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விடயம் | முத்திரை அல்லது முறை | செய்கை (பாவனையால்) | மந்திரம (மனதால்) |
|---|---|---|---|
| 1.தண்டபாங்கிநியாசம் மூர்த்திக்குமுக முதலிய உறுப்புக்கள்வெளிப்படல் பூசகக்கு முன்னாக | வலபெருவிரல்<br>சுட்டுவிரல்<br>நடுவிரல்<br>அணிவிரல்<br>சிறுவிரல் | சிரசில் நியசிக்க<br>முகத்தில்நியசிக்க<br>மார்பில் நியசிக்க<br>குறியில் நியசிக்க<br>பாதத்தில் நியசிக்க | ஓம் ஹாம் ஈசான மூர்த்தாய நம<br>ஓம்ஹாம்தத்புருஷ வக்த்ராய நம<br>ஓம்ஹீம் அகோர ஹிருதயாய நம<br>ஓம்ஹிம்வாமதேவ குஹ்யாய நம<br>ஓம்ஹாம்ஸத்யோஜாதமூர்த்தாயநம |
| 2. மூர்த்திக்கு முண்டபாங்கி நியாசம் - பஞ்சதிசைகளில் பஞ்சசிரசமைத்தல் | சின்முத்திரை (29) சுட்டும் பெரு விரல் நுனியும் சேர் | உச்சிச் சிரசில்<br>கிழக்குச் சிரசில் (பூசகருக்குமுன்)<br>தெற்குச் சிரசில் (இடமாக)<br>வடக்குச் சிரசில் (வலமாக)<br>மேற்குச் சிரசில் (மூர்த்திக்குபின்) | ஓம் ஹொம் ஈசாந மூர்த்தாய நம<br>ஓம்ஹெம்தத்புருஷ மூர்த்தாயநம<br>ஓம்ஹூம் அகோர மூர்த்தாய நம<br>ஓம்ஹிம்வாமதேவ மூர்த்தாய நம<br>ஓம்ஹம்ஸத்யோ ஜாதமூர்த்தாயநம |
| 3. வக்ரபாங்கி நியாசம் (பஞ்ச முகம் கற்பித்தல்) | வலபெரு விரல்<br>சுட்டு விரல்<br>நடு விரல்<br>அணி விரல்<br>சிறுவிரல | உச்சிச் சிரசின் கீழ்<br>கிழக்குச் சிரசின் (முன்னாக) கீழ்<br>தெற்குச் சிரசின் (இடமாக) கீழ்<br>வடக்குச் சிரசின் (வலமாக) கீழ்<br>மேற்குச் சிரசின் (பின்னாக) கீழ் | ஓம் ஹொம் ஈசாந வக்த்ராய நம<br>ஓம்ஹெம்தத்புரு' வக்த்ராய நம<br>ஓம் ஹூம்அகோர வக்த்ராய நம<br>ஓம்ஹிம்வாமதேவ வக்த்ராய நம<br>ஓம்ஹம் ஸத்யோ ஜாதவக்த்ராய நம |
| 4.மூர்த்திக்கு வித்யா தேகம் அமைத்தல் | சின்முத்திரை(29)சுட்டும் பெருவிரல் நுனியும் | உச்சிச் சிரசு | ஓம் ஹாம் ஹௌம் வித்யா தேகாய நம |
| 5.நேத்திரம் (கண்) அமைத்தல் | ஆக்ரகண்ட, நேத்ர, திரிசூல(34) | பெருவிரலால் சிறுவிரலை தொட்டு நடுவிரல் மூன்றையும் நீட்டல். | ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம |
| 6.ஆவாஹனம் பூசையை ஏற்றருள சிவனை அழைத்தல் | ஆவாஹன (46 அல்லது 47) முத்திரை | இருகைகளில்நிறை புஷ்பங்களை வைத்து அஞ்சலியாக்கி சிவமூலத்தைமௌ்ளஉச்சரித்துக்கொண்டுபேரொளி.ஞானாநந்தம்சுயம்பிரகாசம்என விளங்கும் **பரமசிவனை** தியானித்துசிவோகம் பாவனை யோடும் பெருமான் பூசகரின் பூசைக்கேற்றவளவில்வந்ததாகப்பாவித்துஅஞ்சலியாகஇரு கரங்கூப்பி பெருவிரலைமடக்கிப்பூசொரி | ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம<br>ஓம்ஹம் ஹிருதாய நம (திருவாசகம் - 'மாறிநின்றென்னை மயக்கிடும்...' |
| 7.ஸ்தாபனம் | ஸ்தாபன முத்திரை (48) | புரமசிவனை மூர்த்தியில் இருக்கச்செய்தல் | ஓம்ஹம் ஹிருதாய நமதேவாரம்'செங்கணானும்பிரமனும் |
| 8. சந்நிதானம் | சந்நிதான முத்திரை (49) | பூசையை திருநோக்கம் செய்ய சாந்நித்தியமாயிருக்க வேண்டல். | ஓம் ஹம் ஹிருதாய நம திருத்தாண்டகம் 'அண்டம்ஏழன்று..' |
| 9. சந்நிரோதனம் | சுந்நிரோதன முத்திரை (50) | பூசை முடியுமளவும் திருநோக்கத்தை நீட்ட வேண்டல். | ஓம்ஹம் ஹிருதாய நம'முத்தனேமுதல்வ |
| 10 | உஷ்ணீக | பிரத்தியங்கம் - | ஓம் ஹாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 10 ஷடங்க மந்திர நியாசம் | உஷ்ணீக முத்திரை2 8 (இருபத் தெட்டாவது) | பிரத்தியங்கம் - இருதயம் பிரத்தியங்கம் - சிரசு பிரத்தியங்கம் - சிகை சாங்கம் - கவசம் - அங்கத்துடனாவது) பிரத்தியங்கம் - கண் சாங்கம் - (அஸ்திரம்- அங்கத்துடனாவது) | ஓம் ஹாம் ஹ்ருதாய நம: ஓம் ஹீம் சிரஸே நம: ஓம் ஹூம் சிகாயை நம: ஓம் ஹைம் கவசாய நம: ஓம் ஹௌம் நேத்ரேப்யோம: ஓம் ஹ: அஸ்த்ராய நம: |
| 11 பாத்தியம் | இருதரம் | இரு பாதங்களுக்கு பாத்திய நீர் விடல் | ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம |
| 12 ஆசமனம் | மூன்று முறை | திருவாயில் உள் அருத்துதல் | ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே ஸ்வதா |
| 13. அர்க்கியம் | ஒருமுறை | முடிமேல் விடல் | ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே ஸ்வாஹா |

**குறிப்பு-** 10ன் பின் திக்பந்தனம். அவகுண்டம் செய்து தேனுமுத்திரை காட்டவேண்டும். 14. **உடையவருக்கு** (நிரந்தரலிங்கம்) **அபிடேகம்** உண்மையானது. க்ஷணிக-அவ்வப்போதான லிங்கத்திற்குப் பாவனையானதால் அகப்பூசையிற்போல க்ஷணிகத்திற்கும் மனதாற் கொள்க. அதனால் முன்னரும், கீழேயுங் கூறிய அண்ணாமலைச்சதகப் பாடலிற் கூறிய பொருட்களை மனதாற் கற்பித்து அவை பிண்டமாகிய நம் உடலிலிருந்து வெளிப்பட்டு இருதய கமல வாசியான சிவனுக்கு அபிடேகிக்கப் பட்டதெனக் கொண்டு **புஷ்பத்தால் அபிடேகிக்குக.**

'சுத்தஜலம் அபிடேகம் நல்லெண்ணெய் அரிசிமா தூள்மஞ்சள் நெல்லி முள்ளி, தூபஞ்ச கௌவியமொடு ஆவின்நெய் பால் தயிர் சுவையான பஞ்சாமிர்தம், உத்த பல மா கதலி மாதுளை யும் எலுமிச்சை ஓங்கு தமரத்தை நார்த்தை, ஒண்கனிச் சுளை குளஞ்சித் தேன் திரட்டுபால் உயர் கருப்பஞ் சாற்றுடன், மெத்தும் இளநீர் அன்னம் வில்வநீர் தபனநீர் மிளிர்பொன் இரத்தோதகம், மென்பசுங் கற்பூர நற்பன்னீர் சந்தனம் விளங்கு தாராபிடேகம், அத்தநிற் கித்தகைய அபிடேக மதுபுரிந் தருள் பெறு சைந்தராயரர், அண்ணாவினில் துதிசெய் உண்ணா முலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய அண்ணாமலைத் தேவனே'. **இவற்றுடன்** நாவலர் கூறியபடி பலருங் கைக்கொள்வதாகிய திருநீற்று அபிடேகமுஞ் செய்க.

**உடையவருக்கென அபிடேக ஒழுங்குகள்** - 'சிவபூசை முறைகள்' :- சங்குநீர் அபிஷேகம். பசுக்கொம்பு நீர் அபிஷேகம் சிறப்பானவை. நெய் அபிஷேகத்தின் பின்னும் தேன் அபிஷேகத்தின் பின்னும் இளவெந்நீர் அபிஷேகிக்கவேண்டும் (நாவலர்) ஒவ்வோர் அபிடேகத்தின் பின்னும் தூபதீபங்காட்டி சிறிதே நிவேதனம் செய்யவேண்டும். அபிடேகிக்கும் போது 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய ஸ்வஹா' எனவோ, 11 ஸ ம்ஹிதா மந்திரங்களையோ(33) நமோநம முதல் ஓம் ஈறாகவுள்ள) 81 பதங்களையோ, திருமுறைகளையோ (ஆசாரியர்களாயின் ஸ்ரீ ருத்ரத் தையோ) சொல்லி அபிடேகிக்கவும்.

**6.2.12. பஞ்சகௌவியம் கூட்டும்முறை:** சுவாமியை ஸ்தான வேதிகையில் எழுந்தருள்செய்விக்கு முன் அதன்மேல் வாழை அல்லது முருக்கம் இலை வைத்து அதில் அரிசி பரப்பி அதில் 9 கட்டங்கள் வரைக. கீழ்க்காணுமாறு அவ்வவ்(5) இடங்களை சதாசிவமூர்த்தியின் ஈசானாதி பஞ்சமுகங்களாகக் கொண்டு குறித்த கோஷ்டாயநம இறுதியான மந்திரங்களால் அர்ச்சிக்க. அதன் பின்னர் அதே இடங்களில் ஐந்து வட்டகைகளை அல்லது வாழையிலை (பெட்டிவடிவாகச் செய்த) தொன்னைகளைக் கழுவிவைத்து அட்டவணையிற் காட்டியவாறுள்ள பாத்ராயநம: இறுதியான மந்திரங்களால் அர்சிக்க. பின்னர் கோமயம் முதலியவற்றைக் காட்டிய ஒழுங்கில் வட்டகைகளில் இடவும். (குசோதகம் என்பது தண்ணீர்விட்டு தருப்பை நுனியிட்டு, ஒரு சாணளவிற் கிள்ளிய தருப்பையை இட்டுவைப்பது.) **பஞ்சகௌவியஅளவு**: வேண்டுமளவு பால், அதன் 5ல்3 தயிர், பாலின் 5ல்2 நெய். பாலின் 5ல்1 கோசலம், பாலின் 10ல்1கோமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | 2. ஓம் ஹாம் புருஷ தத்வ கோஷ்டாய நம<br>2ஓம் ஹாம் ரத்நோதக பாத்ராய நம<br>**கோசலம்**<br>ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாயநம(4முறை) | 6 ஓம் ஹாம் பிரகிருதி தத்வ கோஷ்டாய நம<br>6. ஓம் ஹாம் சக்தி பாத்ராய நம<br>**குசோதகம்** |
| 1 ஓம் ஹாம் காலதத்வ கோஷ்டாய நம<br>1.ஓம்ஹாம் அம்ருதாத்மக பாத்ராய நம<br>**கோமயம்**<br>ஓம் ஹம் ஸத் யோதாய மூர்த் தாயநம5முறை | 5 ஓம்ஹாம் சிவதத்வ கோஷ்டாய நம<br>5. ஓம் ஹாம் சுப்ரதிஷ்ட பாத்ராய நம<br>**பால்**<br>ஓம் ஹொம் ஈசான மூர்த்தாய நம (ஒருமுறை) | 4 ஓம் ஹாம் சதாசிவ தத்வ கோஷ்டாய நம<br>4. ஓம் ஹாம் சுசாந்த பாத்ராய நம<br>**தயிர்**<br>ஓம் ஹெம் தத்புருஷ வக்த்ராயநமஇருமுறை |
| | 3 ஓம் ஹாம் வித்யா தத்வகோஷ்டாய நம<br>3.ஓம் ஹாம் தேஜோவத் பாத்ராய நம<br>**நெய்**<br>ஓம் ஹூம் அகோர ஹிருதாயநம 3முறை | |

**பஞ்சகௌவிய அர்ச்சனையும் மந்திரிப்பும்.**

1) இவ்வாறிட்டபின் பாலை ஒருமுறை ஈசானமந்திரத்தாலும் மற்றும் தயிர். நெய், கோசலம், கோமயம் என்பவற்றை முறையே அட்டவணைப்படி அர்ச்சித்து

2) அம்முறைகளில் பதாகை(16)யால் அம்மந்திரங்களால் மந்திரித்து

3) பின்வரும் மந்திரங்களுடன் கோமயம் முதலாக ஒழுங்கிற் சேர்க்கவும்.

அ) ஓம் ஹம் ஹிம் ஸத்ஜோஜாத வாமதேவாப்யாம் நம: - கோமயத்தைக் கோசலத்தில், ஆ) ஓம் ஹிம் ஹூம் வாமதேவ அகோராப்யாம் நம: - மேலிரண்டையும் நெய்யில்

இ) ஓம் ஹூம் ஹெம் அகோர தத்புருஷாப்யாம் நம: - மேல் மூன்றும் தயிரில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) ஓம் ஹெம் ஹொம் தத்புருஷ ஈசாநாப்யாம் நம: - மேல் நாலையும் பாலில் சேர்த்து,

4) 6ல் குசோகதகத்தைச் சிவகாயத்திரி (32) மந்திரத்தால் 6 முறை அர்ச்சித்தும் மந்திரித்தும் எடுத்து, 5) நடுவிற் சேர்த்துள்ள பஞ்சகௌவியத்தில் ஊற்றி, தருப்பையாற் கலந்து, 6) பஞ்சப்பிரம மந்திரம் (33ல் முதல் 5) , ஷடங்கம் (33ல் இறுதி 6), சிவகாயத்திரி (32) சிவமூலம்(19) ஆகியவற்றை ஒவ்வொருமுறை மந்திரித்து, 7) திக்பந்தனம், அவகுண்டம், தேனுமுத்திரை காட்டி, தூபதீபங்காட்டி, 8) சிறிதளவு நிவேதித்து, விசேஷார்க்கியம் கொடுத்து, 9) இலையோடு அசையாமல் எடுத்து ஏனைப் பூசாத் திரவியங்களோடு ஒரு பாத்திரத்தில் மூடி வைக்கவும். ('ஆவினுக் கருங்கலம் அரனைஞ் சாடுதல்')

சிறப்புக் காலங்களிலும், பிராயச்சித்தத்தின் போதும் பஞ்சகௌவியக் கலப்பினை சிவமூலத்தாலும், சிவகாயத்திரியாலும் நூற்றெட்டு முறை சொல்லி மந்திரிப்பின் அது பிரம்மகூர்ச்சம் என்றும் சிவகூர்ச்சம் என்றும் அழைக்கப்படும் சிறப்பினதாகும் .

மலட்டுப்பசு, ஈன்றணிய(அண்மையில் ஈன்ற)பசு, நோயுற்றபசு, மலந்தின்னும்பசு என்பவற்றிலிருந்து பால் முதலியன எடுத்தலாகாது. கபிலமும் உத்தமலட்சணப் பசுக்களும் பொருந்தும். (1.பால் - செந்நிறப்பசு 2. தயிர் - வெள்ளைப்பசு 3. நெய் - கபிலப்பசு 4. கோசலம் - நீலப்பசு 5. கோமயம் - கறுத்தப்பசு)

**பஞ்சாமிர்தம்:** பஞ்சகௌவியத்திற்குச் சொல்லிய முறையிலேயே (கீழ் அடவணையிற் காட்டியபடி) 9 கோஷ்ட அமைப்பையும், பூசையையும் செய்து, கோசலம், கோமயம் இருந்த வட்டகைகளில் முறையே தேனும், சர்க்கரையும் இட்டு, ஏனையவற்றில் பால் முதலியவற்றை முன்போலவே இட்டு, அர்ச்சனை மந்திரித்தலை முன்போல ஆனால் ஒருமுறையே செய்து, முன் வெளியாயிருந்த இடங்களில் தனித்தனி பாத்திரங்களில் மா, பலா, வாழை (முக் கனி)களை இட்டு, சம்ஹிதா (33) மந்திரங்களை ஒவ்வொருமுறை சொல்லி அர்ச்சித்து, சுத்தமான பெரியபாத்திரத்தில் மேலும் இயன்றளவு முக்கனிகளை இட்டு, கோஷ்டத்தில் உள்ளவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து தட்டிலுள்ள முக்கனிகளுடன் சேர்த்து **'ஓம் ஹாம் ஹௌம் சிவாய சுவாஹா'** என பிசைந்து. கையலம்பி சிவமூலத்தால் ஒருமுறை அர்ச்சித்து மற்றைய பூசைத் திரவியங்களுடன் வைத்தல் வேண்டும். குசோதகத்துடன் சிறிது சந்தனமிடுக.

இது **பல(ழ) பஞ்சாமிர்தம்.** முக்கனிகளைச் சேர்க்காமல் மற்றைய ஆறையும் கூட்டின் அது **ரஸ பஞ்சாமிர்தமாம்.**

**பஞ்ச பலோதகம்-** இது பசுவினாற் பெறும் பால் முதலியவற்றிற்குப் பதிலாக அட்டவணையின் அடைப்புக் குறிக்குள் உள்ள பழச்சாறுகளை வைத்து முன்போலப் பூசித்து ஒன்றாகக் கலந்து வைப்பது. (பல-பழ, ஓதகம் - சாறு). கீழ் அட்டவணை பலபஞ்சாமிர்தம், பஞ்சபலோதகம் இரண்டிற்கும். பஞ்சகௌவியம் முதலான இம்மூன்றையும் (கூட்டி தனித்தனி ஏலவே அர்ச்சித்த பின்) அவைகளில் உள்ளவைகளைத் தனித்தனி மிகுதியாக வைத்து அபிஷேகிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| மா | 2 ஓம் ஹாம் புருஷ தத்வ கோஷ்டாயநம<br>2ஓம்ஹாம்ரத்நோ தக பாத்ராய நம<br>**தேன்**<br>**(தமரத்தைச்சாறு)**<br>ஒம்ஹிம்வாமதேகு ஹ்யாயநம(ஒருமுறை) | 6ஓம்ஹாம் பிரகிருதி தத்வ கோஷ்டாய நம<br>6. ஓம் ஹாம் சக்தி பாத்ராய நம<br>**குசோதகம்** |
| 1 ஓம் ஹாம் கால தத்வ கோஷ்டாய நம<br>1.ஓம் ஹாம் அம்ரு தாத்மக பாத்ராய நம<br>**சர்க்கரை**<br>**(மாதுளைச்சாறு)**<br>ஒம்ஹம்ஸத்யோ தாயமூர்த்தாயநம (ஒருமுறை) | 5ஓம்ஹாம்சிவதத்வ கோஷ்டாய நம<br>5.ஓம் ஹாம் சுப்ர திஷ்ட பாத்ராய நம<br>**பால்**<br>**(எலுமிச்சைச்சாறு)**<br>ஓம் ஹொம் ஈசான மூர்த்தாய நம-ஒருமுறை | 4 ஓம் ஹாம் சதாசிவ தத்வ கோஷ்டாய நம<br>4.ஓம் ஹாம் சுசாந்த பாத்ராய நம<br>**தயிர்**<br>**(நாரைத்தைச்சாறு)**<br>ஒம்ஹெம்தத்புருஷ வக்த்ராயநம(ஒரு முறை) |
| பலா | 3 ஓம் ஹாம் வித்யா தத்வ கோஷ்டாய நம<br>3. ஓம் ஹாம் தேஜோ வத் பாத்ராய நம<br>**நெய் (குளஞ்சிச்சாறு)**<br>ஓம் ஹூம் அகோரஹி ருதாயநம-ஒருமுறை | **வாழை** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.2.13 அபிஷேகம் :** (இலிங்கஉச்சிக்கு 3அங்குல மேலாக வலக்கையை கோமுகி (வாய்க்கால் போல) வைத்து இடதுகையால் திரவத்தை அதில் ஊற்றியும், திண்மமாயின் மிருகமுத்திரை (19), நிரோதனமுத்திரை (20). தியாகமுத்திரை (65) பாவித்து பொருத்தமான திருமுறைகளை ஓதி (முதலிலும் கடைசியிலும் திருச்சிற்றம்பலம் வழமைபோற் சொல்லி) அபிடேகிக்க வேண்டும். பாடலிற் கூறியபடியான ஒழுங்கில் சிறு மாற்றுத்துடன் தரப்படுகின்றது

1. **சுத்தஜலம்** - (1ம் தி.மு தக்கராகம் - காம்போதி

'தடங்கொண்டதொர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டடி யார்குளிர் நீர்சுமந் தாட்டப்
படங்கொண்டதொர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்றன் இடைமரு தீதோ'

2. **நல்லெண்ணெய்** - திருவாசகம்

'கொள்ளுங் கில்லெனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே'

3. **அரிசிமா, தூள்மஞ்சள், நெல்லிக்காப்பு குறுந்தொகை-இந்தளம்**

'செய்ய மேனியன் தேனொடு பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மைய லாய்மற வாமனத் தார்க்கெலாம்
கையில் ஆமல கக்கனி யொக்குமே' (அங்கை நெல்லிக்கனி)

4. **பஞ்ச கௌவியம்** (பாவநாச திருக்குறுந்தொகை - இந்தளம்)

'பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடும் அவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. பஞ்சாமிர்தம்** (திருத்தாண்டகம். குறிஞ்சி - கரிகாம்போதி)

குருகாம் வயிரமாங் கூறு நாளாங்
கொள்ளுங் கிழமையாங் கோளே தானாம்,
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்,
ஒருகா லுமையாளோர் பாகனுமாம்
உள்நின்ற நாவிற் குரையா டியாம்,
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே.

**6. நறுநெய்** பண் - நட்டபாடை (நாட்டை) 1ம் தி.மு.

'மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே'

**7. பால்** திருக்குறுந்தொகை பண் - இந்தளம் (நாதநாமக்கிரிய)

'பாலை யாடுவர் பன்மறை யோதுவார்
சேலை யாடிய கண்ணுமை பங்கனார்
வேலை யார்விட முண்டவெண் காடர்க்கு
மாலை யாவது மாண்டவர் அங்கமே'

**8. தயிர்** 3ம் தி.மு. பண் காந்தாரபஞ்சமம் (கேதாரகௌளை)

'ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம் தொல்வினையே'

**9. பல்கனிச்சாறு** (முதல் புளிப்பு பின் இனிப்பு). குறுந்தொகை-

'பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை,
பெண்ணோ டாணென்று பேசற் கரியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணிலுண்மணி கச்சியே கம்பனே'

**10. தேன்** 7ம் தி.மு பண் - தக்கேசி (காம்போதி)
'வான நாடனே வழித்துணை மருந்தே
மாசி லாமணி யேமறைப் பொருளே
ஏன மாவெயி றாமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்புடை யானே
தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே
தேவனே திரு வாவடு துறையுள்
ஆனை யேயெனை அஞ்சலென் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே'

**11. திரட்டு பால்** அல்லது வெண்ணெய் 3ம் தி.மு. பண் சாதாரி
'நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறும்
சொல்வணம் இடுவது சொல்லே'.

**12. கருப்பஞ் சாறு** 'குறுந்தொகை பண் இந்தளம்
'கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்குழற் பாவை நல்லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே'

**13. இளநீர்** (திருத்தாண்டகம். குறிஞ்சி - கரிகாம்பொதி)
'நெய்யினொடு பால்இளநீ ராடி னான்காண்
நித்தமண வாளனென நிற்கின் றான்காண்
கையின்மழு வாளொடுமான் ஏந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னான்காண்
வெய்யகனல் விளையாட் டாடி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. அன்னம் - சுத்தான்னம்.** குறுந்தொகை பண் - இந்தளம்

'அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே'

**15. வில்வ (கூவிள) நீர்** (ஏழைத்திருத்தாண்டகம். குறிஞ்சி)

'வெறிவிரவு கூவிளநல் தொங்க லானை
வீரட்டத் தானை வெள்ளேற்றி னானைப்
பொறியரவி னானைப்புள் ளூர்தி யானைப்
பொன்னிறத்தி னானைப் புகழ்தக் கானை
அறிதற் கரியசீ ரம்மான் தன்னை
அதியரைய மங்கை அமர்ந்தான் தன்னை
எறிகெடிலத் தானை இறைவன் தன்னை
ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே'

**16. திருநீறு** 7ம் தி.மு. பண் பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

'பொடியாடு மேனியன் பொன்புனஞ் சூழ்புன வாயிலை
அடியார் அடியன் நாவல வூரன் உரைத்தன
மடியாது கற்றிவை ஏத்தவல் லார்வினை மாய்ந்துபோய்க்
குடியாகப் பாடிநின்றாட வலலார்க் கில்லை குற்றமே'

**17 சந்தனக் குழம்பு** (திருத்தாண்டகம். குறிஞ்சி - கரிகாம்பொதி)

'ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானைத் தன்னொப்பா ரில்லா தானைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப்பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையிலார்த்த
கீளானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18. பன்னீர்** 2ம் தி.மு. பண் சீகாமரம் (நாதநாமக்கிரிய)

'வாசநலஞ் செய்திமையோர் நாடோறும் மலர் தூவ
ஈசனெம் பெருமானார் இனிதாக உறையுமிடம்
யோசனை போய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும் ஒழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே'

**19. பொன் - ஸ்வர்ணம்** 7ம் தி.மு. பண் நட்டராகம்-பந்துவராளி

'பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடியேன்இட் டளங்கெடவே'

**20 இரத்தினம் 5ம் தி.மு** திருக்குறுந்தொகை பண் - இந்தளம்

'முத்தி னைமணி யைப்பவ ளத்தொளிர்
தொத்தி னைச்சுடர்ச் சோதியைச் சோலைசூழ்
கொத்த லர்குரங் காடு துறையுறை
அத்த னென்ன அண் ணித்திட் டிருந்ததே'

**21 சங்கு நீர்** 2ம் தி.மு. பண் சீகாமரம் (நாதநாமக்கிரிய)

'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே'

**22. பசுக்கொம்பு நீர்** 1ம் தி.மு நட்டபாடை (நாட்டை)

'கதிமதி களிறது பிளிறிட உரிசெய்த அதிகுண னுயர் பசு
பதியதன் மிசைவரு பசுபதி பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி கணனொடு மிகுதவ முயல்தரும்
அதிநிபு ணர்கள்வழி படவளர் மறைவனம் அமர்தரு பரமனே'

**23. சகஸ்ரதாரை நீர்** 4ம் தி.மு காந்தாரம் நவரோஜ்

'ஆயிரந் தாமரை போலும் ஆயிரங் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடை யானும்
ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூ ரமர்ந்த அம்மானே'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24. ஸ்நபன நீர் (ஆசாரியர்க்கு)** 7ம் தி.மு.பண் இந்தளம்

'அகத்தடிமை செய்யும் அந்தணன் றான்அரி
சிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்
மிகத் தளர்வெய்திக் குடத்தையும் நும்முடி
மேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்கு நித்தற் படியும்
வருமென் றொரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்து கந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே'

**ஆசாரியரல்லாதோர்** அபிஷேக முடிவில் சிவமூலமந்திரத்தை ஓதி விசேஷார்க்கியத்தால் சிறிது அபிஷேகித்து, தூபதீபங்காட்டி, சிறிது நிவேதித்து, முடிவில் சுத்தஜலத்தால் அபிடேகித்து முடிக்கவும். 4ம் திருமுறை. திருநேரிசை நவரோஜ் (பழையனூர் ஆலங்காடு)

'வெள்ளநீர்ச் சடையர் போலும் விரும்புவார்க் கெளியர் போலும்
உள்ளுளே யுருகி நின்றங் குகப்பவர்க் கன்பர் போலும்
கள்ளமே வினைக ளெல்லாங் கரிசறுத் திடுவர் போலும்
அள்ளலம் பழனை மேய ஆலங்காட் டடிக ளாரே'.

**ஓப்பனைகள்** மெல்லிய பரிவட்டத்தால் (ஈரமகற்று துணி) 'ஓம் ஹைம் கவசாய நம:' வென திருவொற்றாடை சாத்தி, பூசாபீடத்தில் இலிங்கமூர்த்தியை எழுந்தருளப்பண்ணி, ஆஸனமந்திரங் களை பீடத்தில் சம்மார(4) முத்திரையாற் சேர்த்து, **சிவமூலத்தால்** பின்வருவன யாவற்றையும் செய்தல்வேண்டும். வஸ்திரம், பூனூல்த்தரிப்பித்தல். சந்தனஞ்சாத்தல், சிரசிலொரு புஷ்பம், பத்திரம் சாத்தல், வில்வம், அறுகு, புஷ்பம், ஆபரணம் சாத்தல்.

**1. வஸ்திரம் சாத்தல்** - (புக்க திருத்தாண்டகம். குறிஞ்சி)

'பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ்,
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிலங்கு சூலமே வெண்ணூலுண்டே
ஓதுவதும் வேதமே வீணையுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே'

**2. பூணூல் சாத்தல்** 1ம் தி.மு. பண் தக்கேசி (காம்போஜி)
'வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியி னுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பா எனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே'

**3. சந்தனம் சாத்தல்** (சந்தனக்குழம்பு - திருத்தாண்டகம்.)
'ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானைத் தன்னொப்பா ரில்லா தானைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப்பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையிலார்த்த
கீளானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே'

**4. திருவாபரணம் சாத்தல்** - தனித்திருத்தாண்டகம். குறிஞ்சி)
'நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே'

**5. மாலைகள் சாத்தல்-** 2ம் தி.மு. செவ்வழி (எதுகுலகாம்போதி)
'தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே'

**6.2.14 ஸ்திராசனபூசை அதன்பின் ஆஸனபூசையை** (இலிங்க சுத்தியின் இறுதியிற் கூறியதுபோல) சுருக்கமாகச் செய்க.
1). 'ஓம் ஹாம் ஆதாரசக்தயே நம:', 2) 'ஓம் ஹாம் அநந்தாஸநாய நம:' 3) 'ஓம் ஹாம் சிம்மாஸநாய நம:', 4) 'ஓம் ஹாம் யோகாஸநாய நம:', 5) 'ஓம் ஹாம் பத்மாஸநாய நம:', 6) 'ஓம் ஹாம் விமலாஸநாய நம:' எனப்பஞ்சாசனம் பூசித்துப் பின்,
**'ஓம் ஹாம் சிவாஸநாய நம:'** எனப் பூசித்து, (இதுவுங்கூட நேரங்கருதிச் செய்யமுடியா விடின் **'ஓம் ஹாம் சிவாஸநாய நம:'** எனப் பூசித்துவிடலாம். இது க்ஷணிக லிங்கத்திற்கு பொருந்துவது.

'ஓம் ஹாம் ஆத்ம தத்வாதி பதயே நம: '
'ஓம் ஹாம் வித்யா தத்வாதி பதயே நம: '
'ஓம் ஹாம் சிவ தத்வாதி பதயே நம: '
'ஓம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம: '
'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம:' என்று அர்ச்சித்து,

'ஓம் ஹ: அஸ்த்ராய நம: ' என இடக்கையால் மணியை அடித்துக்கொண்டு முன்போல தூபதீபங் காட்டி, ஆசமன அர்க்கியங் கொடுத்து, **'ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்'** என ஐந்து திருமுகங்களுக்கும் மனோரத முத்திரை (56) காட்டவேண்டும்.

**6.2.15 சிவை பூசை :** (சிவனைச் சதாசிவனாகப் பூசிக்கையில் சக்தியை மனோன்மணியாகப் பூசிக்கவேண்டும். சிவபூஜாசக்கரம் 6.2.3 இலிங்கத்திற்குப் பக்கத்தே வடகிழக்கில் ஒரு பத்திரத்தை ஆசனமாகவும், அதன்மேலொரு புஷ்பத்தை, சந்தனத்தை மூர்த்தியாகவும் வைத்து, அதன்மேல **'ஓம் ஹ: அஸ்த்ராய பட்'** என விசேஷார்க்கியத்தைப் புரோட்சித்து, **'ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் மநோந்மந்யாஸநாய நம:'** என ஆசனத்தையும், அதன்மேல் திருமகளை வலக்கண்ணாகவும் கலைமகளை இடக்கண்ணாகவும், வலக்கையில் நீலோற்பலம், இடக்கையில் பாரிஜாதம் என்பவற்றையும். பர, அபர ஞானங்களாகிய வல இடத் தனங்களைக் கொண்டு, தாமரையில் நிற்பவளாக மனோன்மணியைத் தியானித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் மநோந்மநி மூர்த்தயே நம:'** என மூர்த்தியையும் அர்ச்சித்து, **'ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் மநோந்மந்யை நம:'** என தேவியை மூர்த்தியில் ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதங்களைச் செய்து, **'ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் மநோந்மந்யை ஸ்வாஹா'**என அர்க்கியங் கொடுத்து, தூப தீப நைவேத்தியங்களைச் செய்து, கற்பூரதீபங் காட்டவேண்டும். (தேவிபூசையைச் சுவாமியின் லயாங்க போகாங்க பூசைகளின் பின்னர் சிலர் செய்வதுண்டு)

**6.2.16 லயாங்க பூசை** (இலிங்கத்திற்கு). லயாங்கம் என்பது சுவாமியோடு ஒன்றுபட்டு இருக்கும் உறுப்புக்கள். 'எத்திறம் ஈசன் நின்றான் அத்திறம் அவளும் நிற்பாள்' என்றபடி சிவனின் ஐந்தொழில்களைச் செய்யும் (திரோதான) சக்திகளே அவனது உடல், குறி. இருதயம். முகம், சிரசு, என்னும் 5 அங்கங்களும். (குறிப்பு இவை, ஈசானமூர்த்தாய - சிரசு, தத்புருஷ வக்த்ராய - வக்த்ரம் (முகம்), அகோர ஹிருதாய - இருதயம், வாமதேவ குஹ்யாய - வயிறு, ஸத்யோஜாத மூர்த்தாய - பாதம் என்ற பஞ்சப்பிரமர்களாம்.) சிவனது தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்களும் ஆறாய் அடங்குதலால் (விபரம் ஆகமங்களில் காண்க) அந்த 6 குணங்களே 'இருதயம், சிரசு, சிகை, நேத்திரம்' எனும் 4 பிரத்தியங்கங்களும், (பிரத்தியம் - காட்சிப்படுவது), 'கவசம், அஸ்திரம்' எனும் இரு சாங்கங்களும் (சாங்கமென்பது அங்கத்தோடு கூடியது) ஆகும். ஆகவே அந்தப் பஞ்சப்பிரம மந்திரங்களையும், ஷடங்க மந்திரங்களையும் நியாசத்திற் சொல்லிய முறையிலே சொல்லி அவ்வவ்வுறுப்புக்களில் வைத்து அர்ச்சிப்பதே லயாங்க பூசையாகும். அங்கதேவரை அர்ச்சித்தபின் சிவ மூலத்தால் ஒருமுறை சுவாமியை அர்ச்சிக்க வேண்டும். முடிவில் பூசகர் தாம் விரும்பியவற்றைத் வேண்டிக் கொள்ளலாம். இவையெல்லாம் சிவபூசைக் கோட்டத்தின் உள்ளகப் பூசைகள். லயாங்க பூசையின் பின் பூசிக்கப்பட்ட அங்க தேவர்களை போகாங்கமாகப் பூசிக்கவேண்டி அனுமதிபெற்று போகாங்க பூசை செய்யவேண்டும். 7.19 பார்க்க

**போகாங்க பூசை.** சுவாமியோடு ஒன்றுபடுத்திப் பூசித்த அங்க தேவர்களை சிவனாணை வழி வெளியேசென்று செயலாற்றுபவர்களாக வேறுவைத்துத் தியானித்துப் பூசிப்பதே இது. 11 சம்மிதா மந்திரங்களையும் முன்பு மூர்த்தியில் நியாசஞ்செய்த இடத்திலிருந்து சங்கார(24) முத்திரையால் கொணர்ந்து, தாமரை இதழ்களில் அவ்வம் மந்திரத்தால் முன்பு மூர்த்தியில் நியாசஞ்செய்த முத்திரைகளால் நியசித்து, அதேமந்திரங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சித்து, ஸ்வாஹாந்த அதேமந்திரங்களால் அர்க்கியங் கொடுத்து, ஈசானராதி ஐவர் மந்திரேசுரர்களுக்கும் அவரவர் மந்திரத்தாலே முறையே தேனு(12) முத்திரை. பத்ம (51) முத்திரை, திரிசூல (57) முத்திரை, மகா (22) முத்திரை, சிருக்கு (62,63) முத்திரைகளையும், வௌஷடாந்தமான அவரவர் மந்திரத்தால் நமஸ்கார (2) முத்திரையுங் காட்டிப் போகாங்க பூசையை முடிக்க. (இங்கு கூறிய நியாசம், மந்திரம், முத்திரை யென்பன ஏலவே கூறப்பட்டவையே. மனப்பதிவு செய்யக் கையேடு தயாரித்துக் கொள்க.)

**பஞ்சப்பிரம, அங்க மந்திரங்களும், அவை நியசித்துப் பூசிக்கப்படும் திசைகளும்.** ஸம்ஹிதா மந்திரம் பீஜத்துடன் : (11)

**பஞ்சப் பிரம்ம மந்திரம்** (5): (குறில் பீஜம் பாபநீக்கம்)

ஓம் ஹொம் ஈசானமூர்த்தாய நம: ஆன்மார்த்த, பரார்த்த - உச்சியில்
ஓம் ஹெம் தத்புருஷ வக்த்ராய நம: ஆன்மார்த்தம் - தெற்கில்
ஓம் ஹும் அகோர ஹிருதயாய நம: ஆன்மார்த்தம் - மேற்கில்
ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: ஆன்மார்த்தம் - கிழக்கில்
ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம: ஆன்மார்த்தம் - வடக்கில்
(பரார்த்தத்திற்கு தத்புருஷம் கிழக்கிலாகி ஏனையவை காற்சுற்று (90 பாகை) இடம் வலமாக முறையே மாறும்)

**ஷடங்க (ஷட் அங்க) மந்திரம் (6)** (நெடில் பீஜம் சுப ஆக்கம்)
1) ஓம் ஹாம் ஹ்ருதாய நம: (அங்கம்) - தென்கிழக்கில்
2) ஓம் ஹீம் சிரஸே நம: (அங்கம்) - வடகிழக்கில், நேத்திரத்திற்கு வடக்கில்
3) ஓம் ஹூம் சிகாயை நம: (அங்கம்) - தென்மேற்கில்
4) ஓம் ஹைம் கவசாய நம: (சாங்கம்) - வடமேற்க்கில்
5) ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: (அங்கம்) - வடகிழக்கில், ஈசானத்திற்கு வடக்கில்
6) ஓம் ஹ: அஸ்த்ராய நம: (சாங்கம்)- கிழக்கு முதல் நாற்றிசைகளில்.
(இப் போகாங்க பூசையே முதல் ஆவரண பூசையாகும். 6.2.3ற் கூறப்பட்டது மீளத் தரப்படுகின்றது)

**1ம் ஆவரணம்** தாமரைமலரின் 8 இதழ்களே முதல் ஆவரணம். அதில் போகாங்கபூசை செய்யப்படும். (விபரம் சிவைபூசை முடிவிற்பின்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(**குறிப்பு:- ஆசாரியார் அல்லாதவர் யாவரும்** முதல் ஆவரணபூசையுடன் (ஏகாவரண) பூசையை முடித்தல் வேண்டும். ஆசாரியர் செய்வது பஞ்சாவரண பூசையாம். நிர்வாணதீட்சை பெற்றவரும், சாதகரும் செய்யலாமெனவும் சில இடங்களிற் கூறப்பட்டுள்ளது.) இவ்விதழ்களின் நடுவில் கிழக்குமுதல் வலமாக 8 திக்குகளிலும் உள்ள கோசரங்களில் வாமை, சேஸ்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி. ஸர்வபூததமனி ஆகிய எண் சக்திகளும், கர்ணிகைக்கு ஈசானத்தில் மனோன்மணியுமாகிய நவசக்திகள் இருப்பர்.

## 6.2.17 புஷ்பாஞ்சலியும் நாமகரணமும்.

தேவியோடும், போகாங்க மூர்த்திகளோடும் பத்மாசனத்தில் இனிதே வீற்றிருக்கின்ற பரமசிவனைப் பூசகர் தாம் மிகவிரும்பும் ஆன்மார்த்த சுவாமியாகப் பாவித்து 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: ' எனும் சிவமூலத்தால் புஷ்பாஞ்சலியுடன் கும்பிட்டு, அம் மந்திரத்தால் மகா(22) முத்திரைகாட்டி, அச்சுவாமியின் பெயரை உதாரணமாக 'ஓம் ஹாம் **உண்ணாமுலையம்பா சமேத ஸ்ரீ அருணாசல சுவாமிநே** நம: ' என (தடித்த எழுத்திலுள்ளதை தம் இஷ்டப் பிரகாரம் மாற்றப்படலாம்) இட்டு, தூப, தீப நைவேத்தியங்களைச் செய்தல்வேண்டும். (அப்பெருமானுக்குரிய திருமுறைப் பாடல்களைப் பாடலாம். 1) .'உண்ணாமுலை உமையாளொடும்' 1ம் தி.மு பண் - நட்ட பாடை - நாட்டை, 2) 'பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்' 1ம் தி.மு. பண் - தக்கேசி -காம்போதி)

'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே'

## 6.2.18 தூப தீப நைவேத்தியங்கள் :

1. நிவேதனப்பொருட்களை 'ஓம் ஹ: அஸ்த்ராய நம: என விசேஷார்க்கியத்தால் புரோட்சித்து,
2. நிரீட்சணம் (அணி, பெரு விரலிடையூடாகச் சுவாமியைப் பார்த்தல்) முத்திரை 4), புரோட்சணம் (விசேஷார்க்கியம் தெளித்தல்), தாடனம், அப்யுட்சணம் (கவிழ்பதாகை - முத்திரை(16) சுவாமியை மூடுதல் போன்று) ஆகிய நாற்சுத்திகளைச் செய்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இடதுகையால் 'ஓம் ஹ: அஸ்த்ராய பட்' என ஒருமுறை மணி அடித்து, தூபம், தீபம் ஏற்றி

4. பின்னர் மணியைத் தொடர்ந்து அடித்தபடி 'ஓம் ஹாம் ஹௌம் ஸ பரிவாராய சிவாய தூபம் ஸ்வாஹா' எனத் தூபமும், முன்னே சுவாமிக்கும், பின்னர் முறையே தேவி, போகாங்க மூர்த்திகள், பரிவாரதேவர்கள் ஆதியோருக்கும் திருமுறையுடன் காட்டி,
'வெந்த குங்கிலியப்புகை விம்மவே,
கந்தம் நின்றுல வுங்கழிப் பாலையார்,
அந்த மும்மள வும்மறி யாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே' (3ம் தி.மு பண் கௌசிகம் - பைரவி)

5. ஓம் ஹாம் ஹௌம் ஸ்ஸபரிவாராய சிவாய தீபம் ஸ்வாஹாஹ எனத் தீபமும், தூபத்திற் கூறியவாறே காட்டி, (திருத்தாண்டகம் பண் குறிஞ்சி - கரிகாம்போதி)

'எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி '

6. பின்பு நிவேதனங்களை முதலில் சம்மார(3) முத்திரை காட்டித் தனித்தனி நிவேதித்து, 1ம் தி.மு. பண் தக்கராகம், காம்போதி,
ஓடே கலனுண் பதுமூ ரிடுபிச்சை,
காடே யிடமா வதுகல் லானிழற்கீழ்
வாடா முலைமங் கையுந்தா னுமகிழ்ந்,
தீடா வுறைகின் றவிடை மருதீதோ'

பின்பு மிருக (19) முத்திரையால் சிறிது சிறிதாக எடுத்து சுவாமி முதல் அனைவர் முன்பும் தெறித்துக் கையலம்பி,

7. ஏலம், கராம்பு, பன்னீர் கலந்த பாநீயத்தை (பருக) 'ஓம் ஹாம் ஹௌம் ஸபரிவாராய சிவாய பானீயம் ஸ்வாஹா' என நிவேதித்துத் தெறித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எல்லா நிவேதனங்களிலும் சுவாமி பாகத்திலிருந்த சண்ட-அவிபாகமாக சிறிது சிறிது எடுத்து ஒருபாத்திரத்தில் ஈசானதிக்கில் 'ஓம் ஹௌம் ஹிருதாய நம:' என சேமித்துவைத்து,

9. புஷ்பத்தால் திருமஞ்சனநீரை திரோதான (20) முத்திரையால் கையலம்ப (ஹஸ்தாளன ஜலமாக) எல்லார்க்கும் அளித்து.

10. 'ஓம் ஹாம் ஹௌம் ஸபரிவாராய சிவாய தாம்பூலம் ஸ்வாஹா' என தாம்பூலம் அளித்து,

11. 'ஓம் ஹாம் ஹௌம் ஸபரிவாராய சிவாய நம:' என ஒருமுறை அர்ச்சித்து,

12. மீளவும் முன்போல அதேமந்திரங்களுடன் மணியுடன் தூப தீபங்காட்டி, ஐந்து மூர்த்திகளுக்கும் ஆசமன அர்க்கியங் கொடுத்து,

13. மீள சுவாமியை ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம:'என அர்ச்சித்து, தீபாராதனைசெய்து.

14. முடிவில் 'ஓம் ஹாம் ஹௌம் ஸபரிவாராய சிவாய கற்பூர தீபம் ஸ்வாஹா' என கற்பூரதீபங் காட்டி, (குறிப்பு - முதலில் ரததீபங் காட்டி, பின்பு ஏகமுகம், திரிமுகம், பஞ்சமுக முதலியவைகளால் தீபாராதனை செய்யலாம். தூபதீபங்களை சுவாமியின் சிரசாதி பாதமாக (சிரசு, வல, இட நெற்றிக்கண்கள், இருதயம், நாபி, வல இடப் பாதங்களுக்கு நேராக)க் காட்டி, ஓங்காரவடிவிற் சுற்றிமுடிக்கவேண்டும். (5 தட்டு, குட ஆராதனை ஆன்மார்த்தத்திற்குத் தேவையில்லை.)

15. பின்னர் அர்க்கியங் கொடுத்து, அவருக்குப் பவித்திரதானம் செய்யவேண்டும். 'ஓம் ஹாம் ஹௌம் ஸர்வ தத்வாதி பதயே நம:' என பவித்திரமும் பூனூலும் (பாவனையாக வேனும்) சமர்ப்பிக்கலாம்.. (அப்பொழுது சுவாமி அருள்வழங்கும் நிலையிலிருப்பர்.)

**ஆராத்திரிகாதி**

16. பின்னர் 'ஓம் ஹாம் கவசாய சுவாஹா' (பாதுகாப்பு மந்திரம்) என கற்பூர தீபங்காட்டி, ஆசமனமும், அருக்கியமும் கொடுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. விதிமுறைப்படி பெற்ற திருநீற்றை அக்கினி திக்கில் (தெ.கி) பத்திரம் அல்லது மடலில் " ஓம் ஹாம் லகுளீசாய நம:' என அர்ச்சித்து, திவ்ய(17) முத்திரையால் சிறிதுசிறிதாக முதலில் சுவாமியின் நெற்றியில் மும் முறையும். பின் ஏனையோர்க்கு ஒவ்வொரு முறையும் பூசும் பாவனையிற் தெறித்து. பின் பூசகர் நெற்றியில் நிரோதான (20) முத்திரையால் எடுத்துப் பூசவும்.

18. கண்ணாடி, குடை, சாமரம், கொடி, விசிறி, தாலவட்டம் (ஆலவட்டம் - தண்டின் மேல் வட்டவிசிறி) ஆகிய **உபசாரங்களை தனித்தனியாக எடுத்து,** (திருமுறையுடன்) காட்டி, திருவிருத்தம் - நவரோஸ், பைரவி (கவரி கொள்மின், கொடி எடுமின், அறுகெடுப்பார் சிலர் போன்றவை திருப்பொற்சுண்ணத்தி லுண்டு.

'பூம்படி மக்கலம் பொற்படி மக்கலம் என்றிவற்றால்
ஆம்படி மக்கல மாகிலும் ஆரூர் இனிதமர்ந்தார் (படிமம் - முக ஆடி)
தாம்படி மக்கலம் வேண்டுவ ரேல்தமிழ் மாலைகளால்
நாம்படி மக்கலஞ் செய்து தொழுதுய் மடநெஞ்சமே'

'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம:' என மும்முறை புஷ்பாஞ்சலி செய்து, மகா(22) முத்திரை, பஞ்சமுகி(58) முத்திரை காட்டுக.

**6.2.19 பவாதிநாம அர்ச்சனை :** (விளக்கம் 7.8 பார்க்க)

சிவபெருமான் அட்டமாமூர்த்தமாயுள்ளதன் பெயர்களும், மந்திரங்களும்:

| | |
|---|---|
| பவன் - அப்பு - நீர் | 'ஓம் பவாய தேவாய நம:' |
| ஸர்வன் - பிருதிவி - மண் | 'ஓம் ஸர்வாய தேவாய நம:' |
| ஈசானன் - வாயு - காற்று | 'ஓம் ஈசாநாய தேவாய நம:' |
| பசுபதி - தேயு - தீ | 'ஓம் பசுபதயே தேவாய நம:' |
| உக்ரன் - இயமானன் - ஆன்மா | 'ஓம் உக்ராய தேவாய நம:' |
| ருத்ரன - ஸுர்யன் - சூரியன் | 'ஓம் ருத்ராய தேவாய நம:' |
| பீமன் - ஆகாசம் | 'ஓம் பீமாய தேவாய நம:' |
| மஹாதேவன் - சந்திரன் | 'ஓம் மஹாத தேவாய நம:' |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அர்ச்சித்தபின் அவர் **தேவிமார்களையும் அர்ச்சிக்க.**

'ஓம் பவஸ்ய தேவஸ்ய பத்நியே நம:'
'ஓம் ஸர்வஸ்ய தேவஸ்ய பத்நியே நம:'
'ஓம் ஈசாநஸ்ய தேவஸ்ய பத்நியே நம:'
'ஓம் பசுபதோ தேவஸ்ய பத்நியே நம:'
'ஓம் உக்ரஸ்ய தேவஸ்ய பத்நியே நம:'
'ஓம் ருத்ரஸ்ய தேவஸ்ய பத்நியே நம:'
'ஓம் பீமஸ்ய தேவஸ்ய பத்நியே நம:'
'ஓம் மஹாத தேவஸ்ய பத்நியே நம:' - திருத்தாண்டகம் ஓதவும்

'இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய் அட்டமூர்த்தி யாகி
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தானே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே'

சிறப்பாக அர்ச்சனைகள் செய்வதாயின் திருவாசகம்- போற்றித் திருவகவல், போற்றித் திருத்தாண்டகம் ஓதுவதுடன் ஸகஸ்ர நாம:, இலட்சார்ச்சனை என்பனவும் செய்யலாம்.

அர்ச்சனைமுடிவில் தாம் சுவாமிக்கிட்டபெயரை உதாரணமாக, **'ஓம் ஹாம் ஸ்ரீ <u>அமித குஜாம்பிகா ஸமேத ஸ்ரீ அருணாச்சலேஸ்வர</u> ஸ்வாமினே மந்ரபுஷ்பாஞ்சலிம் ஸமர்ப்பயாமி'** என வில்வம், புஷ்பம் இவைகளைச் சுவாமிக்குச் சாத்துக.

**6.2.20 ஜெபசமர்ப்பணம் :** அர்ச்சனையின் பின் சிவபூசா பீடத்தில் (அத்.6.2) இடபதேவரின் கீழாக பத்திரமொன்றில் ஜெபமாலையை வைத்து சந்தனந் தெளித்து 'ஓம் ஹாம் ஹிருதாய நம' என அர்ச்சித்து இடக்கையில் ஒரு புஷ்பம் வைத்து அதில் 'ஓம் ஹ: அஸ்த்திராய நம' என அதில் விசேஷார்க்கியத்தாற் தெளித்து மாலையை எடுத்து வலக்கை மோதிரவிரலில் மாட்டி இடக்கைப் புஷ்பத்தில் படியவைத்து "ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம' என சிவமூலத்தை 108, 54, 27,10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் ஒரு எண்ணிக்கையில் உருச்செபித்து மாலையை முன்னிருந்த இடத்தில் வைத்து, வல உள்ளங்கையை இடக்கைப் புஷ்பத்தின் மேல் வைத்து 'ஓம் ஹ: அஸ்த்திராய நம:' என மந்திரித்து, பின் பதாகை(16)முத்திரையால் மூடி 'ஓம் ஹாம் ஹிருதாயாய நம:' 'ஓம் ஹைம் கவசாய நம:', 'ஓம் ஹ: அஸ்த்திராய நம:' என்று உச்சரித்து அஸ்திரத்தால் இடக்கைப் புஷ்பத்திற்கு திக்பந்தனம், அவகுண்டஞ் செய்து. அதை வலக்கையில் வாங்கி வல முழந்தாளை நிலத்தில் ஊன்றிக் கொண்டு,

'சிவனெனும் நாமத்தை உமக்கேயுரித்தாகக் கொண்ட பெருமானே நீர் அறிதற்கு மிகவும் அரியவர், யாவராலும் அடையத்தக்கவர், அடியேனின் ஜெபத்தை ஏற்றருள வேண்டும். உமதருளால் எவையும் நன்மை பயப்பன ஆகட்டும்'

**'ஓம் ஹாம் சிவோ தாதா சிவோ போக்தா சிவஸ் ஸர்வமிதம் ஜகத் சிவோ யஜதி ஸர்வத்ர யச்சிவஸ் ஸோஹமேவது'**

என வேண்டி, விஷோர்க்கிய ஜலத்தை உற்பவ (வலச்சுட்டை மடக்கி, சுட்டைநீட்டி, மற்ற விரல்களைச் சிறிது வளைத்துப் பிடிப்பது) முத்திரையால் 'ஓம் ஹாம் ஹிருதாயாய ஸ்வாஹா' என்று பூசகர் தாம்செய்த ஜெபம், கர்மம் என்பவற்றோடு தம்மையும் சிவனின் வலக்கையில் ஒப்புவித்ததாகப் பாவித்து, எதிரில் விடுத்து, சிவமூலத்தால் ஒருமுறை வில்வம், புஷ்பஞ்சாத்தி பின்பு சம்மிதா மந்திரம் (33) ஒவ்வொன்றையும் 10, 10 ஆகச் செபித்து, அவ்வப்பொழுது ஒரு புஷ்பமாகச் சாத்தவும். (திருவாசகம்)

1). 'வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண் டாய்
வேண்டி நீயா தருள்செய் தாய்
யானும் அதுவே வேண்டினல் லால்
வேண்டும் பரிசொன் றுண்டென் னில்
அதுவும் உன்றன் விருப் பன்றே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2). 'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் எனையாட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண் ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே '

**திருவிளையாடற் புராண, இந்திரன் பழிதீர்படலத் தோத்திரங்கள் :-**

1). 'அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
எங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி'

2). 'யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் போற்றி'

3). 'இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீர்த்துன்
அடியிணைக் கன்ப னாக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாள போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி '

4). "பூசையும் பூசைக்கேற்ற பொருள்களும் பூசைசெய்யும்
நேசனும் பூசைகொண்டு நியதிற் பேறுநல்கும்
ஈசனுமாகிப் பூசையான் செய்தேனெனு மென்போத
வாசைன யதுவுமான மறைமுத லடிகள்போற்றி"

**குறிப்பு:-** சிவபூசை விளக்கத்தில் செபநிவேதனம், ஆன்ம நிவேதனத்தின் பின் காமிகமந்திர பூசையெனும் பகுதியில் 25 மகேஸ்வர மூர்த்தங்கள் விளக்கப்பட்டு, ஸ்திரீ ரூபமான கௌரீ, ஆண் ரூபமான மிருத்தியுஞ்சய, ஸ்திரீ புருஷ ரூபமான உமாமகேசுரர் ஆதி மந்திரங்களை அதிற்கூறிய இடங்களிற் கிரமமாகப் பூசிக்கவெனவும், நந்தி, மகேசுரர், தட்சணாமூர்த்தி வித்யாபீடம், விநாயகர், சுப்பிரமணியர். நடராசர், இலிங்கோற்பவர் முதலியவற்றையும் கூறிய இடங்களில் வைத்துப் பூசிக்கவெனவும் வருவதை விபரமாக அதிற் காண்க. இது ஆன்மார்த்த ஆதலின் சுருக்கங் கருதி இங்கு விபரம் எழுதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.2.21 குருபூசை -** சிவபூஜாச்சக்கரத்திற் (அத்.6.2) காட்டியவாறுள்ள குருமூர்த்தி ஸ்தானத்தில் ஓம் ஹ: அஸ்த்ராய பட்' என சாமான்ய அர்க்கியந் தெளித்து, சதுரமாக மண்டலம் அமைத்து, பத்திரம் ஆசனமாகவும், புஷ்பம் அல்லது சந்தனம் மூர்த்தமாகவும் பாவித்து, 'ஓம் ஹாம் சிவகுரு ஆஸநாய நம ' என்று ஆசனத்தையும், 'ஓம் ஹாம் சிவகுரு மூர்த்தயே நம' என மூர்த்தியையும் தம் குருவைத் தியானித்துப் பூசித்து, ஓம் ஹாம் சிவகுரவே நம' என ஆவாஹனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம் என்பவைகளைச் செய்து, அந்த மந்திரத்தை நம, ஸ்வதா, ஸ்வாஹா - அந்தங்களாகச் சொல்லி, முறையே பாத்திய ஆசமன அர்க்கியங்களைக் கொடுத்து, நைவேத்தியத்தையும் ஸ்வாகாந்தமாக உச்சரித்துச் செய்து, நமோந்தமாக தூப, தீப, கற்பூர ஆராதனைகளைக் காட்டி நமஸ்கார முத்திரையாற் கும்பிட்டு நின்று, ஓதவும். (1) 7ம் திருமுறை பண் நட்ட ராகம் - பந்துவராளி). (2, 3, 4, 5) திருமந்திரம்.

1) 'மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேயுன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்
அறிவே யுன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே'

2) 'நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே'

3) 'நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட யானிருந் தேனே'

4) 'நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் யான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னார்களே.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) **'எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்**
**செழுந்தண் நியமங்கள் செய்மினென்** றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே'

என சிவமே குருவாய் வந்ததெனத் தோத்தரித்துப் புஷ்பஞ்சாத்துக.

1) மறி- மான் (நால்வேதம்), நெறி- சரியையாதி நாற்பாதம், (வேதநெறி, சைவத்துறையுமாம்.)

2) நந்திகள் நால்வர் - சனகர், சனந்தனர். சனாதனர், சனற்குமாரர். இவர்களுடன் சியோக மாமுனிவர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், திருமூலர். (வியாக்கிரம் - புலி)

(3) நாதன் - குரு, மூலன் - மூலாதாரத்தில் இருப்பவன். (திருமூலர் சரித்திரத்தினால், மூலன்- இடையன்), நந்தி சிவனாகக் கொள்ளப்படலால் அவனருளை நாடில் அது ஆக்கல் முதலாய எதனையும் (நம்பொருட்டாகச்) செய்யும்.

(4) சனகாதி நால்வரும் பாரதத்தின் நாற்றிசைக்கும் ஒவ்வோர் நாதராய் (அவ்வவர் தவம் புரிந்தவாறே பெற்ற, அவ்வத்தானத்து மக்களுக்குப் பொருத்தமான) அனுபவத்தை பிறர்க்கு எடுத்தருளி குரு பாரம்பரியங்களை ஏற்படுத்தினார்கள்.

(5) எண்திசைகளிலும் பெருமழை பெய்யினும் சிவபுண்ணியங்களை-சந்தியாவந்தனம், சிவபூசையாதிக் கடன்களை நியமமாகச் செய்யுங்கள் என்று சிவபெருமான், தனது உபதேச முடிவிற் தன் குளிர்சடையில் அழுந்தித் தான்போலாய (சிவசாரூபம் பெற்ற), சனகாதி நால்வருக்கும் கட்டளையிட்டு அருளினான்.

**வித்யாபீட பூசை :-** (சிவாகம, சித்தாந்த சாத்திர, திருமுறை, சிவபுராண நூல்களுக்காய பூசை) சிவபூஜாச் சக்கரத்திற்(அத்.6.2) காட்டியவாறுள்ள வித்யாபீட ஸ்தானத்தில் பத்திரம் ஆசனமாகவும், புஷ்பம், சந்தனம் மூர்த்தியாகவும் பாவித்து வைத்து, 'ஓம் ஹாம் யோக பீடாய நம ' என்று ஆசனத்தையும், 'ஓம் ஹாம் வித்யா பீடாய நம ' என முற்கூறிய நூல் களையும் பாவித்து அர்ச்சித்து, ஓம் ஹாம் வித்யா பீடாய ஸ்வாஹா' என சாமான்ய அர்க்கியம் கொடுத்துக் கும்பிட்டுக் கொண்டு, (1ம்,2ம்) திருமந்திர ஆகமச் சிறப்பு, (3) 4ம் திமு பண்காந்தாரம் நவரோஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ‘அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடில்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே’

2. ‘அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே’

3. ‘நல்லானை நல்லான நால்மறையோ டாறங்கம்.
வல்லானை வல்லார்கள் மனத்துறையும் மைந்தனை
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே’

பா(1) அண்ணல் அறைந்த அறிவு - ‘குருவின்றி வித்தை சுட்டுப் போட்டாலும் வராது’ என்றபடி, குருவாயிலாய் அறியும் அறிவு. பா(2) அவிழ்த்தல் - போகநுகர்வின் பின் தநுகரணாதிகளை ஒய்விற்காக ஒடுக்கல். (ஊன் உயிர் வேறுசெய்தல்). கட்டல் - மீண்டும் ஊனோ டுயிரைச் சேர்த்து எஞ்சிய கருமாக்களை ஆற்றுவித்தல். 2ம் வரி, கண்ணானது சிமிட்டுதலை விட்டு - ஒழிந்து உயிர் போதல். பா3): வல்லார் - வேதாகமங்கள் சொல்லவல்லார், சொல்லும் பொருளும் அவனே, துகள் - குற்றம். (துகளறுபோதம் - சித்தாந்தநூல்.) என்பன போன்ற பாடல்களாற் துதிக்க. சுலோகம் :

‘ஸுராதிபம் நமஸ்க்ருத்ய சசாங்க க்ருத சேகரம்
கபால மாலிநம் தேவம் ப்ரணதோஸ்மி ஸதாசிவம்’

### 6.2.22 புஷ்பாஞ்சலி, பிரதக்ஷணம், நமஸ்காரம்.

அதன் பின், சுவாமிக்குச் சிவமூலத்தால் மூன்று முறை புஷ்பாஞ்சலி செலுத்திக் கும்பிட்டுக் கொண்டு, பஞ்சபுராணம் ஓதி எழுந்து சிரசின்மேற் கைகள் குவித்து வணங்கி தோத்திரத்துடன் மூன்றுதடவை பீடத்திலுள்ள சுவாமியையும் பரிவாரங்களையும் பிரதக்ஷிணம் (வலம் வரல்) செய்து, முன்னாகவந்து வில்வம், புஷ்பங்கள் தூவி மும்முறை சாஷ்டாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அட்டாங்க) நமஸ்காரம் பண்ணவும். இடவசதியின்றேல் மனதாற் பண்ணலாம். (பெண்கள் பஞ்சாங்க வணக்கம்). இனி செய்வனவற்றைச் செய்த திருப்தியுடன் ஆவாஹன (46) முத்திரையால் வரங்களைக் கேட்கவும். (7.19)

**ஓதுவதற்கேற்ற திருமுறைகள்-** 1) புழுவாய்ப் பிறக்கினும் (அப்பர் திருவிருத்தம்), 2) பரந்து பல்லாய் மலரிட்டு (திருவாசகம்), 3) துணிவளர் திங்கள் (முயலகன் நோய்தீரப் பாடியது, சம்பந்தர், பண் - தக்கராகம், காம்போதி, 4) மறையுடையாய் - இடர்களைந்த பதிகம், சம்பந்தர், பண் - பழந்தக்கராகம் - ஆரபி, சுத்தசாவேரி, 5) அவ்வினைக் கிவ்வினையாம் (திருநீலகண்டம் - வினைதீர்த்தல்), சம்பந்தர், பண்- வியாழக்குறிஞ்சி, சௌராஸ்டிரம்.

(திருமுறைகள் தமிழ்வேதங்கள், வழிபாட்டிற்காயவை. முழுவதும் கிடைக்கப் பெறாவிடில் உள்ளவற்றையும், அகத்தியர் தேவாரத் திரட்டு, சிவதொண்டன் நிலையச் சைவத் திருமுறைத் திரட்டு என்பன ஒவ்வோரு சைவ இல்லங்களிலும் பூசையறையில் இருத்தல் அவசியமென்பதை பல்லாற்றானும் உணர்ந்து தேடிப்பெற்றுப் பயனடைக.)

**6.2.23 மற்றையக்காலப் பூசைகள் :** முப்போதும் பூசையைச் செய்யவேண்டும். (முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன் - சுந்தரர். ஆசாரியர்கள் இவற்றுடன் யாமம் எனும் அர்த்தயாமப் பூசையும் செய்தல்வேண்டும்.) இயலுமாயின் யாவற்றையும் ஓரளவாவது முறையாகச் செய்க. இயலாவிடின். முதற்கால (காலை) பூசையை முடித்தபின்பு அதனோடே மற்றைக்கால பூசையையும் சேர்த்துச் செய்துவிடலாம். எவ்வாறெனில் :- 1) 2ம் காலப் பூசை :- வரங்கேட்ட பின்பு மீண்டும் ஆசனத்தில் வடக்கு நோக்கியிருந்து, சுவாமியை சிவாசன, சிவமூர்த்தி, சிவமூல மந்திரங்களாலும், தாமரையிதழ்களிற் போகாங்கபூசை செய்த முறையிலேயே அவரவர் மந்திரங்களால் போகாங்க மூர்த்திகளை அர்ச்சித்து. ஸ்வாஹாந்தமான அவரவர் மந்திரத்தால் அர்க்கியம், தூப, தீபங் கொடுத்து, நிவேதித்து, அஷ்டபுஷ்பஞ் சாத்தி ஒருமுறை அர்க்கியங் கொடுத்துக் கும்பிடவும். 2) 3ம் 4ம் காலப்பூசைகள் : இவற்றையும் 2ம் காலப்பூசை செய்ததுபோற் செய்துமுடிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஷ்ட(காமிய)லிங்க மூர்த்தி பூசை**: ஆன்மார்த்த மூர்த்தியாகிய இஷ்டலிங்க பூசையை முடித்தபின், பூசகர் இஷ்டதேவராக எவரையேனுங்கொண்டு பூசிக்கவிரும்பின் 6.2ற்காட்டிய சிவபூஜாசக்கரத்தில் சுவாமிக்கு வடகிழக்காகப் பூசிக்கலாம். நால்வர், சேக்கிழார், மெய்கண்டார், சந்தானகுரவர் இவர்களில் ஒருவரையோ சிலரையோகூட இஷ்டதேவராகக்கொண்டு பூசிக்கலாம்

**இஷ்டதேவரையும் நாயன்மார் போன்றவர்களையும் பூசிப்பதாயின்**

1) **இஷ்டதேவர்:** சிவபூஜாச் சக்கரத்தில் முற்கூறியவாறு சுவாமிக்கு வடகிழக்காக பத்திரத்தால் ஆசனமும், சந்தனம், புஷ்பத்தினால் மூர்த்தியையும் வைத்து, 'ஓம் ஹ: அஸ்த்ராயபட்' என்று சமான்யார்க்கியத்தாற் புரோட்சித்து, மூர்த்தியிருப்பின் அஸ்த்திரத்தால் அலம்பிப் பின் எழுந்தருளப் பண்ணி, அவரின் ஆசன, மூர்த்தி பூசைகளைச் செய்து. அவர் மூலமந்திரத்தால் மூர்த்தாய, ஹ்ருதாய, குஹ்யாய, மூர்த்தயே என்பவற்றுடன் 'நம:' வெனத் தனித்தனி சேர்த்து. அவ்வவ் விடங்களிலே நியசித்து, அதேபோல இருதயாதி அங்கமந்திரங்களை ஓம் கூட்டி உச்சரித்து, ஆங்காங்கே நியசித்து, அவரவர் மூலத்தால் ஆவாஹனம் ஸ்தாபனம் சந்நிதானம், சந்நிரோதணங்களைச் செய்து. தூப தீபங் காட்டி, சாமான்ய அர்க்கியத்தால் பாத்தியாதிகளைக் கொடுத்து, மூர்த்திக்கு உண்மையாகவும், இல்லையாயின் பாவனையாகவும் அபிடேகித்து, வஸ்திரம், சந்தனம், அறுகு சாத்தி, வௌஷடாந்த அவரவர் மந்திரங்களாற் தூப தீபங் காட்டி, நிவேதித்து, புஷ்பம் சாத்திக் கும்பிடவும்.

**2) நாயன்மார் பூசை-** இஷ்டதேவரைப் பூசித்தபின், மேற்கூறியவாறு நாயன்மார்களைப் பூசிக்கலாம். சிவாசனபத்மத்தின் கிழக்கு இதழின்கீழ் (இடபதேவருக்குக் கிழக்குவெளியில் இஷ்டகாமிய மூர்த்திக்குக்கீழாக-தெற்காக) ஒருபத்திரம், புஷ்பம், சந்தனம்வைத்து திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தைச் சொல்லியும், சமயகுரவர், சந்தானகுரவர் துதிகளையுங் கூறிப் பூசிக்கலாம். (இத்தியாதிகளும் சிவபூசையில் அடங்கும்.)
இஷ்டதேவருக்குத் துதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டன் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி' - சைவசமயகுரவர் துதி

'மறுவில் செல்வத் துலகியலின் வாழ்வாங் கறிந்து வாழுநெறி
பொறுதி நேர்மைக் கடைப்பிடிக்குட் புலனைந் தடங்க வெல்லுநெறி
உறுதிப் பயனார் இறைபணிக்கே ஒன்றும் நெறியென் றிவைபோற்றும்
அறுபத் தொருமூன் றடியர்கழல் ஆராப் பரிவின் அணைந்துய்வாம்.'

'நந்தா ஞானப் பெருநிலமாம் நலமார் கயிலைப் பரம்பரையின்
வந்தான் மிகஞா னத்திருவின் வளமெம் படுக்குஞ் சித்தாந்த
சிந்தா மணிகள் சிவஞானத் திருவார் மெய்கண் டாராதி
சந்தா னத்துக் குரவர்பதந் தலைமேற் கொடுமெய்ந் நிலையுறு வாம்.'
மேலிரண்டும் திருக்கேதீஸ்வர மான்மியம். (உற்பத்தி காண்டம்)

'தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட,
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்,
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்,
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்,
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா,
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்,
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்,
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே' - உமாபதிசிவாசாரியாரின்
சந்தான குரவர் துதி) கீழ்வரும் சிவஞானமாபாடிய துதியும் சித்தாந்த
மாணவற்காயது
'மலர்தலை உலகின் மாஇருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடீர்ந்து
அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பவநனி வன் பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே' - மாபாடிய சிறப்புப்பாயிரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.2.24. அக்கினிகாரியம் :** ஆசாரியரும், மகாசைவர், ஆதிசைவர்களும் மற்றைக்கால பூசைகளை முடித்தபின் (இயன்றவரை) அக்கினிகாரியஞ் செய்து (அக,புற) பூசையை முடிக்கவேண்டும். இயலாவிடில் அஷ்டபுஷ்பஞ் சாத்தி. 'சுவாமீ அக்கினிகாரிய பலனையும் அடியேனுக்குத் தந்தருள வேண்டும் ' எனப் பிரார்த்தித்து பூசையை முடிக்கவேண்டும். அக்கினிகாரியஞ் செய்ய உரிமையிருந்தும் இயலாதவர்கள் கையிற் பூவினை வைத்து சிவமூலத்தை 108உருவும், சம்மிதாவை இயன்றளவும் செபித்து, சுவாமியின் வலக்கரத்தில் அர்க்கியநீரால் மூலத்தால் ஜெபசமர்ப்பணம் செய்து, மேற்கூறியபடியாக விண்ணப்பிக்க வேண்டும். ஆச்சாரியார்கள் 4ம் கால பூசையாற்றவேண்டும். (குறிப்பு - **எண்வகை மலர்கள்**- அஷ்டபுஷ்பம்- புறத்தில் ஆசனம், மூர்த்தி, மூலம். அங்க மந்திரங்களில் நேத்திரம் தவிர்ந்த ஐந்து, அகத்தில் கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை. தவம், அன்பு.) ஏனையோர் மூன்றாங்கால பூசையை முடித்து அஷ்டபுஷ்பஞ் சாத்தி ' சுவாமீ அக்கினிகாரிய பலனையும் அடியேனுக்குத் தந்தருள வேண்டும் எனப் பிரார்த்தித்து முடிக்கவேண்டும். (7.15 பார்க்க)

**திருமுறைகள்** (அக்கினிகாரியம்). முதலிரண்டும் முதலாம்.தி.மு. பண் குறிஞ்சி (கரிகாம்போதி):

1) 'கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்லன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே '

2) 'பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே'

(சிவனின் முடி யாரையும் வணங்கா முடியாதலால் பின்தாழ் சடையாம்)

3). 'மணந்திகழ் திசைகள் எட்டும்ஏ ழிசையும்
மலியுமா றங்கம்ஐ வேள்வி,
இணைந்தநால் வேதம் மூன்றெரி யிரண்டு
பிறப்பென வொருமையா லுணரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களும் அவற்றின் கொள்பொருள் குற்றம்
மற்றவை யுற்றது மெல்லாம்,
உணர்ந்தவர் வாழும் ஓமமாம் புலியூர்
உடையவன் வடதளி யதுவே' - 3ம் தி.மு. பண்- புறநீர்மை(பூபாளம்)

4) 'வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே'- 4ம் தி.மு. திருநேரிசை

5) 7ம் திருமுறை பண் நட்டராகம் (பந்துவராளி)
'கட்டக்காட் டில்நடம் ஆடுவ ரியாவர்க்கும் காட்சியொண்ணார்
சுட்டவெண் ணீறணிந் தாடுவார் பாடுவர் தூயநெய்யால்
வட்டக்குண் டத்தில் எரிவளர்த் தோம்பி மறைபயில்வார்
அட்டக்கொண் டுண்ப தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே'

**6.2.25 அட்டபுஷ்பம் சாத்துதல்:** எண்வகைமலர்களால் அர்ச்சித்தல் 5ம் தி.மு. திருக்குறுந்தொகை (நாதநாமக்கிரிய)யில், 'எட்டு நாண் மலர்' எனத்தொடங்கும் பதிகம் எண்மலர், நாண்மலர். பூங்கொத்தாயின மூன்றோடைந்திட்ட. ஒண்மலர், தூமலர் எட்டினால், அட்ட புட்பம் முதலிய செந்தமிழ் பொருந்தும் பத்துப்பாடல்களும் ஓதத் தகுந்தவை. அவற்றின் முதலும் இறுதியுமான செய்யுட்கள் வருமாறு.

1) 'எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லர்இடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னாரடி சேரு மவருக்கே'

2) 'அட்ட புட்பம் அவைகொளு மாறுகொண்(டு)
அட்ட மூர்த்தி அநாதிதன் பாலணைந்(து)
அட்டு மாறுசெய் கிற்பஅ தீகைவீ
ரட்ட னாரடி சேரு மவர்களே'

**6.2.26 ஒடுக்கங்கள் (அ) போகாங்க மூர்த்திகள்:-** இஷ்டதேவர், நாயன்மார் பூசையின்பின் அக்கினிகாரியம் அல்லது அதற்கீடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டபுஷ்பஞ் சாத்தி, பஞ்சமுகீ(58) முத்திரைகாட்டி 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: ' வென சிவமூலத்தால் சத்தியோஜாதம் தொடக்கம் ஈசானமீறாக அர்ச்சித்து, அம்முறையிலேயே ஸ்வஹா அந்தமான அம்மந்திரத்தால் அர்க்கியங் கொடுத்து, போகாங்க தேவர்களுக்கு அஸ்திரம் தொடங்கி ஈசான மீறான அவரவர் மந்திரத்தால் 'பராங் முகார்க்கியம் ஸ்வாஹா' என பராங்முகார்க்கியங் கொடுத்து, 'ஓம்ஹ: அஸ்த்ராய ஹூம்பட்' என்று மந்திரங்களை எழுப்பும் நாராச(35,64) முத்திரையால் அவர்களையெழுப்பி அவர்கள் மின்னல் போல ஒளிவிட்டெழுந்ததாகப் பாவித்து, திவ்ய (17) முத்திரையால் 'ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தியே நம:' என சிவ மூர்த்தியிற் சேர்த்துவிட்டு, சிவமூலத்தால் சிவமூர்த்தியை ஒருமுறை அர்ச்சிக்க.

**(ஆ) ஆசனமந்திரங்கள்** : முன்போலவே அஸ்திர மந்திரத்தாலே நாராச முத்திரையால் ஆசன மந்திரங்களை பாவனையால் எழுப்பி 'ஓம் ஹாம் சிவாசநாய நம:' என திவ்ய முத்திரையால் இலிங்கத்தின் பீடத்திலே சேர்த்து, சிவமூலத்தால் ஒருதரம் அர்ச்சிக்க.

**பிழை பொறுக்க வேண்டல்:** 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய பராங் முகார்க்கியம் ஸ்வாஹா' என பராங்முகார்க்கியங் கொடுத்து, 'ஸ்வாமி அடியேன் அறிந்தும் இயலாமையாலும் அறியாமையினாலும் நிகழ்ந்த குற்றங் குறைகளைப் பொறுத்து அருள் புரிய வேண்டும்' என வேண்டித் இரு பாடலாவது தோத்தரிக்கவும்.

'தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய்'. - சம்பந்தர்.
அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய் - சுந்தரர்
பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை - அப்பர்
'வெறுப்பனவே செய்யும் என் சிறமையினை.' - திருவாசகம்
'கல்லாப் பிழையுங் கருதாப்பிழையுங' - பட்டினத்தார்
'சொல்லால் வருங்குற்றம்' - பட்டினத்தார்.

'பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறிவொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
ஆருரானை மறக்கலு மாமே - அப்பர்

'சொல்லால் வருங்குற்றம் சிந்தனை யால்வரும் தோஷம், செய்த
பொல்லாத தீவினை, பார்வையிற் பாவங்கள், புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள் ஆயவும், மற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.'

**சிவை ஒடுக்கம் :** 'ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் மநோன்மந்யை பராங் முகார்க்கியம் ஸ்வாஹா' என பராங்முகார்க்கியம் கொடுத்து, திவ்ய முத்திரையாற் சுவாமியிடம் சேர்த்து விடவும்.

**சுவாமி ஒடுக்கம். :** 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய பராங்முகார்க்கியம் ஸ்வாஹா' என பராங்முகார்க்கியங் கொடுத்து, திக்பந்தனம், அவகுண்டனம் முறைப்படி செய்து. 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்' என உச்சரித்துதேனுமுத்திரை காட்டி, 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய அஸ்த்ராயபட்' என பத்திரத்தை இரண்டாகக் கிள்ளி இருகைகளிலும் விக்நோச்சாடனம் போல நாராச முத்திரையால் இருபக்கமும் எறிந்து. ' ஓம் ஹாம் ஹௌம் சிவாய ஹ்ருதயாய நம:' என சங்கார முத்திரையால் சுவாமியை இலிங்கத்தில் நின்றும் பாவனையால் எடுத்து, இடைகலை நாடியாற் பூரிக்கின்ற பிராணவாயுவுடன் தமது இருதயத்திலே செலுத்தி ஓடுக்கித் தோத்தரிக்கவும். 4ம் தி.மு. மனத்துள்வைத்த திருப்பதிகம். பண்- காந்தாரம் (நவரோஸ்)

1) 'கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே'

2) 5ம் தி.மு. திருக்குறுந்தொகை. இராகம் - நாதநாமக்கிரிய
'என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யானொரு வன்னுளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னு ளேயுயிர் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே'

**பரிவாரதேவர் ஒடுக்கம் :** நாயன்மார், குரு, வித்யாபீடம், வ்ருஷப தேவர், சதாசிவர் முதலிய சப்தகுரவர், கணபதி, மஹாலக்ஷ்மி, வாஸ்வதிபதி, அஸ்திர துவாரபாலகர், பச்சிமத்துவார தேவர், இஷ்டதேவர் (குறிப்பாக வரவழைத்தப் பூசித்தவர்கள்) ஆகியோருக்கும் அவரவர் மந்திரத்தால் 'பராங் முகார்க்கியம் ஸ்வாஹா' என பராங் முகார்க்கியங் கொடுத்து, இருதயத்தில் ஒடுக்கவும்.

**பெட்டகத்தில் சேர்த்தல் :** சிவமூலத்தால் மெல்ல உச்சரித்துக் கொண்டு, பீடத்திலிருந்து எடுத்துக் கண்ணிலொற்றி, பக்தியுடன் பரிவட்டத்தால் மூடிப் பெட்டியில் சேர்த்து, துதிக்க.

1) 4ம் திருமுறை பண்- பழந்தக்கராகம் (ஆரபி, சுத்தசாவேரி)
'மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனையென்
கண்பொருந்தும் போதத்துங் கைவிடநான் கடவேனோ'

2) 2ம் திருமுறை பண் இந்தளம்,. இராகம் - நாதநாமக்கிரிய.
'சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளும் கருத்தாலே'

எனப் பெட்டியை மூடி, காவலர் பீமர், ருத்ரர் இருவரையும் வந்ததாகப் பாவித்து, அவர்களை முறையே, 'ஓம் ஹாம் பீமாய நம:' 'ஓம் ஹாம் ருத்ராய நம: எனப் பெட்டிக்கு வெளியிற் பூசிக்க. பெட்டி இஷ்ட லிங்கத்திற்கேயாம். **ஹணிகலிங்கமாயின்** ஒடுக்கியபின் கண்ணிலொற்றி மார்பிற் பூசுக. பிறவாயின் ஜலவாசம் போன்ற வகையில் விசர்ஜனம் செய்யலாம்.

**6.3 த்வனிச்சண்டர் பூசை :** சிவபூஜாசக்கரத்தில் காட்டியவாறு, சிவபீடத்திற்கு வடகிழக்காக பொதுவிற் பூசித்த த்வனிச்சண்டரை இப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக 'ஓம் ஹாம் சண்டாஸநாய ஹூம் பண்ணம்' என ஆசனத்தையும் ஓம் ஹாம் சண்ட மூர்த்தயே ஹூம் பண்ணம்' என மூர்த்தியையும் பூசித்தபின் ஓம் ஹாம் சண்ட நேத்ரேப்யோ ஹூம் பண்ணம் என நேத்திரங் கொடுத்து, 'ஓம் ஹாம் திவனிச் சண்டாய ஹூம்பட் ஸ்வஹா' என ஆவாகித்து, அவ்வாறே விசேட அர்க்கியங்கொடுத்து, சிவபூசையின் நிர்மாலியமாயுள்ள சந்தனம், புஷ்பம், அறுகு, அட்சதைகளை ஓம் ஹாம் திவனிச் சண்டாய நம:' எனச்சாத்தி,

ஓம் ஹாம் திவனிச் சண்டாய தூபம் ஸ்வாஹா' என தூபமும் ஓம் ஹாம் திவனிச் சண்டாய தீபம் ஸ்வாஹா' எனத் தீபமுங்காட்டி. நிர்மாலிய நைவேத்தியத்தை 'ஓம் ஹாம் திவனிச் சண்டாய நிர்மாலிய நைவேத்தியம் ஸ்வாஹா' என நிவேதித்து, 'ஓம் ஹாம் திவனிச் சண்டாய கற்பூர தீபம் ஸ்வாஹா' என கற்பூரதீபங் காட்டி, 'ஓம் ஹ: அஸ்த்ராய பட்' எனத் தாளத் திரயஞ்செய்து, 'சுவாமி, சிவபூசையில் நேர்ந்த குறை மிகைகளால் உண்டாகிய குற்றத்தைப் பொறுத்தருளி, சிவபூசையின் பலனை அடியேனுக் களித்தருளுக' என வேண்டிக் கும்பிட்டு, 'ஓம் ஹாம் திவனிச் சண்டாய பராங்முகார்க்கியம் ஸ்வாஹா' எனப் பராங் முகார்க்கியங் கொடுத்து, திவ்யமுத்திரையால் 'ஓம் ஹாம் திவனிச் சண்டாய ஹ்ருதாய நம:' என தமது இருதயத்தி லொடுக்கவும்

**தேஜச்சண்டபூசை** (சூரியபூசை முடிவில் முன் செய்யாவிடில் இப்போது இதிற் கூறியவாறு செய்க.) பின்னர் வட்டகைகளிலுள்ள சிவ பாத்திய, ஆசமன, அர்க்கியங்களையும் சூர்யார்க்கியத்தையும் முறையே 'ஓம் ஹாம் ஹ்ருதயாய நம', 'ஓம் அம் ஹ்ருதயாய நம' என ஒடுக்கிக் கொள்க. சண்ட நிவேதனத்தை பகிர்ந்து நீரிலும், காக்கைக்கும் விடவும். பத்திரம் முதலிய நிர்மாலியங்களை கால்படாத இடத்திலிடுக. பின்னர், பூஜாஸ் தானத்தை சாணிகலந்த நீராற் சுத்திசெய்து, கையலம்பி ஆசமனம் செய்து, தொடுமிடந் தொட்டு சகளீகரணஞ் செய்து, 'ஓம் ஹ: அஸ்த்ராய நம ' என சாமான்ய அர்க்கியத்தை பூஜாஸ்தானத்திலும். தமது சிரசிலும் புரோட்சித்து, 'ஓம் ஹாம் ஹ்ருதயாய நம' என சாமான்யார்க்கியத்தை இருதயத்தில் ஒடுக்கி, வட்டகைகளைச் சுத்தஞ்செய்க.

**அகோரஜெபம் :** பூஜாஸ்தானத்தை விட்டு வெளிவந்து, கை கால் அலம்பி, ஆசமனம் பண்ணி, நீறணிந்து. வடக்கு நோக்கி அமர்ந்து, விநாயகரை நினைந்து குட்டிக்கும்பிட்டு, குருவையும் கும்பிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணாயாமம் சகளீகரணஞ் செய்து. பூசாபலன்கள் சித்திக்கும் பொருட்டு, 'ஓம் ஹூம் அகோர ஹ்ருதயாய நம ' என 21 தரம் செபித்து, பின்னரும் பிராணாயாமம் சகளீகரணஞ் செய்து, கபில பூசை செய்தல் வேண்டும்.

**கபிலபூசை :** காராம்பசு (கபிலை) இன்றேல் கன்றுடனான வேறுபசுவை அதற்காய இடத்தில் நிறுத்தி மஞ்சள், குங்குமம், சந்தனமிட்டுப் புஷ்பஞ்சாத்தி, பசு இல்லையேல் ஓரிடத்தில் பத்திரம் வைத்து அதன்மேல் இருபுஷ்பங்களிட்டு, 'ஓம் ஹாம் கபிலே நந்தே நம', 'ஓம் ஹாம் கபிலே பத்ரே நம', 'ஓம் ஹாம் கபிலே சுசீலே நம', 'ஓம் ஹாம் கபிலே சுரபே நம', 'ஓம் ஹாம் கபிலே சுமநஸே நம' என அர்ச்சித்து, பசுவானால் அறுகம்புல், வாழைப்பழம் இல்லாவிடில் பாவனையாற் கொடுக்கவும்.

'ஓம் ஹாம் கபிலே ஸ்வாஹா' என அர்க்கியங் கொடுத்து, அதேமந்திரத்தால் தூபதீபங்காட்டிக் கும்பிடவும். பாவனைப் பசுவாயின். 'ஓம் ஹூம் ஹ்ருதாய நம' என இருதயத்தில் ஒடுக்கவும். (இரண்டாம் முறை பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய பல பொருட்களில் நந்தை-கபிலம், பத்திரை-கருமை. சுசீலை-புகை, சுரபி-வெள்ளை. சுமனை-செந்நிறம் ஆகிய கபிலைகளும் அடங்கும். முழுஉடலில், அல்லது உடலடியில் கபிலநிறமானவை காராம்பசுக்கள்).

> 'தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
> பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
> துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
> அங்கம் அனைத்தும் தாம்உடைய அல்லவோநல் ஆனினங்கள்'-

பெரியபுராணம்

**திருமுறையோதல் :** புனிதமான ஓரிடத்தில் கிழக்காக அல்லது வடக்காக பத்மாசனத் தமர்ந்து, பிராணாயாமம், சகளீகரணஞ் செய்து, 'ஓம் ஹாம் வித்யாபீடாய நம ' என, ஓதுதற்காய திருமுறையை அர்ச்சித்து எடுத்து. அத்திருமுறை யாசிரியரை நினைந்து கும்பிட்டு, ஓதிய அளவை ஓதியபின் மூடி முன்போல அர்ச்சித்து, உரியவிடத்தில் வைத்தபின் சிவாலய வழிபாடு செய்க.

**போசனவிதி :** திருநீற்றை உத்தூளனமாகப் பூசி ஆசனத்தமர்ந்து மன ஒருமைப்பாட்டுடன் மௌனமாகப் போசனஞ்செய்க. உண்பவர்க்கு இடப்பட்ட ஆசனங்கட்கு முன்னால் ஒரு கையகலத்திற்கு மெழுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சீமெந்து நிலமாயின் மஞ்சள் நீராற் தடவி) அரிசிமாவால் (சதுரம் போல) 4 கோடுகள் போடுக. அக்கோடுகளுக்கு நேரான ஆசனங்களில் முறையே பின்வரும் திசைகளில் (கிரணாகமத்தின்படி)அமர்ந்து உண்பர். பொதுவாகக் கிழக்கு நோக்கல் பொருத்தம்.

| தீட்சை | கருமம் | நோக்குதிசை |
|---|---|---|
| 1ஆம், சமய | சரியை | வடக்கு |
| 2ஆம், விசேட | சிவபூசை, கிரியை உதவி | தெற்கு |
| 3ஆம், நிர்வாண | சிவபூசை, சாதகர், பிரேரகர் | மேற்கு |
| 4ஆம், ஆச்சார்ய | சிவபூசை, ஆசிரியம், தீக்கை | கிழக்கு |

பரிகலம் - உண்கலம் : வாழை, பலா, புன்னை. பாதிரி, முருக்கு, தாமரை இலைகள் அல்லது பொன், வெள்ளித்தட்டு. (இலைகளில் உண்ணுதல் சிறப்பானது.)

உணவுகளைக் கலத்திற் பரிமாறியபின் நீர்ப்பாத்திரமேல் வைத்த வலக்கைப் பதாகை (கவிழ்) முத்திரையால் 'ஓம் ஹாம் ஜூம் ஸ: ம்ருத்யுஞ்ஜயாய வௌஹட்' என ஏழு முறை மந்திரித்து, அந்த ஜலத்தில் திவ்ய முத்திரையால் சிறிது நீரெடுத்து உணவின்மீது 'ஓம் ஹ: அஸ்த்ராய நம' என தெளித்து, நாழ்சுத்தி செய்து, 5 விரல்களாலும் நெல்லிக் காயளவு அன்னத்தை 5 தரம் நெய்யுடன் எடுத்து. சிவனைத் தியானித்து, பஞ்சப்பிரம மந்திரங்களால் சிவனுக்கு உதாரக்கினியால் ஆகுதி செய்வதாகப் பாவித்து, அண்ணாந்து உள்நாக்கிலிட்டு, பின்பு 'தர்மார்த்தம் ஞானார்த்தமாக அடியேன் இவ்வுணவை உண்கின்றேன்' என நினைந்து உண்ணுக. தொடங்கு முன்,


'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்,
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை,
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே' - அப்பர்

இது சைவர்கள் போசனவிதி. வைதிக முறை குமாரசாமிக்குருக்கள் நூலில் மிகவிரிவாக உண்டு. தத்தமது குல ஒழுக்கத்தின் பிரகாரம் மரபுபேணி நடைமுறையாகப் பயின்று வருவதை அறிந்து மறவாது கடைக்கொள்க. நிலத்தில் ஆசனத்திலிருந்தே உண்ணவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வார் தனித்திருந்து உண்ணலாகாது. குடும்பத்தவரோ, விருந்தினரோ கூட இருந்துண்ணவேண்டும். சிவபூசைக்காரருக்கு கூடஇருப்பவரும் ஆசாரசீலராதல் அவசியம். (வைதிகர்சிலர் கணவன் மனைவி தனித்திருந்து உண்ணவேண்டும் என்பர்). கை வாயிற்படாமல் தூக்கியே உண்ணவேண்டும். இடையிற் பேசுதல், சிரித்தல் தகாது. உண்டபின் 'ஓம் ஹாம் அமிர்தாபிதா நமஸி' என உத்ராபோசனம் (பின்னைய ஆசமனம்) செய்து, வெளிச்சென்று கையலம்பி இடமாக (நாவலர் 16 தரம் என்பதைப் பலதரமென்க) கொப்பளித்து. ஆசமனஞ் செய்து, ஓரிடத்திருந்து, 'சிவசிவ' என நீறணிந்து, தாம்பூலம் தரிக்கலாம். நாவலர் முதற் தீட்சையினருக்காக மேலுஞ் சுருக்கமாக எழுதியுள்ளார். உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே எனத் திருமூலர் கூறியபடி இறைவன் தந்த இவ்வுடல் இறை நினைவுடனேயே பொஷிக்கப்பட வேண்டும். இயன்றவரை சாத்விக உணவாகிய இலைவர்க்கம், சூரியவெயில்படும் இயற்கையான காய்கறி, பழவகை நன்று.



**இலிங்கத்தினை வணங்கும் இரு அடியார்களின் திருவுருவங்கள் கல்லில் பொழியப்பட்டிருக்கின்றன. இது வானிலிருந்து நோக்கும் காட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பாகம் 3

## அத்தியாயம் 7

## சிவபூசை அறிமுறைகள், செய்முறைகள்

1ம், 2ம்பாக விபரங்கள். சிவத்திருவடிவம். சொல் - (மந்திரம், வன்னம், பதம்) பொருள் - (தத்துவம், புவனம், கலை), சமயபேதம். புராண-சிவபூசைமுறை, சைவநாற்பாதம், சந்தியாவந்தனம். சித்தாந்தம், மற்றும் ஒழிபான விடயங்கள் இதில் சமயங்களும் பிறவும் சிவஞானபோத உபதேச அடிப்படையிலானவை.



சிவஞானபோத உபதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.1. இதில் வரும் முற்பாகங்கள் தொடர்பான விரிவான விடயங்கள்.

தீட்சை, கிரியாயோகம், மெய்ஞ்ஞானமே முத்திதரும், நிஸ்காமிய சிவபூசை, சிவபரத்துவம், சிவப்பிராமணியம், இயம நியமங்கள், சந்தியாவந்தனம், புராண-சிவபூசைகள், சமயங்கள் பலவாதல், குலதெய்வம், சிவத்திருவடிவங்கள், உண்ணிலைத் தத்துவங்கள் 36, சைவநாற்பாதம், புத்தர்கால வேத-ஞானகாண்ட எழுச்சி, குடிமை முதலான சமயசம்பந்த மற்றுமுள்ள பல்வேறு சித்தாந்த, புராண, சமூக நோக்குகள் என்பன.

**7.1.1 சைவரும் தீட்சையும்:-** சைவசமயிகளாகிய யாவரும் நிர்ப்பீச முறையிலாவது முதலாம் தீக்கை பெறவேண்டுமென்பதும் அவ்வாறு பெற்றோர் தத்தமக்கு இயன்றவாறு ஸ்நானம், செபம், தியானம், காலைமாலைகளிற் புரியும் சந்தியாவந்தனம் முதலியவற்றைக் கைக்கொண்டொழுக வேண்டும் என்பதும் நோக்கற்பாலது. நம்முன்னோர் குறைந்தது காறபங்கினரேனும் சிவதீட்சை பெற்றுச் சந்தியாவந்தனத்துடன் ஆலயசேவை, புராணபடனம், விரதங்கள் முதலியன புரிந்து தம் சூழலைத் தெய்வீகமயப்படுத்தி வாழ்ந்தார்கள். முதல், இரண்டாம் தீட்சைபெற்று சமயநெறியில் முன்னேறுவோர்க்கெனச் சிறப்பாகச் செய்யப்படும் இந்நூலில் சித்தாந்தஞானம் பிரதான இடம்பெறுகிறது. அது, கிரியையினைத் தொழிலாக வன்றி அதனை விளங்கியாற்றி அதனாற் கிரியா யோகமும், முத்தி சித்திக்கும் வழியாய திருவடி ஞானமும் கைகூடுவதற்கேயாம்.

> "திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
> குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
> கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
> துரிய சமாதியாந் தூமறை யோர்க்கே"
>
> \- திருமந்திரம் : பா 232

பாடற்பொருள் பலவாகக் கூறப்படினும் சித்தாந்தத்திற்கு முரணாகாதவாறே, பிரதானமாக திருமந்திரத்திற்குப் பொருள் கூறவேண்டும். பலராற் சரிவரப் புரியப்படாத பாக்கள் அதில் உள. இப்பாடற் பொருளைக்காணுமுன், இதன் முற்பாடல்களிற் கூறியவற்றைப் பார்த்தலழகு.

(அ) பா225: 'வேதாந்தங் கேட்க'. இப்பாடற் பொருளைச் சுருக்கமாக ஜி. வரதராசன் அவர்கள், 'அக்கினிகாரியஞ் செய்யும் அந்தணர் மகாவாக்கியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாகிய பிரணவத்துள் ஒடுங்கி இன்புறுவர்.' என்கின்றார். "தத்துவமசி' - 'அது நீயாகிறாய்' - நீ அதன் தன்மையினைப் பெறுகிறாய் (பெறுவாய்) என சித்தாந்தப் பொருளும். 'அதுவே நீயாய் உள்ளாய்' என்னும் இடுகுறி வேதாந்தப் பொருளும் வேறானவை. அதுவே நீ. என்பது. பொருள் ஒன்றே அப்பொருள் அவிச்சை-அறியாமை காரணமாக சிற்றான்மாவாயிற்று என. சுருதி. யுக்தி. அனுபவங்களால் நிறுவமுடியாத பிதற்றுதலைச் சைவம் ஏற்பதில்லை. 'ஆதல்' என்பது. 'இரு நில னாய்த். தீயாகி. நீருமாகி. இயமானனாய்-உயிராய்.' அட்ட மூர்த்தமாகி. நெருநலையாய்-நேற்றாய். இன்றாகி. நாளையாகி நிமிர் புன் சடையடிகள் நின்ற வாறே' என வேதப்பொருளை அப்பர் விரிப்பதனாற் பெறப்படும். உதாரணமாக இயமானனாகி என்பதில். உயிருமாகி என்னும்போது. உயிர் சிவமுமல்ல. சிவம் உயிருமல்ல. ஆனால் உயிரை வழிநடத்தி அதன் அறியாமையை நீக்கித் தன் திருவடியின்பம் அளித்தற்கு உயிரோ டுடனாய இறை இயல்பு ஆகி ' என்பதாற் பேசப்படுகின்றது. இறை. உயிரின் அறிவு நிகழ வாய்ப்பாக. 1) உடலற்ற **கேவலம்,** 2) சிற்றறிவை விளக்கும் உடல்பெற்ற **சகலம்,** 3) மாயாபந்த உடலகன்ற **சுத்தம்** என்ற மூன்று நிலைகளிலும் ஒன்றாய் (மற்றும் உடனாய். வேறாயும்) நிற்கின்றமை நுண்ணறிவினற்கே புரிவதாம். இருவேறு பொருட்கள் தம்மோடு கூடும் சிறப்பில் ஒன்றாகும். இவ்வொன்றாதல் என்பது. தலைவன் தலைவி இருவரும் சயனத்தொன்றாகி இன்பம் அனுபவிப்பதோடு ஒப்பதாயினும். இன்பங் கொடுத்தல் கொள்ளுதலில் அவை வெவ்வேறான பொருளுமாயுள்ளன. **திருவருட்பயன்:-** 1) 'இருவர் மடந்தையருக் கென்பயன்இன் புண்டாம் ஒருவன் ஒருத்தி யுறின் எனக் கூறுகின்றது இது. ஆன்மாவும் சிவமுங் கூடினவிடத்திலேயே இன்பமுண்டென்பதனை அகத்துறை கொண்டு விளக்கிற்று.

2) 'இன்பதனை எய்துவார்க் கீயும் அவர்க்குருவம் இன்பகன மாதலினால் இல்' இது. ஒருபுடை உதாரணமான அகத் துறையில் இன்பங் கொடுப்பவர் கொள்பவரில் யார் யாருக்கென்ற சந்தேகமற. முத்தியாகிய பேரின்பம் சந்தேகமின்றி இன்புருவான இறையாற் கொடுக்க உயிர் கொள்ளும் என்றது.

3) 'தாடலைபோற் கூடியவை தான்நிகழா வேற்றின்பக் கூடலைநீ ஏகமெனக் கொள்'. இது. சர்க்கரையும் (இறையும்). அதனைப் புசிப்பானும் (உயிரும்) போல. இறையும். உயிரும் இரண்டாய் இருக்கும் எனக்கூறி ஐயம் நீக்குவது. (இதிலும். சர்க்கரை நியாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுடைத்து. புசித்தலிலும் அவை வேறாம்.) ஆனால் உயிர் இறை கூடும் அத்துவிதக் கலப்பாற் பெறும் இன்பத்தில் அந்நிகழ்வு, வேறற ஒன்றித்து நின்றே நிகழும் என்றது. இதற்கு உதாரணம் தாள், தலை என்ற இரு சொற்களும் தம்மிடைப் புணர்ச்சி (சீவனம்) கொள்கையில் தாடலை என ஒரேசொல்லாய் நின்றமை கூறப்படுகின்றது.

4) 'ஒன்றாலும் ஒன்றாது இரண்டாலும் ஓசையெழாது என்றா லொன் றன்று இரண்டும் இல்' பின்னரும் சிந்தனைத் தொடரால் எழும் சந்தேகமான ஆன்மாவும் சிவமும் ஒன்றா அல்லது இரண்டா என்பதற்காய விடை இது. அதாவது அவை, சங்கர வேதாந்தங் கூறும் ஒருபொருளாயின், இருவருங் கூடவேண்டியதில்லை, பெறுவானும் பேறும் இல்லை. கலப்பிலும் இரண்டாய் நிற்கும் என்னில் அக்கலப்பு சாயுச்சியமெனும் பேரின்பமோட்சம் எனலாகாது. வாழ்வின் பயன் நிரந்தர சேர்வினாற் பெறுமின்பமே. ஆதலின் அவை ஒன்றுமல்ல இரண்டுமல்ல என வேதாகமங்கள் சொல்லுகையினாலே அத்துவிதமாயிருக்கும். அதாவது பொருட்தன்மையால் வேறாய், புணர்ச்சி நிமித்தமாக இரண்டற்று ஒன்றாய் (ஆய்- ஆகி) நிற்குமென்றது. இங்கேதான் சங்கரர், மத்துவிகர், யோகசாரர் முதலியோர் அத்துவிதப் பொருள் காண்பதில் வேறுபட்டுத், தத்தம் பெயரிற் சமயஞ் சாதித்தனர். அங்ஙனமின்றிச் சித்தாந்தம் அதனைத் தெளிவாக்கியமை காண்க.

**குறிப்பு - சிந்தனைக்கு:- 1)** இம் மாறுகோட்பட்ட கருத்துக்களும் சிவனின் திருவிளையாடலேயாம். இன்றேல் மெய்கண்டார் இடுகுறி வேதாந்தப் பொய்மை அகற்றும் பாங்கில் மெய்யாய சைவத்தை, சம்பந்தரின் பின் ஏழு நூற்றாண்டுகள் கழிந்த பின்னும், மீண்டும் நிலைநாட்டியிருக்க முடியாது. இன்றொடு ஏழுநூற்றாண்டுகள் மேலுங்கழிந்த நிலையில் சைவாதீனங்களுக்கும் சிவத்திருமன்றம் போன்ற சைவமன்றங்களுக்கும், ஆறுமுகநாவலர் தொட்டு கலாநிதி பண்டிதர் மு. கந்தையா வரையிலான ஞானவான்களுக்கும் இந்நூற்றாண்டிலும் (கண்டனங்களுடன் கூடிய) சிவம்பெருக்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

2) எனவே நுணுகிப்பார்க்கின் சைவத்தை நிலைநாட்டவெனவே வந்த அதன் விரோதப் போக்குடைய இந்து(ஷண்)மதம் வாழ்க வென்பதன்றி வேறொன்றும் அறியோம். யாவும் எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாபுமில்லை யென்றார் யோகசுவாமிகள். எனினும், திருவள்ளுவர் :
1) இடிக்குந் துணையாரை யாள் வாரை யாரே கெடுக்குந் தகைமையவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிவுறுத்திச் சொல்லும் மந்திரிகளைக் கொண்ட அரசாளும் அரசருக்குப் பகைவரில்லை. இது நேர்முகப்பதில். 2) மறைமுகப்பதில். 'இடிப்பாரையில்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானுங் கெடும்' என்றார். நற்பயிரிடைக் களைகள் இயல்பேயாயினும் அச்செழும்பயிரை வாட்டுமளவிற்கு அவற்றை ஓங்க அனுமதியாது மருந்தடிக்க வேண்டும். இதில் வருங் கண்டனங்களும் களைகொல்லிகளாதலின், இதுவும் மெய்காட்டிப் பொய்யகற்ற வரும் திருஞானசம்பந்தரின் வைகை ஏடே.

**(அ)ன் தொடர்:-** இங்ஙனம் 'தத்தவமசி'யின் 'ஆதல்' என்பதை விளக்கியும், மற்றுமோர் வேத மகாவாக்கியமான அத்துவிதப்பொருள் கண்டு அப்பொருள் காத்துநிற்கும் சித்தாந்தப் பொறுதியாற் பாரதசமயங்களை நுணுகிஆய்ந்த மேல்நாட்டவரும் இவ்விளக்கத்தால் இன்புற்றதோடு அமையாது, நெடுங்காலமாக தென்னிந்தியாவிற் தங்கியிருந்து தமிழையும் சித்தாந்தம், திருவாசகம் முதலானவற்றையும் படித்தின்புற்று தத்தம் மொழியிலும் திருவாசகத்தை மொழிபெயர்த்தமை வரலாறு. சங்கர வேதாந்தத்தாலோ சாங்கியம்போன்ற வேறு எவற்றினாலுமோ இதுபோன்ற சிறப்பினைப் பாரதம் பெறவில்லை. (அத். 7.23.5 பார்க்க.)

**தத்துவமசி பற்றி மேலுஞ்சில:-** அது நீயாகிறாய், நான் அதுவானேன், அது இது, அது நான் எனப் பொருள்படும் சொல் தத்துவமசி. மேலும் 'அவனே தானே யாகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்க' என்ற சிவஞானபோத 10ம் சூத்திரத்தாலும் இதுபெறப்படும்.

1) தத்- அது, பதி, காணப்படுபொருள், ஞேயம். 2) துவம்- நீ, பசு, காண்பான், ஞாதுரு. 3, அசி - ஆகிறாய், திருவருட்காட்சி, ஞானம். **விளக்கம்:-** குருவருளால் ஞானங் கைகூடிக் காண்பான், காட்சி, காட்சிப்பொருளென மூன்றும் வேறுபிரிந்து 'சி வ ய' எனநின்று அறிந்தபின், 'ய' எனும் நின்நிலைகெட்டு பரையோடு அத்துவிதமாகி, 'சிவ' என நின்றதற் பின்னும், பரையாகிய அவளையும்விட்டு, 'சி' எனும் சிவத்தோடு அத்துவிதமாகி, அவனின் அட்டகுணங்களையடைந்து, இன்பமயமாகின்றாய் என, விரித்துப் பொருள்காணின் ஆதல் என்பதன் பொருள் தெளிவகும். ( பா 225ன் விரிவான பொருள் தொடரும்)

தத்துவங்கள் முப்பத்தாறும், அவற்றின் அதிதெய்வங்களும் பிரணவத்தில் ஒடுங்கும். கிரியாயோகம் என்பது, பிரணவ எல்லையை பிண்டத்துள் அடங்கக் காணல். அதன் மேலாய ஞானம் அண்டத்திலும் பிண்டத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கத்திலும் பிரணவ விரிவைக் கண்டு, 'உள்ளும் புறம்பும் ஒருமைத்தே காட்சியராய்' பரப்பிரம ஒளியிலடங்கி இன்புற்றிருத்தல். இது பிரணவங்கடந்த மாயாதீத சுகமாம். மேலும் இது, கிரியாயோகத்தால் உச்சந்தலைமேற் 12 அங்குலத்துள்ள சொருபசிவனோடு அத்துவிதமாகிப் பின் சிவகுருவென வந்த பரையால் பரையோகம் பெற்று, ஆன்மா சூக்கும காரண உடலுங்கெட்டு சிவஞான அன்புப் பெருவெளியில் உலாவுதலாம். இதனால் கிரியாயோகம் சித்தித்தபின் ஞானத்தால் முத்தியும் கூறப்பட்டது. (முழு விளக்கத்திற்கு தசகாரியம் (3), துகளறுபோதம் பார்). இதில், சிவாயநம, சிவயவசி, சிவய, சியவ, சிவசிவ, சி முதலாய பல்வேறு மந்திரங்குறிக்கும் படிகளடங்கிய சித்தாந்த ஞானமே தத்துவமசியிலும் உண்டு. அக்கினிகாரியத்தால் தினம் அகத்திலுள்ள சிவன் அக்கினியிற் தோன்றி அருள் செய்தலால் அக்கினிகாரியம் (சிவனைத் தமது உதராக்கினியாற் புறத்தில் ஓமகுண்டத்தில் ஓமிக்கும் அக்கினி வடிவிற் கண்டு பூசித்தல்) செய்யும் அந்தணர் கிரியாயோகம் கைவரப் பெறுவரென்பதே (அ)வில் வரும் பா. (திருமந்திரம் 225) யானே பிரமம் (பதி) எனில் பதிகாட்டக் காணுவதெங்கனம்.

**குறிப்பு 1) -** இத்தகு விரிந்த, உயிர்க்குறுதி பயக்கும் அறிவின்றி, சிற்றான்மாவாய நீயே மயக்க அறிவு நீங்கி பரான்மா ஆவாய் என வேதாந்தப் பொருளை மாறுபடக் கண்ட அஞ்ஞானிகளாலேயே, சங்கரர் மத்துவர் ஆதியோரின் வேதாந்தம் பரப்பப்படுகின்றது. (ஞானம் என்பது இதில் மெய்ஞ்ஞானம். அது, பசுவின் தகுதிகண்டு, பதி தானாகவே (நடேசர் திருவடி) காட்டப் பசு காணுவது. திருவடிஞானம் அல்லாத ஞானம் அஞ்ஞானம் - என்பது சித்தியார் வரைபு.

2) இதனால் அது சைவருக்கு வேம்பாகிக் கசத்தல், சங்கரபீடத்தை வெறுக்கக் காரணமாகிறது. வேதத்திற்கு மறுப்பான மதங்களுக்கு எதிரான அவரின் செயற்றிறமைகள் போற்றப்படக் கூடியவையே. ஆயினும், என்றும் சீவ-சிவ அத்வைத சம்பந்தமாயுள்ள சனாதன சைவத்தைத், தாம் ஏற்படுத்திய ஷண்மத வரைவிலக்கணத்துள் அடக்கி, இந்து மதத்தின் ஒருகூறாகச் சைவத்தை ஆக்கி, தான் வைணவப் பின்னணியில் வந்ததாற் போலும், வைணவத்திற்கும் முக்கியமளித்து, ஆறு சமயங்களும் தனிதனியாறு முழுமுதலைக் கொண்டன எனப் பிரகடனப் படுத்தியமையும் அவரைச் சைவசமயத்தவர் போற்றாத காரணமாம். சிவபரத்துவம் நசிக்கப்பட்டதால் அக்காரணஞ் சரியானதே. அவரின் சைவவிரோதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகள் மிகஅதிகம். மடங்கள் அவற்றைத் தொடர்கின்றமை கண்கூடு. (விபரம் சித்தாந்தஞானக் களஞ்சியம்). 3) முழுமுதல் பிறவாயாக்கைப் பெரியோனாய சிவனென்பதை சங்ககாலமுதல் அறியாதார் தமிழ்கூறும் நல்லுலகில் யாருளர்?. சிங்கள அன்பர்கள்கூட சிவனை மதிப்பதால், அவரிடம் பிறதெய்வங்களிடம் வேண்டுவதுபோல யாதும் வேண்டாரென அறிவோம். பிறந்திறந்துழல்வோரும் இன்று வணங்கப்படுகின்றனர்.

(அ) இனி **230ம்பாடலில்:** அந்தணர் அணியும் நூல் வெறும் பருத்தி நூலல்ல; அது வேதாந்த மென்றும், அவரின் நுண்மையான சிறிய சிகை வெறுமனே உரோமமல்ல அது ஞானமென்றுங் கூறினார். வேதாந்தமென்பது உபநிடதங்கள். **'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'** ஆதலினாலும். சித்தாந்தம் ஆகமவாயிலாக ஞானத்தைத் தருவது என்பதாலும் இங்கே ஞானம் மெய்ஞ்ஞானமாகிய பதிகாட்டக் காணும் **பதிஞானம்** ஆகின்றது. பதிஞானம் பெறாத எவரும் ஞானியராகார். எமது சமய, சமய சந்தானகுரவரே ஞானியர்க்கு நல்லதாரணமாவர். மணிவாசகர் இதிற் சிறப்பிடம்பெறுவர் அவர் "யான் ஞானி அல்லேன்" என்று கூறினார். இன்று தம்மைத்தாம் ஞானியென்போர்பலரும்.

மேலும், கிரியைநெறியில் அகப்பூசை முற்றி உடலில் யோகமாய் மிளிர்வது கிரியாயோகம். அடுத்தடுத்த பிறப்பில் அச்சிவபுண்ணியப் பலனால் முதல்வன் சகலற்கு மானிடவடிவெடுத்து சிவஞான குருவாய்த் தோன்றித் தீட்சைவழங்கி ஞானமுதிக்கச் செய்வன். இப் படிமுறைகள் ஒருபிறப்பிலோ பலபிறப்புகளிலோ அவரவர் தகுதிகண்டு உடனோ பின்னோ சைவர்க்கு நிகழலாம். ஏனையோர் தத்தம் சமயத்தகுதி நின்றபின் ஏனைப் பிறப்புகளில் அதனைப் பெறுவர். மணிவாசகரும் 'மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' என்றார். இது அன்பே சிவமென்பார்க்கு எளிதிற் கிடைப்பதென்பதை. 'இன்பி லினிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம் அன்பு நிலையே யது' என்றார் உமாபதியார். நக்கீரரும் திருமுருகாற்றுப்படையில் 'சேவடி படரும் செம்மல் உள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம் புரிந்து உறையும் செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப, இன்னே பெறுதிநீ முன்னிய வினையே' என்றார். நாவலர் இதனைச், சிவந்த திருவடிகளைச் சிந்திக்கும் தலைமை பெற்ற உள்ளத்துடனே புண்ணியங்களை விடாது செய்யும் கோட்பாட்டினாலே விளையாநின்ற (விளைந்த) மெய்ஞ் ஞானத்தைச் சாதித்து (அத்திருவடிக்கீழ்) இருக்கும் நெறியை நீ விரும்பினாயானால் முற்பிறப்பிலே நினைந்து செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியங்களினாலே (அநித்தியமான இம்மை மறுமை இன்பங்கள்) பலவற்றையும் உவர்க்கின்ற நன்மையாகிய மனசிலே (கிளர்ந்த) இனிமையாகி (இந்த மோக்ஷ) இச்சையினாலே சிவஞானம் இப்போதே வாய்க்க (அதுகாரணமாக முத்தியைப்) பெறுவாய்' என்கின்றார். இப்பொருளும், 'வேண்ட முழுதும் தருவோய் நீ' என்ற மணிவாசகக் கூற்றும் ஒரே பொருளையே கூறுகின்றன. இதனாற் **குறித்த 232ம்** பாடற் பொருளை ஊகித்து அறியலாம். அது:

1) 36 மாயாதத்துவங்களை அறியும் பாசஞானமும், தானே பிரமமென்று அறியும் இடைநிலைப் பசுஞானமும் சிவத்திருவினை அடையும் நெறிகளிற் படிமுறைகளாய் உள்ளனவாதலின் அவற்றை விட்டு, 2) மேலும் (முற் சிவபுண்ணிய வசத்தாலே) குரு வாய்க்கப்பெறின் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' யென்றவாறும், 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' என்றவாறும் அவன் காட்டிய வழியிற் சிவனை அவன் வீற்றிருக்கும் தமது தலையுச்சிமேல் யோகத்தால் அடைந்து, 3) அத்தகைய கிரியா யோகநெறி கைகூடவே, 'கண்களிரண்டு மவன் கழல் கண்டு களிப்பன வாகாதே' யென்ற மணிவாசகர்நிலை கைகூடி கரும நியமங்களைக் கைவிட்டு, ஞானத்தால் அடையப்போகும் துரியாதீதமெனும் நிலைக்கு முன்னதாய, துரியசமாதியை தூய அந்தணர் அடைவர் என்பதாம்.

இ) இத்தகு விளக்கங்களை யெல்லாம் மறைமுகமாக உள்ளடக்கிய திருமூலர் இவற்றைச் சிந்தித்து நடவாத அந்தணரின் நூலும் சிகையும், அரச குற்றமாகக் கருதப்பட்டு, அவ்வரசனால் தகுதி வாய்ந்த பிராமணோத்தமர்கள் மூலம் அறுக்கப்பட வேண்டிய தென 246ம் பாடலாற் தருகின்றார். அதை அந்நூலிற் காண்க.

7.1.2. **கிரியை. கிரியாயோகமாகி ஞானம் பயக்கவேண்டும்.** (மேலதன் தொடர்). சைவசித்தாந்த ஞானவிளக்கம் ஆதிசைவருக்கும், வைதிகசைவருக்கும், சிவப்பிராமணருக்கும் உரியதாதல் அவசியம். காரணம் தீக்கைப்பெருமை என்றதன் முதற் பந்தியிலும் 7.1.1 இலும் உண்டு. 'கிரியையென மருவுவன யாவும் ஞானத்தின் நிமித்தம்'என உமாபதிசிவாசாரியார் சிவப்பிரகாசத்திற் கூறியுள்ளார். பிரதானமாக அகப்பூசையில் ஒருவர் பிராணாயாமம், சிவோகம்பாவனை என்பவற்றை முறையாக ஆற்றஆற்ற, அதில் அவர் ஊறித் திளைக்கையில் புறப்பூசை இன்றியே அது உடலிற்செறிந்து யோகமாகி, யோக நிட்டையுமாகும். ஈற்றில் இப்பிறப்பிலோ அன்றி மறுபிறப்பிலோ அவர் ஞானநெறி நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானநிட்டை கைகூட முத்தியடைவர். இவைபற்றி துகளறுபோதம் தசகாரியங்களை முப்பது படிகள்- அவதரங்களாக்கி விளக்குகின்றது.

ஞானமுயற்சியும் உணர்வுமின்றி கிரியையைத் தொழிலாக மட்டும் கொள்வோர் தொகை அதிகரிப்பதனால் ஓதுவித்தல் எனும் ஞானோபதேசம் செய்யுங் கடமையும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. காரணம் சித்தாந்த-ஞான சாத்திரங்களைத், தமிழ் என்பதனாலோ என்னவோ, படிக்கும் பிராமணர் இல்லையெனும்படி அரிதாகி வருகின்றனர். வடமொழியிலும் ரௌரவ ஆகமத்தில் இதனைப் பயிலலாம். 'அவிழ்க் கின்ற வாறும்' 'தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும் உணர்த்தும் அவனை உணரலுமாமே.' (திருமந்திரம்). 'ஆரியன் காண் தமிழன் காண்'- அப்பர். கிரியா மந்திரங்களை இறைவன் ஆக்கிய சமஸ்கிருதத்திலும், சித்தாந்த விளக்கங்களைத் தமிழிலுள்ள சிவஞானபோதம் முதலான மெய்கண்ட சாத்திரங்களிலும், திருமந்திரம் உள்ளிட்ட திருமுறைகளிலும் அறியலாம். தமிழ்வேதம் எனும், திருமுறைகளையும் தமிழாகமம் எனும் சித்தாந்த சாத்திரங்களையும் யாத்தோர் யாவரும் சிவனை முழுமுதலாகவும் மற்றும் சிவக்குடும்பத்தை, அரியர்த்தர், அர்த்தநாரீஸ்வரர் உள்ளிட்ட 25 மஹேஸ்வரமூர்த்தம் முதலானவற்றை சிவனின் தடத்த வடிவாகவுமே கொண்டதால், முழு முதலாய சிவனையே பல்வேறு சொருப, தடத்த வடிவிற் கண்டனர். சிவானுபூதிமான்களாய இவர்களிலும் அறுபத்துமூவரிலும் பிராமணர் மிகச் செறிந்துள்ளனரென்பதை உணரவும்.

ஆதலின் தயக்கமெதுவும் இன்றி கிரியாவான்களாகிய பிராமணர், அருட்செல்வமே செல்வமெனக் கருதிவாழ்ந்த தம் முன்னோர்வழி தவறாது, அவர்களால் இயற்றப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட தமிழாகமங்களையும் தமிழ் வேதங்களையும் தாமும் போற்றி தங் கருமங்களை உபாயமாகவன்றி உண்மைச் சிவபுண்ணியம் ஆக்குதல் வேண்டும். இன்றுங்கூட தமதாலயத்திற்கு வருவோரை அன்பு வார்த்தைகளால் வரவேற்று, ஆசிவழங்கி, பொருள் எதிர்பார்ப்புக ளெதுவுமின்றி, 'அர்ச்சனை பாட்டேயாகும்' என்றபடி பெயர் நட்சத்திரங் கேட்டு, தத்தமது பாடல்பெற்ற ஆலங்களின் திருமுறைகளை ஓதி அதனையே அர்ச்சனை ஆக்குகின்றனர். (அர்ச்சித்தல் - இறைவனை எம் மொழியிலாயினும் போற்றுதல்). இது திருக்கடவூர் மயானத்திற் கண்டது. இம்முறையால் மனங்குளிர்ந்தோர் அத்தகு அர்ச்சகர்குப் பொருளுதவி செய்தல் கூறாது புரியவேண்டியது. ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன அந்தணர் காரியங்கள். இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈதல், ஏற்றல் என்பன நிகழ்ந்து, அது, இருவழியான அன்னியோனியத் தொடர்பாகி அன்புநெறி துலக்கிற்று. 'சிட்டை' மூலமாக அர்ச்சனை செய்வதில் அன்புவழி கிடையாதுபோகவே அது தொழிலாகின்றது. வழங்கிய பணமும், பிரசாதப் பெறுமதியும் அருட்பயனின்றிப் பொருட்பயனாகின்றன. இன்றுபோலன்றும் இத்தகு காமியப்பலனை முன்னிட்டு, வேதக்கிரியைகளாகிய வேள்விகளை வேள்விப் பல னருந்த அந்தணர் ஆற்றினர். சிவனைமதியாது, யாகத்தலைவனாக்காது, விட்டுணுவை முன்நிறுத்தி ஆற்றிய தக்கயாகத்தில், வீரபத்திரராலும் காளியினாலும் அடிபட்ட சரித்திரத்தையும் மறந்துள்ளனர் பலர். வேதத்தின் ஞானகாண்டம் மறக்கப்பட்ட காரணமானதே புத்தரின் வருகையென சரித்திர அறிஞர் கூறுவர். அதன்பின்னர் ஞானகாண்டம் புத்துயிர்பெற்று, பாரதத்தின் நாலாபாகங்களிலும் பல் வேறுவகையான குருமடங்களைத் தோற்றுவித்தன. (7.18)

'நந்தி அருள் பெற்ற நாதரை நாடின் நந்திகள் நால்வர்
'நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப் பொருள் கைக் கொண்டு
நால்வரும் யான் பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னர்களே' - திருமந்திரம்.

அன்பே சிவமாய் அமர்ந்திருக்காது, நாராயணனை மனத்திலுன்னி, ஆன்மார்த்த சிவபூசையுமின்றிப் பரார்த்தமாகப் புறத்திற் செய்வதாலேற்படும் மனவாக்குக்காய முரண்பாட்டால், கிரியைகள் செய்பவற்கோ அன்றிச் செய்விப்பவர்க்கோ உரியபலனாய கிரியாயோகத்தையோ, அதன்காரணமாக இனியடையப்போகும் ஞானத்தையோ தருவதில்லை. சிவோகம்பாவனை இன்றி கிரியைகளாற்றுவது பிரயோசனமற்றது.

**குறிப்பு:-** கும்பாபிடேகங்களைப் போரின் முன்னும், பின்னும் பெரும் பொருட்செலவில் ஆற்றிய கோவில்களும் சூழலும் கண்டபடி குண்டடிபட்டதும் கனவல்ல மெய்யே. 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகலான்' குறள். அறமென்பது அழுக்காறு, அவா-வேட்கை, வெகுளி, இன்னாச்சொல் அற்று ஆற்றப்படும் குலதர்மங்கள், கடமைகள். 'வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே' என்பதாலும், 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என்பதாலும், வேதம், ஆகமம் இரண்டையும் அனுசரிப்போர் மெய்ச்சைவர். இவ்விரு நூல்களும் இறைவனாலேயே ஆக்கப்பட்டிருக்கினும் அவ்வப்போது வரும் சிற்சில ஞானக் காட்சிகளைக் கொண்ட மநுஸ்மிருதி முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்மிருதிகளையே அதிகமானோர் (ஸ்மார்த்தர்) கைக்கொண்டு சிவாலயங்களிலும் கிரியைகள் ஆற்றுகின்றனர். பலன் மேற்கண்டவாறாம். மெய்ப்பொருளாய சிவாலயத்தருகில் வானளாவிய அநுமார் கோவில் கட்டி அதிற் தம் மகனையே தானமாக்கிய உத்தம குருமாரும் உள்ளனர். சரித்திரங்கள் புராணகாலந் தொட்டே மீள மீள வருகின்றதால் பொய் மெய்யாகாது அழிவைத்தரும். 'பொருள் சிவமே'. தக்ஷிணாமூர்த்தியார் கையிலுள்ள சிவஞானபோதத்தை மற்றும் ஆகமங்களைப் புறக்கணித்தல் சிவத்துரோகம். 'அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்' எனப் புகழ்ந்தும் அவர்களை மதியாது துன்புறுத்துவோரை இழித்து அத்தகையோர் ஞாளிகளாகப் பிறந்துழல்வர் என்றுங் கூறிய திருமூலர், ஒழுக்கந்தவறிய அப்பிராமணரை நோக்கி,

'சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரனுண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே' என்கின்றார்.


சம்புவெனும் சிவபட்சமல்லாத யோனிவாய்ப்படும் அணுபட்சக் கீழ்நிலைத் தெய்வங்களுக்கும் சிவாகம முறைப்படி கிரியைகளாற்றி காமியபலன் பெறும்நிலை அதிகரித்தே செல்வதால் சைவம் தேய்கிறது.

சைவம் வலியுறுத்தும் உயிர்க்குறுதியான பிறவாப் பெருநிலையை சுமார்த்தர்கள் சிவனிடம் வேண்டாததால் அவர்களிடம் ஞானோபதேசம் பெறுவதெங்ஙனம்?. ஞானம் வீட்டுநெறி காட்டும் மெய்ஞ்ஞானம். அது பக்குவர்க்கு சிவனால் காட்டக்கண்டு கொள்ளப்படுவதென மேலே கண்டோம். பிறவாப் பெருநிதியாய சிவனே பிறவாநிலையெனும் வீடுபேறு அளிப்பான். சில சிவப்பிராமணருங் கூட சாமானியருக்கு மெய்ஞ்ஞான விளக்கம் ஏன்? எனத் தமது நூலில் எழுதுதல் தவறு. முதலில் அவர்கள் தத்தம் சமயத்தகுதி நில்லாமையைத் தம்முட் கண்டகற்றிச் சமூகம் போற்றும் குருத்துவம் காக்கவேண்டும். சாமானியரிலும் அறவோர் உளதால் அவரும் அந்தணராந் தகுதியினரே. திருநாளைப்போவாரின் அக்கினிப் பிரவேசத்தால் குலஒழுக்கங் காத்த சிவன் பெரியபுராணத்திற் பல் குலத்தினர்க்கும் அருளியுள்ளான். அன்பு வடிவான சைவத்தில் கட்டுப்பாடேது. 'அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்'. பிராமணராய சிவகோசரியாருக்கும் வேடராய கண்ணப்பருக்கும் காட்சி கொடுத்த சிவன் மிருகங்களின் பூசையினையும் ஏற்றருளுவார். தர்மகர்த்தாக்கள், சரியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டினர் போன்றோரைத் தெரிந்து, தீட்சைவழங்கி, அறவோராக்கலாம். தமக்கு அவரை உதவியாளராக்கி, அவ்வப்போது குருசீடமுறையில் சித்தாந்தஞானவுண்மைகளைப் போதித்தால் சைவசமூகம் நலம்பெறும். இதனை அறவோராய அந்தணர் தாம் செயலிற்காட்டி, சாமானியரையும் முன்னிலைக்குக் கொணரல் கடன். இன்றேல், அவர்களுமே ஞானவான்களாயிராது தொழிலாளிகளாய் மதிக்கப்படாது போவதால் சீரழிவான பத்திரிகைச் செய்திகள் மேலும் பெருகும்.





7.1.3. **மெய்ஞ்ஞானமே முத்திக்கு வழி:** (அத்.3பார்க்க) சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்திலும் மீளமீளக்கூறிய பிரம விட்டுணுக்களாலும் அடிமுடிதேடிக் காணாச் சிவனது மேன்மை மறக்கப்பட்டுள்ளது. ' சம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு திருத் தொண்டு பரவும்' மரபுபேணி எழுதப்படுமிவை கூறியது கூறலாகாது. ஞானமாவது யாதென்பதனை, மிகவிரிவாக சித்தாந்த சாத்திரங்கள், பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என வகைப்படுத்தி விளக்குகின்றன. அனுபவஞானத்திற்கு நூலாய்வு ஞானமும் வேண்டப்படுவதேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாவது பாசஞானம், சொற்பகுதி ஞானம்.** இது வேதாகமங்கள், புராணங்கள், திருமுறைகள் ஆகிய நூல்கள் கொண்டு, வித்யாகுரு மூலம் அறிதல். **இரண்டாவது** இதன் ஆய்வாலேற்படும் தத்துவ ஆராய்வு **பொருட்பகுதி ஞானம்.** இது பாசங்களான 36 மாயாதத்துவங்களை, 'மண் முதற் சிவம தீறாம் வடிவு காண் பதுவே ரூபம்' என்ற 'உண்மைநெறி' நூற்படி காணல். முதலிற் தூலமாகக்காணும் மண்முதலாகக் கொண்டு, மேலும் படிமுறையே நூல்வழித்தாய்ச் சென்று. ஈற்றில் சூக்குமமாயுள்ள சிவம் ஈறாகக் காணல். இதுவே **தத்துவரூபம்.** இந்நிகழ்வு, பாச-மாயாக் கருவிகளான மெய், வாய் முதலான ஞானேந்திரியங்கள் முலம் நிகழும். இக்கருவிகள் தமக்கென அறிவற்றனவாய், விடயங்களை ஆன்மபோதத்துடன் கூடிச் சுட்டி ஒவ்வொன்றாக அறிவிப்பன. ஆதலின் பாசஞானம் எனும் அவ்வறிவு மாயைபோல் மாறுந் தரத்ததாய் சடமாயழியும் என்றுணர்தல். முதல்வன் குருவாய் வந்து சடமாய இவை அழிந்துபோகும் என்றுணர்த்தியதால். இது நானல்ல, இது நானல்ல என ஒவ்வொன்றாய் நிராகரித்தும், மேற் தத்துவமான சிவத்தோடு ஒப்பிடும்போது தான் சிற்றறிவினன் என்றுணர்ந்து தன்னையே நிந்தித்தும் (தூடணஞ் செய்தும்) அவற்றினின்றும் நீங்கி, விஞ்ஞான கலத்துவம் பிறந்து, (சுத்தத்திற்) சகலதரிசனமாய் நிற்றல் **தத்துவ தரிசனம்.** இவை பாசஞானத்தில் அடக்கம். (அத்.3)

ஆகவே, சடக்கருவிகளால் அளப்பன சடமாய் அழியும் எனத் திருவருளாற் கண்டு நீங்கிய ஆன்மா சுத்தத்திற் கேவலாதீத மெனும் அந்நிலையிற் பெற்ற ஞானத்தைத் தானெனக் காணல் **ஆன்மரூபம்.** அதாவது. இந்நிலையில் ஆன்மா, தன் ஆணவமறைப்பால், இந் நிலைதானும் இறைவனையின்றி நிகழாதென்னாது, 'யானே பிரமம்' எனத், தானே மாயையின் மறைப்பை அறிந்தேன் என்றெண்ணி இறுமாப்புக் கொள்கின்றது. இவ்வெண்ணம் இடைப்பட்ட பசுஞானம். இதனால் பிரமமென்றொரு வேறுபொருளில்லை எனவும் போதிக்கின்றது. சுருதி யுக்தி யனுபவங்களால் அங்கீகரிக்கப்பட்ட பதிபசு பாசம் என்ற முப்பொருள் உண்மையை ஏற்காது அவையாவும் ஒன்றேயென்பது சங்கரமதத்தினரின் ஏகான்மவாதம். அங்ஙனமாயின் பதி, பசு, பாசமெனும் ஆகமப் பொருளுண்மையை ஸ்தம்பபூசையால் நிறுவி, அதனடிப்படையில் மஹோற்சவ - திருவிழாக்காலத்தில் பஞ்ச கிருத்தியத்தை ஆலயங்களில் நிகழ்த்துவிக்கும் கிரியைகளெல்லாம் கருத்தற்றனவாகுமேயென ஏகான்மவாதம்பேசும் சங்கரதாசர்கள் சிந்திக்காதது மட்டுமல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் சிவபூசையும் ஆற்றாது, 'ஓம்' என்பதற்குத் தமது அடையாகக் 'ஹரி' அடைகொடுத்து ஹரி ஓம் எனப் பிழைப்பிற்காகத் தாழுமங்கே கிரியாவான்களாகச் செயற்படு கின்றனர். சிவநிந்தையாய இது எவ்வகையில் அறமாகலாம்.? இதுவா குலதர்மம்? இதுவா மநுதர்மம்

'வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம்மெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாமே' திருமந்திரம் பா 240

'மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே' பா 241

'ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே' பா 242

வேதத்தோடு ஆகமத்தையும் பிரமாணமாகக் கொள்பவர்கள் இதனை உணர்வார்கள். 1) **பதி** ஒன்று, அதுவே பரம். அது சத்தாக (என்றும் உள்பொருளாக), சித்தாக (அறிவு மயமானதாக), என்றும் ஆனந்தமாக சச்சிதானந்தம் என விளங்குகின்றது. 2). **பசுக்கள்** பல. அவை சத்தாயும் (ஆனால் மாறிமாறி உடலெடுத்தும்), சித்தாயும் (கருவி கரணத்தோடு அல்லது வேறொன்றினைச் சார்ந்து அறிவிக்க அறிவதாயும்) சதசத்தாய் இருப்பதால் பதிபோலன்றி அவ்வியல்புகள் சார்ந்ததன் வண்ணமாயுள்ளன. மேலும் பிறவிதொறும் பெரிதும் துன்பத்தையேயன்றி இறைபோல் நிரந்தர ஆனந்தமயமின்றியிருப்பன. 3) **பாசம்** சத்தாயிருப்பினும் தோன்றி யொடுங்கி மாற்றமுறுவது. சடமாதலின் அவற்றிற்கு அறிவோ இன்பமோ இல்லை. இவை அவசியந் தெரியவெண்டிய சித்தாந்த, முப்பொருளுண்மைகள். இவ்வுண்மைகளை உணர்தல், உணர்த்துதல் சிவதருமம். அவரே அறவோர். இவ்வாறுணர்ந்த பசுக்கள், முற்செய் சரியா கிரியாயோகமெனும் சிவபுண்ணியப்பலனால் பக்குவ காலத்திற் தம் மலமறைப்பினை அறிந்து அதனைக் குருவால் தீக்கை பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கி சிவபுண்ணியமான ஞானவழி நின்று முத்தியடைவர். முத்தியிலும், 'யாண்டும் தொழும்பே யாம்' என்றபடி சிவஅன்புக்கே பாத்திரமாவதன்றி சிவசமமாக ஐந்தொழிற்குத் தாம் அதிகாரமற்றவர்கள் எனத் தெரிந்தவர்கள். **சிவஞானம் எனும் பதிகாட்டக் காணும் பதிஞானம் - மெய்ஞ்ஞானம் ஆதலின் மூன்றாவதான பதிஞானமே முத்திக்குவழி என்பது தெளிவாகும்.**

**பசுஞானத்தின் தொடராக,** ஆன்மரூபத்தைக் கண்டு தானே பிரமமென நின்ற பசுஞானம் பெற்ற ஆன்மா தான்கண்ட ஞானத்திற்கே (ஞானம்-திருவருள்) செயலெனக் கண்டு 'என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே நின்செயலே யென் றுணரப்பெற்றேன்' எனப் பட்டினத்தார் பாடியவாறு, தன் செயலின்றித் தானும் அந்த ஞானமுமாய் (பராசத்தியோடு அத்துவிதமாய்) நிற்றல் **ஆன்மசுத்தி.** அந்நிலையில் ஆன்மாவின் போதப்பதைப்புக் கெட்டு, தான் தோன்றாது, பரமானந்தப் பொருளோடு கூடி அதுவாய்விடல் **ஆன்ம தரிசனம்.** இவை பாசஞானமும் படிமுறையில் அதன் நன்மையான விரிவுமாம். இம் முன்னேற்றப் பாதையில் பதிஞானந்தரும் சிவரூபமும் ஒன்றாகவே நிகழும். அது, ' அருளுரு உயிர்க் கென்றே ஆக்கினன் அசிந்தன்' என்றவாறு, பரமானந்தப் பொருளெனக் கண்ட பரமேஸ்வரன் வடிவு பரையென்று, உயிர்க்குயிராய்த் திருவடிஞானமாய் நின்று அறிவிப்பதை 'அவனரு ளாலே அவன் தாள் வணங்கி' யெனத் திருவருளே இடமாக நின்று **காணுதல் சிவரூபம்.** மேலும் காட்டக்காணும் பதிஞானத்தின் அடுத்தடுத்த நிலைகள் **சிவதரிசனம், சிவயோகம், சிவபோக** மென்பதைத் தசகாரியத்திற் காணலாம். (3, 7.3, .4, .10, .11 பார்).

இவ்வாற்றால் வேதாகமத்தையின்றி, ஸ்மிருதியைமட்டும் கைக்கொள்ளும் ஸ்மார்த்தர்களும் பிறரும் சங்கரமடத்தில் ஆச்சாரியாபிடேகம் பெற்று சைவாகம விதிப்படி அமைந்த கோவில்களில் பூசை புரிவதே மனச்சாட்சிக்கு விரோதம். அப்பாவிகளான தர்மகர்த்தாக்களும், உபயகாரரும் மற்றும் ஆயிரக்கணக்கிற் செலவுசெய்து கிரியைகளை நிகழ்த்துவிக்கும் செல்வந்தர்களும் பிராமணரின் இந்த வேறுபாட்டை யுணராது சிவப்பிராமணர் அல்லாதாரிடம் சிவாலயக் கிரியைகளை ஒப்புவித்து ஏமாற்றமடைகின்றனர். நெஞ்சில் 'ஹரி ஓம் நமோ நாராயணா'வும், வாயில் 'ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவாய நம' வும் கூறினால் அச்செயல் தன் ஒருமைப்பாடிழந்து வலுவற்றதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபாக 'ஓம்' எனத் தொடங்கும் மந்திரங்கள் 'ஹரி ஓம் ' என ஆகியது எவ்வாறு? திரிகரணசுத்தி எனும் மன, வாக்கு, காய ஒருமைப்பாடின்றிச் செய்வது எதுவும் சித்தியின்றித் தீயபலனளிக்கும் எனக்கண்டோம். மந்திரங்கள் இறைவனால் ஆக்கப்பட்டு நினைத்ததைத் தருபவையாதலின் எமது எண்ணமும் செயலும் ஆன்மார்த்த சிவபூசையினால் சமமாதல் அவசியமாம். இந்நிலையிலேயே பரார்த்தம் செய்க.

7.1.4.**சிவபரத்துவம் - பிரமோபதேசம் :** தன் மைந்தன் தக்கனின் மும்மூர்த்திகள் பற்றிய சந்தேகம் நீங்க பிரமா கூறுகின்றார் :- ஒரு பொருளைப் புகழவேண்டில் அதனினும் உயர்வானதுடன் ஒத்ததாக - உபசாரமாகக் கூறுதல் நூல்வழக்காம். அதேபோல **சிவபெருமான் அல்லாத யாவருக்கும் உயர்வு கூறுதல் உபசாரமே யன்றி உண்மை யல்ல.** அட்டமூர்த்தங்களாய பஞ்சபூதம் சூரிய சந்திரர் ஆன்மா என்பவற்றில் ஆன்மா சிறப்புடையது. அது பளிங்குபோற் சார்ந்ததன் வண்ணமாவதனால் சிவத்தைச்சார்ந்து சிவ வண்ணமென நிற்கும். அங்ஙனம் சிவபரம்பொருளாகிய பிரமத்திற்கு மூர்த்தமாகும் போது தானும் பிரமவண்ணமாயிருப்பது அதன் தனிச்சிறப்பாம். ஆன்மா தனக்கென வண்ணமின்றி பிரமச்சார்பிற் பிரமவண்ணமாய் இருப்பதுபற்றி உபநிடதங்கள் ஆன்மாவைப் பிரமமென்று மிகுத்துரைக்கும். அது உபசாரம். இதனை அறியாது ஆன்மாவைப் பிரமம் என்றல் மகாகுற்றம்.

1) யாதொரு பொருளை யாவ ரிறைஞ்சினு மதுபோய் முக்க
ணாதியை யடையு மம்மா வா(ஆ)ங்கது போலத் தொல்லை
வேதம துரைக்க நின்ற வியன் புகழனைத்து மேலா
நாதனை யணுகு மெல்லா நதிகளும் கடல்சென் றென்ன.
(இறைஞ்சுதல் - வணங்குதல், வியன் - மேலான)-கந்தபுராணம்.

2) நம்மையும் பரமென் றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்,
வெம்மைகொள் நெஞ்சர் தீரா விழுமவெந் நிரயம் வீழ்வர்,
தம்மையஃ தெடுத்தல் செய்யா சமமெனப் புகல்கிற் போர்கள்,
வெம்மையாந் துயர மென்னு மி(இ)ருங்கடற் படுப்ப ரன்றே -
(விழுமவெந் நிரயம்- கொடிய நரகம்). ஆதலின் எம்மை எவ்வாறு வழிபடவேண்டும் எனில்,

3) 'கானுறு புலித்தோ லாடைக் கண்ணுதற் கடவுட் கன்ப,
ரானவ ரென்று ம(அ)ன்னாற் கடித்தொழில் புரிந்து வாழும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவ ரென்று மெம்மை வழுத்தினர்க் கருள்வொ மல்லா,
வே(ஏ)னையர் தம்மைத் தெவ்வென் றெண்ணியே இருத்தும் நாமே'
(தெவ்-பகை)

4) 'பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்,
விரவிய துயர்க் கீறெய்தி வீடுபே றடையு மென்ற(ல்),
லுருவமில் விசும்பின் றோலை யுரித்துடுப் பதற்கொப் பென்றெ,
பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ.'
விரவியதுயர்- நெருங்கிவரும் பிறவித்துன்பம், பெருமறை- வேதம்

7.1.5. **சிவப்பிராமணீயம் காத்தல் :** (7.1ன் முன் நான்குகூறுகளிற் கூறியவற்றோடு தொடர்புறும் மேலுஞ்சில கருத்துக்கள்.) பரசிவ உணர்வு உந்த, கொடியேற்றி திருவிழாச் செய்யும் எல்லாக் குருக்கள்மாரும் சிவப்பிராமணர்களாதல் வேண்டும். அவர்கள் ஆகமம் நுதலும் சைவசித்தாந்தத்தையும் அறிந்து அதனை ஏற்றவர்களாகவும் அவ்வுண்மைகளை உபதேசிப்பவர்களாகவும் இருத்தல்வேண்டும். பதி பசு பாச மெனும் மூன்றும் பொருட்டன்மையால் வேறானவை பசுவினது முன்செய் தவத்தால், பதி மானிடக் குருவாகிவந்து அதனையணுகி, தீட்சையாற்றி, ஞானமளித்து, ஆட்கொள்ளும் போது, பசு தனது பாசமகன்று சிவனைச் சார்ந்து முத்தியின்பம் அனுபவிக்கும் எனும் திருமந்திரப் பா:
'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்,
பதியினைப் போற்பசு பாசம் அனாதி,
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்,
பதியணு கிற்பசு பாசநில் லாவே' (இது குறிப்பது கொடிப்பூசை, கொடிக்கவி படித்தறிக)

முத்தியிலும் பசுத்துவம் (கட்டு) நீங்கிய ஆன்மா சிவனின் எண்குணங்களையும் பெற்றுச், சிவானுபவமெனும் இன்பம் அனுபவிப்பதற்கே உரித்தாதலன்றிச் சிவனைப்போலப் பஞ்ச கிருத்தியங்களைச் செய்ய உரித்துடையதன்று என ஏலவே கூறியவைபோன்ற பல சித்தாந்தக் கருத்துக்களைப் பிராமணருள்ளிட்ட சைவராவோர் அறியவேண்டும். பதி பசு பாசம் மூன்றும் பொருட்டன்மையால் வேறானவை என்பதையும் அவ்வடிப்படையில் மேற்கூறியவற்றையும் மறுக்கும் சங்கரமதத்தையோ, அவர் மடத்தினரைத் தீட்சாகுருவாகக் கொள்வதையோ, தவிர்த்து, **தத்தமது பாரம்பரிய சிவகோத்திரப் பிராமணரிடமே தீட்சை, ஆசாரிய அபிடேகம் பெறவேண்டும்.** போலிவேடத்துடன் அவர்களாற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்துரோக வழிபாட்டு முறைகளை சைவத்திருக்கோவில்களிலும் புகுத்துவதை உன்னியுணர்ந்து விலக்கவேண்டும். நால்வர், நாவலர் வழியே நம்வழி. திருக்கேதீஸ்வரத்தில் குருகுலக் கல்வி சேர் கந்தையா வைத்தியநாதனால் ஏற்படுத்தப்பட்டாலும், பின்னைய. குறிப்பாக நாட்டுச் சீரழிவுகளால் அச்செயற்பாடுகள் மங்கின. அவை உரியவாறு செயற்படும் வரையாகுதல் திருவாவடுதுறை, மற்றும் தருமபுர சைவாதீனங்களுக்கு பிராமணர் தம் சிறார்களை வைதிகசைவ, சித்தாந்த பயிற்சிக்கும், மற்றும் ஆச்சார்யாபிடேகம் முதலான சிவாகம கைங்கரியங்களுக்கும் அனுப்பவேண்டும். இன்றைய அரச, மற்றும் சமயஞ்சார் அமைப்புகளின் உதவியை குழுக்களாக, இன்றேல், ஸ்மார்த்தமற்ற பிராமண அமைப்புகளினூடாக நாடலாம். இன்று அதற்காய வாய்ப்பு அதிகமுண்டு. சிவபூசையாற்றல், சிவாக்கினி வளர்த்தல் மிகப்பிரதான கடமை. சந்தியாவந்தனம், சிவபூசை என்பன இன்றி நீரருந்துதல் ஏதோ(?) ஒன்றைக் குடித்ததற்குச் சமனென ஆகமங்கூறும். 'இந்துக் கோவில்கள்' என அழைப்பினும் அவை சிவக்குடும்பத்திற்கு உரியனவே. ஆதலின், மூலவர் சிவம் அல்லாவிடினும் அது சிவத்தின் தடத்தமே அல்லது சிவமூர்த்தமேயென உள்மனத்தில் இருத்திப் பிறர்பொருட்டாற்றும் பரார்த்தபூசை, சிவதீட்சை என்பனவற்றை ஆற்றுதலும் உயிரினும் மேலான வைதிகசைவ ஒழுக்கங் காத்தலும் சிவப்பிராமணியங் காத்தலாம். நாலிறுதி ஒழிபியலில் மேலுங் காண்க.

அடக்கமுடைமை கூறியபின் வருணங்காக்கும் **ஒழுக்கமுடைமை** என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறுமாறு:- பா3, 'ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க. மிழிந்த பிறப்பாய் விடும்.' வருணத்தில் இழிந்தோரும் ஒழுக்கத்தால் உயர்ந்தோராயும், உயர்குடிப் பிறந்தும் தங்குல வொழுக்கங் கெடில் இழிந்தோராயும் கருதப்படுவாராம். உள் வழிப்படுங் குணத்தினும் இல் வழிப்படுங் குற்றம் பெரிதாகும். ஆசாரத்தால் யார்க்கும் மேம்பாடும், அது இல்வழிக் கீழ்மையுமாம். அடுத்த பா 4, 'மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப் பொழுக்கங் குன்றக் கெடும்' - வருணங் கெடாதிருக்கும்வரை வேதத்தை மறப்பினும் ஓதிக் கொள்ளலாம். ஆனால் வருண ஒழுக்கந்தவறின் அவரின் வருணமே இழிவாகும், வேதமோதலும் இலவாம். ஆதலின் 'ஒழுக்கமே உயர்குலம்.'

'நன்றும் தீதும் பிறர்தர வாரா' என்றபடி, நாமே நம் சமயத்தினை விளங்கிக் கொள்ளாத பரதந்திரர்களாகச் சைவத்திற்கு அன்னியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகளுடன் எம்மைப் பிணித்துப் பந்திக்கப் பட்டுள்ளதை ஆழ அகல ஊன்றி உணரிற் புரியும். எமது பாரம்பரிய சமயக் கொள்கைகளை எந்த அரசும் அவமதிக்கவோ, அதைக் கைக்கொள்ள அனுமதி மறுக்கவோ இல்லை. நாமே படுகுழியில் வீழ்ந்துகொண்டு இருக்கின்றோம். இதனை நாவலர் முதற்கொண்டு பண்டிதர் மு. கந்தையா அவர்கள் ஈறாக சொல்லியும், எழுதியும் வந்துள்ளதை உலகறியும். நாம் கண்மூடிப் பால் குடிக்கும் பூனைபோல இருக்கின்றோம். பிறசமயத்திற் போலன்றி நம்மிடம் குறிப்பாக ஆலய கைங்கரியங்கள் பற்றிய கட்டுப்பாடு இல்லை.

இந்த இழிநிலையைத் தெரிந்தும் தெரியாததுபோல அரசஆதரவுக்கும், அறிவுரைக்கும் (?), ஆசிக்கும் (?) கடந்த காலங்களையும் உணராது சில அந்தணர் பத்திரிகை விளம்பரங்களையுந் தேடுகின்றனர். அரசியலிலும் தலைகாட்டத் துடிக்கின்றனர். அதனாற் தனிப்பட்ட தம் அப்பிராமண வாழ்விற்கும் பூச்சடிக்கின்றனர். அந்தணர் புராணங்களை, திருமுறைகளை, சித்தாந்தத்தை, ஏன் ஆகமங்களைக்கூட அறியாது இருக்கலாம். ஆனால் அவற்றையறிந்த நாவலர் பரம்பரையினர் ஊர்தோறுமுள்ளனர். அவர்களுக்கு அந்தணரின் இக்குறைபாடுகள் தெரியினும் பலகாரணங்களுக்காக அமைதியாயுள்ளனர். ஆயினும், வீரபத்திரதண்டம் இனியும் இராது என்றில்லை. பொதுவில் **பாரதமும் இலங்கையும் அநாதியான சிவபூமியேயாதலாலும், வியாக்கிரர், பதஞ்சலி, இராவணனாதியோர் சிவபூசைக்காரர் என்பதாலும் இடைக்கால மாயமறைப்புகளில் மயக்குறாது, சிவப்பிராமணர் மட்டுமல்ல, அந்தணர், வைதிகர், அர்சகர், பார்ப்பனர் என அழைக்கப்படும் யாவரும் சிவத்துரோகமின்றி சிவாயநம வென மனத்தில் இருத்தி சிவோகம் பாவனையுடன் சிவபூசை ஆற்றவேண்டும்.** (அர்ச்சுனன், துரோணர், இராமர் போன்றோர் முறையே பாரதத்திலும் இராமாயணத்திலும் சிவபூசையாற்றினர்.) பரார்த்தமாகவும் தம்மை நம்பி வருவோர்க்கு சிவானுக்கிரகம் பண்ண வழிகாட்ட வேண்டும். அண்ணாமலை தோன்றிய வரலாறு பிரம விட்டுணுக்களாலும் அறியவொண்ணாச் சிவபரத்துவ மேன்மைச் சிறப்பாம் என்பதனையுணர, அண்ணாமலையானை நினைந்து, சிவபூசையாற்றிய விட்டுணுவுக்குப் பூசைசெய்ய நேரினும், அவரைச் சிவனடியானெனவே கொண்டும், இராமேஸ்வரத்தை மனதிற் கொண்டும் தூபதீபங் காட்டுதலே முறை. பிரமவிட்டுணு பதங்கள், அவர்களுக்குச் சிவனாலேயே தரப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம்:- தக்கனுக்காய பிரம உபதேசம். விட்டுணுவை மனதிலிருத்தி சிவாலயபூசை செய்யக்கூடாது. காரணம், உலோக பேறுகளைத் தரும் மாயவன் இத்தகையோராற் தனக்கும் ஆபத்தெனக் கவல்கின்ற பாடல் பின்னர் வரும்.

**கந்தபுராண தக்ககாண்டம் - உபதேசப்படலம் :-** மகனாய தக்கனுக்கு உரைத்த பிரமோபதேசத்திற் சில : 1) பா 25 : பரசிவ உணர்ச்சியின்றி வீடுபேறு சாலாது என்றது.. 2) பா 26, ஏலவே ஒருவாறேனும் உணர்த்திய சிவபரம்பொருள் பற்றிக் கூறிய வேத உண்மைகளை மறந்தாய் என்றது. 3) பா 27, கண்ணனை, பிரமாவாகிய என்னை, இந்திர னாதியோரைப் புகழ்ந்த வேதம் 'அரன் தனைத் துதித்ததே போல் ஒருரை (எம்மைப் பற்றியும்) விளம்பிற் றுண்டோ' அவ்வாறு பேசியிருப்பினும் அவை வெறும் முகமன்-உபசார வார்த்தையேயென இவ்வுலகேயறியும். இவ்வாறு, வேதம் முதலிலும் முடிவிலும் பிரம விட்டுணுக்களாய எம்மை விலக்கியே வைத்துள்ளது. 4) பா 28, வேதத்தின் பாதிப்பங்கும் சிவனுடைய பரத்துவத்தை- மேன்மையைக் கூறும். பிரம விட்டுணுக்களாய எம்மையும், பஞ்சபூதங்களையும். பூதகாரியங்களாய அண்டபிண்டங்களின் பல்வேறு பொருள்களையும் பற்றி மீதிப்பங்கே கூறும். (பெரியபுராணம் 'பிள்ளை பாதி புராணம் பாதி', என்றது போல). இது பாரபட்சமல்லவே. ஆதலின்

'நம்மையும் பரமென் றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மைகொ நெஞ்சர் தீரா விழுமவெந் நிரயம் வீழ்வர்
தம்மையஃ தெடுத்தல் செய்யா சமமெனப் புகல்கிற் போர்க
ளெம்மையுந் துயர மென்னு மிருங்கடற் படுப்பரன்றே' பா.29

**குறிப்பு:-** 1) (சகலரிற் சிறப்புற்ற போகவாசிகள் தேவர்களாய இந்திரனாதியோர், சகலரில் அதிபக்குவராய் முதல்வனால் அதிகாரமளிக்கப்பட்ட அணுபட்சத் தெய்வங்கள் விட்டுணுக்களாய தேவர்கள்). இப்பா கூறுவது :- தேவர்களாகிய நம்மையும் பரம்பொருள் என்று கருதி நாதனாகிய பரம்பொருளுக்குச் செய்யும் சிறப்புப்போல நமக்குச் சிறப்புச் செய்கின்ற அறியாக் கொடும் மனத்தினர் நீங்காத துன்பஞ் செய்யும் நரகத்தில் வீழ்வர். நரகம் அவர்களைக் கரையேற்றாது. மேலும், (ஷண்மதங் கூறுவதுபோல), பரம்பொருளோடு எம்மையும் சமமென வலிதிற் (தம் இஷ்டமாக வேதாகம சம்மதமின்றி) சமஞ் செய்து கூறுபவர்கள் தம்மையேயன்றி எம்மையுந் துன்பக் கடலில் ஆழ்த்துவோராவர். **குறிப்பு** 2):- இவர்கள் பரமுத்தியினை அடைந்தவர்களல்ல. ஆணவத்தாற் சிவனின் அடிமுடி தேடிக் களைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவப்பட்டவர்கள். இதற்கு பண்டிதமணி கணபதிப்பிள்ளை தமதுரையிற் கூறுவது : 'நம்மையும்...படுப்ப ரன்றே' யென்றது என்னையோவெனில், நம்மிரு வேமையும் அவர், பதியெனக் கொண்டு வழிபட்ட வழி நாமும் திரிகுணவயத்தோ மாகலின் (சிவன் குணாதீதன்) நாமே பரமபதி யென்ற தாமத (ஆணவத்தால் வரும்) குண வயத்தோமாய் சிவதூஷணஞ் (சிவநிந்தை) செய்து, நரகத்திற் கடிப்படையாவோம் (தகைமையுடையோ) மாதலின் அப்பாதகச் சிரோமணிகள் தம்மையன்றி எம்மையும் இருங்கடற் படுப்பர் என்றார். இதனாலே ஸ்மார்த்தரையும் வைணவரையுங் கண்டனஞ் செய்தவருமாம்.

5) பா30. எம்மை, 'கானுறு புலித்தோ லாடைக் கண்ணுதற் கடவுட் கன்ப ரானவ ரென்று ம(அ)ன்னார்க் க(அ)டித் தொழில் புரிந்து வாழும் வானவ ரென்றும்' வணங்குங்கள் அங்ஙனமாயின் அவனாணைப்படி அவர் விரும்பியதை அருளுவோம். அவ்வாறில்லாத சமத்துவ புத்திமான்களாகிய வரிசை தெரியாத மற்றையோரை நம் பகைவர் என்றே கருதுவோம். (இச் சமத்துவ புத்தியினரே ஷண்மதத் தாபகரும் அவர் வழிவரும் மடத்தினரும்.) இவற்றிற்கெல்லாம் ஆதாரமெது என்ற கேள்வியை தக்கன் கேட்க முன் பிரமா தான் முந்திக்கொண்டு கூறுவதாவது,

6) 'பதிய(அ)ரன் பாசந் தன்னிற் பட்டுழல் பசுநா மென்றே
விதியொடு மறைகள் கூறு மெய்ம்மையைத் தெளிய வெண்டி(ன்)
னி(இ)துவென வுரைப்பன் யாங்க(ள்) ளி(இ)வ்வர சியற்ற வீச(ன்)
னதிர்கழ லருச்சித் தேத்து மாலயம் பலவுங் காண்டி' - பா 31





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாம் உயிர் வர்க்கத்தினராய பசுக்கள். இதற்குப் பிரமாணம், பிரமாவானயான் பூசித்த சீர்காழி-பிரமபுரம், திருமால் பூசித்த திருவீழிமிழலையுமாம். ஆதலின் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரகமுமுள்ள முழுமுதற்பொருள் சிவபெருமானே யென்றாராதலின்,

'அவனருள் பெறாது முத்தி யடைந்தன ரில்லை யல்லா
லவனரு ளின்றி வாழு மமரரும் யாரு மில்லை
யவனரு ளெய்தி னெய்தா வரும்பொரு ளில்லை யா(ஆ)ணை
யவனல திறைவ னில்லை யவனைநீ யடைதி யென்றான்.' பா 32.

**உபதேசப் படலத்திலே வேதக் கருத்துக்களை எடுத்துப்பேசுஞ் செய்யுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உபநிடதசாரமாம்** என்பர்.

அன்பே சிவமென்பதறிந்து, இவ்வுண்மைகளையேற்றுக் கருணையுடன் தம்மாலாய வழிகளில் அர்ச்சகர் யாவரும் உண்மைச் சிவபுண்ணியத்தில் அக்கறை செலுத்தவேண்டும். மானிட அரசனையின்றி நாமார்க்குங் குடியல்லோம் என்று, தாமார்க்குங் குடியல்லாச் சங்கரனை, தேவாதிதேவன், மகாதேவன், ஒருவன் என்னும் ஒருவனாய நம் சிவமுத லையே மதிக்கவேண்டும். அல்லாவிடிலது சிவத்துரோகமாகி மறுமைத் தண்டத்திற்கும் உள்ளாகும். 'தத்தம் சமயத் தகுதி நில்லாரை அத்தன் சிவன் ஆகமநூல் நெறி எத்தண்டமுஞ் செயும் அம்மையில்..'என ஏலவே குறித்த பாடலை மீளவும் உணர்க. சைவம் சிவசம்பந்தமென வாழ்தல் எமது சமயத் தகுதியாம். பெரும்பாலானோர் அக்கறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் பொருட்செல்வம் பூரியார் (இழிந்தோர்) கண்ணும் உளவாகும். அவர்களின் ஏற்றஇறக்கச் சரிதைகளும், அதேவேளை ஒரேசீரான அருளாளர் வாழ்வும் வளமும் நாடறிந்ததே. சிவப்பிராமணரும் சைவமரபினரும் இவ்விடயத்தில் சமூகநலங் கருதி ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். அதனால் இளஞ்சமூகம் சைவசமயத்தை, தத்தம் குருமார் மூலம் உணர வாய்ப்பளிக்க வேண்டும். இவ்வாய்ப்பு பிறமதங்களில் நிறைய வுண்டு. 'அர்ச்சனை பாட்டேயாகும்' என்ற சிவவாக்கினை யறியாது பணத்தால் மட்டும் அர்ச்சனை செய்து, திருவிழாவைப் பொருள் புரியாது ஆடம்பரமாகக் காண்பிப்பதுடன் சமயவாழ்வில் அமைதிகாண்பர் சிலர். சம்பந்தரின் சைவம்பற்றிய வைகைஏடு, 'வாழ்க அந்தணர்' என்றும், 'கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம்' என்றும், சுந்தரரின் திருத்தொண்டத்தொகை, 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க் கும் அடி யேன்' என முதலிற்கூறியும், மணிவாசகர் இறையருளை 'நந்தம் பாடியில் நான்மறை யோனாய் அந்தமில் ஆரியனா யமர்ந் தருளியும்' என்றும், அப்பர் உயர்குலமும் இறையினாலாம் என 'குலங் கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னை' எனவும் சிறப்பித்தபடி தங்குலங் காத்து அடியாருக்குச் சரியை, கிரியை யுணர்த்தலும் சிவப்பிராமணீயங் காத்தலேயாம்.

துகளறுபோத உரையாளர் திக்கம் செல்லையா வழிவந்த திருக்கேதீஸ்வர முன்னாட் தலைவர் **சட்டத்தரணி இ. நமசிவாயம் கூறுவதன் சாரமும் எமது கருத்துக்களும்** :- 1) இன்று சைவாசிரியர், பூசகராதியோர் சைவஞானவிளக்கம் இன்றி தொழில் மனப்பான்மையுடன் இயங்குதலால் இராவணன் காலத்திலிருந்து வந்த சைவம் பிற்போக்கினை அடைந்துள்ளது. சைவம் சிவ சம்பந்தமாதலின் சைவமும் சிவமும் அனாதியேயாம்.

2) இந்து என்ற அர்த்தமற்ற தொகுதிப் பெயரால் என்றுமுள்ள சிவசம்பந்தமான சைவம் அண்மைக் காலந்தொட்டுச் சரிவை அடைந்துள்ளதை எவரும் உணர்வதில்லை. இளைஞர்களும் சைவ இந்து வேறுபாடு அறியாது ஏதோ பெற்றார் செய்வதைப் பின்பற்றுகின்றனர். கல்வி முறையும் சைவதத்திற்கு பேணத் தகுந்ததாயில்லை.

3) சைவ இலக்கணம் அறியாததால் சைவமுரணான ஆனால் சைவப்பெயர் சூடிய சமித்தி, பீடம், இயக்கம் என்பன முளைத்தெழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்து' கூறும் அறுசமய வெவ்வேறான, முத்திப்பயன் அளிக்காத கானல்நீர் போன்ற வணக்க முறைகளை அறிமுகஞ்செய்கின்றன.

4) 'வடமொழியுந் தென்தமிழும் ஆயினான் காண்' என்பதனையும், வேதாகமம், மந்திரங்கள் என்பன இறைவனாலும், தமிழ்வேதமான திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் என்பன சிவனடியாராலும் ஆனவையென்ற ஒருமையினையும் உணராத சிலர் தமிழில் பூசைசெய்ய விளைகின்றனர் அவர்களுக்கு அவ்விரண்டு தெய்வீக மொழிகளிலும் அம் மொழியிலுள்ள நூல்களிலும் பயிற்சி கிடையவே கிடையாது.

5) சிவபூசைக்காய விளக்கத்திற் பிரதானமாக வரும் பஞ்சசுத்தியின் மந்திரசுத்தி பூதசுத்தி சிவோகம்பாவனை அந்தர்யாகக்கிரியை பிராணாயாமம் என்பனவற்றின் விளக்கமின்றிப் பெயருக்காகச் செய்தோ அல்லது அதுவுமின்றியோ பரார்த்தம் செய்கின்றனர். இதற்கு அவர்கள் முறைப்படி தீட்சை பெற்றுக் குருத்துவப் படுத்தப்படாமையே காரணமாம்.
6) அவ் வாய்ப்பு சித்தாந்தம் அறியாத சங்கரமடத்திற்குச் செல்வதாற் கிடையவே கிடையாது. சிவாயநம, நமசிவாய என்பனவற்றின் தாற்பரிம் - தத்துவம் உணர்ந்தவை சித்தாந்த சைவமடங்கள் மட்டுமே.

7) **சைவாசாரியார் இலட்சணம் :-** இவர்கள் நன்மதிப்புக்குரிய உதாரணபுருஷர், வடமொழி வேதங்கள், சைவாகமங்கள், பத்ததிகள் 18ப் புராணங்கள், 14 மெய்கண்ட சாத்திரங்கள், 12 திருமுறைகள் என்பவற்றில் மிக்க பயிற்சியுள்ளவர்கள், ஆலய கட்டட அமைப்பு, சாத்திரம் அறிந்தவர்கள். பூனுல் அணிவதற்கு மேலாக சமய, விசேட, நிர்வாண தீட்சைகளும் திருமணத்தின்பின் தகுந்த குருமாரிடம் ஆச்சார்ய அபிடேகமும் பெற்றிருப்பவர்கள். அவர்கள் சிறு தெய்வங்களுக்கன்றிச் சிவக்குடும்ப தெய்வங்களுக்கே பூசைசெய்பவர்கள். அபரக்கிரியைகள் செய்யாதவர்கள். அரச பீடத்தினரின் தனி அபிலாசைகளுக்கு ஆதரவு, முகமன்வார்த்தை என்பன இன்றியும், சமயாசாரமற்ற யாரிடமும் கரிசனையின்றியும் அவரிடம் செல்லாமல், தேவையாயின் அவரைத் தம்மிடத்திற்கே அழைப்பவர்கள். தமக்கும் பிறர்க்கும் ஆன்மலாபம் கிடைக்கக் கிரியையினை ஞானநிமித்தம் எனத் தெரிந்து ஆற்றுபவர்கள். அவ்வாறு ஆற்றுவதால் தமக்குத் தேவையானதை அடியார் மூலம் ஆண்டவனே வரவழைப்பானென அறிவதால் பொருட் சார்பற்று கிரியை ஆற்றுபவர்கள். இத்தகு இலட்சணங்கள் அற்றவரைச் சிமார்த்தரென்றே கண்டு நீங்குதல் நன்றாம். 9ம் அத். ஒழிபு நிலைக் குறிப்புகளும் பார்க்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.1.6. குடிமை?, ஆள்வாரிலி மாடாகும் நிலை** இதுபோன்ற நூலறிவு, மற்றும் குருவின் வழிகாட்டலோடு கூடிய கட்டுக்கோப்புக்கள் அகலவே, தெய்வீகம் ஒழிந்து பார்க்குமிடமெங்கும் நாயும் பேயும் திரியும் பிணக்காடுகளானமை கடந்தகால அனுபவம். குலதெய்வம், குரு, தகப்பன், மாமன், தமையன் என்ற பஞ்ச முதுகுரவர்களின் வழி நடத்தல் இல்லாதுபோய், ஆசாரமற்றுக் கண்டதையுண்டு, கண்டதைக் குடித்து, தன் முனைப்பான காரியங்களால் குறிக்கோளிலாது, மானமிழந்து மதியிழந்து கெட்ட அல்லது கெடுக்கப்பட்ட இளஞ்சமூகம் இனியாவது திருந்தவும், சைவத்தமிழ்க் குடிமை காக்கவும் முதியோர் வழிகாட்டவேண்டும். என்றுமுள்ள சனாதன தர்மமாகிய சைவநெறி காட்டும், பாரம்பரியம், பண்பாட்டு முறைகளை அவதானித்து முன்னோர் வாழ்ந்த அமைதி வாழ்வை வாழவேண்டும். ஆள்வாரிலி மாடாகும் நிலை இனியும் வேண்டாம். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' ஆதலால் பெரியார்கள் வழிகாட்டும் கடமையிலிருந்து தவறின் பெற்றமக்களே சமூக விரோதிகளாவர். உதாரணங்கள் எங்குமுண்டு. ஆண்டான் சிவன், அடிமை நாமெனப்பதே சைவக் குடிப்பெருமையாம்.

இந்நிலையில் எமக்காய, **அந்தணற்காய ஒழுக்காற்று நிலைகள் எவை** என்பது அறிதற் பாலது. ஏனைச் சமயங்கள் கட்டுப்பாடான ஒழுக்கக் கோவைகளை வரைந்துள்ளதுடன் அவற்றை நடைமுறைப்படுத்தியும் வருகின்றன. அவற்றின குறைபாடுகள் ஏனைமதங்களை மதியாமை போன்ற கண்ணுக்கும் கருத்திற்கும் தெரிந்தாலும் நடைமுறையில் 'எது அவர்தம் ஆன்றோராற் கைக்கொள்ளப்பட்டதோ அதுவே இன்றும்' என்பதில் வெகு திடமுற்று இருப்பதுடன், அந்நெறி தவறுவோர்க்குத் தண்டமும் வழங்குகின்றன. வெளிநாடுகளில் குறிப்பாக தென்மேற்குலகில் இதனையறியலாம். உண்மையில் இந் நடைமுறையைத் திருமூலர் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே அங்கீகரித்துள்ளார். இது சகலருக்கும் பொருந்துவது. 'தத்தம் சமயத் தகுதி நில் லாதாரை..... என்பது. ஏலவேகண்ட பா 247.

**அந்தணருள்ளிட்ட சைவர்களாகிய நாம் எவ்வொழுக்கத்தைக் கடைப்பிடிப்பது?** என்ற வினாவெழ நியாயமுண்டு. சமயவாழ்வில் பொதுவாக அது எழுதாமறைதரும் வேதவொழுக்கமும்- வைதிக வொழுக்கமும், சிறப்பாகச் சைவற்கு ஆகம ஒழுக்கமும், நால்வரின் சைவநாற்பாத வழிகளுமாகும். அறம் பொருளின்பம் உணர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டையுஞ்சுட்டி மரபாக வரும் திருக்குறள், நல்வழி, நீதிநூல் முதலாய அறநூல்களைத் தெரிந்தும் தெரியாததுபோல, எவரும் நமக்கிதனைக் கூறவில்லையே என்றோ சட்டமாக்கப்படவில்லையே யென்றோ கூறித் தப்பிக்கவியலாது. 'வீதியொழுங்கு' எனக் கைக்கொள்ளும் முறையினைக் தெரியாதெனக்கூறி அதை மதியாது திரிவோர் அடிபட்டோ, பிடிபட்டோ தாமாகவே தண்டம் பெறுதல் கண்காணுமுண்மை. அதுபோன்றதே சமயவொழுக்கம் பற்றியதுமாகும். பாரம்பரிய நடைமுறைகளை, தருமநூல்களிற் கூறிவற்றைச்செய், விலக்கியவற்றைச் செய்யாதே என்ற இயம நியமங்களைத் தெரியாது என்போர்பற்றி என்னதான் கூறுவது?. மனிதன் சிந்தனைக் குரியவன், எவற்றையும் கல்வி கேள்விகளாற் பகுத்து ஆய்ந்தறிந்து அவற்றைக் கைக்கொள்பவன். சமூகம் நடைமுறையிற் கைக்கொள்ளும் எழுதாச் சட்டங்களை (மரபைத்)தானும் ஏற்று நடப்பவன். எவ்வளவுக் கெவ்வளவு அந்நெறிப்படி ஒழுகுகின்றானோ, அவ்வளவுக் கவ்வளவு மானுடம் தெரிப்பவன். 'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங் கல்லா ரறிவிலாதார்'. ஆதலால் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்'என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாகுபவன். (ஒழுக்கம் உயர்குலம் ஆகும்)

திருக்குறளின் ஒழிபியலிற் குடிமை முதலிற் பேசப்படுகிறது. அது, உயர்குடிப் பிறந்தார் தன்மையாகும். நால்வருணத்தாருக்கும் குடிமை பொது. பெரியபுராணம் போல திருக்குறளும் ஒழுக்கம், பக்தி, வைராக்கியம், செயற்கருஞ் செய்கை என்பன போன்ற நல்லியல்புகளின் அடிப்படையிலேயே வருணங்களைப் பார்க்கின்றது. வேதகால வருணாச்சிரமத்திலிருந்து சற்றே முன்னேற்றகரமான கருத்துக்கள் அவற்றாற் பெறப்படும். பெரிய புராணத்தில் பல்வருணத்தாரும் தத்தம் நிலையில் இருந்தே வைராக்கிய அன்பு வழித்தாய சிவநெறி தலைப்பட்டுப் பேறடைந்தனர்.

**குடிமை:**- செம்மையும், நாணமும் உயர்குடிச் சுபாவம். அவர்கள், நன்னடத்தை, சத்தியம், வெட்கம் மூன்றையும் பின்பற்றுதலிநின்றும் தாமாகவே வழுவார். அவர் இயல்புகளாவன, முகமலர்ச்சி, கொடுத்தல், இன்சொல், இகழாமை. கோடிபொன் கொடுத்தாலும் ஒழுக்கமற்ற செயல் புரியாமையாமை என்பனவாம். அவர் பரம்பரைப் பொருள் சுருங்கினும் ஒழுக்கந் தவறார்: வறுமையுறினும் அறந்தவறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீத்தொழில் புரியார். அவர்தம் சிறு குற்றமும் பெரிதாகக் காணப்படும். 'குடிப்பிறந்தார் கண் விளங்குங் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.' கொடாமை, இன்சொலின்மை போன்ற நற் குடிக்கொவ்வாத குணங்களுள்ளவனின் குலம் பிறராற் சந்தேகிக்கப்படும். அவனின் பேச்சே குலத்தைக் காட்டிநிற்கும். இறுதியாக, 'நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும், குலம் வேண்டின் வேண்டும் யார்க்கும் பணிவு.' என்கின்றார் வள்ளுவர். அடுத்து, 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' என மானமும், 'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப் பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என பெருமை சிறுமை யெனப்பட்ட சிறப்பியல்புகள் பிறப்பாலன்றித் தொழில் வேற்றுமையால் மாறும் எனப் பெருமை சிறுமைகளுங் கூறுகின்றார் வள்ளுவர். பிறப்பிலி ஆள்வானாய சிவனின் சிறப்படிமையாந் தன்மைமிக்க யாம் நமது சிவக்குடிமை காப்போமாக.

இவ்வாறு பிறப்பொழுக்கம் பற்றிப் பொதுமையிற் கூறினும், இந் நூல் நுவலுவதோடொப்ப, 'சைவஒழுக்கம்', 'வேதியஒழுக்கம்' 'வைதிகசைவ' மற்றும் 'ஸ்மார்த்த ஒழுக்கம்.' என்பவற்றை 'அது இதுதான்' என வரைவுபண்ண முடியாநிலையில், ஏழாலை பண்டிதர் கந்தையா மறைவையொட்டி யெழுந்த 'சித்தாந்த ஞானக் கழஞ்சியம்' என்ற நூலில் அவர் தரும் விளக்கமாவது :- **சைவம் என்றாலென்ன?** என்ற வினாவுக்குத் திருமூலர் தந்திருக்கும் விடை யதார்த்தமானது. சைவம் சிவனுடன் சம்பந்தமாவது என்கின்றார் அவர். **இது சைவத்தின் இயல்பு நிலைக்கும், சைவ ஒழுக்கலாற்று நிலைக்கும் பொதுவான ஒரு விளக்கமாகும்.** சிவனை இன்றியமையாததாகச் சைவம் இருக்கின்றது என்பது அதன் இயல்புநிலை. அகவாழ்விலும் புறவாழ்விலும் சிவனோடு சம்பந்த முற்றிருந்து, உரிய பக்குவம் வாய்க்குங் காலத்தில் சிவனைத் தனக்கு அந்நியமில்லாத ஒரு பேரறிவுப் பொருளாகக்கண்டு, ஊன்சம்பந்தம் நீக்கி ஞானசம்பந்தம் மூலம் சிவனையடைவது, அதுசார்ந்த ஒழுக்கலாற்று நிலை.' என்பது பண்டிதரின் விளக்கம். இவ்விடத்தில், அந்நியமின்மை என்பது எவ்வாறு நிகழுமென்பதைச் சிவஞானபோதம கூறும் விதமாவது:

'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்(டு)
அந்நியம் இன்மையில் அரன் கழல் செலுமே'- எட்டாஞ்சூத்திரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை உயிருள் நின்றுணர்த்திய சிவனே பக்குவங்கண்டு, மானிட குருவாகி நேரில் வந்துணர்த்துதல் இதுவாம். முன்செய் உண்மைச் சிவபுண்ணியப் பலனால், உயிர் தனது. 'சார்ந்ததன் வண்ணமாகும்' இயல்பினால் இதுவரை அசத்ததாகிய நிலையற்ற பாசப் பொருள்களோடு அவையே தானென மயங்கி அத்துவிதப்பட்டு நின்றதைத் திருவருளாலறிந்து அத்திருவருளின்பால் உளதாய், இனி சத்தினை - மெய்ப்பொருளை அறிந்து நிற்குமாறும், அதனைத் தரிசிக்கும் முறைமையினை உணர்த்தும் பொருட்டும், அதனைச் சாதித்துப் பயன்பெறும் பொருட்டும் அசத்தல்லாததை அவாவி-வினவி நிற்கின்றது. அதாவது, இனி யாருடன் சாருவதென்ற குரு நாட்டங்கொண்டு நிற்கையில், அதன் பக்குவங் கண்டிரங்கிச் சிவனே (திருவருட்சக்தியாய்) மானிடகுருவாய் வந்து ஞானம் உணர்த்தி உபகரித்தல் கூறப்படுகின்றது. இவ்வுபகாரமே அதற்குத், தான் இது வரை பாசத்தொடு கொண்ட உறவு அந்நியமென்பதையும் அதனை உள்நின்றுணர்திய குருவருள் இன்று வெளிப்பட்டு, சிவதீக்கை செய்து, 'மன்னவ குமாரனாகிய நீ ஐம்பொறிகளாகிய வேடருட்பட்டு வளர்ந்து நின்பெருந் தகைமை அறியாது மயங்கி இடர்ப் பட்டாய். நின்பெருந் தகைமையாவது இவ்வியல்பிற்று' என்பதையும் அறிவிக்கும் (அதுவே மன்னவ குமாரனென்பது). அறிந்தவுடனே அவ்வேடரை விட்டுநீங்கி அந்நியமின்றி அநந்நியமாந் தன்மையில் நிலைபெற்ற அம்முதல்வன் திருவடிகளை அணையும். மந்தைக் கூட்டத்திற் தவறிய கன்றிற்கு ஏனைப் பசுக்கள் அந்நியமாய், இப்போ கண்ட தாய்ப்பசு அநந்நியமாதல் போன்ற **அன்புத் தொடர்பே** இதுவாகும்.

இவ் விளக்கத்தினால் அன்பே சிவம் என்பதறிந்து சிவம் வெளிப்படும் குருலிங்க சங்கமங்களில் சீவன்முத்தனான ஆன்மா பொருந்துமென்பது இறுதிச் சூத்திரம். அது அவ்வாறே பொருந்தாவிடில் முன்னைய மலமாயா வாசனையால் அவதியுறுமென்பதும் குருவால் உணர்த்தப்பட்டதாம். இதனாலே நால்வரும், நெறிப்பிரகாரம் யோகர்சுவாமி போன்ற சீவன்முத்தரும், பிராரத்தவினை உடலூழாய்க் கழியும்வரை, நால்வர் காட்டிய நெறிப்பிரகாரம் ஆலயந்தோறுந் திரிந்தனர். (**குறிப்பு** : இத்தகைய **அதியுயர் சைவ ஒழுக்கலாறே ஆலய வழிபாடு** என்பதனை அறியாத 'இந்துப் பிரசாரகர்' சிலர் கோயில் வணக்கத்தை இழிவுபடுத்தி இலங்கை நகரிற் கூறியதை ஏலவே குறிப்பிட்டோம். இது அதற்காய விளக்கமாகும். நிறுவன மயப்படுத்தப்பட்ட தென்னிந்திய சித்தாந்தபீடங்கள் தமது, ஊடகங்களினூடாக இவர்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திபுகட்டிப் பொய்யகற்றி மெய்காட்டல் வித்யாதருமமுமாம்.) 'ஊனடைந்த உடம்பின் பிறவியே தானடைந்த உறுதியைச் சாருமால்' என **சைவவாழ்விலக்கணம் கூறிய சேக்கிழார், அதுசார்ஒழுக்கம்** யாதெனில், 'மாநடஞ் செய் வரதர் பொற்றாள் தொழ' என்ற வாக்கும் கொள்ளத்தகும்.

இதுவரை யறிந்தவற்றாற் புரிந்த உயர்தனிச் செந்நெறியாகிய சைவத்திற்கு 'இந்து' என்ற பதம் முரணானது, அது நமக்கு அந்நியமானது, துரோகமானது. **இந்துக்கள் ஒழுக்கம் யாது?.** அதனை வினைக்கேடாக ஆயுமுன், 'இந்து' வின் வரைபு யாது? அதன் பதி பசு பாசக் கொள்கைதான் என்ன? என்பதை எம்மாற் கூறமுடியாது. காரணம், தன்னையென்றும் விட்டுநீங்காத இயல்புடையவற்றிற்கே அவற்றின் இயல்புபற்றி வரைவு கூறப்படலாம். 'சைவம் சிவசம்பந்தம்' இதுவே சைவவரைபு. அப்படியொரு வரைபு 'இந்து'வுக்கு இருப்பதாகத் தெரியவில்லையே?. சைவத்தின் ஐயாயிரமாண்டுகள் முன்னிருந்த நிலைபற்றிய அகழ்வாராய்ச்சிகள் (இன்றைய பாகிஸ்தானின் மொகஞ்சதாரோ, ஹரப்பா) ஆதாரங்கள் இருந்ததாலும், வடமொழி வேதாகமம் மற்றுமுள்ள தமிழ் வேதாகமங்கள் கைகொடுத்ததாலும் ஆய்ந்தோம். 'இந்து'வுக்கு ஆதாரம் ஏது?. 'அது இதுவே' யென்று கூறமுடியாத 'சாம்பார்ச் சமயம்' என்பதே அதற்காய இப்போதைய வரைபாகட்டும். 'சைவம் சிவசம்பந்தம்' என ஒரேவரியில் திருமூலர் வரைவு செய்தமையும் பண்டிதர் கந்தையா அதற்காய விளக்கங் கொடுத்தமையும் போல 'இந்து'வைத் தனித்தனி கூறுகளாக்கி வரைதல் 'பாரதத்திற் தோன்றியமை' போன்ற சில பொது வியல்புகளின் அடிப்படையிலாகலாம். 'அங்ஙனமாயினும் கடவுளில்லை யெனும் புத்தமதமும் இந்துவெனப் படலாமே' என்பது அன்றைய பாரதப்பிதமர் நேருவின் ஆதங்கம். (7.11 பார்க்க)

**ஸ்மார்த்தம் பற்றிய பண்டிதர் கந்தையாவின் கூற்று:- ஸ்மார்த்தம் என்பது ஸ்மிருதி** ஒழுக்கம் என்ற பொருளே பொருளாகவுள்ள பெயராகும். வேதங்கூறும் ஒழுக்கவிதிகள் கையாளப்பட்ட தற்காய விதிகளைத் தெரித்துக்கூறுவது ஸ்மிருதி. அவ்வப்போது **ரிஷிகளாயுள்ளோர் தத்தம் நிலையிற் கணித்துக் கூறியது** என்ற காரணத்தோடுகூடிய பெயரிது. ஸ்மிருதி என்ற வடசொற்பொருள் நினைப்பு என்பதாம். இதனால் வேதங் கூறும் (மேற்படி ரிஷிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாகப்பெற்ற) ஒழுக்கம் மாத்திரமே சமய ஒழுக்க மெனத் தழுவி வந்த வைதிகரின் சமயம் ஸ்மார்த்தமெனல் நன்கு விளங்கும். அத்துடன் மேற்கண்டவாறான 'சைவம்' என்ற பெயர்விளக்கத்தின் சாயல்கூட இதிற் காணப்படவில்லை ஆதலால் ஸ்மார்த்தம் சைவத்தின் வேறென்பதுவும் அங்ஙனமே. முதல்நூற்கொள்கை நோக்கில் இச்சிமார்த்தம் போலல்லாது வேதத்தை ஒரு பொது அளவில் முதல்நூலாக ஏற்றுக்கொண்டு அத்துடன் சிவாகமத்தைச் சிறப்புநிலை ஆதாரமாகக் கொள்வது சைவம். வேதத்திற்கூடச் சிவாகமத்திற்கு மாறுபாடாயிருப்பதைச் சைவம் ஏற்பதில்லை. இரண்டிற்கும் தத்தம் அளவில் திருப்தியென்ற நிலையில இரண்டும் பாரதத்தில் பல்லாண்டு காலமாக இருந்துள்ளமை அறியப்படுகிறது.'

மேலுமவர் கூறுவதாவது, 'ஆனால் கி.பி 8ஆம் நூற்றாண்டில் தோன்றினவர் என்ற ஸ்மார்த்தரான சங்கரரென்பவர், தாம் தரங்கடந்த அதிவிவேகியா யிருந்ததனாற் போலும் சிவாகமத்தைச் சிறந்த ஆதாரமாகக் கொண்டு நிறுவிய சைவத்தையும் ஸ்மார்த்தம் போல வேதத்தை மட்டும் ஆதாரமாகக் கொள்ளும் நிலைக்குத் தட்டியடிக்கும் ஒரு எடுகோளை மேற்கொண்டுள்ளார். அதற்காக அவர் மேற்கொண்ட பிரயத்தனங்கள்பல.' அவற்றிற் சில: 1) சிவனை முழுமுதற்கடவுள் என ஏற்றுச் சக்தி விஷ்ணு விநாயகர் குமரன் சூரியன் என்ற ஐந்தையும் சிவவழிபாட்டில் உள்ளடங்கக் கொண்டிருந்த சைவத்திலிருந்து அவற்றைப் பிரித்து, தனித்தனி முழுமுதல்களாக நிறுவி, சிவன் தன் சமயமாகிய சைவத்திற்கு மட்டுமே முதல்வன் எனக் கற்பித்து, அவ்வகையால் சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என ஆறு முழுமுதற் சமயங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சரிநிகர்சமம் என்றும், அனைத்தும் அநாதியானவை யென்றும், ஆறையும் சமனாக வழிபடுவதே உண்மைச் சைவவழிபாடு என்றும் கூறும் பிரசாரத்தை முடுக்கிவிட்டார். ஸ்மார்த்தர்கள் இவரைச் 'ஷண்மத ஸ்தாபகர்' என்பதே இதற்கான சான்றாம். 2). இச்சங்கரர் அன்றைய சைவாலயங்களிற் சிவாகம விதிவிளங்க நடைபெற்று வந்த கிரியைகளை தாம் காட்டும் வேதவிதிப்படி நடத்துமாறு வற்புறுத்தி வந்துள்ளார். 3) சைவாலயங்களிலும் சக்திபூசையையே பிரதானப் படுத்தி சாக்தரின் சக்கரபூசையையும் பிரபலப்படுத்த முயன்றுள்ளார். 4) காஞ்சி காமாட்சி, திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி, திருவொற்றியூர் திரிபுவனசுந்தரி, அசாமின் 'காமாக்யா' என்றசக்தி ஆகியவற்றைத், தனது ஸ்ரீ சக்கரத்தை அங்கே பதிப்பித்ததனால், அடக்கியுள்ளாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு அ).** சக்தியென வணங்கும் எக்கடவுளரும் சிவசக்திகளே. சிவனின்றிச் சக்தியில்லை சக்தியின்றி சிவனுக்கு ஐந்தொழிலாற்ற முடியாதென்பது சைவசித்தாந்த அடிப்படையுண்மை. சூரியனுக்கும் அதன் சுடருக்குமுள்ளது போன்ற **ஒருபொருளின் இருதன்மையெனும் தாதான்மிய சம்பந்தம்** இது. 'எத்திறம் ஈசன் நின்றான் அத்திறம் அவளும் நிற்பாள்' என்பதும், அர்த்தநாரீஸ்வரமும் அதுவே.

ஆ) மேலும் சைவத்திற்கு மேற்சொன்ன விளக்கத்தால், சிவக்குடும்பம் என்ற ரீதியிலுள்ள ஆலயங்கள் சிவாலயங்களாகவே மதிக்கப்பட்டுச் சைவாகமவிதிப் பிரகாரம் கிரியைகள் நிகழ்வதுங் காண்க. கிழ்க்காணும் பிரதிமைகள் சிவனே முதல், அவனை சிவக்குடும்பத்தினர் பூசிப்பதால் அவனுக்குத்தாம் சமமானவர்களல்ல என்பதனைக் காட்டிநிற்கின்றன.

**அத்தகைய ஆலயங்கள் பாரதத்தின் பலபாகங்களிலும் உள** என்பது யாவருமறிந்த உண்மை. மேலும்7.15ல் காட்டப்பட்ட பிரதிமைகளில் பிரமவிட்டுணுக்கள் பூசிப்பதிலிருந்து சிவபரத்துவம் மேலும் உறுதியாவதுடன் மும்மூர்த்திகளுக்கும் மேலானவன் சிவன் என்பதும் புரியவரும். ஆகவே இவற்றிலிருந்து தெரிவது:- 1) ஷண்மதம் (இந்துமதம்) எனும் ஆறு சமயமும் ஆறு முழுமுதலையுடையன என்பது இடைப் புகுத்தப்பட்ட சங்கரர் வாதம். இதனால் இந்துவென்ற பதம் வரைவற்ற வலுவிழந்த சொல்லாகின்றது, இப்பதம் அன்று தொட்டு இன்றுவரை வாழ்ந்த உண்மையான சிவானுபூதிமான்களால், தத்துவ வாதிகளால் பயன்படுத்தப்பட்டதில்லை. ஒரு கவியினையாகுதல் அச்சொல் கொண்டிருக்கவில்லை. 2) மும்மூர்த்திகளும் பரமசிவனிட்ட கட்டளையாகவே தந்தொழில் புரிவரென்பதும் புரிதரும். சிவனே








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமுதல்; அவனே பரம்; அவனே பல்லுயிர்களினதும் தாரதம்மியத்திற் கேற்பப் படிமுறைகளாகச் சமயங்களை பாடத்திட்டம்போலத் வகுத்துத் தந்துள் ளான். ஆதலின் சைவர்களாகிய யாம் அவன் ஒருவனையே நேர்தொழுது முத்திபெறும் கடப்பாடுடையோம்.

*1)* 'முறைத்திறம் உறப்பொருள் தெரிந்துமுனி வர்க்கருளி யால நிழல்வாய், மறைத்திறம றத்தொகுதி கண்டுசம யங்களை வகுத்த வனிடம், துறைத்துறைமி குத்தருவி தூமலர் சுமந்துவரை யுந்தி மதகைக் குறைத்தறையி டக்கரிபு ரிந்திடறு சாரல்மலி கோகர ணமே', 2) 'மண்ணின்மறை யோர்மருவு வைதிகமும் மா தவமும் மற்றுமுலகத் தெண்ணில்பொரு ளாயவை படைத்த இமை யோர்கள் பெருமான்' இவை சம்பந்தரின் கூற்றுக்கள்.

வைணவரின் சிவத்துரோக கொடுமையைப் பொறாத அகத்தியர் தாமும் ஓர் ஆழ்வார் வடிவுதாங்கி உட்பிரகாரஞ்சென்று, 'குறுகு, குறுகு' எனத் தன் தவவலியால் அதனைச் சிவலிங்க மாக்கியமை கந்தபுராணச் செய்தியெனக் கண்டோம். இது, சிவபரத்துவத்தினை அவருணர்ந்த இரகசிய சத்தியினாலாய அற்புதம் என்பதை ஆதாரமற்ற சங்கரர் செயற்பாட்டுகளில் இருந்து வேறுபடக் காண்க. இவ்விடத்தில், சமயகுரவர்களின் அற்புதங்களுக்கும், சிவம்பெருக்கும் முயற்சிக்கும் சிவனே அவர்தம் கருத்துள் நின்று வழிகாட்டினாரென்க. இதனால் அவர்கள் தாம் பாடுவனவற்றிற்கு, 'எனதுரை தனதுரையாக' என மகுடஞ்சூட்டியுமுள்ளனர். **சைவத்தில் எவரும் தன்முனைப்பான செயல்களாற்றித் தம் பெயரிற் புதுச்சமயஞ் சாதித்ததில்லை. சிவனுக்கு ஆளாமையைப் ஆடிப்பாடி எம்மையும் ஆற்றுப்படுத்தினர்.**

**குறிப்பு இ).** இனி. **சமய ஆய்வாளர் என்போர் கருத்திலென்றும் எழுவதோர் ஆசங்கை பற்றியது:** காலங்காலமாக ஆங்காங்கே முனிசிரேஷ்டர்கள், தபோதனர், இறைதூதர்கள், திரு அவதாரத்தினர், தெய்வாம்சத்தினர், யோகிகள், ஞானிகள், சுவாமிகள் என்றெல்லா வகையினருந் தோன்றி, அவ்வக்காலங்களில், அவ்வவ்விடங்களில் பல தரத்தனவாய தெய்வீக நெறிகளை, அற்புதங்களை வழிபாட்டு முறைகளைக் காட்டியுள்ளனர். இவர்களில் பாரதத்திற் கப்பாற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் யேசுகிறீஸ்து, முகம்மது என நன்கறிந்தோரும், பாரதத்தில் மிகஅதிகமாகவுள்ள மகான்களான புத்தர், திருமூலர், ஜைனர் எனும் சமணமதத் தாபகர், இராமகிருஸ்ணர், விவேகாநந்தர், சங்கரர், நால்வர், ஆழ்வார்கள் முதலிய பல்வேறு தரத்தினருந் தோன்றி, கொள்கைகள் வகுத்து, சிலகால் வாழ்ந்துங் காட்டி, உபதேச நூல்களுஞ் செய்துபோந்தனர். நூல்கள் அவர்வழி வந்தோராற் செய்யப்பட்டும் உள்ளன. இந்நிலையில் எவரும் தத்தம் கொள்கையளவில் உறுதியாகவே நின்றுமுள்ளனர். உண்மை யொன்றே அதை அவர்கள் எவ்வாறு கூறமுயன்றுள்ளார்கள் என அவற்றின் மெய்ப்பொருளை ஆராயாது அவரவர் காலத்திலோ, அன்றிப் பின்னரோ ஏன் இன்றுங்கூட சமயக் கலகங்கள், போர்கள் தணியாது மூண்டெரிந்து கொண்டிருக்க வேண்டிய காரணம் என்ன? என்பது ஆசங்கை. இற்றைவரை இந்நூலிற் கூறியவற்றை நன்கு சிந்தித்து, ஒருவகையாற் தெளிந்த பின் 7.23 ஐப் பார்த்து, தத்தமது ஆன்மாவுக்கு உறுதி பயப்பதைக் கொள்க.

**7.1.7. ஆள்வான்:** எம்மையாள்வான் யாரெனில் தாம் யாவராலும் ஆளப்படாத 'தாமார்க்கும் குடியல்லாத் தன்மையானசங்கரன்' என்பதும், நாம் அவனடியாரென்பதும் சற்றே சிந்தித்தாலே உணரப்படும். மான்வரின் ஆட்சியானது சிவனடியாராகிய நம்மைக் கட்டுப்படுத்தாது. சிவனடியாரே அரசைக் கட்டுப்படுத்துவர். உதாரணமாக, சமணச் செல்வாக்கிலிருந்த தமிழ்நாட்டரசனை தம் அற்புதங்களால் சைவ அரசனாக்கி சைவ ஆட்சியினை சம்பந்தரும் அப்பரும் நிலைநாட்டியமையாம். இது வடஇந்திய சரித்திர ஏடுகளிலும் பதிவாகியுள்ளது. மும்மையால் உலகாண்ட மூர்த்தியார் சரித்திரத்தையும் பெரியபுராணத்திற் காண்க. இவ்வடிப்படையில் பின்வரும் பாக்களைப் பயின்றால் எம்மையாளும் அரசன் சிவனே என்பதும் அவனுக்கே வாழ்த்தும் பல்லாண்டும் நாம் இசைப்போம் என்பதும் புரியும்.

'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே' – திருத்தாண்டகம்.

'வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.' -வாழ்த்து

'மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே'

**குடிமை என்பது அரசனுக்காட்படுதல். சைவர் சிவனுக்கே ஆட்பட்டவர்.** போர்ச்சூழலில் இடம் பெயர்ந்தாலும் தமது ஆசாரவாழ்வை மேலும் ஊக்கி வாழுந் தகையோர் பலருளர். அவர்களைப் போர் பாதிக்காதது மட்டுமல்ல அது அவர்களுக்கு வினையின் தாற்பரிய த்தையும், வாழ்வின் நிலையாமையையும் கண்முன் காட்டி ஆன்மார்த்த வாழ்வில் மேலும் அவரை ஊக்கிற்று. "மண்முதற் சிவம தீறாம் வடிவு காண் பதுவே ரூபம், மண்முதற் சிவமதீறாம் மலம் சடமென்றல் காட்சி" என்ற தசகாரியத்தின் முதலிரு படிகளாகிய தத்துவரூபம், தத்துவதரிசனம் (அத். 3) என்பவற்றை அழிவினூடாகச் சற்றேனும் உணரவைத்தன. இதனால் மண், பெண், பொன் ஆசைகளைத் துறந்து ஆன்மிகநாட்டம் கொண்டோர் பலர். யாவும் சிவனின் திருவிளையாடலேயாம். "தத்தம் சமயத் தகுதி நில்லாரை ........' பல்லாற்றானும் பொருந்தும் திருமந்திரப்பா 247.

**7.1.8 தீட்சை கேட்பித்தலிற் பெற்றார் பங்கு.** தினம் பஞ்ச மாபாதகங்களையே செய்துழலும் குடும்பத்தினரை விட ஓரளவாகுதல் தருமவாழ்வு வாழும் நற்குடிப்பிறந்த சைவசமயிகள் எவரும் தத்தம் பிள்ளைகளுக்குத் தீட்சை கொடுக்கும்படி சூழலிலுள்ள சைவாசாரியரை நாடவேண்டும். அவ்வாறு அவர்கள் பிள்ளைகளைத் தீட்சை கேட்பித்து, அவர்கள் காலை மாலைகளிற் செய்யும் சந்தியாவந்தனத்தாலாகும் திருநீற்றொளியோடு கூடிய சைவச்சூழலில் தாமும் அயலும் துலங்கித் திளைப்பர். அதனாற் கெட்டனவாய, சான்றோரால் மதிக்கப் படாதனவாய மாமிசம், களவு, கள், காமம், குருநிந்தை என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமா பாதகங்களையும், அழுக்காறு, அவா-இச்சை, கோபம், இன்னாச்சொல் என்பன அற்ற அறவாழ்வையும் வாழக்கடவர். அத்தகு நற்சூழலால், தேவரும் போற்றும்படியாக இந்நாடு மீளவுஞ் சிவபூமி யாகுமன்றோ. திருநீற்றொளி விளங்கும் அத்தகு சமூகம் தூய சைவசமூகம். இவை உண்மையாகவே சமூகத்திற் காணப்பட்டமை பற்றி புராணங்களில் வரும் திருநாட்டுச் சிறப்பிற் (7.6) காண்க.

**7.1.9 இயம நியமங்கள் :** அடிப்படைத் தருமம் காக்கும் எச்சமயமாயினும் அது ஈசனால் அவ்வச்சமயத் தலைவர்கள் மூலம் காக்கப்படும். அத்தருமங்களுக்கு மேலாக அன்பு வழியில் சிவனால் வழி வகுக்கப்பட்ட சரியை முதலானவற்றைக் கைக்கொள்ளின் அது சுத்தாத்துவித முத்திக்கு சைவரை இட்டுச்செல்லும். இச் சிறப்புச் சைவத்திற்கே தனியுரிமையென்பது சித்தியார் கூற்று. திருக்குறள், நல்வழி முதலாய அறநூல்களிற் விலக்கப்பட்டவை தவிர்த்தும் விதிக்கப்பட்டவை கைக்கொண்டும் (**இயம, நியமங்களைக் கடைப்பிடித்துக்கொண்டு) வாழ்தல் புண்ணியகருமம்.** அவற்றின் பலனை இறைவனே தருவான். இதனைச் சித்தியார்கூறும் முறைமை: (சொற்பிரிவுடன் தரப்படுகின்றது.)

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்,
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை,
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணி அறங்கள்." பா113

**ஒழுக்கம்** - உயர்ந்தாரோடு பொருந்த நடத்தலுடைமை. **அன்பு** யாவரிடத்தும் அன்புடைமை (இல்லற வாழ்வாதாரம்), **அருள்** கருணையுடைமை (துறவிகளுக்கு வேண்டற்பாலது), **ஆசாரம்** தத்தம் குலத்துக்குரிய கிரியைகளை அனுட்டித்த லுடைமை (ஆசாரம் என்பது சைவாசாரம் எனக்கொண்டு கொலை களவு மது மாது குருநிந்தை தவிர்த்து முறைப்படி சமய தீட்சைபெற்றுத் தூய்தாக வாழுதலெனக் கொள்க.), **உபசாரம்** தக்கோரிடத்துச் செய்யும் வரபேற்பு முதலாய உபசரிப்புடைமை, **உறவு** யாவரிடத்தும் அன்பு செலுத்துவதாலாம் நட்புடைமை, **சீலம்**- நற்குணமுடைமை, **வழுக்கிலாத்தவம்** புலனடக்கி, பிறருக்குற்ற நோய் தீர்த்து, உயிருக்குத் தீங்கு விளையாத விரதங் காத்தல் முதலிய அறங்களினின்றும் வழுவுதலற்ற தவமுடைமை, **தானங்கள்** தக்கோருக்கு உவகையுடன் அளித்தலுடைமை, **வந்தித்தல்** தன்னின் மூத்தோரிடத்து வழிபாடு செய்தல், **வணங்கல்** யாவும், யாரும் சிவமயமெனக் கண்டு வணங்கல். **வாய்மை** உண்மை புடைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்கிலாத் **துறவு** பிறமகளிரைச்சேரா ஆண்தகைமையுடைமை, **அடக்கம்** மனம் தீநெறியிற் செல்லாது அடங்குதலுடைமை, **அறிவு** தக்கது தகாததைப் பகுத்தறியும் அறிவுடைமை, **அர்ச்சித்தல்** தெய்வமுதலான பஞ்சமுது குரவரை மனத்தாலும், உடலாலும் சரியை கிரியைகளால் வழிபடுதலுடைமை.

**7.1.10. இச்சித்த குலதெய்வ வணக்கமாவது :**

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல,
இனமலர் கையிற் கொண்டங்கு இச்சித்த தெய்வம் போற்றி,
சினமுத லகற்றி வாழும் செயலற மானால் யார்க்கும்,
முனமொரு தெய்வமெங்குஞ் செயற்கு முன்னிற்கு மன்றே'.

சித்தியார். முனமொரு தெய்வம் என்பது எத்தெய்வத்திற்கும் மேலானவன் சிவன் என்பதாம். குலதெய்வ வணக்கமான அச்செயலுக்கு முன்னின்று பயனழிப்பவன் அவனேயாம். ஏனெனில் மற்றைத் தெய்வங்கள் பிறக்கும், இறக்கும் மேல்வினையுஞ் செய்யும். சிவனே என்றும் ஒருபெற்றித்தாய் (ஒரே தன்மையாய்) யாவற்றையும் அறிந்து சாட்சியாய் நின்று அவரவரின் வினைக்கேற்ற பலனை வழங்க வல்லான். ஆகவே குலதெய்வம் சிவன் இல்லாவிடிலும் அவன் பேருபகாரத்தைக் குலதெய்வத்தினூடாகக் கண்டு வழிபடுக. "தெய்வம் சிவமே, சிவனருள் சமயம் சைவம், சிவத்தோடு சம்பந்தம்"

**7.2. ஆலயத்தில் தெய்வீகம் காக்கப்படல்** : ஆவாஹன விசேடத்தால் வந்தருளிய மூர்த்திமான் பூசைநேரம் இருந்து பின் மூர்த்தியை விட்டகலும் போது வெறும் கற்சிலையே காட்சிப்படும். இதனாற் போலும் ஆலயங்களிலும் அதன் சூழலிலும் திருட்டுச் சம்பவங்களும் பஞ்சமாபாதகங்களும் நிகழ்வதுண்டு. தெய்வங்களை நாமே மந்திர தந்திர பாவனைகளால் வரவழைத்துக் கோயிலிலிருத்தி பூசித்துப் பலன்பெறுகின்றோமே தவிர ஊர், குணங்குறி, பேர், வரத்துப் போக்கற்ற (தாய்வயிற்றிற் பிறந்து இறவாத) நம் சைவசமயத் தெய்வங்களுக்குக் கோயில் தேவையில்லை. அவரவர் தரத்திற்கேற்ற உருவிற் காட்சி கொடுத்து, அதைப் பிரதிட்டை பண்ணி உயிர் உய்யும்படியாக அதனைக் கொண்டே பூசைசெய்விப்பதே இறைநோக்கம். **ஆதலின் கோவிலின் புனிதத்திற்கும், அதன் தெய்வசந்நித்திய நிலைப்பிற்கும், திருடரிடமிருந்து பாதுகாப்பதற்கும் நமது செற்பாடுகளே காரணம்.** இதனைத் தவிர்க்க ஆறுகாலப் பூசைகளையும் (நித்தியம்), திருவிழாக்களையும் (நைமித்தியம்) பக்தி சிரத்தையுடன் செய்வதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவற்தெய்வ வழிபாடும் பிரதானமாகும். மானிடகாவலும் ஏற்றதே. கோயில் தெய்வத்தின் இல்லம், அங்கேயது வீற்றிருக்குமென்ற தூயஎண்ணம் உள்ளவர்களுக்கு அவர் நினைத்த மாத்திரத்திலேயே அங்கிருந்து அருளுவார். அல்லாதவர்களுக்கில்லை. தோழமை பூண்ட சுந்தரர் செய்த சத்தியந் தவறியதால் அவருடன் ஊடிய காலத்தில் கண்ணை மறைத்து, தன் பூத கணங்களைத் திருடராக்கி வழிப்பறி செய்வித்துத் தொல்லைகளைக் கொடுக்கையில் அவர் நிந்தாஸ்துதி பாடுகிறார். சுந்தரரின் வினா - உங்கு தான் இருக்கிறீரோ?,- தாபம். இறைவனின் விடை- ஆமாம், போய்வாரும்- அவமானம். கோவில் திறக்காது நிகழ்ந்த சம்பாசனை ஆகிய இது ஏழாம் திருமுறையிலுண்டு.

'பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர் என்றானே'

அன்றுதொட்டு யுகம்யுகமாக அழியாத சீர்காழிபோற் புதுமையும் பிரசித்தமும் பெற்ற ஆலயங்கள் இன்றும் உளவே. ஆயினும் சுற்றுச் சூழலிலுள்ள மானிட செயற்பாடுகளினால் (உதாரணமாக - சீர்காழி சம்பந்தர் வாழ்ந்த பகுதி வாயில்) புனிதங்கெட்டு தெய்வம் ஊமையாகும் நிலை காணக்கூடியதாயுள்ளது. மனதாரநினைந்து வழிபடுவோருக்கு மட்டும் அவர் தனதருளைப் பொழிகின்றார். கதிர்காமத்திலும் இந்நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. ஆதரிப்போர், நிர்வகிப்போர், பூசகர் யாவரினதும் ஆசாரவாழ்வும் தூய்தான மனமுமே யாவற்றிற்கும் காரணமென்க. புனிதப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டாலும் பெரும் ஆலயங்களிற் சில சீர்கேடாகவும் உள்ளன. இத்தகு சீர்கேடுகள் மற்றும் பணச்சார்பான குழப்பங்கள் பிறமத ஆலயங்களில் மிகக் குறைவாகவே உள்ளமையும் நோக்கற்பாலது. இந்தியாவின் சில பழம்பெரும் ஆலயங்களின் அருகே சென்றும் எங்கிருக்கின்றன என அறியமுடியாதபடி சூழல்முழுக்கப் பெரும் வியாபார நிறுவனங்கள் வானளாவிய அரசியல் மற்றும் சினிமா விளம்பரங்கள் மாயையின் உச்சக்கட்டமாகித் தெய்வ இருப்பிற்கே சவாலாகியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. பிறமத மற்றும் இந்துப் பெயருள்ள மிசன்கள் சைவாலயங்களை ஆக்கிரமிக்கும் சைவமுரணான செயற்பாடுகள் யாழ்.நல்லூர் உட்பட்ட பிரபல ஆலயச்சூழல்களில் காணப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னியரது ஆட்சியில் நிகழ்ந்ததை ஞாபகமூட்டுகின்றன. இவற்றை நாவலர் வழிநின்று, சைவத் தூய்மை பேணுவோர் காணின் மட்டுமே புரியும். போலிச் சமரசம் பேசும் சைவாசாரமற்ற, சைவ அறிவிலிகட்கு இவை புரியாததாம்.

## 7.3. பரசிவ உணர்வே மேன்மையான பேறு தரும்.

7.3.1. **சிவதரிசனம்:** 7.2ல் கூறிய யான் பிரமம் எனும் பசுஞானத்திலே தங்கி அதுவே முடிந்த முடிவென மயங்கி அதன்மேற் செல்லத் தெரியாதவர்களே ஏகான்மவாதிகளெனும் சங்கரமதத்தினரெனக் கண்டோம். சைவாகமங்கள் மேலும் பல படிமுறைகளைத் தருகின்றன. அப்படிமுறைகளின் சிவதரிசனம் பெற்று இறுதியில் சிவனுடன் இரண்டறக்கலந்த உயிரானது பரமானந்தசுகம் அனுபவித்தல் பற்றியது இப்பகுதி. (தசகாரியம் முதலியவற்றால் இவை தரப்பட்டன. ஆத்மார்த பூசையின் பிராணாயாமம், சிவோகம்பாவனை, அந்தர்யாகம், மந்திரபாவனை முதலியவற்றாலுந் தரப்படும்.).

பரசிவ மேன்மையானது, சிவனே சகல ஆன்மாக்களுக்கும் மலமகற்றி முத்தியளிப்பவன் என்ற பேருண்மையால் இனிதே பெறப்படும். இவ்வுண்மைகள் நடுநின்று புத்தி விவேகத்துடன் நோக்கப்பட வேண்டியவை. 'பரசிவ உணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும் விரவிய துயர்க்கு - பிறவித் துன்பதிற்கு ஈறெய்தி வீடு பேறடையும்' என்பது இயலாத காரியம், அது, 'உருவமில் விசும் பின் தோலை உரித் துடுப் பதற் கொக்கும் என்றே பெருமறை இயம்பிற்று' என வேதத்தையே சாட்சியம் ஆக்குகின்றார் கச்சியப்ப சிவாசாரியார். மேலும் சித்தி 269ம்பா இறையிலக்கணத்தை மிகநுட்பமாகத் தருகின்றது.

'இறைவனா வான்ஞான மெல்லா மெல்லா
முதன்மைஅனுக் கிரகமெல்லா மியல்புடையான் இயம்பு
மறைகளா கமங்களினால் அறிவெல்லாந் தோற்றும்
மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கும்
முறைமையினால் இன்பத்துன்பங் கொடுத்த லாலே
முதன்மையெலாம் அறிந்துமுயங் கிரண்டு போகத்
திறமதனால் வினைஅறுக்குஞ் செய்தி யாலே
சேரும்அனுக் கிரகமெலாம் காணுதும்நாம் சிவற்கே''

முற்றுணர்வு, முடிவிலாற்றல், பேரின்பமுடைமை ஆகிய மூன்றுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானுக்கே யுளவென்பது மேற்கூறியவற்றாற் (267,268 பாவாற்) பெறப்பட்ட வேதாகமம் இயம்புதல் முதலிய மூன்று காரணங்களாலும் முறையே அறியக்கூடியதாய் உள்ளதால், அவ்வாறு இம்மூன்று குணங்களும் இயல்பாகவுடைய அம்முதல்வன் பிறப்பொன்றிலே திருக்கடைக்கண் சேர்த்தி ஞானவாரி மடுத்து (கடல் போலும் நிறைவான ஞானத்தை அருந்தச்செய்து – பாற்கடல் ஈந்த பிரானென) ஆனந்தம் பொழிதற்கும், அப்பிறப்பிற் தானே மலங்கழுவிச் சீவன்முத்தராக வைத்தாண்டு வரும் பிறப்பை அறுத்தற்கும், பாதமலர்க் கீழ் வைத்தற்கும் வல்லவனாவான். ஆதலின் சிவசம்பந்தமான சைவத்திறத் தடைதலின் சிறப்பு பரசிவ உணர்வு தரும் பேறாற் கூறப்பட்டது

**7.3.2 பரமானந்தசுகம்:** இது கொடுக்கக் கொள்வது. ஒவ்வோர் உயிருக்கும் இப் பரமானந்த சுகம் வேண்டற்பாலது. அதனை அடையுங்காலம் அவ்வவ்வுயிரின் பக்குவ நிலைக்கேற்ப மாறுபடும். சுகத்தை அதுவும் நிலையான சுகத்தை வேண்டாதார் யார்?. இறவாத இன்ப அன்பினையே பேயான பின்னும் காரைக்காலம்மை வேண்டினா ரெனின் பின்னுமோர் ஆய்வு வேண்டுமோ?. இன்பமே உருவான சிவப்பரம் பொருளை அடைந்தோர் இன்பமயமாதலிற் சந்தேகமேது?. உயிர் சார்ந்ததன் வண்ணமாகும். மேலும் பதி ஒன்று. பசுக்கள் பல. செம்பிற் களிம்பு ஆதியிலிருந்தே செம்பின் பிரகாசத்தை மறைத்தது போல உயிர்களும் ஆணவ இருளிற்பட்டும், மாய வலைக்குட்பட்டும் கட்டுண்டு பசுத்துவமெய்தி அறியாமையாற் துன்புற்று மீளப்பிறக்கும். பிறவிதோறும் ஈட்டிய சரியா கிரியாயோகப் பலன்களால் நல்ல தீய வினைகளிற் சமநோக்கடைய, அறியாமை நீங்கி இறைகருணையினால் மானிடகுரு வாய்க்கப்பெற்று தீக்கையளிக்கும். குரு உணர்த்திய பிரகாரம் ஞானநெறியில் நின்று திருவருளோடும் பின் சிவத்தொடும் அணைந்து பேரின்பம் பெறும் என்ற சித்தாந்த உண்மையை மீளமீள நெஞ்சிற் பதித்தாலேயே சங்கரமதக் குறைபாடுகள் விளங்கும்.

**மநுஸ்மிருதி முதலாய ஸ்மிருதிகள் மானிடராற் செய்யப்பட்டவை.** மநுவினால் இயற்றிய தருமநூலாகிய ஸ்மிருதியையொட்டிப் பின் (ஏனைய மானிடரால்) எழுந்த தருமநூல்களும் ஸ்மிருதிகளாம். அத்துவிதத்திற்குச் சங்கரர், மாத்துவிகர் முதலானோர் தத்தமது பெயரிற் பொருள்கண்டு சங்கரவேதாந்தம் போன்ற தம்பெயரால் அழைத்தது போல ஸ்மிருதிகளும் அவ்வவர் பெயரால் அழைக்கப்பட்டன. அவை அத்திரி, ஔரிதம், விட்டுணு ஆதிய பதினெட்டாம். இவற்றின்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுகுவோர் ஸ்மார்த்தர்கள் எனப்பட்டு அவ்வச் சூத்திரத்தின் பெயரால் அறியப்படுவர். இவர்கள் ஒவ்வோர் யுகத்திற்கும் வெவ்வேறான சூத்திரங்களை முதன்மையாகக் கொள்வர். அவ்வகையில் கலி யுகத்திற்குப் பராசரஸ்மிருதி முக்கியமானதாம். இம்மிருதிகளில், வேதத்தின்கண் விதிவிலக்குகளைக் கூறும் கர்மகாண்டத்தைப் பற்றி, பிராமணர் முதலிய சாதிகளும், பிரமசரியம் முதலிய ஆச்சிரம நெறிகளும், (இவை சைவநாற்பாதங்களை ஒத்தவை. 7.10 பார்க்க) விதிக்கப்பட்டும், தத்துவ ஆராய்ச்சி கூறும் உபநிடதங்களாகிய வேத ஞானகாண்டத்தைப் பற்றி, பிரகிருதி, புருடன், ஈசுரன் இலக்கணங்கள் கூறப்பட்டும், வேத ஒழுக்கங்கள், வழக்கங்கள், தண்டங்கள் நியமிக்கப்பட்டும் உள்ளன.

**குறிப்பு:-** துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிர்க்குச் சைவத்திறமும் அதனாற் சிவஞானமும் அதனாற் சிவனடிப்பேறும் சித்திக்கும் முறைமைபற்றித் தொகுத்துக் கூறும் 263ம் சித்தியார்பாடலில் (பக்50பார்), 'புறச்சமயநெறி நின்று, அகச்சமயம் புக்கு, புகன் மிருதி வழி யுழன்றும்' என மேலும் ஏழுபடிகளைக் கடந்தபின் சைவத்திறத்தடைந்து, அதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வரெனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதுவே சைவத்தின் சமரசம். சைவம் யாவும் சிவமயமெனக் கண்டு எச்சமயத்தையும் வெறுக்காது, அவ்வச்சமயநிலை போற்றி, அவற்றைப் படிமுறைகளாக்கி, சைவத்திறனை வெகு சாதுரியமாக சுருதி யுக்தி அனுபவங்களால் யாவரும் ஏற்கும்படி நிறுவி, நிறுத்தியுள்ளது. இதனைப் பல்லாண்டுகளாக ஆய்ந்தறிந்த போப், தியோஸ் பெனாட் முதலிய பிறநாட்டறிஞர் புகழ்ந்துரைத்துள்ளனர். 7.23.5 பார். உண்மையை ஏற்கும் தர்மம் ஒருமையுணர்வினர்க்கே புரிதரும். அவர்கள் உள்ளும் புறமும் ஒருமைத்த காட்சியான சிவவியாபகத்தினைப் புரிந்து கொண்டவர்களாதலின் அவர்க்கு யாரையும் எள்ளும்-இகழும் திறமேதுமில்லை. சித்தாந்த ஞானியர் 'எங்கெளிலென் ஞாயிறு' என பிறர் அறியாமையைக் கண்டு வாளாவிருப்பவராதலின் அவர்கள் கூற்றுக்கள் நம் நால்வர் பெருமக்கள் கூற்றுக்கள்போல மெய்மையானவை, நிறைவானவை.

இனி, **பரமானந்த சுகம்** எனும் மேலான **முத்தியிலக்கணம்** 264ம் பாவாகச் சித்தியார் தருகின்றது. அதன் சுருக்கம், 1) ஏனைச் சமய நூலார் கூறும் முத்திகளாவன சோபான-படி முறையால் நிலமுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதம் ஈறாகக்கிடந்த 36 தத்துவங்களிடைப் படுவனவாய அரிவையர் இன்புறுமுத்தி (உலோகாயதர் கூறும் பெண்களுறவாலாகும் இன்பமே முத்தி) எனப் பலவாம். 2) வேதாகம நூலுணர்ந்த (அருணந்தி சிவாசாரியாராகிய) யாம் கூறும் முத்தியாவது சிவனடியைச் சேரும் முத்தியாம். 3) மெய்ஞ்ஞானமே இன்பந்தரும் முத்தி. அதுவும் முற்றறிவுடைய சிவன்போலக் கருவிகரணமின்றி, சுட்டியுணராது, முக்காலமும் உணரும் ஞானம். அது சிவனடி போற்றலாற் கிடைக்கும் திருவடிஞானமாகும். இதனாற் சிவன் நடராசகோலத்தில், தன் இடது திருவடியைச் சாருமாறு எந்நேரமும் அதனைத் தூக்கி, அதையுணருமாறு இடக்கரத்தாற் சுட்டி நடிக்கின்றான்.

இந்த உண்மைகளைக் கருத்திலிருத்திய பின் **சங்கர வேதாந்திகள் கூறுவதை நோக்கலாம்:** பரமம் அவிச்சையோடு பொருந்தியதாலேயே அதற்கு அறியாமை நிகழ்ந்தது. பிறவிதோறும் ஏற்பட்ட அனுபவங்காரணமாக அதன் அறியாமை விலக, அது மீண்டும் பரப்பிரமமாகும். ஒரு சந்திரன் பல நீர்நிலைகளை அடைந்து நிழலாகிப் பலசந்திரர்கள் ஆனமைபோல பிரமம் பலவகை வேறுபாட்டோடு கூடிய சிற்றான்மாவாயிற்று என்பர். மேலோட்டமாகப் பார்க்கையில் சரிபோல் அது தோன்றினும் கீழ்வரும் வினாக்களுக்கு அங்கு விடையேயில்லை. 1. அவர் கூற்றுப் பிரகாரம் சிற்றான்மாவே பரப்பிரமத்தின் அவிச்சையினாலாய தோற்றமெனில் அறிவுமயமான பரான்மா அறியாமையை இடையில் ஏன், எதனால், எவ்வாறு பொருந்திச் சிற்றான்மாவாயிற்று ?. 2. அறியாமை விலக அது மீண்டும் பரான்மாவாகுமெனில் அவ்வாறே மீளத் தொடர்ந்தும் சிற்றான்மாவாகா தென்பதற்கு என்ன உத்தரவாதம்?. 3. எச்சமயச் சாதகர்களும் வேண்டி முயலும் துன்பம் அகன்று பெறும் முத்தியின்பம் இவ்விளக்கத்தில் எவ்வாறு நிகழுகின்றது? விடைகளைச் சிந்தாந்தநோக்கிற் காணலாம்.

அன்றாட வாழ்வில், இன்பமானது, குழந்தையைக் கொஞ்சுவது முதல் இல்லறசுகம், தானம், மற்றும் பெற்றோராரைத் திருப்திப்படுத்துவது ஈறாக **இன்பங் கொடுப்பது, இன்பங் கொள்வது** என்பனவற்றால் அமையும். இவை இரு பொருட்களின் அன்புமயத் தொடர்புகளினாலன்றி நிகழமுடியாதே. அங்ஙனமாயின் நிலைத்த பேரின்பத்திற் கொள்வான் (உயிர்) கொடுப்பான் (சிவம்-பரப்பிரம்மம்) என இருபொருட்கள் சம்பந்தமுற வேண்டுமே. இருகை தட்டவே ஓசையெழும். அவை தனித்தனி இருந்தாலோ ஒருபொருளாய் இருந்தாலோ ஓசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெழாதல்லவா?. இச்சிறு உதாரணம் யாவராலும் புரியப்படுவது. தட்டு நிகழ்ந்ததுவும் காட்சி( ஒளி- தூலபிந்து), சத்தம் (ஒலி– தூலநாதம்), கேட்டதுவும் ஒருசேர நிகழும்போதே இருகைகளும் ஒரேபொருளாகக் காட்சிப்படும். ஒன்றாய அக்காட்சியும் ஓசையும் போன்றதே அத்துவிதமாக உயிரும் இறையுங் கலந்ததாலாகும் பேரின்பநிலை அல்லது சைவசித்தாந்தங் கூறும் அத்துவிதமுத்தி. ஆகவே, அத்துவிதநிலை என்பது இரு வெவ்வேறு இயல்பான பொருட்களின் கலப்பினாலாகும் நிலை. உருகுமியல்பான மெழுகும் உருகாத கல்லும் கலந்தே ஒரு பொருளென நிற்பது பொன்னுரைகல். மெழுகு கல்லின் இயல்போடு ஒன்றாகும். பரமானந்த சுகந்தரும் **சைவமே தலையான நெறி** என்பது: சித்தியார் பா 265

'ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள் நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள் நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.

குருடர் சிலர்கூடி, யானையை யணுகி ஒவ்வொருவரும் ஒவ்வொரு உப்பையே தடவிப் பார்த்துக் கூறிய இலக்கணங்கள் எல்லாம் அவரவர்க்குச் சரியேயாயினும் கண்ணுள்ளான் ஒருவன் கண்டு கூறும் இலக்கணத்துள் அவை ஏகதேசமாய் அடங்குவது போல ஏனைச்சமய நூலார் தத்தமது சிற்றிவுக்குப் புலனானதுபற்றி அவ்வந் நூல்களிற் கூறும் பொருளியல்புக ளெல்லாம் முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பினுள்ளும், வேதாகமங்கள் இறைவனடியிலும் அடங்கும்.

## 7.4 'கிரியையென மருவுவன யாவும் ஞானத்தின் நிமித்தம்'

7.4.1 பரசிவனுடைய திருவடிஞானமே ஞானம். அது கிடைக்க வழி, 'கிரியையென மருவுமவை யாவும் ஞானம் .' -சிவப்பிரகாசம் பா 10

**கிரியாவிதிப்படி** தீக்கைசெய்து, உபாயச்சரியை கிரியை யோகம் அனுட்டித்து முடிந்தால். அதன் பிரயோசனம், பின்பு ஞானவிதிப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுட்டிக்கும்படி கூட்டுவிக்கும். உண்மைச்சரியை கிரியை யோகம் அனுட்டித்தற்கு சாலோக சாமீப சாரூப பதங்கள் வந்தணையும். அச்சிவபுண்ணிய முதிர்ச்சி பாகம் (பக்குவம்) வருமளவும் அப்பதவியி லிருந்த உயிர் பின்பு ஞானத்தையடையும். ஞானம் இருவகை. ஒன்று, அநாதியாய பாசம் நீங்கும்படி உடனாயிருக்கும் திருவருள், மற்றது அத்திருவருளைத் தெளியவோதும் சிவாகமம். தமிழில் மெய்கண்ட சாத்திரங்கள். விஸ்தாரமான சித்தாந்த அறிவு ரௌரவ ஆகமம் அல்லது இதில் ஆங்காங்கே சுட்டப்பட்ட 14 மெய்கண்ட சாத்திரங்கள் கொண்டு குருவின் வழிகாட்டலில் அறியப்பட்டு கொள்கையளவிலாயினுந் தெரிந்து வைத்திருத்தல் அவசியமாம். காரணம், கிரியைகள் ஞானத்தின் பொருட்டே யாற்றப்படவேண்டியவை என ஆகமங்கூறும். வழியை அறிந்து வைப்பவன் சந்தர்ப்பங் கைகூடவே பிறர் துணையின்றி சேரிடம் சேர்வது போல, ஞானவறிவைத் தேடி உள்மனத்தில் அதனை யிருத்திக் காலங்கனிந்து திருவருள் கைகூடச் சிவப்பேறடையலாம்.

7.4.2 **காமிய பலன் தருபவை :- அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு** - குறள். உலக வாழ்விற்குப் பொருள் வேண்டப்படுவதேயாயினும் அதுவே இன்று முதன்மையடைவதால் ஞானநோக்கற்ற கிரியாவான்களுக்கோ அன்றிக் கிரியைகளைச் செய்விப்பவர்களுக்கோ உண்மைஞானம் வாய்க்க வழியில்லை. அத்தகு கிரியை, காமிய பலன்களையே தரும். தீக்கை, ஐவகைவேள்வி ஆதியாம் உபாயக்கிரியை, பக்திநெறி முதலிய கன்மங்கள் முத்தி சாதனங்களல்ல. ஞானமல்லாதன வெல்லாம் அஞ்ஞானங்களே யாதலால் (குறித்த நோக்கோடு – காமியமாகச் செய்யும்) அக்கர்மங்களாற் பந்தமுறுதலேயன்றி வீடுபேறடைதல் கூடாதாம். அஞ்ஞானப் பகுதிகள் எல்லாம் ஒளிமுன் இருள்போல ஞானத்தின் முன்னர் தமது சக்திகெட்டு மடங்கும். அவை ஒழியவே அவையாற் பெறப்பட்ட பந்தமும் நீங்கும். நீங்கவே முத்தி கைகூடுமாதலால் ஞானமொன்றே முத்தி சாதனமாகும். அதனுள்ளும் தார்க்கிகர், சாங்கிகர், மாயாவாதி (சங்கரவேதாந்தம்) முதலியோர் கூறும் ஞானங்களெல்லாம் பாசஞான, பசுஞான பந்தம் அடைவிப்பனவே யன்றி வீடெய்துவிக்க மாட்டா. ஆதலின் இவற்றிற்கெல்லாம் வேறாய திருவடி ஞானமே வீடளிக்க வல்ல ஞானமாம். குறிப்பு - ஐவகை நல்வினைகளில் இரண்டாவதான வைதிகவினை அசுத்தபோகமும்மூன்றவதான அத்தியான்மிக (சிவபூசை) சுத்தாசுத்த போகத்தையும் ஐந்தாம்மந்திர (ஞானநூல் ஓதும்) வினை சுத்த போகமும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஞானத் தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமஞ்சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவர் அஞ்ஞா னத்ததால்
உறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோல தலர்கதிர்முன் னிருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும்முத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞான மென்பர்.'- சித்தியார் பா- 279.

7.4.3. **நிஸ்காமிய கிரியை** : கிரியைகளை நிஸ்காமியமாக ஆற்றி சமூகத்திற்கும் சைவ வாழ்வின் முக்கியத்தை உணர்த்திய ஆசாரியர்கள் அன்றே பலர் இருந்தனர். அவர்கள் கிரியாயோகம் பெற்று ஞானவான்களாயும் இருந்து சமூகத்தில் பெரிதும் மதிக்கப்பட்டனர். அவர்கள் குருத்துவ நிலையில் பிறர்க்கு வழிகாட்டினர். **மெய்கண்ட சாத்திரங்கள், திருமுறைகளிற் பெரும்பாலானவை அந்தணப் பெருமக்களாலேயே ஆக்கப்பட்டாலும் ஆரியச் செல்வாக்கு உமாபதிசிவாசாரியார் போன்றவர்களைச் சமூகத்திலிருந்து ஒதுக்கியது.** விளைவு கொடிக்கவியின் தோற்றம்.'ஆரியன் காண் தமிழன் காண்' என்ற அப்பர் கூற்றுப்படி இறைவன் நீதிவழங்கி, ஏறாத கொடியை உமாபதியாரால் கொடிக்கவி பாடுவித்து ஏறவைத்த நிகழ்வுகள் என்றும் மனத்திருத்த வேண்டியவை. இன்றும் பதி பசு பாசம் உணர்த்தும் கொடிக்கவி ஏற்றியே பல ஆலயங்களில் திருவிழா தொடங்குகின்றது. சிவாச்சாரியார்கள் அவ்வப்போது பிரசங்கங்கள் உபதேசங்கள் செய்தனர். கண்டதும் கையெடுத்துக் கும்பிடுமளவு சிவமயமாகவே வாழ்ந்தனர். இது அவர்களுக்குத் தினம் சிரத்தையோடாற்றும் சிவோகம் பாவனையாலான பலனாம். சிவாக்கினியை தமது அக்கினி காரியத்தின்போது தமது மூலாதாரத்திலிருந்தே தீயெழுப்பித் தீ வளர்த்துக் கிரியைகள் ஆற்றினர். (இந்திய திருத்தல யாத்திரையினை முடித்து, குழந்தைவடிவில் முருகன் வழிகாட்ட, கதிர்காமத்தை வந்தடைந்த பிராமணோத்தமரொருவர் கூறியது இது). இதனால் அன்று கிராமந்தோறும் நாடுதோறும் அளவற்ற அற்புதங்கள் நிகழ்ந்துள்ளதை ஏடுகள், கல்வெட்டுக்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. பெரியபுராணமும் சாட்சியாம். இன்று அந்நிலை இருக்கின்றதா? சில ஆதிசைவர்களை மட்டுமே அறியக்கூடியதாயுள்ளது. ஏனையோர் தமது மூதாதையர் பெயரைச் சொல்லி தாமாகவே ஞானநூலோதாது கிரியையைமட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாக்கிப் பிழைக்கின்றனர். அமைதிச்சூழலில் குருத்துவம் பேணிச் சைவத்தொண்டாற்ற வேண்டாமா?

7.4.4. **சிவதூடனங்கள் சில :-** சிவத்துரோக நாமங்கள் விஷ்ணு சகஸ்ரநாமத்துட் சேர்க்கப்பட்டமை பற்றி அறியப்பட்டுள்ளது. விஸ்ணுவைப் பரமென்னாது காத்தற்கடவுளாகவும் சிவபூசை (ராமேஸ்வரத்தில்) செய்பவராகவும் மட்டுங்கொண்டு அவரை வழிபடும் சைவர்கட்குப் பிறவாயாக்கைப் பெரியோனாய பரமசிவனே மேலானவர். அவரே முழுமுதற்கடவுள். சைவம் சிவசம்பந்தம். குறையுள்ளவன் நிறைவினை நாடிப் போவான். கொடியேற்றம் போன்ற சைவமுறைகள் கிறிஸ்தவத்திலும் பிரதிமையாகக் காட்டப்படுகின்றன. பதி பசு பாச உண்மை தெரிவிக்கும் கொடிக்கவிச் செய்தி அறியாச் சைவர் அதனைக் காணவும் செல்கின்றனர். சிவதூடனத்திற்கு அநேக உதாரணங்கள் உள. தக்கயாகமும் அதன் வீரபத்திரர் தண்டமுமே நற்சான்றாகும்.

விஸ்ணுவை முழுமுதற் கடவுளென மயங்கும் சிலர் சைவத்துள்ளும் ஊடுருவிச் சிவனை அவமதிக்கும் செயற்பாடுகள் களைகள்போல வேரூன்றி வளருகின்றன. தமிழ் நாட்டுச் சோசலிச அரசியல் வாதிகளும் வர்த்தகர்களும் இதற்கு ஊக்கமளிக்கின்றனர். பிரமவிட்டுணுக்கள் சிவப்பிழம்பின் அடிமுடிதேடிய வரலாறு (புராணம்) மறக்கப்பட்டுள்ளது. அகத்தியர் தனது தென்னாட்டு வருகையின்போது சிவதூடனஞ் செய்துகொண்டிருந்த ஆழ்வார்களை அடக்கியமையை முன்னர் கண்டோம். அடிமுடிதேடிய படலத்தை ஞானசம்பந்தர் தமது ஒவ்வொரு பதிகத்திலும் நினைவுறுத்தியதையுந் தெரியாது, சிவராத்திரி வெறும் இந்து விழாவாக, அனுசரணை வழங்குவோரின் விளம்பர விழாவாகவே பெரிதும் நடைபெறுகின்றது. வணிகர் இகவாழ்வினையே மிக விரும்புவதால் சிவபரத்துவம் அறியார். கிருஷ்ணனை - இலக்குமியைப் பொருள் வேண்டி வணங்குவர்.

சைவ வைணவ முரண்பாடுகளின்றி அவ்வத் தெய்வங்களை அவ்வவர் தன்மைகள் (முத்தொழில்) கொண்டறிந்து பிரமவிட்டுணு உட்பட்ட சகலரையும் அழிக்கும் உருத்திரனுக்கும் மேம்பட்ட பரசிவனே முத்தொழிற் காரணன் என்பதால் அவனையே அதிக பற்றுடன் வழிபட்ட சைவர்கள் இன்று இந்துப்பெயரால், பல்வேறுபட்ட அகவேற்றுமைக் குட்பட்டு, மயக்கமடையும் நிலையேற்பட்டதால் சிவபரத்துவம் பற்றிய எண்ணம் கேள்விக் குறியாயுள்ளது. பிரமவிட்டுணுக்கள் சிவசோதியின் அடிமுடிதேடிக் களைப்புற்று ஈற்றில் சிவனிடம் மண்டியிட்டதும், தனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருஞ்சோதி திருவண்ணாமலை எனத் தோன்றிய சரித்திரமும், சிவராத்திரிப்பலனும் கந்தபுராணம் பயிலின் நன்கு விளங்கும்.

**7.5 புராணங்களிற் சிவபூசை :** புராணங்களில் அனேக இடங்களில், தவமுதிர்வில் இறைகாட்சி பெறும்போதெல்லாம் (கந்த, மற்றும் திருவிளையாடற் புராணத்தில்) அவ்வத் தேவர்கள் க்ஷணலிங்கம் அமைத்து சிவபூசையாற்றிப் போற்றித்துதித்த செய்திகள்பல. அதிலவர்கள் மேற்கொண்ட கிரியை வழிமுறைகளும், சிவன் வெளிப்பட்டு அருளியபோது பாடப்பெற்ற தோத்திரங்களும் அழகான பாக்களால் இயம்பப்பெற்றுள்ளன. (அ) தக்ஷிணகைலாய (திருக்கோணேஸ்வர) புராணத்தில் வரும் நாலாம் அர்ச்சனாவிதிச் சருக்கத்தில் கிரியைமுறைகள் தத்துவ விளக்கங்கள் 7.21ற் கூறப்பட்டன. (ஆ) இதில் அடிமுடிதேடிக் களைத்த பின் சிவபூசையாற்றி மன்னித்தருளப் பெற்ற பிரமவிட்டுணுக்களால் **தோத்திரமாகப் பாடப்பட்ட சிவபூசைக்கு உகந்த பாக்கள்:**

1) 'இருவருமச் சிவனுருவை யியன்முறையாற் றாபித்து
விரைமலர்மஞ் சனஞ்சாந்தம் விளக்கழலா தியவமைத்து
பொருவருபூ சனைபுரிந்து போற்றிசெய்து வணங்குதலு
மெரிகெழுசோ திக்கணித்தா யெந்தையவண் வந்தனனே'

2) 'மைக்களமு மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்'

(இ) **திருவிளையாடற் புராண இந்திரன் பழிதீர்த்த படலம் :**

1) 'முந்தவம ருலகடைந்து பூசனைக்கு வேண்டுவன முழுதுந் தேர்வார்,
வந்துதரு வைந்தீன்ற பொன்னாடை மின்னுமிழு மணிப்பூண் வாசச்,
சந்தனமந் தாகினிமஞ் சனந்தூபந் திருப்பள்ளித் தாமந் தீபம்,
அந்தமிலா னைந்துநறுங் கனிதீந்தேன் றிருவமுத மனைத்துந் தந்தார்.'

2) 'தெய்வதா மரைமுளைத்த தடம்படிந்து பவந் தொலைக்குந் திருநீறாடிச்
சைவத்தாழ் வடந்தாங்கி யன்புருவா யருளுருவந் தானாய்த் தோன்றும்,
பைவைத்தா டரவார்த்த பசுபதியை யவனுரைத்த பனுவ லாற்றின்,
மெய்வைத்தா தரம்பெருக வருச்சனைசெய் தானந்த வெள்ளத் தாழ்ந்தான்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) 'பாரார வட்டாங்க பஞ்சாங்க விதிமுறையாற் பணிந்துள் வாய்மெய்
நேராகச் சூழ்ந்துடலங் கம்பித்துக் கும்பிட்டு நிருத்தஞ்செய்து
தாராருந் தொடைமிதப்ப வானந்தக் கண்ணருவி ததும்ப நின்றன்
பாராமை மீக்கொள்ள வஞ்சலித்துத் துதிக்கின்றா னமரர் கோமான்'.

4) 'அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
எங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி'.

5) 'யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் பேற்றி'.

6) 'இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீர்த்துன்
அடியிணைக் கன்ப னாக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாள போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி'.

6) 'பூசையும் பூசைக் கேற்ற பொருள்களும் பூசை செய்யும்
நேசனும் பூசை கொண்டு நியதியிற் பேறு நல்கும்
ஈசனு மாகிப் பூசை யான்செய்தே னெனுமென் போத
வாசைன யதுவு மான மறைமுத லடிகள் போற்றி.'

(யானென தற்று யாவும் சிவமயமென்பது இதுவாம். பூசையைச் சிவனுக்கு ஒப்புக் கொடுக்கும் வடமொழிச் சுலோகமும் உண்டு.)

## 7.6 நிலத்தளவேயாகுமாம் நீராம்பல்- சைவச்சூழலின் அவசியம்

7.6.1. பூசகரின் தரத்திற்கேற்ப இதுவரைகூறிய பாடல்களிற் தெரிந்தவற்றைப் பாடமாக்கிப் பூசையிற் **பொருத்தமான இடங்களில் இசைத்தல் நன்று.** குறைந்தது முதலாந் தீட்சையேனும் பெற்ற ஓதுவார் நிலையில் உள்ளவர்கள், உறவினர், அடியார் துணையுடன், அவர் அவ்வவ்விடங்களில் மேற்குறித்த ஒழுங்கில் (அத்.6) பூசையில் அவற்றை ஓத, விஷேடதீட்சை (அதிகாரபூசகர், மடாதிதிபதி போன்றோர்) அபிடேகித்து பூசிப்பது சாலச்சிறந்தது. (விசேடதீட்சையின்மேல் சாதகாபிடேகம்பெற்ற சாதகர் பரார்த்தத்தில் வேதம் ஓதுவோர், ஓதுதற்குத் தமது உடலாற்றல் போதாதெனச் சாட்டி ஆசாரமற்று ஒழுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் தகாது. திருமுறை ஓதுவோருள்ளிட்ட யாவரும் சந்தியாவந்தனமும், சாதகராயின் சிவபூசை ஆற்றலும் அவசியம். சமூக தர்மமும், சிவனின் சினஏறும் தூங்குவதில்லை.

7.6.2 நிறுவன மயமாக்கப்பட்ட இந்து, சைவ சபைகள், மன்றங்கள் அமைச்சினதும் மற்றும் சிரேஷ்ட சிவப்பிராமணர் வழிகாட்டலிலும் மேலவற்றை (பிரதானமாக ஆன்மார்த்தத்தை) மேற்பார்வைசெய்ய வசதிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இராசராசன், மற்றுமுள்ள சோழமன்னர் மாருதப்புரவீகவல்லி முதலிய அரசர்கள் காட்டிச் சென்ற வழியை அறிந்து பேணின் சைவசமூகச் சீரழிவுகள் எழ நியாயமில்லை. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பது போன்றதே குருக்கள், தர்மகர்த்தாக்கள் ஆசாரியார், மற்றுமுள்ள அடியாருமாம்.

7.6.3. இன்று கோவில்கள் அதிகம் பணம் புரட்டும் கைங்கரியத்தை மேற்கொள்கின்றன. பெரிதும் நகர்ப்புறங்களில் இது காணப்படுகின்றது. பலபூசகர் ஊதியங் கருதியேயன்றிச் சிவசேவைக்கென வெளிநாடு செல்வதில்லையாம். இதனால் கிராமியக் கோயில்கள் பூசகரற்று ஒருநேரப் பூசைதன்னும் இன்றியிருக்கின்றன. ஒருவரே பலகோயில்களுக்கு ஓடியோடிப் பூசைசெய்வதால் அவர் தனது அன்றாட சந்தியாவந்தனம், ஆன்மார்த்த பூசைகளை பெரும்பாலும் தவிர்ப்பதும். திடமற்ற பூசைநேரங்களால் அடியார்கள் சிரமப்படுவதும், பூசையைப் புறக்கணிப்பதும், அடிக்கடி பூசகரை மாற்றுவதும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதில் நன்மாற்றம் கொணரல் அவசியம். சைவாசாரமும் அதிகுறைந்தது முதலாந் தீட்சையாயினும் பெற்றவர்களை சரியை முதலாய தொண்டுகளால் விசேடதீட்சைக்கு உரியவராக்கி அத்தீட்சையினை அவருக்கு வழங்கி, ஆகம விதிப் பிரகாரம் அமைக்கப்படாத ஆலயங்களிற்றானும் நித்திய பூசையாற்றச் செய்தல் இடைநிலை ஒழுங்காகலாம். இம்முறையால் நற்பயன் பலவுண்டு. பிராமணரல்லாதார் மாட்டு விழிப்புணர்வும், சமயஈடுபாடும் தாமும் இறைபணிக்கு உரியோமென்ற பெருமையும் உடைத்தாகி சமூகத்தில் மதிக்கப்படுவர். ஆகம விதிமுறைக் கோவில்களில் விசேஷ நைமித்திய தினங்களில் ஆசாரியார்கள் வரவழைக்கப்படலாம். இதற்கு அந்தணர்கள் பேருள்ளத்துடன் தாம் பூசைசெய்யும் ஆலயச்சூழலை சிவமயமாக்கித் தாமும் திருமுறையோதல் முதலிய வழிபாடுகளை ஊக்கி தீட்சைகொடுத்தல் வேண்டும். இவ்வாறு சிவனருள்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று சிவசேவையாற்றலே தமது ஊதியமென்போர்க்கு சிவனே வாழ வழிசமைப்பர். நாளை உணவையோ உடையையோ சிவனே அடியாரால் வழங்குவர். அருட்செல்வமே செல்வத்துட் செல்வமாம்.

7.6.4. மேற் கூறியவற்றோடு, இப்பிரச்சனையைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அரச, மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் சமய, சமூகப் பெரியார்கள் முன்வரவேண்டும். வெளிநாட்டு மற்றும் அரச உதவிகளுடன் ஆலய கட்டடங்கள் பல்கிப் பெருகினாலும் அவற்றின் சமூகம்சார் சமயம்சார் செயற்பாடுகள் பண்டுபோலாவதில்லை. அன்று ஒரு தெய்வீக விருட்சத்தடியில் (பின்னரவை தலவிருட்சமாயின) ஒரு சூலத்தினையோ, வேலினையோ, நடுகல்லையோ (தாணுவாக, சிவமாக) வைத்து, சாணியால் மெழுகி தோரணங்கட்டல். மாலை சூட்டல் முதலிய சரியைத் தொண்டுகளைப் பயபக்தியுடன் தாமாகவே 'சலம் பூவொடு தூபம் மறந் தறியேன் தமிழோடிசை பாடல் மறந் தறியேன்..' என அப்பர் புகன்றதன் பிரகாரம் பூசையாற்றியதன் பலன் இன்றைய பொருளாதார மயப்படுத்தப்பட்ட கோயில் வணக்கமுறைகளாற் பெறப்படுகின்றனவா?. சைவர்கள் பிராமணரிடம் கோயிற் கடமைகள் மற்றும் சமயக் கிரியைகளை ஒற்றிபோற் கொடுத்து, அவர்களுக்குப் பணஞ்செலுத்தினாற் போதுமென நினைந்து தமது தொழிலிலேயே அக்கறையாயுள்ளனர். சைவாசாரம் பேணிச் சரியைநெறி நிற்போர் அரிதாகி, ஆசாரமுமற்று, ஸங்கல்ப்பம் செய்யவும் பிறரையனுப்பும் நிலைக்கு சைவந் தள்ளப்பட்டு வருகின்றது.

7.6.5. கந்தபுராண, பெரியபுராண, திருவிளையாடற்புராண. தக்ஷண கைலாய மெனும் திருக்கேதீஸ்வர மான்மிய மற்றுமுள்ள தல புராணங்களில் வரும் திருநாட்டு, திருநகர்ச் சிறப்புக்கள் பேசப்படுவதைப் படித்தறிந்தால் இதிற் கூறியவற்றின் உண்மைகள் மேலுஞ் சிறப்பாக அறியப்படும். பின்வரும் பாடல்கள் மலை, ஆறு மற்றும் நாட்டு, நகர் வளங்களையும், மக்கள் வாழ்வின் சிவமுத்தமிழ், மற்றும் வேதாகமங்கள், அவற்றின் ஓசைகள், அந்தணராற்றும் ஓமப்புகைகள் பரந்து, சிறந்து அதன் பலனாக சைவ, வேதாகமப் பண்பாடுகள் திருக்கோயிற் சூழலிற் பெருமையுற்று சிவபூசைக்காய நினைவைத் தோற்றுவித்தமையையும் தெளிவாகத் தருகின்றன.

(அ) கந்தபுராணம் (திருநகரப்படலம் பா 36, 37, 41,42,49,51,54.)
1) 'பாடு நான்மறை யந்தணர் வேள்விகள் பயில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடு தண்புகை யண்டமுங் கடந்தன முன்னர்
தேடு கின்றதோர் பரஞ்சுடர் மீண்டுமித் திறத்தால்
நீடு கின்றதோ என்றுநான் முகத்தனும் நினைய' - பா 36

2) 'நான்ம றைக்குலத் தந்தணர் நவையறு காட்சி - (குற்றமில் காட்சி)
ஊன்ம றைத்திடு முயிரென வோம்பிய வொழுக்கார்
மேன்மு றைக்கணோ ரைம்புலப் படிற்றினை வென்றோர்
வான்ம றைத்திடு மாளிகை வீதியும் மலிந்த' - பா 37

(இது திருமுருகாற்றுப்படையில் வரும் திருவாவிநன்குடி - பழனிப் பாடலின் சில வரிகளை நினைவூட்டுகின்றது. அவற்றின் சுருக்கம்:-
1) சீரை தைஇய உடுக்கையர், சீரொடு வலம்புரி புரையும் வால் (வெண்மை) நரை முடியினர், (சிவனடியார்களின் திருமுடியழகு),

2) மாசு அற இமைக்கும் உருவினர், (கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம். கண்ணோட்டம் என்பது கழிவிரக்கம். இல்வாழ்வானுக்கு அன்பு போல, துறவிக்கு- ஞானிக்கு அருள்).

3) மானின் உரிவை தைஇய ஊன்கெடு மார்பின் என்பெழுந் தியங்கும் யாக்கையர், (தவ நலிவினால் உரித்த மானினுடல் போன்றவர். 4) நண்பகல் பலவுடன் கழிந்த உண்டியர், (அந்தி உணவை உண்பவர்).

4) இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர், (பகை, கோபமற்றவர்) 5) யாவதும் கற்றோரறியா அறிவினர் (பஞ்சப்புலனாற் பெறும் அறிவின்றி இறை காட்டக்காணும் பதியறிவெனும் குற்றமற்ற, முக்காலமும் அறியும் பேரறிவினர்). 6) கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர், (பதியறிவே தலைமையறிவு என்பதால் யாவர்க்கும் உபதேசியென விளங்குபவர்), 7) காமமொடு கடுஞ் சினங் கடிந்த காட்சியர். (காம வெகுளி மயக்கற்றவர்). 8) இடும்பை யாவதும் அறியா இயல்பினர், (துன்ப நுகர்வு அற்றவர்) இத்தகைய தவவொழுக்கம் மிக்கோரே பழனியாண்டவரைக் காணச் செல்லும் தேவர், முனிவர், மும்மூர்த்திகள் முன்பாக அணிவகுத்துச் செல்கின்றனராம். மேலும்,

3) கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருவி
கொண்ட வைம்புல னொருங்குற நடாத்திய கொள்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் கூட்டமும் விழிவழிப் புலனுகத் தொழுங்கை
அண்டர் கூட்டமும் ஆலயந் தொறுந்தொறு மறாவால்' - பா41

4) 'ஆதி நான்முகன் எகினத்தி னடிகளு மமலன்
பாதி யாளன்றன் உவணத்தி னடிகளும் பனிக்கார்
நாத னூர்தரு தந்தியி னடிகளும் நாளும்
வீதி வீதிக டொறுந்தொறுங் காண்வர விளங்கும்' - பா42

எகினம் - அன்னம், கவரிமான், பாதியாளன் - சிவனின் ஆண்மைச் சக்தியாகிய விட்டுணு, உவணம் - விட்டுணுவின் கருடவாகனம், பனிக்கார் நாகன்ஊர்தரு தந்தி – இந்திரனின் வாகனமான யானை. அவ்வக் கடவுளர்களின் வரவுகள் அவரவர்களின் வாகனங்களின் காலடிகளால் ஊகிக்கப்பட வேண்டியவையாம். இனி, பா 49,51,54.

5) 'வெள்ளை யாதி வியன்கவி யாவையுந்
தெள்ளி தின்மொழி தென்கலை யேமுதல்
உள்ள பல்கலை யோதுகின் றார்களும் - (பல்கலை ஞானம்)
வள்ளி யோர்களும் மன்றுதொ றீண்டுவார்.' - (குறிஞ்சிப் பெண்கள்)

6) பண்ணி ணோசையும் பானலை வென்றிடுங்
கண்ணி னார்கள் களிநட வோசையுந்
தண்ண ரம்பிய ரந்திரி யோசையுந்
விண்ணு ளோர்களும் விருந்தென லாயதே'.- (பண்ணும் பரதமும்)

7) 'பண்ணுளர் நரம்பியல் பாணிக் கேற்றிட
எண்ணுள கணிகைய ரினத்தொ டாடலுங்
கண்ணுள ராடலுங் காம னாடலும்
விண்ணுள ராடலும் வெறுப்ப மேவுமே'. - (யாழிசையும் நடனமும்)

ஆ) **பெரியபுராணம் :- குறிப்பு:-** தமிழானது. முத்தமிழாய் மட்டுமன்றிச் சிவமுத்தமிழாய் விளங்குந் திறனை நோக்கி மேலுஞ்சில சிந்திப்பதற்குரியன. புராண சம்பிரதாயம் அல்லது புராண கலாசாரமானது சமய அறிவு அனைத்தையும் அடக்கி எம்மை வழிப்படுத்தலால் சிவபூசைபற்றிய இந்நூலிலும் அதன் நற்றாக்கத்தை உணரவேண்டியது நங்கடமை. கடவுளரும், தேவரும், அசுரரும், மானிடரும் சிவபூசையாற்றியமை பற்றிய செய்திகள் எல்லாச் சைவபுராணங்களிலும் உண்டு. சிவபூசையென்பது பிராமணரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமானிய கடமைகளிலொன்று என மதிப்பிடாது அது அதியுயர்ந்த சிவபுண்ணியமென விளங்கி அதனைப் போற்றும் அடியார் சமூகம் உருவாகவேண்டும். சிவபூசைக்குத் தகுதிபெற்ற யாவரும் அப்பூசகரின், அவர் பூசிக்கும் இடத்தின் அக, புறச் சூழலில் சிவச்சார்பு மிளிரச்செய்யவேண்டும். அதற்கெனவே சிவபூசைக்கு அனுசரணையான கருத்தமைந்த சித்தாந்தவிளக்கம், புராண எடுத்துக்காட்டுக்கள், சிவனடியார் செய்திகள் என்பன தரப்படுகின்றன. இவற்றை அறிந்து பலன்பெறல் சிவபூசையினருக்கு ஓர் உந்துசக்தியாயமைந்து அச்சூழலைச் சிவலோகமாக்கி அண்டினோரையும் வாழ்விக்கும்

1) 'பக்தியின் பாலராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்துநீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மைபோல விளைந்தன சாலி யெல்லாம்'
(சாலி - நெல்). தத்தமிற் கூடல் - சங்கம வழிபாடு.

2) 'அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பும்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்.'

(விளைநெல்லை அரசு, அறம், குலதெய்வம், பிதிர்கடன், உறவு, புதுவிருந்து என்பவற்றிற்குப் பகிரல். இல்வாழ்வானின் இவ்வைந்து தருமத்தை வள்ளுவரும் 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.'என்றார்.) 'கரும்படு களமார் ..' எனும் 27ம் பாடலில் 'யூபவேள்விப் பெரும் பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ?..' என்றும். 28ல், பூசனைக்காய பூக்களைத் தரும் மரங்கள், தெய்வத்தன்மை பொருந்திய மரங்கள் பற்றி அழகிய பாடலாற் தரப்படுகின்றது.

3) 'நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளிரும் பொந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்.' (28)

நாளிகேரம் - தென்னை, நரந்தம்- நாரத்தை, மேலும் அரசு, ஆல், குரா, நாவல், பனை, கடம்பு, சந்தனமரம், நெல்லி ஆகிய விருட்சங்கள் பேசப்படுகின்றன. அக்காலத்தில் அவை இறையமர் இடங்களாகவும் பின்னவை தலவிருட்சங்களாகவும் சிறந்துள்ளன. 29ல் மா, பாதிரி, நந்தியாவட்டை, சுரபுன்னை, குங்கும, சாதிமல்லிகை, குருக்கத்தி, மகிழம், கமுகு, புன்னை, தாழை மரங்களும், அடுத்த பாடலில் மாந்தர் செய்கைகளின் தெய்வீகமும் பேசப்படுகினறமையால் சைவச்சூழலின் அவசியம் உணர்த்தப்படுகின்றது.

4) மங்கல வினைகள் எங்கும் மணஞ்செய்கம் பலைகள் எங்கும்
பங்கய வதன மெங்கும் பண்களின் மழலை எங்கும்
பொங்கொழிக் கலன்கள் எங்கும் புதுமலர்ப் பந்தர் எங்கும்
செங்கயற் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும்'.

5) 'மேகமும் களிறும் எங்கும் வேதமும் கிடையும் எங்கும்
யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும்
யோகமும் தவமும் எங்கும் ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்கும் புண்ணிய முனிவர் எங்கும்.'

(கிடை – வேதமோதும் இடம், மறுகு – தெரு, போகம் - இல்லறம், முனிவு – துறவு). மேலும் இசை, இசைக்கருவி, செம்பஞ்சிக் குழம்பினராய பெண்கள், அடியார் திருமடங்கள், அத்தி, பலாமரச் சோலைகள் என்பன 32 இலுங் காணலாம். 33, 34 என்பன பாவாக தரப்படுகின்றன. (ஆரபியிற் படிக்கலாம்)

6) 'மாடுபோ தகங்கள் எங்கும் வண்டுபோ தகங்கள் எங்கும்
பாடும்அம் மனைகள் எங்கும் பயிலும்அம் மனைகள் எங்கும்
நீதிநிகே தனங்கள் எங்கும் நீடுகே தனங்கள் எங்கும்
தோடுசூழ் மாலை எங்கும் துணைவர் சூழ் மாலை எங்கும்'

(போதகம் - கன்றுகள், கேதனம் - கொடிகள், நிதி நிகேதனங்கள் - சேமவைப்புகள் - வங்கிகள், துணைவர் சூழ் மாலை - ஆடவரும் பெண்டிரும் சேரும் மாலைப் பொழுது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) 'வீதிகள் விழவின் ஆர்ப்பும் விருந்தினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா தனயரும் மனையிற் தப்பா
நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப் புள்ளும் மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தான் அஞ்சும்'

(விழ– விழா, சமுக, திருத்தல கடமைகள் பலவகைத் தாதலின், அவை பல்வேறு குழுக்களிடையே வகுக்கப்பட்ட ஒரு குறித்த ஒழுங்கில் அரச மற்றும் சமூகப்பெரியார் மேற்பார்வையிற் சிறப்பாக ஆற்றப்பட்டன. அதனால் யாவரும் ஒரே நோக்கிற் செயற்பட்டதை மிக அண்மைக் காலம்வரை அவதானிக்க முடிந்துள்ளது. அவரவர் தங்கடமையை உரிமையோடும் அக்கறையோடும் பரஸ்பர அன்புடன் ஆற்றியதால் 'சாதிகள் நெறி-வழியிற் தப்பா' வென்றார்.

தம்மக்கள் தாயின் அன்பையும், தந்தையின் அறிவையும் பெற்றுப் போற்றிக் குலமாண்பு அல்லது குடிப்பெருமை காத்தனரென்பதால் 'தனயரும் மனையிற் தப்பா' என்றமையால் அவை சமூக, குடும்ப ஒழுங்கிற்கு அவசியமாதல் காண்க. அத்துடன் மானிடர்க்கு வரும் பௌதிக- பஞ்சபூத, ஆத்மிக- மானிட, மிருக, தைவிக- கெடுவியா திகளாகிய மூவகைக் கேடுகளில், 'நமசிவாய' ஓதும்நெறி தெய்வத்தால் வரும் பிணிகளையோட்டும் என்றார். காரணம் 'பிணியே பிணிக்கு மருந்தே' யென்பது ஆன்றோர் வாக்கு. 'நமசிவாயம்' என்பது பாதாதிகேசமான மகாவைத்தியநாத சிவனின் பெயர். ஆதலின் அப்பெயரால் அவனை நினைந்தாற் பிணியோடும் என்றார்.

இவற்றையெலாம் அறிந்து நடைமுறைப்படுத்தின் புராணகால நாட்டு, நகர்ச் சிறப்புகளை யாமும் இன்றேயடையலாம். தர்மம் சுழல்சக்கரம் போன்றது. போர்ச்சூழல்கள் புராணகாலந்தொட்டு இன்றுவரை நிகழ்ந்து இடையிடை ஓய்வுவரும் போதெல்லாம் தருமம் மீள நிலைத்தமை சரித்திரம். இன்றும் அவ்வாறாய நற்சூழல் தெரிவது நாம்செய்த புண்ணியமேயாம். இதற்குத் தேவாலயங்களின் அருகில் மடாலயங்கள் அமைத்து, நாவலர் வழியில் புராணபடனம், சமயப்பிரசங்கம், திருமுறையோதல், அதனாய்வு, சைவசித்தாந்தப் பயிற்சி, சமயகுரவர், சந்தானகுரவர் குருபூசைகள், சைவம் பெருக்கும் முத்தமிழ்க் கலைகலாசார நிகழ்வுகள் ஆற்றப்படல் அவசியம். மேலும் இசைப்பெரியார்கள், கலைகள் மூலம் சிவப்பயிர் வளர்த்த சான்றோர்கள், கலைஞர்கள் நினைவாக, அவ்வக் கலைஞர்களின் ஊர்கள்தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைநிகழ்வுகள், கருத்தரங்குகள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும். நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மக்களைக் கவரும்படியான நிகழ்ச்சிகளால் சிவப்பணியாற்றல் சுலபமானதும் அவசியமானதுமாகும்.

**7.6.6 காணொலி :** இதனாற் காலைமுதல் மாலையீறாக வெறுமனே 'அரைத்த மாவைத் திரும்பத்திரும்ப (வெவ்வேறு பெயரில்) அரைப்பது' போலச் சினிமாவையே மையப்படுத்தி நிகழும் பலவகைப்பட்ட ஊடக நிகழ்ச்சிகளாற் சலிப்புற்றுள்ளோர்க்கு 7.6.5ற் கூறிய முறைகள் நல்வரப்பிரசாதமாகும். காணொளியிற் தனிப்பட்ட, குழுமயப்பட்ட அல்லது சமூகமயப்பட்ட தரமான கலையாக்கங்கள், சிந்தனைகள் குறைவு. இளைஞர்களுக்கு, சிறார்களுக்கு மூளைச்சலவை செய்து, சினிமாவில் பட்டம்பெறுதல் போன்ற நிலைக்கு பலர் தள்ளப்படுகின்றனர். மிகநுட்பமான கேள்விகளால் இளைஞர் திக்குமுக்காட்டப்படு கின்றனர். பலன் யாது? அந்தோ பரிதாபம். மனப்பாடம் இன்றைய கல்விமுறைக்குத் தேவையில்லையென நவீன கல்வியியலாரின் புதுக் கண்டுபிடிப்பால் அன்று 100க்கு மேற்பட்டபாடல்களை இலக்கியம், சமயம், தமிழிற்காகப் பாடமாக்கியநிலை மாறி இன்று மிகமிகக் குறைந்தளவு பாடல்களை மாணவர் பாடமாக்குகின்றனர். ஆனால் சினிமாப் போட்டிக்காகச் சிறுவர்களும் அன்றுதொட்டு இன்றுவரையான பாடல்களையும் அவற்றின் படப்பெயர் முதலிய முழுவிபரங்களையும் தெரியத் தள்ளப்பட்டுள்ளனர். இப்போக்கினால் சினிமாக்காரர் ரியூசன் வகுப்புகளை ஒழுங்கு செய்யும் நிலையும் வரலாம். இவைபற்றி பெற்றார், சமூக அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் ஆய்வுடனாய நடவடிக்கைகளால் சமூகத்தை அழிவிலிருந்து காக்கவேண்டும். இயல்பிற் தெய்வீகந்தரும் பிரணவமூர்த்தமெனும் காலை மாலைகளிலும் சதுராட்டங்களே (பௌத்தநிகழ்வுகள் தவிர) காட்சிப்படுகின்றன. அண்மைக் காலத்திலிருந்து சினிமாவிற் சலிப்பு தென்படுகின்றது.

மேலும் திருக்குறள், திருமுறைகள், நல்வழி மற்றும் நீதிநூற் பாடல்கள் என எல்லாமாகக் குறைந்தது 100, 150க்கு மேற்பட்ட பாடல்களை 12, 13 வயதிலேயே மாணவர் மனப்பதிவு செய்தனர். இது பாடநூல்களாலும் குடும்ப மூத்தோர்களாலும் முன்னெடுக்கப்பட்டது. பிற்காலத்தில் அவர்கள் அப்பாடல்களின் பயனாற் பண்பாகவாழப் பழகிக்கொண்டனர். இதற்கு அனுசரணையாக தமிழ், இலக்கியம், சமயம் ஆகிய பாடங்களில் மனப்பாடம் செய்யும் அன்றைய முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மிகக் குறைவடைந்துள்ளது. பிரபல தென்னிந்திய பாடலாசிரியர் ஒருவர் தமது பேட்டியின்போது, சிறந்த பாடல்களை மனப்பாடம் செய்ய வேண்டிதன் அவசியத்தை அனுபவமூலம் நன்கு விளக்கிக் கூறியிருந்தார். சிறந்தவை யெனும்போது அவை காலத்தால், கருத்தால், பயன்பாட்டால் அழியாதவையென்றே பொருள்படும். அத்தகையனவே அன்று பெற்றார்களாலும் ஆசிரியர்களாலும் (பாடத்திட்டத்திற்கு அமையவும் மேலதாகவும்) சிறார்களுக்கு ஊட்டப்பட்டன.

7.6.7. **ஆலோசனைகள் :** மேற்கூறிய விடயங்களை முறைப்படி ஆற்றின் சமயமும் பண்பான சமூகமும் மகிழ்கூர வளருமென்பதில் சற்றும் ஐயமில்லை. எத்தகைய நிகழ்வாயினும் அதிற் புதுமை வேண்டப்படுவது இயல்பேயாயினும் பழமையிலும் புதுமை காணலாம். சிவன் பழமைக்கும் பழையன் புதுமைக்கும் புதியன். ஆகவே சமய, கலாசார நிகழ்வுகளில் பழையமரபு தவறாத, பாரம்பரியம் காக்கின்ற கருத்துக்களுக்குச் சேதமின்றி புதிய மதிநுட்பங்களோடும், தொழில்நுட்பங்களோடும் மாற்றங்கள் ஆற்றப்படவேண்டும். குளிக்கப்போய்ச் சேறுபூசுவதாக அமையின் ஜனநாயக சமூகம் அதனை விரைந்து ஒதுக்கும். கடந்தகால முக்கிய பகீரதப் பிரயத்தமான நிகழ்வுகள் 'சிறு பிள்ளை வெள்ளாமை வீடு வந்து சேராது' என்றவாறாய் அமைந்த துன்பியலை யாரும் அறிவர். எனவே குருவருளும், திருவருளும், சமய, சமூகப் பெரியார்கள் ஆலோசனையும் ஆசியும் எதற்கும் பிரதானமாகும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற மரபை மீளவுணரல் நன்று. இம்மரபுகள் நிட்சயமாகக் காக்கப்பட வேண்டும்.

## 7.7. பிணியே பிணிக்குமருந்தே அபிராமிப்பட்டர்

'காதார் குழையாட' எனத் தொடங்கும் திருவெம்பாவில், 'பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளை' என சக்தி திரோதான (பேதித்தல்- மறைப்பு)ச் சக்தியாகச் சுட்டப்படுகின்றாள். அவள் எதை ஏன் மறைக்கவேண்டும்? என்ற வினாவெழ நியாய முண்டு. அதன் விடை, சைவசித்தாந்த விளக்தினூடாகவே பெறப்படும். ஏலவே அத்.7ல் பொதுவாகச் சுட்டப்பட்டதால் மீளவும் சிந்தித்தல் பொருத்தமானாலும் சித்தாந்தநூல்களிலும் திரோதானம் பற்றிக் காண்க. சுருக்மாகக் கூறின்:-

வாக்கு மனாதீத கோசரப் பொருளாய (வாக்காலும் மனதாலும் எண்ணமுடியாத, ஆனால் அவன் காட்டக் காணும் பதிஞானத்தால் அகப்படும்) சிவனை அவள் மாயையால் மறைக்கின்றாள். திரோதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இம்மாயை சுத்தமாயையென சிவதத்துவம் ஐந்தாயும், சுத்தாசுத்தமாயையென வித்யாதத்துவம் ஏழாயும், அதன்கீழ் ஆன்மதத்துவமென 24ஆயும் (எல்லாமாக 36 தத்துவங்களாய்) சத்தி தானே பரிமளித்ததுநின்று சிவஆணையால் ஐந்தொழில் ஆற்றுவாள். படைத்தல் முதலாய ஐந்தொழில்களைச் சக்தி ஆற்றுகையில் உயிர் உலகில் வினைகளை ஈட்டி அனுபவங்களைப் பெற சிவசிந்தனை திரோதத்தால் மறைக்கப்படும். **குறிப்பு:** 'இலர்பல ராகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோலா தவர்' — குறள். நோன்பு — மனவடக்கம். மனம் பொறிவழிச் சென்று வினையாற்ற திரோதமறைப்பு வேண்டும். இலர் என்பது, பொறியடக்கமின்றி வினையாற்றியதாலாகும் வறுமையாகிய மெய்ஞ்ஞான நுண்ணுணர்வு, திரோதமறைப்பால் இல்லாதவர். அனேக பிறவிகள் தோறும் வினையாற்றிக் களைப்படைந்து நல்வினை தீவினை யிரண்டாலும் தான் மீளமீளப் பிறப்பிலே ஆழ்த்தி விடப்படுதலை உண்மைச் சரியை கிரியா யோகமெனும் முன்னைய சிவபுண்ணியங்களால் உணர்ந்த உயிர் தன்முனைப்பற்று இருவினைகளையும் சமநோக்கிற் கண்டு, மலபரிபாகம் பெறுவதால், யாவும் சிவன்செயலெனச் சரணாகதி நிலையில் நிற்கும். அப்போது அதற்கிரங்கி, இதுவரையிருந்த மறைப்பாற்றலை நீக்கி, திரோதானசக்தி பராசக்தியாகிக் குருவடிவெடுத்து, தீட்சைகொடுத்துச் சிவனோடு அணைவிப்பாள். இவ்வாறு வேறுபடுதலின் அவள் 'பிணியே பிணிக்கு மருந்தே' யென்றும், 'அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை யெல்லாம்' என்றும் பேசப்படுகின்றாள். ஆதலின் சக்தியை, முற்கூறிய விளக்கப் பிரகாரம், சிவனின் லயாங்க, போகாங்க வடிவில் பூசித்தல் அவசியமாகும். பஞ்சகிருத்தியத்தினால் சிவன் உயிர்களை ஆட்கொள்ளுதலையே 'சிவாயநம' குறிக்கும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.8 அட்டமூர்த்தம் :** (பண்டிதர் வி. சங்கரப்பிள்ளையவர்களின் 'சிவத்திருவடிவங்கள்' நூலாதாரம): நிலம் நீர் தீ காற்று ஆகாசம். சூரியர் சந்திரர் ஆன்மா எனும் எட்டும் சிவபெருமானுடைய அட்டமூர்த்தங்களாம். இவற்றையதிட்டிப்பவர் அப் பரம்பொருளே யாவர் (அதிட்டித்தல் - மறைந்துநின்று செலுத்துதல்). இதனாலவர் உலகிற்கு மெய்ப்பொருளாய், கண்ணின்மணியாய், தோன்றாத் துணையாய்நின்று தன் அட்டமூர்த்தவடிவிற்கு ஆன்மாக்கள் பூசையியற்றி, பவாதிநாம அர்ச்சனையாற்றி உய்யும் வழி சமைக்கின்றார். பிருதுவி ரூபமான விக்கிரக வணக்கமும், கங்கை முதலிய தீர்த்தவணக்கமும், நித்திய நைமித்தியங்களிற் செய்யப்படும் அக்கினி வணக்கமும், பஞ்சபூத தலங்களிற் செய்யப்டும் பஞ்சபூத லிங்கவணக்கமும், சிவபூசை முதலியவற்றிற் செய்யப்படும் சூரிய சந்திர வணக்கமும், குருவையும் சிவனடியாரையும் சிவனாகப் பாவித்து வணங்கும் சங்கம வணக்கமும் அட்டமூர்த்த வணக்கங்களே. பவன்- அப்பு, ஸர்வன்- பிருதிவி, ஈசானன்- வாயு, பசுபதி- தேயு, உக்ரன்- இயமானன் (ஆன்மா), ருத்ரன்- சூரியன், பீமன்- ஆகாசம், மஹாதேவன்- சந்திரன். இவை இம் மந்திரங்களின்(26) பொருள்களாம்.

'விருட்ச மூலத்திலே இறைத்த நீரால் அந்த மரச்சாகைகள் புஷ்டி அடையுமாறு போல சிவபூசையினால் சிவன் சரீரமாகிய உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிக்கின்றது. அட்டமூர்த்தத்தின் மூன்றாம் வடிவான ஆன்மா ஏனை மூர்த்தங்களுக்குள்ளே வியாபகமுள்ளதா யிருத்தலால் உலகமனைத்தும் சிவரூபம். எத்தேகமுடைய ஆன்மாவேனும் நிக்கிரகத்திற்கு ஆளாயின் அது அட்டமூர்த்திக்கு வெறுப்பாகும்' - வாயுசங்கிதை. குருடனுக்குச் சூரியவெளிச்சம் தென்படாதது போல அருட்கண் உடையார்க்கன்றி ஏனையோர்க்குச் சிவ வியாபகத்துட் தாம் அடங்கி வியாப்பியமாயுள்ளமை தெரியவராது. பக்குவமான மொட்டே சூரியனைக் கண்டு மலரும் என்றவாறாய உண்மையே இதுவுமாம்.

**7.9. மந்திரவடிவம்.** (ஏனைச் சிவத்திருவடிவங்கள் 7.8,7.10ல் பார்க்க)

இறைவனின் ஆறத்துவவடிவில் சொற்பிரபஞ்சத்தில் ஒன்றாக வருவது 11(சம்ஹிதா) பிரதான மந்திரங்கள். அவை உடலிலும் உண்டு. மன் - மனனம், பாடமாக்கல், திரம் - ஸ்திரம் - மனப்பதிவில் நிலைத்ததைத் தேவையின்போது மீட்டுப் பயனடைவது. மந்திரம் நினைப்பவரைக் காப்பது. சுவாமியின் வடிவங்கள், சித்தாந்த அடிப்படைகளில் அடிக்கடி இந்நூலிற் பின்வரும் தலைப்புகளில் ஏலவே கூறப்பட்டன. அவ்விடங்களாவன:- முன்னுரையில் பஞ்ச சாதாக்கியம், நவந்தருபேதம், 25 மகேஸ்வரவடிவங்கள், 7.12ல் சிவன்வாயிலான முழு சிருஸ்டிதத்துவங்கள், சுருக்கமாக, சதாசிவத்தியானம், லயாங்க போகாங்க பூசைகள், பவாதிநாம அர்ச்சனை, 7.10ன் விரிவுகளில் வரும் அத்துவாமூர்த்தி அட்டவணை, ஐங்கலைகள், அத்தியாயம் 5ல் வரும் மந்திரங்கள் போன்றவை. எனினும் அவைபற்றிச் தொகுத்தும் தேவையாயின் விரித்தும் சிந்தித்தல் நலமாகும். **குறிப்பு** 1:- சிவனின் உண்மை, வியாபகம், பேராண்மை, சிறப்பு, தாய்மைப் பண்பு முதலியனவற்றைப் புராணங்களாற் தெரியவைப்பது அவன்மீது அன்பு கூர்ந்து நற்பலன் பெறவேயாம். 'அன்பு ஈனும் ஆர்வமுடைமை'. ஆர்வம் அவன் புகழினைப் புராணபடனத்தால் அறிவதாம். புராணகலாசாரம் இதுவாகும். 9ஆம் அத். ஒழிபுக்குறிப்பிலும் மந்திரம் பற்றிப் பார்க்க. **குறிப்பு** 2 :- வாக்காலும் மனத்தாலும் கருதவோ விபரிக்கவோ முடியாத பரம்பொருள் 'பக்தி வலையிற் படுவோன்' - மணிவாசகம். சித்தியார் பாயிரத்தில் வருவது,

1) 'மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் முற்றும்
குறைவிலா அளவி னாலுங் கூறொணா தாகி நின்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனார் கமல பாதம் இன்றி(று)யான் இயம்பும் ஆசை,
நிறையினார் குணத்தோர்க் கெல்லாம் நகையினை நிறுத்து மன்றே'
அவனைக் கூறொணாது என்றபின்,

2) 'அருளினால் ஆக மத்தே அறியலாம் அளவி னாலும்
தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலா மிரிக்க லாகும் அடியரோ டிருக்க லாமே' என்றார்.

இதுவே ஞானவாய்மையின் பயனாதலின் மெய்கண்ட சாத்திரங்கள் பயிலப்பட்டுப் பதிபசுபாசங்கள் விளங்கப்பட வேண்டியவையே. ஆதலின் ஆகமச்செய்திப் பிரகாரம் மேற்குறித்த முன்னுரை முதலியவற்றிற் கூறியவை தவிர்ந்த ஆனால் தொடர்புடைய பதிவடிவங்களைத் தொகுத்துப் பார்க்கின் பின்வருமாறு தெளியலாம்.

## 7.10 சிவத்திரு வடிவங்கள் தொகுப்பு :

**7.10.1. பதியுண்மை**—பிரபஞ்சம் தோன்றி நின்று அழியும் இயல்புடைமையினால் அதனைத் தோற்றுவிப்பதற்கு ஒரு கருத்தா வேண்டப்படும். அக்கருத்தா முன்னர் பிரபஞ்சம் ஒடுங்குவதற்கு ஏதுவாய் நின்ற சங்காரகாரணரேயாம். அவர் பிரபஞ்சம் ஒடுங்கிய பின்னும் அநாதி (தொடக்கமற்ற) முத்தசித்து- ஞான உருவான நிலையில் நின்று அநாதி பெத்த சித்துருவின் (பாசத்துட்பட்ட ஆன்மாவின்) பொருட்டு மீளவும் பிரபஞ்சத்தை முன்போலத் தோற்றுவிப்பார். இவ்வாறு கூறப்பட்ட பரமசிவன் சொரூபம் தடத்தமெனும் இலக்கணங்களை உடையவர்.

**7.10.2. சிவத்தின் சிறப்பிலக்கணம் - சொரூபம்** : சொரூபம் என்பதனைச் சுய ரூபம் என்க. ஒன்றின் சொருபம் அது பிறவற்றோடு கூடாதும், தன்சுய நிலையிலிருந்து மாறாததுமான நிலை. பதி பசு பாசம் மூன்றும் ஒன்றோடொன்று தேவைகருதித் தொடர்புறினும் பொருட்தன்மையால் அவை வேறானவை. ஆன்மா தனக்கு அன்னியமான மாயா தத்துவங்களுடன் வினைநிமித்தம் கூடி இறைவனாற் தரப்பட்ட தனுகரணங்களைப் பெற்றுப் புருடன், உயிர், உள்ளம் முதலிய வெவ்வேறு காரணப்பெயர் பெறினுந் தன்னிலையில்- சொரூபநிலையில் என்றும் ஆன்மாவே. சிவனும் வாக்காலும் மனதாலும் சொல்லவோ கருதவோ முடியாத மனாதிகளுக் கெட்டாதவராகத் தன்சொரூப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலிருப்பினும் உயிர்கள் வணங்கி உய்யும் பொருட்டுக் கீழிறங்கி சுத்தமாயையிற் (உயிர்கள்போல அழுந்தாது) தோய்ந்து நாதம்-சிவம், விந்து-சக்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை (மும்மூர்த்திகளின் தோற்ற நிலை எனவும் அட்டமூர்த்தம் எனவும் தடத்தநிலை பெறுவார். சொரூப, தடத்த (இயமானன் என்னும் அட்டமூர்த்த ஆன்மாவுமாய) நிலையை சிவாம்சம் பொருந்திய சிவசுப்பிரமணியப் பெருமானில் வைத்துக் கச்சியப்பசிவாசாரியார் கூறுவதாவது,

'ஊரிலான் குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்' (மேல்7.10.4)

**7.10.3. தடத்தவடிவங்கள் - அரு, உரு, அருவுரு** (முன் 7.10.2 இலும் தேவையான இடங்களிற் தரப்பட்டது).

சிவபெருமான் இச்சா-ஞான-கிரியா எனும் மூவகைச்சக்திகளைப் பொருந்தியபோது சக்தி காரியமான அருட்திருமேனியுண்டாகும். சகல உயிர்களினதும் உய்வுகருதிய இச்சாசக்தி என்றும் குறைவின்றியிருத்தல், உயிர்கள் ஈடேறும் பொருட்டான சிவனின் நிறைவான விருப்பத்தினாலாம். ஏனையவை கூடிக்குறைதல் பஞ்சகிருத்தியத்தின் பொருட்டாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிவன் பொருந் தும் சக்தி | மேனியின் வகை | மேனியின் பெயர் | தானம் - இடம் | தத்துவம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| முழுவதும் ஞானசக்தி | நிஷ்களம், அருவம் | நிஷ்கள சிவன்,லய சிவன், சத்தர் | லயத் தானம் | சிவ தத்துவம் | ஒடுங்குமிடம் - லயம் |
| ஞானமும் கிரியையும் சமனாக | நிஷ்களசகளம்:, அருவுருவம் | சதாசிவன்,போக சிவன், உத்தியுத்தர் | போகத் தானம் | சாதாக்கிய தத்துவம்- லிங்கம் | ஏனைய மூர்த்தங்களைத் தோற்றல் போக |
| ஞானம் குறைந்து கிரியைகூட | சகளம், உருவம் | மகேஸ்வரன்,அதிகாரசிவன், பிரவிருத்தர், | அதிகாரத் தானம் | ஈசுவர தத்துவம்- மகேஸ்வரம் | 25 மூர்த்தங்கள் தோன்றல் அதிகாரம் |
| ஞானம் கூடி கிரியை குறைந்து | மும்மூர்த்தி சகளம். உருவம் | உருத்திரன், விட்டுணு, பிரமா | அதிகாரத் தானம் | சுத்த வித்தை- மும்மூர்த்திகள் மூலம் | பிரமவிட்டுணுகள் தோன்றல் அதிகாரம் |

மந்திரம், பதம், வன்னம் எனும் சொற்பிரபஞ்சம், தத்துவம், புவனம் கலை எனும் பொருட்பிரபஞ்சம் ஆகியவற்றை ஒடுக்கும் திருமேனி அருவம் (அதிசூக்குமம்) எனவும், தோற்றுவிக்குந் திருமேனி அருவுருவம் (சூக்குமம்) எனவும். தோற்றிநின்று காக்குந் திருமேனி உருவம்- தூலம் எனவும் அழைக்கப்படும். சொரூபம் காரணம், தடத்தம் காரியம். இவை ஆன்மாக்களின் பாசநீக்கத்திற்கும் (பாசம் விடவும்) முத்திப் பேற்றிற்கும் (முத்தி பெறவும்)ஆதலின் இவற்றை அருட் திருமேனிகள் என்பர். பரமசிவன் ஒன்றிலுந் தோய்வின்றிச் சொயம்(சுய)பிரகாசமாய் சொரூபமென நிற்குந் தன்னுண்மையிற்(7.10.2) சிவம் என்றும், உயிர்களோடு கலந்து **ஒன்றாயும்,** அவற்றை உடனின்று வினைகளிற் செலுத்தி **உடனாயும்,** தனது ஒப்பற்ற பஞ்சகிருத்தியத்தால் **வேறாயும்** நிற்குந் தன்மையிற் பதி (தலைவன்) எனவும் அழைக்கப்படுவான்.

7.10.4. **நவந்தருபேதம் - தடத்தவிரிவு** மேலது முன்னுரையிற் கூறப்பட்டு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் | தொழில் நோக்கு, நிலை | தோன்று முறைமை | தோன்று• அல்லது கூடுமிடம் | மறு பெயர் | பிற குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. சிவம் | உயிர்களின் மலநீக்க திருவுள்ளம் | சிற்சக்தி யோடுபிரிப் பின்றி | நிஷ்களம் இடமற்றது | பர நாதம் | நாதம் ஓலிபர மேலான |
| 2. சக்தி | மேலதை எவ்வாறு செய்வதெ னஎண்ணல் | ஒன்றில் (சிவத்தி) லிருந்து | நிஷ்களம், இடமற்றது | பர விந்து | விந்து-குறி,அடையாளம் |
| 3. நாதம் | எண்ணிய வாறுசுத்த மாயையிற் செய்தல் | இரண்டில் (சக்தியி) லிருந்து | சுத்த மாயை. | அபர நாதம், சிவம் | அபர- கீழான |
| 4. விந்து | அசுத்தமா யையிற்கூடி செய்ய எண்ணல் | மூன்றில் (நாதத்தி) லிருந்து | சுத்த மாயை | அபர விந்து, சக்தி | • |
| 5. சதாசிவம் | இன்னின் னவாறுசெய்ய எண்ணல் | நாலில் (விந்துவி) லிருந்து | சுத்த மாயை | இலிங்கம். | • |
| 6. மகேசுவரம் | திரோத மறைப்பு | 5இல்சதா சிவத்திலிருந்து | சுத்த மாயை | பார்வத பரமேஸ்வரம் | • |
| 7.உருத்திரன் | இளைப் பாற்றச் சங்காரம் | 6இல் மகேசுவரத திலிருந்து | சுத்த மாயை | உமா மகேஸ் வரம் | • |
| 8.விட்டுணு | அனுபவித்கு நிலைக்கச் செய்தல | 7இல்உருத்திரனி லிருந்து | சுத்த மாயை (சு.மா.) | மால். விட்டுணு | • |
| 9.பிரமன் | அனுபவித்த ற்காய தநுகரணங்களைத் தோற்றல் | 8இல் (விட்டுணுவி)லிருந்து | சுத்த மாயை | அயன், பிரமன் | • |

**7.10.5. சக்திபேதம்** - நவந்தருபேதத்துள் சக்தி, விந்து எனும் இரண்டுஞ் சக்திபேதமாம். ஏனைய சிவபேதம் ஏழினுக்குமுரிய சக்திபேதமும் ஏழாம். அவையாவன: சிவம் - சக்தி, நாதம் - விந்து, சதாசிவம்- மனோன்மணி, மகேசன்- மகேஸ்வரி, உருத்திரன்- உமை, விட்டுணு– இலக்குமி, பிரமன்- சரஸ்வதி.

1) 'சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னாகி
ஓத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகும்
எத்திற நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' - (சித்தி-165)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) 'சத்திதான் நாத மாகி தானாகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னாதி யாகும் தரும்வடி வான வெல்லாம்
சத்தியும் சிவமு மாகும் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்தி தானே' - (சித்தி-166)

நவந்தருபேதமும் 9க்கு 9 என சிவசக்தி தொடர்பு பற்றிய கூற்றான 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்' என்றபின் சக்திபேதம் 2, சிவபேதம் 7 என்ற காரணம் : மரமும் காழ்ப்பும் - வைரமும் போல ஒப்ப இயைந்து நிற்றலின் எல்லாத் திருமேனியுஞ் சக்தி சிவம் இரண்டற்கும் பொதுவடிவேயாம். ஆயினும் சத்தனுக்கு சத்தி தேவியுமாதலின் அதற்காய வடிவுவிசேடம் குணவிசேடம் பற்றி சிவபேதம் சத்திபேத மென்றாயின. சிவனது சக்தி தேவியே.

**சைவசித்தாந்த, விஞ்ஞான, சரித்திர சிந்தனைகள்:** தூலமாகத் தெரியும் விஞ்ஞான உண்மைகள் 'காரணகாரிய' தொடர்புடையன. 'இல்லது தோன்றாது' என்பது, விஞ்ஞானம், சைவசித்தாந்தம் இடண்டிற்கும் பொதுவான உண்மை. கண்கண்ட தெய்வமென சமயங்கடந்து யாவராலும் போற்றப்படும் சூரியனில் நிகழும் இரசாயன செயற்பாடு காரணமாக உருவாகும் மின்காந்தசக்தியலை ஒளி, வெப்பம் என்றாகிப் பிரபஞ்ச காரியமாதல் விஞ்ஞானஉண்மை. இதேபோல சூக்குமமான ஆன்மீக நெறியில் சுருதி (வேதாகமம்), யுக்தி (தர்க்கசிந்தனை), அனுபவம் (ஆன்றோர்வாயிலாக வருவது) ஆகிய அளவெல்லைகளால் பிரபஞ்சத் தோற்றமும் அதன் நிலைப்பும் அழிவும் காரணகாரியத் தொடர்பானவை. கண்டதை உதாரணமாகக் கொண்டு காணாத சிவசக்தி தொழிற்பாட்டை ஊகிக்கலாம்.

| காரியம் | முதற்காரணம் | துணைக்காரணம் | நிமித்தகாரண |
|---|---|---|---|
| பிரபஞ்சம் | மாயை | சக்தி | சிவம் |
| முளை,மரம் | வித்து | நீர் | நிலம் |

**சைவசித்தாந்தம் விளக்கமுடையதாகும்.** கண்மூடித்தனமான நம்பிக்கைகளாலோ மூலநூலிற் சொல்லப்பட்டிருக்கின்றதென்ற ஒரே காரணத்தினாலோ சித்தாந்தம் கட்டியெழுப்பப்பட வில்லை. 12,13,14ம் நூற்றாண்டுகளில் தஞ்சையை மையமாக்கிப் பல்சமய, பல் வேறு கொள்கையினர் ஒன்றுகூடி ஆய்ந்து நிறுவப்பட்டதேயிது. சம்பந்தரின் புனல்வாதத்தின் போது, 12 சிவநெறிப் பாடல்களடங்கிய திருப்பாசுரம், வைகை ஓட்டத்திற் கெதிராகச் சென்று, அரசனுட்படப் பலர் முன்நிலையிலும் சைவநெறியே உயர்ந்ததென நிரூபித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாதார்- சமணர்நெறி தவறானதெனவும் அதனாலவர் தாமாகவே வாத நிபந்தனையில் ஒப்புக்கொண்டபடி அரசனால் தண்டிக்கப்படவும் இவ்வாதம் காரணமாயிற்று. இவை வெறுங் கட்டுக்கதைகளல்ல சரித்திரம். கல்வெட்டுக்கள், நூல்கள், நாட்டார் கதைகள், வடநாட்டார் ஆய்வுகள் இதனை நிரூபிக்கின்றன.

இப்பின்னணியில் மேலும் சிவசக்தித் தொடர்பால் **பிரபஞ்சம் உருவாவதையும்** அதே பின்நோக்கிய முறையில் அது **அழிவுறுவதையும்** நோக்கலாம். சிவத்தினின்று சத்தியும், சத்தியினின்று சாதாக்கியமும்-லிங்கமுந் தோன்றும். சக்தியும் சிவமும் சமமாகக்கூடிய நிலையே சாதாக்கியம் என்க. (முன்னைய அட்டவணை பார்க்க). இவ்விருவரும் இவ்வண்ணங் கூடியதால் உலகத்திலே இயங்குவன, இயங்காதன (நிலையான) யாவும் தோற்றமுறுகின்றன. எனினும் இத்தோற்றப்பாட்டால் சிவன் (சத்தியோடு கூடினும்) தன்னில் விகாரமுறாமையால் சிவன் பிரமச்சாரியாயும், சத்தி கன்னியாயுமுள்ளனர். இது மானிடம் போன்ற மயக்க மலமாயா சம்பந்தமல்ல. மயக்கமற்ற சுத்தமாயை சம்பந்தம். ஆதலின் இத்தகு சிவசத்திக் கூட்டுறவு (தாதான்மியம் - ஒருபொருளின் இருதன்மை) நம்பொருட்டாகப் பிரபஞ்ச இயக்கநிலையை அறிவியலோடு பகுத்தறிய வைப்பதற்கு நடித்துக் காட்டவேயாம். 'சிவஞ்சத்தி தன்னையீன்றும்...' சித்தியார். சத்தியாவது அக்கினியிற் சூடும், பூவின் மணமும், பரிதியிற் கிரணமும் (சூரியனில் கதிரொளியும்) போல் சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமையாம். அதன் வடிவம் உணர்வுருவாய ஞானமேயாம். பராசக்தி எனப்படும். அந்த ஞானம் ஆன்மாக்களுக்கு மலபரிபாகம் வருவிக்கையில் ஆற்றும் பஞ்சகிருத்தியத்தால் மறைபபாற்றலுள்ள திரோதமென நிற்கும். உயிர்கள் தத்தம் வினைகளை ஆற்றுகையில் சிவமுட்பட்ட ஏனைய அறிவுகள் திரோதானசத்தியால் மறைக்கப்படும். இது உயிர்களுக்கு வேண்டற்பாலதேயாதலின் இதுவும் சிவசக்தியின் கருணையாம். இவ்வாறு திரோதம் செயற்படுகையில், அது இச்சை, ஞானம், கிரியை என நிற்கும். திரோதம் சிவனிலிருந்து தோன்றியதாலும் அவர் தனக்கென ஒரு நிலையும்(களமும்) வேண்டாததால் இவையும் நிஷ்கள சத்திகளேயாம். சாந்தியதீதகலை (பராசத்தி), சாந்திகலை (ஆதிசத்தி), வித்தியாகலை (இச்சாசத்தி), பிரதிட்டாகலை (ஞானசத்தி), நிவிர்த்திகலை (கிரியாசத்தி)யென்ற ஒழுங்கில் ஆரோகணமாய் விரிந்து ஆன்மாக்கள்பொருட்டுச் செயற்பட்ட பிரபஞ்சமானது, அவற்றின் கன்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுகையில் ஏற்பட்ட இளைப்பினைப் போக்கக் கிரியாசத்தியிலிருந்து ஒன்றினொன்றாக அவரோகணமாய் ஈற்றில் பராசத்தியிலொடுங்கும். இளைப்பாற்றலின்பின் புனருற்பவம் (மீளப்படைத்தல்) என்பது ஆன்மாக்கள் தமது ஓய்வின்பின் எஞ்சியவினைகளை ஆற்றுதற்காகும்

**7.10.6. அருவுருவத்திருமேனி சாதாக்கியம் :** முன்னுரையிலுள்ள இது பூசையேற்கும் இலிங்கத்திருமேனி. பிரபஞ்சம் தோன்றவும் ஒடுங்கவும் நிலைக்களமானது. 11ம் திருமுறையிலுள்ள கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியிற் கூறுமாறு :

*1)* 'உணருங்கால் ஒன்றை உருத்தெரியக் காட்டாய்
புணருங்கால் ஆரமுதே போன்றும் - இணரிற்
கனியவாஞ் சோலைக் கயிலாயம் மேயாய்
இனியவா காண்நின் இயல்பு.'
(புணர்தல்- அவனோடு அன்பால் ஒருப்படல், இணர்தல்- நெருங்குதல்)

2). நின்னியல்பை யாரே யறிவார் நினையுங்கால்
மன்னிய சீர்க் காளத்தி மன்னவனே – நின்னில்
வெளிப்படுவ தேழுலகும் மீண்டே ஒருகால்
ஒளிப்பதுவும் ஆனால் உரை.' (மன்னிய - நிலைத்த, வெளிப்படல் - சிருஷ்டி - படைப்பு, ஒளித்தல் - மறைத்தல் - அழிப்பு.)

அருவுருவத் திருமேனியாவது : வெளிப்டையாக தூலமான உருவின்றியும், அதேவேளை அதிசூக்குமமாய், ஞானசொரூபமாய் ஞானிகளுக்கே விடயமாதல் மட்டுமின்றியும், சூக்குமமாய், முதல்வனின் இருப்பை உய்த்துணர்ந்து பஞ்சப்புலன்களால் உயிர்கள் வணங்கி அன்புடன் அபிடேகம், பூசை ஏற்கும் நிலையதாய் விளங்கும் பெருமையுடைத்து. **குறிப்பு:** இதனையே நம்முன்னோர்கள் முதல்வனுக்கோர் அடையாளமாகக் கருதி குறி, இலிங்கம், தம்பம், தண்டு, குற்றி, தாணு முதலிய பெயர்களால் அழைத்து வழிபட்டனர். ஆத்தீண்டுகுற்றி இலிங்கமாயும் பசு-ஆக்களைக் கட்டும் தறியாகவும் கொண்டு வணங்கப்பட்டது. இன்றும் இவ்வடையாளங்களைச் சில இடங்களிற் காணலாம். அதன் வழிபாட்டாற் பொருந்திய சக்திகாரணமாக அதிகாதிக அற்புதங்கள் சிவாலயங்களில், அதன் சூழலில் நிகழ்ந்துவந்துள்ளன. வைணவராற் துன்புற்ற சிவபக்தையொருத்தி பொருட்டு வன்னியும், இலிங்கமும், கிணறும் அழைத்தமை திருவிளையாடற் புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்க முத்திரைப்படம்





உண்மைச் சைவருக்கு கோயில் என்றால் அது சிறப்பாகச் சிதம்பரமும், பொதுவாகச் சிவன் கோயிலுமாம். அதில் மூலவர் இலிங்கமேயன்றி 25 மகேஸ்வர மூர்த்தங்களில் ஒன்றோ அன்றிப் பிறவோ இல்லை. பின்னைய காலத்தில் சூக்குமமாகப் பொருளறியமாட்டா மானிடர் சிவனின் தடத்த, கீழ்நிலைத் தெய்வங்களை, ஏன் மானிடர்களைக்கூட தெய்வமென அளவின்றிப் பெருக்கி, விதம்விதமான கோயில்களையும், ஆகமநெறிக்கு ஒவ்வாத மூலவரையும் பூசைமுறைகளையும் தாமாகவே ஏற்படுத்தி, தாம் அவர்களுக்கு வேண்டிய உலக போகங்களைத் தருவதாகக் கூறி ஆகமமற்ற புதுப்புதுக் கிரியைகளைப் புகுத்திப் பணம் பெருக்குகின்றனர். அண்மையிற் கொழும்பிற் பெரும் எடுப்பாக கழகமொன்று ஆகம முறையின்றிக் கட்டிய 'இந்துக்' கோவிலுக்குச் சிவப்பிராமணர் கும்பாபிடேகஞ் செய்ய ஒப்புக்கொள்ளாமை உண்மைச் சைவாசார்யார்கள் இன்றும் இருப்பதைக் காட்டுகின்றது. விதம்விதமான பொருட்களை உற்பத்திபண்ணி மக்களை வசீகரஞ்செய்து பிழைப்பது போல சிவக்குடும்பம் அற்ற மூலவர்தொகை பல்கிப் பெருகுகின்றது.

'ஐந்தியற் சத்திக ளாயினோர் தமைத்
தந்ததும் அருவுருத் தாங்கி யவ்வழிச்
சிந்தனை யருச்சனை செய்தி யாவரும்
உய்ந்திடச் சதாசிவ வுருவைந் துற்றதும்' - (கச்சியப்பர்).

வழிபாட்டிற்கென சிவன், அருவுரு உருவெனத் தன்னைக் கீழிறக்கி, தன்னடியார்க்கு இகபரபோகங்களை, அவர்களின் தாரதம்மியங்கருதி, அளந்தளந்து கொடுப்பான். சிவன் இச்சுகம் தரமாட்டான் எனப் பயமுறுவோர்க்குசுந்தரர் கூறும் ஆறுதல் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே'. - 7ம் தி.மு. சுந்தரர்.

**7.10.7 உருவத்திருமேனி:** ((முன்7.10.4,5ற் காண்.) சத் - நிலைப்பு, சித் - அறிவு, ஆனந்த - ஆனந்தம் என்ற பதி பசு பாச ஒப்புமை.

| இ | சிவபெருமான் இயல்பு | உயிர் இயல்பு | மாயாமல |
|---|---|---|---|
| 1 | சூக்குமசித்துப் பொருள். சித்-அறிவு. அறிவே மயமானது | தூல சித்துப்பொருள். அறிவிக்க- சுட்டியறியும் சித்துப் பொருள் | அறிவில்லா மூடம் |
| 2 | நினைத்தபடி வருதற்கேற்ற அளவில் ஆற்றலுள்ளவர். | நினைத்தபடி வருதற்கேற்ற அளவிலாற்றலில்லாதன. வினைக்கேற்ற உடல் | தோற்ற அழிவு சக்தியால் |
| 3. | முற்றறிவும் முற்றுத் தொழிலும் உடையவர். சத்துப் பொருள் | சிற்றிவும், சிறுதொழிலுமுடையன. சார்ந்ததன் வண்ணமான சதசத்து | சடம், அசத்து |
| 4. | இயல்பாகவே மலத்தினின்றும் நீங்கியவர். இன்பமானவர். இன்பகனன். | அநாதியே மலத்துடன். கூடியவை. மாறிவரும் இன்ப, துன்புள்ளவை | மலம் |

சிவன், ஆன்மாக்களைப் பந்திப்பனவும் விடுப்பனவுமாகிய, சொல்லும் பொருளுமாய பிரபஞ்சப்பொருள்கள் அல்லாதவராதலாலும், தோற்றமும் அழிவும் இல்லாதவராதலாலும், அளந்தறியப்படாதவராதலாலும், இன்ன வடிவினரென்றும், இன்ன வடிவத்தைக் கொள்ள மாட்டாரென்றுங் கூறுவதற்கு ஆசங்கையும் உத்தரவாதமும் (வினாவிடை) இல்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும் நூறுநூ றாயிரம் இயல்பினனாகி'- திருவாசகம். இவ்வாறு பரமசிவன் உயிர்களின் தன்மையில்லாதவராதலின் நினைத்தபடி வடிவங்கள் எடுக்கும் இயல்புடையவர். ஆதலின் சிவன் என்றும் அருவனல்ல. ஆயினும் அவர் வடிவங்களெல்லாம் சத்திவடிவங்களே. சித்தியார்(66)

'ஆரண மாகமங்க ளருளினா லுருவுகொண்டு
காரண னருளானாகிற் கதிப்பவ ரில்லையாகும்
நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றி டாவே'

(விளக்கம் எளிதே). ஆரணம் - வேதம், காரணன் - யாவற்றிற்கும் நிமித்தமான சிவன், கதித்தல் - மேன்மையுறல். சுரர் - தேவர், குரு சந்தானம் - அக, புற சந்தானம். இக் **குருசந்தானம் -** தக்ஷிணா மூர்த்தமும் (வியாழபகவானும்) அதன் பின்னாய நந்திதேவர் முதலாய அகமும், மெய்கண்டார் முதலாய புறமுமானவர் அகப்புறச் சந்தனாசாரியர்கள். இவர்கள் தேவர், மானிடர்க்குப் போல அசுரர்களுக்கு வெள்ளிச் சுக்கிராச்சாரியர் குரு. - (கந்தப்புராணம். நல்லதோ கெட்டதோ குருவின்றி வித்தையில்லை.) உருவொடுகூடிச் சிவபெருமான் ஆக்கியவை வேதாகமங்கள்

**வேதாகமங்கள் நமக்குக் கிடைத்த வழி** : 1. சதாசிவமூர்த்தி - அட்டவித்தியேஸ்வரருக்குத் தலைவராகிய அநந்ததேவருக்கும், 2. அநந்தர் - ஸ்ரீகண்டருக்கும், 3. ஸ்ரீகண்டர் - விட்டுணுவுக்கும், 4. விட்டுணு - பிரமாவிற்கும், 5. பிரமா - முனிவர்களுக்கும், 6. முனிவர்கள் - மானிடர்க்கும். 7. மானிடர் - மானிடர்க்குமாம். (சீரணி) குருசந்தானம் பாரதத்தின் வெவ்வேறு மாறுபட்ட கொள்கையினர்க்கு அவரவர் கொண்ட ஞானவிளக்கத்திற்கு ஏற்ப மாறுபடும். விரிக்கிற் பெருகும். 7.13பார்.

சித்தாந்திகளாய சைவருக்கு மானிட குருசந்தானம் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியார். இவர்களே 13ம். 14ம் நூற்றாண்டில் பதினான்கு மெய்கண்டசாத்திரங்களை, பக்தி இலக்கியங்களாகிய திருமுறைகளுக்கு இலக்கணமாக எழுதினர். அவற்றில் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் என்பன முதநூல் புடைநூல் சார்புநூல் என்று அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்தொழில் நிமித்தங்காரணமாக இறைவன் உருவத்திருமேனி கொள்ளல் :-**

1. அசையும், அசையாத உலகப் பொருட்களைத் தனது ஒவ்வோர் உறுப்புக்களிலுமிருந்து தோற்றுவிக்க வேண்டுமாதலாலும், (விளக்கம் கந்தபுராண திருப்பெருவடிவம்)

2. பக்தர்களுக்கு இருவினையொப்பு நிகழவே அநுக்கிரகத்தின் பொருட்டு மலவாசனை தோன்றாதுசெய்ய மறைத்தலுக்கு ஊன நடனம் இயற்ற வேண்டு மாதலாலும்,

3. திதி(காத்தல்) நிருத்தியத்திற்கு உமாதேவியாரோடு இயைய வேண்டுமாதலாலும்,

4. அநுக்கிரகத்திற்கு யோகியாயிருந்து காட்ட வேண்டுமாதலாலும்,

5. சங்காரத்திற்கு உலகந்தோன்றிய அம்முறையிலேயே அவ்வவ் வுறுப்புக்களில் ஒடுங்க வேண்டுமாதலாலும் உருவத்திருமேனி இறைவனுக்கு இன்றியமையாததாம்.

2ன் விளக்கம் 'ஊனநடனம் ஒருபால் ஒருபாலாம் ஞான நடனம் தான் நடுவே நாடு' என்ற திருவருட்பயன் பாடல் விளக்கத்தை 'சிவயநம' வில் வைத்துக் காண்க.

**7.10.8 மகேஸ்வர வடிவங்கள் (25)** (பெயர்கள் முன்னுரையில்.) இவ்வடிவங்கள் போக, யோக, கோர வடிவங்களென மூவகைப்படும். இவற்றைக் கொண்டருளியது முறையே உயிர்களுக்குப் போகமளித்தல், யோகமுத்தி வழங்கல், நிக்கிரகமான கருணை மூலம் வினைநீக்கம் செய்தல் என்பவற்றின் பொருட்டேயாம். 1). போகவடிவம் உமாமகே சுவரர், கல்யாணசுந்தரர் முதலியனவாம்.. 2). யோகவடிவம், தக்ஷிணாமூர்த்தி முதலிய திருமேனிகளாம். 3). வேகவடிவம்- காமாரி (காமனைக் காய்ந்தவர்), காலாரி (காலனைக் காய்ந்தவர்), வீரபத்திரர் (சிவனைமதியாத தக்கனின் வேள்வியைக் காளியுடன் சிதைத்து விட்டுணு முதலாய தேவர்களை வதைத்தவர்). இம்மூர்த்தங்களிற் சிறப்பானது பஞ்ச கிருத்தியங்களைக் காட்டி ஆட்கொள்ளும் ஆதித் தில்லைநடராச வடிவமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.10.9. சிவகுமாரர் :** விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர், வீரபத்திரர் போன்ற மூர்த்தங்களும் சிவனருள் வடிவங்களே. இவை இரத்தினமணியும் அதன் ஒளியும், அக்கினியும் அதன் சுடுதல், அடுதல் - சமைத்தல் முதலிய பல்வகைச் சக்திகளும், மரமும் அதன் வைரமும்போல உள்ளதால் இம்மூர்த்தங்கள் சிவனினின்றும் வேறுபடாதவை. ஆதலின் இவை **சிவக்குடும்பம்** எனப் பொதுவில் அழைக்கப்பட்டுச் சிவனுக்குரிய பெருமை மிக்கதாயிருக்கும். 'பிடியதன் உரு உமைகொள..' என்ற தேவாரப் பொருளும், 'அருவமும் உருவமாகி...' என்ற கந்தபுராணப் பாடற் பொருளும் முறையே கயமுகனை வதம் செய்தருளிய விநாயகரினதும், சூரபன்மன் முதலாயினோரை வதைத்தருளிய சுப்பிரமணியரினதும் தோற்றங்களை விளக்குவன. 'அருளிய' வென்றது, விநாயகர் மூஷிக வாகனமாகவும், முருகன் சேவற்கொடியாகவும், மயில்வாகனமாகவுங் கொண்டு அருளியதாலென்க. ஆதலின் சிவக்குடும்பத்தைப் பிரித்து சிவனைத் தனிமைப்படுத்திய சங்கரஷ ண்மதம் சைவருக்குச் சம்மதமில்லாததேயாம்.

**7.10.10 அத்துவாவடிவும். ஐங்கலைகளும். மந்திரங்களும்** ஏலவே கூறியவற்றுடன் விரிவாகத் தரப்படுகின்றன.) அத்துவாக்கள் என்பன உயிர்கள் வினையீட்டும் நெறிகள் அல்லது வழிகள். பிரபஞ்ச தோற்றத்தின் போதான அவற்றின் விரிவும், ஒடுக்கத்தின் போதான சுருக்கமும் இனிவரும் அட்டவணையிற் காட்டியபடி ஆரோக அவரோக நெறிகளில் அமையும். 1) நிவிர்த்திகலை– பாசவழிப்படரும் போக்கிலிருந்து உயிர்களைத் திருப்பியெடுப்பது. 2) பிரதிட்டாகலை- திரும்பிய நிலையில் அவற்றை நிலைக்கவைக்க உதவும் நிலை. 3)வித்யாகலை– நிலைத்த உயிர்கள் மெய்ஞ்ஞான விளக்கம்பெற உணர்த்தும் நிலை. 4). சாந்திகலை– உணர்த்திய ஞானத்தில் உயிர்களை ஒடுங்கச்செய்யும் நிலை 5) சாந்தியதீதகலை– அவ்வாறு ஒடுங்கி அமைதியுற்ற உயிர் அமைதியானேன் என்னும் பிரக்ஞையும் கடந்து திருவருள் உணர்விலேயே திளைக்கவைக்கும் நிலை.

இவை ஐந்தும் சக்திகலைகள் எனப்படும். சிருஷ்டிக்காக இறைவனாற் கலக்கப்பட்ட மாயையினின்றும் ஐந்துகலைகள் வேறு தோன்றுகின்றன. அவை யொவ்வொன்றும் மேற்சொன்ன சக்திகலைகள் ஒவ்வொன்றாலும் அதிட்டிக்கப்படுதல் மூலம் அவற்றின் பெயரிலே சக்தி அதிட்டித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள் எனப்பெயர் பெறும். அவற்றிலிருந்து மண்முதல் நாதமீறான 36 தத்துவங்களும் அவற்றிலிருந்து 224 புவனங்களும், சுத்தமாயா தத்துவங்களில் ஒன்றான விந்துவிலிருந்து அகரமுதலான 51 எழுத்துக்களும் தோன்றுகின்றன. அவற்றின் கூட்டுறவால் 11 மந்திரங்கள் தோன்றுகின்றன.

இதிற்கூறிய மந்திரம், பதம் - சொல், வன்னம் - எழுத்து. புவனம், தத்துவம் என்ற ஐந்துடன் இவற்றுக்கு ஆதாரமான சக்தியதிட்டித்த கலைகளையுஞ் சேர்த்தே ஆறத்துவாக்கள் எனப்படும் 6 வழிகள் தோன்றுகின்றன. இவை இறைவனுக்கு உபசாரத் திருமேனிகளென சித்தியார்கூறும். அத்துவாமூர்த்தி பற்றிய சித்தி- பா76

> 'அத்துவா மூர்த்தி யாக அறைகுவ தென்னை யென்னின்
> நித்தனாய் நிறைந்த வற்றின் நீங்கிடா நிலைமை யானும்
> சித்துடன் அசித்திற் கெல்லாம் சேட்டித னாத லாலும்
> வைத்ததாம் அத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம்'

எல்லாமாய் அல்லதுமாய் உடனுமாய் நிற்கும் இயல்புடைய இறைவனுக்குத் தனது திரோதான சத்தியால் அவற்றோடு உளதாகிய இயைபு நோக்கிக் கூறும் உபசாரமே அவனின் அத்துவாவடிவாம்.

ஆன்மாவின் பந்த – கட்டுநிலைப் பிரவிருத்திக்காக ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றும் அத்துவாக்கள் அதன் மோட்சநிலைப் பிரவிருத்திக்காகத் தோற்றநிலைக்கு எதிர்நிலையாக ஒடுங்கும். இக்கலைகளும் திருவருட்சக்தியில் ஒடுங்க அச்சக்தி இறைவனில் ஒடுங்கும். உயிர்களை உய்விக்கக் கொள்ளும் இந்த ஆறு வழிகளையே இறைவன் தன் வடிவாகக் கொள்வான். **மந்திரங்கள் பற்றிய சித்தியார் கூற்றுக்கள் :** (பா - 77,78)

1) 'மந்திர மத்து வாவின் மிகுத்தொரு வடிவ மாகத்
தந்ததென் அரனுக் கென்னில் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்றா மிவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதீத மான சிவசத்தி சேர்ந்து நிற்கும்'

2) 'சுத்தமாம் விந்து தன்னில் தோன்றிய ஆத லானும்
சத்திதான் பிரேரித் துப்பின் றானதிட் டித்துக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தினாற் புத்தி முத்தி அளித்தலால் அரனுக் கென்றே
வைத்தவா மந்தி ரங்கள் வடிவென மறைக ளெல்லாம்'

சிவசத்தி சேர்ந்துநிற்கும் சுத்தமாயையிலே தோன்றிய காரணத்தாலும், சிவசத்தியால் அதிட்டிக்கப்பட்டுச் சாதகருக்குப் போக மோக்ஷங்கள் கொடுத்தலாலும், அத்துவா வடிவங்கள் ஆறினுள்ளே முதல்வனுக்கு **மந்திரவடிவமே மிக்கது** என வேதாகமங்கள் கூறும். சப்தகோடி மந்திரங்களில் பஞ்சப்பிரம மந்திரங்களான ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகியன முற்பட்ட தோற்றத்தாலும், மற்றைய மந்திரங்களுக்குக் காரணமாயிருத்தலாலும், அழிவில்லாத சத்திகள் உடையதாலும் முதல்வனுக்கு மிகச்சிறந்த வடிவமாகும். 'மிருகேந்திரம்' நூலிற் கூறயதன் பிரகாரம்,

**ஈசானம்**- உலகெல்லாவற்றையும், ஈச்-ஆளுதல் செய்தருளுவது. **தற்புருஷம்** - தேவசரீரம், மானுடசரீரம் முதலிய அந்தந்தச் சரீரங்களிலே அதிட்டித்து நிற்பது. தத் - அந்த, புருஷம் - புரம். (சரீரத்தில் இருப்பது). **அகோரம்** - சாந்தம். அ - இன்மை, கோரம் - கடுமை. (கடுமையற்றது.) **வாமதேவம்** - புருஷார்த்தங்களான அறம், பொருள், இன்பங்களை ஆன்மாக்களுக்குக் கொடுக்கும் ஒளிமயமானது. வாமம் - அறம் பொருளின்பங்கள். தேவம் - ஒளியுடையது. **சத்தியோசாதம்** - உடம்பை உயிர்களுக்கு உடனே தோற்றுவிப்பது. சத்திய—உடனே, சாதம் - பிறப்பு. இவை போகசிவனுக்கு முகங்கள்.

பிரம விட்டுணு உருத்திரர்களிடத்து முதல்வனின் சத்திகள் பதிந்து நின்று செலுத்துதலால், அவர்களின் உருவங்கள் முதல்வனோடு ஒப்பவைத்துக் கூறப்படும். அவ்வாறு சத்திகளாற் செலுத்தப்படாது பிரமன் முதலியோரே படைப்பாதி தொழில்களைச் செய்வரெனின் முதல்வன் வேண்டுவதில்லை. ஆதலால் முதல்வனே ஐந்தொழிலுஞ் செய்வன். அவனது சத்திகளால் அதிட்டிக்கப்பெற்று பிரம னாதியோர் தத்தம் தொழிலினைப்புரிவர். அதிட்டித்தல்—மறைந்து நின்று செலுத்துதல்.

முதல்வனுக்கு நாதம், விந்து, சிவம், சத்தி அருவவடிவம். இவையும் அருவுருவடிவாய சாதாக்கியமெனும் சிவலிங்கவடிவும் முதல்வனின் சுதந்திரவடிவங்களாம். அவை **சம்பு-சிவபக்கம்** எனப்படும். ஏனை பிரம, விட்டுணு, உருத்திர வடிவங்கள் சத்தி அதிட்டித்தலால் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிட்டானவடிவங்களாம். அவை **அணு-உயிர் பக்கம்** எனப்படும். ஆதலின் உயிர்வர்க்கங்களாய சகலரிற் பக்குவம்வாய்ந்த பிரம விட்டுணுக்களும், பிரளயாகலரிற் பக்குவம்வாய்ந்த உருத்திரரும் அணுபக்க வடிவுகள். அந்தப் பக்குவர்களில் சத்திபதிந்தே படைத்தலாதி தொழில்களை முதல்வன் ஆணைப்படி வழங்கும். (கந்தபுராண தக்க உபதேசம் பார்க்க). ஆதலால் அச்சகலர் மும்மலங்களும் நீங்கப்பெறாததால் அடிமுடிதேடிய வரலாறு போன்ற புராணக்கதைகளில் வருவர்.

இவ் வேறுபாடறியாதார் பிரம விட்டுணுக்களை முதல்வனோடொப்ப வைத்துத் தம் சமயம் சாதிப்பர். இதனாலேயே 'இந்து' சமயம் என்ற போலிச்சொல் உருவாகி ஆறு சமயத்திற்கும் ஆறுதனித்தனி முழுமுதலென தவறான வழியிற் சென்று பெரும் சிவத்துரோகம் செய்கின்றனர். சைவசித்தாந்த ஆழமான அறிவு இவற்றை உரியமுறையில் விளங்கிக்கொள்ளப் பிரதானம் வேண்டற்பாலதே. பலரான பிரம, விட்டுணுக்கள், பதமுத்திபெற்று முத்தொழில்புரிய சிவசக்தியிடம் அதிகாரம் பெற்றவர்கள். ஒன்றெனும் சிவனைச் சிவ ஞானத்தாலேயே அறியலாம் என்பது அடிமுடி தேடிய வரலாற்றுண்மை.

**அத்துவாக்கள் வழி உயிர்களின் ஈடேற்றம் :** உயிர்கள் தாம் ஒலிக்கும் மந்திரங்களால் அவற்றின்கண் அமைந்த சொற்களை யறியும். அச்சொற்களின் வாயிலாக எழுத்துக்ளை யறியும். அவ் வெழுத்துக்கள் தாமும் ஒலியின் கூட்டுறவால் அமைந்தவை யெனவும், அவ்வொலி பரவுவதற்கு இடமாவது உலகெனவும் அறியும். பின் அவ்வுலகுதானும் தத்துவக் கூட்டங்களாலானது எனவும் உணரும். இது சிருஷ்டிபற்றிய உணர்வு. இனி வினையீட்டம் போதிய அளவு பிரமாவை அதிட்டித்த சிவனின் காத்தலுடன் நிகழ்ந்து, தாம் களைப்படைந்த பின் சங்காரமென, அத்தத்துவங்கள் கலைகளில் ஒடுங்குதலையும், பின் அக்கலைகள் அருளில் ஒடுங்குதலையும், அவ்வருள் சிவத்தில் அடங்குதலையும் அறியும். இவ்வாறு அப் பரம்பொருளின் அளவிலாற்றலால் முத்தொழிலும் நிகழ்ந்ததையும் தாம் அதனால் அனுபவமும் நல்வினை, தீவினைகளில் சமநோக்கும் அடைந்ததால் தமக்கென ஒரு செய்கையுமில்லை யாவும் இறைசெயலேயெனவும் அதனால் யானெனதென்பதற்று மலபரிபாகமடைந்து சத்திபதிதலாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவருள் கிடைத்துய்வதனை நன்றியுடன் உணரும். இதனை அத்துவாக்கள்பற்றிய முழுவிபரமடங்கிய அட்டவணையைப் பார்த்துப் பின்வரும் விளக்கங்களை சிவஞானமாபாடிய உரையுடனும் திருவிளங்கத்தின் சித்தியார் சுபக்க உரையின் தத்துவாவிரிவு அட்டவணையுடனும் ஒப்புநோக்கி யறிக.

**குறிப்பு :** இருவினையொப்பு முதலானவை முற்செய் சிவபுண்ணியப் பேற்றால் அமைதலை முன் கண்டோம்) பாடியக்காரர் பொது இயல்பு 2ம் சூத்திரம் 3ம் அதிகரணத்தில், 224 புவனங்களடங்கிய அண்டங்களின் இயல்பைக் கலைகளில்வைத்து உணர்த்தியபின் ஒவ்வொரு கலைகள் பற்றிக் கூறுகின்றார். (அட்டவணையுடன் தரப்படுகிறது.) 1) **நிவீர்த்திகலை :** இதற்கு அதிதெய்வம் பிரமன். லயத்தானம் மூலப்பகுதி. போகத்தானம் புத்தி. இனிப் புவனாபதிகளின் இடமாக நிலைபெறும் அக்கரங்கள் (வன்னங்கள்) 51ன் க்ஷ எழுத்து ஒன்றும், 81 மூலமான பதங்களில் நமோநம முதல் மஹாதேவா வரை பதங்கள் 28ம், பதங்களாலான மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் மூலமாகிய 11 மந்திரத்தின் இதயம், சத்தியோசாதம் எனும் 2 மந்திரங்களும் இக்கலையில் அடங்கும். இவையெல்லாம் உடைத்தாய் பிரமாண்டத்தில் புடவி (பூமி, பிருதிவி) தத்துவத்தை அடக்கிநிற்பது நிவிர்த்திகலை. இதன் குணம் கடினம் முதல் 8. வடிவு நாற்கோணம். நிறம் பொன்மை. குறி வச்சிரம். விடய தன்மாத்திரைகளில் கந்தம்-மணம். மும்மலங்களும் ஐந்தாம் இது மாயை. இதில் வரும் புவனங்கள் 108. அவை : காலாக்கினி முதலிய 6ம், எண்திசை, பாதாளம், ஆகாசம் எனும் 10 திக்குகளிலும் தலா பத்தாக 100ம், வீரபத்திரர் பத்திரகாளி ஆகியோருக்கு 2என மொத்தம் 108 புவனங்களாம். இவை பிண்டத்திலும் தியானத்திலும் வருமாற்றை அட்டவணைப் பிரகாரங் கண்டு பயனடைக. இதுவும் இனிவரும் பிரதிட்டாகலையும் அசுத்தாத்துவாவிலும், தூல அல்லது மூலப்பிரகிருதி மாயையிலும் அடங்கும். இவ்விருகலைகளும் மும்மலமுடைய சகலரின் வினை யீட்டத்திற்காயவை.

2) **பிரதிட்டாகலை:** நிவிர்த்திகலையில் விளக்கியவாறே ஏனைக் கலைகளை அட்டவணையுடன் விளங்கிக்கொள்க. **ஆறத்துவாக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.கலை | நிவிர்த்தி | பிரதிட்டை | வித்தை | சாந்தி | சாந்தியதீதம் |
| 2.தத்துவம் | பிருதிவி 1 | அப்பு முதல் பிரகிருதி 23 | மாயை முதல்புருடன்7 | சுத்தவித்தைஈசுரம்சாதாக்கியம்3 | சத்தி. சிவம் 2 |
| 3. புவனம் | காலாக்கினி முதல் பத்திர காளி 108 | அமரேசம் முதல்ஸ்ரீ கண்டம் 56 | வாம முதல் அங்குட்டம்27 | வாமை முதல்சதாசிவம் 18 | நிவிர்த்திமுதல் அநாசிருதம்15 |
| 4.வன்னம் | 1 | 24 | 7 | 3 | 16 |
| 5. பதம்-சொல் | நமோநம முதல் மஹாதேவா 28 | மஹேஸ்வர முதல் அரூபின் அரூபின் 21 | வியாபின்வியாபின்முதல்தியானஹாறாய25 | நித்யயோகினேமுதல் வியோம வியாபினே 11 | ஓம் 1 |
| 6.மந்திரம் | சத்தியோசாதம்,இருதயம்.2 | வாமதேவம், சிரசு 2 | அகோரம். சிகை | தத்புருடம். கவசம் 2 | ஈசானம் நேத்திர அஸ்தி3 |

அட்டவணையில் திருத்தம். நிரல் 4, நிரை 5, இல் 25 அல்ல 20 ஆகும். ஆறத்துவாவில் கலை, தத்துவம், புவனம் மூன்றும் பொருளுலகு, வன்னம், பதம், மந்திரம் மூன்றும் சொல்லுலகு. பிருதிவி முதல் பிரகிருதி வரையான தத்துவங்கள் 24ம் ஆன்ம தத்துவங்கள். வித்தை முதல் புருடன் வரையுள்ள 7ம் வித்யா தத்து வங்கள். சுத்தவித்தை முதல் சிவ மீறாகவுள்ள 5ம் சிவதத்துவங்கள். **பஞ்சகலைகள் அண்டத்தில் ஆனமை பற்றியது.**

| **கலை** | நிவிர்த்தி | பிரதிட்டை | வித்தை | சாந்தி | சாந்தியதீதை |
|---|---|---|---|---|---|
| பூதம் | பிருதிவி | அப்பு | தேயு | வாயு | ஆகாயம் |
| குணம் | குடின முதல் 8 | பிருதிவி குணமும் நெகிழ்தல் முதல் 8 | மேலவற்றோடு சுடுதல் முதல் 8 | மேலவற்றோடு ஓடல் முதல் 8 | மேலவற்றோடு குரோதம் முதல் 8 |
| வடிவு | நாற் கோணம் | இரு கோணம் | முக் கோணம் | அறு கோணம் | வட்டம் |
| நிறம் | பொன்ம | வெண்மை | செம்மை | கருமை | புகைமை |
| குறி | வச்சிரம் | கமலம் | சுவத்திகம் | அறுபுள்ளி | அமிர்த விந்து |
| விடய | கந்தம் | இரசம் | ருபம் | பரிசம் | சத்தம் |
| மலம் | மாயை | கன்மம் | வைந்தவியம் | மாயேயம் | ஆணவம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டத்தில் குணம்பற்றி வேறுவிதமாகக் கூறும் நூல்களுமுள. மணிவாசகர் 'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி,.... எனக் கூறுதல் பஞ்சபூத நுட்பங்களான பூத தன்மாத்திரைகளெனும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றதன் அடிப்படையிலாம். அப்பரும் இந்ந 5,4,3,2,1 தொடர்புகளைக் கூறுகின்றார். இவ்வட்டவணையில் குணம்பற்றி வருவன ஆகமங்களிற் காணப்படும் பஞ்சபூத, தன் மாத்திரைக் குணகுணி இயல்புகளாலேற்படும் விரிவின் காரணமாகலாம். தத்துவ சங்கிரகம், மாபாடியம் என்பன பார்க்க.

**பஞ்சகலைகள் பிண்டத்தில் (உடலில்) ஆனமை பற்றியது :**

| கலை | நிவிர்த்தி | பிரதிட்டை | வித்தை | சாந்தி | சாந்தியதீதை |
|---|---|---|---|---|---|
| பீசம் | ல | வ | ற | ய | ஹ |
| தேகத் தளவு | பாதமுத ல்முழ ந்தாள் | மேல்நா பிவரை | மேல்இதய ம் வரை | மேல் நெற்றி வரை | மேல்து வாதசாந் தம்வரை |
| அவத் தை | சாக்கிரம் | சொப்ப னம் | சுழுத்தி | துரியம் | துரியாதீதம் |
| வாயு | பிராணன் அபான2 | உதான். சமானன்2 | நாகவி யாநன்2 | கூர்மன்கி ரிகரன்2 | தேவதத்தன் தனஞ்சயன்2 |
| நாடி | இடை,பி ங்கலை2 | காந்தார ம்சுழினை | ஹஸ்திசி ஹ்வை2 | அலம்புஷ ா,யசா 2 | குஹு*, சங் கினி 2 |
| கன்மே ந்தி ரியம் | உபத்தம், கழித்தல் | பாயு, மகிழ்தல் | பாணி. கைகொ டுத்தல் | பாதம் நடத்தல் | வாக்கு பேசல் |
| ஞாெ னந்தி ரியம் | ஆக்கி ராணம்- முகப்ப | சிங்குவ வ சுவை ப் பது | நேத்தி ரம்பார் ப்பது | துவக்கு தோலுண ர்வு | சுரோத் திரம் கேட்பது |
| போறி கள் | மூக்கு | வாய் | கண் | மெய்.தோ ல் உடல் | செவி |
| ஆலய மைப் | ஸ்தம்ப மண்டபம் | நிர்த்த மண்டபம் | மகா ம ண்டபம் | அர்த்தம ண்டபம் | கர்ப்பக்கிருக மண்டபம் |

**அந்தக்கரண செயற்பாடும் புத்தி நிட்சயமும் :** மனம் ஒன்றிற்பற்ற, புத்தி அதை ஏதோவொன்றாகத் திடமற்று நிச்சயிக்க, சித்தம் அதுவோ இதுவோவென மனப்பதிவுகளில் வைத்துச் சிந்தித்து யாதாயினுமொரு முடி வெடுக்க, அகங்காரம் கன்மேந்திரியங்களைத் தொழிற்படுத்திச் சென்றறியும். மீளப் புத்தி தன் கன்மவினைக்கேற்ப நிச்சயிக்கும். (ஒரேவிடயத்தை, ஒவ்வொருவரும் வேறுபடச் சிந்தித்து அவரவர்வினைக்கீடாக முடிவெடுத்து அதனால் இன்பமோ, துன்பமோ நுகர்ந்துகொண்டு அவலமுறுதல் அன்றாடநிகழ்வு. அதேவிடயத்தை எதுவித பக்கச்சார்புமின்றி - விருப்புவெறுப்பின்றி அணுகி முடிவெடுப்போர் தர்மவான்கள். அம்முடிவாலவர் பந்தப்பட்டு அவலமடையார். அவர்களே ஒருமையினோராவர்.) தர்மம் என்றொரு பொருளுளது அன்னதும் ஒருமையினோர்கலால் உரைக்க ஒண்ணுமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சகலைகளாறும் தியானத்திலானமை பற்றி**

| **கலை** | நிவிர்த்தி | பிரதிட்டை | வித்தை | சாந்தி | சாந்திய தீதை |
|---|---|---|---|---|---|
| ஆதாரம் | மூலாதாரம்,சுவாதிட்டான | மணிபூரகம் | அநாகதம் | விசுத்தி | ஆஞ்ஞை |
| தெய்வம் | பிரமா | விட்டுணு | உருத்திர | மகேசு | சதாசிவ |
| தியானகாலமாத்திரை | 16 | 8 | 4 | 2 | 1 |
| பிரணவம் | அ | உ | ம | விந்து | நாதம் |
| ஐந்தெழுத் | ந | ம | சி | வ | ய |
| லிங்கமூர்த் | கீழ்ப்பதும | கழுத்து | மேற்பதும | நாளம் | லிங்கம் |
| சதாசிவ மூர்த்தம் | பாதம் | உதரம். வயிறு | தோள் | முகம் | சிரம் |
| நடராச மூர்த்தம் | முயலகன் பதம் | அங்கிக் கரம் | துடிக் கரம் | வரதகரம் | அபயக் கரம் |
| ஒளி | தழலுரு | மின்னொளி | மின்னொளி | விளக் கொளி | வுாளொளி |
| பஞ்சகௌவியம் | கோமயம் | கோசலம் | நெய் | தயிர் | பால் |

ஐந்து சிவதத்துவத்தில் ஐந்தாம் சுத்தவித்யாதத்துவத்தில் நின்று பூசைதொடங்க வேண்டியதால் பூசகர் அதனை அடையவேண்டும். இது சாந்திகலையில் சதாசிவனின்- தற்புருடத்தை முகமாகவும் மகேஸ்வரனை மூர்த்தியாகவுங் கொண்டது. **அருவுருவத்திருமேனி** (சாதாக்கியம்). சிவன் ஆன்மாக்கள் வழிபட்டுய்யக் கொண்ட திருமேனியாதலின் என்றும் புகழப்படுவது.

| **சாதாக்கியம்** | கன்ம சாதாக்கியம் (5) | கர்த்திரு (செய்தல்) சாதாக் கியம் (4) | மூர்த்தி சாதாக்கியம்(3) | அமூர்த்தி சாதாக்கியம் (2) | சிவ சாதாக்கியம்(1) |
|---|---|---|---|---|---|
| **தோன்றும் சக்தி கலை** | நிவிர்தி கலையெனும் கிரியாசக்திகலை | பிரதிட்டா கலையெனும் ஞான சக்திகலை | வித்யா கலையெனும் இச்சா சக்திகலை | சாந்திகலை (ஆதிசக்தி) | சாந்தியதீத கலை (பராசக்தி) |
| **இயல்பு** | பஞ்சகிருத்துவ கர்த் திருத்துவம்,5முகம் 10கைகள் தியான, சிவபூசாரூபி (கீழ் விபரம் பார்க்க) | பளிங்கொளியாய். திவ்யஞான இலிங்கம். மத்தியில் நாலுமுகம் 12கண்கள் 8கரங்கள். வலம்:சூல. மழு,வாள், அபயம். இடம்பாம்பு விளங்கிய பாசம்,மணி வரதம் | காலாக்கினி போற் பிரகாசம், லிங்க வடிவாய் அதன் மெல் ஒரு முகமும் முக்கண்களுமுடைய லிங்க மூர்த்தி | கோடி சூர்யப் பிரகாசம், அரூபி. தூணாய் திவ்யஇலிங்காகாரமாய், சோதியுட் சோதியாய மலர்ந்தது. மூலஸ் தம்பம் றோற்றஒடுக்கங்கள் | அதிசூக்குமம், அளவிலாச் சோதி, மின்னல்போல வியாபகம். இன்பத்தானம். |
| **முகம்** | தற்புருஷர் | அகோரர் | வாமதேவர் | சத்தியோசர் | ஈசான |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்மசாதாக்கியமானது,** சிவமுதலாகவுள்ள மேற்சாதாக்கியங்கள் கீழாக ஒன்றையொன்று பற்றியதால் விசேடமுடைத்து. நாதமயமான இலிங்கமும் பிந்துமயமான பீடமும் கூடியதாய லிங்கமும் பீடமுமாயிருப்பினும் 5 திருமுகமும் 10 திருக்கரங்களும் உடையதாய்ச் சித்திரிக்கப்படும் தியான ரூபியாயிருக்கும். சிவபெருமான் ஆன்மாக்களுக்குச் சிவத்தியான, மற்றும் சிவபூசைகளின் நிமித்தமாக அருவுருவத்திருமேனி கொண்டநிலை ஆவுடையாருடன் கூடிய இலிங்கமாம். பாச நீக்கத்திற்காய உயிர்களின் போக்கைத் திருப்பியெடுக்கும் நிவிர்த்திகலையிற் தோன்றியதால் நாதமயமான ஞானலிங்கமும் விந்து மயமான கிரியாபீடமும் சமமாகக்கூடி பஞ்சகிருத்தியத் தொழிலுடையது. இது கிரியாத்தானம், அதிகாரத் தானம் எனவும்படும். 'நிட்களன்றா னன்பால் நினைந் தருச்சிக்கச் சகள நிட்களனானான் நிமலனே' – சைவசமய நெறி. சகளம் - உரு, நிட்களம் - அரு, சகள - நிட்களம் அருவுரு - இலிங்கம். (விபரம் பிறிதோரிடத்திலும் வரும்).

**7.10.11 அட்டமூர்த்த வடிவம் :** பவாதிநாம அர்ச்சனையில் வரும் அட்டமூர்த்தத்திற்காய மந்திரங்கள் பாகம் 1ன் ஐந்தாம் பகுதியிலுண்டு. அவ்வர்ச்சனையிலும் 7.8லும் விபரமுண்டு. சிவபெருமான் பஞ்சபூதங்கள், சூரியசந்திரர் ஆன்மா - இயமானன் எனும் எட்டிலும் அதிட்டித்து நிற்பதனால் அவை இயங்குகின்றன.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமாயட்ட மூர்த்தியாகி, பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும், பிறருருவுந் தம்முருவுந்தானேயாகி, நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே - அப்பர் திருத்தாண்டகம். (நெருநலை - நேற்று)

'அருக்கனிற் சோதி யமைத்தோன்,
திருத்தகு மதியிற் தண்மை வைத்தோன்,
திண்திறல் தீயின் வெம்மை செய்தோன்,
பொய்தீர் வானிற் கலப்பு வைத்தோன்,
மேதகு காலின் ஊக்கங் கண்டோன்,
நிழல் திகழ் நீரின் இன்சுவை நிகழ்ந்தோன்,
வெளிப்பட மண்ணிற் திண்மை வைத்தோன்,
என்றென்று எனைப் பலகோடி யெனைப் பல பிறவும்
அனைத் தனைத் தவ்வயின் அடைத்தோன்' - திருவாசகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டினது இயக்கங்களுக்கும் அவனே காரணன். இவ்வாற்றால் உலகிற்குத் தாமே அழிவற்ற உண்மைப்பொருள் என்பதையும், அதனையுணரும் ஆன்மாக்களே உய்ந்து பேரின்பம் பெறும் என்பதையும் உணர்த்துவதால் அம்மூர்த்தம் பூசிப்பதற்குரியது. பவாதிநாம அர்ச்சனையே சிவபூசையிற் பிரதானமாம். "எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினில் உண்மை யானென உணர்த்திய வாறே" - பட்டினத்தடிகள்.

**7.10.12 இறைவன் ஏகன் அனேகன் இரண்டுமின்றிச் சர்வ வியாபியாய் நிற்றல்:-** முன் 7.10இற் சொன்னவற்றுடன் அனந்ததேவரும், ஸ்ரீகண்டரும், சத்திபேதங்களும், அணுபக்க சம்புபக்கங்கள் முதலியனவும் அடங்கும். இது மிக ஆழமாகப் பயபக்தியுடன் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயமாம். சிவத்திருவடிவங்களின் தொகுப்பில் இவ் 12ம் நிலையில் வரும் விபரம் சிவபூசையும் சித்தாந்தமும் பற்றிய இந்நூலில் சிறப்பிடம் பெறுவதை உணர்க. விபரம் ஆகமங்களிற் காண்க. தமிழில் அஷ்ட(எட்டு)ப் பிரகடனத்தில் இரத்தினத்திரயத்திலும், சிவஞானமாபாடியம், கந்தபுராணம் என்பவற்றிலும். முழுமையாகவோ பகுதியாகவோ காணலாம்.

மும்மலமுடைய சகலர், மாயையினின்றும் நீங்கிய பிரளயாகலர், முத்திபெற்றும் அதிகாரத்தின் பொருட்டு ஆணவமலமுடைய விஞ்ஞானகலர் ஆகிய மூவகை உயிர் வர்க்கங்களையும், மேலும் பிரதானமாக, அத்தகையோர் பக்குவப்பட்டு, முதல்வனால் அதிட்டிக்கப்பெற்று, அவனாணையாற் கீழ் நிலையிலுள்ளோரை ஆளும் அதிகாரம் செலுத்துபவர்கள் பற்றி சிஞானபோத சிற்றுரை, மாபாடிய ஆதாரங்களுடன் சுருக்கித் தரப்படுகின்றது. பிரமாணவியல் 2ம் சூத்திரம். 4ம் அதிகரணத்தில் இறைவன் லயம், போகம், அதிகாரம் என மூவகையாய் நின்று, உயிர்களுக்கு அருளுதலும் விபரிக்கப்படுகின்றது.

சந்தியாவந்தன முடிவிலும் சிவபூசை ஆரம்பத்திலும் வித்தியாதத்துவ உருத்திரசிவனைத் தியானித்தல் அவசியம். அத்தத்துவத்தினின்று சிவபூசையினை ஆரம்பிக்க வேண்டுமென நாவலரும், சிவபூசா விதிக்காரரும் குறிப்பிட்டுள்ளதால் அதுபற்றி நியாமான விளக்கம் பெறவேண்டியுள்ளது. தியானம் விளக்கமின்றி, நோக்கமின்றி அமைவதல்ல. மேலும் அவ்விளக்கம் சிவோகம்பாவனைக்கும் அதிமுக்கியம் வாய்ந்தது. இந்நூலிற் சற்றே ஆழமாக அண்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாண்டம், இலிங்கம், ஆறத்துவாக்கள், அவற்றின் (அண்டத்தில், பிண்டத்தில், தியானத்தில். ஆலயத்தில்) விரிவு, மற்றும் 36 தத்துவங்கள், சிவத்திருவடிவங்கள், சக்தி அதிட்டித்ததாலாகும் பஞ்சகிருத்தியம் என்பவற்றை விரித்தும் தொகுத்தும் விளக்கினோம். இனி, மேற்படி (2ஆம் பந்தி) இலயம் முதலாய இறையாட்சி நிர்வாக ஒழுங்குகள் விளங்குதற்குச் சற்றே சிரமமாயினும் அவசியம் வேண்டப்படுவதனால் அவ் விபரங்களும் கீழே தரப்படுகின்றன.

1) **இலயம்** (லயம்) என்பது இறைவனின் அறிவு சொரூபம். 2) **போகம்** என்பது அவன் தன்னிற்பிரிவிலா சக்தியுடன் சேர்ந்து (சாதாக்கியமெனும் லிங்கமும் பீடமுமாய்) உயிர்களுக்குப் போகம் உணர்த்தவும், பஞ்சகிருத்திய அதிகாரங்கொண்ட கீழ்நிலை மூர்த்தங்களான மகேஸ்வரம் முதலானவற்றை ஆக்கவுமெனக் கொண்ட இன்பநுகர்வு நிலை. 3) **அதிகாரம்** - அநந்தர் முதலாய மகேஸ்வரமும் மும்மூர்த்திகளாய ஸ்ரீகண்டர் உருத்திரர் விட்டுணு பிரமா ஆதியோர்.

1) **லயசிவம்** - அநாகதசிவம், சிவம், சாந்தம், நாதம், வாகீசுரன், சத்தன், நிட்களன் என்பன ஒருபொருட்சொற்கள். லயசத்தி, விந்து சத்தி, பரவாகீசுவரி, நிட்களை என்பனவும் ஒருபொருட் சொற்கள். இவ்விலய அவத்தை சூக்குமலயம் (சூக்கமவிலயம்), தூலலயம் (தூ லவிலயம்) என இருவகைத்து. இருவகை மாயைகள் : (1) சுத்தமாயை - சிவதத்துவங்கள் 5, (2) அசுத்தமாயை - 7 வித்யாதத்தவங்களும், 24 ஆன்ம தத்துவங்களும். **சூக்குமலயம்** :- இவ்விருவகைச் (சொல்லும், பொருளுமாய) பிரபஞ்சமும் ஒடுங்கியவழி அனைத்தினையும் தன் சர்வவியாபகத் தன்மையாற் பொதுமையில் நோக்கிநிற்கும் பரமசிவன் அவை மீளத் தோன்றுமாறு குறித்து ஞானசத்தி மாத்திரையால் நோக்கி நின்றநிலை சூக்குமலயம். பரமசிவனை லயசிவனுடன் வேறுபட அறிக.

**தூலலயம்** :- அதன்பின் சூக்குமமான இச்சா ஞானக் கிரியா சத்திகளோடு புணர்ந்த விந்துவிற் பதிந்து தூல ஐந்தொழிற்கு ஏதுவான சூக்குமவைந்தொழில் செய்துநிற்கும் நிலை தூலலயம்.

சூக்குமலயத்திற் சிவம் பரநாதமென்றும் சத்தி பரவிந்துவென்றும், தூல லயத்திற் சிவம் அபரநாதமென்றும், சத்தி அபரவிந்துவென்றும் பெயர்பெறும் இவை நான்கும் நிட்களமாம். (நிட்களம் - களமற்றது. ஒன்றையும் பற்றாதிருப்பது. சுவதந்திரமானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) **போகம் - சக்தி பற்றியது :-** சிவமுஞ் சத்தியும், சூரியனும் கதிரும் போல ஒருபொருளின் இருதிறநிலைகள் எனப்படும் தாதான்மிய சம்பந்தமானவை. ஞாயிறு ஒன்றே தன்னை விளக்குகையில் 'கதிரோன்' என்றும் விடயங்களை விளக்குகையில் 'கதிர்' என்றும் அழைக்கப்படுவான். இதுபோல புறப்பொருளை நோக்கிநிற்கும் நிலையிற் சத்தியென்றும் அறிவு (உயிர்கட்கு அருளும் எண்ண)மாத்திரையாய் நிற்கையில் சிவம் என்றும் முதல்வன் அழைக்கப்படுவான். இது சிவ, சக்தி என்பவற்றின் நுண்மையான வரைபாகும்.

இனி, தீயின் சத்தியொன்றே சுடுதல், அடுதல் (சமைத்தல்) முதலிய தொழில் வேறுபாட்டால் சுடுஞ்சத்தி, அடுஞ்சத்தி எனப் பலவாறு தொழில் நிமித்தம் அழைக்கப்படுதல் போல, சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டால் பரை, ஆதி, இச்சா. ஞானம். கிரியை யென்ற 5 வகையாயும், இவை ஒவ்வொன்றும் முறையே ஈசானி முதலிய 5, ஆரணி முதலிய 3, நிவர்த்தி முதலிய 5, வாமை முதலிய 8, பரவாகீஸ்வரி முதலிய 7 சத்திகளாயும் உள்ளனர். இவை பரசிவன் முதலிய 7 சிவ பேதங்களுக்காய சக்திகள். மேலுமவை **அத்தியான்மிகம்** எனும் உன்மனை, சமனை, வியாபினி, சத்தி, நாதாந்தம், நாதம், நிரோதி, அர்த்த சந்திரம், விந்து, மகர, உகர, அகர எனும் பன்னிரு கலைகளாயும் மேலும் பல்வேறு வகைப்பட்டு நிற்கும். (இறுதியிற் கூறிய 12உம் நெற்றியிலிருந்து பின்பக்கமாக யோகத்தால் அறியப்படும் துவாதச (12) நிலைகள். இவை சோடச (16) கலைகள் என மேலும் விரிவாகவும் வகைப்படும்.3) பிராணாயாம கும்பித்தலில் உணரலாம்.

**அதிகாரம்:** :- இது சூக்குமம், தூலம் என இருவகைத்தாம். உத்தியுத்தனாய் (தொழிலாற்ற ஊக்கமுள்ளவனாய்) போக அவத்தையில் நின்ற சதாசிவன், அதன்பின் வித்தையினின்றும் சுத்தப் பிரபஞ்சங்களை சந்நிதி மாத்திரையிற் றோற்றுவித்துத் தொழில் செய்துநின்ற அவதரம் (நிலை) சூக்குமவதிகாரம். இந்த அவத்தையினின்ற சிவம் மகேசன் எனப் பெயர்பெறும். இதிற் தூல ஐந்தொழிற் செய்வதாதலின் சகளமாம். (ஒன்றைப் பற்றுக்கோடாகக் கொள்ளல், பரதந்திரம், இன்றேற் சுவதந்திரம்.) தூலவதிகாரம். :- அநந்தேசன், உருத்திரன், மால், அயன் என்னும் இவர்களை அதிட்டித்து நின்று, மோகினி, மான்களினின்றும் மிச்சிர-(சுத்தாசுத்த)ப் பிரபஞ்சமும். அசுத்தப் பிரபஞ்சமுந் தோற்றுவித்துத் தொழில் செய்யும் அவதரந் தூலவதிகாரம். (குறிப்பு –மோகினி-வித்யாதத்துவம்,மான்- பிரகிருதிதத்துவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) **அநந்தர்- அநந்தேசன்,** இவர் அட்ட வித்தியேசுவரரிற் தலைவர். ஏனையோர் சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி என்போராம். இவர்களுக்கென பிரளயாகல புவனத்தில் ஒவ்வோர் புவனமுண்டு. அநந்தர், ஏனை வித்தியேசுவரர்களுக்கும், சுத்தவித்யா வாசிகளுக்கும், அதன் கீழ்ப்பட்ட தத்துவங்களுககும் தலைவராய் சதாசிவமூர்த்தியின் ஆணையால் அசுத்தமாயையைக் கலக்கி அசுத்தமாயா புவனங்களை உண்டாக்குவர். இவரே அசுத்தாத்துவாத் தலைவராய் விளங்கி ஊழிக்காலத்தில் பரசிவனருளால் பரமுத்தியடைவர்.

(2) **118 உருத்திரர்களும் பிரமவிட்டுணுக்களும்** :- உருத்திரர்கள், ஆணவம், கன்மம் என்ற இருமலமுள்ள பிரளயாகலருள் மாயைநீக்கத்தாற் பெறும் ஓரளவு மலபரிபாகம் உடையவராய், அதிகாரநிலை அற்றவராய்ப் பரமசிவன் அனுக்கிரகத்தாற் பதம் பெற்றவர். (**குறிப்பு** - எனினும் பின்னர் கீழ்ப்புவன பரிபாலனத்தை பிரம விட்டுணுக்களை யதிட்டித்துச் செய்தல் கூறப்பட்டிருக்கின்றது), ஸ்ரீகண்டர், வீரபத்திரர் உள்ளிட்ட 118 உருத்திரர்களும் பிரமாண்டத்திற்குக் காவலாகவுள்ளனர். ஸ்ரீகண்ட உருத்திரர் தலைவர். இவரே ஸ்ரீகண்ட பரமசிவனாவார். முன்னர் கூறியபடி சந்தியாவந்தன முடிவின் வணக்கத்திற்கும், சிவபூசையின் ஆரம்ப தியானத்திற்கும் உரியவர். மத்திய(இடை)ப் பிரளயமுடிவில் பிரகிருதி(24ம்) தத்துவத்திற்குக் கீழ்ப்பட்ட தத்துவங்களையும், புவனங்களையும் உண்டாக்கி மும்மலமுடைய சகலருள் ஞானம், யோகம், தவம், தியானம் முதலியவற்றாற் சிறந்தோரை பிரமபதம், விட்டுணுபதம் முதலியவற்றில் இருத்துவர். மத்தியப்பிரளய காலத்தில் அராக (26ம்) தத்துவத்தில் இருப்பர். பின் மீளப்படைக்கையில் அசுத்தாத்துவாக்களை (நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை அல்லது 24 ஆன்மதத்துவம்வரை) படைத்துப் பிரமவிட்டுணுக்களின் சிருஷ்டி - படைப்பு, திதி - காப்புக்களை அவர்களையதிட்டித்து நின்று கீழ்ப்பட்ட புவனேஸ்வரரையும், முப்பத்துமுக்கோடி தேவர்களையும், (224 புவனங்களின் பிரகிருதிதத்துவத்தில் பிரமா தலைவராகவுள்ள (108 புவனங்கள்கொண்ட) பிரமாண்டம் முதலியவற்றையும் படைப்பர்.

**அனுபக்கம், சம்புபக்கம் :-** இங்ஙனமாகலின், சூக்குமவதிகார அவத்தையில் நின்ற மகேசன் இறுதியாகிய பேதங்களை சம்புபக்கம் (சம்பு – சிவன்) எனவும், தூல வதிகாரத்தினின்ற அநந்தேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய பேதங்களை அணுபக்கம் (அணு – உயிர்) எனவும் அறிக. அணுபக்கத்துள்ளும் அநந்தேசன் விஞ்ஞானகலரிற் பக்குவனாய் முத்திபெற்ற அதிகாரமலவாசனை மாத்திரமுடையவனெனவும். உருத்திரன் பிரளயாகலருட் பக்குவனாய் முத்திபெற்றுத் தூல மலவாசைன உடையனெனவும், ஏனை மாலும் அயனும் சகலருட் புண்ணிய மிகுதிப்பாட்டான் அதிகாரசத்தி பெற்றுடையரெனவும் வேறுபாடு காண்க. சம்புபக்க தாரதம்மியம் - வேறுபாடு ஓரோவொரு கூற்றிற் தோன்றுதல் மாத்திரையாலன்றிப் பிறிதில்லை. இது அணுக்கள் பல. சிவம் ஒன்றே என்றதனாலாம்.

இவ்வாறாக சிவஞானமுனிவர் மிகத்தெளிவாக அணு, சம்பு பக்கங்களை விளக்கி யிருக்கின்றார். பிற ஆசிரியர்கள் தம்முட் சற்றே மாறிமாறிக் கூறுதலை ஏற்கத் தேவையில்லை. அத்துடன் 'ஆறா றையும் நீத்ததன்மேல் நிலையைப் பேறா அடியேன் பெறுமா றுளதோ' என அருணகிரியாரும் மற்றுமுள்ள அனுபூதிமான்களும் கூறியவற்றால் மண்முதல் சிவதத்துவம் ஈறான 36 மாயா (சுத்த, அசுத்த) தத்துவமுங்கண்டு, அவை ஆன்மா கூடின் அல்லது அறியாத சடமென அறிந்து, குருவருளால் 36ம் அசத்தாய் சடமாய் அழியுமென வுணர்ந்து, அவற்றைக் கடந்த நிலையே பரசிவத்தோடு அத்துவிதமாகும் சைவசித்தாந்த பரமுத்தியென்பதாம். இப்பெருந் தத்துவத்தை விளங்கி நடைமுறைப்படுத்தின் அதுவே ஆன்மாவிற்கு அதன் உறுதிநிலையாய சிவனடிசாரும் நிலையினை அளிக்கும். ஏலவே விபரித்த தசகாரியத்தின் முதல்மூன்று நிலைகளிலேயே சுத்ததத்துவம் (சிவதத்துவம்) ஐந்தையும் நீங்கல்பற்றி 'உண்மைநெறிவிளக்கம்' முதற்பாடலிலேயே கூறப்பட்டுள்ளது.

'மண்முதற் சிவமதீறாம் வடிவுகாண் பதுவே ரூபம் ,
மண்முதற் சிவமதீறாம மலம்சடம் என்றல் காட்சி ,
மண்முதற் சிவமதீறாம் வகைதனில் தான்நி லாது,
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருது மன்றே'

**கடைசி இருவரிகளையும் விளக்கமாகக் கூறுவதாயின்.** சிவன் ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி வந்ததனால் ஆன்மா பூதமல்லவெனப் பழித்தும், பொறிகளல்லவென வுணர்ந்தும், அந்தக்கரணம் அல்லவென்று நீங்கியும், கலாதிஞானம் அல்லவென நிராகரணம் - நிராகரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணியும், சுத்ததத்துவ மல்லவென்று தூடனம் - இகழ்தல் செய்தும். இவையிற்றின் நில்லாது நீங்கி தத்துவாதீதமாய் - தத்துவஅதீதம் - தத்துவங் கடந்து இந்தத் தத்துவத்தின் மீண்டுங் கூடாமல் விஞ்ஞான கலத்துவம் பிறந்து சகலதரிசனமாய் நிற்றல் தத்துவசுத்தியாம். இந்த மேலான ஞானத்தை விளங்குதற்கு ஆதாரமாக அத்துவாவிரிவு அட்டவணையிற் காட்டிய தத்துவங்கள் 36ம் பற்றித் தெரியவேண்டியது அடிப்படையிலான அறிவாம். (7.10.15 பார்க்க.)

**வித்யாதத்துவத்தைக் குறியாகவைத்து மேலுந்தொகுத்துப் பார்க்கையில்** கலைகள், மூவகையான 36 தத்துவங்கள், இலிங்கம், ஆலயஅமைப்பு. பிண்டம்- மனித - யோகிஉடல், உருத்திரதியானம் இப்பூமி, அண்டம் என்பவற்றில் நடுத்தானத்தில் வித்யாதத்துவம் இருப்பதை உணரலாம். (நடுத்தானங்கள் தெளிவாக்கி (தடிப்பாக்கி) யுள்ளவை):

1). **கலைகளில்** : நிவிர்த்தி. பிரதிட்டை, **வித்தை**. சாந்தி, சாந்திய தீதை. 2) **மூவகை 36 தத்துவங்களில்** : ஆன்மதத்துவம் 24, **வித்யாதத்துவம்** 7. சிவதத்துவம்5. 3) **வித்யாதத்துவத்தில்**: நியதி, கலை, **வித்தை**, அராகம், புருடன், பிரகிருதி. 4). **இலிங்கத்தில்**: பிரமபாகம்-(இலிங்கபீடம்), விட்டுணுபாகம்-ஆவுடையாரின் கீழ்ப்பாகம், **உருத்திரபாகம்** : (ஆவுடையாரின் மேற்பாகம்). மகேஸ்வரபாகம்-(தண்டின்கீழ்-அடி). சதாசிவபாகம்-(தண்டின்மேல்-நுனி). வித்தையின் அதிதெய்வமான உருத்திரன் நடுவாகும். 5) **ஆலயஅமைப்பில்**: கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம், **நிருத்தமண்டபம்**, ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம். கோபுரவாசல். சிவனின் ஆடலாகிய நிருத்தம் உடல்நடுவாகிய **இருதயமெனும்** சிதாகாசத்திலாம். அண்டத்தில் **சிதம்பரத்திலாம்.** 6). **பிண்டத்தில்** : தலை, நேற்றி, கழுத்து, **நெஞ்சு**, தொப்பூழ், அடிவயிறு, பாதம்7). **தியானத்தில்**: பிரமா, விட்டுணு, **உருத்திரன்,** மகேஸ்வரன், சதாசிவன். 8). **இப்பூமியில்**: பாரதத்தின் நடுவணான **தில்லைச்சிதம்பரம்.** இதனைத் திருமுறை களும், திருவாதவூரடிகள் புராணமும் உறுதிசெய்கையில், 11ம் திருமுறையில் நக்கீரர்: 'உலகம் அனைத்தினுக்கும் ஒண்ணுதல்மேல் இட்ட திலகம்' எனத் திருக்கைலையை, பூமியின் நெற்றியெனக் குறிப்பிடுகின்றார். 9) **அண்டத்தில்**: நமதுபூமி. (இது 'சிவனுய்யக் கொள் கின்ற ஆறு'ஆறு—வழி. அது சிவபூசையே) **பூமி** கீழ்மேலாக ஏழேல் புவனங்களையுடையதாய் **நடுவணில்** உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எண்டரும் பூத மைந்து மெய்திய நாடி மூன்று
மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னாலே
பிண்டமு மண்ட மாகும் பிரமனோ டைவ ராகக்
கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காண லாமே'

ஆதலா லிந்த வண்டத் தறிவரும் பொருளா யென்றுந்
தீதிலா மூல நாடிற் றிகழ்சிவ லிங்க மேனி
மீதிலா மந்த நாத வெளியின்மே லொளிமன் றங்குக்
காதலான் மடவாள் காணக் கருத்துற நிருத்தஞ் செய்வாம்.'
- இவை திருவாதவூரடிகள் புராணப் பாக்கள்.


ஆங்காங்கே அறிந்தவற்றின், சிந்தித்தவற்றின் **தொகுப்பாயுள்ள இத்தனை விரிவும் வித்யாதத்துவத்தின் சிறப்பை யுணர்த்துதற்காம்.** சைவராகிய யாம் நெஞ்சிலுள்ள தடத்தவடிவான உருத்திரனை நெஞ்சிற் கைவைத்து தொழுகையை ஆரம்பித்து, சகஸ்ரதளமாகிய தலையுச்சியிலுள்ள மாயாதீதனான சொரூப பரமுதலை தலைமேற் கை வைத்துத் தொழுவோம். எனவே, சிவபூசை ஆரம்பத்தில் உருத்திரனை நெஞ்சிலும், முடிவில் சொரூப பரசிவனை சகஸ்ராரத்திலும் (உச்சிமேற் 12 அங்குலத்தில்) கைவைத்துத் தொழுது மீளவும் நெஞ்சில் ஒடுக்குவோம். சிவபூசைச் சுருக்கம் இதுவே.

'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க, இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாழ்வாழ்க....கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க. சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க..' என மணிவாசகர் நெஞ்சிற் கரங்குவிதலால் சிவன் மகிழ்தலும், சிரம் - உச்சித்தலைமேற் கைகுவிதலால் உயிரை மேலோங்குவித்து தனது அட்ட குணங்களருளி பேரின்பமுத்தியளிப்பதும் உய்த்துணர்க. சிவசாரூப உருத்திரதுதி (நாவலரின் சந்தியாவந்தன நூற்படி):-கந்தபுராணப்பாடல்,

'மைக்களமு மான்மழுவும் வரதமுட னபயமுறு,
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்,
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய் ,
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**7.10.13. பஞ்சகிருத்தியத்தில் முத்தொழில் நடாத்துபவர்.**

| | நடாத்துபவர் | மாயை | தத்துவம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | சதாசிவர் | சுத்த மாயை | சிவதத்து வம் 5 | சதாசிவர் சிவனின் சுதந்திர வடிவம் |
| 2 | சதாசிவர் அநந்தேசரை அதிட்டித்து | அசுத்த மாயை | வித்யா தத்துவம் 7 | அட்டவித்தியேசுரர்களின் தலைவர் அநந்தர், ஸ்ரீகண்டரை அதிட்டித்து **அழித்தல்** |
| 3 | சதாசிவர் அநந்தேசர் வாயிலாக ஸ்ரீகண்ட உருத்திரரை அதிட்டித்து | பிரகிருதி மாயை | ஆன்ம தத்துவம் 24 | ஸ்ரீகண்டர் பிரமாவை அதிட்டித்து **படைத்தலும்** விட்டுணுவை அதிட்டித்து **காத்தலும்** செய்வர் |

அதிட்டித்தல் என்பது, தான் மறைந்து நின்று அதிட்டிக்கப் பட்டவரைக் குறித்த பஞ்ச கிருத்தியத்தில் (இங்கு முத்தொழிலிற்) செலுத்துதல்.

**7.10.14 சிவத்திருமேனி அங்கபேதங்கள் -** 'அருளுரு உயிர் கட்கென்றே ஆக்கினன் அசிந்தன்'- சித்தியார். எல்லா அருட் திருமேனிகளும், உயிர்க்கருளவெனச் சக்திமூலம் ஆக்கப்பட்டவையேயாம். **அங்கங்கள்-** சிரசு, முகம், இருதயம். சிவனுக்குச் சுதந்திரமான சிவகரணம் சிகை. பிரமாமுதலிய மூர்த்திகளிடமாக இருந்து ஐந்தொழிலாற்றும் பரமசிவனுடைய சுத்த குணங்களாகிய ஈசானம் முதலிய 5 மந்திரங்களும் சதாசிவமூர்த்தியின் 5 முகங்களாம். முத்தான்மாக்களுக்கு மெய்ஞ்ஞானமுணர்த்துவது இதயம். திருவடிகள் ஞான, கிரியா சத்திகளை உணர்த்தும். (பிரத்தி - வேறான.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ). **பிரத்தியங்கங்கள்** - திருமார்பு, கழுத்து, தனம், புயம், நாபி, குய்யம் - குறி, உதரம், கண்கள், நாசி, வாய், காதுகள், கரங்கள், பாதங்கள். விரல்கள், தொடைகள், முழந்தாள்கள், கணைக்கால்கள் என்பன. **நீலகண்டம்**, 'புவனங்களுய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய் தவநின்று தடுத்ததென்னத் தகைத்து தான் தரித்ததென்று சிவனெந்தை கண்டந்தன்னை திருநீல கண்டமென்பர்'- பெரியபுராணம். **திரிநேத்திரம்**: (1.) இது 'நாயகன்..' எனவரும் சித்தியார் பாடற்படி சிவனின் அதிட்டிப்பினால் சூரிய, சந்திரர், அக்கினியாகிய முச்சுடரும் ஒளிபெறுதலை யுணர்த்தும். (2.) இச்சா, ஞானக் கிரியைகளை உணர்த்தும், (3). 'முக்கணெனன்பது..' எனும் பட்டினத்தார் பாடற்படி காருகபத்தியம். ஆகவனீயம். தட்சிணாக்கினி ஆகிய (பிராமண) முத்தீவேள்வியைக் குறிக்கும். இம்மூன்றும் சிறப்புக்குரியனவாகும்.

(இ) **சாங்கங்கள்** - (அங்கத்தோடு கூடியவை). சூலம், மழு, வாள், குலிசம், அபயமுத்திரை, வரதமுத்திரை, அக்கினி, அங்குசம், மணி, சர்ப்பம், பாசம் என்பன. சனனி, ரோதயித்திரி. ஆரணியெனும் முச்சத்தி வடிவினதாய **சூலம்** - முத்தொழிற்கும் சிவனே முழுமுதல் என்பதையும். இச்சா ஞானக் கிரியாசத்திகளை உடையவர் என்பதையும் குறிக்கும். நால்வேதநாதர் தாமென்பதை **நாற்கால்மான்** உணர்த்தும். **கங்கை** -பெருகி வரும் அகங்காரத்தை அடக்குதலைக் குறிக்கும், **சந்திரன்** -அடைக்கலமளித்து முத்தியளிப்பதைக் குறிக்கும். ஞானத்தினால் முத்தியளிப்பதையும், ஞானத்தினால் யாவரையும் அடக்குதலையும் **ஞானவாள்** குறிக்கும். **குலிசம்** - யாவராலும் கெடுத்தற் கரியரென்பது. **அபயகரம்**-துன்பம் நீக்கி அனுக்கிரகம் பண்ணல். **வரதம்**- முத்திவழங்கல்.

**(ஈ) உபாங்கங்கள்** - (அங்கத்தை விட்டுநீங்காது அதன் சமீபமா யிருப்பது). வஸ்திரம். உபவீதம் (பூணூல்), மாலை, உத்தரீயம் (போர்வை), ஆபரணம், இடபவாகனம், திருவாசி என்பனவாம். பட்டினத்துப் பிள்ளையாரின் திருவொற்றியூர் ஒருபா ஒருபது கூறுவதாவது

1) 'இருநில மடந்தை இயல் பினின் உடுத்த' எனவரும் திருப்பெரு வடிவத்தில், 'உருவாம் உலகுக் கொருவன் ஆகிய பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மை யின் எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின் அப்பொருள் உனக்கே அவயவம் ஆதலின்' சர்வமும் சிவமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) 'தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி ஆமதி யான் என அமைத்த வாறே, அறனுரு வாகிய ஆனே றேறுதல் இறைவ னியான்என இயற்று மாறே, அதவள் (அது அவள்) அவனென நின்றமை யார்க்கும் பொதுநிலை யான்என உணர்த்திய பொருளே, முக்கணன் என்பது முத்தீ வேள்வியில் தொக்க தென்னிடை என்பதோர் சுருக்கே, வேத மான் மறி ஏந்துதல் மற்றதன் நாதன் நான்என நவிற்று மாறே, முவிலை ஒருதாட் சூலமேந்துதல் மூவரும் யான்என மொழிந்த வாறே, எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினில் உண்மை யான்என உணர்த்திய வாறே,...' என இரு பாடல் வரிகளாலும் சிவனின் திருப்பெரு வடிவம் சித்திரிக்கப்படுதல் காண்க. இப் பதினொராம் திருமுறைப் பாடல்கள் சாங்கங்களின் தத்துவத்தையும், அதனாலாம் சிவபரத்துவச் சிறப்பையும் உணர்த்துகின்றன. கந்த - சிவபுராணங்களும் சாங்கங்கள் இறைவனுக் கமைந்த வரலாற்றைக் கூறுகின்றன. பிரதானமானது **தாருகாவனத்து முனிவர்களின் அகந்தையை அடக்கிய வரலாறாம்.**

இம்முனிவர்கள் சிவபிரானிடத்து அன்பில்லாதவராய் அளவற்ற யாகங்களைச் செய்து ஒரு கடவுளையின்றித் தாமே இன்பத்தை விளைக்கும் முத்தியை எய்தக்கருதி உடலை வருத்தி வீணே தவஞ்செய்து தம்கொள்கையிற் துணிவுடையோராய் ஒழுகலாயினர். ('அரன்றன் பாத மறந்துசெய் அறங்க ளெல்லாம் வீண் செயல்' என்பது சித்தியார் கூற்று.) இதனையுணர்ந்த இறைவன் முகுந்தனைப் பெண் வடிவாக்கி, தானொரு பிச்சாடன வேடங் கொண்டு திருவிளையாடலொன்றின் மூலம் அவர்கள் அகந்தையை யடக்கத் திருவுளங்கொண்டார். இதன்போதாய போரில் அவர்கள் யாகத்தீயிற்பெற்ற படைக்கலன்களை யெல்லாம் தன்வசப்படுத்தி சாங்கங்களாக்கிக் கொண்டார். அதிற் தோன்றிய புலியை, 'அங்கையால் உரித்து மற்றவ் வுழுவையந் தோலை முன்னம் உடுத்தனன் தானை யொப்ப' என்றபடி, உடையாக்கிக் கொண்டார். இவ்வாறே கணிச்சி, மான், பாம்பு, பூதப்படை, சிரித்தலுடைய வெண்டலை, மந்திரவடிவாய் ஒலித்த துடி - உடுக்கு, முயலகன் ஆகிய படைக்கலங்களை அடக்கித் தாமே யவற்றை அணியாகக்கொண்டு முயலகன் மீதுநின்று நடமாடினர். இதில் சிவனின் தாண்டவ மகிமை கூறப்படுகின்றது.

'கடுக்கையும் நதியும் பாம்பும் கலைமதிக் கொழுந்துஞ் சென்னி
முடித்தவன் பதத்தில் ஊன்று முயலகன் மெல்ல மெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தெடுத் தசைத்த லோடும் ஏதுவங் கதனை நோக்கி
நடித்தனன் என்றும் நீங்கா நடம் புரிகின்ற தேபோல்'

கடுக்கை – கொன்றை, கலைமதிக்கொழுந்து – பாலச்சந்திரன், சென்னிமுடித்தவன் - தலையிற்சூடியவன், ஏதுவங்கதனை நோக்கி – முயலகனின் அசைவை யொருகாரணமாக்கி, அநவரத - நித்திய தாண்டவம் புரிகின்றான். இதுவே யென்றும் பஞ்சகிருத்தியத்தை நிகழ்த்தி, 'நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன் சலமிலன் பேர்சங் கரன்' எனத் தன் பரத்துவத்தைப் பறைசாற்றலாம். 'யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு வானாகி' நின்றநிலை எனினும் ஒக்கும். புராணங்களும் அவற்றாலாம் சிவத்திருவடிங்களும், தத்துவத்தைப் போதிப்பனவேயன்றிப் பிறிதில்லை. 'யான்செய்தேன் பிறர் செய்தா ரென்னதியா னென்னு...'. சித்தி 305. பக்28 பார்க்க. கோண் - ஆணவத் தாலாம் அறியாமை, செவ்வேநிற்றல் - பக்கஞ்சாரா ஒருமைப்பாடு – சிவஞானத் தமர்ந்து நீங்கா நிற்றல். (அது ஞானியர்க்கே சாலும்). நண்ணுவித்தல்..... – தத்தம் பிராரத்தாலாம் வினைகளைச் சிவச்செயலெனல் அன்றித் தன்முனைப்போ டாற்றியவர்க்கு அக்கன்மபலனை ஊட்டி மீண்டும் பிறப்பிலாழ்த்தல். ஊன்செய்யா ஞானம் - தவமுதிர்வால் சிவம் குருவாகிக் காட்டக் காணுநெறி. ஊன்செய் ஞானம் - உடற் பஞ்சப் புலன்களா லாவது. சிவஞானியர்க்குக் கன்மநுகர்ச்சி இல்லை யென்பதாம்.

**7.10.15. உண்ணிலைத் தத்துவங்கள் 36.** இவை மிகவும் அடிப்படை யான சித்தாந்தத் தரவுகள். பதிபசுபாச உண்மைகளையும், அவற்றின் இலக்கணங்களையும், பொது வதிகாரங்களிற் கூறும் 14சித்தாந்த நூல் கள் அல்லது மெய்கண்ட சாத்திரங்கள் (சிறப்பாக சிவஞானபோதம், சிவஞானசித்தியார்,) தமது சிறப்பு அதிகாரங்களில், பசுவே அவ்வறிவாற் பயனுறும் என்பதையும், அப்பயனை எவ்வாறுபெறும் என்பதனையும், பெற்றபயனாய சீவன் முத்தராம் நிலையிலும் எவ்வாறு மலத்தாக்கத்தினின்றும் நீங்கவேண்டுமெனவும் இறுதிச் சூத்திரத்தாற் கூறுகின்றன. இவற்றின் விரிவை அந்நூல்களிற் கண்டு குருவருளாற் தெளிக. இதுவரை இதில் பதி பசு பாச உண்மை, இலக்கணம் என்பன பொதுவில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டிருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயைபற்றிய தெளிவினையறிதல் பிரதானமாகவுள்ளது. இதுபற்றிய பூரணஅறிவு ஞானமார்க்கத்திற்கே யெனினும் (கிரியையென மருவுவன யாவும் ஞானத்தின் நிமித்தம்' எனக் கண்டோமாகலின்) கிரியைக்கும் இவ்வறிவு மிகப் பிரதானமாகின்றது. சந்தியாவந்தனத்தில் ஆத்மதத்துவ, வித்யாதத்துவ, சிவதத்துவங்களைத் திருப்திப்படுத்த 'சுவாஹா'என நீர் இறைக்கின்றோமாதலின் சிவபூசைக்கு முன்னான அந்நிகழ்வின் தாற்பரியத்தை முற்றாக விளங்க 36 தத்துவங்களை ஏலவே அட்டவணைகள் முதலாயவற்றிற் குறித்தவற்றோடு இங்கும், 7.10.16லும் அறிதல் அவசியமாம். அடுத்துவரும் சித்தாந்தப்பட விபரங்கள் சுருக்கித் தரப்படுகின்றன. **36 தத்துவம்பற்றி தத்துவப்பிரகாசிகையின் 76 வடமொழிச் சுலோகங்கள் தமிழிற் தரப்படுகின்றன.** இந்நூல் போஜதேவர் என்ற அரசராற் செய்யப்பட்டது. இதற்கு அகோரசிவாசாரியார் இயற்றிய விரிவுரையுண்டு. இதனைத் திருவாவடுதுறை ஆதீன கணபதிதேசிகர் செய்த உரையுடன் பொருத்தி **குறிப்புகளுடனும், தேவையாயின் மாபாடியத்துடனும், பாக்களிற் பிரதானமானவையும் தரப்படுகின்றன.**

7.10.15.1 **தத்துவப்பிரகாசிகையும் மாபாடிய விளக்கமும்.**

1. 'ஞானசொரூபனாயும், ஒன்றாயும், வியாபகனாயும், நித்தியனாயும், நித்திய முத்தனாயும், பிரபுவாயும், சாந்தனாயும், உலகிற்கு நிமித்த காரணனாயும், அனைவருக்கும் அனுக்கிர கிப்பவனாயுமுள்ள பரமசிவன் அனைத்திற்கும் மேம்பட்டவனா யிருக்கின்றான்.' சிவதோத்திரம்.

2. 'யாதொன்று உற்பத்தி, நாசம், இறுதியடைகிற தில்லையோ, சுகத்தைக் கொடுக்கவும் வல்லதோ, அத்தகைய ஞானக் கிரியா ரூபமான சிவனுடைய பிரகாசமானது அனைத்திற்கும் மேலானதாய் இருக்கின்றது.'

3) 'அந்தப் பரமசிவன் இந்த ஆன்மாக்க ளுக்குப் போக மோட்சங்களைக் கொடுப்பதில் எந்தச்சக்தியால் சமர்த்த ராகின்றாரோ, ஒன்றாயும், ஞானரூபமாயும், சமவேதமாயும், இருக்கிற அந்தச் சக்தியை நமஸ்கரிக்கின்றேன்.' (சக்தி தோத்திரம்). பிரகாசம் - சக்தி, சமர்த்தர் - ஆற்றலுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஆசிரியர் (போஜராஜர்) கூற்று. தேவையாயின் மூலத்திற் காண்க.

5. சிவாகமங்களிற் பதார்த்தங்களெனப் படுவனவற்றுட் பிரதானமானவை பதி - பரமசிவன், பசு - ஆன்மாக்கள், பாசங்கள் - 5 பொருட்கள். **குறிப்பு:** பாசங்கள் ஆணவம், கன்மம், மாயை யெனும் பிரதான மூன்றுடன், திரோதம் - மறைப்பாற்றல், மாயேயமென ஐந்தாம். மாயேயம் - பிரகிருதிமாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் (பஞ்சகஞ்சுகனான ஆன்மநிலை) என்ற 7 வித்யாதத்துவம்.

6. பரமசிவனுடைய பிரசாதத்தால் முத்திபெற்ற **முத்தான்மாக்களும் சிவத்துவம் உடையவர்கள்.** இவர்கள் ஆதிமுத்தர். பரமசிவன் அநாதிமுத்தன், ஒருவன், பஞ்ச மந்திரங்களைத் திருமேனியாகவுடையவன். ஆதி- தொடக்கம், அநாதி– தொடக்கமற்றது.

7. நித்திய பரிபூரணனான இந்தப் பரமசிவனுடைய மேலானகிருத்தியமானது சிருஷ்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகமென ஐந்து. **குறிப்பு:** இவை படைத்தல். காத்தல் (வினையனுபவம் வரை நிலைக்கச் செய்தல்), (உடலாதிகளை ஓய்வுக்கென) அழித்தல், (பாசநீக்கங் காரணமாகப் போகத்தில் அழுந்தும்வரை சிவஞானத்தை) மறைத்தல், (பாசநீக்கமும் மோட்சமும் வழங்கி) அருளல் எனவும் படும்.

8. பசுக்களாவார் மூவகையினர். 1) **விஞ்ஞானகலர்** (விஞ்ஞான கேவலர்):- விஞ்ஞானம், யோகம், சந்நியாசம், அனுபவ மென்பவற்றால் கன்மமல நாசமும், கன்ம மில்லாததால் கன்மபலன் அனுபவித்தற்குக் கருவியான கலைமுதலிய மாயாகாரியநாசமும் உண்மையாதலால் கன்மமல, மாயாமலம் ஒழிந்த ஆணவம் மட்டும் உடையவர். 2).**பிரளயாகலர்** (பிரளயகேவலர்) – பிரளயத்திலே கலைமுதலிய மாயாகாரியங்களுக்கு நாசம் உண்டாகின்றமையால் மாயாமலமின்றி ஆணவம், கன்மம் இரண்டும் உள்ளவர். 3) **சகலர்** - ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலமும் உடையவர்..

9. இம் மூவகையினருள் விஞ்ஞானகேவலர் சத்தி தேய்ந்த (பக்குவ), சத்தி தேயப்படாத (அபக்குவ) மலத்தையுடையவர் என இருவகையினர். சகலர் நேரடியாக மாயாசம்பந்த முடையவரில்லாவிடிலும், கலையாதி மாயாகாரியங்கள் (மாயேயம்) சம்பந்தத்தால் மும்மலர் ஆகின்றனர். அதனால் பிராரத்த (வாசனாமல) கன்மங்கழிக்க (சுழற்றிய பம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டபின்னும் சுழல்வதுபோல) உலகில் உடலுடன் வாழும் முத்தான்மாக்களும் சகலராகின்றனர். கண்படலம் நாசமின்றி வைத்தியனால் வேறே அகற்றப்படுவது போல ஆணவமும் ஞானகுருவின் தீக்கையால் அகற்றப்படும்.

10. பரமசிவன் (9ற்கூறிய) பக்குவ, அபக்குவமலர்களில் பக்குவ மலர்க்கு அனுக்கிரகித்து அவரில் அதிக மலபாகத்தினரான எண்மரை **அட்டவித்தியேசுரர்** என வித்தியேசர் பதத்திலும், ஏனையோரை (ஏழுகோடிகளாயுள்ள) **மந்திரேசுவரர்கள்** ஆகவும் செய்கின்றார். குறிப்பு– எழுகோடி என்பது, நம: ஸ்வதா ஸ்வாஹா வஷட் வௌஷட் ஹும்பட் என்ற 7 அந்தங்களைக் குறிக்கும்.

**அட்ட வித்தியேசருக்காய அனுக்கிரகம்:-** 1) மலபாகத்திற்கு ஒத்த அதிகாரம், 2) எண்குணம், 3) சுத்தமாயாகாரிய சம்பந்த சரீரம் என்பன வழங்கலும், 4) அதிக மலபாகத்தினரை, அ) அனந்தர் சூக்குமர் சிவோத்தமர் ஏகநேத்திரர் ஏகருத்திரர் திரிமூர்த்தி சீகண்டர் சிகண்டி என்னும் பெயர்களை யுடையவர்களாகவும், ஆ) பஞ்ச கிருத்தியத்திற்கு அதிகாரிகளாகவும் இ) சுத்தாத்துவாக்களுக்குக் கர்த்தாக்களாகவும் ஈ) ஈசுவரதத்துவ வாசிகளாகவும் செய்தல். இனி, ஏழுகோடி மகாமந்திரேசுவரருள் பிற்பாதியினர்:- சகலரிற் பக்குவர்க்கு ஆசிரிய வடிவத்தை ஆதாரமாக்கி அநுக்கிரகித்த பின் மகாப்பிரளயத்தில் மோட்சமடைகின்றனர். முற்பாதியினர் நிஸ்கள - நிராதார சிவனுக்கு விஞ்ஞான கேவலர், மந்திரேசுவரர் போன்றோர் விடயத்திற் கரணமாயிருந்து அதிகார வைராக்கியத்தாற் சிருட்டிக்குப் பின் முத்தியடைகின்றனர்.

11. பக்குவமல கன்மத்தினரான **பிரளயாகலர்** சத்திநிபாதம் நிகழப்பெற்று அதனால் வரும் (குருவுணர்த்தும்) சிவனடி ஞானத்தால் ஆணவமகல மோட்சமடைகின்றனர். ஏனையோர் புரியட்டக தேகத்துடன் கூடிக் கன்மவசப்பட்டு அதையனுபவிக்கும் பொருட்டுப் பலவித புவனங்களுக்குரிய சரீரரூபங்களான யோனிகளிற் பிறப்பர்.

12 அந்தக்கரணமும், புத்தி வியாபாரங்களும் (தொழில்களும்) இந்திரியங்களும் புரியட்டகமாகின்றன. இவர்களிற் சிலர் மந்திர மகேசுவரரால் புவனபதிகள் ஆகின்றனர். புரியட்டகம் என்பது ஆன்மாக்கள் கேவலத்தினீங்கி முத்தியடையும் வரையுள்ள பிருதிவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கலையீறான 30 தத்துவரூபமாயும், நிலைத்திருந்து வினை நிமித்தம் பல்வேறு புவனங்களுக்கும் போக்குவரவு செய்யும் சூக்குமதேகம். சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளும் மனம், புத்தி, அகங்காரங்களுமென எட்டுஞ் சேர்ந்து மேற்கண்ட 30ல் அடங்குதலால் புரியட்டகமாம்.

13. (11ன் தொடர்) பிரளயாகலரில் ஏனையோர் சிருட்டியின்போது கலாதிகூடிச் சகலர் ஆகின்றனர். அவர்களுள் 118பேர் சிவனால் நேரில் மந்திரேசுவரர் ஆக்கப்படுகின்றனர். (அதிகாரசம்பந்தத்தாற் சகலரெனினும் பக்குவங்காரணமாகப் பிரளயாகலராதலின் பதவி.)

14) அவர்களில் 1) மண்டலிகர் (அக்கினிமண்டல அதிகாரத்தினர்.) கலை (கலாதத்துவ) உச்சியில்வாழும் எண்மர், 2) கிரோதாதிகள் - குணதத்துவ உச்சியில் வாழும் எண்மர், 3) வீரபத்திரர் - (100 உருத்திரரை நியமிப்பவர்) 4) ஸ்ரீகண்ட பரமேசுவரர் (ஸ்ரீகண்டர்) குணதத்துவத்தை இடமாகக்கொண்டு அதன் கீழுள்ள புவனகர்த்தா. 100 உருத்திரர்கள் பிரமாண்டங்களுக்கு ஆதாரமானவர்.

15) **சகலர்** - மலநாசத்திற்குக் காரணமான சத்திநிபாதத்தால் மல பாகத்தை மிகுதியாய் அடைந்திருக்கும் சகலர்களைப் பரமசிவன் ஆசிரியவடிவத்தை யதிட்டித்து, தீக்கையினால் சிவசாமிய ரூப மோட்சத்திற் சேர்க்கின்றார். மந்தமலபரிபாக முடையவர் மந்ததர சத்திநி பாதத்தால் வித்தியேசுரராதி பதங்களில் சேர்க்கின்றார். (திதியின்போது பரமசிவன் மானிடகுருவை யதிட்டித்து அனுக்கிரகித்து உருத்திர மந்திரேசுவரராதி பதங்களை வழங்கு கின்றாரென சிலநூல்கூறும்.)
16. மேற்கூறப்படாத ஏனையோரை அவரவற்காய கன்மங்களை யனுசரித்து போகங்களை யனுபவிக்கும்படி பிறப்புகளில் ஏவுகின்றார். (இவை ஆன்மவர்க்கங்கள் பற்றியவை. **இனி, பாசங்களின் பிரிவு** :)

17. முன் ஐந்திற்கூறிய பதார்த்தங்கள் 5 என்பது சுத்தமாயை உட்படவாம். அந்த மகாமாயா ரூபமான சுத்தமாயைக்கு பரமுத்தியை நோக்க பாசத்துவம் இருந்தபோதிலும் வித்தியா வித்தியேசுவரர்களுடைய (அசுத்தமாயை கடந்தவர்கள்) அபரமுத்தி பதத்திற்கு சுத்தமாயாகாரிய சரீரம் காரணமாதலால் அதற்குப் பாசத்துவங் கூடாது. இதனால் (புருடதத்துவ) **புருஷனுக்கு பாசங்கள் நான்கு.** அவை ஆணவம் கன்மம் என்பவற்றின் காரியங்களும் மாயாகாரியமும் (மாயேயம்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரோத(மறைப்புக்) காரியமுமாம். இதனால் சுத்தாத்துவ வாசிகளான அநந்தர் ஆகியோர்க்கு சுத்தமாயை, திரோதமாகிய இருபாசங்களே உண்டென்பது பெறப்படும். அவையும் மோகத்தை யுண்டுபண்ணாது ஞானத்தையே யுண்டுபண்ணும். சுத்தமாயாகாரியமான நாதம் சகலர் உட்பட்ட எல்லா உயிர்களுக்கும் உண்டு எனினும், வித்தியா வித்தியேசுவரர்களுக்கு சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ (சர்வஞான, சர்வவல்லமை) முதலிய (எண்குணங்கள்) சுத்தமாயா காரியசம்பந்தம் இருப்பது போல் சகலர்க்கு இல்லை. மாயா காரியமான கலாதிகள் சகலர்க்கு கன்மங் காரணமாக உண்டாகின்றபடியால் அவை இடையே வந்துகூடிய (பும்சத்துவ) மலங்களாம்.

18. **ஆணவமலமானது** ஒன்றாயும் அநேக சக்திகளை உடையதாயும் புருடனுடைய ஞானாக் கிரியா சக்திகளை மறைப்பதாயும், நெல்லின் உமிபோலும், செம்பின் கழிம்பு போலுமுள்ளது. சடமாயும் நித்தியமாயுமிருப்பதால் ஆணவம் ஒன்றே. உமி அவிப்பதினாலும், களிம்பு புளியினாலும் நிவர்த்தியாதல் போல **ஆணவம் தீட்சையினால் நிவர்த்தியாகும்.** நெல்லுற்பத்தி உமியினாற் போல சரீர உற்பத்தி மலத்தினாலும், களிம்பு நாசம் புளியினாற் போல மலநாசம் தீக்கையினாலுமாம்.

19. **கன்மம்** - தர்ம அதர்ம ரூபமாயும், (செய்பவன், செய்யப்படுபொருள், கருவி என்ற சாதன வேறுபாட்டால்) வேறுபாடுடையதாயும் (இடையறாத நீரோட்டம்போல) பிரவாக அநாதியாயு முள்ளது. **மாயை** பொருள் வடிவாய், காலம் முதலிய சாதாரண உலகத்திற்கு முதற் காரணமாய், நித்தியமாயுள்ளது. மாயை இயல்பாகப் பந்தியாவிடிலும் அதன் காரியமான கலைமுதலாம் தத்துவங்கள் (மாயேயம்) பந்திப்பதால் மலமாகின்றது. **குறிப்பு:-** மாயை பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாய் இறைவனின் **பரிக்கிரக சக்தியாய்** (வேண்டும்போது விரிக்கவும் பின் ஒடுக்கவுங் கூடியதாய்) நித்தமாயுள்ளது. சங்கர வேதாந்தியர் கூறுவதுபோல மாயை அசத்தியமன்று. உலகமானது, காலமுதலான பொது, சூக்குமதேக முதலான சிறப்பு, தூலதேகமான பொதுச்சிறப்பு என மூவகையாம். இவை மாயையின் காரியமாய் அழியும், இவற்றின் காரணம் அழியாத மாயை. இது வித்தும் மரமும் போன்றது.

20. புருஷர்களின் அறிவை மறைக்கக்கூடிய சிவனுடைய **திரோதான சக்தியானது** பாசத்தைத் தொடர்ந்துநின்று காரியப்படுத்துகிறபடியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் எனப்படுகின்றது. **குறிப்பு** – சிவநல்வினை பற்றிய அறிவைத் திரோதானம் மறைப்பதனாலேயே உயிர்கள் கன்ம பரிபாகத்திற்காக வினையீட்டத்தில் ஈடுபடும். திரோதம் சிவத்தோடு அத்துவிதமாதலைத் தடுத்து, மலத்தோடு உறவாக்கித் தன்முனைப்போடு கூடிய விருப்பு வெறுப்புடன் கரும மாற்றி அதனாற் புண்ணிய பாவங்களையும் அதனால் இன்ப துன்பங்களையும் பல்பிறப்பி னூடாக ஆற்றிக் களைப்புறச் செய்யும். அப்போது முன்நல்வினை காரணமாக இருவினை யொப்பு நிகழ, திரோதம் விலகி சிவம் குருவடிவாய் வந்து தீட்சையளித்து ஞானம் வழங்குவார். அதுவே முத்திக்கு வழியுமாம். ஆதலின் திரோதத்திற்குப் பாசத்தன்மை உபசாரமாம்.

(இதுவரை பொதுவிற்கூறிய மாயை அசுத்தமாயையே). இவ்வாறு சகலர்களைப் பந்திக்கக்கூடிய மும்மலங்களையும் விஞ்ஞான, பிரளயாகலரைப் பந்திக்கக்கூடிய திரோதானத்தையும் சொல்லிவிட்டு அசுத்தமாயையைக் கடந்தவருடைய சுத்ததத்துவ ரூபமான பாசம் கூறுகிறார். (குறிப்பு : மூலத்தில் அசுத்தமாயையைச் சுத்தமாயை எனப்படுதல் அச்சுத் தவறாகலாம்)

21. **சுத்தங்களான (சுத்த) தத்துவங்கள் ஐந்து** : - இது சிவதத்து வத்தை நித்தமான முதற் காரணமாகவும் ஏனை சக்தி, சாதாக்கிய-சதாசிவ, ஈசுர - மகேசுர, சுத்தவித்தை - வித்யா ஆகிய நான்கு தத்துவங்களைக் காரியமாகவுங் கொண்டது.

**குறிப்பு** 1- சிருட்டி முறையில் வித்யாதத்துவம் - சுத்தவித்தை ஐந்தாவதாம். மாயேயமான வித்தை வேறு, அது ஒன்பதாவது). இச் சுத்தவித்தை முதலிய தத்துவங்கள் வெவ்வேறான உலக அமைப்புக்களுடன் (புவனங்களுடன்) கூடியிருப்பதால் அவை காரியங்கள் ஆதலாலும், அத்தத்துவ வாசிகளுக்குச் சரீரசம்பந்தம் இருப்பதாலும் அவற்றிற்குக் காரணம் மகா மாயையென ஒன்றுண்டென்று சுத்தமாயை சித்தித்தது (கைகூடியது) என்பதாம். **குறிப்பு 2-** மாயை சிவனாற் காரியப்படுவது. அதிற் சிவம் அல்லது நாதமெனும் முதலாம் சுத்த தத்துவம் முதற்காரணமாகக் கொண்டு, சுத்தமாயையின் இரண்டாந் தத்துவமாய சக்தி முதலான ஏனைநான்கும் காரியப்படும். காரண காரியத் தொடர்புகள் ஒன்றிற் கொன்று தொடர்பானவை. காரியப்படுவது பிறிதொன்றுக்குக் காரணமாதல் பல இடங்களிலும் அவதானிக்கப்படும். இது ஒன்றிற்கொன்று தூலசூக்குமமுமாம். **குறிப்பு** 3- பொதுவிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியப்படும் பிரபஞ்சம் யாவற்றிற்கும் சிவம் நிமித்தகாரணம், மாயை முதற்காரணம். சக்தி துணைக் காரணம். (பிரபஞ்சம் - மரம், முளை, நீர் - சத்தி, மண் - சிவம் என காரணங்களை ஒப்பு நோக்கலாம்.)

**முக்கிய குறிப்பு** - சிவஞானமுனிவர் மாபாடியத்திற் கண்டவாறு : **மாயையின்வகை** – பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய் நித்தமாய்ச் சடமாய் முதல்வனுக்குப் பரிக்கிரக சக்தியாய் முதல்வனின் வியாப்பியமாய் மெய்ப்பொருளாய் அருவாயுள்ளதெனப் போந்த (தகுதிவாய்ந்த) மாயை, சுத்தமாயை அசுத்தமாயை என இரு வகைப்படும். சுத்தமாயை மாமாயை குடிலை குண்டலி விந்து என்பன ஒருபொருட் சொற்கள். அசுத்தமாயை அதோமாயை மாயை மோகினி என்பன ஒருபொருட் சொற்கள். சுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் சுத்தமாயை. அசுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் அசுத்தமாயை. சுத்தப் பிரபஞ்சம் சிவதத்துவ முதலாயின. அசுத்தப் பிரபஞ்சம் கலை முதலாயின. துன்பத்தோடு விரவுதல் - சேர்தலின்றி இன்ப மாத்திரையே பயத்தற்கு - வழங்குதற்கு ஏதுவானது சுத்தம். ஏனைய அசுத்தம்.

**சுத்தமாயை : சுத்தப்பிரபஞ்ச உண்மைக்குப் பிரமாணம்** : முதல்வனின் ஐந்தொழில் காரணமாக அவனுக்கு இலயம் (அறிவுரு), போகம் (சேர்க்கை), அதிகாரம் (ஆட்சி) என்ற மூன்று அவத்தைகள் (நிலைகள்) உளவாகின்றன. இவை நிகழவேண்டிய இடம் (வாசத்தலம்) அசுத்தப் பிரபஞ்சத்திலாயின் அது மயக்கமுடையதாதலால் மயக்கற்ற சுத்தப்பிரபஞ்சம் வேண்டப்படும். அது முதற்காரணமாக சுத்தமாயையைக் கொண்டிருக்கும். மேலும் அநந்த தேவர், ஸ்ரீகண்டருத்திரர் முதலியோர் விஞ்ஞானகலர் பிரளயாகலரிற் பக்குவமுடையராய் சகசமலத்தின் நீங்கி முதல்வனருளால் முழுதுணர்ந்து படைப்பாதி தொழிற்செய்தற்கு ஏதுவாகிய அதிகார மலவாசனை மாத்திரம் உடையராய் முதல்வன் ஏவற்படி அசுத்தமாயை முதலியவற்றைக் காரியப்படுத்துவோராகலின் அவர்க்குத் தனுகரணாதி யுண்மையின்- தேவையென்பதால் சுத்தமாயை யுண்மை துணிவாகும். இன்னும் பெயர் சாதி ஆகிய வேறுபாட்டுணர்வுகள் எழுத்தோசையால் வேண்டப்படுவதாலும் சுத்தமாயை உளதாதல் வேண்டும். **நால்வகை வாக்கு** : இவ் வெழுத்தோசை சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி (பிறர் செவிக்குத் தூல, தன் செவிக்குச் சூக்கும) மென நால்வகைப்பட்டு ஒன்றற்கொன்று காரணமாய் சவிகற்ப (வேறுபாட்டு) உணர்வுக்கு ஏதுவாய் சுத்தமாயை விருத்தியாய் சாந்தியதீதகலை முதலிய பஞ்ச கலைகளைப்பற்றி சிவதத்துவமுதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்த தத்துவங்களில் ஐவகைப்பட்டு நிற்கும். எழுத்தோசை சுத்தமாயா காரியமெனினும் சுத்தமாயா காரியங்களில் உபாதி (காரியம்) இன்மையின் சூக்குமமாயும், இசையோசை முதலிய உபாதிவயத்தால் அசுத்தமாயா காரியங்களிற் றூலமாயும் பிரகிருதிமாயா காரியங்களில் (நம்மனோர்க்குப் புலப்படுமாறு) அதிதூலமாயு முள்ளது.

மேலும் முற்கண்டவாறு சுத்தமாயையொன்றே **சத்தப்பிரபஞ்சம்** (மந்திரம் 11, பதம்-சொல் 81, வன்னம் - எழுத்து 51), **அர்த்த (பொருட்) பிரபஞ்சம்** (தத்துவம் 36, புவனம் 224, கலை 6) இரண்டிற் கும் முதற்காரணம். இச்சுத்தமாயை யொன்றே தூலஞ் சூக்குமம் பரமென மூவகைப்பட்டு தூலநிலையிற் பிரகிருதிமாயை, சூக்குமநிலையில் அசுத்தமாயை, பர(மேல்) நிலையில் சுத்தமாயை எனப் பெயர் பெறும். **சுத்தமாயா காரியம் : 21ன் ஆரம்பத்திற் கூறியதற்கு விளக்கம்** : சுத்தமாயை மகாசங்கார காலத்து ஒடுங்கிக் காரண மாத்திரையாய் நின்றவழி முதல்வனும் பகுப்பின்றித் தானேயாய் (தனித்து) நிற்பன். கன்ம பக்குவம் நோக்கி உயிர்களை மீளப் படைப்பதற்கென அவ்வொடுங்கிய சுத்தமாயையை மீளக் காரியப்படுத்த அதனைத் தன் ஞானசக்தியால் நோக்குவன். அவ்வேளையிற் சுத்தமாயையிற் கலக்குண்ட பாகம் சிவனின் ஞானமாத்திரையால் அதிட்டிக்க (ஒன்றிநின்று செலுத்த)ப்படுதலின் சிவதத்துவம் ஆகின்றது. (குறிப்பு- 36 தத்துவங்களும் சடம். அவை தீயில் வெம்மை போன்ற குறித்த தன்மை யுடையதாதல் அவ்வவற்றின் அதிதெய்வங்களின் அதிட்டிப்பினாலாம். 'தீயினில் வெம்மை வைத்தோன்' திருவாசகம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது - முதுமொழி

**சுத்தமாயையின் பெயர்கள்** பல. 1) லயம் - அறிவுருபம், 2) நிட்களம் - வடிவற்றது. (களம்- இடம், உரு), 3) சத்திமான் - காரிய யோக்கியவான், 4) நாதம்- சூக்குமை வாக்காகிய நாதத்தின் பற்றுக்கோடு. என்பனவாம். சுத்தமாயையின் முதல் விருத்தியாகிய இச்சிவதத்துவம் முதல்வனது ஞானசக்திக்கும், அதன்பேதமாகிய இந்திகை, தீபிகை முதலிய பத்துக் கலைகளுக்கும் காமிகமுதலிய சூக்குமமாய் நிற்கும் சிவாகமத்திற்கும் சிவதத்துவ புவனத்தை (சாலோகபதவியை) விரும்பிச் சிவதீக்கை பெற்று நாதமூர்த்தியை வழிபட்டு அதிகாரமல வாசனையும் நீங்கி முத்தராய்ச் சூக்கும மலவாசனை மாத்திரமுடைய ஆன்மாக்களுக்கும் அங்குள்ள புவன போகங்கட்கும் இடமாம். இவ்வாறே சுத்தமாயையின் ஏனைச் சத்திதத்துவம், சதாசிவதத்துவம், ஈசுரதத்துவம், சுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா தத்துவம் ஆகிய தத்துவங்கள் உருவாதல், காரணமாய் அமைந்த பெயர், சுத்தமாயையின் எத்தனையாம் விருத்தி, எவ்வகைச் சக்தி, சிவாகமப் பெயர், புவனப்பெயர் முதலியற்றையும் சிவஞான மாபாடியத்திற் கண்டுகொள்க. சுருக்கம் 7.10.16ல் உண்டு. **(குறிப்பு:** சிவம் ஞானசக்தி மட்டும், சக்தி கிரியை மட்டும். சாதாக்கியம் இரண்டுஞ் சமமாய், மகேசுரம் கிரியைகூடி ஞானங்குறைந்தும், சுத்தவித்தை ஞானங்கூடிக் கிரியை குறைந்தும் வரும். சிவம் ஒன்றே யாயினும் சத்திவியாபார (தொழில்) பேதத்தால் சதாசிவன் முதலிய பேதங்கள் சொல்லப்படுகின்றன.

22. பந்தத்தையுடைய ஆன்மாக்களுக்கு அறியாமையுடைமை, கர்த்தாவாந்தன்மை யென்பன சித்திப்பதற்காக மாயையிலிருந்து நேராகவும் ஒன்றின்பின் ஒன்றாகவும் காலமும் நியதியும் பின் கலையும் வித்தையும் அராகமும் என 5 தத்துவங்கள் தோன்றுகின்றன. பஞ்சகஞ்சுகங்கள் (5சட்டைகள்) எனுமிவற்றைத் தரித்த ஆன்மா போகம் அனுபவித்தற்கு உரியதாம். ஆதலால் புருடத்தன்மையெனும் மலசம்பந்தத்தால் ஆன்மா புருடதத்துவனாய் **புருடன் ஆவான்.**

23. மாயையிலிருந்து பிரகிருதியும் குணதத்துவமும், பின்னர் புத்தி, அகங்காரங்களும், சித்தமும் கண், காது, மூக்கு, நாக்கு, துவக்கு-உடல், ஆகிய ஞானேந்திரியங்களும், வாக்கு, கை, கால், குறி - ஆசனம், என்னும் கன்மேந்திரியங்களும் சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பூத தன்மாத்திரைகளும் இவற்றை யனுசரித்துப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமெனும் ஐம்பூதங்களும் ஒன்றன்பின் ஒன்றாய் 25 தத்துவங்கள் தோன்றும். **குறிப்பு :** 1) இவற்றில் பிரகிருதியில் முக்குணங்கள் அடங்கியும், குணதத்துவத்தில் அவை வெளிப்பட்டும் இருப்பதால் காரண காரியத்தால் அவை ஒன்றாக வைத்து எண்ணி ஆன்மதத்துவம் 24 என்பர். 2) மனத்தின் பகுதியே சித்தம் என்பதால் மனம் அல்லது சித்தம் சில நூல்களிற் தத்துவமாகக் கணிக்கப்டும்).

24. புருஷ போகத்திற்காக பிரகிருதியிலிருந்து 23 தத்துவந் தோன்றும்.

25. விந்து ரூபமான **சிவதத்துவம்** வியாபகமாகவும், ஒன்றாகவும், நித்தியமாகவும் எல்லாத் தத்துவ வர்க்கங்களுக்குங் காரணமாகவும், ஞானக்கிரியா சுபாவமாகவும் உள்ளது. இதன் வியாபகம் சுத்தம் அசுத்தம் இரண்டிலுமாம். எவ்வாறெனில் தன்னுடைய பரிணாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபங்களான நிவிர்த்தி முதலிய (சக்தி) கலைகளினால் உலகத்தை வியாபிப்பது. இக்கலைகளை நிலையாகக்கொண்டு தத்துவங்களும் அவற்றிற் புவனங்களும் இருக்கின்றன.

இனி, சுத்தப்பிரபஞ்ச முதற்காரணம் சுத்தமாயை, அசுத்தத்திற்கு அசுத்தமாயை, இரண்டும் மாயையின் இருவகைகள் எனக் கண்டோம். சிவதத்துவம் சுத்தப் பிரபஞ்சத்திற்கே முதற்காரணம் அசுத்தத்திற் கல்ல. எதனாலெனின், அசுத்தமாயையிலிருந்து அசுத்த தத்துவங்கள் உண்டாவதால் அவ்வசுத்த தத்துவங்களுக்கு சுத்தமான சிவதத்துவம் காரணமாதல் செல்லாமையாலென்க. ஆன்மாக்களுக்குத் தன்னிடமிருக்கும் ஞானக்கிரியைகளை விளக்குகிறபடியால், இச் சிவதத்துவம் ஞானக் கிரியா சுபாவம் எனப்பட்டது. அதாவது அந்தப் புவனாபதிகளின் வழிபாட்டினாலாவது, **தீக்கையினலாவது** தன்னுடைய காரியங்களான சுத்தாத்துவ புவனங்களைக் கடந்த ஆன்மாக்களுக்கு ஞானக்கிரியைகளை விளங்கும்படி செய்தலாம். **ஆதலால் சிவதத்துவம் ஆன்மாக்களுக்கு மோகத்தையின்றி ஞானத்தையே செய்கின்றது.** அசுத்தமாயை சுட்டறிவெனும் சிற்றறிவையே பயந்து முன்னறிந்தது பின்மறத்தல் முதலான மோகத்தைச் செய்யும். 'மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே'- சித்தியார் பா26. பலவிதமான இச்சை முதலிய சிவசக்திகள் **முதற் காரணமான** விந்துவையதிட்டித்து நின்று காரியப்படுவதால் சிவதத்துவத்தை எல்லாப் பொருளுக்கும் அநுக்கிரகஞ் செய்வதாக சொல்லப்படுகின்றது.

27. சிருட்டிக்கும் இச்சையுடைய பரமசிவனுக்கு, சித்தான ஆன்மாக் களுக்கும் சடமான பாசங்களுக்கும் அநுக்கிரகஞ் செய்வதற்குக் காரணமான **மகாமாயையினுடைய முதற்பரிணாமம் சக்திதத்துவம். ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம் என்பது** அவற்றிற்கு மோட்சத்தை வழங்க அவற்றின் மலபரிபாகம், கன்மானுபவம் என்பன பொருட்டு சிருட்டியாதிகளைச் செய்தல். **சடங்களுக்கு அநுக்கிரகித்தல் என்பது** அவை தத்தம் வியாபாரத்தில் (தன்மை, தொழில்) சாமர்த்தியம் உண்டுபண்ணல். இவ் வநுக்கிரகங்களுக்குச் சாதனமான பரமசிவனது விந்துவினுடைய சாந்தியாதி புவனரூபமாயும் நாதரூபமாயுமுள்ள முதலாவது பரிணாமமே சத்திதத்துவமாம். இது புவனங்களுக்கு ஆதாரமாதலின் அவயவப் பகுப்புடைத்தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடியம்** - சூக்கும லய அவத்தையினின்ற முதல்வனது கிரியாசத்தி வெளிப்பட்டுப் பொதுமையிற் சங்கற்பித்தவழி சுத்தமாயை காரியப்படுவதாய் நின்ற 2ஆம் விருத்தி சத்திதத்துவம். இது தூலலயம். தூலநிட்களம், பைசந்தி, விந்து முதலிய தொழிற்பெயர் பெறும். இது, இதன் பேதமாகிய பஞ்சகலைகளுக்கும், பைசந்தி ரூபமான சிவாகமங்களுக்கும், விந்துதத்துவ புவனத்தை விரும்பி தீக்கைபெற்று விந்துமூர்த்தியை வழிபட்டு மலம் நீங்கித் தூலமல வாசைனயுடைய முத்தர்க்கும் அவர் புவனங்களுக்கும் இடமாம்.

28. ஞான கிரியா சத்திகளின் சமமாக நிகழும் பரிணாமம் **சதாசிவ தத்துவம் (சாதாக்கியம்)** எனப்படும். **மாபாடியம் :** முதல்வன் போக அவத்தையில் நின்று தனது ஞானசத்தியாற் சிறப்புவகையால் நோக்கிக் கிரியாசத்தியால் சிறப்புவகையால் சங்கற்பித்தவழி காரியங்களைத் தோற்றுவிக்க உன்முகியாய் (வெளிப்படாது) நின்ற சுத்தமாயையின் மூன்றாம் விருத்தி சதாசிவனால் அதிட்டிக்கப்படும் சதாசிவதத்துவம். இது உத்தியுத்தம் (ஊக்கமுடைமை), போகம், சகள நிட்களம் முதலிய தத்துவ(காரண)ப் பெயர்பெறும். இது சதாசிவனுக்கும் சதாசிவமூர்த்திக்கும், முடிமுதலிய வுறுப்புக்களாகிய பஞ்சசத்திகளுக்கும் அவற்றின் பேதமாகிய சசினியாதி 38 கலைகளுக்கும் (மந்திரங்களில் 5 பார்க்க), ஆரணி, சனனி முதலிய சக்திகளுக்கும், மத்திமை வாக்கு ரூபமான சிவாகமங்கட்கும் அதன் 28 பாகுபாட்டிற்குக் காரணமான பிரணவர் முதலியோர்க்கும், சுத்த சாமீப்பிய முதலிய முத்திபதங்களில் போகவாசைனயுடைய அணுசதாசிவர் முதலியோர்க்கும் அவர் தனு கரணாதிகட்கும் இடமாம்.

29. ஞானசத்தி குறைந்தும் கிரியாசத்தி கூடியும் நிகழும் பரிணாமம் **ஈசுவர தத்துவமாம்.** இது எப்பொழுதும் எல்லாப் பொருள்களுக்கும் கர்த்தாவாகும். இதில் உலக கர்த்தாக்களான அனந்தர் முதலானவர்களை யதிட்டித்து கிரியாசக்திக்கு அதிக வியாபாரமுண்டாகிறது. **பாடியம்:** முதல்வன் அதிகார அவத்தையினின்று கிரியாசக்தியை மிக்குச்செலுத்தி சூக்குமமாய்க் காரியப்பட்ட சுத்தமாயையின் நாலாம்விருத்தி, ஈசுவரனாய் நின்ற சிவனால் அதிட்டிக்கப்படுதலின் ஈசுரதத்துவம் ஆகின்றது. இது, சூக்கும அதிகார, சூக்குமப் பிரவிருத்தி, சூக்குமசகளம் எனும் தன்னையதிட்டிக்கும் சிவனின் பெயர்களைக்கொண்ட தத்துவமாம். இது சூக்கும வைகாரியாய் நின்ற சிவாகமங்களுக்கும், அசுத்த மாயையைக் காரியப்படுத்தும் அநந்ததேவர் முதலிய வித்தியேசுரர் எண்மருக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வழிபட்டு அப்பதத்தைப் பெற்ற உருத்திரர்களுக்கும் அவர் தநுகரணாதிகட்கு மிடமாம்.

30 கிரியாசத்தி குறைந்தும். ஞானாசத்தி கூடியும் வரின் அது **வித்யாதத்துவம்.** சப்தகோடி மகாமந்திரர்களை யதிட்டித்து ஞான சக்திக்கு அதிகதன்மை யுண்டாதலால் பிரகாசமானதாயும் இதில் வசிப்போர் அனைத்தையும் அறிபவராயுமிருப்பர். **பாடியம்** -முதல்வன் தூலவதிகார அவத்தையில் நின்றும் ஞானசத்தியை மிக்குச்செலுத்தி பிரவிருத்தி செய்தவழி, தூலமாய்க் காரியப்பட்ட சுத்தமாயையின் ஐந்தாம்விருத்தி வித்தைக்கேதுவான ஈசுவரனாய் நின்ற சிவனால் அதிட்டிக்கப்படுதலின் **சுத்தவித்யா தத்துவமாம்.** இது, தூல ஈசுர, தூல அதிகார, தூலப் பிரவிருத்தி, தூல சகளம் எனத் தன்னை யதிட்டிக்கும் சிவனின் பெயரைக் கொண்ட தத்துவமாகும். இது, தூல வைகரியாய் நின்ற சிவாகம முதலிய சாத்திரங்களுக்கும், எழுகோடி மந்திரங்களுக்கும், நந்தி முதலாய கணங்களுக்கும், வாமை முதலிய நவசத்திகளுக்கும், முத்திபெற்று மலவாசனை மாத்திரம் உடையவராய்க் கீழுள்ள உருத்திரன், மால், அயன் முதலியோரைத் தொழிற்படுத்துவோராகிய உருத்திரன், மால், அயன், இந்திரன் முதலியோர்க்கும் அவர் தநுகரணாதிகட்கும் இடமாயுள்ளது. இனி, சுத்த தத்துவங்களிலடங்கும் ஏனைப்பொருட்கள் பற்றியது. (பாடியம்)

31. சகலரூபமான விந்துவும் நாதமும் சதாசிவ தத்துவத்தைச் சேர்ந்திருப்பன. வித்தியேசுவரர் ஈசுரதத்துவத்திலும், சப்தகோடி மகாமந்திரரும் காமியமுதலான 28 ஞான சாதனங்களும் வித்தியா தத்துவத்திலும் அடங்கும். **விளக்கம் :** பரவிந்து சிவதத்துவ ரூப மானதால் அதன் காரியமான சூக்குமநாதம் சத்தி தத்துவத்தி லடக்கம். எனவே இவ்விடத்தில் **சகலவிந்து என்பது அட்சரரூபமான விந்துவென்றும், நாதமென்பது தூலநாதமெனவுங் கொள்க.** இவ்விரண்டும் சதாசிவத்தில் அடங்கும்.

32. இந்த 5 தத்துவங்களுக்கும் காலமில்லை. வியாபார பேதத்தால் காலம் முற்பாடு பிற்பாடாகிறது. **விளக்கம் :** இது சித்தாந்தத்திற்கு அமையாததால் சேர்க்கையென உரையாசிரியால் விடப்பட்டது. அவ்வாசிரியர் ஆரம்பத்தில் இந்நூலுக்குத் தாம் உரை யெழுதக் காரணமே 'சித்தாந்தசாத்திர ஞானமில்லாத அத்வைத - மாயாவாதச் சார்பானோர் வேறுவிதமான உரை செய்தமையால்' என்கின்றார். சுத்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தாசுத்த அத்துவாக்களிலும் தோன்றுமுறை ஒடுங்குமுறையெனக் கால ஒழுங்கு சொல்லப்பட்டிருப்பதால் அவற்றுடன் 32ம் சுலோகம் முரணுவதால் மறுக்கிறார். இம் மறுப்புப் பொருத்தமானதே யாகும்.) 33ஆம் சுலோகம் தொடரமுன் 6 பிரதான அவதானங்கள்

**சைவத் தமிழர் அசமந்தப் பொக்கு பற்றியது :** தமிழரின் அசமந்தப் போக்கினால் அவர்களின் சமய தத்துவங்கள், வழிபாட்டு முறைகள், கலை கலாச்சாரங்கள் அன்னிய ஆதிக்கத்துட்பட்டு தமிழருக்குச் சொந்தமாக ஒன்றுமில்லையெனத் தமிழரே கூறுமளவு நிலைமை காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றது. சிலவற்றைக் கூறுவதாயின்

1) 7ம், 8ம் நூற்றாண்டில் சமய குரவர்களினாலும், 13, 14ம் நூற்றாண்டில் சந்தானசாரியாராலும் கடந்த நூற்றாண்டில் ஜி. யு. போப்பையர், தியோஸ் பெனாட் போன்ற மேலைநாட்டறிஞராலும் நிலைநாட்டப்பட்டு வழிவழி வருகின்ற சிவபரத்துவம் (சைவ சித்தாந்தம்) இன்றும் நம்மவர் மத்தியிலுங்கூட கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. சிவன் இந்துசமய ஆறு முழுமுதல்களில் ஒருவர் மாத்திரமேயென சங்கரபீடத்தால் செயற்படுத்தப்படும் கொள்கை இந்துமாயையென உலாவருகின்றது. (பிறிதோரிடத்திலும் உண்டு)

2) இந்நூலாசிரியரின் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்ற சிவமுத்தமிழ் கூறும் ஆய்வு நூலிலும் விரிவாகக் கண்டபடி, சங்ககாலத்திலிருந்தும் சிலப்பதிகார காலத்திலிருந்தும் வழங்கிவந்த தமிழிசை (பண்ணிசை), கூத்துமுறைகள் கலப்புப் பிறப்பாகி கர்நாடகஇசை யென்ற போர்வைக்குள் அமுக்கப்பட்டுள்ளன. **பஞ்சமரபு** என்ற 2000 ஆண்டளவில் எழுதப்பட்ட நூல் கடந்தசில வருடங்களிற்றான் ஏட்டுருவிலிருந்து நூலுருப் பெற்றது. அதுவும் இசையாளர்களையோ மாணவர்களையோ இன்னமும் முறைப்படி சென்றடையவில்லை. **கூத்துமுறை** யென்ற நூலின் நிலையும் அதுவே. தமிழிசையென ஒன்றில்லை என்பாருமுள்ளனர்.

3) சமயத்தில் வேணுமென்றே **இடைச் செருகல்களைச் செய்து** தத்தமது பக்கஞ்சார்ந்த உள்மனக் கொள்கைகளுக்கு அதன் மூலம் தீனிவழங்கி சைவர் மத்தியில் உலாவரும் நூல்களைப் பட்டியலிட்டே காட்டலாம். அதிலொன்றுதான் சுவாமி சித்பவானந்தர் உபநிடதச் சார்பில் எழுதிய திருவாசகவுரை. 'இதனை ஞானிகள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்' போன்ற வசனங்களாற் தாமே மணிவாசகரிலும் மேலானஞானி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலும், புத்தருடன் வாதில் வென்றதும், ஊமையான ஈழத்து அரசிளங்குமரிக்கு பேச்சாற்றலும் சித்தாந்த ஞானமும் வழங்கித் திருச்சாழல் பாடவைத்ததும் இடைச் செருகலெனச் சிவன் கைப்பட எழுதிய திருவாசகத்திற்கே சவால் விடுகின்றார். நம்மவர் யாரும் 'சுவாமி' யைக் கண்டுகொள்ள வில்லையே? அவரளவில் மகிழ்கவென விட்டார் போலும்.

4). **பார்ப்பனரும் மண்டலரும் -** என்ற (சமுக, அரசியல்) நூலிற் பார்ப்பனரைச் சாடும் வகையில் சமயம் அவமதிக்கப்படுகின்றது. சாதி வேறுபாடற்றுச் சிவகருணை பெற்ற பெரியபுராணப் பண்பாட்டையும் ஆரிய - திராவிட கலப்புப் பிறப்பாக மலர்ந்த ஆகம விதிப்படியான கோயில் வணக்கமுறைகளையும் கண்டுகொள்ளாத, கண்மூடித் தனமான, சமய, ஆரிய எதிர்ப்பாக அரசியல் இலாபத்திற்கென அந்நூலை எழுதியுள்ளார். அரசியலைச் சமய அறிவின்றி அதனுடன் சம்பந்தமாக்கி வெறுமனே சமயத்தை எதிர்ப்பது தவறு. திராவிட இயக்கங்களின் இலக்குத் தவறிய கோணற் புத்தியினால் சமயநெறி அசிங்கப்படுத்தப் படுகின்றது. பண ஆதிக்கமும், களியாட்டமும் சினிமா சாட்சியமாகத் தலைவிரித் தாடுகின்றன. சினிமா சாட்சியமான சிவனடியார் கோலத்தவர் யாவரும் பொய்யர்கள் தானா?

5) மேலும், **இந்துக்களுக்கு** என்ற நூலொன்றில் வேதம் முகமதியரு டையது, அதில் சிவன் என்பது இடைச்செருகலாக உள்ளதென பத்தாயிரம் பிரதிகள் திராவிட ஆட்சித் தலைநகர் சென்னையில் அச்சிடப்பட்டு சமய அறிவில்லா (இந்தியாவிற் சமயம் கற்பிப்ப தில்லையே?) நம் இனத்து ஆசிரியர்களுக்குப் பிற(மாலைதீவு)நாட்டில் வழங்கப்படுகிறது.

6) இந்த இக்கட்டான நிலையில் முன்கண்டவாறு நம்மிடை **ஸ்மார்த்தர்கள்** சிவாலயங்களிற் 'சிவாயநம' வென்னாது, 'ஹரி ஓம் நமோ நாராயண' என மனதிலும் புறத்திலுஞ் சொல்லி **பரார்த்தபூசைக்கு முன்னோடியான சிவபூசை செய்யாது** பிழைப்பு நடத்துகின்றனர். இது எந்தக்குருவுணர்த்திய முறையோ அறியோம். கந்தபுராணத்தில் (தக்கன் வேள்வியில்) தண்டிக்கப்பட்டவர்களின் இச்சாபக்கேடு இதில் ஏலவே கண்டிக்கப்பட்டுள்ளது. சிவத் துரோகம் அரச துரோகத்தினுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிது. சிவனடியார்களும் 'எங் கெழிலென் ஞாயிறு' என சிவனடியில் இறுமார்ந்து இருப்பவர். சம்பந்தர் தம் பிஞ்சுவயதிலேயே சமணரை, அவர்களுடனான சமயவாதின்போது ஏற்பட்ட தோல்விக்கான ஒப்புதலுடனும் அரசஆணைப் பிரகாரமும் கழுவேற்றியவர். அவரின் குடிசைக்குத் தீ மூட்டியதற்கே இத்தண்டனை யெனலாம். அத்தகைய 'ஞானசம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்' எனும்படி சிவனடி சிந்தித்தே இவை யெழுதப்படுகின்றன.

**குறிப்பு :-** பஞ்சமாபாதகம் விட்டு சமயாசாரத்திற்காய தீட்சைபெற்று, சித்தாந்தம் அறிந்துவாழாத தவறுகளை நம்மவர்கண்டு இனியாவது திருந்தட்டும். சிவாசாரியர்கள் சிவபூசையினை, மற்றும் கிரியைகளை சித்தாந்தவிளக்கத்துடன் அறிந்து, பிறர்க்கும் அறிவித்தல் காலத்தின் தேவை. சமய, மற்றுஞ் சமயஞ்சார் கலை கலாசாரமரபுகள் கெட்டொழிவதை சமயஞானத்தினூடாகவே தடுத்தல் சிவப்பணியுமாம்.

33. விசித்திரமான அநேக சத்திகளுடன் கூடியுள்ள **சிவமானது ஒன்றே.** சத்திவியாபார பேதங்களால் சதாசிவமுதலான பேதங்கள் சொல்லப்பட்டுள்ள்ன. **விளக்கம் :-** கர்த்தாவான சிவம் சேதனமாதலின் விகாரமற்றது. தீ, சுடுதல் அடுதலெனுந் தொழில் வேறுபாட்டால் வெவ்வேறாதல்போல சத்தியும் தொழிலால் வேறாக, சிவனும் அவ்வப் பெயர்களைக் கொள்வான். இருவரும் பொருளால் ஒன்றாய் வகையால் இரண்டான தாதான்மிய சம்பந்தத்தினர் எனக் கண்டோம். சிவனுக்குச் சத்தி பேதத்தாலான பேதம் உபசாரம், உண்மையல்ல. (சதாசிவம் ஆன்மாக்களின் தியானம், பூசை என்பதற்கான கோலமாம்.)

34. பரமசிவன் **சித்திற்கும் சடத்திற்கும் அநுக்கிரகம்** செய்வதற்காக சதாசிவமுதலிய ரூபங்களைச் செய்து அநாதியான ஆணவமல மறைப்பாற்றலையுடைய ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கின்றார். **விளக்கம் :** அவர் தியானிக்கப்படுதற்குத் தகுந்த சதாசிவ முதலிய சரீரங்களை அதிட்டிக்கின்றார். ஆதலால் அவற்றை யதிட்டித்துச் செய்யும் சடப்பொருள்களின் அநுக்கிரகத்தால் விருத்தி செய்யப்பட்ட ஆன்மாக்களுக்கே அநுக்கிரகிக்கின்றார். இதனையே சித்து சடங்களின் அநுக்கிரகம் என்றோம். **குறிப்பு** : சதாசிவத்தியானம் 6.2.10 பார்க்க. சிவபூசையின் பிரதான அங்கமிது. இஷ்டலிங்கமோ ஷணலிங்கமோ லிங்கசுத்தி செய்யப்பட்ட பின் இஸ்டலிங்கமாயின் சிவாபிடேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனபூசை, சிவமூர்த்திபூசை - லிங்கப்பிளம்பின் மேல் ஒளிமயமாக சிவமூர்த்தியைப் பூசித்து சிரசு முகமுதலிய அமைத்தலாகிய தண்டபங்கி நியாசஞ்செய்து 38 கலா நியாசங்களையுஞ் செய்து (ஷணலிங்கமாயின் ஷடுத்தாசன பூசைசெய்து) பின் ஏனை முண்டபங்கி முதலான நியாசங்களைச் செய்து வித்யாதேகம் அமைத்தபின் **சதாசிவத்தியானம்** செய்தல் வேண்டும். பின் ஆவாஹனாதிகளும் பரமசிவனுக்கு நியாசமும் அபிடேக முதலியனவும் செய்தல்வேண்டும். இதனால் சடமாகிய லிங்கத்தில் தாம் அதிட்டித்துநின்று அநுக்கிரகித்து எமது தியானம், பூசையாதியவற்றை ஏற்று எமக்கு அநுக்கிரகிக்கின்றார். **இதுவே சித்து சட அநுக்கிரகம் எனலாம்.**

35. 27ற் கூறியதனை ஒத்தது. ஆன்மாக்களுக்குப் போகத்தையும், முத்தியையும் சட சமூகத்திற்குத் தன்தன் வியாபாரத்திற் சாமர்த்தியம் உண்டாதலையுஞ் செய்கின்றார். இனி சுகதுக்க அனுபவமான போகம் அநுக்கிரகமாதல் எவ்வாறெனச் சமாதானங் கூறுகின்றார். 36. சித்து சடங்களுக்கு அநுக்கிரகமென்பது சிவசமரூபமான மோட்சமாகும். அந்த மோட்சமானது கன்மத்துக்கு அநாதித்தன்மை இருத்தலால் போகாநுபவமின்றிச் சித்தியை யடைவதில்லை என்பதாம். இவ்வாறு **சடமான பாசத்திற்கு அநுக்கிரகஞ் செய்வதும் போகத்தின் வழியாய் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்வதற்கேயாம்.** சிவானுக்கிரக அதிட்டிப்பினாலேயே மூர்த்தி தொழிற்படும்

37. ஆதலால் பரமசிவன் அந்தக் கன்மங்களின் பயனாகிய போகத்தின் பொருட்டுத் தனுகரண புவனங்களின் சிருட்டியைச் செய்கின்றார். அவ்வாறே, முதற்காரணமும், கரணமும் - துணைக்காரணமும் இன்றி காரியமில்லை. **விளக்கம்** : தனுகரணம் - சூக்கும சரீரம். புவனம் - பொதுவிற் புவனங்களும், பொதுச்சிறப்பால் அவற்றிற் தோன்றும் சரீரமுமாம். இவை அநந்தர் வாயிலாகச் சிவனாற் சிருட்டிக்கப்படும். இனி, இச்சிருட்டிக்கு முதற்காரணம், கரணம் (துணைக்காரணம்) பற்றியது,

38. அசுத்தாத்துவாவில் சிவனுக்குச் சத்திகள் கரணமாகவும், அரூபமான **மாயை முதற்காரணமாயு முள்ளது. விளக்கம் :** விந்து என்னும் சத்திபோல் அசுத்தமாயையும் பரமசிவனுக்குப் பரிக்கிரக (வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பயனாகும் வைப்புச்) சத்தியாய் நின்று முதற் காரணமா யிருத்தலால் இது அவனிடத்தில் சமவேதமின்றி (பிரிக்க முடியாத கலப் பின்றி) இருக்கின்றது. (சிவனிடத்தில் சமவேதமாயிருப்து சிற்சத்தியே).

**பாடியம் : அசுத்தமாயை**, மெய்ப்பொருளாய் நித்தமாய்ச், சடமாய், ஒன்றாய்க், கலைமுதல் நிலமீறாகிய அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாய், அவற்றின் வியாபகமாய், வினைக்குப் பற்றுக்கோடாய், ஆணவம்போலச் சிறப்பு வகையாலன்றி பொதுவகையால் வினையிற் கட்டுண்ட ஆன்மாக்களை மயக்குவதாய் அருவமாய் நிற்கும். காரிய நிலையிலுள்ள உருவம் காரணத்திற் தோன்றாது சூக்குமமாய் உள்ளதால் அருவமாம்.

39. **மாயாசத்தியானது** ஆன்மாக்களுக்குப் பொதுவாயும், எல்லாப் புவனங்களுக்குங் காரணமாயும், எல்லா ஆன்மாக்களின் கன்மங் களுடன் கூடினதாயும் **மோகத்தை உண்டுபண்ணுவதாயுமுள்ளது.**

**விளக்கம் :** எல்லா உயிர்களினதும் சரீர இந்திரியங்களாய்ப் பரிண மித்து அவற்றிற்குப் போக்கியமாயிருத்தலால் பொதுவெனப்பட்டது. புவனங்களுக்குக் காரணமென்பதால் தேகமும் அதிலடங்கும். பிரளயத்தில் புத்தி மாயையில் ஒடுங்கும். கன்மங்கள் புத்தியின் குணரூபங்கள். ஆதலின் கன்மங்களுடன் கூடியது எனப்பட்டது. கன்மம் புத்தியைச் சுத்தஞ் செய்தலால் அது புத்திகுணமாகின்றது. (சுலோகம் 47ம் புத்திநிச்சயம் பார்). ஆன்மா வேறுபாடற்றதால் வேறுபடுங்கன்மம் ஆன்ம குணமன்று.

40. பரமசிவன் கன்மங்களை அனுசரித்து தனது சத்திகளால் மாயையைக் கலக்கி (உற்பத்திக்கு ஆயத்தமாக்கி) ஆன்மாக்களுக்குப் போகத்திற்காகச் **சரீரங்களையும் கரணங்களையும் படைக்கின்றார்.**

**விளக்கம் :** பிரளயகாலத்தில் பக்குவமடைந்த ஆன்மாக்களின் கன் மங்களை யறிந்து அவற்றின் போகத்தின் பொருட்டுத் தனது சத்தியால் அதிட்டிக்கப்பட்ட அநந்தரது சத்தியால் மாயையை உற்பத்திக்கு ஆயத்தமாகச் செய்கின்றார். அதனால் வெவ்வேறான தூலவுடல், இந்திரியங்கள், சூக்குமவுடல்கள், பொதுவான புவனங்கள் தோன்றும்.

**சுத்தமாயையின் ஆறு தத்துவங்கள் போக, முப்பத்தாறு தத்துவங்களில் ஏனையவை தோன்றுமுறைமை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. அநேக சத்திரூபமான அந்த (அசுத்த) மாயையானது முதலாவதாகக் **காலதத்துவத்தைத் தோற்றுவிக்கின்றது.** அக்காலம் உலகைச் சென்ற, நிகழ், வரும் என முக்காலப் படுத்துகின்றது. 'உள்ளதே தோன்றும்' என்றவாறு மகாப்பிரளயத்திலும் காரியப் பொருள்கள் சத்திரூபமாய் (சூக்குமமாய்) மாயையில் இருத்தலால் அது அநந்தராற் கலக்கப்பட்டுக் காலதத்துவத்தைத் தோற்றுவிக்கும். மாயை நெய்யிற் புழு தோன்றல் போன்ற **ஏகதேச, முழுதுமற்ற, பரிணாமத்தால்** கால தத்துவத்தைத் தோற்றுவிக்கின்றது. காலம் முப்பிரிவுகளாய் உள்ளதால் அசேதனமும் அநித்தியமும் ஆதல் பற்றி நித்திய மாகாது. **பாடியம் :** போக நுகர்ச்சிக்கண் சென்ற ஆன்மாக்களுக்குக், காலம், மணி நிமிடம் செக்கன் எனப் போகத்தை வரையறைப் படுத்துவது காலதத்துவம். கலை வித்தை அராகம் மூன்றும் ஆன்மாக்களுக்குத் தொழில் அறிவு இச்சைகளை விளக்கி நேரே உபகரிப்பன. காலமும் நியதியும் வினையை வரையறுப்பதும் நியமிப்பதுமாய் உபகரிப்பன. ஆதலால் ஆன்மாக்களுக்குத் தொழிலறிவிச்சை நிகழ்ந்தன்றிக் கன்ம இயைபு கூடாமையால் காலம், நியதி பின்னாயிற்று. சுத்தமாயையே அசுத்தகாலந் தோன்றுதற்கும், அநந்தர் அசுத்த மாயையைக் கலக்கவும் அதிகாரஞ் செய்யவும் காரணமாம். கால வரையறைக்கு உட்படாதவையே நித்தப் பொருள்களாம். ஆதலால் காலம் அநித்தம் என்பதால் நித்தப் பொருளுண்மைக்கு இழுக்கில்லை.

42. **நியதி தத்துவம்** - இது நியமனத்தைச் சொரூபமாக உடையது. காலதத்துவத்தின் பின் மாயையிலிருந்து உண்டாவது. இது எல்லா உலகத்தையும் நியமனஞ் செய்யும். **விளக்கம் :** ஒருவராற் செய்யப்பட்ட கன்ம பலன்களான சுகதுக்கங்கள் பிறரால் அநுபவிக்க வொட்டாது அவருக்கே அளிப்பது இது. ஆதலால் கன்மத்தை நியமிப்பது. நியதி, பால், ஊழ், தெய்வம், விதி யென்பன ஒருபொருட் சொற்களாய் இடத்திற்கேற்ப மாறுபடும்.

43. அதன்பின்னர் மாயையிலிருந்து கலை தோன்றும். **கலா தத்துவம்** ஆன்மாக்களுடைய மலத்தை ஏகதேசத்தில் (முழுதுமின்றி) விலக்கி கிரியாசத்தியை விளக்குகின்றது. **விளக்கம் :** மலத்தினால் மறைக்கப்பட்டு சூனியம்போற் போகவுரிமையற்று நின்ற ஆன்மாக்களின் போகானுபவத்தின் பொருட்டு மலத்தைச் சிறிதே விலக்கி தொழி லாற்றுஞ் சத்தியை சிறிது விளங்கும்படி செய்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. அப்பிரதான (பிரதானமற்ற) தன்மையை யடைந்துள்ள கால, நியதி தத்துவங்களால் கலையானது தன்னுடைய வியாபாரத்தைப் பூமிவரை செய்கிறது. விளக்கம்: **கலையானது போகத்தை அநுபவிக்கும் ஆன்மாவினது சொரூபத்திற்கு உபகாரமாயிருந்து அதற்கு அந்தரங்க சாதனமாகலாற் பிரதானமாகிறது.** கால முதலியன வெளிச் சாதனங்கள் ஆதலின் அப்பிரதான மெனப்பட்டன. அடுத்த சுலோகத்தை விளங்க அளவையியல் பிரதானமாதலால் அதுபற்றிய **சித்தியார் கருத்துக்கள் சுருக்கமாகத் தரப்படுகின்றன.** முதற்சொன்ன விளக்கம் அடுத்தபாடலாற் தரப்படும். விளக்க உதாரணங்களை சிவஞானசித்தியார் பரபக்கத்திற் காண்க.

44.1.) பொருள் (இங்கு முப்பொருள்) உண்மைக்கு அளவு கூறுதற்கு **அளவை**யின் (பிரமாணத்தின்) இயல்பு வேண்டப்படும். அது பலவிதப்படினும் காண்டல். கருதல், உரை யென்ற மூன்றினுள் அடங்கும். (காட்சியென வருமிடந்தோறும் ஆன்மாவின் ஞானசத்திக்காட்சி யெனக்கொள்க.) அ) **காட்சியளவை -** நிர்விகற்ப (வேறுபாடுகளற்ற) உணர்வோடுகூடி ஐய, விபரீத வுணர்வுமின்றி விடயங்களை நேரே அறியும் ஆன்மசத்தி ஆ) **கருதலளவை** - அவ்வாறு நேரேயறியப் படுவதன்றி சாதித்துப் பெறற்பாலதாய் (பெறக்கூடியதாய்) மறைந்து நின்ற பொருளை, அதனை விட்டுநீங்கா ஏது (காரணம்) கொண்டறிதல். (இ) **உரையளவை** - இரண்டாலும் அறியாததை (பரலோக, பாதாள லோகங்கள்), ஆப்த (நம்பிக்கைமிக்க ரிஷிகள், முனிவர்கள் போன்றோர்) வாக்கியங் கொண்டறிதல். ('எனதுரை தனதுரையாக' என்றார் சம்பந்தர். தனது சிவனது. ஆப்தவாக்கியம் வேதாகமங்களுமாம்)

44.2) **காண்டல் (காட்சி)** - 4 வகை. 1. **நிர்விகற்பம்** - பெயர் முதலிய (வேறுபாட்டாற்) பகுத்தறியும் அறிவற்று பொருளுடைய மாத்திரையே கொண்டறிதல். (மங்கற் பொழுதில் ஏதோவொன்று காட்சிப்படல்) 2. **ஐயம் -** கண்டதை இதுவெனத் துணியாது யாதாகலாம் என ஆராய்தல். (கண்டது குற்றியா? மகனா? எனல்) 3) **திரிபு -** கண்டதோடு ஒத்த (வேறோர்) பொருளை இதுவேயென மயங்கும் திரிபுக்காட்சி. 4) **சவிகற்பம்** - ஒன்றனைத் தெளிவாயறிய உதவும் கற்பம் எனும் (வேறுபாடுகளாய) பெயர், சாதி, குணம். நிறம், தொழில் போன்ற ஐந்தும் அதிற் கூடக் கண்டு இனிதே தெளிதல். **குறிப்பு** : முன்கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதனை (மனவாசனை) பற்றித் தோற்றுவதாகிய நினைவுணர்வு இவ்விடத்திற் கண்ட பொருளில் நிகழாது.

44.3) முதலில் (1ற்) கூறிய மூன்றனுள் காட்சியளவை நால்வகை, கருதலளவை இரு வகை, உரையளவை மூவகை. இப்பிரமாணங்களால் அறியப்படும் பிரமேயங்கள் பொது சிறப்பு என இரண்டாம். 1) **சிறப்பியல்பு** – ஒருபொருட்கு வேற்றுச் சாதிப் பொருளினுந் தன் சாதிப் பொருளினுஞ் செல்லாது, தனக்கு மாத்திரையே யுரித்தாய் நிலைபெறுந் தன்மை. 2) **பொது இயல்பு** - வேற்றுச் சாதிப் பொருள் மாத்திரையிற் செல்லாது தன் சாதிப் பொருட்கெல்லாம் ஒப்ப நிலைபெறுந் தன்மை. காட்சி முதற் பிரமாணங்களால் பிரமேயப் பொருளை அறியுமிடத்து இவ்விரண்டில் ஒன்றாய் அறியப்படும்.

44.4). **நால்வகைக் காட்சி இயல்பு : (1) வாயிற் காட்சி** – முன்னர் 2ற் கூறியதன் விபரம். தன்னை நோக்கிநிற்கும் அறிவாகிய ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கியோடும் அறிவாகிய சிற்சத்தி கண்முதலிய ஐம்பொறிகளையும் தேயுமுதலான ஐம்பூதங்களையும் அவற்றின் முதற்காரணமான உருவமுதலான தன்மாத்திரைகளையும் அதிட்டித்துக்கொண்டு ஐயவிபரீதங்களும், பெயர் சாதிமுதலிய விகற்பமுமின்றி உருவ முதலிய ஐம்புலன்களை நிர்விகற்கபமாயறிதல். (2) **மானதக்காட்சி -** அங்ஙனம் ஐம்புலன்களை இயைந்து அறிந்த பின்னர் மீள மறத்தலின்றிச் சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலை பெறுவதாகிய அவ் வாயிற்காட்சியறிவு பெயர் சாதி முதலியவற்றான் விபரீதமாத லின்றி நிற்சயமாய்ப் புத்தி தத்துவத்தில் வருதலாகிய சவிகற்ப வுணர்வாய் உயிரினோடு உணர்வு தெரிவது. இதில், மனதின் தொழிற்பாடு முன்னாக நிகழ்தலின் மானதக் காட்சியாம். (3) **தன்வேதனைக் காட்சி** : அம் மானதக்காட்சி விசேடம் பற்றி மேம்பட்டு நிகழும் சத்வகுண முதலியவற்றின் விளக்கமாகிய இன்ப துன்பங்கள் புருடன் அறிவிற்கு விடயமாம்படி அராகம் முதலிய 5 தத்துவங்களாலும் புணர்க்கப்படும் அதனை உயிரினோடு உணர்வு தெரிவது. 4) **யோகக்காட்சி** - இவ்வாறன்றி அறிவைத் தடைசெய்து நின்ற மலசத்திகளை இயம நியம முதலிய அட்டாங்கயோக சமாதியால் ஒருவாறு கெடுத்து ('சும்மாஇரு சொல்லற' வென்றாற் போல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடத் தொருகாலத் திருந்தாங் கிருந்து மூவிடத்து முக்காலத்துப் பொருள்களையுங் காணுங்காட்சி. 'எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை யிருந்த படி யிருந்துகாட்டிச் சொல்லாமற் சொன்னவர்' தட்சணாமூர்த்தியார்.

44.5). 1ல் கூறிய **கருதல்** (அனுமானம்) பற்றியது. 1- **தன்பொருட் டனுமானம்** - இயல்பு முதலிய மூன்றனுள் ஓரேது (காரணமுடைய) சாத்தியத்தைப் பக்கம் முதலிய மூன்றில் வைத்து அவிநாபாவம் (அதனை விட்டுநீங்கா இயல்பு) பற்றி ஆராயும் ஞானமாயுள்ளது இதுவாம். 2. **பிறர்பொருட்டனுமானம்** - அவ்வேதுக்களாலே தான் அறிந்ததனை பிறர் அறியப் போதித்தலை உயிரினோடு உணர்வு தெரிவது.

44.6) மேற்படி 5ல் வரும் **பக்கம் மூன்றாவன : பக்கம்** - ஐயுற்றுத் துணியும் பொருளிருக்கும் இடம். **சவிபக்கம்** - அதற்கு உதாரணமான பொருளிருக்கு மிடம். **விகற்பம்** - அப் பொருளில்லாத இடம். 5.1இற் கூறிய மூன்று ஏதுவாவன இயல்பு (சகசம்), காரியம், அநுபலத்தி. 1) **சகச ஏது** - மா முதலிய சொற்கள் மர முதலியவற்றை உணர்த்து தலால் வேறு காரணமின்றி அச்சொற்களின் இயல்பாலுள்ள ஆற்றல். 2) **காரியஏது** - காரியமான புகை நெருப்பின் காரணத்தை யுணர்த்தும். 3) **அநுபலத்தி ஏது** - குளிரில்லாமையான காரியம் பனியில்லை யென்ற காரணத்தால் என்பதும், அதன் மறுதலையுமான ஏதுக்கள்.

44.7). **சொல்** இரண்டாதல். 1) **அந்நுவயச் சொல்** - புகையுளதால் தீயுண்டெனும் உடம்பாடு பற்றியது. 2) **எதிரேகச் சொல்** - புகையில்லா ததால் (சிவப்பாகத் தெரிந்த விடத்தில்) தீயில்லை யென்றது. இது, நீரோடைத் தாமரையிற் காணுஞ் சிவப்பு, தீயல்ல வென்றது போன்றது.

44.8). 5ல் கூறிய **அநுமானம்** பற்றியது. 1) **பூர்வக்காட்சி அநுமானம்** - நாற்றம் முதலிய ஏதுபற்றி பூ முதலிய காட்சிப் புலனாதற்குரிய பொருளை அநுமானித்தல் 2) **கருதல் அனுமானம்** - உரை முதலிய ஏதுபற்றி அறிவினளவு முதலிய கருத்துப் புலனாதற்குரிய பொருள்களைத் தன் குறிப்போடு சார்த்தித் தெரிவது. 3) **உரை யனுமானம்.** அவற்றின் வேறாய், 'இன்ப துன்பங்கள் முன்வினையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லானது' ஆதலால் (எனச் சொல்லியதால்) இன்றும் அவை செய்யின் மேலைக்கும் வருமென ஆப்தவாக்கியங் கொண்டு சொல்லாததற்கும் பொருள் ஊகித்தறிவது.

44.9). ஒன்றிற் கூறிய **உரை** பற்றியது:- அநாதிமுத்த சித்துருவாய முதல்வன் அருளிய வேதாகமங்கள் கரும, உபாசன, ஞான என மூன்று காண்டங்களாக உள்ளன. **1) தந்திர வுரையளவை** - கருமகாண்டம் பற்றிப் முன்பின்னான மாறுகோளின்றி அநுட்டித்தலை உணர்விற் றெரிவது. **2) மந்திரவுரையளவை** – உபாசனா காண்டம் பற்றி மனாதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையை உணர்விற் தெரிவது. **3) உபதேசவுரையளவை** – ஞானகாண்டம் பற்றித் தனக்கு முதலும் முடிவுமில்லாத இறைவன் தன்னின் வேறல்லாத எண்குண முடையனாதல், தன்னின் வேறாகிய பசு பாசங்களை உடையனாதல் (அவன் ஆண்டான், நாம் அவனுடைமை), முதலிய தன்மைகளைத் தான் உணருமாறும் பிறர்க் குணர்த்துமாறும் உயிரினோடு உணர்வு தெரிவது உபதேச வுரை. (இனி, மேல்விரிவைச் சித்தியாரிற் காண்க). தத்துவப்பிரகாசிகைத் தொடரும்.

45. கிரியாசத்தியின் விளக்கத்தையுடைய உயிருக்கு விடயங்களை அறிவிப்பதற்காககலாதத்துவமே பிரகாசரூபமான **வித்யாதத்துவத் தைத்** தோற்றுவிக்கின்றது. இவ்வாறே கலையிலிருந்து அராகம், வித்தையெனும் இரு தத்துவங்களும், மூலப்பிரகிருதியுந் தோன்றின. **பாடியம் :** (முழு விபரம்) கலையாற் கிரியாசத்தி விளங்கி, வினையாற்றத் தலைப்பட்ட ஆன்மாக்களுக்கு, கலையினின்றுந் தோன்றி ஞானசத்தியை விளக்கி அதனால் அதிட்டிக்கப்பட்டுப் பின்வரும் மூன்று விடயங்களையறியும் அறிவிற்குக் கருவியாய் நிற்பது வித்தியாதத்துவம். 1. புறத்தின்கண் (புறத்தில்) விடயமாகிய குடம் முதலியவற்றைச் **சவிகற்ப** (சாதி, குணம், நிறமெனும் விகற்ப-வேறுபாடுகளுடன் கூடிய) காட்சியால் நிச்சயிக்கும் புத்திதத்துவமாகிய அகத்தின்கண் (அகத்துளுள்ள) விடயத்தை யறியுந் **தன்வேதனைக் காட்சியறிவு,** 2. புத்தி தத்துவத்தோடு கூடாமையாற் புறப்பொருளை விகற்பமின்றி அறிவதாகிய **நிர்விகற்பக் காட்சியறிவு,** 3. மனம் புத்தி அகங்காரங்களின் தொழிற்பாடாகிய **சங்கற்பம் நிச்சயம் அபிமானம்** என்பவற்றை அறிதல். கலையால் மலஞ் சிறிதுநீங்கவே ஞானசத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினும் புத்தியைப்பற்றி விடயத்தைக் (கண் குருடு நீங்கியவுடன் உள்ள நிலைமைபோலப்) பகுத்து உணரமாட்டாத திகைப்பை வித்தை நீக்குவதால் அது வேண்டப்படும். புத்தி முதலியன தத்தங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாயினும் மேலுள்ளவற்றை நோக்கிச் சடமாதலின் அவை தத்தந் தொழிற்பாட்டு அளவினன்றி அதிகத்திற் செல்லமாட்டாவாதலின் எவ்வகைப்பட்ட உணர்வும் ஆன்மாவிற்சென்று விடயமாகுவதற்குக் கருவியாய் நிற்பது, (மாயையில் அன்றிக்), கலையிற் தோன்றிய வித்தை. இனி, அது நிகழுமாறு காட்டுதும்.

46. வித்யாதத்துவம் தனது வியாபாரத்தால் (செயற்பாட்டினால்) ஞானசத்திக்கு விடய அறியாமைக்காய மறைப்பைக் கெடுத்து விடயங்களைத் தோற்றுவிக்கின்றது. இதனால் **வித்தை ஆன்மாவிற்கு மேலான சாதனமாய் இருக்கின்றது. விளக்கம்** : ஆன்மாவினது ஞானசத்தியின் மேலான விளக்கம் கரணமின்றி நிகழாது. ஆதலின் வித்யாதத்துவம் அதற்குக் கரணமாகித் தனது வியாபாரத்தினால் அதன் மறைப்பை நீக்கி விடயங்களை அறியச் செய்கின்றது. குடம் பற்றிய அறிவு புத்தியினால் நிகழாது கண் என்ற கருவியினால் நிகழ்வது போல சுக துக்கங்களின் உணர்வு புத்தியாலன்றி வித்தையாகிய கரணமாயுள்ள அந்தரங்க சாதனத்தினாலாகும்.

(**குறிப்பு :** சுகதுக்கவுணர்வு அவரவர் வினைக்கேற்பச் சுகதுக்கங்களைக் கொடுக்கினும் வித்தையினை நன்கு உணர்ந்தவர்களுக்கு உணர்வைவிட அறிவே மேலோங்கி யாவும் நன்மையாகத் தோன்றும். **மாபாடியக் குறிப்பு :** 1) சந்தனம் மாலை என்பன உள்ளபோது அவற்றை அணிந்து இன்புறும் ஒருவர், அவை இல்லையாயின் துன்புறுவர். காரணம், ஏலவே அவற்றைப் பற்றி அவையவையாய்ப் பரிணமித்த போதமாகிய புத்திதத்துவமாம். அதுவே தன்வேதனைக் காட்சிக்கு விடயமாம். இன்ப துன்ப வடிவாகிய போக்கியமுமாம். அதாவது, கேவலமாய் ஒன்றையும் பற்றி நிச்சயிக்காது நின்ற புத்திதத்துவம் சந்தனம் மாலைகளிற் பற்றி அவையவையாய்ப் பரிணமித்து அவற்றில் அழுந்தி நின்று ஆன்மாவின் ஞானசத்திக்கு விடயமாக்கி அவை இல்லாதபோது துன்புறும் நிலைக்கு ஆளாக்குதற்கு **வித்தை கருவியாம்.** 2) ஆன்மாவின் புத்திநிச்சயங் காரணமாக வெளிப்படையாகத் தெரியும் சுக துக்கங்களை, அந்தரங்க உள்ளறிவு எனக் கூடிய வித்தை, மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வதனால் வேறான முடிவையும் எடுக்கலாம். கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டவர் ஆய்வின்பின் அது தற்காப்புக்காகச் செய்யப்பட்டதெனக் கண்டு தண்டிக்கப்படாதும் போகலாம். 3) கல்வியெனும் வித்தையில் மேம்பட்டவர்களே அவ்வத்தொழிலில் அமர்த்தப்படுவர். சட்டமெனும் வித்தையிற் சிறந்தோரே நீதிபதியாவர். நடுநிலையான தீர்ப்பை வழங்க அறிவும் கோடாமையெனும் பக்கஞ்சாராமையும் அவசியம். 4) சித்தாந்த ஞானமுள்ளிட்ட கல்வி கேள்விகளாற் சம்பவங்களின் நடுநிலைகளை, அவை பாவபுண்ணியங்கள் ஆதலை உரியவாறு உணரலாம். அதனால் தருமம் இன்னதென அறிந்து நடுநிற்குந் தருமதேவனான, காலாதி காலனான சிவனையும் அடையலாம். ஆதாரக் கூற்றுக்கள் :-

1) 'தருமமென் றொருபொருள் உளது தாவிலா,
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்,
அருமையில் வரும்பொரு ளாகும் அன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ'

2) 'தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்,
அருளெனுங் குழவியும் அணையும் ஆங்கவை,
வருவழித் தவமெனும் மாட்சி யெய்துமேல்,
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்'

3) 'சேர்ந்துழிப் பிறவியுந் தீரும் தொன்மையாய்ச்,
சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்,
பேர்ந்திடல் அரியதோர் பெரின் பத்தினை,
ஆர்ந்திடும் அதன்பரி சறைதற் கேயுமோ'

மேற்படியான கந்தபுராணப் பாடல்களால் வித்தை- ஞானமே தர்மத்தை அறியுமென்பது புரியும்.

47. இந்த ஆன்மாவிற்குப் புத்தியானது சுகதுக்க ரூபமான போக்கியப் பொருளாக சித்திக்கும்போது வித்தை கரணமாய் இருக்கின்றது. **விளக்கம் :** (இதுவும் 46ற் கூறியபடி). மனதினாலே செலுத்தப்பட்ட கண் முதலிய இந்திரியங்களால் அறியப்படும் விடயங்களை புத்தி சந்தேகமின்றி நிச்சயிக்கும். (இந்திரியக் காட்சிபற்றி 45ல்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியல் பார்க்க.) நிச்சயித்ததை ஆன்மா பற்றுகின்றது. நிச்சயரூபமான புத்தியை விடயமாகக் கொண்ட அறிவில் புத்தியே விடயமாதலால் அப்புத்தியை அறிவதற்கு அதனையே கரணமாகக் கொண்டு அறியமுடியாது. ஆதலால் அதற்குப் புத்தியின் வேறாய வித்தை வேண்டும். இனி, அராகதத்துவ உண்மை.

48. பற்றுதலைச் சொரூபமாகக் (காரியமாகக்) கொண்ட **அராக தத்துவமானது** விடயங்களில் வேறுபாடின்றியே புருடனுடைய பிரவிருத்தி (முயற்சிக்குக்) காரணமாயிருக்கின்றது. புத்தியின் தர்மங்களைக் காட்டிலும் வேறானது. எல்லாப் பற்றுகளுக்குங் காரணமாயுள்ளது. **விளக்கம் :** பற்றுதலாகிய காரியம் அராக உண்மைககு ஆதாரம். பொருள்களின் குணங்களை அல்லது வைராக்கிய மின்மையாகிய புத்தியின் கர்மத்தைப் புருடனுடைய பற்றிற்குக் காரணமாகக் கொள்ளின் வைராக்கியம் உள்ளோரும் பொருள்களைப் பற்றுவதால் துறவிகளே இல்லையாகும் நிலையுண்டாகும்.

**பாடியம் :** வித்தையால் ஞானசத்தி விளங்கி விடயங்களையறியும் ஆன்மாவுக்கு இச்சை நிகழ்ந்தன்றிப் போகநுகர்ச்சி செல்லாமையின் வித்தையினின்றுந் தோன்றி ஆன்மாவின் இச்சாசத்தியை விளக்கிப் புத்தி குணங்களின் அவைராக்கிய மெனப்படும் அராக நிகழ்ச்சிக்கு ஏதுவாய் நிற்பது அராகதத்துவம். இச்சையாவது ஞான-வித்தை விசேடமாகலின் அதனை விளக்குவதாகிய அராகதத்துவம் வித்தையின் ஏகதேச பரிணாமமாதல் பொருத்தமுடைத்து. இது நீக்கமின்றி ஆன்மாவுடனாய் நிற்கும். அங்ஙனம் வாதனா ரூபமாய் நிற்கும் அராகதத்துவம் முத்திக் காலத்தில் தன் எல்லையளவும் அத்துவசுத்தி செய்யுந் தீக்கையாற் பற்றறக் கழியும். கழியவே விடயங்களிற் பொதுமையான் நிகழும் விருப்பமும் நிகழாமையின், ஆண்டு (அவ்விடத்தில்) **சிவராகம்** வெளிப்பட்டு ஆன்மாவின் இச்சாசத்தியை முத்திக்கேதுவாகிய சாதகங்களிற் **கோசரிப்பிக்கும்** என்றறிக. (கோசரம் - விளங்கித் தோன்றல்).

அராகதத்துவம் ஈறாகக்கூறிய வித்யாதத்துவங்கள், (7ல் ஐந்தான காலம், நியதி, கலை, வித்தை, அராகம்), ஐந்தில் அராகம். வித்தை, கலை என்பன முறையே ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளை விளக்கி போகநுகர்ச்சிப் பொருட்டுப் புத்திதத்துவத்திற் செலுத்தியும், **நியதிதத்துவம் இதனையே நுகர்க** எனப் போகத்தில் ஆன்மாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்து நிறுத்தியும், **காலதத்துவம் இதனை இத்துணைப் பொழுதளவில் நுகர்க** எனப் போகத்தில் வரையறுத்துச் செலுத்தியும் இவ்வாறு இவ்வைந்தும் ஆன்மாவிற்கு உபகாரமாய், ஏனைக் கருவிகள்போல அவத்தைப்படுதற்கு ஏதுவாய் இடையிடையே கூடுதலும் நீங்குதலுமின்றி எக்காலத்தும் ஆன்மாவுடன் கஞ்சுகம் -சட்டை போலப் பந்தித்து நிற்றலின் இவை **பஞ்ச கஞ்சுகம்** என உபசரித்துக் கூறப்படும்.

49. இத் தத்துவங்களால் வியாபிக்கப்பட்டு ஆன்மா போகத்தை அனுபவிக்குந் தன்மை யுடையதாய் இருக்கையில் அது **புருடன்** எனும் பெயருடனும், தத்துவங்களிடை வைத்து எண்ணப்படும் நிலையும் அடைகின்றது. **விளக்கம்** - கலை. வித்தை. அராகம். காலம். நியதியாகிய பஞ்ச தத்துவங்களோடு கூடிய அணுவாகிய ஆன்மா போகத்தை யனுபவிக்குந் தன்மை யுடையதாய்ப் **புருடதத்துவம்** எனப்படுகின்றது. உண்மையில் புருடனுக்குத் தத்துவமாயிருக்குந் தன்மையில்லை. ஆதலால் புருடதத்துவ புவனங்களுக்கு அராகத்தில் இருப்பு (மதங்கத்தில்) கூறப்பட்டது. தீட்சையில் பிரகிருதி தத்துவத்தின் பின்னர் புருடத்தன்மை நீக்கத்தின் பொருட்டு புருடதத்துவம் அராகத்தின் பின் வைக்கப்பட்டது. **பாடியம்** - இங்ஙனம் கலைமுதலிய பஞ்சகஞ்சுகத்துடன் கூடிப் பொதுமையாற் போத்திருத்துவம் (போகம் அனுபவிப்போனாதற் தன்மை) எய்திநின்ற ஆன்மா பிரகிருதிமாயைப் போகநுகர்ச்சியின் உன்முகத்திற்கு (மனங்கொள்வதற்கு) ஏதுவாகிய அவிச்சை முதலிய பஞ்சக் கிலேசமென்னும் பும்ஸத்துவ மலமுடையனாய் புருடதத்துவ மென நிற்பன்.

**பஞ்சக் கிலேசமாவன** – 1) அநித்தத்தை நித்தமென்றும், அசுத்தத்தைச் சுத்தமென்றும், துன்பத்தை இன்பமென்றும், தானல்லாத பொருளைத் தானென்றும் திரியக்காணும் உணர்வாகிய **அவிச்சையும்** (அறியாமையும்), 2) அதுபற்றி அவற்றை யானென மதிக்கும் **ஆங்காரமும்,** 3) அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் **அவாவும்,** 4) அதுபற்றி அப்பொருளிற் செல்லும் **ஆசையும்,** 5) அதுபற்றி அதன் மறுதலைகட் செல்லும் கோபமுமாகிய இவை. இவற்றைத் திருவள்ளுவர் **காமம் வெகுளி மயக்கம்** என்றார். இந்த அவிச்சை முதலியன உடையோர் சகலரே யாதலின் பிரளயாகலர் விஞ்ஞானகலர் புருடதத்துவம் எனப்படுவதில்லை. இனி. **சித்து, சட விளக்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்து சட விளக்கம்** 1) ஆன்மா வியாபகமாயினும் புருடதத்துவமெனப் பெயர் பெறுதற்கு ஏதுவாகிய போத்திருத்துவ நீங்குதல் மூலப்பகுதிச் சுத்தியின் பின்னாதல்பற்றி, மூலப்பகுதிக்கும் அராகத்திற்கு மிடையில் வைத்து எண்ணுதலும், 2) புருடனாதற் கேதுவாய் விசேடித்து நிற்குந் தத்துவங்கள் சடமாதல்பற்றி, சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் புருட தத்துவத்தையுஞ் சடமென்று உபசரித்துக் கூறுதலும் பொருந்தும். **ஆன்மா உண்மையாற் சித்து, உபசாரத்தாற் சடம்.**

50. புருடனுடைய போக்கியத்திற்காக கலையென்னும் தத்துவமே அராகத்தின்பின் அவ்வியக்தம் (வெளிப்படாதது) என்னும் **பிரகிருதி** தத்துவத்தைத் தோற்றுவிக்கின்றது. அந்தப் பிரகிருதியானது வெளிப்படாத சாத்விக இராசத தாமச குணங்களோடு கூடியிருத்த லால், விளக்கிச் சொல்லமுடியாத அவ்வியக்தமாகும். குண முதலிய தத்துவங்கள் போகத்திற்குக் சாதனமாகும். **மாபாடியம் - மூலப்பகுதி** (பிரகிருதி) கலைமுதலிய பஞ்சகஞ்சுக முடையனாய் போகநுகர்ச்சிக்கண் சென்ற ஆன்மாவிற்குக் குணமுதல் நிலமீறாகிய போக்கியங்கள் முறையே யுள்ளவாதற்கு ஏதுவாகக் கலையினின்றும் மூலப்பகுதிஎன்னுந் தத்துவந்தோன்றிச் **சீகண்டருத்திரர் சத்தி கலக்கக் கலக்குண்டு தன்னினின்றுங் குணதத்துவத்தைத் தோற்றுவிக்கும்.** அவிச்சை முதலியவற்றின் விளைவிற்கும் இதுவே காரணம். போக்கிய ரூபமாய்நின்ற தத்துவப் பிரபஞ்சங்கட் கெல்லாம் இது மூலகாரணமாதலின் மூலப்பகுதியென்றும், பிரகிருதியென்றும், பிரதானமென்றும், மானென்றும், முக்குணங்களும் வியக்தமாய் விளங்காது மயில்முட்டையின் பஞ்ச வர்ணம்போல் சூக்குமமாய்நின்ற அவத்தையால் அவ்வியக்த மென்றும் கூறப்படும். மூலப்பகுதி அவ்வியக்தமாய் நிற்பதாகலின் அதற்கண் கூறப்படும் புவனங்களும் குணதத்துவ மத்தகத்தின் (குணதத்துவத்தின் மேல்) உளவாம்.

51. பிரகாசம், பிரவிருத்தி, நியமம் என்னும் ரூபமான சாத்விகம், இராசதம், தாமத மென்னுங் குணதத்துவமானது அவ்வியத்த மென்னும் பிரகிருதி தத்துவத்திலிருந்து தோன்றிப் பின்னும் சுக துக்க ரூபமாகமாகவும் மோக ரூபமாகவும் விளங்குகின்றது. பிரகாச முதலிய மூன்றுவித காரியங்களால் காரணமான அவ்வியத்தத்திலிருந்து குணந் தோன்றும். **சாத்விகம் சுகத்தையும், இராசதம் துக்கத்தையும், தாமசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மோகத்தையும் உண்டுபண்ணுதலால்** சுகதுக்க மோக ரூபமெனவுங் கூறப்படும். (விரிவு மதங்கத்தில்). **பாடியம்** - அவ்வியத்தமாய் நின்ற மூலப்பகுதி வியத்தமாதற் பொருட்டு, ஒன்றாய்நின்ற பாலையும் நீரையும் பிரிக்கும் அன்னம்போல, சீகண்டருத்திரர் சத்தி கலக்கக் கலக்குண்டு முக்குணமாய்ப் பகுப்புற்று விளங்கித் தம்முட் சமமாய் நின்ற அவத்தை(நிலை) குணதத்துவமாம். **குணங்கள் மூன்றாயினும் ஒரு கருமம் பற்றி அவை தொழிற்படுகையில் ஒன்றாகும்.** சாத்விக முதலிய மூன்றும் ஆன்மாக்கள் தோறும் கூடியுங் குறைந்தும் விரவி முறையே சுகதுக்க மோகங்கட் கேதுவாய்ப் பிரகாசம் முதலிய விருத்திகளை யுடையவாய் நிற்கும். குணதத்துவம் மூலப்பகுதியின் விருத்தியே யன்றிப் பரிணாமம் அன்மையால் மூலப்பகுதியோடு ஒன்றாகவும் வைத்து ஓதப்படும்.

52. சத்தம் முதலிய விடயங்களின் நிச்சய அறிவுருபமான **புத்தி தத்துவமும்** முக்குணங்களான குணதத்துவத்திலிருந்து தோன்று கின்றது. அப் புத்திதத்துவமும் காரியத்தை யனுசரித்தும் சத்துவ முதலிய குணங்களாலும் மூன்றாகச் சொல்லப்பட்டது. கடம் (குடம்) என்னும் நிச்சயத்தை யுண்டுபண்ணுதலாகிய காரியத்தைக் கொண்டு புத்திதத்துவம் சித்தித்தது. அது புருடனுடைய காரியரூபத்தால் எக்குணம் அதிகமாகிறதோ அக்குணப்பெயர் பெறும். ஆதலின் சாத்துவிசி. இராசசி, தாமசி யெனப் பெயர் பெற்று மூவிதமாகிறது. **புத்திக்கு தர்மம், ஞானம். வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம்** எனும் எண்குணங்களா யிருக்குந் தன்மையும் **சித்தி முதலிய ஞானபேதமும் உண்டாம். சிவபூசைக்குறிப்பு-** இவ்வெண் குணங்களில் முதல் நாலும் ஷடுத்தாசன பூசையில் 2,3,4,5ஆம் இடங்களிலும், இவ்வெட்டும் ஸ்திராசன பூசையில் நாலிருந்து 11வரையான இடங்களிலும் வரும்.

52ன்- **புத்திதத்துவ விரிவு :- பாடியம் -** 52.1) கலை முதலியவற்றாலும் பிரகிருதி குணங்களாலும் பொதுவகையாலும் சிறப்புவகையாலும் போத்திருத்துவ மெய்தின்ற புருடனுக்குக் குணதத்துவத்தினின்றும் **சாத்துவிகத்தால் மிக்கும்,** ஏனையிரண்டு குணங்களாற் குறைந்தும் பரிணமித்துத் தோன்றி, வித்தையிற் பொதுமையால் விளங்கிய ஞானசத்தியை அவ்வவ் விடயந்தோறும் சிறப்பு வகையால் விளக்கி அவற்றைப் பெயர் சாதி முதலியவற்றால் நிச்சயிப்பிக்கும் கருவியாயும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) அங்ஙனம் நிச்சயித்த பின்னர் அவ்வவ்விடய வடிவிற்றாய்ப் பரிண மித்துத் தோன்றும் ஞானமாய் நின்று, ஆன்மாவுக்குப் புலனாயடுத்த போக்கியமாயும் 3)அங்ஙனமாகலாற் புருடனாற் செய்யப்படும் இருவினைப்பயனாகிய புண்ணிய பாவங்கட்கெல்லாம் சிறப்பு வகையாற் பற்றுக்கோடாயும் 4) அவற்றால் உளவாகிய தன்மம் முதலிய பாவகமெட்டும். அவற்றினாலாய சித்திமுதலிய பிரத்தியயங்கள் (பிரத்திய – எதிரான,மறுத்த) ஐம்பதும், அவற்றின் விரிவுகளுமாகிய எல்லாவற்றிற்கும் இடமாயும் நிற்பது புத்திதத்துவமாம். நிச்சயித்தல் பிறிதொன்றால் ஆகாமையால் இத்தன்மைத்தாய **புத்திதத்துவம்** உண்டு

**நிச்சயித்தலாவது : (முன்னருங்கண்டது) படி** 1) ஆன்மா அந்தக் கரணங்களோடு இயைபின்றி, உடனாய் நிற்கும் **வித்தை** மாத்திரையே கருவியாகக்கொண்டு **வாயில்களை** அதிட்டித்தவழி, எதிரே தோன்றுவதோர் விடயத்திற் பொதுவகையால் இதுவோர் பொருளென்று அறிதலாகிய **நிருவிகற்பக்காட்சி** முற்பட (முதலில்) நிகழும்,

படி 2) அதன்பின் ஆன்மா மனத்தை அதிட்டிப்ப மனமானது **சித்தமாய் நின்று** இது யாதாகலாமென (இது மகனென அல்லது குற்றியென) ஒன்றைத் தூக்கிச் சிந்தித்து பின்னர் இது குற்றியாகலாம் அல்லது மகனாகலாமென ஒன்றைச் **சங்கற்பித்தும்** (துணிந்தும்), அதுவோ அல்லவோ என **ஐயுற்றும்** (சங்கற்பம் நிகழ்ந்தே ஐயம் நிகழும்) நிச்சயித்தற்கு ஏதுவாகிய **வேட்கையை** விளைத்து நிற்கும்.

படி 3) அதன் பின்னர் ஆன்மா **ஆங்காரத்தை** அதிட்டிப்ப ஆங்காரமானது குற்றி யென்றோ மகனென்றோ ஒன்றை நிச்சயிப்பேன் யான் என்னும் **அகந்தையை** விளைவித்து, நிச்சயித்தலில் முயலும் **ஊக்கத்தை** உண்டாக்கி, அதற்கு ஏதுவாகப் **பிராணவாயுவையும்** இயக்கி நிற்கும்.

படி 4) அதன்பின் ஆன்மா **புத்தியை** அதிட்டிப்பப் புத்தியானது இவன் மகன், இது குற்றி, இது குடம் என அவ்வப் பொருள்களைப் பெயர் சாதி முதலியன பற்றிச் சிறப்பு வகையாற் துணிதலாகிய **சவிகற்பக் காட்சியே நிச்சயித்தலாம்.**

இதுவரை கூறியவற்றால் வாயில் முதலியவற்றின் தொழிற்பாடுகட்குத் தம்முள் வேறுபாடும் அவை ஒன்றற்கொன்று நிச்சயமாக ஏதுவாயும் (காரணமாயும்) வருதல் காண்க. சவிகற்பக் காட்சி புத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியேயாயினும் முதலில் மனதின் தொழிற்பாடு ஏதுவாக வருதலால் **மானதக் காட்சி** யெனவும்படும். புத்திதத்துவம் சடமாயினுஞ் சாத்விகம் மேம்பட்டுத் தோன்றியதால் சேதனனாய ஆன்மாவிற்கு எதிர்முகமாய வழிக் கண்ணாடியின் நிழல்போல அதனிடத்தில் எதிர் விம்பமாக ஞானமுண்டாதல் பொருந்தும்.

52.2) **புத்திகுண பாவங்கள் எட்டு:** தன்மம். ஞானம், வைராக்கியம். ஐசுவரியம். என்பனவும் அவற்றின் மறுதலையான அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்பனவுமான எட்டாகும். இப்பாவகம் எட்டில் தன்மம் (அறம்), ஞானம் (அறிவு), வைராக்கியம் (வெறுப்பு), ஐசுவரியம் (செல்வம்) என்ற நான்கும் சாத்விக குணத்தாலும், ஏனை நான்கில் அவைராக்கியம் (விருப்பு, அராகம்) இராசத குணத்தாலும் மீதமான மூன்றும் தாமத குணத்தாலும் உளவாம்.

**பாவக விரிவு** 1). தன்மம் (தருமம்) - இது இயமம் நியமம் என இரு வகைத்து. **இயமம்** 5:- கொல்லாமை மெய்மை கள்ளாமை பிரமசரியம் அகந்தூய்மை. **நியமம்:-** 5 வெகுளாமை வழிபாடு புறந்தூய்மை உவகை செப்பம் (இணக்கம், நடுநிலை). இப்பத்தும் வேள்வி (ஆராதனை, ஈகை, யாகம்) முதலிய அறஞ்செய்வார்க்கு நிச்சயம் வேண்டப்படும் அங்கமாகும். கண்ணோட்டம் (கழிவிரக்கம்), அறிமடம் - அறிந்தும் அறியாதது போன்று இருத்தல், ஒப்புரவு - உலகநடை, ஒற்றுமை, நட்பு, நடுவு நிலைமை முதலானவை இப்பத்தில் அடங்கும்.

2) **ஞானம் எண்வகை:** (2.1) உம்மையின் - முற்பிறப்பின் வாசைன பற்றி முன்பின்னான மயக்கமின்றிப் பொருந்துதலால் பொருட்களை ஆய்ந்து ஊகித்தறியும் ஞானம் ஒன்று, (2.2) அத்தியான்மிகம் - உயிர்களால், ஆதிபௌதிகம் - பஞ்சபூதங்களால், ஆதி தைவிகம் - தெய்வத்தால் வரும் மூவகைத் துக்கத்தாலாம் ஞானம் மூன்று, (2.3) உறவோர் கூறும் வாயுறை மொழியால் (உண்ணக் கசந்து பின் இதம் செய் மருந்து போன்ற பயன்தரு மொழியால்) வரும் ஞானம் ஒன்று, (2.4) சாத்திரங்களைத் தானேயோதி யுணர்தலாலும், ஆசிரியனை வழிபட்டு ஓதியுணர்தலாலும் வரும் ஞானம் இரண்டு, (2.5) தான முதலிய நல்வினைகளால் வரும் ஞானம் ஒன்று என ஆக எட்டாம். ஞானமெட்டாகச் சித்தி (முத்தி)யும் எட்டாகும். இவை பூதமுதல் புருடன் ஈறாக நிற்கும் மதவேறுபாடு பற்றி ஒவ்வொன்றும் பத்தாகி எண்பதாகும். **குறிப்பு 1) முத்தி வகை விளக்கம்** :- (தத்துவங்களைக் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் முத்தி பெறுவ ரென்பது அத்தத்துவ புவனங்களை அடைந்து வாழ்வர் என்பதன்றி மீளப்பிறவார் என்ப தில்லை.) 1) **உலகாயதர்** பூதங்களின் மேற்தத்துவத்தை யறியாராதலின் பூதவுலகத்தின் முத்தி பெறுவர். 2) **சோதிடநூலார்** நாள்கோள் உலகத்திற் சேறலே முத்தியென்பதால் அவரும் பூதஉலகமுத்தியே பெறுவர். 3) **ஸ்மிருதி நூலார்** ஐம்பெரும் பூதத்தின் காரணம் பிரமமாதலின் அதுவே முத்தியென நிற்றலின், உண்மையில் அக்காரணம் தன்மாத்திரையே யாதலின், அதன் மேலுள்ள தத்துவங்களை யுணராததால், தன்மாத்திரை உலகத்தின் முத்தியைப் பெறுவர். 4) **உலகாயதரில் ஒருசாரார்** இந்திரியம் ஆன்மா, சித்தம் ஆன்மா, ஆங்காரம் ஆன்மாவென நிற்றலின் முறையே அந்நதந்த உலக முத்தியைப்பெறுவர். 5) புத்தர், புத்தியின் பரிணாமமாகிய ஞானமே ஆன்மா வெனவும், நையாயிகர், அந்தஞானமே ஆன்மாவின் குணம் எனவும் நிற்றலின் அவர் புத்தி தத்தவத்தின் முத்தி பெறுவர். 6) **சமணர்-** உண்டு மில்லையுமென எழுவகையான அநேகாந்தம்பேசி நிற்பதால் அதற்கேற்புடையது குண தத்துவ மாதலின் குணதத்துவ முத்திபெறுவர். 7) **பாஞ்சராத்திரிகள்** (வைணவரில் ஒருசாரார்) நிலமுதலிய 24தத்துவத்தின் மேலுள்ள பொருள் நாராயணன் என்ப(மயங்குவ)தால், உண்மையில் அது மூலப் பகுதியேயாதலின் அவர் அப்பகுதியின் முத்தியைப் பெறுவர். (மால் – மயக்கம், மாயவன், மாயைத் தலைவன்.) 8) **ஏகான்ம வாதிகள்.** பொது வகையாலும் சிறப்பு வகையாலும் போத்திருத்துவ மெய்திநின்ற புருடதத்துவத்தின் முத்தியைப்பெறுவர். 9) **சாங்கியர்** - பொதுவகையாற் போத்திருத்துவ மெய்திநின்ற புருடதத்துவத்தின் முத்தியைப் பெறுவர். 7ம் 8ம் புருடனுக்கு மேலுள்ளவற்றை அறியாராதலின் அம்முத்தி பெறுவர். இவ்வாறே ஏனைப்புறச் சமயத்தாரும் அவ்வத் தத்துவ முத்தி பெறுவர்.

**குறிப்பு :** 2) அதுவதுவே முத்தியெனவும் அதுவதுவே சித்தாந்தமெனவும் நிற்பார்க்கு, அவரறிந்த எல்லையளவுஞ் செல்லல் கூடுமாதலின் அறியாத எல்லையிடத்துச் செல்ல மாட்டாமையால் அவ்வத் தத்துவங்கள் அவரவர்க்கு முத்தித் தானமாயிற்றென்க. பூதம், தன்மாத்திரை, வாயில் - ஞானேந்திரியம், சித்தம், மனம், ஆங்காரம், புத்தி, குணம், அவ்வியத்தம் - பிரகிருதி. புருடன் என புற, புறப்புற சமயத்தார் இருவகையினரும் எய்தும் சித்தி (முத்தி)த் தானம் பத்தாதலின் சித்திகளும் ஒவ்வொன்றும் பத்தாகி விரிந்து 80 ஆகின. புருடனுக்கு மேலும் அராகமுதல் மோகினி - அசுத்தமாயை ஈறானவை அகப்புறச் சமயத்தார்க்கும், சுத்தவித்தை முதல் சிவதத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறாகவுள்ள சிவதத்துவங்கள் அகச் சமயத்தார்க்கும் முத்தித்தானமாம். இவை எண்பதில் அடங்காத காரணம் புத்தியின் பரிணாமமான ஞானத்தாலெய்தும் சித்திகளே இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. (எல்லாமாகத் தத்துவபுவனங்கள் 224) குணரூபமாகிய புத்தி தத்துவத்தின் தொழிற்பாடு பிரகிருதி, புருடனுக்குமேற் செல்லமாட்டாமையின் அவ்விடத்தில் எய்தும் சித்திகளுக்குக் காரணம் முறையாலெய்தும் பல்வேறு வகைப்பட்ட (அதிதீவிர, தீவிர முதலிய நால்வகைச்) சத்தினிபாதமேயாம்.

**குறிப்பு 3**) 36 தத்துவவிரிவினை தசகாரியம் அத் 3, 7.10.15, 7.10.16, 7.23 என்பவற்றைப் படித்தபின் இம்முத்திவகை விளக்கத்தையறிக. அறியினே, மணிவாசகர் இவற்றை, 'திருத்தகும் அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும் வீடுபேறாய்நின்ற விண்ணோர் பகுதி கீடம் புரையுங் கிழவோன்...' என்றதும், அதனால் சிவசாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியமாகிய சிவதத்துவத்திற்கும் அதற்கு மேற்பட்டவையுமான முத்தித் தானங்களுடன் ஒப்பிடுகையில் ஏனையவை கீடம் (புழுப்)போல சிறப்பற்ற பதமுத்தி (தத்துவபுவன)த் தானங்கள் என்றதும் விளங்கும்.

3) **புத்திகுணபாவத் தொடர்- வைராக்கியம் வெறுப்பு).** காரண வேறுபாட்டாற் பத்துவகை. 1) பிணி முதலியவற்றால் வருந்துவோரைக் கண்டு எமதுடலும் இவ்வியல்பினதாதலின் இதற்காக உணவு முதலியதேடி வருந்துவானேன் எனவரும் வெறுப்பு ஒன்று, 2) அத்தியான்மிக முதலிய மூவகைத் துன்பத்தால் வரும் வெறுப்பு மூன்று, 3) பொருளீட்டலும் காத்தலும் செய்வதில் வரும் வருத்தம் நோக்கி வரும் வெறுப்பு ஒன்று, 4) நட்டார் (உறவினர்) முதலியோரை இழந்து துன்புறக் காரணம் நட்புச் செய்தலாலென நினைந்ததால் வரும் வெறுப்பு ஒன்று, 5) காமுகன் தன் மனையாளிடம் வெறுப்பு நிகழக் காரணமான ஒன்றினைக் கண்டதனால் வரும் வெறுப்பு ஒன்று. 6) ஒரு நாளுண்டி சுருங்கினும் வாடும் உடம்பு எத்தனைக் காலம் பேணினும் நிரம்புமாறில்லையென எண்ணுதலால் வரும் வெறுப்பு ஒன்று, 7) இழிந்தோரிடத்து இரப்பதற்கு மனஞ் செல்லாததால் வரும் வெறுப்பு ஒன்று, 8) இவற்றாலன்றி முன் தவத்தாலாம் வெறுப்பு ஒன்று என **வெறுப்புப் பத்தாம்.** இப்பத்துவகை வைராக்கியத்தால் வரும் துட்டி (சதுஸ்டி, மகிழ்ச்சி)யும் அவற்றால் பத்து வகையாம். உடலை ஓம்பாதிருந்து மகிழல் ஆகிய 10 துட்டியும் பூதமுதலிய முத்தி பத்திற்கும் ஏதுவாதல் பற்றி ஒவ்வொன்றும் பத்தாய் விரிந்து வெறுப்பு நூறாகும் என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) **ஐசுவரியம் -** அட்டமா சித்தியெனும் அணிமா முதலான செல்வம்.

1). அணிமா - அணுவிலும் அதிசூக்கும வடிவுற்று நிற்றல்.

2) மகிமா – மேருவினும் பெரிய வடிவுற்று நிற்றல்.

3) இலகிமா - சேறு முதலியவற்றில் காற்றாகி மெல்லிதாய் அழுந்தாமை.

4) பிராத்தி - எண்ணியது எண்ணியபடி பெறுதல்.

5) பிராகாமியம் - சங்கற்ப மாத்திரையால் ஆயிரம் மகளிரைப் படைத்து அவர்களோடு ஆயிரவடியாய் நின்று கிரீடித்தல்.

6) ஈசத்துவம் - பிரமனாதியோரிடம் தன்னாணையைச் செலுத்தி அவராற் பூசிக்கப்படுதல்.

7) வசித்துவம் உலகைத் தன்வசமாக்கலும் அதனை யுண்டாக்கலும்.

8) கரிமா - விடயங்களை நுகர்ந்தும் அவற்றிற் தொடக்குண்ணாமை.

இவற்றுள் முதல் மூன்றும் உடலாலும், ஏனைய மன முதலிய வற்றாலும் பெறப்படுவன.

**பேய், அரக்கர் முதலியவற்றின் உலகமும் அட்டமாகுணங்களும் :-**

1) பேய்களுக்கு இவ்வெட்டும் நிலவுலகத்தை வியாபித்துள்ளன.
2) அரக்கருக்கு நிலத்துடன் நீருலகத்தையும் வியாபித்து 2மடங்கும்,
3) இயக்கருக்கு மேலும் தீயுலகத்தையும் வியாபித்து 3 மடங்கும்,
4) காந்தருவருக்கு மேலும் வாயுவுலகத்தையும் வியாபித்து 4 மடங்கும்,
5) இந்திரர்க்கு மேலும் ஆகாயவுலகத்தையும் வியாபித்து 5 மடங்கும்,
6) சோமலோகத்தினர்க்கு மனத்தினையும் வியாபித்து 6 மடங்கும்,
7) பிரசாபதியுலகினர்க்கு ஆங்காரத்தையும் வியாபித்து 7 மடங்கும்,
8) பிரமலோகத்தினர்க்கு புத்தியையும் வியாபித்து 8 மடங்கும் ஏற்றமாயுள்ளன ஆதலால் எண்வகைச் செல்வமும் 64 ஆக விரியும் **இச் செல்வங்களை அடைய முன்கண்ட தன்ம (அற) முதலானவை ஒன்றிற் கொன்று காரணமாதல்.** :- இயம நியமமென இருகூற்றுப் பத்துவகைப்பட்ட தன்ம முடையார்க்கு எண்வகை ஞானத்தாலொரு ஞானமுண்டாம். ஞானத்தாலே பத்துவகை வைராக்கியத்தில் ஒரு வைராக்கியமுண்டாம். வைராக்கியத்தாலே எண்வகைச் செல்வமும் உளவாம். **குறிப்பு**- இங்கு கூறப்பட்ட பத்துவகை அறங்களில் ஏதோ வொன்றைத் தத்தம் இயல்பிற் கேற்பக் கடைப்பிடித்தாலே அதனால் அவ்வவற்றாலாம் ஞானமுண்டாய் அதற்கேற்ற வைராக்கியமும் உண்டாய் எண்வகைச் சித்தியும் உளதாதல் ஊன்றி அவதானிக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது. இதற்கு மனதை ஒருநிலையில் நிறுத்தி முதலில் எமதாற்றலுக் கேற்றவோர் தர்மத்தை, அறத்தை பெரியபுராண நாயகர் போல, அரிச்சந்திரன் போல உறுதியோடு கடைப்பிடிக்க வேண்டும். எமது உறுதியைப் பரிசோதித்த பின் வேண்டிய யாவும் சிவன் தருவான்.

5) **அதன்மம்** - (பாவம், மறம். அதர்மம்) இனி, அணிமா முதலிய ஐசுவரிம் பெற்றார் அதனாற் செருக்கெய்தி அட்டாங்கயோக நெறியைக் கைவிட்டு விடயங்களிற் துவக்குண்டு(பற்றி)க் கிடப்பா ராதலின் அதனால் அதன்ம முண்டாம். அதுவும் தன்ம முதலிய வற்றிற் கெதிராய் 10 வகையாகும். அவை, கொலை பொய் களவு பிறர்மனை நயத்தல் அழுக்காறு வெகுளி வழிபடாமை மாசுண்டல் (அழுக்காதல்) செற்றம் கோட்டம் (பக்கஞ் சாரல்) என்பனவாம்.

6) **அஞ்ஞானம்** - அதன்மத்தால் அஞ்ஞானமுண்டாம். அது, தமம், மோகம், மாமோகம், தாமிசிரம், அந்த தாமிசிரம் என ஐந்தாம். 1) தமம் - ஆன்மா அல்லதனை ஆன்மாவென மயங்குதல். இதுவும் மதவேறுபாட்டால் மேற்கூறிய பூதமுதலிய பத்தினையும் பற்றி நிகழ்ந்து பத்துவகையாகும். 2) மோகம் - அணிமா முதலிய எண்பெருஞ் செல்வமே மேலான உறுதிப்பயனென மயங்குதல். அதுவும் அணிமா முதலான எட்டில் நிகழ்ந்து எட்டாகும். 3) மாமோகம் - விருப்புச்சத்தம் வெறுப்புச்சத்தம் முதலிய தன்மாத்திரை 5 தரம் (விருப்பு வெறுப்பு) 2 என பத்தினும் இதுவே பொருளெனமயங்குதல். 4) தாமிசிரம் - உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆகிய இருகூற்றுச் சத்தம் முதலிய பத்தினையும் எண்பெருஞ் சித்தியினையும் பெறுதற்குரிய சாதகம் செய்தவழி அவை பெறாததாலோ பெற்று இழந்ததாலோ வருந்துதல். அவை (10ம் 8ம்) 18ம் பற்றி 18 வகைப்படும். 5) அந்த தாமிசிரம் (அந்த - உள்ளான) முன்கூறிய பதினெட்டையும் ஒரு யோகி அநுபவிக்கும்போது அவற்றால்வரும் இன்பத்தினை அவனினும் மேம்பட்ட மற்றொரு யோகி கவர்ந்தபோது அதனால் வருந்துதல். ('யான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்' திருமூலர்). இதுவும் 18 வகைப்பட்டு அஞ்ஞானம் ஆக 64 ஆகும்.

7) **அவைராக்கியம்** - அஞ்ஞானத்தால் அவைராக்கிய மெனும் ஆசையுண்டாம். இது அவைராக்கிய மறுதலையாய் நூறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, அஞ்ஞானம் 64, அவைராக்கியம் 100, மனம் 1, அங்காரம் 1, (வாக்காதி) கன்மேந்திரியம் 5, (சுரோத்திராதி) ஞானேந்திரியம் 5என ஆக 176. இவற்றால் (இனிவரும்) அநைசுவரியத்திற்கு ஏதுவாகிய அசத்தி யென்னும் வலியின்மையுண்டாம். அவ்வசத்தி அவ்வக் காரணவேறுபாட்டால் 176ஆம்.

8) **அநைசுவரியம் -** வலிவின்மை தரும் அவ்வசத்தியாலே அநைசுவரிய மெனும் வறுமையுண்டாம். அது அட்டமாசித்திக்கு மறுதலையாய் எட்டாகும். இங்ஙனம் முறைமையாலே **புத்திதத்துவ விருத்தி 612 ஆதல்** :- தன்மவகை 10, ஞானம் 80. வைராக்கியம் 100, ஐசுவரியம் 64, அதன்மம் 10. அஞ்ஞானம் 64, அவைராக்கியம் 100, அநைசுவரியம் 8 (ஆக436) இவற்றுடன அசத்தியவகை 176ம் சேர 612 ஆகும்.

**அநைசுவரியமாகிய வறுமையுடையானுக்கு மீள அறநினைவு வரும்.** இங்ஙனமாதலின் புத்திச்சக்கரத்தில் தன்மம் முதலிய எட்டியல்பினது முடிவு காணமாட்டாது மீளமீளப் பிறந்திறந்து உழல்வன் புருடன். இதனை மணிவாசகர், 'அழவிலாப் பாவகத்தால் (பாவனைகளால்) அமுக்குண்டிங் கறிவின்றி - விளைவொன்று மறியாதே வெறுவிய னாய்க் கிடப்பேனுக் - களவிலா வானந்த மளித்தென்னை யாண்டானை - களவிலா வானவரும் தொழுந் தில்லை கண்டேனே' என்றார். **குறிப்பு** - பாடங்களைப். பாடத் திட்டத்திற் கேற்பவும் ஆசிரிய வழிகாட்டலுடனும் முறையாகப்படித்த மாணவன் சித்தியாக, தாமசகுணத்தால் வெறுவியனாய்க்கிடந்து கற்காததால் சித்தியின்றி இனிச் செய்வதறியாது வீட்டாராலும் சமுகத்தாலும் வெறுக்கப்பட்டு வறுமையுற்ற மாணவன் நிலையினை இந்த அநைசுவரியமாகிய வறுமையுடையான் நிலையோடு ஒப்பிடலாம். வாழ்விற்கு மிகவும் உபயோகமான 52ன்விரிவு முற்றும்.

53. புத்தி தத்துவத்திலிருந்து **அகங்கார தத்துவமானது** ஜீவனாகங்காரம், சம்பிரம்பா (பிரயத்தனா)கங்காரம், கர்வாகங்காரம் என்னும் மூன்று விதமாகத் தோன்றுகிறது. சத்தான ஆன்மாவிற்கு இந்த அகங்காரதத்துவ சேர்க்கையினால் விடயமானது வியவ கரிக்க (தொழிற்பட) யோக்கியமாகுந் (தகுதியாந்) தன்மையை அடைகிறது. பிராணன். அபானன், வியானன், உதானன், சமானன் என்னும் 5 வாயுக்களின் தொழிற்பாட்டிற்கு இது காரணமாதலின் ஜீவனமும் அகங்காரத்தினாலேயாம். அவ்வாறே பொருள்களின் புத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயத்தைக் காட்டிலும் வேறானதாயும், நான் என்னும் அறிவின் கருத்தாவை விடயமாகக் கொண்ட நிச்சயரூபமாயுள்ள கர்வமும் அகங்காரத்தின் காரியமே. இவற்றால் அகங்கார மென்னும் தத்துவம் சித்தித்தது. இதன் சேர்க்கையினாலேயே 'நான் இதனை யறிகிறேன்' போன்ற வியவகாரங்கள் உண்டாகின்றன.

**பாடியம்** - புத்தி தத்துவத்தால் விடயத்தை நிச்சயித்தல், இதனை யான் இன்னதென நிச்சயிப்பேனென ஒருப்பட்டு எழுந்தாலன்றி, உண்டாகாமையின், அங்ஙனம் ஒருப்பட் டெழுதற்குக் கருவியாய், புத்தியினின்றும் ஏனைய இரண்டு குணமுங் குறைந்து இராசத மிக்குத் தோன்றுவது ஆங்காரதத்துவம். புத்தியாற் துணிபு என்பது விடயத்தின் பாலும், ஆங்காரத்தால் துணிபு என்பது புருடனின்பாலும் நிற்பதால் ஆங்காரம் புத்தியின் வேறாய் வேண்டப்படும். புத்தியாற் துணிபு குடம் ஆடையென பொருள்தோறும் வேறாய், அப்பொருள் வடிவிற்றாய் நிற்பது. ஆங்காரத்தாற் றுணிபு யான் நிச்சயிப்பேனென ஒன்றாய் யானென்னும் வடிவிற்றாய் நிற்பது. ஆங்காரமானது கருவிக் காரகம் - கருவிச்செயல் ஆயினும் கலைபோல வினை முதலாதற்கு ஏதுவாய் வினைமுதற் காரகமென உபசாரமாகக் கூறப்படும். இது ஆன்மாக்கள் தோறும் பலவாம்.

1) **சாத்விகம் மிகின் தைசதம்** - இதில் மனமும் ஞானேந்திரியம் 5ம் தோன்றும், 2) **இராசதம் மிகின் வைகரி** - இதில் கன்மேந்திரியம் 5ம் தோன்றும், 3) **தாமசம் மிகின் பூதாதி** - இதில் தன்மாத்திரைகள் 5ம் தோன்றும். மனமானது வாயில் மாத்திரையால் நிர்விகற்பமாயறிந்த விடயப்பொருளில் சங்கற்ப விகற்பம் நிகழக் கருவியானது. (மிகின் - மிகுதியாயின்) 52ஆம் சுலோக, பாடிய, 'நிச்சயித்தலாவது' என்பதில் மனத்தின் செயலைக் காண்க. சங்கற்ப நினைவிற்கும் விகற்ப(ஐய) நினைவிற்கும் கால வேறுபாடன்றிப் பயன் வேறுபாடில்லாததால் மனமே இரண்டிற்குங் கருவியாம். பயன் வேறுபாடின்மையால் மனமே அவத்தை (நிலை) விசேடத்தாற் சித்தமென விருத்திப்பட்டு அங்ஙனம் (ஒன்றைத்) தூக்கிச் சிந்திக்கும். இதனால் மனத்தின் விருத்தியாகிய சித்தம் சித்தித்தது. இது ஏனைத் தத்துவங்கள் போலப் பரிணாமம் இல்லாததால் மனத்தின் வேறாக வைத்து எண்ணப்படும் தத்துவமல்ல. 'சிந்தை நினைவு வந் தையந் தரும்' என சிவப்பிரகாசத்திற் கூறப்பட்டதாவது, சித்தத்தின் தொழிற்பாடாகிய தூக்கியெண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு நிகழ்ந்து வாதனை(தடை)யினை வெளிப்படுத்துதற்காக ஐயநினைவைத் தோற்றுவித்தலாம்.

**பலதிறத்தினரான ஆசிரியர் கொள்ளும் முரணற்ற வேறுபாடுகள்-** 1) அந்தக்கரணம் மூன்றெனக் கொண்டு, குணத்தை மூலப்பகுதியின் வேறுவைத் தெண்ணி, மூலப் பகுதிக்குக் கீழ்த்தத்துவம் 24எனல். 2). குணத்தை மூலப்பகுதியுள் அடக்கி, உபகரித்தற்கு (உதவுஞ்) சிறப்புபற்றி சித்தத்தை மனத்தின் வேறுவைத்தெண்ணி, அந்தக் கரணம் நான்கெனக் கொண்டு மூலப்பகுதிக்குக் கீழ்த்தத்துவம் 24 எனல். 3) சித்தமும் மனமும் ஒன்றாக வைத்து, மூலப்பகுதியையுங் குணதத்துவத்தையும் ஒன்றாக வைத்து 24ஆவது மூலப்பகுதியெனல். **குறிப்பு** சித்தாந்த விளக்கப்படம் :- மனம் 21, அகங்காரம் 22, புத்தி 23, சித்தம் 24, பிரகிருதி 24(அ) (புருடன் 25) எனப்பட்டதும் முரணல்ல.

54. (53ன் பாடியத்திற் கண்டதே 54ம், 55ம்.) அகங்கார தத்துவமானது சாத்துவிகம், இராசதம், தாமசமெனும் பேதத்தால் மூன்றாகித் தோன்றி, தைசதம் வைகாரிகம் பௌதிகமெனப் பெயர்பெறும்.

55. சாத்துவிகம் முதலாய மேற்படி மூன்றிலிருந்து தோன்றும் மனமுதலாய 16 பற்றியதே. இவை 53ல் கூறப்பட்டன.

56. **மனம்** என்னும் தத்துவமானது இச்சையைச் சொரூபமாக உடையது. அதற்குச் சங்கற்பம் (அவதானம், மனத்துணிவு) தொழிலாகும். செவி, துவக்கு(தோல்), கண், நாக்கு, மூக்கு என்பன ஞானேந்திரியங்களாகும். பற்றுந் தொழிலாகிய சங்கற்பத்தால் இச்சை தோன்றும். தனக்கு அன்னியமானவற்றிற் பற்றும் ஆன்மாவின் கண்முதலாய பொறிகளுக்கு குடம் முதலியன புலன்களோடு சேர்க்கை இருந்தபோதும் பொறிகள் தொழிற்படும் நிலைக்களமே மனமாம். **பாடியம் - மனத்தத்துவம்** - வாதனை (தடை, வருத்தம், வேதனை)பற்றி நிகழும் சங்கற்ப விகற்பத் தொழிற்பாடு மனதிற்கே யாதலின் ஒரு குடத்தைக் காட்டி இதுவே குடமெனப் பிறரால் உணர்த்தப்பட்டவன் மற்றொரு குடத்தைக் காணும்போது அவ் வாதனையால் ஒப்புமைபற்றி இதுவும் குடமென்னுஞ் சொற்குப் பொருளென வுணர்தற்கும், முன் காணப்பட்டவனைப் பின்கண்டபோது அவனே யிவன் எனவுணர்தற்கும் ஏதுவான கருவி மனமாம். மனம் இராசாவுக்கு ஒற்றர்போல புறவிந்திரியங்களால் அறிந்ததை இடைநின்று பற்றி வாங்கி புத்தியின் எதிர் விம்பமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுமாறு கொண்டு உய்விக்கும். அகவிந்திரியமாய், அகம் புறமாகிய ஈரிடத்திலும் (காகத்தின் கண்மணிபோல) விரையுங் கதி யுடைத்தாதலின் புறவிந்திரியங்களோடு ஒப்பத் தானும் சாத்துவிக அகங்காரத்தினின்றும் அவற்றிற்கு முன் தோன்றும். இவ் விந்திரியங்கள் ஒருங்கேயன்றி ஒன்றற்கொன்று ஏதுவாய் நிகழுமென முன் கூறப்பட்டது

57. **ஞானேந்திரியங்களுக்கு** சத்தம் (ஓசை), ஸ்பரிசம் (ஊறு), ரூபம் (ஒளி), ரசம் (சுவை), கந்தம் (நாற்றம்) என்ற **விடய தன்மாத்திரைகள்** விடயமாய் அறியப்படும். இதனால் அவை முறையே காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்பவற்றிற்கு விடயங்களாகச் சித்திக்கின்றன. ஆதலால் அறிகருவிகளான ஐம்பொறியின்றி சத்தம் முதலான வற்றின் அறிவு ஆன்மாவுக்கு நிகழாது. **மாபாடியம் - சாத்துவிக அகங்காரத்தில் நின்றும் மனதின் பின் முறையால்** (ஒழுங்கிற்) தோன்றுவன செவி, துவக்கு (மெய், தோல்), நோக்கு (கண்), நாக்கு (வாய்), துண்டம் (மூக்கு). செவி முதலாயின அவ்வவ் விடங்களை அதிட்டித்து நிற்கும் இந்திரியங்களுக்கான சொற்களாம். இந்திரியம், பொறி. வாயில் என்பன ஒத்தசொற்கள். இவ்வைந்தும் ஆன்மாவின் ஞானசத்தியா லதிட்டிக்கப்பட்டுப் பொருள்களை விசேடஇயல்பு பற்றியின்றி நிர்விகற்பமாகவே அறியும்.

**கண்ணிந்திரியம் - குறிப்பு -** கண்ணிந்திரியம் பற்றிப் பாடியம் ஆழமாக, தர்க்கமாக, பௌதிக விஞ்ஞானத்துடன் பொருந்துமாறு தருவதன் சுருக்கம்). கண்ணிந்திரியஞ் **சென்றியைந்து** விடயத்தை அறிவதன்றி நின்றவாறே யறிதல் கூடாமையாற் கண்ணெனும் உறுப்பு நின்றவாறு நிற்றலேயன்றிச் சென்றிசையாததால் உறுப்பினை இந்திரியமென லாகாது. தோலின் பரிசவுணர்வு தோலைப் பொருள் **வந்தடைந்தாலே** (தொடுதல்) நிகழும். அதனால் மென்மை வன்மை புலனாகும். இதுபோலவே கண்ணிந்திரியந் தவிர்ந்த ஏனையவையுமாம். கண்ணாணது பொருளை அது இருக்கும் இடஞ் சென்றேயறியும். அதாவது கண்ணொளி பொருளிருக்கு மிடஞ் சென்று பொருளொளியோடு இயைந்தறியும். **விஞ்ஞானக் குறிப்பு** - புறப் பொருளிலுள்ள சுவை ஒளி ஊறு ஓசை நாற்ற மென்பன அக இந்திரியங்களில் அவற்றைக் கவரும்படியான அதே சுவை ஒளி முதலாயின இருந்தால் மட்டுமே இயைபு நிகழ அவைபற்றிய அறிவும் நிகழும். உதாரணம் இரசமான பழத்தைக் கண்ட நாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் ஊறல். பழரசமும் நாநீரும்(திரவமாய்) இயைதல் வேண்டும். அதுபோலக் கண்ணொளியுடன் பொருளொளி அல்லது அதன்மீது ஒளித் தெறிப்பினாலாம் பிரகாசம் இயையவேண்டும். கண்ணொளி இழந்த குருடன் புறக்கண் இருந்தும் பாரான். (பின்னாலுள்ளதைக் கண் நேரேயன்றிக் கண்ணாடித் தெறிப்பால் அறியும்.)

**கண்ணிந்திரியம்** தனக்கிடமான கண்மணி இருட்டறையில் நிற்பினும் விளக்கொளி கலந்த பொருளை இயைந்து காணுதல் :- கண்ணிந்திரியஞ் சாத்விக அகங்காரத்தில் நின்றும் செவிமுதலிய இந்திரியங்களினும் அதிகமாய்ச் சத்துவகுணத்தால் மிக்குப் பரிணமித்தலின் ஒளியுடைமையால் இருளிடத்து நிற்பினும் (விளக்கொளிபோல) தன் னொளியாற் புறத்திற் சென்று பொருள்களை வியாபித்து இயைந்தறிதல் கூடும். இமை மூடும்போது புறத்திற் சென்ற கண்ணொளி விரைவிற் கெட்டழிய (தன்னுள் ஒடுங்கிப்போக) பார்வை நிகழாது.

**குறிப்பு** : ஐம்புலனாற் பெறும் அறிவிற் கண்ணிந்திரிய அறிவே விசேடமுடைத்து என்பதனைச் சேக்கிழார், 'ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும், சிந்தையே யாகக் குணம் ஒருமூன்றும் திருந்துசாத் துவிகமே யாக, இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின், வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.' என சுந்தரர் சிவனாடல் உகந்தமையைக் கூறுகின்றார். இதில் வரும் கண்ணிந்திரியம் சாத்துவிக அகங்காரத்தினின்றும் தோன்றியவற்றுள் சத்வகுணத்தான் மிக்குப் பரிணமித்ததாலும், சிந்தையும் அத்தகைய மனத்தின் விருத்தி யென்பதனாலும் சாத்துவிகம் எல்லாவற்றினும் மேம்படவே ஆடற்றரிசனம் நிகழ்கிறது. நாம் சாத்வீக குணங்களுக்கே முக்கியங்கொடுத்து வாழப்பழக வேண்டும். **இருளுண்மை** (பாடிய விரிவின் சுருக்கம்) முற்பந்தியிற் கண்டபடி கண்ணானது, இருளில் நிற்பினும் அது சென்று இயைந்தறியப் புற ஒளி (பொருள்மீது படுதல் அல்லது பொருள் தானாகவே ஒளிரல்) வேண்டும். காரணம் - கண், ஏனைய குணங் குறைந்து, சத்வகுணமாய்ப் பரிணமிக்கையில், அப்பகுதியின் எஞ்சிநின்ற தமோகுணக் கூறாகிய சாரம் இருளெனப் பரிணமித்துக் குற்றமாய் உடன் தோன்றிக் கண்ணொளியைத் தடைசெய்து நிற்றலின், தமோகுண மிக்குப் பரிணமித்த கூறாகிய தாமதாகங்காரத்தில் நின்றும் சத்துவ குணமாய்ப் பரிணமித்துத் தனக்குத் துணையாகிய பூதவொளியின் உபகாரத்தை வேண்டிநிற்கும். இனி, 'பாரினில் ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி, நீரினில் நான்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்தாய் போற்றி' யென இங்ஙனம் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் ஆகியவற்றில் இறைவன் 1, 2, 3, 4, 5 என்ற குணங்களுடன் **பஞ்சபூதங்களில் சூரிய சந்திர ஆன்மா உட்பட) அட்டமா மூர்த்தியாயுளன் என்பதன் விளக்கம்** :- ஆகாயத்திற்கு சத்தகுணம் (ஒருகுணம்), அதனுடன் பரிசம் சேர 2 குணங்கள் வாயுவுக்கு, அவ்வாறே, தேயுவுக்கு ரூபம் சேர 3 குணங்கள், அப்புவிற்கு ரசம் சேர 4 குணங்கள், பிருதிவிக்கு கந்தம் சேர 5 குணங்கள். விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்தில் அடங்கும்.

58. சத்தம் முதலியவற்றை அறியும் அறிவானது முறையே (சத்தத்தைச் செவியறியும் போன்ற) ஞானேந்திரியங்களின் தொழில்கள். இனி, **கன்மேந்திரியங்களாவன :** வாக்கு (வாய்), பாதம் (கால்), பாணி (கை), பாயு (கழிவிடம், ஆசனம்), உபத்தம் (மகிழிடம், குறி) என்பன. இந்திரியங்கள் பூதகாரியமாயின், உதாரணமாக, கண்ணிந்திரியமானது அக்கினியின் குணமாக ரூபத்தை மாத்திரம் அறியவேண்டும். அவ்வாறின்றி வேறு பூதங்களையும் அவற்றின் குணங்களையும் அறிவதால் அது அக்கினியின் காரியமாகாது. **பாடியம்** - இராசத ஆங்காரத்திற் (தொழிலாற்றும் கருவியாய்த்) தோன்றும் **கன்மேந்திரியம்** வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என ஐந்தாம். இவையும் (ஞானேந்திரியப் பெயர் போல) அவ்வவ்வுறுப்பின் பெயர், அவ்வவற்றை அதிட்டிக்கும் இந்திரியங்களுக்கு ஆகுபெயராயின. ஞானேந்திரியங்கள் ஆன்மாவின் ஞானசத்தியை விளக்க, கன்மேந்திரியங்கள் அதன் கிரியாசத்தியை விளக்கும். கன்மம், கர்மம், கிரியை என்பன ஒத்தசொற்கள். ஞான, கிரியாசத்திகள் இயற்கையால் வேறல்லவாயினும் செயற்கையால் வேறாதலின் கருவிகளும் வேறாதல் வேண்டும். ஆன்மஞான மொன்றே செவி முதலிய ஐந்தாதல்போல அதன் கிரியாசத்தி யொன்றே வாக்கு முதலிய ஐந்தாம். **குறிப்பு-** வாய் ஞானேந்திரியத்தில் ஒன்று. வாக்கு (நாக்கு) கன்மேந்திரியத்தில் ஒன்று. வாயினால் நூலோதி ஞானம் நிகழும். நாக்கினால் (சுவைத்தல், வசனித்தல் முதலிய) கன்மம் நிகழும். வாய், வாக்கு என்பவற்றிற்கு வாய் பொறி-உறுப்பு. ஆயினும் அவை வெவ்வேறான இந்திரியங்களாம்.

**இந்திரியங்கள் உடலெங்கனும் வியாபகமாய் இருத்தலுக்கு உதாரணம் :** கை கொடுத்தலை, ஏற்றலைச் செய்யும்போது கண் அதற்கேற்பப் புருவம் நெரிக்கும். (உடல் மொழி.) இவ்வாறே உடம்பில் நிகழும் எல்லாத் தொழில்களும் வசனமுதலிய ஐந்திலடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு-** வாக்கெனும் கன்மேந்திரியத்தில் நிகழுவது வசனமென்ற விடய தன்மாத்திரை. இதுபோலவே ஏனையவுமாம். ஞானேந்திரியங்கள் போலக் கன்மேந்திரியங்களும் அவ்வவுறுப்புகளின் வேறாய் அவற்றையதிட்டித்து நிற்கும். 52ம் சுலோகத்தில் **புத்தி நிச்சயமாவது என்ற பாடியம் கூறியதன் தொடர்பாக அதில் கன்மேந்திரியங்களின் பயன்:** புத்தி நிச்சயித்த மாத்திரையே (போதே) சுகதுக்க மோகரூபமாய் ஆன்மாவிற்குப் போக்கியமாதலின் கன்மேந்திரியம் வேண்டாமென்பதில்லை. **காரணம்:** சிறுபான்மை அங்ஙனம் நிச்சயித்த மாத்திரையே போக்கியமாம் ஆயினும், நிச்சயித்த பொருள் மீள ஆங்காரத்தால் யான் நிச்சயித்தேன் எனவும், யானிதனைச் செய்வேனெனவும் ஒருப்பட்டெழுந்து செய்யுமாறு மனத்தாற் சங்கற்ப விகற்பங்கள் செய்து எண்ணியபின் மீள ஞானேந்திரியங்களால் அறிந்து கன்மேந்திரியங்களாற் காரியப்பட்டு மீளவும் முறையாலே (முன்போல) புத்தி தத்துவத்தின் வந்து போக்கியமாதலே பெரும்பான்மை யாதலின் கன்மேந்திரியம் வேண்டப்படும். ஞானக் கிரியைகளை விளக்கும் புத்திதத்துவ முதலிய கருவிகளின் தொழிற்பாடு சந்தானமாய் (தொடராய்)க் கண(நிமிட)ந்தோறும் வேறுபட்டு நிகழ்தலின் அவ்வாறு அநுபவஞானமும் சந்தானமாய் விளங்கும். ஆதலின் புத்தர் கூறும் 'ஞானம் கணபங்கம்' (நிமிடந்தோறும் அழியும்) என்பதல்ல, அது, மேறிகூறியபடி தொடரானது என்பதறிக. போக்கியம்- அனுபவம்.

59 பேசுதல், ஏற்றல், போதல், மலநீக்குதல், ஆனந்தம் என்பன கன்மேந்திரியங்களின் தொழில்கள். அந்த(உள்)க் கரணமானது புத்தி அகங்காரம் சித்தம் என மூன்று விதமாம்.

(**குறிப்பு** சித்தாந்த நூல்கள் பலவும் மனத்தையுஞ் சேர்த்து அந்தக்கரணம் நாலென்பர்). பாடியம் - **தன்மாத்திரை**:- தாமத அகங்காரத்திற் தோன்றும் தன்மாத்திரை ஐந்தாவன சத்தம் (ஓசை), பரிசம் (ஊறு), உருவம் (ரூபம், ஒளி)), ரசம் (சுவை), கந்தம் (நாற்றம்) என்பன. இவ்வைந்தும் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் இரண்டிற்கும் முறையே இடமாய்த், தேரூர்வானுக்குத் தேர்போல அவை அறிதலும் செய்தலுமாகிய தத்தம் தொழிற்பாட்டினைச் செய்வதால் மதுகையை, வலியை, விளைத்து நிற்றலுக்கே கருவியாம். ஆதலின் தாமத அகங்காரத்திற் தோன்றியமை பொருத்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்மாத்திரை இயல்பு விபரம்** :-1) சத்தம் - வல்லோசை, மெல்லோசை முதலியவற்றை உள்ளடக்கி. பொதுவில் சூக்குமமாய் நிற்கும் ஓசை 2) பரிசம் - அவ்வோசையுடன் தட்ப வெப்ப முதலிய பரிசங்களை உள்ளடக்கி பொதுமையில் நிற்கும் பரிசம். தொடர்ந்தும் இவ்வாறே ரூபமுதலியன தமக்கு முன்வரும் தன்மாத்திரைகளின் இயல்புகளையும் தம் இயல்புகளையும் உள்ளடக்கி நிற்றலை உய்த்துணர்க. இது 'பாரினில் ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி' என்றதன் முன்கண்ட விளக்கம் தொடர்பாகச் சிந்திக்கத் தகுந்தது. இத் தன்மாத்திரைகள் ஆகாயமுதலிய பஞ்சபூதங்களுக்கு முதற்காரணமாம். தன்மாத்திரைகளுக்கும் பூதங்களுக்கும் தம்முள் வேற்றுமை முளையும் மரமும் போன்ற சூக்கும, தூல நிலைகளாம். இத் தன்மாத்திரைகள் தாமதாகங்காரத்தில் இருந்து முறையே ஒன்றன்பின் ஒன்றாகத் தொன்றுகையில் ஓரோவொரு குணம் அதிகமாகத் தோன்றுதலின் அவ்வதிக குணப் பெயரே பற்றி பரிச, உருவ, இரச, கந்த தன்மாத்திரைகள் எனப் பெயர் பெறும்.

60. வெளியிந்திரியமானது மறுபடியும் கன்மேந்திரியம் ஞானேந்திரிய மென்னும் வேறுபாட்டாற் பத்தாகின்றது. தன்மாத்திரைகளில் நின்றும் அவற்றின் காரியமாக ஆகாய முதற் பஞ்சபூதங்கள் தோன்றுகின்றன.

61. (அறுபதுடனானது) சப்தம் முதலியவற்றின் (காரிய காரணமாய்) சூக்குமரூபங்கள் ஐந்து **தன்மாத்திரைகளாகக்** கூறப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு குண மிகுதியால் ஆகாய முதலிய பஞ்சபூதங்கள் தோன்றின. தன்தன் குணவிசேடங்களைக் காட்டாமல் **சூக்குமங்களாய் பூதங்களுக்குக் காரணங்களாக மாத்திரம் இருப்பதால் தன்மாத்திரை யெனப்படும்.** இவற்றிலிருந்த நமது வெளியிந்திரியங்களால் அறியப்படும் குணங்களோடு கூடினமையால் தூலங்களான பஞ்சபூதங்கள் தோன்றின. அந்த ஆகாய முதலியவை சப்தம் முதலிய ஒவ்வொரு குணங்களை அதிகமாகவுடையன. இது முன் கண்டவாறுபோல ஆகாயம், சப்தமெனும் ஒரு குணமுடையது, வாயு, சத்தமும், பரிசமும் என 2, தேயு (அக்கினி) சப்தமும் பரிசமும் ரூபமும் என 3, நீர் இம்மூன்றுடன் இரதமும் என 4, மண் இவற்றுடன் கந்தமுமாக 5 குணமுடைத்து. இதில் உதாரணமாக **சத்தம் 5 பூதங்களிலும் உள்ளதாதல்** : ஆகாயத்தில் எதிரொலி, வாயுவில் சகசக, அக்கினியில் தமதம, நீரில் சலசல, மண்ணில் கடகட வென்பதாம். இவ்வாறே பரிசம் வாயு முதல் நான்கில், ரூபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி முதல் மூன்றில், ரதம் ஜலம் முதலான இரண்டில், கந்தம் பிருதிவியிலும் விளங்கும். (பாடியத்திற் கூறியதை 57ற் காண்க).

62 **பூதங்களின் தொழில்களாவன:** ஆகாயம் யாவற்றிற்கும் இடங்கொடுக்கும், வாயு பொருள்களைத் திரட்டிச்சேர்க்கும், அக்கினி பாகஞ்செய்யும், ஜலம் கட்டிப்படுத்தும், பூமி தாங்கும், தரிக்கும். 63.தன்மாத்திரையாயும், பூதரூபமாயுமுள்ள காரியரூபமான தத்துவம் பத்தும் இந்திரியங்களோடு சேர்ந்து தொழிலாற்றும். அந்த இந்திரியங்களும் தாமே தொழிலாற்றும் சாமர்த்தியம் இன்மையால் இப்பத்துக் காரியங்களை நிலைக்களனாகக் கொண்டு தொழிற்படும்.

64. **தத்துவங்கள் எவற்றினிடத்து அந்நுவயமாகின்றன வென்பது :-** அந்நுவயம் என்பது காரணகாரிய சம்பந்தத்தை, உடம்பாட்டைக் குறிக்குஞ் சொல். முதலாவதான சிவதத்துவமெனும் 5 தத்தவங்களுக்கும் சித்திற்கு உபகரிக்கும் - உதவுந்தன்மை யுண்மையால் சித்தினோடு அந்நுவயம். சித்து - அறிவுடைப் பொருள் என்பதனை சிவம் அல்லது சிவமாந்தன்மை பெற்ற முத்தான்மா வெனக்கொள்க. ஏனைய மாயை முதலான ஏழு சுத்தாசுத்தம், மிச்சிரம், அல்லது வித்யாதத்தவம் எனும் தத்துவங்களுக்கோ வெனில் சுத்தமும் அசுத்தமும் என **இருவிதமான அந்நுவயமுண்டு.**

**விளக்கம்: 1.** இதுபசு இதுபசு எனும் தொடர் காரியமான ஞானத்திற்குக் காரணமானது அந்நுவயம் எனப்படும். 2. முதலாவது சுத்ததத்துவம் ஐந்தும் சிவத்தினுடைய சர்வஞ்ஞத்துவம்- முற்றுமுணர்தல், சர்வ கர்த்திருத்துவம்- முடிவிலாற்றல் என்பவற்றின் பிரகாசத்திற்குக் காரணமாய் இருத்தல்பற்றி உயிருக்கு உபகரித்தலால் சிவத்தைப்போற் சுத்தங்களாம். ஆயினும் அவை அசேதனங்கள். **குறிப்பு** 1) தத்து வங்கள் உயிரற்ற அசேதனங்கள். எனினும் சத்தாகிய சிவத்தின் அதிட்டிப்பினால் சேதனம் போலாகும்.). ஏனைய அசுத்த தத்துவங்களான மாயைமுதற் புருடதத்துவம் வரையுள்ள ஏழும் உயிரின் ஏகதேச அறிவிற்குக் காரணமாய் நிற்பதுபற்றி உயிருக்கு உபகரிப்பதாலும், சூக்குமதேகத்தின் வழியாகக் குணசம்பந்தத்தால் சுகதுக்க மோகங்களை யுண்டுபண்ணுவதாலும் இருவிதமாய்ச் சித்தினுடனும் அசித்தினுடனும் சமானமாயிருத்தலால் **சித்தசித்தாம். குறிப்பு** *2)* சைவசித்தாந்த நூல் கள் கடைப்பிடிக்கும் பொருள்நிச்சயம் பற்றிய ஒழுங்கு பதி, பாசம், பசு என்றவாறமைதலாற் பசுவானது, சித்து - அசித்து அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தசித்து என்ற விளக்கம் பாசநிர்ணயத்தின் பின்னால் வரும் 3ம் சூத்திரமாம். தத்துவப்பிரகாசிகை தரும் இச்சூத்திரங்கள் தத்துவம் பற்றி (மாயைபற்றி) யாதலால் ஆன்மா பற்றிய பாடிய விளக்கம் இதிற் தரப்படவில்லை,

65. அவ்வியக்தம் - குணம் வெளிப்படாதது, மூலப்பிரகிருதி முதலிய எல்லாப் பிருதிவி ஈறாகக் கீழுள்ள தத்துவங்களுக்கும் குண சம்பந்தத்தால் சுக, துக்க, மோகரூபமாய் இருத்தல்பற்றி அவை அசுத்தத்தோடு ஒத்தலால் அசுத்தமென்க.

66. **பூதங்களிடத்தும் தன்மாத்திரைகளிடத்தும் உள்ள விசேடம் :** தன்மாத்திரைகளுக்கும் பூதங்களுக்கும் சப்தம் முதலிய குணங்களின் ஒற்றுமையும் அவைகள் காரியங்கள் என்று சொல்லப்படுவதில் ஒற்றுமையும் இருத்தலால் அவற்றிற்கிடையில் அந்நுவயமுண்டு. இது அங்காங்கி பாவம் என்றும் குணகுணித் தொடர்பு என்றுங் கூறப்படும். **பாடியம் - குணகுணிகளின் இயல்பு : குணரூபமாகிய தன்மாத்திரைகள் குணிரூபமாகிய ஆகாய முதலியவற்றிற்குக் காரணமாதல்** : புத்தி முதல் நிலமீறாகிய உலகமெல்லாம் முக்குணத்தின் காரியம். (மூலப்பகுதி அல்லது முக்குணக் கூட்டிலிருந்தே அவை தோன்றியதெனக் கண்டோம்). உலகமெலாம் சாத்துவிக குணமயமாகிய பிரகாசரூபமுஞ், சாந்தமுஞ், சுகரூபமும், இராசத குணமயமாகிய பிரவிருத்தி ரூபமும், கோரரூபமுந், துக்கரூபமும், தாமத குணமயமாகிய நியம ரூபமும், மூட ரூபமும், மோக ரூபமுமேயாய் நிற்றலின், இத்தன்மை அவற்றிற்கு மூலப் பகுதியி னாலேயாம். மரங்கள் சேர்ந்து காடானது போலவும், மனிதர் திரண்டு படையானது போலவும் குணங்கள் தம்முட்டிரண்டு குணியெனவும் திரவியமெனவும் பெயர்பெறும். ஆதலின் குணியென வேறில்லை. எனவே தன்மாத்திரையாகிய சப்தம் முதலிய சூக்குமங்களில் நின்றும் ஆகாயம் முதலிய பெரும் பூதங்கள் தோன்றுமென்பது முறையேயாம். அவயவம் அவயவி யென்பதும் இத்தன்மைத்தாம்.

**முடிவாக,** சத்தமுதல் கந்தமீறாகிய ஐந்து குணங்களும் பகுப்பின்றிப் பொதுமையில் நின்ற அவத்தை கந்த தன்மாத்திரை என்பதும், அதேமுறையில் சத்தமுதல் ரதம் ஈறாகிய நான்கும் நிற்றல் இரததன்மாத்திரை, சத்தமுதல் உருவம் ஈறான மூன்றும் நிற்றல் உருவதன்மாத்திரை, சத்தமும் பரிசமும் நிற்றல் பரிசதன்மாத்திரை, சத்தம் வல்லோசை, மெல்லோசையெனப் பகுப்பின்றிப் பொதுமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற அவத்தை சத்த தன்மாத்திரை யெனவும் அறிக. (ஆகாயமுதலிய பூதங்களை விளக்குதலை பாடியத்திற் காண்க.)

இங்ஙனம் சிவமுதல் நிலமீறான 36 தத்துவங்கட்கும் தோற்ற முறைமையும், அவற்றின் தொழிற்பாடும், அவற்றுள் ஒன்றையின்றி போகநுகர்ச்சி அமையாமையின், அவை மூவகைப்படும் எனவும் அறிக. அவ்வகைகள்:- 1. சுத்தம், பிரேரககாண்டம், சிவதத்துவம். 2. மிச்சிரம், போசயித்திருகாண்டம், வித்தியாதத்துவம், 3. அசுத்தம், போக்கியகாண்டம், ஆன்மதத்துவம். இவை முறையே 5, 7, 24 என்ற எண்ணிக்கையுடைய தத்துவங்களைக் கொண்டிருக்கும். ஆக தத்துவங்கள் 36ம் ஒடுங்கும்போது தோன்றின முறைமையே தத்தங் காரணங்களில் ஒடுங்கும்.

67. பிருதிவி முதலிய தத்துவக் கூட்டங்கள் தத்தம் காரணங்களில் முறையே ஒடுங்கி முடிவில் மாயையில் ஒடுங்கும். (மேற்கண்டது)
68. மாயைக்கு மேற்பட்ட (நிவிர்த்திமுதலிய ஐந்து) கலைகளினால் விருத்தியடைந்த சுத்தாத்துவாவானது மகாமாயையில் ஒடுங்கும். இந்த மகாமாயையும் சிவன் அதிட்டானமாயிருக்க (அதிட்டிப்பதற்கு) காரணரூபமான 'தான்' மாத்திரமாய் இருக்கின்றது.

**அவ் வொடுங்கு முறையாவது, கீழ்த் தத்துவங்களிலிருந்து மேலாக** கந்தத்தில் பூமியும், இரதத்தில் ஜலமும், ரூபத்தில் அக்கினியும், பரிசத்தில் வாயுவும், சப்தத்தில் ஆகாயமும், தாமதாகங்காரத்தில் தன்மாத்திரைகளும், இராசத அகங்காரத்தில் கன்மேந்திரியங்களும், சாத்துவிக அகங்காரத்தில் ஞானேந்திரியங்களோடு மனமும், புத்தியில் மூவகை அகங்காரங்களும், குணங்களிற் புத்தியும், குணசமூகம் அவ்வியக்தமெனும் பிரகிருதிமாயையிலும் ஒடுங்கும். அராகம் வித்தை என்பன கலையிலும், புருடதத்துவம், காலம் நியதி கலை என்பன மாயையிலும், அம் மாயை வித்தியேசுவரரிடத்திலும், வித்தியேசுவரர் சதாசிவரிடத்திலும். சதாசிவர் சத்தியினிடத்திலும், சத்தி சிவனிடத்திலும், சிவதத்துவம் விந்துவிலும் ஒடுங்கும். அவ்விடத்தில் சிவதத்துவம் என்பது சாந்திகலையின் மேலுள்ள சாந்தியதீத புவனத்தைக் குறிக்கும். மலத்தினால் மறைக்கப்பட்ட உயிர்களிடத்துள்ள அசுத்தமாயையும் சிவன் அதிட்டித்து நிற்கக் காரணரூபமாய் நிற்கின்றது.

**மிருகேந்திரம்** :- 1) சகலாவஸ்தையைப் போலக் கேவலாவஸ்தையிலும் (ஒடுங்கியபின் மீளப்படைக்கும் வரையான நிலையிலும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலபரிபாகத்திற்குத் தக்கபடி அவரவர்க்கு அறிவித்தும், மறைப்பாற்றலால் அவரவரைத் தடுத்தும், கர்மிகளின் கர்மங்களைப் பக்குவமாகச் செய்தும், மாயாசத்திகளைத் தோற்றுதற் குரியதாய்ச் செய்தும் எல்லா உயிர் வர்க்கங்களையும் முறையே பார்த்துக் கொண்டும் இருக்கின்றார். 2) சம்சாரத்தினால் துன்பமடைந்த சம்சாரிகளுக்கு இளைப்பு நீக்கத்தின் பொருட்டுச் சகல உயிர்களுக்கும் அநுக்கிரக கர்த்தாவான பரமசிவன் போகசாதனமான தநுகரணாதிகளை ஒடுக்கி ஆத்மாக்களுடன்கூட மாயையில் ஒடுங்கச் செய்து அந்த மாயையினையும் ஆசிரயித்துக் கொண்டிருக்கிறார். (ஆசிரயித்தல் - அவற்றிற்குத் தான் கொழுகொம்பு போல் ஆதாரமாய் இருத்தல்).

69. மகாப்பிரளயத்தில் மாயை. ஆன்மா, சிவம் என்னும் மூன்றும் எஞ்சி நிற்கின்றன. திரும்பவும் அவை முன்போலச் சிருட்டியிற் தொழிற்படுகின்றன என்பதாம். **விளக்கம்:** இம் மகாப்பிரளயம் குண தத்துவத்தை முடிவாக உடையதாயுள்ள பிரளயம். இதில் எல்லாப் பொருள்களும் ஒடுங்கும். (மூன்றுலகத்தையும் முடிவாகவுடைய மத்திமப் பிரளயமென ஒன்றுளது). மகாப்பிரளயத்தில் வித்தியேசுரர் முத்தியடைகின்றனர். மாயையென்றதால், அது சுத்த, அசுத்த மிரண்டுமாம். ஆன்மாவென்றதால் மலசம்பந்தமான யாவுமாம். சிவமென்றதால் சிற்சத்தியோடு சமவாய சம்பந்தத்தாற் கூடிய சிவனும், முத்தான்மாக்களுமாம். இனி, **மகாப்பிரளயப் பலன் கூறுமாறு :-**

70, 71. (மிருகேந்திரம் 2ல் கூறியது போன்று) மகாப்பிரளயத்தைச் செய்தபின் உயிர்களிடத்து வைத்த கருணையால் திரும்பவும் இவ்வுலகில் சிருட்டியைச் செய்து அந்த உயிர்களுடைய கன்மங்களை முதிர்வித்துப் பக்குவப்படுத்துகின்றார். புனருற்பவமும் முத்தியின் பொருட்டேயாம். ஒடுக்கமென்பது, இளைப்பாற்றல் கன்மபரிபாகம், மாயைகளுக்குச் சத்தியுண்டுபண்ணல் என்பவற்றிற்காம். ஆன்மாக்களின் கன்மங்களை முதிர்வித்துப் பாகஞ்செய்தலாவது, முன்னைய கன்மங்களை பக்குவ முறையில் அனுபவித்தற்கு யோக்கியமாக - தகுதியாகக் கூடும்படி செய்கின்றார் என்பதே.

72. பின்னர் முறையே மலபரிபாக முண்டானவுடன் போகத்தால் கன்மத்தை நாசஞ்செய்து **தீக்கையென்னும் பெயருடைய தன் சத்தியால்** கருணாமூர்த்தியாகிய பரமசிவன் எல்லா உயிர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தினின்றும் விடுவிக்கின்றார். (தீக்கையெனும் பகுதியிலுங் காண்க). உடனே முத்தி தரக்கூடிய சத்தியோ நிர்வாண தீக்கை கூடும்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் சரீரத்திற்குக் காரணமாயும் பயனைத் தருவதாயுமுள்ள பிராரத்த கன்மநாசம் இங்ஙனமாகச் சித்தித்தது.

73. **எல்லாவுயிர்களுக்கும் போகத்தைக் கொடுத்துக்கொண்டு பிரளய காலம்வரை யாதொன்றிருக்கின்றதோ அது தத்துவம்** எனப்படும். அதனாற் சரீரம், குடம் முதலியன தத்துவமாவதில்லை. பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம், கந்தம் ரசம் ரூபம் பரிசம் சப்தங்களையும், உபத்தம் ஆசனம் கை வாக்கு கால். மூக்கு நாக்கு கண் தோல் காது மனம் இவற்றையும், கர்வம் புத்தி குணங்கள் அராகம் புருடன் வித்தை நியதி கலை காலம் அசுத்தமாயை சுத்தவித்தை ஈஸ்வரன் சதாசிவன் சத்தி சிவம் (36) இவற்றையுந் துதிக்கின்றேன். (மாயை உயிரை மயக்கினும், ஆணவ இருளில் இருந்த உயிருக்கு விடிவாமளவும் விளக்குப்போல சற்றே அறிவைத் தருவதால் அது துதிக்கப்படலாம்)

74. தத்துவத்திற்குக் காரணமாகவும், பூரணஞ் செய்வதாகவும் யாதொரு தத்துவம் இருக்கின்றதோ அதிலிருந்து தத்துவங்கள் தோன்றுகின்றன. எல்லாத் தத்துவங்களுக்கும் வரையறை சொல்லப்பட்டது.

75,76. யாதொரு போஜதேவருடைய மனதில் எல்லாத் தத்துவ சமூகமும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் பிரகாசித்ததோ அத்தகைய போஜதேவர் சிவாகமங்களின் சாரமான ஒப்பற்ற தத்துவப்பிரகாசம் என்னும் நூலைச் செய்தார். (தத்துவப்பிரகாசம் முற்றிற்று). மன்னர் போஜதேவர் வாழ்க.

7.10.16 **சித்தாந்த விளக்கப்படம் - சுருங்கிய தொகுப்பு வடிவம்** இதனைச் சிவத்திருவடிவத் தொகுப்பு அட்டவணையுடன் சிந்திக்க. மேல் விபரங்கள் மெய்கண்டசாத்திரங்கள், அஷ்டப்பிரகடனம், சிவத்திருமன்ற வெளியீடான சிவத்திருவடிவங்கள் என்பவற்றிற் காண்க.

**குடிலை** - பிரணவம் 36 தத்துவங்களை அடக்கியுள்ளது. அடைப்புக் குறியிலுள்ள எண் பிருதிவி (நிலம்) முதலாகக் கொண்ட தத்துவங்களின் இலக்கம். இது ஒடுக்கமுறை அல்லது அவரோக ஒழுக்கு ஆகும். படைப்பு முறையாயின் இலக்கங்கள் நாதம் 1, நிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36 என மாறிவரும். இவ்வத்துவா விரிவுகள், இலிங்கத்தில், மூவகை ஆன்மாக்களில், ஆறு அத்துவாக்களில் (ஆன்ம ஈடேற்ற வழிகளில்) வருகின்றன. ஆறு கலைகளில் அதனதன் அதிதெய்வங்கள், அதற்காய மண்டலங்கள், தத்துவங்கள், புவனங்கள், புவனவாசிகள் ஆதியனவும் தரப்படுகின்றன. முன் விரிவாகக்கண்ட தத்துவப்பிரகாசிகைச்சாரம் இது. (நன்கு விளங்கிக் கணிதவாய்ப்பாடு போலப் பவிலவேண்டிய பகுதி)

1.**பரப்பிரகிருதி சுத்தமாயை**, லிங்கத்தண்டு, விஞ்ஞானகலர், சுத்தாத்துவா. **இதன் விரிவு** :- 1.1 சாந்தியதீதகலை, சதாசிவர், ஆகாச மண்டலம், தத்துவங்கள் :- நாதம்(36), விந்து(35). புவனம் :- 209 ஆம் சதாசிவபுவனத்திலிருந்து 224ஆம் அநாசிருத புவனம் வரை (ஆக 16)

1.2 சாந்திகலை, மஹேஸ்வரன். வாயுமண்டலம். அணுசதாசிவர், அட்டவித்தியேசுரர், சப்தகோடி மகாமந்திரர். அபக்குவமல விஞ்ஞான கலர். இறையாணைப்படி பஞ்சகிருத்தியம் ஆற்றுபவர். தத்துவங்கள்:- சாதாக்கியம்(34), ஈச்சுரம்(33), சுத்தவித்தை(32). புவனங்கள் : 192 ஆம் வாமை புவனத்திலிருந்து 208ஆம் அநந்தபுவனம் வரை (ஆக 17)

2. **சூக்குமப்பிரகிருதி (அசுத்தமாயை),** ஆவுடையார் மேற்பாகம், பிரளயாகலர், வித்யாகலை, உருத்திரன், தேயுமண்டலம், மிச்சிராத்துவா, மண்டலர். தத்துவங்கள் :- மாயை (31), காலம் (30), நியதி (29), கலை (28), வித்தை (27), அராகம் (26), புருடன் (25), புவனங்கள் 165 ஆம் வாமபுவனத்திலிருந்த 191ஆம் புவனேசபுவனம் வரை27.

3. **தூல அல்லது மூலப்பிரகிருதி மாயை.** 3. (அ) ஆவுடையார் கீழ்ப்பாகம், சகலர், பிரதிட்டாகலை. விட்டுணு, அப்புமண்டலம், அசுத்தாத்துவா, தத்துவங்கள் :- (பிரகிருதியிலிருந்து வரும் மறைந்துள்ள அந்தக்கரணங்கள்) சித்தம் (24), புத்தி (23). அகங்காரம் (22). மனம் (21). (ஞானேந்திரியங்கள், அறிகருவிகள்) சுரேத்திரம் (செவி) (20), துவக்கு (மெய், தோல்) (19), சட்சு (கண்) (18), சிங்குவை (வாய், நா) (17), ஆக்கிரணம் (மூக்கு) (16). (கன்மேந்திரியங்கள், செய்கருவிகள்) வாக்கு (சொல்லும் வாய்) (15). பாதம் (செல்லுங் கால்) (14), பாணி (வழங்குங் கை) (13), பாயு (கழிவிடம்) (12), உபத்தம் (மகிழிடம்) (11) (பூத தன்மாத்திரைகள் பஞ்சபூத நுட்பங்கள், இவையே கன்மேந்திரியங்களுக்காய விடய தன்மாத்திரைகளுமாம்) - ஸப்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10), பரிசம் (9), ரூபம் (8), இரசம் (7), கந்தம் (6). (பஞ்சபூதங்கள்) ஆகாயம் (5), வாயு (4), தேயு (3), அப்பு (2), புவனம் :- 109ஆம் அமரேச புவனத்திலிருந்து 164ஆம் ஸ்ரீகண்டபுவனம் வரை, (ஆக 56) (நூலிறுதி விளக்கப்படம் திருவாவடுதுறை ஆதீன வெளியீடு பார்க்க)

(ஆ) ஆவுடையாரின் அடிப்பாகம். சகலர், நிவர்த்திகலை, பிரமா. பிருதிவி மண்டலம், அசுத்தாத்தவா. தத்துவம் :- பிருதிவி (1) புவனங்கள்:- பிரமாண்டத்தில் காலாக்கினி முதலிய 6 புவனங்கள், 10 (எட்டுத்திக்கு, ஆகாசம், பாதாளம்) திக்குகளிலும் பத்தாக 100 புவனங்கள். அதன் மேலாக வீரபத்திரர் 1, காளி 1 (ஆக108). மூவகை மாயைகளுக்கும், முழுவதுமாக, 224 புவனங்கள். தத்துவங்கள் வகுத்தும் தொகுத்தும் தரப்பட்டன.

**7.11 சைவம் சிவசம்பந்தம்.** (இதுவே சைவ வரைபு). **இந்துப் போர்வையில் சைவர் நெறிபிறழல்** : பக்தி என்பதை பிழையாக விளங்கி (அல்லது பிழையாக விளக்கி) கோயில்வணக்கம் ஒரு மூடநம்பிக்கையென உலகளாவிய ரீதியில் இந்துப் பிரச்சாரஞ் செய்யும் வடநாட்டு நபர்களை மெய்ச்சைவர் உணர்வர். நம்மவரும் அவர்களின் ஆடம்பர ஆங்கில வசனங்களில் மயங்கி ஆதரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. An ideal Gift of Knowledge to Your Friends and Relations' – Recorded Lecture in English என்ற பெயரில் இறுவட்டுக்கள் விற்கப்படுகின்றன. அடிப்படைத் தர்மங்களை மட்டுமே விளக்கி உயிர்களின் பிறவித்துயர் போக்கும் பதி பசு பாசம் அறிந்து பயன்பெறும் சைவநெறிக்கு அண்மையிலும் வராது, சமயப்புதுமை செய்கிறோமென மயங்கி, மயக்குகின்றனர். பரம்பரை வாணிபத்தொழில் புரியும் சமூகம் பெரும்பாலும் நகரங்களையண்டி உயர்கல்வி நிறுவனங்களிற் தம் பிள்ளைகளை ஆங்கிலத்திற் கற்பிக்கின்றனர்.செல்வர் பிள்ளைகளை தாய்ச்சமய அறிவினை வழங்காத ஆங்கில மொழியூடான பாடசாலைகளில் சேர்ப்பிக்கின்ற கலாசாரம் 1970 வரையிருந்தது. இதனால் கிராமிய சைவத்தமிழ் பண்பாடெனப்படும் சைவாசாரங்களான தீட்சை, கோவில் வணக்கமுறைகள், புராணபடனம், திருமுறையோதல் என்பவற்றை அறியாதவர்களாகப் பிள்ளைகளை வளர்கின்றனர். வாழ்விற் பிரதானமாகத் தம்வாணிபத்தில் கஷ்ட நஷ்டங்களையோ இன்றேல் அபரிமித செல்வத்தினையோ அடையும்போது நடுநிலை தவறி, மனக்குளப்பம் அடைகின்றனர். மேலும் முறையற்ற வாழ்வு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறை அவா என்பவற்றால் மனக்குழப்பமடைந்து ஆறுதல் வேண்டிக் கொழுகொம்பொன்றினை அவாவிநிற்கையில் மேற்குறித்த வகையிலான உபதேசிகளை நாடுகின்றனர் இதனால் தியானப் பயிற்சிகளாற் சிறிது தேறுகின்றனர் என்பதும் உண்மைதான். ஆனால் நின்மதி தியானத்தால் மட்டுமே என்கின்றனர். ஆலயக் குறைபாடுகளைப் பெரிதாக்கி கோயில் வணக்கமுறைகளை, அதிற் செலவுசெய்வதை வீண் என்பதாற் பாரிய கெடுதியைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவரவர் குலதெய்வங்களால் வருவிக்கின்றனர். மணிவாசகர் போற்றித்திருவகலில் 28ம் வரி தொட்டு ஓருயிர்படும் துன்பங்களைக்கூறி அது சிவ மென்பதோர் சித்தமுண்டாகி அதிலே உறுதியாய் நிற்பதால் மட்டும் தீருமென்கின்றார்.

வேதம் பொது. ஆகமம் சிறப்பு என்பது உணர்ந்து இரண்டையும் மதிப்பவர் சைவர். தென்னக சைவாசார - சித்தாந்தநெறியின் அடிப்படையில் அமைந்த கோயிற் கிரியைகளில் மக்கள் ஈடுபடுவதை இழிவாக்கி ஆகம அறிவின்றி, கீதையையும் கிருஷ்ணனையும் மையமாக்கி, அதுவே இந்துக் கொள்கையென நிலைநாட்டி வருகின்றனர். பாரதம், சிறப்பாகத் தென்னாடு சிவனுக்குரிய, சைவருக்குரிய நாடென்பதை மறந்துள்ளனர். தென்னாடுடைய தில்லைச்சிவனை எந்நாட்டவர்க்கும் இறைவனாகக் காட்டியவர் மணிவாசகர். இமயம் முதல் ஈழம்வரை சிவாலயங்களே விரிந்து பரந்துள்ளதோடு சிவன் பூசித்து வணங்கும் மற்றோர் தெய்வச்சிலைகள், கோவில்கள் யாங்கணும் கண்டதில்லை. இராமேஸ்வரப் பின்னணியையும் உணராது, ஆகமங்களைவிடக் கீதையையும், சிவனை விட இராமனையும், அனுமாரையும் உயர்த்தி ஈழத்திலும் வானளாவக் கோயில்கள் எடுப்போரின் பின்னணியையும், நோக்கத்தையும் உணரல் உண்மைச் சைவர் கடன்.

**சைவசித்தாந்தம்** எல்லா மதங்களையும் மதித்து, ஆனால் அவரவர் மதம் 36 தத்துவ எல்லையில் எங்கெங்கே நிற்கின்றது என்றும், தத்துவங்கடந்த, பிறப்பற்ற, பேரின்ப, சுத்தாத்துவித சைவசித்தாந்த முத்தியை ஏனைமதத்தினரும் அடைய, அது, பல்பிறப்புக்களில் வரும் படிமுறைகளாய் அமைந்துள்ளதென்றுங் கூறும். இவ்வாற்றால் பலசமயங்களும் பரமசிவனாலும் அவன் தேவியாலும் பாடத்திட்டம்போல் ஆக்கப்பட்டன. சைவ வணக்கம் சிவக்குடும்ப வணக்கம். மெய்ஞ்ஞானிகள் சமயங்களை உலகோர்க்குப் பொதுவான வேதத்தையும், சைவர்க்குச் சிறப்பான ஆகமத்தையும் அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அறுவகைச்சமய எல்லையில் அடக்குகின்றனர். தத்துவ அடிப்படையின்றி சிவன், சக்தி, விநாயகர், சுப்பிரமணியர், விட்டுணு, ஆதித்தர் ஆகிய சிவக்குடும்ப மூர்த்தங்களை வேறுபடுத்திப் பாரதத்தின் வெவ்வேறு கால, இடப் பகுதிகளிற் கைக்கொள்ளப்பட்ட வணக்கமுறைகளை வலிந்து ஆறுகூறுகளாக்கி ஷண்மதஞ்செய்தவர் 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரர். (பாடியம்பார்). அறுவகைச் சமயம் பற்றியெழுதிய இரா செல்வக்கணபதியவர்கள்: **சைவசித்தாந்தம் கூறும் அறுவகைச்சமயம்** 2000 ஆண்டுகளுக்கு மேலாக சிவனாலியற்றப்பட்ட வேதம், ஆகமம் என்பவற்றை மறுத்தும் உடன்பட்டும் எழுந்தவை. அவற்றை நாற்கூற்று அறுவகைச் சமயம் என்பது மரபு. அவை ஆறு புறப்புற, ஆறு புற, ஆறு அகப்புற, ஆறு அக என24 ஆகும்' என்பதாம். இதனை மாபாடியத்திற் காண்க. இவ்விரிவு தத்துவம், தர்க் கம், வேதாகம ஏற்பும் மறுப்பும் என்ற அடிப்படையிலானவை, சைவம் வைணவந் தவிர அவை சிலகால் நிலைத்தும் நடைமுறையின்றிக் கொள்கையாகக் கற்றோரிடம் மட்டுமிருந்ததை மாபாடியத்திற் காண்க. சித்தியார் பரபக்கம் இவற்றிலுள்ள நிறைகளையும் குறைகளையும் தர்க்கரீதியில், நடுநிலையில் நின்று விளக்கி சித்தாந்தசைவம் தவிர்ந்த ஏனையவற்றை நிராகரித்துப் பூர்வபக்கமாக்கி சித்தாந்தசைவமே மேலானதென்று நிறுவியுள்ளது.

'அறுவகைச்சமயத் தறுவகையோர்க்கும் வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி கீடம் புரையுங் கிழவோன்' என மணிவாசகர் கூறியபடி சைவசித்தாந்த முத்திப் பேறாகிய சிவசாயுச்சிய பதவியுடன் ஒப்பிடின் ஏனைப் பதமுத்திகள் கீடம்(புழு)போன்ற சிறப்பற்றவையாம். ஆதலாற்றான் சித்தியாரும் சிவசாயுச்சிய பதவியினை யாவராலும், அவரவர் சமயவழி நின்று அவ்வச்சமய நெறிகளில் முன்னேறிப் பின் தொடர்ந்துவரும் பிறவிகளில் படிமுறையினால் அடையலாம் என்கின்றதால் இதில் சமய துவேசம் கிடையாது. 'தத்தஞ் சமயத் தகுதிநில்லாதாரை, ....மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே' எனக் கண்டோம். திருமூலர் கண்ட இத்தண்டம் பற்றிய கொள்கை, பரமசிவன் எல்லா உயிர்களுக்கும் அவ்வவர் சமயநெறிப்பிரகாரம் அவ்வவர் வழியில் நின்றோரை ஈடேற்றுதல், பரசிவமேன்மை, தேவாதி தேவன், மகாதேவன் அவனே என்பது ஆகியவற்றை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகின்றது. இதுவே அன்பே சிவமெனும் தாய்ச் சமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப்பள்ளி. நடுநிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, பல்கலைக்கழகம் என்பவற்றில் பயில்வோர் முன்பள்ளிகளிற் சித்தியெய்தவேண்டும். சிலர் இடையில் நிற்பதும். சிலர் தொடர்ந்து பயிலுதலும் போன்றதே இதுவெனலாம். பரீட்சை முடிவுகளும் ஒன்றாயிருப்ப தில்லை. உத்தியோகப் பேறுகளும் அத்தகையினவே. ஆதலின் சங்கரரின் சைவம் உட்பட அறுவகைச் சமயங்களும் தனித்தனி சமமான ஆறு முழுமுதற் கடவுளரைக் கொண்டிருப்பது என்பது ஏற்புடையதன்று. ஒரு குடும்பத்திற்கு, ஒரு நாட்டிற்கு ஒருவனே தலைவன். அதுபோல பிறந்திறந்து உழலும் இவ்வுலகிற்கு 'பிறவாயாக்கைப் பெரியோன்' ஆகிய பரமசிவனே தலைவன். இது சுருதி, யுக்தி, அனுபவங்களால் நிறுவப்பட்டு ஏற்கப்பட்டதே. 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க, சைவா போற்றி, தலைவா போற்றி' மணிவாசகம். படிமுறைகளாவன, 'புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்...'. சித்தி பா-263.

**சைவம் பிரசாரஞ்செய்து பிறரை மதமாற்றுவதில்லை.** அதன் பதி பசுபாச உண்மைகளைப் பிறர் தாமாகவுணர்ந்து புறத்தோற்றங்களில் சைவராகாவிடினும் அகத்திற் சிவனையும் சிவசின்னங்களையும் மதித்து வந்துள்ளனர். இது அன்றுதொட்டு இன்றுவரை நிகழ்ந்து வருகின்றது. உதாரணங்களாக : சமணத்திலிருந்து சைவராகிய அப்பர், சாக்கியர்(புத்த துறவி), தமிழகத்தை (10ஆம் நூற்றாண்டில் வென்ற பிறதேசமன்னர்கள், ஜி.யு. போப் (யேர்மானிய கிறீஸ்தவத்துறவி), தியோஸ் பெனாட் (ஐரோப்பியர்) போன்றோரும், திருவாதவூரர் புராணத் தின்படி புத்தரை வாதில்வென்றபோது ஈழமன்னனின் மதமாற்றம் போல்வனவுமாம். அப்பருட்பட்ட பிறமதத்தினர் தாமாகவே ஆன்மீக நாட்டங் கொண்டு முற்பிறவித் தொடர்பால், தமது மதத்தின் பதி பசு பாசம் மற்றும் முத்திபற்றிய விளக்கமின்மையையும், சைவம் அவ் விடயங்களில் சிறந்து விளங்கியமையையும் கருதியே அகம் - புற மிரண்டிலும் சைவராயினர். உதாரணமாகச் சாக்கிய நாயனார் புராணம்

பா 1) 'அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம் வடிவினால் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங் கண்டு(உ)வந்து கல்லெறிந்து
மறுவில்சரண் பெற்றதிறம் அறிந்தபடி வழுத்துவாம்'

பா 3) 'அந்நாளில் எயிற்காஞ்சி அணிநகரஞ் சென்றடைந்து
நன்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடுவார்
முன்னாகச் சாக்கியர்தாம் மொழிஅறத்தின் வழிச்சார்ந்து
மன்னாத பிறப்பறுக்குந் தத்துவத்தின் வழிஉணர்வார்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு:** 1) காலங்காலமாக காஞ்சி சமயதத்துவ ஆய்வுக்குப் பெயர்போனது. இன்றும் சரஸ்வதிமஹால் நூல்நிலையம் அதற்குச் சான்று பகர்கின்றது. 2) 'த(ா)ம் மொழிஅறத்தின் வழி சார்ந்து' என்பதனால் அவர் திருமூலர் கூறியபடி 'தத்தம் சமயத் தகுதி'யில் நின்றார். அதன் பின்னாகவே பிறவி நோயறும் வழியைத் தேடினார். 3) புத்தரின் பஞ்ச சீலக்கொள்கை பஞ்சமாபாதகம், அழுக்காறு, அவா, வெகுளி, இனனாச்சொல் போன்ற இயம நியமங்களுடன் ஒட்டியவை. கடைப்பிடிக்க வேண்டியவை. இன்றும் பசுவதையை எதிர்த்து காதேனுவின் மேல்வரும் பார்வதி பரமேஸ்வரரைப் பெரியவுருவில், 'பசு நம் தாய்' எனும் வாசகத்துடன் வெள்ளவத்தைப் பாலத்தருகிலுள்ள ஆச்சிரமத்தின்முன் வைத்துள்ளனர். 4) தருமம் எங்குண்டோ அங்கே சிவனைக் காவுவதே தருமதேவதையான ஏற்றின் பணி. தருமந் தவறின் அது சிவந்தகண்களுடன் 'சினமுடை ஏறு' எனப் கோபத்துடன் பாய்ந்து அழித்தற் தொழிலுக்காய இடத்திற் சிவனைச் சேர்ப்பிக்கும்.

பா3) 'அந்நிலைமைச் சாக்கியர்தம் அருங்கலைநூல் ஓதிஅது
தன்நிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருளல்ல
என்னும்அது தெளிந்(து)ஈசர் அருள்கூட 'ஈறில்சிவ
நன்நெறியே பொருளாவ' தெனஉணர்வு நாட்டினார்.'
(பாடல் 3ன் பொருள் தெளிவானது).

பா4) 'செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்' எனக்கொண்டே
'இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை'என்றே
உய்வகையாற் 'பொருள்சிவன்' என்றருளாலே உணர்ந்தறிந்தார்.'

பா5) 'எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்'என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்.'

பா8) 'காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீநாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கரான சிவாய சுப்பிரமணியசுவாமிகள் யோகர் சுவாமிகளின் (முதுகிலடித்த) ஸ்பரிசதீட்சையால் அகமும் புறமும் சைவராகி மாபெரும் சிவத்தொண்டினை ஹவாயில் ஆற்றி கடவுள் கோவிலுங்கட்டிச் சிலவருட முன்பாகவே சிவபதமடைந்தார். (தமிழினூடாகச் சைவசித்தாந்தம் கற்காததால் அவரின் கட்டுரைகள் மரபு வழியிலிருந்து விலகி யிருந்தாலும் அவரின் உலகளாவிய சைவத்தொண்டு நிகரற்றது. மதமாற்றங்களை வீறுடன் கண்டித்தார்.) மேலும், 1) சில கிறீஸ்தவபாதிரிமார் சைவசித்தாந்தத்தை விளங்க முயற்சிக்கின்றனர். 2) அண்மையிற் காலமான பட்டதாரி ஆசிரியரும், கிறீஸ்தவரு மான நண்பரொருவர் நோய்காரணமாக வீட்டாருக்கும் தெரியாமல் தலையணைக்குக்கீழ் திருநீறு வைத்திருந்து 'சிவசிவ' எனப்பூசி நோய்தணியப் பெற்றார், 3) கதிர்காமத்தில் மதபேதமின்றி வழிபடுவோர் பலர். இங்ஙனமாகச் சைவத் திறனறிந்தோர் பலராதலின் சைவமென்றும் சனாதனசைவமே. சமணரோடாய புனல்வாதத்தில் சைவம்பற்றி யெழுதிய திருப்பாசுர பாடலடங்கிய திருவேடு வைகை ஓட்டத்திசைக் கெதிராகச் சென்று சைவக் கொள்கையை நிலைநாட்டியது. அதன் 4ம் பாடல் வரிகள், 'ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகிலள வில்லைக் கிளக்க வேண்டாம்....'' என்பதால் சர்வலோகேஸ்வரனான சிவனுக்கு அன்பொன்றே பிரதான மாதலின் மதஎல்லைக் கப்பாலுள்ளவர்க்கும் அருளல் அவர் பேரருளுடைமை.

'சித்தாந்தத் தேசிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செநநமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தாநந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி' -
சித்தியார் பா-268

சித்தாந்தநெறியே திருவடிப் பேறளிப்பதெனும் பொருள் தெளிவே. சீவன்முத்தர்கள் உடல்சார் பிராரத்தங் கழியும்வரை புவியில் வாழ்ந்தாலும் யோகர்சுவாமிகள்போல முத்தி பெற்றவர்களே. சித்தாந்த மல்லாதவை பித்தாந்தமாம். பிராந்தி - மயக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு :** முற்கண்ட வடநாட்டவரின் விரிவுரையைக் கேட்டபோது அவர் 'கோயில் வணக்கமென்பது ஆன்மீகநெறியிற் கீழ்ப்படியில் உள்ளவர்களின் வணக்கம் மட்டுமே' என்று மிகத் தரக்குறைவாகக் கூறினார். நம்மவர் அவரின் உரையை மிக ஆர்வத்துடன் கேட்டனர். சைவாசாரவாழ்வை மதித்து வாழுபவர்கள் அமைதிகாக்க குழப்புதலின்றி இருந்தபின், கேள்விநேரத்தைப் பயன்படுத்தி, சாதுரியமாக, 'மேலைநாட்டு அறிஞர்களான போப், தியோஸ் பெனாட் போன்றவர்கள் இந்தியாவின் பல்வேறு மதக்கொள்கைகள் பற்றிக் கூறியதைக் கேட்க விரும்புகின்றோம்' என்றார் ஒருவர். பல்வித ஆய்வுப்பட்டங்களைப் பெற்ற அப்பேச்சாளர் அதுபற்றித் தனக்குத் தெரியாதென்றார். நிகழ்வின் இறுதியில் அவரையணுகி, மேற்குறித்த அறிஞர்கள் கூறியவற்றைச் சுருக்கமாக அவர்புரியும் ஆங்கிலத்திலேயே விளக்கி, **பாரதத்தின் பல்வேறு சமயக் கொள்கைகளில் சைவ சித்தாந்தம் ஒன்றே தர்க்க ரீதியானதும், விஞ்ஞான பூர்வமானதும், நடைமுறைச் சாத்தியமானதும் ஆகும். இது தென்னாட்டவர்களான தமிழர்களின் சொத்து** எனக் கூறினர் என்றார். அத்துடன் 'அத்தகைய சித்தாந்தம்பற்றி உங்கள் இந்தியமதம் பற்றிய நீளுரையில் ஒருவார்த்தையேனும் கூறவில்லையே? சைவசித்தாந்த அடிப்படையிலான கோயிற் கிரியை, வணக்கம் என்ற உயர்நெறிகளை இழிவான கீழ்ப்படிநிலை என்றது ஏன்?. என்றார். என்றதும், அவரையழைத்த பலர், இங்ஙனம் உரையாடியவரை சூழ்ந்து பேசவிடாது தடுத்தாலும் அதிலிருந்து அவர் சிவகருணையால் விடுபட்டு, வெளியில் நின்றவர்களுக்குத் தமிழில் விளக்கினார். முன்னாள் இந்து அமைச்சரொருவருக்கு, மெதுவாக, 'சைவத்தமிழரின் மானம் வடவராற் பறிபோவதை பார்த்திருக்கலாமா?' எனக்கூறி அகன்றார். இதுவே மானமற்ற சைவத்தமிழர் நிலை. (இதில் ஆரிய-இந்து, திராவிட-சைவ அரசியலுமுண்டு விபரிக்க விரும்பவில்லை) சைவநெறிகள்பற்றி பேசியவரோ கேட்ட சனங்களோ அறியாததே இதன் காரணம். ஆங்கிலத்தில் சைவம், சித்தாந்தம், கிரியை நெறிகள் பற்றிப் பிரசாரஞ்செய்வோர் பிறரறியுமாறு ஆங்கிலத்திலும் தமிழிலும் ஊடகங்களைப் பயன்படுத்தி விளக்கின், இந்துப் பிரசாரர்களைத் திருத்தலாம். சைவாசாரவாழ்வு கடுங்கட்டுப்பாடானது, நமக்கு ஆகாதது போன்ற நம்பிக்கைகள்தான் மூடநம்பிக்கைகளே யன்றி, சைவக்கிரியைகளல்ல. தனது இறுதிச்சூத்திரத்தில் மெய்கண்டார் 'ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்றது மூடநம்பிக்கையல்ல. தெளிவே. இப்பின்னணியான சமூகத்தில் இங்கு கூறப்போகும் 'மந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவாம் சதாசிவ லிங்கம்' என்றவாறான மந்திரவடிவை விரிவாகப் பார்த்தல் அவசியம். விளக்கமின்றிப் பூசை செய்தவர்கள் மதம்மாறிய செய்திகள் பலவுள. ஆன்மார்த்த, பரார்த்த பூசைகளே காலங்காலமாக அந்நியராட்சிக்குள் அகப்பட்டுக் கலக்கமடைந்த ஈழமுட்பட்ட பாரதத்தை இன்றும் சிவபூமியாக நிலைக்க வைத்துள்ளது. இதற்கு வைதிகசைவப் பிராமணரையும், சிவாச்சாரியார்களான திருமுறை மற்றும் சித்தாந்த ஆசிரியர்களையும், அதனைப் பரம்பரையாக வளர்க்கும் மடங்களையும், ஆதீனங்களையும், புறச்சந்தனாசாரியாரின் வழி வரும் சித்தாந்திகளையும் போற்றுதல் கடன். வேதாகமங்களுக்கு நால்வர் போன்று வேதக் கொள்கைகளுக்கு எதிர்ப்பாய கொள்கைகளை சங்கரர் வாதிட்டு வெற்றமையையும் இங்கு நினைவுகூருதல் நங்கடனே. சரித்திரத்தில் வரும் பாரதத்தைச் சார்ந்த புத்தர், சங்கரர், மற்றுமுள்ள மகான்கள், ஏறத்தாழ 36 தத்துவங்களில் 24ஆன்மதத்துவங்களை யாயினும் அறிந்து, அதன்மேற் (தசகாரியம் பார்) சில படிகளிலாகுதல் ஏறிச் சித்திகள் ஆற்றியவர்களே. ஆயினும் இடைநின்று, தமது நிலையே முடிந்த முடிபெனக் கண்டு, அல்லது பிறராற் காணப்பட்டு, தத்தம் பெயரிற் சமயஞ் செய்தவர்கள். இதனைச் சித்தியார் 'வேதநூல்...'முதலிய பாக்களாற் கூறும். சிவவுணர்வு இல்லாவிடில் அவன் காட்டக்காணும் சிவஞானம் கிட்டாததால் மேல்நிலைகளை அடையமுடியாது. எனவே திருவருள் உபகாரத்தால் மேற்படிகளை அடைந்தும் தமக்கெனச் சமயஞ்சாதிக்காத மாமொரும் அனுபூதிமான்களே நால்வர்முதலிய நம் வழிகாட்டிகள். அவர்களைக் குருவாக்கி சிவனடிசேரலாகிய நெறியில் நிற்போர் நாம். இதனைப்புரியின் சமயத்தழம்பல், மதமாற்றங்கள் நிகழாவாம். சைவநெறியினைப் பெற சித்தாந்தத்தினை நற்குருவையடைந்து கற்றல் அவசியமாம். முதற் தீக்கை பெற்று, சந்தியாவந்தனம், திருமுறையோதல் முதலாய உண்மைச் சரியைத் தொண்டுகள் புரியினே சமயம் பற்றிய தத்துவம் தெரியவரும். இந்நெறி நாடியவர் நம் நால்வராதலில் அவர்நெறியே நம் நெறியாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.12 சைவ நாற்பாதங்கள் (பிரதான சித்தாந்தவிளக்கம்):** சைவங் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்கள் அல்லது வழிகளானவை வடவர் கூறும் பிரமசரியம் - மாணவப்பருவம், கிருகஸ்தம் - இல்லறம், வானப்பிரஸ்தம் - தபோதன - கானகவாழ்வு. சன்யாசம் - துறவு என்பவற்றோடு பெரும்பாலும் ஒத்துக் காணப்படினும் வள்ளுவர் கூறியதுபோல அன்புவழித்தாய இல்லறதர்மமே தென்னாட்டவர்களாற் கடைப்பிடிக்கப்படுவது. நாயன்மார், அறுபத்துமூவர் ஆதியோரிற் பெரும்பாலானோரும் ஏதோவொரு வகையில் இல்லறத்துடன், சமூகத்துடன் தொடர்புபட்டிருந்துள்ளனர். அத்தகையவர்களுக்கே ஆன்மார்த்தம் முதலாய கிரியைகள் செய்வதும் வசதியாகலாம். அது கிரியைக்காய உதவி வேண்டப்படுவதாலாம். இந்நூலிற் கிரியை பற்றி மட்டும் கூறுவதாயின் அது நிறைவற்றதாகும். காரணம் சமூகம் சமயவிடயத்தில் அதிகாதிகம் அறிவற்றதாகவே இருக்கின்றது. முன்கண்டவாறு 'கிரியை யென மருவுவன யாவும் ஞானத்தின் நிமித்தம்'. எவ்வாறு முயலினும் உயர்ஞான மின்றி முத்தி சித்திப்பதில்லை யென்பது நூற்றுணிபு. ஞானசாதனையின் இயல்பையும் பயனையும் சித்தியார் 'சன்மார்க்கம் சகலகலை புராண வேதம்......ஞானப் பெருமை யுடையோர் சிவனைப் பெறுவர் காணே', என்றும், ஞானபூசையே முத்திக்கு நேர்வழி என்றும் (சித்தி பா275) கூறும். இறைவனால் தமது பாடத்திட்டத்தினைக் கற்பித்தும் செயலிற் காட்டுமாறும் உலகிற்கு அனுப்பப்பட்டவர்கள் நம் நால்வர். அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிகளாகிய சைவநாற்பாதங்கள்: சுருக்க அட்டவணை பாரக்க. விரிவு பின்னுள்ளது.

| நாற்பாத | சரியை | கிரியை | யோகம் | ஞானம் |
|---|---|---|---|---|
| நிகழிடம் (அ,தாரம்) | உடலாற் பெரிதும் மனதாற் சிறிதும் | உடலாலும் மனதாலும் | உடலின் அ,றாதாரங்களில் மனதாற் பெரிதும் | உடலுள்ளும் புறம்புமாய் நிராதாரமாய் |
| வழி விபரம் | சிவ தொண்டு திரு முறைப் பாராயணம் | சிவபூசை (கிரியா யோக நோக்கு) | கிரியாயோகமெனும் கிரியை முதிர்வு, - ஞானநோக்கு | முன்வழிகளால் அல்லது முன்நல்வினையால்குரு வாய்த்தல் |
| மறுபெயர் (மார்க்கம்) | தாசமார்க்கம் அடிமை | சற்புத்திர மார்க்கம், மகன்மை | சகமார்க்கம் தோழமை | சன்மார்க்கம் குருசீட உறவு |
| உதாரண புருஷர் | அப்பர் | சம்பந்தர் | சுந்தரர் | மணிவாசகர் |
| முத்தி வகை, விபரம் | சாலோக. சிவலோகத் திருத்தல் | சாமீப, சிவ சமீபத்திருத்தல் | சாரூப, சிவ ரூபம் பெறல் | சாயுச்சிய, சிவத்தோடைக்கியம், சிவாத்துதவிதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவள மல்குசபை யின்னல்கெட மன்னுந்
தந்தைமணி மன்றிலுறை தாண்டவ பதத்தோன்
செந்தமிழில் வந்தசிவ ஞானவமு துண்டா
மந்தமி லருட்கடலை யாண்டருள வேண்டி'

என்ற திருவாதவூரடிகள் புராணத்தில், 'தம்மினின்றும் ஆரியமொழி வடிவில் வெளிவந்த சிவஞானமாகிய அமுதம், அத்தியற்புத அதிமதுர சுத்தச் செந்தமிழ் மொழிவடிவில் (திருவாசகமென) உண்டாகப் பெறும் கரையற்ற கிருபாசமுத்திரமாகிய திருவாதவூரடிகளை ஆண்டருள வேண்டி' என சிவபெருமான் குருவடிவில் வந்ததனை உரையாசிரியர் ம.க.வேற் பிள்ளையவர்கள் குறிப்பிடல் காண்க. இது ஞானமார்க்கம். ஞானம் படிமுறைகளால் அடையப்படுவது. சரியை செய்யாதார்க்குக் கிரியை பலனளியாது. அதேபோல கிரியையினைச் சித்தாந்த விளக்கத்துடன் செய்வோர்க்கே அதன் முதிர்விலது சிவயோகமாகி உடலிலுள்ள ஆறாதாரங்களிலும் உள்ள அவ்வத்தெய்வங்களை மானசிகமாகத் தெரிவிக்கும். அவ்வாறு கண்டதன் முதிர்வில் யாவும் சிவமயமெனக் காணும்நிலை இப்பிறப்பிலேயே சித்திக்கும். 'சிற்றறிவன் யான் பெற்றபய னெல் லாம் சிவஞான மொன்றே அவனி வாழ்விலே' பூதசுத்தி, அந்தர்யாகம் அல்லது அந்தர்ஜயனம் (உட்பூசை) என்பன அக் கிரியைவழி கிரியாயோகமாகிப் பின் ஞானத்திற்கும் இட்டுச்செல்லும். (இத்தகைய நெறிபற்றும் பிராமணோத்தமர்கள் இன்றும் சில ஆலயங்களை அண்டியுள்ளார்கள். அவர்களின் முக ஒளியே அதற்குச் சான்றாகவிருப்பதை அவதானிக்கலாம். ஆதலின் ஆன்மார்த்தத்தை அசண்டையாகச் செய்வது அல்லது செய்யாது விடுவது சாமான்யரின் பொருள்பற்றிச் செய்யும் தொழில்போலாகிவிடும். 'இறைவன் இந்தவுடலை எமக்களித்தது தன்னையடைந்து முத்தியின்பம் பெறுவதற்கேயாம்' என நாவலர் கூறியதன் படியும், பெரியபுராணத்தில் 'ஊனடைந்த உடம்பின் பிறவியே தானடைந்த உறுதியைச் சாருமால், தேனடம்செய் மலர்ப்பொழிற் தில்லையில் மாநடஞ்செய் வரதர்பொற் தாள்தொழ' என்றும் மற்றுமுள்ள நாயன்மார் புகன்றதன் பிரகாரமும் சைவ வாழ்விற்காய வழிகள் சைவநாற்பாதமெனும் நான்காம்.

1. **சரியைநெறி:** புறவுடலால் இறைவனின் உருவத்திருமேனியை நினைந்து வழிபடலும் அதற்காய தொண்டுகளை ஆலயச்சூழலில் ஆற்றுவதுமாம். இதற்கு பிரவேசதீட்சையாகுதல் அவசியமாகும். இது ஆண்டானடிமைத் திறம்போற்றி அமைவதால் தாசமார்க்கமாம். இது அரும்பு நிலையினது. பலன் சிவலோக (சாலோக) பதமுத்தி. சரியை நெறியில் வாழ்ந்து காட்டுமாறு இறைவனால் இப்பூவுலகிற்கு அனுப்பப்பட்டவரே உழவாரத் தொண்டராய அப்பர். அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தீட்சையாக திரிசூலத்தினைத் தமது கணங்கள் மூலம் கனாவிற் பொறித்தார். இவர் சமணத்திலிருந்து சிவனருளால் மீண்டும் சைவனாகி தமிழகத்தை தனிச்சைவநாடாக்கிய வீரபுருஷராகத் திகழ் கின்றார். சரியையென்பது திருக்கோவிலைக் கூட்டுதல் விளக்கேற்றல், பூசாத்திரவியங்கள் தேடிக்கொடுத்தல், திருமுறையோதல், அடியார்க்குத் திருவமுதளித்தல் எனப் பலவாம். இவை இன்றுங்கூட கிராமங்களில் பயபக்தியுடன் ஆற்றப்பட்டாலும் பெரும்பான்மையான கோவில்களில் நிர்வாகங்கள் சரியைத் தொண்டினைத் தொழிலென மட்டுப்படுத்திச் சைவாசாரம் அற்றவரைக்கூட கூலிக்குவைத்தே நடாத்துகின்றனர். அர்ச்சனையை முக்கியத்துவமாக்கி கோவில்களைப் பொருளாதார மையங்களாக்கல் புரியக்கூடியதே. சிவனே 'நமக்கு அர்சனை பாட்டேயாகும்' என வைதிகப் பிராமணரான சுந்தரர்க்கே கூறியதும், அப்பர் 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்' என்றதும் நம்மவர் பொருட்டேயாம். நிர்வாக மயப்படுத்தப்பட்ட கோவில்களில் தொழில் புரிவோர்க்கு, தொண்டர்க்கு, சமய அறிவைப் புகட்டும் வழிகளை நடைமுறைப்படுத்தல், ஆலயத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் அடியவர்களைக் கவரும்படியாக ஆசாரம், பக்தி, குரல்வளம், பண்ணறிவு உள்ளவர்களைக் கொண்டு ஓரிடத்திலிருந்து திருமுறை ஓதுவித்தலும் தாம் ஓதுவதும், அடியார்க்கு அன்னமிடுதலும் நற்சரியைகளாம். நிர்வாகக் கட்டுக்கோப்புகளாற் பேணப்படும் கோயில் வழிபாட்டுமுறைகளால் நாற்பாதங்களில் முதலாவதான உண்மைச் சரியைத்தொண்டு நசிக்கப்பட்டு, ஏனைப் பாதங்களும் அவற்றின் உண்மைத்தன்மை இழக்கும்நிலை உருவாகி வருகின்றது. இதனாற் கிரியையும் ஊதியத்தின் பொருட்டேயன்றி ஞானத்தின் பொருட்டாகாததைக் காணமுடிகின்றது. இக்குறைபாட்டிற்கு சம்பந்தப்பட்ட யாவரும் பொறுப்பேற்று, இதிற் சுட்டியது போன்ற வழிகளை ஏற்படுத்தி உண்மைச் சரியையினைப் பேணின் கிரியையும் சிறக்கும்.

**2. கிரியைநெறி :** இது பெருமானின் இலிங்கமாகிய அருவுருவத் திருமேனியைக் குறித்து மனதாலும் உடலாலும் நிகழ்த்தப் பெறுவது. இது ஆன்மார்த்த, அதிகார, பரார்த்தவென மூவகையாகும். இதற்கு விஷேட, ஆச்சார்ய, நிர்வாண தீட்சைகள் வேண்டப்படுவன. யார், யாருக்கு, எவ்வாறு, எக்கருமத்திற்கு அதிகாரமாக தீட்சை வழங்க வேண்டும் போன்ற விபரங்களை தீக்கைப் பகுதியிலும், சிவஞான மாபாடிய முற்பகுதியிற் பார்க்க. பரார்த்தம் நித்தியம், நைமித்தியம், காமியமென மூவகைத்து. இதில் வழிபடுவோன் தீட்சையால் சிவபுத்திரனாக்கப்படுதலின் இது புத்திரமார்க்கம் ஆகின்றது. பலன் சாமீப (சிவலோக - சிவசமீப) முத்தி. இது சரியையிலும் பார்க்க முதிர்வாதலின் பூவின் மொட்டு நிலையாம். ஞானசம்பந்தரை இறைவன் இவ்வுலகிற்கு அனுப்பியமை, கிரியை நெறிக்காய வழிகாட்டலுக்கேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது, அவரின் மணவினையின் போது ஆற்றிய அக்கினிகாரியத்தில் அவர் அவ்வக்கினியைச் சிவனாகக் கண்டமை யாலும், அவரில் பெருமணவிருப்பை நிறைவாக்க இறைவன் சோதிவடிவு கொண்டு யாவருக்கும் முத்தி கொடுத்தமையாலும் புலனாகும். பர அபர ஞானங்களை அம்மை மூலம் அளித்து, கிரியைநெறி வாழுங் குடும்பத்தில் அவதரிக்கச்செய்து, சிவம்பெருக்கும் பிள்ளையாகி வாழ்ந்து அற்புதங்கள் பல ஆற்றச்செய்துள்ளார். முதல் மூன்று திருமுறைகளும் அவரினதேயாம் அவர் ஓதாதுணர்ந்த சாமுசித்தருமாம் என்பதை 'பண்டைநற் தவத்தாற் தோன்றிப் பரமனைப் பத்திபண்ணும் தொண்டர்' என சித்தியார் கூறும்.


**3. யோகநெறி :-** அகத்தில் ஆறாதாரங்களிலும் வியாபித்திருக்கும் இறை சொரூபத்தின் தடத்த வடிவங்களை மனதாற் கண்டு அட்டாங்கயோக முறையிற் பயின்று இறையை அரூபமாக தலையுச்சியிற் காணுவதே இந்நெறியாம். சித்தியார் பா 273.

'சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்தவளி யிரண்டும்
சலிப்புற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றன் அரும்பொருள்கள் உணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி அலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருந்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோகம் முற்றும்
உழத்தல்உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர்'

**திருவிளங்கத்தார் உரை** :- சிவயோகமாவது ஐம்பொறிகளையும் ஒடுக்கி, சுவாசத்தை நிலையில் நிறுத்தி. மனதை ஒருவழிப்படுத்தி, உடம்பினுள் ஆறாதாரங்களையுந் தரிசித்து, ஆன்மாவானது அவ் வாறாதாரங்களின் மேற்சென்று பிரமரந்திரத்தில் (தலையுச்சியில்) ஒழுகும் அமிர்ததாரை ஒழுக்கால் உடல் நிலைத்திருப்ப, தான் பூரணப் பிரகாசமாகிய சிவசோதியைக் கண்டு, இவ்வாறு நியமாதி அட்டாங்கங்களோடு கூடிய சமாதி நிலையை அடைந்து ஆனந்தித் திருத்தல் யோகநெறியாம். பலன் சிவசொரூப முத்தி. (உயிர் வர்க்கங்களில் மாயை அகன்ற நந்தீஸ்வரரின் திருவுருவம் மைக்களமும் மான்மழுவும் பிறவுங் கூடியதான சிவசொரூபமாக இருக்கும்.) இந்நெறி அரும்பு மலர், காய், கனி என்ற பருவநிலைகளில் காய் நிலையினது எனப்படும். இதற்கு ஆதாரமாக வாழ்ந்து காட்டியவர் நால்வரில் மூன்றாமவராய சுந்தரராவார். இது தோழமை நெறி யெனப்படும். முன்னைய ஊழால் இருமனைவியருடன் வாழினும் அவர் வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவயோகமாகவே அமைந்ததென்பதைப் பல்வேறு அறிஞர்களும் அவரின் பாடல்களையே ஆதாரமாகக்கொண்டு நிலைநாட்டியுள்ளனர். இவர் சிவப்பிராமணராயிருந்து கிரியாயோகம் கைவரப்பெற்றதால் சிவனுடன் தோழமைபூண்டு பற்பல அற்புதங்களைக் கூடியும், ஊடியும் ஆற்றியவர். அவற்றிற்பல மனைவிய ரிருவர் பொருட்டாக அமைந்ததைப் பெரியபுராணத்திற் காண்க. ஏழாம் திருமுறை இவரிருடையதாகும்.

**பெருமிழலைக்குறும்ப நாயனார்** : இவர் சுந்தரரைக் குருவாகக் கொண்டு, அவர் கைலையடைந்போது, யோகசாதனத்தால் தானுங் கைலைசேர்ந்தவர். (சேரமான் பெருமாளும் அவ்வாறேயடைந்தார்). குறும்பனார், 'சென்னி மதியம் வைத்தவர்தம் அடியார்க்கான செய் பணிகள் இன்ன வண்ணம் என்றவர்தாம் உரையா முன்னம் எதிரேற்று முன்னம் உணர்ந்து செய்வாராய் முதிரும் அறிவின் பயன் கொள்வார்.' என்று சொல்லாமற் செய்யும் சங்கம வழிபாட்டில் முதன்மையின ரானார். சிவபெருமானின் செய்ய திருப்பாதங்களை மனத்திருத்திப் போற்றிவந்தார். இந்நிலையில், நம்பியாரூரரைத் தியானித்து, 'நாளும் நம்பி ஆரூரர் நாமம் நயன்ற நயத்தாலே, ஆளும் படியால் அணிமாதி சித்தியான அணைந்ததற்பின், மூழுங் காத லுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்தும், கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார்'. ('கேள்' - நட்பு, உறவு.) இது, குருவான சுந்தரரின் சிவனுடனான தோழமை நெறியினை உணர்த்தும். 'கெழுமினார்' என்பதால் அவர் யோகமுத்திக்குப் பொருத்தமானார் என சேக்கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகல்கின்றார்.) இந்நிலையில், சுந்தரர் திருவஞ்சைக்களத்தை வந்தடைந்தார். அடைந்ததும், 'தேவர் பெருமான் அருளாலே மஞ்சில் திகழும் வடகயிலைப் பொருப்பின் எய்த வரும்வாழ்வு நெஞ்சில் தெளிய இங்குணர்ந்தார் நீடுமிழலைக் குறும்பனார்' என்றபடி, சுந்தரர் கைலை செல்லப் போவதையும், தனக்கும் அந்நெறி வாய்க்கப் போவதையும் குறும்பனார் உணர்ந்தார். உணர்ந்து கூறுவதாவது,

1) 'மண்ணில் திகழும் திருநாவ லூரில் வந்த வன்தொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை தாளை எய்த தான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன் என்(று)
எண்ணிச் 'சிவன்தாள் இன்றேசென் றடைவேன் யோகத் தால்'

இதில், சுந்தரரின் நட்பைக் கண்மணிபோற் காத்தமை புலனாகின்றது. எவ்வாறு யோகத்தாற் கைலை யடைந்தாரென்பது,

2) 'நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை முன்னடைந்தார்'.

இதுவே **யோகநெறிக்கு இலக்கிமாதல்** காண்க. இதில் குறும்பனார், சங்கம, சிவ, மந்திர, குரு, ஆறாதார முதலிய வழிபாடுகளைப் பேணியதால் யோகமுத்தி யடைந்தமை தெளிவாகின்றது. இதுபோன்றே சிவனின் தோழராகிய சுந்தரின் திருக்கைலை நோக்கிய வெள்ளானைச் செலவினை யோகத்தாலறிந்த அவர் நண்பர் சேரமான்பெருமாள் தன் குதிரையின் காதில் ஐந்தெழுத்தோத அது விண்ணிற்பாய்ந்து, வெள்ளானை முன்னடைந்து, வலம்வந்து தொடர்ந்து கைலைவரை சுந்தரர்க்குக் காவலாகச் சென்றது. அரசரும் குதிரையும் விண்ணில் மறைந்ததைக் கண்டுபொறாத சேனைகள் தம்மைத்தாமே வாளாலரிந்து தூலவுடல் சாயச் சூக்குமவுடலுடன் வீரசொர்க்க மெய்தினர்.(அரசர் முதலாய பல தரத்தினும் அன்பே சிவமென உணர்ந்து வீடடைந்தனர்)

யோகசுவாமிகளும், தமது நண்பரும் அடியவருமான கொழும்புத் திருவிளங்கத்தார் உடல் நீத்ததை கொழும்புத்துறை திருக்குடிலிலிருந்தே யோகத்தாலுணர்ந்து, அங்கிருந்தோரிடம் 'அவன் சோதிமயமாய்ச் செல்கிறான்' என்றாராம். கிரியாயோக நெறியிலன்றி குருவழியிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய யோகியர் சித்தர் பலரும் மறைந்தும் மறையாது வாழ்ந்து வருதலும் தெரிந்ததே. யாழ்.யோகசுவாமிகளும் அத்தகையினரே. சித்தர்களிற் சிறந்தோர் பதினெண்சித்தர்கள். அவரிற் சிலர் திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், வான்மீகி, போகநாதர், குதம்பைச்சித்தர், மச்சமுனி, பதஞ்சலி, நந்திதேவர், பாம்பாட்டிச்சித்தர். அகப்பேய்ச்சித்தர் முதலான மேலும் 18 பேர் கி.பி. 14ம் நூ.ஆ.விலிருந்து வாழ்ந்துள்ளனர். அட்டமாசித்தியைத் துஸ்பிரயோகிப்பவர்கள் சைவநெறியினுக்கு உட்படார். இவர்கள் வாழ்வும் தேய்வும் நாடறிந்ததே.

4. **ஞானநெறி** (அத்துவசுத்தி முதலாம் கிரியைகளுக்கு ஆதாரமாக 36 தத்துவம் முதலியன 7.10.15, 7.10.16, 7.15களில் விளக்கப்பட்டது.) இதிற் சம்பந்தப்படும் இறைவன், சொரூபநிலையில் இருப்பவன். அருவ. அருவுருவ, உருவ நிலைகளெனும் தடத்த (ஒன்றிலிருந் தொன்றாய் தொடர்புற்றுக் கீழிறங்கிய) நிலையிலில்லாது அவற்றைக் கடந்தவன். அவனை வாக்குமனாதீதன், அகண்டாகாரத்தினன், சர்வவியாபகன், அறிவேயுருவானவன் என்றெல்லாம் வேதாகமங்கள், திருமுறைகள், சித்தாந்தநூல்கள் யாவுங் கூறும். இவன், உயிர்கள் தன்னையறியும் முயற்சிகளில் பல்பிறப்புகளில் மேற்கண்ட சரியையாதி மூன்று படிமுறைகளில் நின்ற சிவபுண்ணிய முதிர்வினால் இருவினையொப்பு, மலபரிபாகம் அவ்வுயிரில் நிகழ, சத்திநிபாதமெனும் திருவருள்பதிந்து, குருவாகி வந்து ஆட்கொள்வன். நீ என்மகன் என்று அறிவித்துப் போற்றித் தனது சிவலோகங்காட்டி மேலாம் சாயுச்சியமுத்தி வழங்குபவன். அதுவே உயிருக்கு என்றும் நிலைத்த பேரின்பத்தை வழங்குவதாகிய சிவாத்துவித நிலையாம். இது கனிந்தநிலை. மணிவாசகரை ஒரு திருவிளையாடலால் உலகுக்கனுப்பி சன்மார்க்கம் எனும் ஞானநெறியை நமக்கு இறைவன் அறிவுறுத்தியமை சைவத்தமிழர் பேறென்பதனால் திருவெம்பாவைப் பூசைகள் திருவாதவூரடிகள் புராணம் ஓதப்பட்டு மார்கழிதோறும் சைவாலயங்களில் இடம்பெறுதல் முதலியன நன்றி மறவாப் பண்பாம். (ஞான அறிவும் வாழ்வும் சைவசித்தாந்த நூல் களினாலும் மணிவாசகரின் எட்டாம் திருமுறையான திருவாசகம், திருக்கோவையார் திருவாதவூரர் புராணம் என்பவற்றாலும் தெளிவுறும்.) ஞானம் இவ்வாறு திருவருள் கூடுவதாலுமன்றி ஞானாசிரியனை யடைந்து ஞானநூல்களை கேட்டு, சக அடியாருடன் கூடிச் சிந்தித்து, பின் சந்தேகங்களை ஞானாசாரியனிடம் தெளிந்து. அதில் ஞானநிட்டை கூடுவதாலும் அமையும். அவரவர் முன்னைவினைப் பயனாகப் பொருந்தும் முறையினைக் கையாளலாம். சித்தியார் பா 4:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பண்டைநற் றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினிற் தொகுப்பன் மார்க்கர்
கண்டநூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்ட ரிகத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றாம்.'

சித்தி பா 4

அதாவது, சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் என்னும் மூவகையினரில் ஆற்றலும், அறிவும், இறைகாதலும் இல்லாத பிராகிருதரை நீக்கி, ஏனையிருவரில் முற்செய் தவ விசேடத்தாற் சாமுசித்தராய் (சம்பந்தர் போன்று) பிறப்பித்து, வீடுகாதலிக்கும் சிவபத்தரை விஞ்ஞானகலர் பிரளயாகலரைப்போல (ஞான)நூல் வழியாலின்றித் தானே சிவகதியிற் சேர்த்துவானாதலின் அவர்க்கு நூல் வேண்டாமையால் மந்த தரமுள்ள சத்திநி பாதமுடையவராய் நூல்வழியால் முத்திபெற விரும்பும் (நம்போன்ற) வைநயிகர்க்கு, சிவகதி கூடுமுறைமையினை 328 பாக்களிலால் சித்தியார் கூறும். அளவையிலக்கணம் 7.10.15.1 பார்க்க.

1) 'அருளினால் ஆகமத்தே அறியலாம் அளவினாலும்
தெருளலாஞ் சிவனைஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே
மருளெலா நீங்கக்கண்டு வாழலாம் பிறவிமாயா
இருளெலா மிரிக்கலாகும் அடியரோ டிருக்கலாமே' சித்தி பா6

2) 'சன்மார்கம் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து,
பன்மார்க்கப் பொருள்பலவும் கீழாக மேலாம்
பதிபசுபா சம்தெரித்துப் பரசிவனைக் காட்டும்,
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் தாமே.' சித்திபா274

3) 'ஞானநூல் தனையோதல் ஓதுவித்தல் நற்பொருளைக்
கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா,
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞானபூசை,
ஊனமிலாக் கன்மங்கள் தபம்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன் றுயருமிவை ஊட்டுவதுபோகம்,
ஆனவையான் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோரெல்லாம்.' சித்தியார் பா 275



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றோடொன்று முறையே தொடர்புறும் சில வட தென் மொழிச்சொற்கள் (நாற்பாத சுருக்கத் தொகுப்பு)

சங்கிதை - பிரமசரியம் - மாணவப்பருவம் - சரியை - ஓதல்.
பிராமணங்கள் - ஹிருகஸ்தம் - இல்லறம் - கிரியை - சிவபூசை
ஆரணியகங்கள் - வானப்பிரஸ்தம் - காடு - தபம் - யோகம்.
உபநிடதங்கள் - சைவசித்தாந்தம்-சன்யாசம்-துறவு - குரு - ஞானம்.
(சரியை யாதியவை சித்தாந்தம், பிரமசரிய மாதியவை வேதாந்தம்.)

**ஞானம்** என்பது பொதுவில் அறிவு எனப்படினும் சித்தாந்த நோக்கில் அது நிகழும் வழிமுறைபற்றி பாசஞானம், பசுஞானம், பதிஞானமென மூவகைத்தாகின்றது. சாதாரண நிலையில் ஒருவருக்கு நிலம் நீர் தீ காற்று ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களினதும், அவற்றின் நுட்பங்களாய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பனவும், அவற்றையறியுங் கருவிகளாயுள்ள ஞானேந்திரியங்களெனும் மெய் வாய் கண் மூக்கு செவி என்பனவும், அறிந்ததைச் செயலாக்கும் கை கால் முகம்(வாய்) மகிழ்விடம் கழிவிடம் ஆகிய கன்மேந்திரியங்களான உறுப்புக்களும், விடயங்களையறிந்து அவ்வுறுப்புகளைச் செயற்படுத்தத் தூண்டும் மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனும் அகக்கருவிகளும், என 24 கருவிகள் செயற்படுகின்றன. இவை **ஆன்மதத்துவங்கள்** எனப்பட்டு அவ்வவற்றால் நிகழும் வினைகள் சுத்தியாகும் பொருட்டு, சாதகர் காலை மாலை சந்தியாவந்தனம் செய்கையில் '**ஆத்மதத்துவ சுவாஹா**' எனக்கூறி உள்ளங்கை நீரருந்துவர். (சுவாஹா என்பது, அவ்வத்தத்துவ கர்த்தாக்களை- இதிற், ஸ்ரீகண்ட உருத்திரரைத் திருப்திப்படுத்தல்)

**தத்துவமென்பது** அது இதுவானது எனப் பொருள்படும். சடமாகிய 24லிலும் இறை (அது -தத்) தடத்தமாய் அவற்றிற்கலந்து செயல்மிக்க 24 விடயங்களாகி (இது- துவம் ஆகி) உயிருக்கு வினைகளாற்ற உதவுவதைக் குறிப்பதாம். (ஸ்ரீகண்டர் உயிர்வர்க்கத்தில் பக்குவம் வாய்ந்து மாயாமல நீக்கம்பெற்று சகலரெனும் மும்மலங்களாலும் பீடிக்கப்பட்ட உயிர்களைப் பரிபாலிப்பவர்.) '**வித்யா தத்துவ சுவாஹா**' என்பதும் காலம் நியதி(விதி) கலை(அறிவு) வித்தை(செயல்) அராகம்(இச்சை) புருடன் (வினையனுபவிக்கத் தயாரான உயிர்) பிரகிருதி (தூல-சூக்கும உடல்கள்) என்ற 7 தத்துவங்களின் கர்த்தாவை – அநந்தேசரை திருப்திசெய்ய அங்கைநீர் அருந்துவதாகும். (அநந்தேசர் உயிர்வர்க்கங்களில் மேலானவராய், சிறிதே ஆணவமலச் சார்புடையவராய்ச் சிவனாணைப்படி, உயிர் வர்க்கங்கள் யாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலிப்பவர்.) ஸ்ரீகண்டரும் அநந்தரும் அணு(உயிர்) பட்சத்தினர். இவ்வாறே இத்தத்துவ கர்த்தாக்களை யெல்லாம் செயற்படுத்தும் சிவ (சம்பு)பட்சமான சதாசிவர் **'சிவதத்துவ சுவாஹா'** என அங்கை நீரருந்தித் திருப்தி செய்யப்படுகின்றார். 5 சிவதத்துவங்கள் :- நாதம்(சிவம்), பிந்து(சக்தி). சாதாக்கியம் (என்றும் புகழப்படும் இலிங்கம்), மகேசுரன் (அம்மையப்பர் கோலம்) சுத்தவித்தை (மும்மூர்த்திகள் தோன்றுமிடம்)என ஐந்தாம். இவ்வாற்றால் உணரப்படுவது யாதாயின் 36 தத்துவங்களாலாயது இப்பிரபஞ்சம் என்பதும், அவற்றை யறிந்து போற்றியே சைவனானவன் தினம் சந்தியாவந்தனஞ் செய்து தன் கருமங்களை யாற்றவேண்டும் என்பதுமாம்.இன்னமும் பலப்பல விடயங்களை இம் 36மாயாதத்துவங்கள் பற்றிசித்தாந்தநூல்கள் இயம்புகின்றன. கிரியைபற்றிய மேலுஞ் சிலவற்றை அறியின் கிரியை விளக்கம்பெற்று சாதகரை மேலும் ஆனந்தமடையச் செய்யும்.

**7.13. பிரபஞ்சம் தோன்றும் முறைமை :-** அதாவது, சிவசந்நிதியில் சிவசக்தி மாயையை அதிட்டிக்க (பொருந்த) மாயையிலிருந்து பிரபஞ்சம் தோன்றித் திதி(காக்க) ப்படும் முறைமை :- கலை, தத்துவம், புவனம், என்ற 3 பொருட் பிரபஞ்சமும் வன்னம், பதம், மந்திரம் என்ற 3 சப்த(ஒலி)ப் பிரபஞ்சமுமே 6 அத்துவாக்கள். இவை தீட்சையிலும் கிரியையிலும் அத்துவசுத்தியென சுத்திசெய்யப் படுவதனாலும் அவற்றின் தொடர்பு கண்டு விளங்கவேண்டியது பிரதானமாகும். இறைவன் அத்துவாமூர்த்தியாதல் பற்றியது :

| பொருட் | பிர | பஞ்சம் | ஒலிப் | பிர | பஞ்சம் | பஞ்சகிருத்திய அதிபதி | பஞ்சப்பிரமஅதிபதி |
|---|---|---|---|---|---|---|---|
| ஐங்கலைகள் | தத்துவ | புவனம் | வன்னம் | பதம் | மந்திரம் | கலை அதிபர் | கலை அதிபதிகள் |
| சாந்தியதீத, பராசக்தி | 2 | 15 | 16 | 1 | 3 | சதாசிவர் | ஈசானர் |
| சாந்தி, ஆதிசக்தி | 3 | 18 | 3 | 11 | 2 | மகேசுவரர் | தற்புருஷர் |
| வித்யா, இச்சாசக்தி | 7 | 27 | 7 | 20 | 2 | உருத்திரர் | அகோரர் |
| பிரதிட்டா, ஞானசக்தி | 23 | 56 | 24 | 21 | 2 | விஷ்ணு | வாமதேவர் |
| நிவிர்த்தி, கிரியாசக்தி | 1 | 108 | 1 | 28 | 2 | பிரமா | சத்யோசாதர் |
| மொத்தம் | 36 | 224 | 51 | 81 | 11 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு - அத்துவாக்கள்** மாயையாலான பொருள், மற்றும் சொற்பிரபஞ்சங்கள். தத்துவம் புவனம் கலைகளாலாய தனு கரண புவனபோகங்கள் பொருட் பிரபஞ்சத்திலும். மந்திரம் பதம் வன்னம் சொற்பிரபஞ்சத்திலும் அடக்கம். இவை ஆன்மாவுக்கு அன்னியமாயினும் வினைகளையீட்டிப் பக்குவம் பெற்றபின் முத்திபெற வழித்துணையாக இறைவனாற் தரப்பட்டவை. 'விடிவாமளவும் விளக்க னைய மாயை வடிவாதி கன்மத்து வந்து' என திருவருட்பயன் பகர்வதால் எமக்காய தனுகரணாதிகள் எமது முன்வினைக்கு ஏற்பவே வருமென்பதும், உயிர்கள் பல்கோடியாயினும் அவை தமது தநுகரணாதிகளால் வேறு பட்டு, வெவ்வேறு காலப்பகுதியில் பல்பிறப்பெடுத்து உழன்றபின் பக்குவமடையும் என்பதும் உண்மை. இவற்றைத் தீட்சையாலும் சிவபூசையாலும் சுத்திசெய்து அவற்றினின்றும் ஆன்மா நீங்கிய பின்னரே அதற்கு விடிவாகிய முத்திகிட்டும். எனவே, அத்துவாக்க ளென்பன ஆன்மாக்கள் வினையினின்றும் ஈடேறி பரகதியடைதற்காய வழிகள். அத்துவாக்களுக்கு இறைவன் பல தடத்த வடிவங்களுடன் தலைமை வகித்து அவற்றை நடாத்துவான். இதனைச் சுருதி யுக்தி அனுபவங்களா லுணர்ந்த சைவர் தத்தமது ஆன்ம ஈடேற்றத்திற் கவனஞ் செலுத்திப் பக்குவமடைந்து ஈற்றில் யாவும் சிவமயமெனக் காண்பர். இவ்வரியபெரிய தத்துவங்களை அறிந்து தெளியின், மூளைச்சலவை செய்யும் பிறரின் சைவம்பற்றிய துர்ப்போதனைகளால் நிகழும் மதமாற்றத்தை நாவலர் வழியிற் தடுக்கலாம். அஞ்ஞானமானது, ஒளிகாண அகலம் இருள்போல, ஞானத்தாலேயே களையப்படும்.

**கலை வியாபகமாய்ப் பற்றுமிடங்கள்** : 1 போகத்திற்கு இடமாய் ஆன்மாக்களைப் பற்றல் 2. முதற்காரணமாகிய விந்துவைப்பற்றல் 3. தோற்றுவதற்குக் காரணமாயும் ஆதாரமாயும் இருத்தல்பற்றி சக்தியைப்பற்றல். 4. தோற்றுவிக்குங் கருத்தாவாக இருத்தலால் சிவனைப்பற்றல். ஆன்மாக்கள் கலை முதலியனவற்றுள் ஒன்றைவிட் டொன்றை யடைந்து அவ்வாறு கிரமமாக எல்லாம் நீங்கியபின்னர் பிறப்பு இறப்பற்ற ஆனந்தத்தையடையும். குமரகுருபரர் அருளிய கந்தர்கலிவெண்பாவிலுள்ள அத்துவாக்கள் பற்றிய சில வரிகள் தரப்படுகின்றன. முருகன் இதில் அத்துவா மூர்த்தியாயுள்ளான். 'பூமேவு செங்கமலப் புத்தேளுந்தேறரிய, பாமேவு தெய்வப் பழமறையும் ...... ஓங்காரத் துள்ளொளிக்கு முன்னொளியா யைந்தொழிற்கும்

நீங்காத பேருருவாய் நின்றோனே – தாங்கரிய
மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொந்தமுறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால்
ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா — வைத்த
கலையே யவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய் - பலகோடி
அண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த் - தொண்டு படும்
ஆவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே................'

மந்திரங்கள் - குருதி, சிறந்தசொற்கள் - பெருமைமிகுமுடி, ஒன்றோடொன்று இயைபுடைய எழுத்துக்கள் - தோல், கட்டுக்கோப்பான உலகங்கள் - மயிர், தத்துவங்கள் - எழுவகைத்தாதுக்கள் (எலும்பு, தசைமுதலிய7), இயல்பாயமைந்த ஐங்கலைகள் - உறுப்புக்கள். அடுத்து, முதல்வனின் உபசாரத் திருமேனிகளான அத்துவாக்கள் பற்றி,

அத்துவா மூர்த்தி யாக அறைகுவ தென்னை யென்னின்
நித்தனாய் நிறைந்த வற்றி னீங்கிடா நிலைமை யானுஞ்
சித்துட னசித்திற் கெல்லாஞ் சேட்டித னாத லானும்
வைத்ததா மத்துவாவும் வடிவென மறைக ளெல்லாம். சித்தி- பா76

சேட்டிதன் - உடனாய் நின்று செலுத்துபவன். முதல்வனின் மந்திரவடிவு பற்றிய சித்தியார் பாடற் (பா 77,78) பொழிப்பு :- சிவசக்தி சேர்ந்துநிற்கும் சுத்தமாயையிலே தோன்றிய காரணத்தாலும் சிவசக்தியால் அதிட்டிக்கப்பட்டுச் சாதகருக்குப் போக மோட்சங்கள் கொடுத்தலாலும் மந்திரங்கள் முதல்வனுக்கு வடிவமென்று வேதாகமங்கள் கூறும்.

**7.14 சமயத் தளம்பல்கள் (அ)** சைவமரபுப்படி சிவக்குடும்ப தோற்றங்களும் லிங்கத்தின் தொடர்புடையனவே. எனினும் முழுமையான பலன் சிவலிங்க வழிபாட்டினாலாகும் என்பதற்கு பாடல்பெற்ற தலங்களே சாட்சி. தமிழ்வேதமாகிய திருமுறைகள் விநாயகர், முருகன், அம்பாள், பைரவர் ஆதியோரைத் தனித்தனி முழுமுதற் தெய்வங்களாகக் காணவில்லை. அருணகிரியாரும் முருகனைச் சிவக்குடும்பப் பின்னணியிலேயே காண்கின்றார். இவ்வாறே விநாயகனும் தோற்றம் பெறலும் சிவன் காட்டிய வழியில் நம்மனோராற் கும்பிடப்பெறுவதுங் காண்க. கந்தபுராண கலாசாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறியவர்களுக்குக் குறிப்பாக ஈழத்தவர்களுக்கு இதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

(ஆ) எனினும் சங்கரர் அறுசமயக் கொள்கையினை சரித்திரம் நோக்கி வளர்த்து சித்தாந்த விளக்கத்தால் அதனை நிறுவமுடியாது விட்டதால் இவ்விடயம் பதி பசு பாச, மற்றும் சிவபுராண அறிவற்றோர் மத்தியில் பெருங்குழப்பங்களை அன்றும் இன்றும் ஏற்படுத்தி வருகின்றது. இதனாற் சனாதனசைவங் காத்தல் மிகவும் அவசியமாயுள்ளது.

(இ).'தோடுடைய செவியன்' என்ற திருவாக்கிலேயே அம்மையப்பரின் தாதான்மிய உறவை சம்பந்தர் சுட்டியும், 'அம்மையே அப்பா' என மணிவாசகரும் பிறரும் சிவசக்தி இணைப்பை பலவாறும் புகன்றமையால் சக்தியைக் கும்பிடுவோர் சாக்தர் என்றமை, வெறும் சரித்திர சம்பந்தமேயன்றி தத்துவ நிலையிலல்ல என்றதால், இன்று அது பழங்கதையாய் விட்டது. சிவஞானசித்தியார் இதனை, 'சக்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம் ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாறு வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம் இத்தையும் ஓரார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்' என்கின்றது. உயிரெடுத்த உடலுக்கேற்றதே ஆணும் பெண்ணுமாகும்.

(ஈ) 'கொடுறும் பேதையும் கொண்டதுவிடா' என்றபடி மெய்ஞ்ஞான மின்மையே சிவகுடும்பத்தை வேறுபடுத்தக் காரணம். சித்தாந்தம் மெய்யறிவின் எல்லையென அறிந்தோர், 'யாவும் சிவன் செயல்' என்று, அவரவர் அபக்குவம்நோக்கி வாழாவிருக்கின்றனர். பிறரோ வெனில் தத்தங் கொள்கையைக் கைக்கொண்டு அவ்வளவில் மகிழாமல், சிவனுக்குச் சமமாக தத்தம் கடவுளர்களை முன்னிலைப்படுத்திச் சைவத்தமிழ் உலகிலேயே அதிக பிரசங்கித்தனம் செய்கின்றனர். இது சுருதி யுக்தி அனுபவங்களால் ஒப்ப முடியாதது. நாட்டிற்குத் தலைவன் ஒருவனேயென்பதும் வெவ்வேறு மந்திரிகளைக் கொண்டு பல்வேறு கருமங்களை அவன் நாட்டிற்காக ஆற்றுகிறான் என்பதும் (முற்கூறிய) உண்மை. அதுபோல 'படைப் போர் படைக்கும் கடவுள் காப்போர் காக்கும் கருத்துடைக் கடவுள்'எனத் திருவாசகங் கூறுவது சிவனையே என்ற விளக்கம் அறிவுடையாருக்குப் போதுமானதாம்

(உ) பாரதத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அமைந்த சைவாகம மரபுவழி அமைக்கப்பட்ட ஆலயங்களில் சிவன் யாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையாற்றவில்லை யென்பது அவர்களுக்குச் செரிக்க முடியாத உண்மை. அவர்கள்பற்றி எச்சரிக்கை அற்றிருப்பின் வருங்கால சந்ததியினரை அஞ்ஞான இருள்மேகம் சூழும் அபாயமுண்டு. ஆதலின் இவைபோன்ற எழுத்துக்களாலும் பயமற்ற நடைமுறைகளாலும் சைவங்காத்தல் நங்கடனாம். 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்பதும் மறக்கப்படுகின்றது. கீதையும் உபநிடதங்களும் மதிக்கப்பட வேண்டியவையே. ஆனாலும் 'இந்து'ப் போர்வையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசாரஞ்செய்வோர் வடநாட்டுக் கலாசாரத்தினராயும், தென்னாட்டுச் சிவவணக்கத்தை, சிவனடியார்களை, ஆகமங்களை, திருமுறைகளை, சைவசித்தாந்த (14 மெய்கண்ட சாத்திரங்களை) அறியாதும் உள்ளனர். அவைபற்றி வாய்திறவாத காரணம் அவர்களின் அறியாமையும் சிவப் பற்றின்மையுமேயாம்.

(ஊ) நால்வர் காட்டிய வழியே நம்வழியாதலின் அவர்வழி நிற்காத பல்வேறுபட்ட வடதேசச் சார்பான 'இந்து' மிசன்கள், இயக்கங்கள் 'நாம் இந்துவாக வாழ்வோம்' என்கின்றனர். சைவத்தை அறிந்து, சமயதீட்சையாகுதல் பெறாத, சிவமூலமந்திரம் தெரியாத, சொல்லத் தகுதியற்றவர்களின் (சைவருக்கு ஒவ்வாதவர்தம்) வழிகாட்டலை நால்வர், நாவலர் வழியினராய நாம் ஏற்காது சைவர்களாகவே இருப்போம். சைவம் சிவனை முழுமுதலாகக் கொண்டது. சிவனின் அடிமுடி தேடியும் அறியாத் தெய்வங்கள் பற்றிய இந்து மயக்கங்கள் எமக்காகவாம். சம்பந்தரின் எல்லாப் பதிகங்களிலும் பிரம விட்டுணுக்களாலும் அடிமுடி தேடிக்காணாத பெருமைமிகு சிவனென 9ம் பாடல்களில் பரசிவமேன்மை போற்றப்படுகின்றமை, தலைவன் ஒருவனே, அவனே சிவன் என்பதனை வலியுறுத்துகின்றன. இவ்வரலாற்றின் ஆதாரமாகவுள்ளதே சிவராத்திரி வழிபாடும் அண்ணாமலைத் தோற்றமும். மணிவாசகர் பிறதெய்வம் உண்டென்பாரைக் கண்டு,

1) 'புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
பற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே' , என்றும்

2) 'வெருவரேன் வேட்கை வந்தால் வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா எம்பிரான் தம்பி ரானாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுரு அன்றி மற்றோர் தேவரெத் தெவ ரென்ன
அருவரா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே', என்றும் அஞ்சுகின்றார். கச்சியப்ப சிவாசாரியாரின் **கந்தபுராண யாகசங்காரப் படலத்தில்,** 12 தொடக்கம் 23ம் பாடல்கள்வரை, வேதங்களும் பிரணவமும் அறிவுறுத்தியுங்கூட சிவனுக்கு அவிப்பாகங் கொடாது மறுத்த தக்கனின் வேள்வி பற்றியவை. அதிற் பங்குபற்றி, அதன் தலைமையை ஏற்ற விட்டுணு முதலாய தேவர்கள் வீரபத்திரராலும், பத்திரகாளியாலும் தண்டிக்கப்பட்டமை பற்றிய அறிவும், தெளிவும் கந்தபுராண கலாசாரத்தினரான நமக்கு மிக அவசியமாம். புராண படனங்கள் தொடராததால்,'இந்துமிசன்கள்' எமக்கு வழிகாட்டும் பொறுப்பை, பிரபல சைவாலயங்களையண்டி, ஏற்றுள்ளன. பிரம விட்டுணுக்கள் உட்பட்டச் சிறுதெய்வ வழிபாட்டை சைவராக இருந்து கொண்டு அருவராதவரை மணிவாசகர் கண்டு அஞ்சுகின்றார். நம்மவர் சைவஞானமின்றி அதனை ஆதரிக்கின்றனர். இந்நிலையினை மறுக்க தர்க்கரீதியில் சந்தானகுரவர்களால் 14, 15ம் நூற்றாண்டுகளில் ஆற்றப்பட்ட வாதங்களையும், நாயன்மார்களால் 7ம் 8ம் நூற்றாண்டில் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களையுங் கொண்டு அறிந்து நால்வர் காட்டிய வழியில் நாம் வாழ முடியாதுள்ளமை எமது குறைபாடேயாம். திருமுறை, சித்தாந்தம், சிவபுராணம் பயின்று சைவத்தை நாம் காக்கவேண்டும். 'கரும்பு கட்டோடிருந்தால் எறும்பிற் கென்ன பயன்'. 'நன்றுந் தீதும் பிறர்தர வாரா'. 'நாமே நமக்கு விதிவழி'. 'தத்தம் சமயத் தகுதி நிற்க' வென திருமூலர் கூறியபடி நாம் சித்தியார் பரபக்கம், சுபக்கம் ஆதியன கசடறக்கற்றுச் சைவத்தையறிந்து அதற்குத்தகவே நிற்கவேண்டும்.

**7.15. பஞ்சகலைகளில் முப்பத்தாறு தத்துவங்கள் :** இவை பஞ்சகலாநியாசம் முதலிய நியாசங்கள் ஆற்றமுன் அறியவேண்டிய அவசியமான ஆகமத் தரவுகள் (ஆதாரம் - சிவத்திருவடிவங்கள்).

| இல | கலை | சத்தி | தத்துவ- முதல்- இறுதி- பெயர் | எண் |
|---|---|---|---|---|
| 1 | நிவிர்த்தி | கிரியா | பிருதிவிமட்டும்-ஆன்மதத்துவம் | 1 |
| 2 | பிரதிட்டை | ஞான | அப்பு–குணம்- ஆன்மதத்துவம் | 23 |
| 3 | இச்சை | இச்சா | பிரகிருதி-காலம்-வித்யாதத்துவ | 7 |
| 4 | சாந்தி | ஆதி | சுத்தவித்தை-சாதாக்கியம்-சிவத | 3 |
| 5 | சாந்தியதீதை | பரா | விந்து- நாதம்- சிவதத்துவம் | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சகலைகளில் வன்னங்கள் - எழுத்துக்கள்** - இவை 51 வடமொழி அட்சரங்கள் :- நிவிர்த்தி - 1, பிரதிட்டை - 24, வித்தை - 7, சாந்தி - 3, சாந்தியதீதை - 16 (திருத்தம் மூன்றாம் கலை வித்தியா)

**பஞ்சகலைகளில் பதங்கள் - சொற்கள் 81 :-** நிவிர்த்தி - நமோநம முதல் மஹாதேவா வரை 28, பிரதிட்டை - மஹேஸ்வர முதல் அருபின் அருபின் வரை 21, வித்தை - வியாபின் வியாபின் முதல் தியானஹாராய வரை 20, சாந்தி - நித்ய யோகினே முதல் வியோம வியாபினே வரை 11, சாந்தியதீதை - ஓம் 1.

**பஞ்ச கலைகளில் புவனங்கள் 224**

| இல | கலை | சத்தி | முதற்புவனம்- இறுதிப்புவனம் | எண் |
|---|---|---|---|---|
| 1 | நிவிர்த்தி | கிரியா | காலாக்கினி - பத்திரகாளி | 108 |
| 2 | பிரதிட்டை | ஞான | அமரேசம் - ஸ்ரீகண்டம் | 56 |
| 3 | இச்சை | இச்சா | வாமம் - அங்குட்டம் | 27 |
| 4 | சாந்தி | ஆதி | வாமை - சதாசிவம் | 18 |
| 5 | சாந்தியதீதை | பரா | நிவிர்த்தி - அநாசிருதம் | 15 |

**பஞ்சகலைகளில் மந்திரங்கள் - 11 :-**

நிவிர்த்தி – சத்யோசாதம், இருதயம் - 2.

பிரதிட்டை – வாமதேவம். சிரசு 2.

வித்தை – அகோரம், சிகை 2.

சாந்தி – தத்புருஷம், கவசம் 2.

சாந்தியதீதை – ஈசானம், நேத்திரம், அஸ்திரம் - 3.

இவ் விபரங்களை நியாசங்களிற் பயன்படுத்துக. **குறிப்பு:-** முழுவிபரங்களை ஆகமங்களிலும், சித்தாந்த விளக்கப்படங்களிலும், சிவாசாரியார்களிடமும் அறிக. தரவுகள் தேவையினையொட்டித் தரப்பட்டுள்ளன. பூசையினைச் சுருக்கமாச் செய்யினும் இறையின் மேற்கண்ட அத்துவமூர்த்தங்கள் பிரதானம். (7.10.15ம்16ம்,7.15). இதில் இறைவன் கலை, தத்துவம், புவனம் என்பவற்றில் பொருட் பிரபஞ்சமெனவும், வன்னம் பதம் மந்திரங்களில் ஒலிப்பிரபஞ்ச மெனவும் உள்ளான்.

**7.16 ஆவாஹனாதிகளின் மேலதிக விபரம் :-** இந்நூலில் கோவில்பட்டி திருமுறைமன்ற 'சிவபூசைமுறை' பெரும்பாலும் கைக்கொள்ளபபடுகின்றதால் இவ்விபரம் அதிற்கண்டவாறேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமிக்குருக்களின் 'சிவபூசைவிளக்கம்' தரும் ஆவாஹனம், சதாசிவத்தியானம் என்பன அகப்பூசை அட்டவணையின் கீழ் உண்டு.

1.**ஆவாஹனம் -** சோதிரூபியான பரமசிவனைப் பூசையை ஏற்றருளுமாறு அழைத்தலாம். இருகை நிறையப் புஷ்பங்களை எடுத்து அஞ்சலியாக 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம'வென மெல்ல உச்சரித்துக்கொண்டு, பேரொளியாய், ஞானானந்தமாய், சுயம்பிரகாசமாய் (பிற ஒளியின்றித் தானாகவே பிரகாசிப்பதாய்) விளங்குஞ் சிவனைத் தியானித்து, சிவோகம் பாவனையோடும் பூசைக்கேற்றவாறு பெருமான் புஷ்பாஞ்சலியில் ஒளிமயமாய் வந்ததாகப் பாவித்து, அஞ்சலியை நெற்றிவரை இறக்கி, பெருமான் கோடிசந்திரப் பிரகாசத்தை யுடையவரானதாகவும் நெற்றியின் அமிர்ததாரகையால் வெளுப்பாய்விட்ட திசைகளைப் பெற்று விளங்குவதாகவும் பாவித்து, அஞ்சலியை மார்பிற்கு நேராக இறக்கி, இருதயஒளி பிங்கலை நாடியின் இரேசகத்தால் வந்து உடன் கலந்ததாகப் பாவித்து, இலிங்கத்தின் உச்சியில் 'ஓம் ஹாம் ஹிருதாய நம' வென ஆவாஹன (46,47) முத்திரையாற் புஷ்பத்தைச் சொரிந்து, பெருமான் மூர்த்தியின் இருதயத்தை அடைந்ததாகப் பாவித்து,

'மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்,
புலனைந்தின் வழியடைத் தமுதே,
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை யன்பே' — மணிவாசகம்.

2) **ஸ்தாபனம்** மேற்படி இருதய மந்திரத்தால் ஸ்தாபன முத்திரை (48) காட்டி பரமசிவனை மூர்த்தியிலிருக்கச் செய்து ஓதவும்

'செங்க ணானும் பிரமனும் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே' (அப்பர்)

3) **சந்நிதானம் :** அதே மந்திரத்துடன் சந்நிதான (49) முத்திரை காட்டி பரமசிவன் பூசகரையும், பூசையையும் திருநோக்கஞ் செய்யுமாறு வேண்டி (சாந்நித்தியமாய் இருக்கச்செய்து) ஓதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அண்டம் ஏழன்று கடந்தாய் போற்றி,
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி,
பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி,
பாரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி,
தொண்டர் பரவும் இடத்தாய் போற்றி,
தொழில் நோக்கி ஆளும் சுடரே போற்றி,
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி,
கயிலை மலையானே போற்றி போற்றி.' (திருத்தாண்டவம்)

4)**சந்நிரோதனம் :-** அதே மந்திரத்துடன் சந்நிரோதன(50) முத்திரை காட்டித் திருநோக்கத்தைப் பூசை முடியுமளவும் நிலைக்கச் செய்தல்.

'முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்,
பக்தியால் நினைந்து பரவுவார் தமக்கு
பரகதி கொடுத்தருள் செய்யும்,
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையுள்
செழுமலர் குருந்தம்மே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.' (திருவாசகம்)

**7.17 கந்தபுராண உமை கயிலைநீங்கு படலம் :** கைலாயத்தில் தேவியானவள் சிவனைப் போற்றி 'உன்தன் பொருவரு மேன்மையைச் சாற்றுவாய்' என அன்புடன் வினவ, சிவனும், சக்தி மூலமாகத் தன் சுயசொரூப, தடத்த நிலைகளை உலகினர்க்கு உணர்த்தும் நோக்கில், தன்னைப் பின்வருமாறு புகழ்ந்தான். இதனால் தேவிக்கும் இறைவனுக்கும் இடையில் நிகழ்ந்த வாக்குவாதங்களும் பிறவும் சிருஷ்டி, மற்றும் புனருற்பவ தத்துவங்களை உணர்த்தும் புராண இலக்கியமாகக் கச்சியப்பசிவாசாரியார் தருவதைக் கற்றல் தகும். 'கந்தப்புராணத்தி லில்லாதது வேறெந்தப் புராணத்திலு மில்லை.'- முதுமொழி. பாடல்கள் தக்ககாண்டத்திற் பார்க்க.

**இறைகூற்று :-** 1). தனக்கெனக் குணம் செயல் இன்றிச் சுத்தமாய் சச்சிதானந்த சொரூபியாய் எங்கும் நிறைந்ததும். உயிர்களின் உய்திக்காக சக்திசங்பற்பமெனும் சக்தியினிடமாக நின்று சங்கற்பித்ததும் (சங்கற்பம் - உன்னல். மனக்கொள்கை), 2). அதனால் பஞ்சசக்திகளை உதவியதும், அவற்றின் வழியால் அருவுருவைப் பொருந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவ உருவமெனும் பஞ்சசாதாக்கிய வடிவினைத் தியான, (மற்றும் ஆன்மார்த்த, பரார்த்த) பூசைகளைச் செய்து அனைவரும் உய்யும்படி ஆயதும், 3) கேவலவடிவம் எனும் 25 மகேஸ்வர மூர்த்தங்கள் ஆனதும், 4). வியாபகமாயுள்ள சுத்தமாயையில் விளைதல் ((முன்குறித்த பஞ்சபேதம், நவந்தருபேதமாகிய தடத்த வடிவங்கள்) உளதாகச் செய்து, அதன்மேலும், அருள்புரி மூர்த்திக ளெனும் உயிர்வர்க்கங்களில் மேலான விஞ்ஞானகலரான அநந்தர், பிரளயாகலராய ஸ்ரீகண்டர் என்போர் மீதிருந்து அவரையதிட்டித்து நின்ற நிலையும், 5) ஆதியான மாயைகளை மூலமாகக்கொண்டு அதில் முடிவற்ற (தோன்றி நின்றொடுங்கும்) 36 தத்துவங்களை தோற்றியதும், பஞ்சகிருத்தியங்களைத் திருவுள்ளத்திற் பொருந்திய கருணையாகிய திருவருளால் (தனது சக்தியால்) நடாத்துந் தன்மையும், 6.) சிருஷ்டிக்கப்பட்ட சகலர் முதலாய மூன்று வகையான உயிர்த் தொகைகளும் (தாந்தாம்) ஒன்றிலிருந் தொன்று உயர்ந்து கதிக்கின்ற (மிகுந்து சிறக்கின்ற) தத்துவக் கூட்டங்களாகி, (224 புவனங்களில் தத்தம் ஆன்ம ஈடேற்றத்தின் அடிப்படையில்) ஆங்காங்கே வசிக்கும் தத்துவவாசிகளான அவை முன்னர் எவ்வாறு கிரமப்படி சிருஷ்டிக் கப்பட்டனவோ அம்முறையிலேயே ஒடுக்கி அருளலும், (**குறிப்பு:** சிவமுதல் பிருதுவியீறான 36 தத்துவங்களும் ஆரோகண முறையில் விரிதல் சிருஷ்டி, அதே முறையில், ஆனால் பிருதுவி முதல் சிவமீறாக அவரோகண முறையில், ஒடுங்கல் ஒடுக்கம்.) 7) தாம் ஏகப்பொருளாய் உருவொடு குணஞ் செயலொன்றின்றி நிற்பதுமாகிய சொரூபம் - தன்சுவரூபம், தடத்தமாகிய இயற்கைகள் அனைத்தையும் கந்தனைப் பயந்தவனான இறைவன் தேவிக்குப் புகன்றருளினான்.

**தேவியின் வினாவும், இறைவனின் விடையும், பின்னைய நிகழ்வுகளும்** : (இது மிக ஆழமான சித்தாந்தப்பகுதி. கச்சியப்ப சிவாசாரியாரின் அதிநுட்ப சித்தாந்த அறிவு இதனாற் புலப்படுகின்றது. தனது விடையின் தாற்பரியத்தை இறைவன் தனது திருவிளையாட்டால் நிகழ்த்திக் காட்டுதல் சிவசக்தியுறவை அறியவொரு நற்சந்தர்ப்பமாம்.)

இதனைக் கேட்ட தேவியானவள் இவ்வாறெல்லாம் தேவரீர் கொள்ளும் சுவ, தடத்த உருவங்களை அறிந்தோம். பெருமானே, தேவரீருக்கு உரு முதலியன ஒன்றுமில்லை யென்றபின் பஞ்சசாதாக்கியம் முதலிய உருவங்களை அடைந்தது ஏன்? என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பெருமான், எமக்கென உருவில்லை, மேற்குறித்த உருவம் யாவும் நம்மோடு பேதமின்றி அபின்னமாயுள்ள சக்தி காரியங்களான அருள் வடிவங்களாம் என்றருளவும், உலகை ஈன்றவளான தேவி அதனைத் தமக்கு வாய்ப்பாகக் கொண்டு, மகிழ்ந்து, மேற்குறித்த உலகுயாவும் அருட்சக்தியினால் உண்டாவதும், தேவரீரின் அருட்சக்தி யானேயென்பதும் உண்மையாதலின் அவ்வடிவங்கள் யாவும் என் வடிவேயாம் என, பெருமானின் வாமபாகத்துறையும் தேவி தற்புகழ்ச்சி தோன்றக் கூறியருளினாள். அதனைக் கேட்ட யானைத் தோலுரித்துடுத்த பெருமான், உமையே நீ ஆன்மாக்களுக்கு நன்மையைச் செய்யும் நின்புகழை நீ விரும்பி எம்முன்னிலையில் உன்னை நீயே வியந்தனை, (என்றபின் தனது முடிவிலாற்றலைக் கூறத் தொடங்கினார்.)

இருளாகிய ஆணவமலத்திற் கட்டுண்டு கிடக்கும் உயிர்கள் தோறும் ஒன்றாய்க் கலந்திருந்து அவ்வுயிர்கள் இருள்நீங்கி ஞானமுறுதலை நிகழ்த்துவோம். அவற்றுடன் கலந்திருந்து கொண்டே அந்நிகழ்த்துகையை நீக்குவோமானால் மயக்கம் பொருந்திய சடப்பொருளாய் அவ்வுயிர்கள் அழிந்துபடும். சித்துக்களாகிய உயிர்கள் இவ்வாறழியின் சடமும் அவ்வாறே அழிதலைக் கூறவேண்டிய தில்லை. எம்மோடு அபின்னமாயிருக்கும் உன்னிடத்திலே தானும் நாம் பொருந்தாதவழி உன்னுடைய ஆன்மாவும் உணர்ச்சி கைகூடாது. அவ்வியல்பை உனக்குக் காட்டுதும் என்றருளி, பிரமா முதலிய நிலைபெற்ற உயிர்களை இயக்குவிக்கும் தன்மையை நீக்கியருளினான். இதனால் ஆட்டுவிப்பானின்றி ஆடாத பாவைகள் குலைந்து வீழ்ந்ததே போல உயிர்கள் யாவும் உணர்வின்றிக் கிடந்தன. தாயாகிய பெருமாட்டி இதனைச் சிந்தித்துக் கலங்கி, சிவபெருமானின் திருவடிகளை வணங்கி இதனை இரந்து கூறுவாள்.

'எம்பெருமானே, நீவிர் எல்லாமாய்க் கலந்திருப்பதன் பயன் முழுவதையும் அறிய வல்லேனில்லை. உயிர்களினிடத்தே அத்துவிதமாய்க் கலந்துநின்று, அவற்றில் நின்னை அறிதலாகிய திருவடிஞானமாகிய தெருளறிவை நிகழ்த்துங் கருணையை யாம் அறியவில்லை. இதனை எமக்குணர்த்தும் பொருட்டு, அவற்றினின்றும் நீங்கி அவற்றைப் பேரிருளில் ஆழ்த்தியுள்ளீர். உமக்கோர் இறைப்பொழுதாய இந்நிகழ்ச்சிக் காலம் உயிர்களுக்குப் பல யுகங்களாகும். என்னால் நிகழ்ந்த இப்பிழையைத் திருவுளத்திற் கொள்ளாது, உயிர்கள் தெளிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெழுந்து விருத்தியுறுமாறு அருள்புரிவீராக.' பன்முறை இவ்வாறு பணிந்துகேட்ட உமைக்கருளும் வகையில், உயிர்கள் முன்புபோல வினைப்பயனை நுகரத் திருவுளங்கொண்டு, முதலிற் தமது செவ்விய திருவருளையடைந்த பல்வகை உருத்திரர்களுக்கு (சிவசாரூபம் பெற்ற 11பேர்) பெருமான் உணர்வருளியதும், அவர்கள் இச்செயற்காரணத்தை அறிய, நள்ளிருளில் நடஞ்செய்சிவனை நினைந்து, அவனருளும் ஞானத்தால், இது பிரமவிட்டுணுக்களால் அறியாத சிவனது ஆடலேயென அறிந்து, உணர்வு மாய்ந்திருந்த உயிர்களை எழுப்ப விரும்பித் தம் எண்ணத்தை நிறைவேற்றச் சிவனை நினைந்து அர்ச்சனையாற்ற எண்ணினர்.

(**குறிப்பு** : உயிர்களில் மும்மலமுடைய சகலநிலையில் நின்றும் மாயையைக் கடந்து, பிரளயாகலர் நிலைபெற்று, ஏனைச்சகலர் களை ஆளுந்தகுதி பெற்ற 11உருத்திரர்கள், தங்கடமையைச் சிவனாணைவழி செய்வர்.)



இறைவனாடலால் அவருக்கு அணிகளாகவும், விழிகளாகவும், மூர்த்தமாகவும் விளங்கும் சந்திரசூரியருட்பட்ட யாவும் ஆகாயத்தில் இயக்கமின்றி இருந்ததால் இருளில் மூழ்கிய பூமியின் கண்ணுள்ள திருவிடைமருதூரை அடைந்தனர் ('வானிடத்தவரும் மண்மேல் வந்து அரனை அர்ச்சிப்பர்' சித்தியார்). எங்கும் இருள் மூடியிருந்ததால் அவ்விடத்தில் சிவனுக்கேற்ற பூசைக்கிரமம் யாதெனச் சிந்தித்து, அரு அருவுரு உருவெனும் மூவகைத் தடத்தமேனிகளில் தாமரை மலர்போல, இதயத்தில் விளங்குகின்ற முக்கண்ணர்க்கு அமைந்தருளிய **பஞ்சசாதாக்கியத்துட் பொருந்திய அருவுருவத் திருமேனியே** அதுவெனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்து (அகப்பூசையாற்ற) மண்டலவிதிப்பிரகாரம் தாபனம் செய்தனர். (குண்டம், மண்டலம், வேதிகை என்பவற்றில் மண்டலம்பற்றி அகப்பூசையிற் காண்க).

அன்புள்ளத்தினராய பதினொரு உருத்திரரும் பதினாறு வகையான உபசாரங்களையும் அமைத்துக்கொண்டு, பிரம விட்டுணுக்கள் (முதலில்) வழிபட்ட சிவராத்திரி பூசையைச் செய்ய முயன்றனர். விபூதி, உருத்திராக்கம் அணிந்து சிவனின் அருவுருவத் திருமேனி யையும் அவரியல்புகளையுந் தியானஞ் செய்து, 16 சோடசகலாப் பிரசாத மந்திரத்தையும் (பஞ்சப்பிரம - 5, அங்க - 6, பஞ்சகலா - 5) ஐந்தெழுத்தையும் சிந்தித்துச் செபித்து, மற்றுமுள்ள விதியனைத்தையுஞ் செய்தபின், (இனிவருவது **புறப்பூசை**), வில்வம், தாமரை மலரிதழ், சிவந்த சாதிமலர், நந்தியாவர்த்தம் ஆகியவற்றால் சிவநாமங்கள் சொல்லி அர்ச்சித்தனர். பச்சைப்பயறு, பால், எள் என்பவற்றாலாய அன்னம், சுத்தான்னம் என்பவற்றை முறையே நான்கு ஜாமங்களிலும் நிவேதித்துத் துதித்து, மற்றுமுள்ள விதிகளை யுஞ் சிந்தித்துத் செய்த சமயத்தில் அவர்கள் முன் சிவபெருமான் தோன்றி, பதினொரு உருத்திரர்கள் விரும்பியவாறு சகலவுயிர்களும் இயக்கமுறத் திருவுளங்கொண்டு அருளுதலும், பிரம விட்டுணுக்கள், இந்திரராதி திக்குப்பாலகர்கள், தேவர், முனிவர், சித்தர், கிம்புருடர் மற்றுமுள்ள உயிர்க்கூட்ட மனைத்தும் எழுந்தன. அட்டகுல மலைகள், அட்டயானைகள், அட்டமாநாகங்கள், பூமியை முன்போலச் சுமந்தன. பாதாலத்தில் கூர்மம் (ஆமை) பூமியைத் தாங்கிற்று. ஆகாயத்தில் சூரியர், சந்திரர், நட்சத்திரங்களும் பிறவும் சஞ்சாரஞ்செய்தன. பிரமனாதியோர் இவ்வாறாகப் பிரபஞ்சமுழுதும் முன்போல் ஆனமை சிவனின் செய்கையேயென உணர்ந்தனர். இப்புராணத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளும் சிவம், சக்தி, மற்றுமுள்ள உயிர்வர்க்கங்களில் மேன்மைபெற்ற பல்வகை உருத்திரராதியோர், பிரமவிட்டுணுக்கள் பூமியைத்தாங்கும் ஆதிசேடன் முதலியனபற்றியும், சிவபூசையையும் தத்துவத்துடன் அறியவைக்கின்றன.

**7.18. புத்தர்காலமும் வேத-ஞானகாண்ட எழுச்சியும் :** (7.1.2, பக்202ன் தொடர்.) இவ்வழி வந்த வட பாரம்பரியத்தினராய போகருக்கு கதிர்காமத்தில் தெய்வானையம்மன் கோயிற்சூழலில் ஆலயமொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டுள்ளது. (போகர்பற்றிய ஆங்கில நூலொன்றில் இத் திருமந்திர 4ஆம் 5ஆம் பாடற்செய்திகள் காணப்பட்டன.) இதனாற் பாரதத்தில், சிவனருளிய நூல்களில் வேதம்பொது ஆகமஞ் சிறப்பெனும் அடிப்படையில், புத்தர் வரவின்பின் நாலாதிசைகளிலும் ஞானகுருபீடங்கள் தத்தம் அளவிற் பலவாறு உருவாகின. இதனால் புத்தம் பாரதத்தில் நலிவதாயிற்றென்பது சரித்திரம். இந்த ஞானவெழுச்சி புத்தம் பரவிய ஏனைத்தேசங்களில் எழவில்லை. புத்தம் ஒழுக்கநெறி தப்பியோரையும், வேதக்கருமகாண்டம் மட்டும் கொண்டோரையும் நெறிப்படுத்தவும்தான் எழுந்தது. தென் கிழக்காசிய நாடுகளில் அது விளங்குகின்றமை சரித்திர, தர்க்கரீதியிலான உண்மை. பல்சமய ஸ்தாபகராய சிவனின் ஆடலே இதுவெனலாம். புத்தரின் வருகையால் ஏலவே மறந்தோ மறைந்தோ இருந்த வேதத்தின் ஞானகாண்டம் தளிர்விட ஆரம்பித்தது. வேதாகமங்களில் புத்தர் கவனஞ் செலுத்தியதான செய்திபற்றி அறியமுடியாவிடிலும், கிரியா-வேள்வி மார்கத்திற்கு எதிரான, உலகப்பற்றை வெறுப்பதான, மாயை நிலையாமை பற்றிய புத்தரின் கருத்துக்கள் மக்களைத் திசைதிருப்பின. இக்காரணிகளால் சிவனே புத்தரைப் புவிக்கு அனுப்பி வேதத்தின் ஞானகாண்டத்திற்குப் புத்துயிரளித்தாரென்க.





கிரியாவான்களாயிருந்து வேள்வியாற்றி, (காமிய)ப் பயனிலேயே மக்களையும், அரசர்களையும் தமது ஆளுமைக்குட்படுத்திய பிராமணச் செல்வாக்கு சரிக்கப்பட்டது. வித்யா பீடங்கள், மடாலயங்கள். ஞானநூல்கள் வாயிலாக (பிரதானமாகத் தமிழிலும். வடமொழியிலும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமார்க்கம் பற்றிய செய்திகள் வெளிவந்தன. ஆகமரீதியில் அமைந்த கோவில்கள், அவற்றிற்காய (பரார்த்த) கிரியைகள் ஆரிய திராவிட ஆன்மீகக் கலப்பின் நற்பேறானதை சரித்திரவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். திருமுறைகளாலும், புராணங்களாலும் இவை சான்றாதல் பற்றி ஆராயின் தெரியவரும். சைவசமயாசாரியர்கள் (7ம்,8ம் நூஆ), சந்தனாசாரியர்கள் (12,13,14ம்நூஆ), சங்கரருட்பட அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், ஆரோக்கியமான சமயவாதங்களால் வெல்லப்பட்டு வேதாகமக் கொள்கைகள் நிலைநாட்டப்பெற்றன. மெய்ச்சமயம். இதுவென்றமையும், எனையவை (நிராகரிக்கப்பட்டு-பூர்வபக்கமாக்கி அவை - மறுதலிக்கப்பட்டாலும்) உயர்நெறிக்காய படிமுறைகளே என்றமையும் பற்றி மெய்கண்ட சாத்திரங்கள் சம்பந்தர், அப்பர் சரித்திரம்- பெரியபுராணம் என்பவற்றிற் காணலாம்.

**7.19 வேண்டும் வரம் :** தத்தமதும், சூழலினதும் துன்பநிலை நோக்கி வரங்கேட்கலாம். எனினும் தக்கன், சூரன் போலன்றி நிலைத்ததும், தனக்கும் பிறர்க்கும் பயனளிக்கும் படியானதுமான வரங்கேட்டல் மிகநன்று. உடனளிக்கப்படும் அத்தகுவரங்கள் அழியாதவை. காரைக்காலம்மை கேட்ட பிறவாமை, பிறந்தால் உன்னையென்றும் மறவாமை, மணிவாசகர் வேண்டிய நின்ற கழற்கண் அன்பு, பதஞ்சலி, வியாக்கிரபாதர் கேட்ட சகலவுயிர்களும் உய்யும் வண்ணம் தினமும் நீவிர் இவ்வாறே ஆடவேண்டும் போன்றவற்றையும், நாயன்மார் தமக்கும். பிறர்க்கும், அடியார்க்கும் பயன்படுமாறு கேட்டவை போன்றவற்றில் தாமே தெரிந்து அவ்வப்பாடல்களை ஓதலாம். சிவதருமோத்திரங்கூறும் வரங்கேட்கு முறைமை பற்றிய "பரமனை....." எனும் பாடலின் பொருள்: மேலான சிவபெருமானை மிகுந்த ஒருமைப்பாட்டுடன் மனத்தில் எண்ணியும் திருவைந்தெழுத்தை ஏற்றத்தாழ்வின்றி முறைப்படி ஓதியும் துதிக்கின்ற அடியவரின் முன்னைப் பாவமகற்றி இப்பிறப்பிலேயே அவர் வேண்டும் வரமருளி முத்தியுங் கொடுப்பான். (10.12 பக் குறிப்பு பார்க்க)

இனி 7.21ல் வரும் **துவஷ்டாவின் நித்திய பூசையும்** அது தொடர்பாக அவனின் பிரமதேஜஸும் பற்றிய, ஆசிரியர்கூற்று : 'சீர்மரு சிகையுஞ் சிவபூசைக் களையார் திருமுக மண்டலத் தொளியும் கார்மரு முருத்ரகண்டி வெண்ணீற்றுப் புண்டரமும்புரி நூலும் பேர்மரு மேன்மைப் பிரமதே சுமேர் பிறங்கிட நிறங்கிளர் துவஷ்டா...' என்பதாம். இதனாற் சிவபூசைப்பலனை அறியமுடிகின்றது. மேலும் இவ்வாறவன் சிவபூசைமுடித்து வணங்கியெழும் போது: "ஆகாச வெளியொளி பரவச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தசைதன்யச் சிவச்செழுஞ் சோதி தூவெள்ளை யிடபமீ தூர்ந்து மைத்திகழ் கூந்தற் கௌரியோ டுடனாய் மருவியங் கவன்கணிற் காண' நின்ற காட்சிகண்டு, அகங்குழைந்து, மெய்நடுங்கத் தன்வசமிழந்து நின்றான். அந்நிலையில் இறைவன் 'துவஷ்டா எழுந்திரு. இதுவரை நீ ஆற்றிய பூசையினை யாமேற்று மகிழ்ந்தோம். 'ஆழிசூ ழுலகில் அறநெறி தழைக்க ஆருயிர் வாழ்வொளி மலர வாழிய சைவம் வழமுற (இவற்றில் நீ) வேண்டும் வரமெவை விளம்புதி' யென்றான். '**ஈது கேட்டலு மேன்றெழு தோட்டா இருகை யுச்சிமே லேறிட நின்றே மாது பாகநின் மலரடி போற்றும் வாழ்வு தந்தனை மற்றது மகிழ்ந்தேன் ஏதும் மற்றவை எனக்கியை வனதா மிருக்கி னும்ம(அ)து திருவுள மறியும்**' எனப் போற்றி நின்றான். இதுவே 'வேண்டத்தக்க தறிவோய் நீ' என்றவாறான உயர் நிலையான வேண்டும் வரமாம்.

**குறிப்பு : 1) ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்** எனும் மூவகைத் துன்பங்கள் முறையே உயிர்களால், பஞ்சபூதங்களால், தெய்வங்களால் தீராநோய்கள் என பிராரத்த வினையால் வருவன. (சிவஞானபோத சிற்றுரை விளக்கம் பாவுடையார்) இதிற் தெய்வங்களாலாகும் துன்பம் தெய்வங்களாலேயே தீர்க்கப்படவேண்டும் அல்லது பிராரத்தத்தின்படி இப்பிறப்பிலதனை யனுபவித்தே யாகவேண்டும். கண்பார்வையிழந்து வைத்தியராற் கைவிடப்பட்டு, சுந்தரர் பாடிக் கண்பெற்ற 'மீளா அடிமை...' தினம்பாடிப் பலர் சுகமடைந்துள்ளனர். கிரக தோஷங்களுக்குப் பலரும் 'வேயுறு தோழி பங்கன்' பத்தும் பாடமாக்கிப் பாடுவர். இவ்வாறு பாடிப் பாரிய குண்டுவீச்சிலிருந்து தப்பிய, சந்தியாவந்தனஞ் செய்யும் கணக்காளரும் சித்தாந்த ரத்தினமுமான பெண்மணி ஒருவரின் கதையும் வேறும் பலநிகழ்வுகளும் நிஜமாகவேயுள்ளன.

**குறிப்பு 2): திருமுறைகள்** எமக்காகப் பாடப்பெற்றவை. அனுபூதிமான்களின் பொய்யாமொழிகளை உண்மையுள்ளத்துடன் ஆசாரமாயிருந்து ஓதிவரின் அவை மந்திரம்போல நினைத்தவற்றைத் தருவன. தீராத பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்படியான மறைமுகக் கருத்துக்களை அதிகாலை வாயிலூறும் திருப்பாடல் வரிகளாலோ, தாம் வணங்கியோதும் யாதாயினுமொரு திருமுறையிற் திருக்கயிற்றினைச் சாத்தியோ படித்துப் பயனடைவோர் பலர்.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப்படும்
வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை
ஆண்டும் அ:.தொப்பது இல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேண்டத் தக்க தறிவோய்நீ வெண்ட முழுதுந் தருவோய்நீ,
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி என்னைப்
பணிகொண்டாய், வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால், வேண்டும் பரிசொன்
றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே' - திருவாசகம்.

**7.20: நித்தியாக்கினி -** இது தினம் ஆற்றப்படும் அக்கினி காரியமாம். இதற்கு மட்பாண்டம், அக்கினிகுண்டம் என்பன பயன்பட்டன. கதிர்காம சரித்திரத்தில் நித்தியாக்கினி வளர்க்கப்பட்டே வந்துள்ளது. இன்றும் அது வளர்க்கப்பட்டாலும் அன்றுபோற் பலர் சூழ்ந்து தொடராக வளர்ப்பதில்லை. ஆயினும் அவை அங்கே சூக்குமமாக முன்போல நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. இக்காலத்தவர் அவ்வப்போது அக்கினியுண்டாக்கி வளர்ப்பர். **(குறிப்பு:** பிராமணோத்தமர் ஒருவர் நீண்டதோர் தலயாத்திரையினை இந்தியாவிற் செய்தபின் கதிர்காமத்தை வந்தடைந்தார். அவர், தம்முன்னோர் புற அக்கினியின்றித் தமது அன்றாட சிவபாவனையாற் பெற்ற சக்தியினால் மூலாதாரத்திலிருந்தே பெற்றுத் தீவளர்த்ததாகக் கூறினார். சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் இருவரினதும் முன்னிலையில் திருநீலகண்டரின் அக்கினிகாரியத்தில் வளர்த்த (அறாத, நித்திய) தீயானது வலஞ்சுழியாக வளர்ந்தமை பற்றிய சேக்கிழார் கூற்று: 'ஆங்கு வேதியில் அறாதசெந் தீவலஞ் சுழிவுற்(று), ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத், தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர், பாங்கு பாணியாருடன் அருளாற்பள்ளி கொண்டார்'- பெரியபுராணம். சிவாக்கினி வளர்த்தல் உலக உய்தியின் பொருட்டென்பதை 'கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் 'என்றதினதும், 'பன்னு மறை வல்லவர் பரிந்தழல் வளர்ப்பார்' என்ற திருவாதவூரடிகள் புராணவரியினதும் பொருள் **உலகோர்மீது அன்புகூர்ந்து நித்தியாக்கினி** வளர்க்கும் பிராமணர் என்பதாம். சிவபூசையில் வளர்க்கும் அக்கினி சிவாக்கினி. (வைதிகாக்கினியன்று) சிவாக்கினி முறையில், சிவனது வீரியத்தால் சிவையின் வயிற்றிலிருந்து சிவபுத்திரனாகப் பிறந்தவனே அக்கினி. இவனைத் தோற்றுவிக்கும் முறை சிவாகமங்களிலும் பத்ததிகளில் உண்டு. வைதிகவினை (வேள்வி அக்கினி) அசுத்தபோகம் தரும்.

கைலாசநாதக்குருக்கள் எழுதிய **'சைவத் திருக்கோவிற் கிரியை நெறி'** என்ற நூலிலிருந்து நித்தியாக்கினி கார்யம் பற்றியது :- இதற்காக சுவாமியின் சந்நிதியில் நிரந்தரமாக அமைக்கப்பட்ட குண்டத்தினையணுகி, நிரீக்ஷணம்முதலான நான்குவகைச் சம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரங்களைச்செய்து, குண்டத்தைக் கலாமயமாகக் கற்பித்து, எண்வகை மலர்களால் அர்ச்சித்து, அவிச்சின்னமான அக்கினியைத் தியானித்து, பரிதிகளையும் விஷ்டரங்களையும் குண்டத்தில் உரியவிடங்களில் வைத்து, பரிதிகளில் பிரமா விட்டுணு உருத்திரன், ஈஸ்வரன் ஆகிய நால்வரையும், விஷ்டரங்களில் இந்திரன்முதலிய திக்குப் பாலகர்களையும் அருச்சித்து, அர்க்கியங் கொடுத்து, சிருக்சுரவ சம்ஸ்காரங்களையும், ஆஜ்ய சம்ஸ்காரங்களையும் செய்தல்வேண்டும். அங்கு கனன்று மூண்டெரியும் அக்கினியைச் **சிவாக்கினியாகப்** பூசித்து, அக்கினியின் நடுவிலுள்ள இதயத்தாமரை மலரில் சிவனை ஆவரணங்களுடன் அருச்சித்து, முலமந்திரத்தாலும் பஞ்சப்பிரம மந்திரங்களினாலும் ஆகுதிசெய்து, சருஹவனம்வரை அக்கினிகாரியத்தை நிறைவேற்றிப் பூர்ணாகுதி கொடுத்தல் வேண்டும். பின்னர் பரிதிவிஷ்டரங்களில் உருண்டை வடிவான அன்னத்தினாற் பலியிட்டு, புஷ்பங்களை அஞ்சலியாக எடுத்து ஜபஞ்செய்து, மூலலிங்க சமீபமடைந்து உத்பவமுத்திரையால், 'நான் செய்தது செய்யவிருப்பது அனைத்தும் நற் செயலாயமைதல் வேண்டும். நீ அனைத்தையுங் காண்பவன். நீயே ஒப்புயர்வற்றகதி' என்னும் பொருள்படும் சுலோகவடிவான ஷமர்ப்பண மந்திரங்கூறி இறைவனுடைய வரத ஹஸ்தத்தில்-வலக்கையிற் சமர்ப்பித்தல்வேண்டும். நித்தியாக்கினி கார்யம் முடிந்ததும் நித்தியோற்சவம் நிகழல் முறைமை.

அக்கினிகாரியத்தின் பெருமையும் அதன் சீரியபயனும் திருஞானசம்பந்தர் சோதியிற்கலந்த வரலாற்றால் அறியக் கிடக்கின்றது. செழுந்திரு நீலநக்கர் ஞானசம்பந்தரின் திருமண சேவகத்தினை ஆற்றுகின்றார். அவரின் தவவலிமையால் அங்கே நடக்கப்போவதை அறிந்து அதிசிரத்தை யுடன் அக்கினிகாரியம் நிகழ்த்துகின்றார். வேதவொலி பொங்கி ஓங்குகின்றது. மங்கல வாழ்த்து எங்கணும் நிறைகின்றது. தம்பதிகள் இருவரும் எரிவலம் செய்வதற்காய ஆயத்தங்கள் தயாராகின்றன. மனையாள் கைபிடித்துவரும் பிள்ளையார் திருவுள்ளத்தில் 'விருப்புறும் அங்கி யாவர் விடைஉயர்த் தவரே' என்ற எண்ணம் மேலோங்க, திருப்பெருமணத்தானை மேவும் சிந்தை தெளிந்து,

'மந்திர மறையால் உய்த்த எரிவலமாக மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாளர்
'இந்த இல் ஒழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள்தன் னொடும்
அந்தமில் சிவன்தாழ் சேர்வன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஆதரவு பொங்கச் செல்கின்றார். சுற்றமும், தொண்டர்களும் சூழ, பதிஞானம் பெற்று இதுவரை தாமாற்றிய சிவம்பெருக்குங் காரியங்கள் நிறைவுற்று, மோனமே ஞானத்தினெல்லை - அது திருவடியில் அமர்ந்திருத்தலே யெனும் உணர்வு மேலிட பெருமணத்தான் கோவிலை நோக்கி வருகின்றார். வந்தவர் இறைவனை நோக்கி 'கல்லூர் பெரு மணம் வெண்டா....' என்னும் பதிகம் பாடியதும் அங்கே 'யாவரும் இச்சோதியிற் கலவுங்கள்' என்ற அசரீரியுடன் தோன்றிய சோதி, தன்னுட்புகும் வாயிலை வகுத்துக்காட்ட, தாமும் மனையாளும் சிறிதே தரித்துநின்று, யாவரையும் சோதியுட்புகச்செய்து, தாம் ஈற்றில் 'காதலாகி'யெனும் நமச்சிவாயப் பதிகம்பாடி, மனையாளுடன் சோதியிற் கலந்தார். கோயிற் பிரகாரம் யாவற்றையும் அடக்கிய அச்சோதி பின் தணிந்து, கோவிலைக் காட்ட உலகோர் பெருவியப்பெய்தினர்.

**7.21 பாவானியன்ற சிவபூசைச் சுருக்கம்.** புராணங்களில் ஆங்காங்கே சிவபூசைகள் பல வருகின்றன. புராண ஆசிரியர்கள் அவற்றை தத்துவக் கருத்துக்களுடன் சிறப்பாக விபரித்துள்ளனர். அதிலொன்று இலக்கியகலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களின் (1989) திருகேதீஸ்வர மான்மிய முதலாம் - புராதன காண்டத்தில் வரும் **கேது பூசைசெய் படலம்.** அதன் சில பகுதிகளின் சுருக்கம். **குறிப்பு** :- சங்கிகன் என்பான் களவாகப் பாற்கடல் அமுதருந்தி திருமாலால் தலைவெட்டப்பட்டவன். சிவபூசையாற்றி வரம் பெற்றபின் கேதுவாகி ஞானகாரகனாய் உபக்கிரகமும் ஆனான்

1). 'கயிலை நீங்கிய சைங்கிகன் கடுவிசை யினிற்போந்
தயிலை முக்கருப் படையினன் அருள்நலம் பேணிப்
பயிலை வேறுள நியமத்திற் பாலாவி மூழ்கி
எயிலைக் காய்ந்தவ னிலங்குமக் கோளகை யணுகி.'

சைங்கிகன்- சிங்கிமகன். அயிலை முக்கருப்படை - சூலப்படை, பயில் ஐ வேறு உள நியமம் - பயின்ற ஐவகை நியமங்கள். சங்கற்பம் தாடனம் அகமர்ரஷம் தர்ப்பணம் தானம் என்பன.

2). 'ஐவ கைப்படு சுத்திசெய் தகம்புற மிறைஞ்சிச்
செவ்வி தின்னறு மலர்புகை தீபமஞ் சனமுங்
கைவ கைப்பயில் சாதன மியாவையுந் தொகுத்து
மெய்வ கைச்சிவ பூசனை முயலுந னானான்.'

3). 'மோக மேவிட முடுகுமைம் புலவுணர் வனைத்துங்
காம வாயுவி னோட்டமுங் கையகப் படுத்தி
வேக மாகமேற் கொண்டெழு குண்டலி யோக
பாகங் கைவரு பண்ணவ னாதலிற் கேது.' -
(முடுகுதல்: விரைதல், கையகப்படுத்தல்
- கைப்பிடியாகப் பிடித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4). 'ஆகத் தோன்றுமா தாரங்க ளாறும்விட் டேறி
ஏக மாஞ்சிவத் தன்னையுன் மனாந்தத்தி லியையுஞ்
சோகம் பாவனை யுறைப்பினிற் சுகித்திருந் துயர்சீர்
ஆக மோக்தமாம் பூசனை யமைதியி லாழ்ந்தான்.' –

(ஆகம் - உடல், உன்மனாந்தம் - உன்மனாகலையின் விளிம்பு. ஆகமோக்தம் - ஆகம உக்தம், ஆகமங்களிற் சொல்லப்பட்டவை.)

5). 'ஆவி நல்வளா கத்தினுக் கப்புறத் தகன்று
மேவி நின்றொளிர் விரிசடை நந்தியைத் தொடர்ந்து
கூவிக் கொண்டுவந் துற்றதோர் குறியினிற் சேர்த்துத்
தாவிக் கும்பிரா சாதமந் திரநெறி தழுவி' -

ஆவி...அகன்று : ஆன்ம(24) தத்துவத் தப்பால் வித்தியா தத்துவத்தில் மனதாற் சென்று, கூவி – அழைத்து, குறி – பீடம், இலிங்கம் அல்லது மூர்த்தி, தாவிக்கும் - ஸ்தாபிக்கும், பிரசாதமந்திரம் - பதினொருமந்திரம்.

ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புற,
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்,
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
தாவிக்கு மந்திரந் தாமறி யார்களே - திருமந்திரம்

6). 'ஆகம் நெக்குரு கன்பினி லெம்பரன் றனையா
வாகனத் தொடிஸ் தாபன சந்நிரோ தத்தால்
தேக மீதுனக் கிங்கமர் கெனப்பரிந் திருத்தி
நாகப் பூந்தலைச் சைங்கிகன் நறுமலர் நீரால்'.
(மந்திரம் 'ஏஹி அஸ்மானம் ஆவிவே' அஸ்மாபவது தேதநூ')

7). 'பாத்தி யத்துட னர்க்கிய மாசம னீயம்
சீர்த்த மஞ்சனந் திருப்பரி வட்டமே பூணூல்
சாத்த மாலைகள் தந்தநை வேத்தியஞ் சமர்ப்பித்
தார்த்தி கூரக்கற் பூரவா ராத்திசெய் ததன்மேல்'

8) 'நேத்தி ரானந்த முறநெடி திரந்தெதிர் நோக்கிக்
கூர்த்த மெய்யுணர் வொளியினிற் கொண்டினி திருந்தே
ஆர்த்த ஆசன மூர்த்திமூ லங்களா லர்ச்சித்
தீர்த்த மாமல ரிறைத் திருகரஞ் சிரத்தேத்தி'

(ஈர்த்த- நனைந்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9). 'காந்தண் மாமலர் கவினுற விரிந்து பல்தரமுஞ்
சோர்ந்து கூம்பிடு தேற்றம்போல் அவைபதித் தயலிற்
போந்து லாவரு மனமது சகசிர தளத்திற்
சேர்ந்து கூம்பிடு குறிநிலை யொன்றிடத் தொழுதே'

தலைமேற்சேர்த்த கையிரண்டையும் பலவாறு விரித்துஞ் சேர்த்துந் தொழுதல் பரந்து செல்லும் மனவிரிவு சகஸ்ரதளத்திற் குவிந் தொருங்கி (காந்தள்மலரழகுதோன்றச்) செய்யும் செயற்குறியாம்.

'பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட' எனவரும் திருவண்டப்பகுதியும் இதனையே குறிக்கின்ற தென்பதனைக் காட்டுதும்:- 'கருணை யின் பெருமை கண்டேன் காண்க, புவனியிற் சேவடி தீண்டினன் காண்க, சிவனென யானுந் தேறினன் காண்க, அவனெனை யாட் கொண் டருளினன் காண்க, குவளைக் கண்ணி கூறன் காண்க, அவளுந் தானு முடனே காண்க' எனச் சிவக்காட்சியைச் சித்தரித்தபின்னர், அவனதருட் கடலில் மூழ்கும் இன்ப அனுபவத்தைத் தொடர்ந்து கூறுகின்றார். 'பரமா னந்தப் பழங்கட லதுவே. கருமா முகிலிற் றோன்றித், திருவார் பெருந்துறை வரையி லேறித், திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய, ஐம்புலப் பந்தனை வாரள விரிய. வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர, எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து, முரசெறிந்து மாப்பெரும் கருணையின் முழங்கிப், பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட.....' (இடியொடுகூடிய மழையாற்றோன்றிய கடல்போலும் கருணை வெள்ளத்தில் தலைமேற் கூப்பிய கரங்கள் காந்தள் மலர் போலாயினவாம்.)

10). 'அளியு லாவரு மின்னெனப் பொன்னொளிர்ந் திலங்கும்
ஒளியை யுள்கியுள் ளுருகியங் கோருமைந் தெழுத்தைத்
தெளிய வோதியோ ராயிர முருச்செபித் தின்பக்
களியின் மூழ்கியங் கந்நிலை காதலித் திருந்தான்.'

அளி–கருணை. மின்னென...ஒளி சகஸ்ரதள- தலைமேற் 12அங்குலத்திற் சிவனையமைத்துக் காண்கையில் தரிசனமாகும் பொன்னொளி. 9ம்,10ம் பாடல் மன ஒருமைப்பாட்டுடன் சிரமேல் ஆன்மச்செறிவைச் செலுத்தி நிராதார சிவனோடு அணைத்தலை விபரிக்கும். மேலும், **துவஷ்டா பூசைசெய் படலம்** சிவபூசை விரிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் விசேடமாகத் தருகின்றது. சிவோகம்பாவனை போன்ற பிரதான பகுதிகள் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

1) 'செய்தவத் தினால் சிவன்மகிழ் பூசனை முயல்வான்' என்றதால் அவனருளாலே அவன் தாழ் வணங்கி என்றவாறு பூசைக்கும் முற்செய் தவமே காரணமாதல் கூறப்பட்டது.

2. விஸ்வப் பிரமத்தினின்று உதித்த துவஸ்டா வேத வைதிக விதிமுறைக் குரியன். போதாயனசூத்திரம் அவன் பேணும் நெறி. அதன்படி, நீராடல், சங்கற்பம், சந்தியாவந்தனம் ஆற்றுகின்றான். (தீட்சைமுறைகளும் சந்தியாவந்தனங்களும் குலவேறுபாட்டால் மாறும்.)

3. 'தேக மன்றி(று)யான் தேகியென் றுணர்வினி லழுந்தற்(கு),
கா(ஆ)கத் தன்னையே அழித்துப்பின் னருளினாற் படைக்கும்,
தேக சுத்திமுன் னாவரு பஞ்சசுத் திகள்செய்,
தேக னாய்ச்சிவ னோடொன்று பாவனை புரிவான்'- பா-18

4 'சங்கி தாமந்த்ர மைந்தினோ டாறையு ம(அ)ங்கை,
அங்கு லித்தலை தொறுமமைத் தவற்றினா லுடலிற்,
று(து)ங்க மார்சிர முதல்முழந் தாள்வரை பரிசித்
த(அ)ங்க முற்றுமே சிவமய மாக்கியங் கதன்மேல்' பா - 19

5. 'வீற்று வீற்றுறு மி(இ)டைகலை பிங்கலை யிரண்டுங்
காற்றை ஏற்றியு மி(இ)றக்கியுஞ் சமநிலைப் படுத்தி
ஏற்றி (இ)றக்கறக் கும்பித்துச் சுழுமுனை திறந்து
தோற்று குண்டலி யாற்றலான் மேற்கொடுற் றேறி' பா – 20

இடகலை பிங்கலை யிரண்டும் சுவாச சம்பந்தமான நாடிகள். சுழுமுனையுஞ் சேர்ந்து பிராணாயாமத்திற் சம்பந்தமுறும். தோற்று - மூலாதாரத்து மூண்டெழுகனல்.

6). 'ஆறெ னப்படு மா(ஆ)தார சக்கரந் தாண்டிச்
சேறு நீளிடைச் சிதாகாய மண்டலத் தப்பால்
வீறு தேசுறு மீ(ஈ)சான மூர்த்தத்தொ(டு) டொ(ஒ)ன்றும்
பேற தாகுமச் சிவோஹமாம் பெருநிலை பேணி' பா- 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரம் (மகிழ்விடத்திற்கும் கழிவிடத்திற்குமிடை), சுவாதிட்டானம் (அடிவயிறு), மணிபூரகம் (தொப்பூழ், நாபி), அநாகதம் (நெஞ்சு), விசத்தி (மிடறு). ஆஞ்ஞை (தலையுச்சி, சகஸ்ரதளம்) என்ற ஆறாதாரங்களும் உள்ளுடலிற் பிராணமய கோசத்தோடு ஒட்டினாற் போலவுள்ளவை. குண்டலியின் ஆற்றலோடு மேல்நோக்கும் சிவசக்தி இவற்றைத் தாண்டிச் சிரசின் மேற்பகுதியை யடையும். அது சுத்தான்மாக்களுக்குச் சிதாகாச(ஞான) வெளியாகும். அதன்மேற் சிவனின் ஐந்து மூர்த்தங்களில் முதன் மூர்த்தமான **ஈசானம் உள்ளது. அதனோடு சிவசக்தி ஒன்றும் நிலையே 'சிவோஹம்'** ஆகும். அகத்தில் சிவனைப் பாவித்தலே சிவோகம் பாவனையாகும்.

7) 'ஆசன மூர்த்திமூல மாமுறை பொருந்த வெண்ணி
ஆசிலா தாரசக்தி தனையர்ச்சித் ததன்மேல் மன்னும்
தேசுறு மனந்த னாதி தெரிதருவிமல மீறாப்
பேசுபஞ் சாசனங்கள் பிறங்குநூன் முறைபூ சித்தே' பா- 22

இது ஆதாரசக்தி - கூர்மாசனம் பூசைக்குப் பின்னான ஆசன பூசை. தொகுப்பான கூர்மாசனம் - பஞ்சாசனங்கள் கீழிருந்து மேலாக அநந்த, சிம்ம, யோக, பத்மா, விமலாசனமாம். (படம் பக்.438 பார்க்க).

8). நேர்த்திசா லியோக மீண்டும் நினைவகங் கொளவர்ச் சித்து
மூர்த்தியா வாக னச்சீர் முன்னுவான் பிரசா தப்பேர்ச்
சீர்த்தமந் திரத்தா றுன்னிச் திகழ்பிரா ணாயா மத்திற்
பேர்த்திடு கும்ப கத்தாற் குண்டலி யனலை மூட்டி' பா - 23

23 இது ஆவாஹனவித்தை சிவயோகநெறியிற் கைகூடுவது. பிராண வாயுவை இடை பிங்கலை நாடிகளில் இயங்காமற் தடுத்து. உள்ளே தேக்கி, குண்டலிக்கனலை (காலால் - காற்றால்) எழச் செய்தல்.

9. 'மூலவா தாரத் தானை முகனருள் முகங்கொண் டுய்க்க
மேலெழு பிரண வத்து மிகுகலை ஈரெட் டாகச்
சாலுமே தாதி தோறுந் தகவுறு மைந்தெ ழுத்தின்
பாலுறு தியானத் தொன்றிப் பைப்பய மேற்சென் றேறி' பா- 24

குண்டலி தொழிற்பட, மூலாதாரக் கமலவிநாயகர் பிரணவ சக்தியை யெழுப்பிச் சுழுமுனை வழியாக மேற்செலுத்துவார். அப்போது, பிரணவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதாகலை முதல் உன்மனாகலையீறாகப் 16கலைகளாகப் பிரிந்து தோன்றும். (பிரணவக்கலை விளக்கு – சிவத்திருமன்றம்). ஒவ்வோர் கலையுங் கண்டு கண்டு பஞ்சாக்கர தியானத்தில் ஒன்றியொன்றி மேற்செல வைக்கும். ஔவைக்கு விநாயகர் அளித்த இப்பேற்றையே அவர் 'சீதக்களப' என்ற விநாயகதுதியிற் பாடிக் கைலைசேர்ந்தார். அதில் விநாயகதோற்ற தியானம், தாயாகிப் பிறவியறுத்தமை, ஐந்தெழுத்துபதேசம், குருவானமை, திருவடி தீட்சை, வழங்கியமை கோடாயுத வினைகளைவு, உபதேசம், ஞானத்தெளிவு, புலனடக்கம், கருவியொடுக்கம், மலநீக்கம், மயக்கறுப்பு, ஆறாதார (அவ்வத்தானத் தெய்வ இருப்பை) நிலைநிறுத்தல், மௌனம், இடைபிங்கலை எழுத்தறிதல், சுழுமுனைக் கபால(சிர-சஹஸ்ரதள) காட்சி, பிருதிவி அப்பு தேயு மண்டல (அண்டம் பிண்டம் லிங்கம் யாவும் ஓர் அமைப்பாம் - சித்தாந்தப்படம்) முட்டிய தூணெனும் (லிங்க பீட) சேரிடம்(உடலிற்) காட்டியென விபரித்தலைக் காண்க.

10. 'ஆதார கலைக ளென்னு மாறுமோ டாறுந் தாண்டி
மீதான நாதாந் தத்தின் மேலுஞ்சென் றுன்ம னாந்த
மீதாக வொளிரு மின்னார் விசித்திரச் சிவச்செஞ் சோதி
போதாரஞ் சலிக்குட் சேர்த்திப் புலங்கொளப் போற்றித் தாங்கி' பா- 25

இது, (பா25) சிவசோதியைப் புஷ்பத்திலணைத்தல். மேற்சென்று பதினாறாங்கலையாகிய உன்மனாகலைக்கு மேற் பிரகாசிக்கும் பொன்வண்ணச் சந்திரகலைச் சிவசோதியைக்கண்டு, ஏலவே மலர் நிறைந்துள்ள அஞ்சலிக்குள் அச்சோதி புகுந்ததாகக் கண்டு, அதைக் கவனமாகப் பேணி, மெல்லெனக் கீழிறக்குதல்.

11. 'ஓதுமைந் தெழுத்து றைப்பி னொன்றிநின் றிறக்கி நெற்றி
மீதுறு மாஞ்ஞை நேரே நிறுத்திநின் றனைய சூர்ய
சோதியா மாறு கண்டு துதித்துறு மிரேச கத்தாற்
போதம ரஞ்ச லிக்குட் புகுந்தவா றுணர்வாற் கண்டு' பா - 26

இது, அங்ஙனம் இறக்கும் அஞ்சலிக்குள் இதயசோதியுஞ் சேரல். ஐந்தெழுத்து உச்சாரணத்தில் அழுந்தி நின்றுகொண்டு இறக்கி, நெற்றி நடுவிலுள்ள ஆஞ்ஞாசக்கரத்து நேராகநிறுத்தி, அப்போது அளவற்ற சூரியசோதியாக (சூரியகலை) அம்மலர்கள் பிரகாசிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதாகக்கண்டு, துதித்து, கும்பித்தவாயுவான மூச்சை (இரேசகமெனும்படி) வெளியேற்றுதல் மூலம் கையிலுள்ள புஷ்பாஞ்சலிக்குட் புகுந்துள்ளதாக உணர்வாற் கண்டு, **குறிப்பு :** இறைவன் 36 தத்துவங்கடந்த மாயாதீதனாக சொரூபநிலையில் இருக்கையில் மின்போலுஞ் சோதியாயும், மாயாவுடலிற் தலையுச்சியூடாகப் புகுகையில் தன் சுயஒளி மடங்கி சூர்யசோதியாயும், கீழ் இனிக்கூறும் நெஞ்சகத்தில் மேலும் ஒளியிறங்கி உருத்திர சோதியாய் பூசகருக்கு வாய்ப்பாக வருவார். பஞ்ச சாதாக்கியத்திலும் இவ்வாறே கண்டோம். ஆன்மாக்களுக்கு அருளும் தடத்த நிலைகள் இவை.

12. 'இதமுற விறக்கிப் பின்னு மிதயநே ரதா ககத்தே
கதமுறு முருத்ர சோதி கண்டுகைப் புகுத வாங்கி
விதமுறு முரோம கூப மிக்கெழ உள்ள மார்ந்த
முதமுறு மினிமை பொங்க மூர்த்திதன் முடிமேற் சேர்த்தி' பா - 27

ஆஞ்ஞாசக்கரத்திற்கு கீழ்நேராக அநாகத ஸ்தானத்தில் - இருதயத்தில் கதகதப்பாகவுள்ள உருத்திரசோதியைக் கண்டு அதனைக் அஞ்சலிக்குள் வாங்கி மயிர்சிலிர்த்தல், உள்ளம் புளகாங்கிதங் கொள்ளல் எனும் மெய்ப்பாட்டுணர்வுடன் மூர்த்தி முடிமேற் சாத்தி,

13. 'மாதமர் பாக னுண்மை வடிவுகண் ணெதிரே தொன்றப்
போதபா வனையாற் கண்டு புளகித்துட் கசிந்து கூசித்
நாதநீ யணைந்தாய் கொல்லென் தகவமர் உபசா ரத்துக்
காதர வாக வத்ச அணைந்தன மெனல்கேட் டாங்கண்' பா-28
(இவை சிவனை எதிர் வரவழைத்து அமர்த்திச் சம்பாசித்தல்.)

14. 'முடிவிலா முதலே யின்றிம் மூடனேற் கருள வந்த
அடிகளே அடியன் பூசை அவசான மெய்துங் காறும்
நெடிதிருந் தருள்க வென்று நேயத்தாற் பரிந்து வேண்டித்
துடிதுடித் துளவெப் பூரச் சுவாகதார்க கியங்கொ டுத்தான்' பா - 29

மேல் 3,4,5,6 ஆகிய பாடல்களாற் சுட்டப்பட்ட சிவோகம்பாவனை இயல்பும் பயனும்பற்றி அருணந்திசிவாசாரியார், சித்தியார் பா - 504

'கண்டஇவை யல்லேன்நான் என்றகன்று காணாக்
கழிபரமும் நானல்லேன் எனக்கருதிக் கசிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டினொடும் உளத்தவன்றான் நின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலும் மலங்களெல்லாம் கருடதியா னத்தால்
விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறை களும்அதுநா னானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.'

**சிவஞானசுவாமிகள் உரை:** உடம்பே நானென்றும் அது நீங்கியவழிப் பிரமம் நானென்றும் இங்ஙனம் விபரீதமாக உணர்கின்ற உயிரானது, சுட்டுணர்வுட்பட்ட அந்தப் பாசமுமன்று, சுட்டுணர்விறந்து - நீங்கிநின்ற அப்பதிப் பொருளுமன்று இரண்டற்கும் வேறெனக் கண்டு, வேறாகிய பாசத்தை மேற்கூறியவாற்றால் ஒருவி - நீங்கி, ஏனைப் பதிப்பொருள் வேறாயினும் வியாப்பிய வியாபக (வியாபகத் தடங்குதல் வியாப்பியம்) பாவகத்தாற் கண்ணொளியும் ஞாயிற்றினொளியும் போல வேற்றுமை சிறிதுந் தோன்றாதவாறு ஒற்றித்து நிற்றற்குரிய தனது தொண்டினையும் இறைவன் கலப்பினையும் நோக்கி நின்று, கருடோகம் பாவனை (விடமகற்றுவோன் தன்னைக் கருடனாகப் பாவித்தல்) போலச் சிவோகம் பாவனையினை யொருவன் செய்யப் பெறுமாயின், அக்கருடன் அம் மாந்திரிகனுக்கு வேறாதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவு செய்யுமாறு போல, சிவனும் இவனில் வேறாதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி மலங்களை நீக்கிச் சுத்தனாகச் செய்வன். (கருடன் என்றது கருடனுக்கு அதிதெய்வமான மந்திர சொரூபத்தையாம்.) வேதாந்த மகாவாக்கியத்திற்கும் இதுவே பொருளாகக் கொள்க. விரிவைச் சிவஞானமுனிவர் உரையிற் காண்க.

**7.21.1. அஞ்செழுத்து வேள்வியின் இயல்பும் பயனும்** : திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிப்பார்க்கு வேண்டப்படும் சிவோகம் பாவனை கூறப்பட்டது. இனி அச்சிவோகம் பாவனை நிலைக்க வழியா தென்பது. (சிவோகம்பாவனை - மலத்துயர் அகற்றுதலாய பலன்கருதி உயர் நிலையடையும் ஆன்மா தானும் சிவமும் **ஒன்றெனப் பாவித்தல்.** இதனால் மலம் நெருங்காது. எந்நிலையிலும் ஆன்மா சிவசமமல்ல.

'அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்(டு)
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத்தர்ச் சித்(து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை யோம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்(று)
அஞ்செழுத்தை விதிப்படிஉச் சரிக்கமதி யருக்கன்
அணையரவம் போற்றோன்றும் ஆன்மாவில் அரனே.' - சித்திபா-299

கசிந்த தொண்டினோடும் உளத்தில் அவன்தாள் நின்ற கலப்பாலே சோகம் - ஒன்று எனப் பாவித்தற்கண் ஆன்மாவும் சிவனும் அங்ஙனம் உடைமையும் உடையானுமாய் ('ஏற்றுயர் கொடியுடையாய் எனை உடையாய்') நிற்கும் பரிசை - தன்மையை ஐந்தெழுத்து ஓதுதல் முறையில் வைத்துணர்ந்து, அம்முறையே அங்க, கர நியாசங்களும் அவ்வைந் தெழுத்தாற் செய்துகொண்டு, **இதயம், உந்தி, புருவநடு எனும்** மூன்றும் முறையே **பூசைத்தானம். ஓமத்தானம், தியானத் தானமாகக்** கற்பித்துக்கொண்டு, அங்ஙனம் வழிபட்டு நின்றுகொண்டு அவ்வஞ்செழுத்தை விதிப்படியே மாறி நெஞ்சமுழுத்தி உச்சரித்தல் செய்க. இவ்வாறு **சிவோகம்பாவனையும் திருவைஞ்செழுத்து மந்திரமும், அந்தர் யாகக்கிரியை - அகப்பூசையும் எனும் மூன்றாலும்** ஒருவழிப்பட நின்றுகொண்டு அதனைக் கணிக்கப் பெறுவார்க்கு சிவன் விளங்கித் தோன்றுவான். இது **ஆன்ம சுத்தியாம்.**

**சிவஞானபோத 9ம் சூத்திரம்** 'ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி உராத்துணைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ தண்ணிழ லாம்பதிவிதி எண்ணும் அஞ் செழுத்தே' தம்முதல் - சிவன் குருவுமாய் உணர்த்தக் கேட்டதனைச் சிந்தனை செய்து உணருமாறு உணர்த்தும் வகையில் ஐம்புலவேடரின் வளர்ந்த அறியாமை நீங்கி உயிர் தன்னைத் தூய்மைப்படுத்தச் செய்வது இது.

குறையுணர்வாகிய பசுவறிவாலும் பாசவறிவாலும் உணரப்படாத முதல்வனை அவனது திருவடிஞானத்தாற் தன்னறிவில் ஆராய்ந்தறிக. அத்திருவடி ஞானத்தால் நிலமுதல் நாதமீறான (36தத்துவ) பாசக்கூட்டம் தாம் நின்றவாறே நில்லாது (சூரியனைக் கண்ட இருள் போல) பரந்து திரியும்போது அதிவேகமுடைய பேய்த்தேர் (நிலையற்ற கானல்நீர்- ஆங்கிலத்தில் 'மிறாஜ்') இயல்பாகக் கழிவது - நீங்குவது போல அம்மாயை நீங்கும் என்றறிந்து, அதனின்றும் நீங்கவே, அப்பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அவ்வாறு பாசத்தைக் (காண்பானாகிய ஆன்மா) ஒருவி(நீங்கி), ஞானத்தை (திருவருளை) – காட்சியாகிய சத்தியைப் பெற்று, ஞேயத்தை - காட்சிப்பொருளாகிய சிவனைக் கண்டகாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்கும் திருவைந்தெழுத்து விதிப்படி கணிக்கப்பெறும். (இவ்வாறு ஆன்மசுத்தியெனும் சாதனை செய்வதால் பாசநீக்கம் பயனாகும் என 10ம் சூத்திரத்தாற் கூறப்படும்). பிரதானமாக சிவபூசையின் அகப்பூசை (அந்தர்யாகம்) பற்றியே இங்கு பேசப்படுவதால் அதன் மூன்றாம் நிலையில் வரும் அந்தர்யாகக் கிரியை பற்றி சித்தியார்: (1) **அந்தர்யாகம் செய்யும் முறைமை:**

நாட்டுமித யந்தானும் நாபியினில் அடியாய்
ஞாலமுதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்
மூட்டுமோ கினிசுத்த வித்தைமல ரெட்டாய்
முழுவிதழ்எட் டக்கரங்கள் முறைமையினின் உடைத்தாய்க்
காட்டுகம லாசனமேல் ஈசர்சதா சிவமும்
கலாமூர்த்த மாம்இவற்றின் கண்ணாகுஞ் சத்தி
வீட்டையருள் சிவன்மூர்த்தி மானாகிச் சத்தி
மேலாகி நிற்பன்இந்த விளைவறிந்து போற்றே'- சித்தி பா 300

இதயத்தில் அர்ச்சித்தற்கு, நிலமுதல் சத்திதத்துவம் ஈறான முப்பத்தைந்தினையும் (தாமரையின்) கிழங்குமுதல்- பூச்சுருளான பீசமீறாகியவற்றை அவயவங்களாக வுடைய இதயகமலம் ஆசனமும் அதன்மேற் **சத்தி மூர்த்தியும் சிவன் மூர்த்திமானுமாம்.** பூசைக்கு மூர்த்தியும் மூர்த்திமானும் பிரதானம் வேண்டப்படுவர். மூர்த்திமான் அதிகாரம் மிக்கவராயும் தான் நேரடியாகவன்றி ஒரு மூர்த்தியினை அதிட்டித்து அவர்மூலம் தொழிற்படுதல் சைவசித்தாந்தத்தில் வருஞ்செய்தி. சிவதத்துவ-சம்புபக்க மகேசர், அணு-உயிர்பக்க அபக்குவ விஞ்ஞானகலராகிய அநந்தரை அதிட்டித்துத் தொழிற்பட்டே கீழ்க் கீழ் புவனங்களை முத்தொழிற்படுத்துவார். மகேசர் மூர்த்திமான், அநந்தர் மூர்த்தி. இதனால் அநந்தர் 'அநந்தேசர்' எனப்பட்டு பராவுசிவரெனும் வணக்கத்திற்குரியவராகி அகச்சந்தானத்திற்கும் உரியவராகின்றார். **இப்பாடலின் பொருளாவது,** சிவ, சத்தி தத்துவங்கள் தமக்குள் வேறுபாடு சிறிதேயுள்ளனவாதலின் சிவம் சத்தியிலடக்கிக் கூறப்பட்டது. ஐந்தெழுத்தால் அமைந்த (ந- பாதம், ம- வயிறு, சி- தோள், வ- வாய், ய- சிரசு), உருவில் அரனை அர்ச்சித்தல், அட்டமூர்த்தத்தில் ஒன்றான ஆன்மாவில் அர்ச்சித்தல், சத்திமூர்த்தியில் அர்ச்சித்தலென வேறுபடக்கூறினும் அம்மூன்றும் முதல்வனுக்கு முறையே தூல சூக்கும அதிசூக்கும வடிவங்களெனக் கொள்ளலாம். "அண்ட மோர் அணுவாம் பெருமைகொண்டு கரணங்களெல்லாங் கடந்து நின்ற (வாக்குமனாதீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசரமாம்) அவ் விறைவனே அணுவோர் அண்டமாஞ் சிறுமை கொண்டு", ஆன்மாக்கள் உய்தற்காக உடம்பின் உள்ளும் அவ்வாறு நிற்கின்றான். அதனையறிந்து செய்யாதவழிப் பூசையாற் பயனில்லை யென்பதாம். இனி, **அந்தர்யாக இயல்பும் பயனும்:-**

'அந்தரியா கந்தன்னை முத்திசா தனமாய்
அறைந்திடுவர் அதுதானும் ஆன்மசுத்தி யாகும்
கந்தமலர் புகையொளிமஞ் சனம்அமுது முதலாக்
கண்டனஎ லாம்மனத்தாற் கருதிக் கொண்டு
சிந்தையினிற் பூசித்துச் சிவனைஞா னத்தால்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடும்அவ் வொளிபோல மருவிஅர னுளத்தே
வரவரவந் திடுவன்பின் மலமான தறுமே' - சித்தி பா 301

கண்ணாடிக்குப் பொடியிட்டு விளக்க விளக்க ஒளிமேலிட்டு மாசு நீங்குமாறுபோல ஆன்மாவில் அவ்வாறு ஞானத்தால் அர்ச்சித்தலும், ஓமித்தலும் தியானித்தலும் செய்யச்செய்ய, அங்கே சிவம் மேலிட்டுமேலிட்டு வந்து விளங்கித்தோன்றும். தோன்றவே, ஆணவ மலம் தேய்ந்து தேய்ந்து பற்றறக் கழியும். அங்ஙனம் ஆன்ம சுத்திக்கு ஏதுவாதலால் அவ்வந்தர்யாகம் நிச்சயமாக வேண்டப்படும். இனிப் 'புறம் பேயும் அரன்கழல்கள் பூசிக்க வேண்டில்' என புறப்பூசை பற்றிக் கூறுகின்றார். இவ்வாற்றால் ஞானநூல்கள் அகப் பூசைக்கு முக்கியத்துவங் கொடுப்பதாலும் அகப்பூசையின்றிப் புறப்பூசை சாலதென்பதாலும் இவ்விரிவான விளக்கமும் அதை நடைமுறைப்படுத்தலும் அவசியமாகும். 'சிவனை ஞானத்தாற் சிந்திக்க' என்பதால் சிந்தனைக்காய அவருருவம் நமசிவாயவாற் பெறப்படல் காண்க. அதன் விபரம்:- 1). நமசிவாய உச்சரிப்பிற்காக 'நமசிவாய', 'நமச்சிவாய' எனப்படும். இது தூலபஞ்சாக்கரம். 'நம' வை முன்னாக்கி ஓதப்படுவதால், திரோத மறைப்பாற்றலால் உலகில் மயக்குற்று வாழும் ஆன்மாக்கள் அவ்வாழ்விற்கு இறைவனை வேண்டி, அவனுருவை (பாதாதிகேசமாக) மனத்திருத்தித் துதித்து வாழ்வர். இது முத்திக்குவழியைப் பின்னரே காட்டும். நமசிவாய சொல்லி, உலகவாழ்வில், சமணர் கல்லுடன் கட்டிக் கடலிலிட்ட தண்டனையிலிருந்து 'சொற்றுணை வேதியன் ...... நற்றுணை யாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமச்சிவாயவே' பாடி அப்பர் மீண்டார். நமசிவாய எனும் ஊன நடனத்தில்: உடுக்கைக் கை – படைப்பு, அமைந்த-அபய திருக்கரம் - காப்பு, தீயேந்தியகை – அழிப்பு, ஊன்றியபாதம்- வினையீட்டமுடிவில் உடலாதியவற்றை மறைத்தல். 'சிவயநம'வும் **'சிவாயநம' வாகி** சிவனை முன்னிலைப்படுத்தி ஓதுதலால் முத்தி பஞ்சாக்கரமாய் முத்திதருவது. இம் முத்தியின்பத்தை இறைவன் ஆன்மாக்களுக்கு அருளுவதால் மகிழ்ந்தாடும் நடனம் **ஆநந்தத்தாண்டவம்.**



ஆலயங்களிலும் நடராசரெனப் பூசிக்கப்படுவது. பஞ்சகிருத்தியம் முதலான 108 நிருத்தியங்களை ஆடினும் ஆனந்தத் தாண்டவமே மிகவும் புகழப்படுவது; தில்லையில் வியாக்கிரபாதர் பதஞ்சலி யாதியோர் காண ஆடியது. ஞானமின்றி முத்தி சித்தியாது. ஆதலால் இது ஞானநடனம். ஞானியரின் தன்முனைப்பற்ற உள்ளத்தில் ஆடும் இக்கூத்தை அவர் திருவருளால் அறிந்து இன்புறுவர்.

சி -சிவம், வ- அருட்சத்தி, ய- ஆன்மா, ந - திரோதம் (மறைப்பு)ச் சத்தி, ம- மலம் என்ற எழுத்துக்கள் தரும் பொருள்கள் இரு பஞ்சாக்கரங் களிலும் ஒன்றே. ஊன, ஞான நடனங்களுக்காக ஒழுங்குமட்டும் மாறும். ஊன நடனத்தில் ந (பாதம், முயலகன், திரோதம் அல்லது ஆணவம்), ம (வயிறு, மலம்), சி (தோழ், சிவம்), வ (வாய், சத்தி), ய (உச்சி, ஆன்மா). இதில் **ஆன்மாவை முத்திக்குத் தயாராக்கத் தன்னுச்சிவரை எடுத்துச் சுமக்கும்** பெருங்கருணையை, 'கிடைக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுமோ நற் கேண்மையரக் கல்லால் எடுத்துச் சுமப் பானை இன்று' எனவும், 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்' எனவும் திருவருட்பயனால் அறிக. தன்னிலைமை, தான் 36 தத்துவாதீதனாகி நின்றமை. உயிர்கள் தத்துவங் கடந்தாலே முத்திபெறும் என்பதனை தசகாரியத்திற் காண்க. **ஞான நடனத்தில்** உடுக்கை ஏந்திய கையால் **மாயை**யை உதறியும், தீயேந்திய கையாற் **கன்மத்**தைச் சுட்டும், ஊன்றிய திருவடியால் **ஆணவ** வலிகெடுத்தும், தூக்கிய குஞ்சிதபாதத்தால் அருளியும், அமைந்த - அபயகரத்தால் திருவடிக் கீழழுத்தி ஞானமளித்தும் பேரின்பம் துய்க்கச் செய்கின்றான்.

**7.22. சந்தியாவந்தனம் -** ஏழாம், ஒன்பதாம் வயதில் அல்லது குரு கூறியபடி காலா காலத்தில் சமயதீக்கை பெற்றவர்கள் சந்தியாவந்தனப் பயிற்சி முதிர்ந்தபின் திருவருள் கைகூடி விசேடதீக்கை பெற்று சிவபூசையாற்றக் கடவராதலின் சந்தியாவந்தனம் பற்றியுங் கூறுதும். கணபதி, குரு வணக்கம் போன்ற பலவிடயங்கள் 2ம் பகுதியிலுண்டு. சூரியோதயத்தின் முன்னெழுந்து சிவசிவ என விபூதியணிந்து, காலைக்கடனாற்றி விபூதியணிந்து, ஸ்நானஞ்செய்த பின்னும் நீறணிக. இது, சிவஞானசித்தியார் (திருவிளங்கம் 9ம்சூத்திர விரிவுரையுடன்), நாவலரின் சுருக்மான நித்தியகருமவிதியையும் அனுசரித்து எழுதப்படுகின்றது. **குறிப்பு- 1**) விசேடதீக்கையினர், முத்திகாமிகள் சிவமூலத்தினை பீஜத்துடன் ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம: வெனவும், முதற்தீக்கையினர், போககாமிகள் பீஜமின்றி நமசிவாய. வெனவும் ஓதுவர். மேலும் சிவாயநமவின் முன்பாக ஓம் சொல்வதில்லையென்பர் சிலர். காரணம் பரசிவன் பிரணவபீடத்தின் மேல் உள்ளார். நமசிவாய அவரின் தடத்த தோற்றமாதலின் ஓம் நமசிவாய வென்க. தத்தம் சித்தாந்த. ஆதிசைவ. தீட்சா குருக்களைக் கேட்டறிந்து தமது தகுதிக்கேற்பக் கடைப்பிடிக்க. **இதில் சிவாயநம** எனவே கொள்ளப்படுகின்றது. 2) அறியாத சைவருக்கு, ஹரி ஓம் நமோ நாராயண என மந்திரோபதேசஞ் செய்வோர் பற்றிச் சைவர் அவதானமாயிருத்தல் நன்று. இலங்கை சிவபூமி, ராமராஜ்ய மல்ல.

**1.ஸ்நானம் -** குளிர்ஜலம், ஈரம் துவட்டல் - தோய்த்துலர்ந்த துணியாலாம். தரித்தல் - தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினாலாம். (பட்டு விசேடம்). நோயாளர் - கண்டத்தின் கீழ் வெந்நீரல்லது விபூதியால் மானதஸ்நானம் செய்வர். பூசைக்காய ஜலம் தூயபாத்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் சுத்தநிலத்திற் சிறிது விட்டுக் கொணர்க. வீட்டுவிலக்கான பெண்கள் மூன்று நாளும் சிவமூலத்தை மனதிற் தியானித்து நாலாம் நாள் தொடங்குக. ஸ்நானத்தால் உடல் தூய்தாகி மனோசத்தி வலுப்பெறத் தியானம் சித்திக்கும். எத்தொழிற் தொடக்கத்திலும் முடிவிலும் 'சிவசிவ' என்க.

**2. திக்குநோக்கல் -** முத்திகாமிகள் (அண்ட பிண்ட சக்திகள் ஒத்துநிற்கும் படியும், தட்சணாமூர்த்தியின் அகோரமுகம் நோக்கியும்) வடக்கை நோக்குவர். போககாமிகள் (சூரியகிரண சக்தியோடு போகவலுச்சக்தி அதிகரிக்க) ஆறு, குளங்களை அண்மித்து சூரியதிசை நோக்குவர். (காலை – கிழக்காக, மாலை – மேற்காக).

**3. பூமிசுத்தி -** சலத்தினால் ஓம் அஸ்திராயபட் என பதாகை முத்திரையாற் (5 விரல்களையுஞ் சேர்த்து நீட்டித்) தெளிக்க. ஆசனம்- பீடம், மரவுரி, மான்தோல். பிராணாயாமத்திற்கு உகந்ததாக முதுகு வளையாத ஆசனம் அமைக்க.

**4. கணபதி குருவந்தனம் -** விக்கினங்களைக் களைய பிரணவசொரூப விநாயகரை நினைந்து கன்னங்களிற் 'ஓம் கணபதயே நம:' என முஷ்டியாற் குட்டி நெற்றிநேராக நமஸ்கார(2) முத்திரையாற் கும்பிடுக. மலநீக்கமும், சிவத்துவ விளக்கமும் பெற தீட்சாகுருவை நினைந்து 'ஓம் குருப்பியோ நம:' என் அடிமூக்குநேராகக் கும்பிடுக. (குரு: தாய், தந்தை, வித்யாகுரு, தீட்சாகுரு, ஞானகுரு என ஐவகை).

**சலசுத்தி** – சுத்தியான ஜலம் சிவசத்திபாவம். கன்மங்கள் மூவகையாற் பலனளிக்குமாறு செய்யப்படும். மந்திரம் (அதிசூக்குமம்), கிரியை (தூலம்), பாவனை (சூக்குமம்). மந்திரத்தின் அதிதேவதை முத்திரையாற் பிரீதியுற்றுப் பாவனையை முற்றச்செய்யும். எட்டுக் கிரியைகள் சலசுத்திக்கு வேண்டப்படும், சூரிய பூசையில் அஸ்திரமுந் ர :

(அ) நிரீக்ஷணம் (முத் 4)- பார்வை. வலக்கண் (சூரியமண்டல, இச்சா சத்தி சொரூபம், மாசு உலர்த்த), நெற்றிக்கண் (அக்கினி, ஞான சத்தி, மாசு எரிய). இடக்கண் (சந்திர, கிரியாசத்தி, எரிந்தபின் குளிர).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கண்களால், மண்டல, சொரூப பாவனையாக, நீரைத் திவ்ய(17) முத்திரையினூடு ஓம் ஹாம் ஹெளம் சிவாயநம எனப் பார்த்தல். இதனால் நீர் குற்றம் நீங்கி அமிர்தம் பெய்யப்பெறும்.

(ஆ) புரோக்ஷணம்- விந்து (புருவநடு,நெற்றி)த் தானத்து அமிர்தத்தைப் பாவனையாக வளைந்த வலச்சுட்டால் (அங்குச முத்திரை 38) 'ஓம் ஹம் அஸ்திராய பட்' என கீழிறக்கி நீரிற் பதாகையாற் சேர்த்து மேலும் சுத்திசெய்து சாந்தியாக்கல்.

(இ) தாடனம் - 'ஓம் ஹாம் அஸ்திராய பட்' என நீர்ப்பாத்திரத்தில் வலசுட்டாற் தட்டி (அதோமுகி) நீரில் சிவசக்தி பிரகாசிக்கச் செய்தல்.

(ஈ) அப்பியுக்ஷணம் (முத். 8) - 'ஓம் ஹைம் கவசாய வௌஷட்' என பதாகையினால் நீரின் சிவசக்திப் பிரவாகம் நீங்காது மூடுதல்.

(உ) தாளத்திரயம் - பிரகாசத்தைக் கெடுக்கவரும் அசுரரை, தீய எண்ணங்களை விரட்டும்படியாக 'ஓம் ஹ: அஸ்திராய பட்' என வலச்சுட்டு, நடுவிரலால் (கோவிடான) 3முறை இடதிற் தட்டல்.

(ஊ) திக்பந்தனம் - நொடித்தல் (சுண்டுதல்). 'ஓம் ஹ: அஸ்திராய பட்' என சோடிகா (10) முத்திரையால் அசுரர் கிட்டாதபடி எண்திக்குகளிலும் சுண்டி அக்கினியாற் காத்தல். (சிற்றோசை தரினும் பெருவும் சுட்டும் சேரச் சுட்டுக)

(எ) அவகுண்டனம் - அவ்விடத்தைக் காவல்செய்யும் பாவனையில் வலச்சுட்டை நீட்டி (அதிதீக்கணம்) நீர்க்கலசத்தை 'ஓம் ஹைம் கவசாய வௌஷட்' எனச்சுற்றி மூன்றுமதிலும், மூன்று அகழியும் ஆக்கல்.

(ஏ) தேனுமுத்திரை காட்டல் – தேனு(12) முத்திரையால் ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் என காமதேனு நீரிற் பால் சொரிந்ததாகப் பாவித்தல். (நாவலர் சுருக்கத்திற்காக நிரீக்ஷணம், திக்குப்பந்தனம், அவகுண்டனமாகிய மூன்றினையுமே கூறியுள்ளார். முதற் தீட்சையினர் தகுதிக்காக சுருக்கினார் ஆகலாம்)

**5.தர்ப்பணம்:** நீரிறைத்தல். அமிர்தமாகிய அந்நீரை (அட்ட மூர்த்தியிலொன்றாய) சூரியனையதிட்டித்து நிற்குஞ் சிவனுக்கு அளித்து உவப்பித்து கன்மநீக்கம்பெறல். மும்முறை அஸ்திரங்கூறி கோமுக(!3) முத்திரையால் அர்பணஞ்செய்து, பத்துரு சிவமூலஞ் செபித்து பின்னுமொருமுறை யர்ப்பணஞ்செய்க. (23ஆம் தர்ப்பணம்)

**6.ஆசமனம் -** மூவகைத் தத்துவங்களை நீரருந்திச் சுத்தி செய்தல். இதனால் முறையே பிரமா, விட்டுணு, உருத்திரன் (மும்மூர்த்திகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரீதியடைவர். கோகர்ண(15) முத்திரையுடன் வலப்பெருவிரலடியில் சார்ந்த சிறிதளவு (உளுந்தமிழும்) நீரை மும்முறை ஓம் ஆன்ம தத்துவ ஸ்வதா, ஓம் வித்யா தத்துவ ஸ்வதா ஓம் சிவ தத்துவ ஸ்வதா என உட்கொண்டு. உதடுகளிரண்டையும் வலப்பெருவிரலடியால் வலமாக இருதரமும், உள்ளங்கையாற் கீழாக ஒருதரமும் அஸ்திரங்கூறித் துடைத்தல். இதனால் விநாயகர் பிரீதியடைவர். 24ஆன்மதத்துவ, 7வித்யாதத்துவ, (நாத, பிந்துநீங்கலாக)3 சிவதத்துவங்களிற் கட்டுண்ட ஆன்மாவின் சஞ்சிதப் பற்று இதனால் அறும்.

7. **தொடுமிடந் தொடல்**- வலப்பெருவிரலோடு கூடிய அணிவிரலால் (அங்குச முத்திரை) இருதாயவௌஷட் என முகம், வல இட மூக்குகள், கண்கள், காதுகள், உந்தி, மார்பு. புயங்கள், சிரம் எனும் 12 இடங்களைத் தொடுக. இதனால் அந்தந்த இடச் சுத்தியும் தேவபிரீதியும் உண்டாகும். (இது ஆசமனத்தின் இறுதி)

8. **விபூதி சுத்தி** – (1) நாவலர் முறை - விபூதியை வலப்பெரு விரல், நடுவிரல், அணிவிரல்களால் (மிருக-19 முத்திரை) எடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு, ஓம் அஸ்த்ராயபட் என அதில் நீரைத் தெளித்து. அதிற்சிறிதை பெருவிரல் அணிவிரல்களாற் தொட்டு ஓம் அஸ்த்திராய ஹூம்பட் என இராக்ஷதர் பொருட்டு நிருதி (தெ. மே) மூலையிற் தெறித்து, நிரீக்ஷணம், திக்குப்பந்தனம், அவகுண்டம் என்பவற்றை முன்னர் நீருக்குச் செய்தது போலச்செய்து, வலக்கையால் மூடிக்கொண்டு, ஓம் ஈசாநாயநம முதலிய 11மந்திரங்களாலும் அபிமந்திரிக்க.

(2) **(திருவிளங்கம்** கூறுவது: திருநீறு பராசக்தி வடிவினையும், அதிதேவதையாக அக்கினி உருத்திரனையுங்கொண்டது. மேற்கூறிய ஜலசுத்தியிற் போன்று நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்பியுக்ஷணம் என்பவற்றோடு பஞ்சகலாசுத்தியும் (அத்.5.34), அபிமந்திரித்தலுஞ் செய்க. பஞ்சகலாசுத்தியால் அத்துவா சுத்தியாகும். தீக்கைவிபரத்தில் சித்தி பா258,262). பின் சம்கிதா மந்திரங்களால் அபிமந்திரிப்பதனால் இறைவனின் குணங்கள் பொருந்தப்பெறும். இதனால் இறைவனுடைய அநந்தைஸ்வரிய சக்திகள் பிரகாசிக்கும்.

9. **விபூதி ஸ்நானம்** - இது மல, விபூதி, மந்திர என மூவகை ஸ்நானமாம். (அ) மலஸ்நானம் - விபூதியை வலப்பெரு அணி விரல்களால் எடுத்து தலைமுதற் காலீறாக (தேகமுழுதும்) அஸ்திராய பட் எனக் கூறிப் பூசுதல். (ஆணவ அழிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) விபூதி ஸ்நானம் - இடக்கையிலுள்ள விபூதியை பெருவிரலோடு கூடிய நடுவிரலால் ஓம் இருதயாய நம எனச் சலம்விட்டு “ஓம் கவஷாய வௌஷட்” என குழைத்து, நடுவிரல் மூன்றினாலும் திரிபுண்டரமாக 32, 16, 12, 8, 5 தானங்களில் ஏதோவொரு முறையை குரு சம்பிரதாயப்படி (நாவலர் 16) அணிதல். சிரசு, நெற்றி, மார்பு, குய்யம் என்பவற்றில் முறையே ஈசான, தற்புருஷ, அகோர, வாமதேவ மந்திரங்களும் முழந்தாழ்கள் முதலான ஏனையிடங்களில் வாமதேவ மந்திரமும் செபிக்க. திரிபுண்டரத்திற்குப் பதில் திரிசூலம், இடபம் பொறித்துத் தரித்தலுமாம். (மேல்விபரம் சைவசமய நெறி)

(இ) மந்திர ஸ்நானம் - எஞ்சிய விபூதியோடு சலங்கொண்டு கும்பமுத்திரையால் ஏகாதச(11) மந்திரம் உச்சரித்து சிவமூலத்தால் சிரசில் அபிடேகித்தல். ஏகாதச மந்திரத்தால் விபூதி சிவனியல்பு பெறும். (மலமாசு அறநீங்கல்).

10. **ஆசமனம்-** 7ற் கூறியவாறு செய்தல். மலமாயாகன்ம நீங்கிய ஆன்மாவிற்கு முன்செய்த தத்துவசுத்தி செய்து மீண்டும் மலப்பற்றடையாது நன்கு நிலைபெறும்படி காத்தல்.

11. **மானதஸ்நானம் -** சிவமூலத்தாற் பிராணாயாமம் செய்க. அதன்போது பிராணாயாமத்துடன் கூடிய (கும்பகத்தினால்) அமிர்தப் பிரவாகத்தில் நனைந்த ஆன்மா மனமடங்கி மேலும் சுத்தியாகும்.

12. **சகளீகரணம் -** கரத்திற் சிவனைப்பதித்துப் பின் அக்கரங்களால் - விரல்களால் உடலிற் சிவனைப் பதித்தல். விபரம் சிவபூசையிற் கூறிய சகளீகரணம் பார்க்க. (சுருக்கத்திற்காக சில நூல்களில் விடப்பட்டுள்ளது. இது சிவபூசைக்கு மிகப் பிரதானமாகும்.)

13. **பிராணாயாமம் -** சிவபூசை ஆரம்பத்தில் (6.2.1) உண்டு. மேலும் திருவிளங்கம்- சந்தியாவந்தனம் (சிவஞானசித்தியார் 9ம்சூத்திரம்)

14. **சிவதீர்த்த கரணம்** - சலத்தைச் சிவதீர்த்தமாக்கல். ‘ஓம் இருதயாய வௌஷட் என புருவ நடுவிலுள்ள அமிர்தத்தை நுதிவளைந்த சுட்டுவிரலினா (அங்குசமுத்திரையினா) லெடுத்து சலத்தினிடத்தே வைத்து, சிவாயநம அபிமந்திரித்து சலத்தைச் சிவதீர்த்தமாகப் பாவித்து ஓம் அஸ்த்ராயபட் என திக்பந்தனமும். ஓம் அஸ்த்ராயபட் என அவகுண்டமுஞ் செய்க. இதனால் சத்தி வடிவாயிருந்த தீர்த்தம் சிவதீர்த்தமாகி மேற் கிரியைகளுக்கு உபயோகமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. **சந்தியாத்தியானம்** - இதுவே சந்தியாவந்தனம் எனினுமாம். (14 வரை கூறியவை ஸ்நாந வகைகளுள் அடங்கும்) சமய தீக்கையினர்க்கென எழுதிய இது சிலநூல்களில் இல்லை. விரும்பிச் செய்யும் சமய, விசேட மற்றும் அதன் மேலுள்ளவர்க்கெனத் தரப்படுகின்றது. காலை, மத்தியானம், மாலை, இராவெனும் நான்கு சந்தியாகாலம் (காலம்மாறும் வேளை)களிலும் வணங்கப்பெறும் சிவசக்தி வியாபார விளக்கம்.:

15.1 **அபரை :-** அ) இரத்தமண்டலத்திற் சிருட்டிசெய்யும் பிராமி ஆ) சுவேத மண்டலத்திற் காக்கும் வைஷ்ணவி இ) விந்துமண்டலத்திற் சங்கரிக்கும் ரௌத்திரி. இவை சகுணத் தியானத்திற் குரியனவாய்ப் பிரம விட்டுணு உருத்திரர்க்குரிய அங்கங்களை உடையன. பராசத்தியே சரஸ்வதி (பிராமி), லக்குமி (வைஷ்ணவி), தனது சுயரூபமான ரௌத்திரி

15.2 **பராபரை** – ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி என்றாகி நிர்க் குணத் தியானத்திற் குரியனவாய்ச், சூரிய, சந்திர அமிர்தப்பிரகாச முடையனவாய், நாதசொரூபமாய் இருக்கும். 15.3. **பரை** - இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை என நான்காகி ஞானவழிபாட்டிற் குரியனவாய் அத்தியந்த நிஷ்களமாய் அறிவுப் பிரகாசமாயிருக்கும். இவற்றைத் தியானிக்கும்முறை, தீக்ஷாதிகார வேறுபாடுகள்

| சமயி | பிராதக்கால-காலை) | பிராமியை | இருதயத்தில் |
|---|---|---|---|
| புத்திரன் | மேலதனோடு சாயங்கால | ரௌத்தி ரியை | பிரமரந்திரத தில் |
| விஷேட புத்திரன் | மேலவற்ரோடு மத்தியானகால | வைஷ்ணவியை முக்காலமும் | விந்துவிலும் |
| சாதகாசிரியன் | முக்காலமும் முறையே | ஞானசத்தி, இச்சாசத்தி கிரியாசத்தி | இருதயம், விந்து, பிரமரந்திரம் |
| சிவதர்மினி | அவ்வாறே முக்காலமும் முறையே | இரத்தை, சுக்கிலை, அசிதையை | இருதயம், விந்து, பிரமரந்திரம் |
| ஆசாரியன் | மேலவற்ரோடு அர்த்தஜாமத்தில் | கிருஷ்ணையை | துவாத சாந்தத்தும் |

**16.மந்திராபிடேகம்** : வலக்கையினால் நீரையள்ளி இடதிலிட்டு கும்பக(21) முத்திரையாகப் பிடித்துக்கொண்டு சங்கிதாமந்திரங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரசிற் புரோட்சிக்க. இதனால், ஆன்மாபெற்ற அருட்பேற்றுநிலை உறுதிப்பட சிவதீர்த்த கும்பவடிவால் அபிடேகித்தல்

17. **மார்ச்சனம்** - சலத்தை வலக்கையால் மூடி ஈசாநாய நம: முதலாய சங்கிதா மந்திரத்தினால் அபிமந்திரித்து வலக்கையால் சலத்தையெடுத்து இடக்கையில் விட்டுவைத்துக்கொண்டு, இடக்கை யினின்றும் கீழேயொழுகுகின்ற சலத்தை வலக்கையினால் வௌஷட் ஈறான ஈசாநாய வௌஷட் முதலிய சங்கிதா மந்திரங்களாற் சிரசிற் தெளிக்க. (தூலசரீரசம்பந்த அன்றாடதீவினைகள் ஒழிவதற்கே.)

18. **அகமர்ஷணம்**- எஞ்சியசலத்தை இடக்கையினின்றும் வலதில் விட்டு மூக்குக்குச் சமீபமாகப் பிடித்துக்கொண்டு, அந்தச்சலம் வெண்ணிறமுடைய தருமவடிவாகி இடமூக்கினாலே உட்புகுந்து அங்குள்ள பாவத்தை அழித்ததாகவும், அது மைக்குழம்புபோல வலமூக்கினால் புறத்தே நீங்கிக் கையில் வந்ததாகவும் பாவித்து, வலக்காற் பெருவிரலில் சுவாலிக்கும் அக்கினியிலே அஸ்தராய ஹூம்பட் என புருவமுரிப்புடன் விட்டு அப்பாவம் சாம்பரானதாகப் பாவித்து அஸ்த்ராயபட் எனக் கைகழுவுக. இது சூக்குமசரீரத்தால் அன்றாடம் புரியும் தீவினை நீக்கம். (நீரை உள்ளிழுத்து வெளி விடல் பிராணாயாமத்திற்கு உகந்தது.)

19. **ஆசமனம்** - முன்போலச் செய்க. (ஆசமன சகளீகரணங்கள் சூக்கும சரீரத்தைச் சுத்தியாக்கி அதைச் சிவரூபமாக்கலுமாம்.)

20. **கவசவேஷ்டானம்** - ஓம் கவசாய வௌஷட் என வலக்கைச் சலத்தாற் தன்னை வலமாகச்சுற்றி நிலத்தில்விடல். இதனால் மதில் உண்டாகிச் சூக்குமசரீர வினையொழிந்து சிவரூபம் காக்கப்படும்.

21. **சதாசிவத் தியானம்** - இது சூரியமண்டலத்தில் இருக்கும் சதாசிவமூர்த்தியைத் தியானித்தல். சூரியமண்டலத்தின் நடுவில் பத்மாசனத்தில் ஈசான முதலிய ஐந்து திருமுகங்களும் முறையே வெண்மை, பொன்மை, கருமை, செம்மை, மிக்கவெண்மை நிறம் உள்ளதாயும் அவற்றில் முக்கண்கள் உள்ளதாயும் பத்துத் திருக்கரங்கள் உள்ளதாயும் வலதுகரங்களில் பரசு கட்கம் சூலம் வச்சிரம் அக்கினியும் இடதுகரங்களில் அபயம் மணி நாகம் பாசம் அங்குசமும் உள்ளதாக நினைந்து மனதிற் தியானிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதுவும் அடுத்ததும் நாவலர் விதியிலில்லை. சுருக்கத்திற்காக வாகலாம்).

22. **சிவகாயத்திரி மந்திரசெபம் .** சூரியமண்டலத்து நடுவிலுள்ள சதாசிவ மூர்த்தியைத் தியானித்து, சிவகாயத்திரியைப் பொன்னிறத்தளாய் ஒருமுகம், மூன்றுகண், அபய, வரத, கண்டிகை, கமண்டலஞ் சேர்ந்த நாற்கைகளுடையவளாய்த் தியானித்து, ஓம் தந்ம ஹேசாய வித்மஹே, வாக்விசுத்நாய தீமஹி, தந்நோ சிவ: ப்ர சோதயாத் என்ற காயத்திரி மந்திரத்தோடு மும்முறை அர்க்கியங் கொடுத்து ஏழு அல்லது பத்துதடவை காயத்திரி உருச் செபித்தல்.

23. **தர்ப்பணம்**-சிவனுக்கும் ஏனைக்கடவுளர்க்கும் நீர்கொடுத்து மகிழ்வித்தல். இருகைநிறைந்த சலத்தினால் சிவாயநம வென மூன்றுதரந் தர்ப்பணஞ்செய்து, சிவாய நம வெனப் பத்துத்தரஞ் செபித்து, பிரதக்ஷணம்- பார்வைசெய்து சிவாயநமவென மீண்டும் ஒருதரம் தர்ப்பணஞ்செய்து, ஈசாநாய சுவாஹா முதலிய 11 மந்திரத்தால் ஒரு தரம் தர்ப்பணஞ்செய்து, ஓம் உமாதேவ்யை சுவாஹா, ஓம் கணபதயே சுவாஹா, ஓம் சரவணபவாய சுவாஹா என ஒவ்வொருதரம் தர்ப்பணஞ்செய்க. (**திருவிளங்க உரை** : 11 மந்திர தர்ப்பணத்தின் பின் மந்திரம், பூதம், பிதிரர், ஆசாரியர்க்கு அவரவர் (நாமசகித) மந்திரங்களாற் தர்ப்பணம் செய்க. தர்ப்பணதீர்த்தம் ஐவகை: 1). தேவர் தீர்த்தம் - கைவிரல் நுனியில் தேவற்கு ஈவது. 2). ஆரிடர்தீர்த்தம் - விரல்களின் இறைச்சந்தியால் இருடிகட்கு ஈதல். 3). மானவதீர்த்தம் - கனிட்டிகை (சிறுவிரல்)மூலத் தால் மாணிடர்க்கு ஈதல் 4). பூததீர்த்தம் - மணிக்கட்டினால் பஞ்சபூதங்கட்கு ஈதல். 5). பிதிர்த் தீர்த்தம் - தர்சனி(சுட்டு) அங்குட்டங்க (பெருவிர)ளின் நடுவாற் பிதிரர்க் கீதல்.)

24. **ஆசமனம் -** முன்போலச் செய்க. (பின்னரும் ஆசமனம், சகளீகரணஞ் செய்தல் மேற்செய்த தத்துவசுத்தியும் சிவசொரூபபாவனையும் நிலைபெறச்செய்யும் பொருட்டே)

25. **தீர்த்தோப சங்காரம் -** சலத்திலே வைத்த அமிர்தத்தை இருதாய வௌஷட் என (சங்கார 24 முத்திரையால்) எடுத்துப் புருவநடுவில் ஒடுக்கிவிடுக. (சாந்து— சந்தனம் அணிவதால், புருவ நடு (விந்துத்தானம்) கெடாது குளிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. **சூரியோபஸ்தானம்** - சூரிய உபஸ்தானம் - இருகை நிறையச் சலம்விட்டுப் பிடித்துக்கொண்டு சங்கிதா(11) மந்திங்களை உச்சரித்து, ஓம் சிவசூர்யாய ஸ்வாஹா என ஒருதரம் தர்ப்பணஞ்செய்க. (**திருவிளங்கம்-** இருகைநிறைய சலம்விட்டுப் பிடித்துக் கொண்டு சங்கிதாமந்திரங்கள் உச்சரித்து சிவாயநம என அங்குள்ள சிவனிடங்கொடுத்து ஓம் சிவ சூரியாய சுவாஹா என ஒரு முறை தர்ப்பணஞ்செய்து ஆதித்தமூர்த்தியினிடத்து சிவனை உபஸ்தானஞ் செய்தல் (அடுத்துவைத்தல்) இதனால் ஆன்மசக்தியை சிவசக்தி யாக்கி விரித்து ஆதித்தகிரண வாயிலாக அங்குள்ள சிவனிடம் சேர்ப்பிப்பதுமாம்.) **குறிப்பு:-** 1) சூரியன் அதிகாலை உதிக்கையில் தர்ப்பணஞ் செய்வோரைக் காணின் அருளுவாராம் 2) (சிவ) சூரியனை நேரே வணங்காது தர்ப்பண (71) முத்திரையால் சிவந்தபூவும் நீரும் சுத்த பூமியிலிட்டு வணங்கவும்.

இவையே சந்தியாவந்தன கிரியை பாவனை தியான முறையாம். அதிகார வேறுபாட்டாலும் குருபரம்பரைச் சம்பிரதாய வேறுபாட்டாலும் சிறிதே மாறுபடலாம். ஆயினும் இம்முறையானது தூலசூக்கும தேகங்களுட் தத்துவங்களை நீற்றி (அழித்து), மலமாயா கன்மங்களை வலிகெடுத்து, உபாய நிஷ்டையாகும் பாவனையால் மெய்ஞ்ஞானம் உதிப்பித்துக் கதிசேர்ப்பனவாம். நாற்பாதங்களில் நில்லாத இளொகீகர் சந்தியாவந்தன பாவனையால், தியானத்தால், கருடபாவனையால் மாந்திரீகன் விடம் நீக்கும் ஆற்றல் பெறுவதுபோல **தடித்த மந்திரசக்தி வலுவேறித் தியானத்தால் ஞான நிட்டை கைவரப் பெறுவர்.**

**7.23 சமய பேதங்கள்:** மானிடர் அன்றாடம் தமது உடல், உள்ளத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் ஏற்படும் துன்ப மிகுதியையும் இன்பக் குறைவினையும், அவை தமது கட்டுப்பாட்டில் அமையாததையும் ஆராய்கின்றனர். என்றும் ஒன்றினைச் சார்ந்து அதன் வண்ணமாய் நின்றறியும் ஆன்மா யாதாயினுமோர் வியஞ்சகத்தை- ஆதாரத்தை அறிவு விளக்கத்திற்காக வேண்டி நிற்கின்றது. அந்நிலையில், தம் முன்னோர் வகுத்த பாதைகளையும், அவர்கள் ஒவ்வோர் தலைவனை மையமாக்கி, அவன் போதித்தும் எழுதியும் வைத்துப் போந்த ஏடுகளை, நூல்களை அவ்வத் தலைவனின் பெயரால் அமைந்த சமயமூலம் ஆய்கின்றது. அதனால் சமயம், மக்களுக்கு அறிவு விளக்கத்தினை ஏற்படுத்தி அதனால் அவர்தம் துன்பமகற்றி இன்பமுற வழி சமைக்கும் நற்சாதனமாகவுள்ளது. "தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை....)- திருமூலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.23.1. உண்மைச்சமயம் :** உண்மையறிவு விளக்கம் என்பது, அதற்கெதிரான பொய்யைச் சுருதி (வேதாகமமுதலிய ஆதிநூலாதாரம்), யுக்தி, அனுபவங்களால் வெற்றிகொண்ட காரணத்தால் என்றும் மாறாது ஏகமாய் நிலைத்ததாயிருப்பது. அங்ஙனமின்றிக் காலத்திற்குக்காலம் மாறும் அல்லது தம்முள் மாறுபட்ட கொள்கையினையுடைய சமயங்கள் கீழ்மையாகி பொய்யாய் நிலைப்பதில்லை. பாரம்பரியமாக மாறாதிருத்தல் எனுந்தன்மை அச்சமயத்தினை ஆக்கியவனின் காலத்தா லழியாத கருத்திற் தங்கியுள்ளதால் பிறந் திறந் துழலுவோர் சாதித்த சமயங்கள் அவ்வக் காலதேச வர்த்தமானங்களுக் கன்றி என்றும் பொருந்தும் கொள்கையுடைத்தனவல்ல. ஒழுக்க சீலங்களையே யன்றி உலகு, உயிர், இறை (பதி பசு பாசம்) பற்றிய வரையிலேயே சமயங்களை ஆய்ந்து வகுக்கப்பட வேண்டும். வரையில் எவ்வித ஐய விபரீதங்களுக்கும் இடந்தராமல் தெளிவாகக் காட்டுஞ் சமயமே **மெய்ச்சமயம்.** அதுவே மனிதர்களுடைய இம்மை மறுமை நன்மைகளைப் பெறுவதற்கு இன்றியமையாதவற்றைக் குறைவின்றி வழங்கவல்லது. 'பொன்னும் மெய்ப் பொருளுந் தருவானைப் போகமும் திருவும் புணர்ப் பானை...' - சுந்தரர். இது சைவசித்தாந்த சமயத் தாபகரான சிவனைக் கருதிய கூற்றாகும்.

**7.23.2. சமய கர்த்தாக்களும் சமயங்களும் :** இதனை, மானிடரால், மானிடரல்லாதவரால் (முழுமுதற் கடவுளால்) வகுக்கப்பட்டவை என இருபெருங் கூறினுள் அடக்கலாம். பிற்கூறிலிருப்பது ஒன்றே, அது (அ) **சித்தாந்த (ஞான அறிவின் எல்லையான) சைவம்.** அது உண்மைச்சமய இலக்கணத்துட்பட்டது. இதுவரை யாராலும் மறுத்துரைக்கப்பட்டு நிராகரித்து (பூர்வபக்கம்) ஆக்கப்படாதது. அத்துடன் ஏடுகள் கல்வெட்டுக்கள் அடங்கிய வரலாற்று ரீதியாகவும் அற்புதங்களினூடாகவும் இதுவே உண்மைச் சமயமெனச் சாதிக்கப்பட்டது. மானிடரால் வகுக்கப்பட்டவற்றை அவ்வற்றின் தாற்பரியங்களுக்கேற்பத் தாய்ச்சமயமென நின்று, திரிபின்றி, அவற்றிற் சொல்லப்பட்டன வெல்லாந் தன்னுளடக்கி, படிமுறைகளில் அவற்றை ஏற்றுக்கொண்டுள்ளது. இதனாலது சமயாதீதப் பரம்பொருளாய சிவனின் அநாதி சமயமாகின்றது. அறிஞர்களால் நன்காய்ந்து ஏற்கப்பட்டுள்ள 36 தத்துவங்களுள் மானிடர் வகுத்த சமயங்கள் அடங்குகையில், சித்தாந்தசைவம் தத்துவாதீதமாய் சமயங்கடந்து தாயான அதீத சமயமாகின்றது. 'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்' அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, அடுத்து வருவது, **மானிடரால் வகுக்கப்பட்ட சமயங்கள் :-** (ஆ) முதற் கடவுள் ஆணையாற் தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்திய அகச்சமயங்கள், (இ) கலைஞான சித்தியுடையோர் நிறுத்திய அகப்புறச்சமயங்கள், (ஈ) பிராகிருத, உண்மையறிவற்ற, இறைஞானமற்ற விஷேட புத்திமான்களால் நிறுத்திய புறச்சமயங்கள், (உ) பிராகிருத சாமானிய புத்திமான்களால் நிறுத்திய புறப்புறச் சமயங்கள். இதில் கிறித்தவமும், மகமதியமும் அடங்கும்.

இவை யொவ்வொன்றும் ஒவ்வொரு வகுப்பினராகவுள்ள (அவ்வச்சமய) அதிகாரிகளுக்கே யுரியனவாய்க் காலந்தோறும் தன்மைவேறுபட்டு வரும் ஏகதேச, விரிவற்ற, வியாபகமற்ற, குறித்தவோர் மார்க்கங்கள். இவை பற்பலவாய் வரும். இவற்றின் வியாபகமாந் தன்மையும், உண மைத் தன்மையும் மேலிருந்து (அ), (சைவ சித்தாந்தத்திலிருந்து) பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுவிய (உ) வரை குறைந்து குறைந்தே வரும். இன்னொரு வகையிற் கூறுவதாயின் (உ) விலிருந்து (அ) வரை வியாபக, உண்மைத் தன்மைகள் கூடிக்கூடி வரும். இதனா லும் முதல்வனால் நிறுத்தப்பட்டு என்றும் மாறாததான ஒரே சமயமான சித்தாந்தசைவம் 'குறைவிலா நிறைவே' என்றபடி பரிபூரண சமயமாம். அது சமுத்திரம்போற் தாயுமாகும். கீழ்ச்சமயங்களில் நிற்பவர்கள் அவை சொல்லும் அறங்களை வழுவாது அநுட்டிப்பின், அந்த அநுட்டான பலத்தினால் மேற்சமயஞ் சார்ந்து, இறுதியில் அதீத சன்மார்க்கம் எய்தப்பெற்று, அதுசொல்லும் ஞானசாதனங்களைக் கடைப்பிடித்துத், தத்துவஞானசித்தி கைகூடி பர(மேலான)முத்தி யெய்துவர்.

இந்த நியாயத்தினால் ஏனைச் சமயங்களெல்லாம் பரம்பரையில் - படி முறையில் முத்திக்கு வாயில்களாமென்றும், முதற்கடவுள் நிறுத்திய சமயாதீதப் பழையநெறியே முத்திக்கு நேர் வழியாமென்றும் அறிக. இதனால் ஏனைச்சமயங்கள் முத்திக்குப் படிமுறைகள் என்பதோடு அவற்றை நேரியவழியில் அநுட்டிப்போர் இடைப்பட்டதாகிய ஒவ்வோர் புண்ணிய லோகங்களில் வாழும் அவாந்தரப் பிரயோசனமெனுந் தகுதி யும் தனித்தனி பெறுவரென்க. 'தத்தம் சமயத் தகுதி நில்லாரை அத்தன் சிவன் ஆகம நூல் நெறி எத்தண்டமும் செய்யும் அம்மையில்-'திருமூலர்.

**7.23.3. சமய தத்துவங்களும் தெய்வங்களும் :** புறப்புற, புற சமய பேதங்களும் முதற்கடவுள் அதிட்டிக்கும் தூலமாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், சூக்கும, அதிசூக்கும மாயாதத்துவங்கள் ஒவ்வொன்றினையும் தெய்வத் தானமாகவும் முத்தித்தானமாகவுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நிற்கும். அகச்சமய பேதங்கள் முதற்கடவுள் அதிஸ்டிக்கும் தடத்த வடிவங்களாகிய சுத்தமாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினை தெய்வ, முத்தித் தானங்களாகக் கொண்டு நிற்கும். அதீத சன்மார்க்கமோவெனில் தத்துவாதீதமாயுள்ள முதற்கடவுளின் சொரூப சின்மய (சித்-சின்-ஞான) வெளியினையே தெய்வ சந்நிதியாகவும், முத்தி முடிவாகவுங் கொண்டு நிற்கும். இதனை 'நற்பதத் தார் நற்பதமே ஞான மூர்த்தி நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை (சொரூபம்)..' என்றார் அப்பர். (பாடல் பக் 51,53,231, 235, 337 பாடல்)

**7.23.4. சமய தாரதம்மியம் -** ஏற்றத்தாழ்வுகள் :- சமயங்கள் சொல்லும் தத்தம் பொருள்களின் (பொருள் என்பது இறை, உயிர், உலகு, முத்திவகை போன்றன) பலாபலன் கொண்டு. அவற்றை 1) இது அநாதியான முழுமுதற்கடவுள் நிறுத்திய அநாதிசமய மென்றும், 2) இவை அல்லாதார் (மானிடர்) நிறுத்திய சோபான (படிமுறை)ச் சமயங்களென்றும் 3) அவற்றுள்ளும் ஆற்றலின்மை காரணமாக இது உயர்ந்தது, இது தாழ்ந்தது என்றும் சமய வரையறை யெய்தத் தார தம்மிய விவேகஞ் செய்தல் அறிஞர் கடனாம்.

**சமயங்களின் வன்மை மென்மை பற்றி அறிய உள்ள ஏதுக்கள் சில.**

1) வலிவுடைச்சமயம் - எச்சமயம் தான் பரம்பொருளெனக் கூறுந் தெய்வத்திற்கு நால்வகை யோனிவாய்ப்பட்டுப் பிறந்திறந்துழலும் (போக்குவரவு) கர்மகதி கூறிற்றிலையோ அது **வலிவுடைய சற்சமயம்.** 'போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்..' திருவாசகம். அவ்வாறின்றி. எது தன் தெய்வத்திற்குப் போக்குவரவு கூறிற்றோ அது **மெலிவுடைய அசற்சமயம்.** (சற்- சத் நிலைத்த, அசற்- நிலையில்லா, 2) எச்சமயம் பிறசமயங்களும், சாத்திரங்களும் சொல்லும் பொருள்களெல்லாம் தன்மீது அடங்கக்கொண்டு, அவை சொல்லாத நுண்பொருள் சொல்லி மேம்படுமோ அது **சற்சமயம்.** எச்சமயம் அவ்வாறின்றி, (குறித்த, வியாபகமற்ற) ஏகதேசப் பொருள் சொல்லிக் கீழ்ப்படுமோ அது **அசற்சமயம்.**

3) எது சமயங்கள் எல்லாம் சீவர்களின் கன்மபேதத்திற்கு ஏற்ப முதற்கடவுள் நிறுத்தியவை யென்னுமோ அது **சற்சமயம்.** எது தன்னைச் சுட்டி இவ்வொரு சமயமே கடவுள் நிறுத்தியது, ஏனையவை தாமும் கட்டி நடத்தின என்னுமோ அது அசற்சமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) எது யாதொரு தெய்வங்கொண்டு வழிபாடு செய்யினும் முதற்கடவுள் அவ்வத் தெய்வங்களிடமாக நின்று அவ்வழிபாட்டையேற்று அருள் வழங்குவரென்னுமோ அது சற்சமயம். எது தான்கூறும் வழிபாடொன்றினையே கடவுள் கொண்டருளுவார் அல்லாதவற்றைக் கடவுள் கொண்டருளார்; அவை வீண்செயலென்னுமோ அது அசற்சமயம். இவையும் இவை போல்வனவும் சமயங்களின் வன்மை மென்மை அறியும் வழிகள்

**7.23.5. சமயங்கள் அதிகரித்ததன் காரணம் :** பல்வேறு தரமுடைய மாணவற்கேற்ப அவர்களுக்காய பாடநெறிகளையே கொண்ட வகுப்புகளில் அவர்களை நிறுத்தி அறிவூட்டி அடுத்த மேல் வகுப்பிற் குத் தயார்படுத்துவது போன்றதே இதுவுமாம். அங்ஙனமாயினும் யாவரும் மேல் வகுப்புகளுக்குப் போகாது, சித்தியடைந்தோர் மட்டும் போவது போல (‘நாம் மேலை வீடெய்த’ திருவாசகம்) அவ்வச்சமய நெறியின் வழுவாது ஒழுகியோரே மேன்மேல் நெறிகளையடைந்து, ஈற்றில் (ஏலவே உணர்த்தப்பட்ட) சைவநெறி சார்ந்து, அதிலும் சரியை கிரியா யோகமெய்தி, பின்னும் இப்பிறப்பிலோ மறுபிறப்பிலோ குரு வாய்க்கப் பெற்று ஞானத்தால் வீடடைவர். ஏலவே உறுதியாக நிறுவப்பட்டு அநுபூதி மான்களாற் பலகாலும் எடுத்துரைக்கப்பட்ட உண்மையே இதுவாம். பாரத, ஈழ அறிஞர்களாலன்றி பிறநாட்டினராலும் ஆய்ந்தறிந்த உண்மை இது. (“சித்தியாரின் புறச்சமய நெறிநின்றும்” பார்)

The saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South Indian and Thamizh religion.- G.U pope.

The unique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic amount of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum of 36 categories (thathvass). This exposition is no more metaphysical but is purely logical account on scientific principles. – Theos Bernard.

The fact must be born in mind that in Thamizh alone exists systematic, authoritative work in the Saiva Siddhanta, whereas in Sanskrit not ven a single systematic work on the philosophy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

is to be met with, even though its principle tenets are found scattered with much rubbish in the Sankya, the Yoga, the Niyaya, the Vaishesikha, and the Vedanta. – Maraimalai Adigal.

வகுப்புகளும், பாடநெறிகளும், அவ்வத் தரத்திற்காய ஆசிரியரும் பொறுப்பு வாய்ந்த கல்வி அதிகாரிகளால் ஏற்பாடு செய்வதற்கொப்ப இவற்றை யெல்லாம் நடுநின்று தனது மாப்பெருங் கருணையால் நிர்வகிப்போர் முழுமுதலால் நிறுத்தப்பட்ட பிரம விட்டுணுக்கள், அநந்தர், ஸ்ரீகண்டருத்திரர் போன்ற அதிகாரநிலைத் தெய்வங்களே. பரீட்சைப் பலாபலன்களை அவ்வவ் வதிகாரிகள் மூலமே அதி மேலதிகாரிகள் வழங்குவதே போல, முழுமுதலே மறுபிறப்பு, முத்தியாகிய பலாபலன்களை அம்முறையிலேயே வழங்குவார். ஆதலின் பல்வேறு சமயங்களையும் அதிகாரிகளையும் அவ்வப் பிரதேசங்களில், அவ்வக் காலங்களில் நிறுவியவர் அந்த முழுமுதலே யென்பது சுருதி யுக்தி யனுபவங்களால் ஐயமின்றி அறியக்கிடக்கின்றது. இதில் வேறுபட்ட கருத்திற் கிடமில்லை. இது தர்க்க மற்றும் விஞ்ஞானபூர்வ முடிவுமாம். மேலும், சைவசமயமானது மாயையினைப் பொய்யெனக்காட்டி மெய்யான நிலைத்த பேரின்பப்பயன் அளிக்கும் வாழ்க்கை நெறியேயையே யன்றித் தனிமானிடன் போதித்தோ எழுதியோ வைத்த சமயநெறி அல்ல.

இனி சமயங்கள் காலபேதத்தினால் விருத்தியெய்தியும் குன்றியும் வருதல் அவ்வச் சமயிகளின் தர்ம, அதர்ம விருத்தியினாலாம். அசற்சமயங்கள் பெரும்பாலும் அரசை அண்டிச் செல்வாக்குற்று அதனால் மதமாற்றம் முதலான அதர்மவழிச் செல்கையில் சற்சமயம் என்றும் மாறாத முழுமுதலின் தலைமையையே நாடிநிற்பதால் அது காலத்தாற் சிறிதே மாற்றமுறினும் அழியாது மீளமீளப் புத்துயிர் பெறுமென்பது அவற்றின் நியாய பலத்தினாலறிதல் சரித்திரமுங்கூட. ஆதலின் காலங்கனிய மேற்சமயமென்றும் மேற்சமயமே யென்பதும் கீழ்ச்சமயம் என்றுங் கீழானதே யென்பதும் உணரப்படும். காரணம் கீழ் மேற் பகுப்புக்கள் ஏலவே நிறுவப்பட்டவை. காலம் மாயை; அது உண்மையைச் சிலகால் மட்டுமே மயக்கி மறைக்கும். சைவத்தின் சரித்திரத்தில் பெரும்பாலும் ஏழு நூற்றாண்டுக் கொருதடவை அது புத்துயிர் பெறுதல் காணமுடிகின்றது. (சங்ககாலம், நாயன்மார் காலம், சந்தனாசாரியார் காலம் மற்றும் இக்காலம். ஆய்ந்துணர்க).

**7.23.6. தாய்ச்சமய அறிவுரை :** இது முன்கண்டவாறு திருமூலராற் கூறப்பட்ட 'தத்தம் சமயத் தகுதி நில்லாரை அத்தன் சிவன் ஆகம நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறி எத் தண்டமும் செயும் அம்மையில்...' என்பதனால் உணரப்படும். பாடசாலை அதிபர் ஒருவர் தனது பொது உரையின் போது எல்லா மாணவரையும் நோக்கி, நீங்கள் ஒழுக்க சீலர்களாய் உங்களுக்காய பாடங்களைப் படித்துச் சித்தியாகி மேற்கல்விக்கும் உங்களைத் தயார்ப்படுத்துங்கள். இல்லையாயின் எதுவித தயக்கமுமின்றி வகுப்பிறக்குதல், அவ்வகுப்பிலேயே மீளவும் நிறுத்துதல், ஒழுக்கந்தவறின் பாடசாலையை விட்டு நீக்குதல் ஆகிய தண்டனைக்கு உள்ளாவீர்கள் என்றமைபோலாம் இந்த தாய்ச்சமய அறிவுரையும். வகுப்புகள்போல சமயப் படிமுறைகளும் உள்ளன. மேலும் அப்படிமுறைகளைச் சித்தியார் எட்டாம்சூத்திரப் பாடல்களாகிய 1) புறச்சமய நெறி நின்றும், 2) இம்மையே ஈரெட்டாண் டெய்தி, 3) ஓதுசமயங்கள், 4) அருமறையா கமமுதனூல், 5) வேதநூல் சைவநூல், 6) சித்தாந்தத்தே சிவன், 7) இறைவனாவான் போன்ற பாடல்களை ஆய்ந்தறிக. இந்நூலிலும் வெவ்வேறிடங்களிற் தரப்பட்டுள்ளன. மேலும் ஏட்டுருவிலன்றி வாய்மொழி மூலந் தோன்றிக், காலம் வரைவு செய்யப்படாத, பாரத அநாதி நூல்களாய், முதல்வனால் ஆக்கப்பட்ட வேதாகமங்களை ஏற்போர் சமயம், ஏற்காதோர் சமயம் என இருபெரும் பிரிவிலடங்கும் சமயங்களில் ஏற்போர் சமயம் உண்மைச்சமய மெண்பதற்காய காரணம் ஏலவே கூறப்பட்டது. இனி ஏற்காதோருள்ளும் பலவகை.

**7.23.6.1 அகச்சமயம் -** தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்தியவை. இவை பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் - பரிணாமவாதம் என்றவாறாம். இவை சித்தாந்த சைவத்தோடொப்ப பதி பசு பாசம் ஆணவம் கன்மம் சுத்தமாயை அசுத்தமாயை என்பவற்றை ஒப்புக்கொண்டு, அவ்வப் பொருள்களுக்குக் கூறும் பொதுவியல்பு மாத்திரையே கொண்டு, தன்னியல்பு கொள்ளாது மாறுபடலாம். இதனால் முதல்வன் அகச்சமயத்து ஒளியாயுள்ளான்.

**7.23.6.2 அகப்புறச்சமயம் -** இவை ஆறாகும். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவம். 1) **பாசுபதம்** - ஆன்மாக்கள் பலவாய், நித்தமாய், வியாபகமாய் காரியகாரணத் தொடர்பால் உதிக்கும் ஞானத்தால் தனித்தனி வேறாயுள்ளன. ஆணவம் என்பதொன்றில்லை. மாயை கன்மங்களாற் பந்தமுற்று இன்ப துன்பங்களை யனுபவிக்கும். இவற்றில் வெறுப்புத் தோன்றி சாத்திர முறையாற் தீக்கை பெற்றவனிடம் ஈசஞானம் போய்ப்பற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனும் தன் குணங்களை அவனிடம் பற்றுவித்துத் தான் அதிகாரத்தி னொழிவு(ஒய்வு)பெறுவன். இவர்கள் சங்கிராந்த சமவாதியினர். பிர கிருதி மாயையெனும் தத்துவத்தில்வைகும்(வதியும்) உருத்திரர் இதனைச் செய்தவராவர்.

2) **மாவிரதம்** - பாசுபதத்திற் கூறியபடியான ஆன்மா அதே முறையில் இன்ப துன்பங்களை யனுபவிக்கும். அவ்வாறே தீக்கைபெற்று எலும்புமாலையணிதல் முதலிய சரியைகளில் வழுவாது ஒழுகினவர் முத்தராகி சிவனோடொப்ப எல்லாக் குணங்களும் பெறுவர். இவர்கள் உற்பத்திசமவாதியினர். வித்யாதத்துவமெனும் சுத்தாசுத்த தத்துவத்தின் ஒன்றான வித்தையில் வைகும் உருத்திரராற் செய்யப்பட்டது.

3) **காபாலம்** - ஆன்மா, பந்தம் என்பன மாவிரதர்போலக் கொண்டு, தீக்கை பெற்று, பச்சைக்கொடி கைக்கொண்டு தலையோட்டிற் பிச்சையெடுத்துண்பவர், முத்தராய், சிவன் ஆவேசித்தலால் (தெய்வ மேறுதலால்) சிவசமமாவர். இவர் ஆவேசசமவாதியினர். வித்யா தத்து வத்தில் முதலாவதான காலதத்துவத்தில் வைகும் உருத்திரராற் செய்யப்பட்டது. (**குறிப்பு** : இன்றும் கிராமப்புறங்களில் பெரும்பாலும் பெண்தெய்வங்கள் ஆவேசித்தலும் அதனால் அடியவருக்கு வாக்குச் சொல்லுதலும் நிகழ்ந்துவரினும், ஆவேசமில்லாத காலத்தில் குறித்த ஆவேசிக்கப்பட்டவரின் ஒழுக்கக்கேடுகளால் அல்லது தெய்வம் தம்மீது ஏறுதென்ற நினைப்பால் வாக்குகள் நிலைத்துப் பலிதமாவ தில்லை.)

4) **வாமம்** - ஏகான்மவாதத்தில் இரண்டாவதான பாற்காரியன் கூறியவாறே அனைத்துப் பிரபஞ்சமும் சக்தியின் பரிணாமமே. சித்தபுருடன் செய்த வாமநூற் பிரகாரம் ஒழுகி சத்தியில் இலயித்தலே முத்தியென்பர். 36 தத்துவங்களில் இரண்டாவதான சத்தி தத்துவத்தில் வைகும் ஓரான்மாவாற் செய்யப்பட்டது சுத்தசாத்தம். வாமம் - இடம்

5) **வைரவம் -** பெரும்பாலும் வாமத்தோடொத்து சிறுபான்மை ஆசாரங்களால் வேறுபட்டு வயிரவனே பரம்பொருளெனக் கொண்டு வைரவபதத்திற் சேர்வதே முத்தியென்பர்.

6) **ஐக்கியவாத சைவம் -** இது பாடலாற்றரப்படும் : 'இன்மைமல மாயை கன்ம மென்றிரண்டே யிறைதா னிலங்குபல வுயிர்களுமுன் புரிந்த விரு வினையின் தன்மைகளா லெவர்களுக்குந் தனுகரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனந் தந்திடுமிங் கிதனாலே யிருபயனுஞ் சார்ந்து கன்ம மெலா நேராக நேராதல் மருவக் கடவுளருளா லெவையுங் கழித்திடுவ னதனாற் பின்மலமா னவையணுகா பெருகொளிமுன் புளதே பெற்றிடும்'

**7.23.6.3 புறச்சமயம் ஆறு:** தருக்கம், மீமாம்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம். இனிக் கூறுவனயாவும் அவ்வச் சமயக்கொள்கைகள் சைவ சித்தாந்தமல்ல.

(1) **தருக்கம்:** இது வைசேடிகம், நையாயிகம் என இருவகைத்து.

**(அ) வைசேடிகப் பொருள் (1) திரவியம்** - பஞ்சபூதம், காலம், திசை, ஆன்மா, மனம் என 9. நிலம் நீர் தீ காற்று அநித்தம். அவற்றின் காரணங்களாய நால்வகைப் பரமாணுக்களும் ஆகாயமும் நித்தம். ஆகாசம், காலம், திசை மூன்றும் வியாபகம். ஆன்மா வியாபகமும் பலவும். மனம் அணுவளவாய் ஆன்மாதோறும் வேறுபடும். ஆன்மா பரமான்மா சீவான்மா என இரண்டு. பரமான்மா முற்றுணர்வுடையவன். எல்லாம் வல்லவன். அவனது இச்சை வயத்தாலே உலகந் தோன்றி ஒடுங்கும். அவனாற் செய்யப்பட்டது வேதம். சீவான்மாக்கள் சிற்றறிவு உடையனவாய் வினைக்கீடாகப் பிறந்திறந்து இன்ப துன்பங்களை நுகர்வன. மனத்தோடு கூடியே அறிவுபெறும். **2) குணங்கள் :** இவை திரவியம் பற்றுக்கோடாக (ஆதாரமாக) நிகழ்வன. உருவம், சுவை நாற்றம் ஊறு (ஸ்பரிசம்) முதலிய 24. அவற்றுள் புத்தி, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, முயற்சி, அறம், பாவம் எனும் 8 குணமும், பாவனை (அனுபவத்தின் காரியமாய் நினைவிற்குக் காரணமாயுள்ளது.) என்னும் வாதனையும் (வருத்தமும்) சீவான்மாக்களுக்குச் சிறப்புக்குணங்கள். இவற்றின் புத்தி, இன்பம், துன்பம் என்பன அநித்தம் - நிலையல்ல. பரமான்மாவிற்கு அவை நித்தம் **3). தொழில்:** எழுதல், விழுதல் முதலியன. **4) சாதி:** பலபொருட்களின் பொதுத்தன்மை (பரம், அபரம்) **5) விசேடம்:** ஒவ்வொரு பொருட்குரிய தன்மை. (பஞ்சபூத வேறுபாடு) **6) சமவாயம்:** அவயவ, அவயவிகளுக் கிடையான தொடர்பு ஒன்று. **7) இன்மை:** முன்னின்மை, அழிவுபாட்டின்மை, என்றுமின்மை, ஒன்றி னொன்றின்மை என நான்காம்.

**தருக்க நூலாரின் முத்திக்காய படிகள்** 1) மேற்படி ஏழுபொருட்களின் சிறப்பியல்பு, பொதுவியல்பு வேற்றியல்புகளை உணர உடம்பின் வேறாய் ஆன்மாவின் இயல்பு விளங்கும். 2) உடம்பு முதலியவற்றை நான் என்றதனா மித்தை(பொய்)யுணர்வு கழியும். 3) முயற்சி இன்மையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் பாவங்கள் இல்லையாய்ப் பிறவி யொழியும் 4) வரக்கடவனவாய துன்பங்களின்மையின் உடம்பு முகந்துகொண்ட (தாங்கியெடுத்த) வினைப்பயன், நுகர்ச்சியாற் கழியவே (சைவசித்தாந்தத்தில் பிராரத்தம் உடலூழாய்க் கழிதல்) இறுதித்துன்பங் கெட்டு மனத்தோடு கூடுவதற்குக் காரணமில்லாததால் அறிவின்றிப் பாடானம்-கல் போற் கிடத்தலே முத்தி. வைசேடிக நூலாசிரியன் கணாதமுனிவன்.

(ஆ) **நையாயிகமாவது** வைசேடிகநூலிற் கூறியவற்றைச் சிறிது வேறுபடுத்தி, பிரமாணம், பிரமேயம், ஐயம், பிரயோசனம், திருட்டாந்தம் (உதாரணம்), சித்தாந்தம் (இதிற் தருக்கமுடிவு) அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுப்போலி, சலம், சாதி, தோல்வித்தானம் எனப் 16வகையால் விரித்துக்கூறுவது. நையாயிக நூல் செய்தவன் அக்கபாத(பாம்புக்கால்) முனிவன். தார்க்கிகரும் நால்வகைப் பௌத்தத்தின் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் பஞ்சபூதமென சித்தாந்தம் வழங்குவனவற்றில் ஆகாசந் தவிர்ந்த நான்கும் பரமாணுக்களென்பர். சமணர் பரமாணுக்களெல்லாம் ஒருதன்மைத் தென்பர். ('பாரினில் ஐந்தாயப் பரந்தாய் போற்றி நீரினில் நான்காய்....' திருவாசகம் - சித்தாந்தம்). தார்க்கிகர் வேதநெறியில் ஒழுகி வேதத்தைப் பிரமாணங் கொள்வதால் புறப்புறத்தவராய நாத்திகரோடின்றி வைதிகருட் புறம் என வைக்கப்பட்டனர்.

(2) **மீமாஞ்சை** : மீமாஞ்சை நூல் வேதத்தின் கருமகாண்டப் பகுதியை 12 அத்தியாயமாக ஆய்வதால் வேதம் எனப்படும். இது சைமினி முனிவனாற் செய்யப்பட்டது. அதில் 1) வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி அநாதியே சுயம்பு - தானாகவாயுள்ளது. 2) அங்ஙனமாகலின் வேதம் பிரமாணம். அதிலும் 'வேள்வி செய்க' போன்ற தொழிற் படுத்துவனவாகிய சோதக - சோதிக்கும் வாசகங்களே பிரமாணம். முதியோர் கூறுவன, செய்வன கண்டு அதைப் பற்றும் இளையோர்போல, சொற்பொருளெல்லாந் தொழிற் படுத்துஞ் சொல்லாலே உணரப்படுமாதலின், வேதத்திலும் அவ்வாறு தொழிற்படுத்துஞ் சொற்களே பொருள் விளக்கிப் பிரமாணமா மென்பது தெளியப்படும். அங்ஙனமன்றி 'உலகந் தோன்றி யொடுங்கும்'; 'தோற்றி யொடுக்க ஒரு இறையுண்டு; 'இந்திரன் முதலிய கடவுளருளர்; அவர் இவ்வியல்பினர்' போன்றவைகளும் சோதனா வாக்கியப் புனைந்துரை யாகலின் பிரமாணம். 'இந்திராய சுவாஹா' போன்றவையும் விதிக்கு உபகாரமாதலின் பிரமாணம். 'பரிமேதகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முதலாய வேள்விப் பெயர்களும் வேள்வியை வேறுபடுத்தி நிற்பதாற் பிரமாணம். வேதமெல்லாம் இங்ஙனம் விதியும், புனைந்துரையும், மந்திரமும், குறியீடுமென நால்வகைப்படும். விதி அங்கியும் ஏனையவை அதற்கு அங்கமுமாகும். வேதத்தில் விதித்தது அறம், விலக்கியது பாவம். (திருக்குறள், நீதிநூல் போன்ற அற நூல் களிலும் அவ்வாறேயாம்). 'ஆன்மாவையறிக' என விதித்தலின் ஆன்மாக்கள் பலவாய், நித்தமாய், வியாபகமாய், (சைவசித்தாந்தத்தில் இறை வியாபகத்துள் ஆன்மவியாபகம் அடங்கி வியாப்பியமாகும்), பிறந்திறந்து வினைகளைச செய்து வினைப்பயன்களை நுகர்ந்துவரும். வினைசெய்தார்க்கு வினையே துறக்கம் முதலிய பயனுதவும்

(**குறிப்பு - 1** : சைவசித்தாந்தத்தில், வினை சடம், அறியாதது. உயிர் சிற்றறிவுப் பொருளாயினும் தானாக அறியாது அறிவிக்கவே அறியும். ஆதலின் இறையென ஒரு பூரண அறிவுப்பொருள் உளதாகில், அதுவே, பரீட்சையெழுதிய மாணவனுக்குச் சித்தியும், தோல்வியும் நிர்ணயஞ் செய்யும் ஆசிரியன்போல, அவ்வவர் வினைக்கேற்ப புண்ணிய பாவங்களையும் அதனாலாம் இன்பதுன்பங்களையும் நிர்ண யிக்கும் ஆதலின் கடவுள் உண்டென்பது துணியப்படும். மீமாஞ்சகரின் இக்கருத்தினைப் (கடவுள் இல்லையென்பதை) புத்தரும் கூறுவர். மேலும் **சாங்கியர் கூறுவதாவது :** காமிய (விரும்பும்) பலன்களைக் குறித்து வினைசெய்யின் அவ்வினை அவ்வப் பயன்களை உதவும். நிஷ்காமியமாய் விலக்கியனவும் ஒழித்து வேள்வி செய்யின் அவ்வினை முத்தியைத் தரும். இவ்வான் மாக்களுக்கு வேறாகப் பரமான்மா வெனவொன்று இருக்குமென்பதும், உலகந் தோன்றியழியும் என்பதும் பொய். இவ்வாறே அது இருக்கும். இங்ஙனம் செய்யப்பட்ட சைமினி சூத்திரங்களுக்கு பாடியஞ்செய்தான் சபரமுனிவன். பட்டாசாரியன் சூத்திரமதம் பற்றி வழிநூல் செய்தான் பிரபாகரன் பாடியமதம் பற்றி வழிநூல் செய்தான். ஆதலின் மீமாஞ்சை இரு வகையாயிற்று. (கடவுளை ஏற்காதவர் வேள்வி யாது)?

**குறிப்பு 2** : வேள்வி என்பது ஆராதனை, ஈகை, யாகம், பலி எனப்படுவ தால், அது, இறைவற்குத் தானமாக வழங்கும் வேதபாராயணம், திருமுறையோதல், இறைபுகழிசைத்தல், தாம்விரும்பும் நற்பொருளை இறைவனேற்கும்படி கொடுத்தல் போன்றவையாம். 'தேவாரம்' வாரப்பாடெனும் அன்புடன் இறைவற்கு இசைமாலை யணிவதாம். இவ்வகையிற் செயற்கருஞ் செய்கையாக வேள்வி யாற்றியமை பெரியபுராணத்தில் வரும் சிறுத்தொண்டர், **கண்ணப்பர்** போன்றோரின் வரலாறுகளாற் தெளிவுறும்.˙.(அன்று பசுக்கள், குதிரைகள் வைத்தே வேள்வியாற்றியதால் அது பிற்காலத்தில் நிராகரிக்கப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால், இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கைத், தன்பரிசும் வினைஇரண்டும் சாருமல மூன்றும்அற, அன்புபிழம் பாய்த்திரிவர் அவர்கருத்தின் அளவினரோ?' - கண்ணப்பர் நிலைபற்றிச் சிவன் கூற்றாகச் சேக்கிழார்:

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும், அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும், அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும் அவனுடைய நிலைஇவ்வா றறிநீ" என் றருள்செய்தார். "முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனல்மூழ்கிப், பன்முறையும் தம்பிரான் அருள்செய்த படிநினைந்து, மன்னுதிருக் காளத்தி மலைஏறி முன்புபோல், பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளிந்திருந்தார்" சிவகோசரியார் - (படம் பார்க்க)

**குறிப்பு 3 :-** முத்தியென்பது பதமுத்தி, பரமுத்தியென இரு வகைத்தாகும். பரமுத்தி யொன்றே, அது சிவனடிசேரல். பதமுத்திகளானவை பல்வேறு சமயங்கள் உள்ளதுபோலப் பலவாமென்பது சைவசித்தாந்தம். பரமுத்தி மெய்ஞ்ஞானமின்றி வாய்க்காதென்பதனை ஏலவே பல இடங்களிலும் இந்நூலிற் காட்டப்பட்டது. ஆதலின் சாங்கியர் கூறும் முத்தி பூரணவிளக்க முடையதல்ல, அவர் இறையென ஒன்றில்லை என்பதால் யார் யாருக்கு முத்தி வழங்குவதென்ற கேள்வியும் எழும். இத்தியாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களால் அத்தகு சமயங்களின் கீழ்மையும், சைவசித்தாந்த மேன்மையும் மேலும் புரிதரும். தரங் குறைந்தவைகளே பிரச்சாரத்தை வேண்டிநிற்பதுபோல அரச மற்றும் பிறதேச உதவிடன் பவனிவரும் சமயங்களில், அவர்களின் ஆங்கிலமொழி மூலமான போதனைகளில் மயங்காது, ஆரவாரங்கண்டு ஒதுங்கும் ஆமைபோலப் புலனடக்கித் தம் முதலான சிவத்துடன் அத்துவிதமாகச் சார்ந்து இன்புற்றிருப்பர் சீவன்முத்தர். அவர் பரமன்றிப் பதார்த்தங்கள் பாரார். இவ்வகையில் ஸ்மார்த்தம்பற்றி அறியவேண்டியுள்ளதால் மேலும் ஸ்மார்த்தரின் மீமாம்சை ஆயப்படுகின்றது. மீமாம்சையின் 12அத்தியாயத்துள் முதலாம் அத்தியாயத்தின் 4 பாதங்களும், மீமாம்சைபற்றி (இதில் ஆரம்பத்திற் கூறப்பட்ட) பிரமாணங்கள் பற்றியவை. இதில் மூன்றாம் பாதத்தில் வேதத்தோடு முரணாது **மனுமுதலிய ஆன்றோராற் செய்யப்பட்ட ஸ்மிருதி** முதலியவற்றிற்கு மூலவேதம் உண்டென்று வழியளவையால் உணரப்படுவதால் அவை பிரமாணமாம் என்று கூறப்பட்டுள்ளது.

**குறிப்பு 4:**- இந்நூலிற் பலஇடங்களில் ஸ்மார்த்தம் சைவத்தோடு ஒன்றாததினால் ஸ்மார்த்தப் பிராமணர் சிவபூசையாற்றாதும், சிவாயநம மந்திரிக்காதும், ஆகமப் பிரமாணத்திற்கேற்ப கும்பாபிடேகஞ் செய்து நிறுவப்பட்ட சிவாலயங்களிலும் சிவக்குடும்ப ஆலயங்களிலும் தீபம் எடுப்பதே தவறெனப்பட்டது. அதற்காய நியாயம் இப்பகுதியால் உணரப்படும். அதாவது, அவர்கள் 1) வேதத்தைமட்டும் ஒப்புக் கொண்டமை 2) ஆகமத்தை ஒப்பாது, அவ்வாகமப் பிரமாணம் அமைக்கப்பட்ட ஆலயங்களிற் பூசையேற்றமை, 3) யாவற்றிலும் மேலாக 'பரமான்மா உண்டென்பது பொய்' என்ற மீமாஞ்சக மதப் பிரிவாகி அந்நூலின் முதலாம் அத்தியாய 3ம் பாகத்தில் வரும் மநுவென்ற மாநுடனின் நூலையேற்றுக் கருமமாற்றியமை ஆதியனவாம். இதனால் இச்சுமார்த்தரான ஷண்மதம் நிறுவிய சங்கரரும் சித்தாந்த சைவரால் நிராகரிக்கப்பட்டவர் ஆகின்றார். புதுமை என்னவெனில் இறைவன் அல்லது பரமான்மாவென வேறு ஒன்றில்லை யாவும் ஒன்றேயெனும் மீமாம்சக மதப்பிரிவான ஸ்மார்த்தசங்கரர் 6 சமயமும் 6 முழு முதலை(இறைவனை?) உடையன என்றமையாம். இனி, மீமாஞ்சகர் இரண்டாம் அத்தியாயத்தில் கருமபேதவியலும், மூன்றாவதில் அங்காங்கியியலும், நாலாவதில் பிரயோகவியலும், ஐந்தாவதில் முறைமைப்பாட்டியலும், ஆறாவதில் பயனியலும், ஏழாவதிலும் எட்டாவதிலும் மாட்டேற்றியலும், இவ்வாறே 9ல் ஊகவியல் 10ல் விலக்கியல் 11ல் தந்திரவியல் 12ல் பிரசங்கவியல் என வகுத்துள்ளதை சிவஞானமாபாடியத்தால் அறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(3) ஏகான்ம வாதம்** : இது, மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடாப் பிரமவாதம், சத்தப் பிரமவாதம் என நான்காகும்.

**3.1 மாயாவாதம் :** சச்சிதானந்தமாய் நித்தமாய் வியாபகமாய் நிற்பது பிரமம். பரமார்த்தத்தில் - மேலான பொருட்களுள் அதுவொன்றே மெய்ப்பொருள். ஏனையவெல்லாம் பிரமத்தின் விவர்த்தனமாய் (சுழற்சியாய், புரட்சியாய்), அவிச்சை - அறியாமையினாற் காணப்படுவன வாகலிற் பொய். இங்ஙனம் தோன்றும் உலகத்திற்கு முதற் காரணமாகிய மாயை பிரமம் போலச் சத்து - உள்பொருளுமின்றி முயற்கொம்பு போல அசத்து - இல்பொருளுமின்றி அநிருவசனமாய் - சொல்லொணாததாய் இருக்கும். இம்மாயைக்கு வேறான பிரமரூபமே யான் என அறிவதே முத்தியென்பதாம். சச்சிதானந்தப் பொருள்.

| இயல்பு | பதி | பசு | பாசம் |
|---|---|---|---|
| சத்து - உளதாந் தன்மை | ஆம் மாறாது என்று முளது | உள்பொருளாயினும் வினைக்கேற்ப,மாறி மாறி,யோனிதோறும் பிறந்திறந்து வரும் | உள்பொருளாயினும் மா-மாய்ந்தும்,ஆ-ஆகி-தோன்றியும், மாறி மாறி வரும் |
| சித்து - அறிவு டைமை | ஆம் அறிவுரு வானது | நூல்,ஆசிரியர்,காட்டக் காண்பது.முன்னறிந்தது பின்னறியாது மறப்பது. | சடமாதலின் அறிவற்றது. உதாரணம் மண் |
| ஆனந்தம் -என்று மின்பம் | ஆம் இன்ப மய மானது | அவலம்,கவலை, சோர்வு,வருத்தம், வறுமையாதியவற்றால் துன்பமே மிகுதி | இன்ப துன்ப உணர் வற்ற சடம். |

(குறிப்பு- சித்தாந்தத்தோடொப்ப பரம்பொருள் விளக்கமாகிய சத்து - உள்பொருள், சித்து - அறிவுடைப் பொருள், ஆனந்தம் - ஆனந்த மயமானது என்றல் சரியானதேயாயினும், பசு - உயிர் - ஆன்மா பற்றியதும், பாசம் - மாயை - உலகு பற்றியதுமான இவர் கருத் துக்கள் ஏற்புடைத்தன்று. பாசம், ஆணவம் கன்மம் மாயையென மூன்றாயிருப்பினும் அட்டவணையில் (மாயை பிரபஞ்ச முதற் காரணமாதலின்) மாயையே சுட்டப்படுகின்றது.

3.2 **பாற்காரிய வாதம் :-** இவரும் முன்கூறப்பட்டவாறு பிரமமே சடமுஞ் சித்துமாய்ப் பரிணமித்த தென்பர். அவ்வாறு விகாரப்பட்டமையை அறியாததாற் பந்தமாயிற்று. பரமார்த்தத்தில் உள்ளது ஒரு பொருளே. வேதாந்த ஞானத்தால் உடம்பிற்கு வேறாகிய ஆன்மரூபம் விளங்கும். அதுவே பரப்பிரமம் என்றறிந்து அதனில் இலயித்தலே (ஐக்கிய மாதலே) முத்தி யென்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.3 **கிரீடாப் பிரமவாதம்.** முன்கூறப்பட்ட பிரமமே நான். யான் ஒருபடித்தன்றிப் பலவேறு வகைப்பட்ட விகாரப் பொருள்களோடு கூடிப் பலவாற்றான் விளையாடுகின்றேன் என அறிதலே முத்தியென்பர்.

3.4 **சத்தப்பிரம வாதம் :** காரணமாகிய பரப்பிரமம் இறுதிக் காலத்திற் சத்த வடிவிற்றாய் இருக்கும். அது அவிச்சையினாற் சடமுஞ் சித்துமாகிய உலகங்களாய் விரிந்து முடிவில் சத்த மாத்திரையே உள்ளதென அறிவதே முத்தி. இங்ஙனம் நால்வேறு வகைப்பட்ட ஏகான்மவாத நூல் செய்தவன் வியாதமுனிவன்.

**குறிப்பு :** ஷண்மதம்போற் பல்கூறு பட்டவற்றிற்கு தனித்ததோர் சுயசொரூபம் கற்பிக்க வியலாததால் அவை கூறுகளாய் அழியும். ஆதலின் தனக்கென ஒரே கருத்தைக் கொண்டிராத வியாதனின் நால்வகை வாதமும் நிரந்தரமாவது எங்ஙனம்?. ஆதலின் ஏகான்மவாதம் நடைமுறையில் ஆக்கமுறாவிடினும் கொள்கைஆய்வுக்கென நிலைக்கக் கூடும். ஷண்மதத்தில் சைவம், வைணவந் தவிர ஏனைக்கூறுகள் நடைமுறையிற் பெரும்பாலும் இல்லாதொழிந்தன. இந்துவென்ற ஷண்மதம் ஆய்வுக்காகவும், அரச பாவனைக்காகவும், பாரதத்திற் தோன்றாத மதங்களை வேறுவைத்தெண்ணவுமே பயன்படுகின்றது. நான் ஓர் இந்து என்பவன் தன்னை எவ்வாறு வரையறை செய் வான்? அவனுக்குரிய பதி பசு பாச மற்றம் முத்திக் கொள்கைதான் யாது? இக்கேள்விக்கு விடையாக மேற்கூறியவற்றின் அடிப்படையில் எதனைச் சொல்லப் போகின்றான் என்ற ஆசங்கை மேலிடுவதால்: நம்மவர் ஆழ்மனதிற் கொள்ளவேண்டிய சில கருத்துக்கள்: 1. நாம் சைவரே. 2. எமது சனாதனசைவம் ஷண்மதத்தில் ஒன்றாக சங்கரரால் வரைவுசெய்யப்பட்ட சைவமல்ல. 3. அது என்றுமுள்ள சனாதன தர்மமென அழைக்கப்படுகின்றது; சிவசம்பந்தமாய் சமயாதீதப் பழம்பொருளாய சிவனையே பொருளெனக் கொண்டது. 4. பசுக்கள் பலவாய் நித்தமாயிருப்பினும் சிவப்பொருளோடொப்ப முத்தியிலும் சரிசமமாகா என்றெல்லாம் திரிபின்றி விளக்க மேற்காட்டிய(பக்400) அட்டவணை பயனாகும். **உண்மை அடிப்படையிலேயே சமயசமரசம் செய்யவேண்டும். பொய்யகற்றி மெய்காட்டல் தர்மமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7.23.6.4) புறப்புறச்சமயம் :** உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம்(சமணம்) என ஆறு ஆகும்.

4.1 **உலகாயதம்** - காண்டல் அளவை ஒன்றே பிரமாணம். தூல அறிவன்றி சூக்கும அறிவற்றவர். இவர் கூறுவன: ஆகாயத்தை விடுத்து நிலம், நீர், தீ. காற்று ஆகிய நான்கே தத்துவங்கள். இவை நித்தம். இவற்றின் கூட்டமே உடம்பு. வெற்றிலையும் சுண்ணாம்புஞ் சேர சிவந்த நிறம் உண்டாதல் போன்று இக்கூட்டிலுண்டாகிய உணர்வே உடம்பு. அது உடம்பு வளர வளரும், தேயத்தேயும். உடலை விட்டு உயிரென ஒன்றில்லை. உடலுக்கு இன்ப துன்பங்கள் இயல்பேயன்றி வினையால் என்பது பொய். மேலுமவரின் முத்தி பற்றிக் கூறுவதாவது:

இம்மையில் மங்கையரோடு கூடிவாழ்வதே துறக்கவின்பம். அதுபெறாது பகைவரால் நோயால் வறுமையால் வருந்துவதே நிரய(நரக)த் துன்பம். இதுவன்றி வேறே துறக்க நிரயங்கள் உண்டென்பது பொய். நாற்பூதக் கூட்டரவில் பிராணவாயு நீங்கின் உணர்விழந்து உடல் நாசமாம். அதுவே வீடுபேறன்றி வேறில்லை. கற்பு, தானம், தருமம் பற்றிக் கூறுவன அவ்வவற்றாற் துன்புற்றோர் செய்த நூல்களாதலின் அவற்றைக் கைவிட்டு உழவு, வாணிபம், செங்கோல்முறைமை முதலிய இம்மையின்பங்களை நுகர்ந்து வாழ்தலே உறுதிப்பயன். உலகாயத நூல் செய்தோன் பிருகஸ்பதி (தேவகுரு, வியாழகுரு). உலகாயதர் தேக, இந்திரிய, பிராண, அந்தக்கரண ஆன்மவாதிகள் என நான்காம்.

4.2 **பௌத்தம்** - உலகத்திற் பிறந்திறந்து சீலம் முதலியவற்றால் நல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்திபெற்று தன்னைப்போற் பிறரும் உணர்ந்து உய்தற்பொருட்டு கருணையினாற் பிடகநூல் செய்தவன் புத்தக்கடவுள். அதில் ஞானமாகிய ஆன்மா நீரோட்டம் போலக் கணந்தோறும் தோன்றியழியும். அப்பொழுது முற்கணத்தில் அழிவெய்தும் ஞானத்திற் தோன்றிய வாசைன பிற்கணத்திற் தோன்றும் ஞானத்திற் பற்றுதலால் அறிவு முதலாயின நிகழும். மற்றும் உள்பொருள் எனப்பட்டவைகள் கணந்தோறும் தோன்றியழியும். இந்த ஞானத்தாற் தோன்றிய வாதனை-வேதனை அழிவதே முத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வகைப் பௌத்தர். 1) மாத்தியமிகர் - இவர் எல்லாப் பொருளுஞ் சூனியமென்பர். 2) யோகசாரர் - இவர் புறப்பொருள் சூனியமென்பர். 3) சௌத்திராந்திகர் - புறப்பொருள் உண்மை வழியளவையால் அறியப்படும் என்பர். 4) வைபாடிகர் - இவர் புறப்பொருள் காட்சிப் பொருளென்பர். புத்தரின் மாணாக்கர் செய்தவைகள் இவை.

4.3 **ஆருகதர் (சமணர்)** - இவர்கள் கூறும் பதார்த்தங்கள் ஏழாவன : **(அ) சீவன்-** மூன்று. 1) அநாதிசித்தன் - அருகக் கடவுள். 2) முத்தன் - மோகமுதலிய பந்தத்தின் நீங்கியவன். 3) பெத்தன் - அவற்றுட் கட்டுண்டவன். இச்சீவன் எடுத்த உடம்பளவில் வியாபகமாய் உடம்பு தோறும் வெவ்வேறாம். **(ஆ) அசீவன்** ஆறு. - 1) புற்கலம்- (உடல், உயிரற்றது) உருவப்பொருளான நிலம், நீர், தீ, காற்றும், மரம் புல் முதலிய நிலையியற் பொருளும், பை முட்டையென்பவற்றிற் பிறக்கும் இயங்கியற் பொருளும் என ஆறாம். இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். 2) ஆகாயம் இரண்டு உலகாயம், உலகங்கடந்த எல்லைகளற்ற ஆகாயம். 3) தன்மம் - புற்கலத்தின் வேறாய் நன்மை யைப் பயப்பது. 4) அதன்மம் - தீமை பயப்பது. **(இ) ஆச்சிரவம்**- பொறிவழிச் சேறல், கன்மத்தொடர்ச்சி. **(ஈ) சமுவரம்** - அங்ஙனம் செல்லாது தடுத்து முத்திக்குக் காரணமாவது. அது நிலத்தில. ஊர்வன சாகாதபடி மெல்லென நடத்தலும், இனியவை கூறலும், நியம உணவுமாம். **(உ) நிர்ச்சரம்** – சுடுபாறையிற் கிடத்தல், தலைமயிர் பறித்தல் ஆகிய தவங்களாம். **(ஊ) பந்தம்** - சீவனுடைய சுதந்திரத்தை யடக்கிப் பிறவியிற் சுழல்விக்கும் மோக முதலிய எண் குணங்களாம். **(எ) வீடு** –சீவன் மோகமுதலியவற்றின் நீங்கி சுதந்திரம் பெற்று உலகங் கடந்து எல்லையற்ற ஆகாசத்தின் மேல்நோக்கிச் சேறல். மோக முதலியன: மோகம், அந்தராயம் (இடையூறு, தீமை, துக்கம்), கோத்திரம், நாமம், ஆயுஷ்யம், வேதனீயம், தரிசனாவரனீயம் (காட்சி மறைப்பு), ஞானாவரனீயம் (ஞான மறைப்பு). இவ்வெழுவகைப் பதார்த்தங்களும் அநேகாந்த வாதத்தாற் கூறப்படும். அதாவது உடம் பெடுக்க முன் சீவன் உண்டோ? இல்லையோ? என வினாவினாற்கு ஒரே பதிலின்றி உண்டும், இல்லையும், சொல்லொணாதது போன்ற ஏழு பதில்களிறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு :** சைவசித்தாந்தம் அநாதியாய் என்றுமுள்ள ஆகமந்தழுவிய சமயங்கடந்த நெறி. திருமந்திரத்தில் கூறப்படினும் அது முறையாக நூ லுருப்பெற்றது 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்டாராலாம். அப்பர் 7,8ம் நூற்றாண்டினர். இன்று நாம் பயன்பெறும் சித்தாந்தநூல்கள் திருநாவுக்கரசர் சமய ஆய்வுசெய்த காலத்தில் இருந்திருக்கமுடியாது. சைவசித்தாந்தமானது, கோவிலமைப்பு வணக்கமுறைகள் கிரியை முறைகள் மக்களின் சமயவாழ்வு என்பவற்றுடன் புரையோடியிருந்தாலும், வரன்முறையினை ஏற்காத அன்றைய ஆய்வாளர்களுக்கு அது தாகந் தீர்க்கவில்லை. இதனாலேயே அன்று அரச ஆதரவுடன் கொடிகட்டிப் பறந்த சமணத்துடன் அப்பர் தொடர்பினைக் கொண்டார். இன்றும் பாரம்பரிய சமய நடைமுறைகளை நூல்கள், சித்தாந்திகள் இருந்தும் முறையாக ஆசாரமாயிருந்து கற்று ஆயாது பேசுவோரும் உளர். 14ம் நூற்றாண்டைய மெய்கண்ட சாத்திரங்களை முறைப்படி ஓதிச் சித்தாந்த இலக்கணத்தை விளங்கி அதற்கிலக்கியமாக வாழ்ந்தும் திருமுறைகள் யாத்தும் சென்ற நால்வர் வழியைப் பெரியபுராணத்தா லுணர்ந்தாற் சந்தேகந் தீர்க்கப்பெறுவர். தேடல் முயற்சியிலீடுபட்ட அப்பரின் குழப்ப நிலையிலேயே, திலகவதியார் வேண்டியபடி சிவன் அவருக்குத் தைவிகக்கேடெனும் நோயைக்கொடுத்து ஆட்கொண்டதுடன் தமிழ்நாட்டை அவராற் சமணத்திலிருந்து மீட்டார். யாம் எமது சற்சமயங் காக்க மிகவிளிப்புடன் இருக்கவேண்டும் **கலாநிதி பண்டிதர் மு. கந்தையாவின் ஆதங்கப் பாக்கள்,** 1) 'பரார்த்தபூ சைக்கென்று சைவா சார்யர் பதம்பணிந்து பெற்றசிவா சார்ய தீக்ஷை, யதார்த்தத்தைக் காற்றினிலே பறக்க விட்டிங் கேமாற்றுஞ் சங்கரஷண் மதப்பொய் வாய்மைச், சுமார்த்தலட் சியந்தமதா வரித்துப் பேணிச் சொல்லியிறு மாப்படையுங் கண்ணி றாவிச், சுமார்த்தக் கற்றுக் குட்டிகளாற் சிவநெ றிக்காந் துரிசுகளை வாரெவரோ அவரே சைவர்' (நோவிசுக்கள் என்ற சொல் கற்றுக் குட்டிகள் என்பதாகும்.*)*

*2)* பாருமேன் துணிவைநங்கள் சிவாசார் யார்கள் பரமசிவா கமவிதிக்கு டிமிக்கி விட்டுச், சீருலாஞ் சிவஞான மணமே தட்டா சுமார்த்தகுரு பாதஞ்சே விக்கின் றார்கள், பேருலாஞ் சிவாசார்ய விருது மங்கே பெற்றுவரப் புதல்வரையுஞ் சேர்க்கின் றார்கள் ஆருளார் கேட்கவென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசண்டைச் சைவர் ஆளுக்காள் முனகி விட்டிங் கமைந்தாற் போச்சோ'
(டிமிக்கி - நழுவற்போக்கு, சேவித்தல் - தொழுதல், முனகல் - புலம்பல்)

3) அன்றுமின்றும் என்றுமுயிர்க் காக்கம் ஆகும்
ஆன்மசிவ சம்பந்தத் தடக்கம் முற்றும்
நன்றுசெறிந் தொளிர்சைவ வழக்கு நிற்க
நாதியற்ற இந்துவெனும் நாமஞ் சூடித்
துன்றிவரு சுமார்த்தர்புரி சூழ்ச்சிக் கெல்லாந்
துணைபோக வேண்டாம்நீர் தூய சைவம்
நின்றுவழக் கினிற்செழிக்க நீங்கள் போற்றும்
நிலையமெலாம் அதுவொன்றே நிலவச் செய்மின்'

இவை நிற்க, அன்றாடம் எதனை யாம் மனமொழி மெய்களாற் கைக்கொள்கின்றோமோ அதுவே யாமாவோம். ஆதலின் உயர் பேற்றினைத் தரும் சைவ, வைதிக நெறிகளைக் கைக்கொண்டு ஒழுகுவோரின் பயன் பற்றிய சம்பந்தர் திருவீழிமிழலைக் கூற்று,

1) 'செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை தெரிந்த அவரோ டந்தமில்க ணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர் கின்ற அரனூர்' 2) 'மண்ணின்மறை யோர்மருவு வைதிகமும் மாதவமும் மற்றுமுலகத் தெண்ணில்பொரு ளாயவை படைத்த இமை யோர்கள்பெரு மானதிடமாம்' 3) 'மந்திரநன் மாமறையி னோடுவளர் வேள்விமிசை மிக்கபுகைபோய் அந்தரவி சும்புணவி அற்புதமெ னப்படரும்' எனப் போற்றித் துதித்த திருவீழிமிழலைச் சிவபுண்ணியங்களாற் செறியும் பாக்களைப் பயிலின் பெறும் பயனாவது, 4) 'சித்திரவி மானமமமர் செல்வமலிகின்ற சிவலோக மருவி அத்தகுகு ணத்தவர்க ளாகியனுபோக மொடியோ கம்மவரதே' என்றபடி சிவலோக போக யோகங்களைப் பெறுதலாம். திருவிளையாடற் புராணம்.


'மல்குக வேதவேள்வி வளங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவமோங்கிப்
புல்குக உலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் 8. முத்திரைகள் விளக்கப்படம்.**

மந்திரம் உச்சரித்துக் கிரியையில் முத்திரை காட்டும்போது அதற்குரிய அதிதேவதை தோன்றி மகிழ்ச்சியுறுகின்றது. முத்திரையென்பது அடையாளம். மந்திரம் பாவனை கிரியை என்பதில் முத்திரை பாவனையாம். படத்தில் வரும் 71 முத்திரைகளில் சந்தியா வந்தனத்திலும் ஆன்மார்த்தத்திலும் வராதவை 21. அந்த இலக்கங்கள் சதுரங்களால் வேறுபடுத்தப்பட்டுள்ளன. அவை 5 11 14 26 30 32 37 39 40 41 42 43 44 45 60 61 66 67 68 69 70. என்பனவாகும். யாவுந்தெரிதல் நன்றாம். அவசியமானதைப் பழகுக













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



60 மகர முத்திரை.
(முன்புறம்)




61 மகர முத்திரை
(பின்புறம்)



62 சிருக்கு முத்திரை.
(முன்புறம்)



63 சிருக்கு முத்திரை
(பின்புறம்)




55 இலிங்க முத்திரை



56 மஹோசத முத்திரை



57 திரிசூல முத்திரை




58 பஞ்சமுக முத்திரை.




59 இதுவும் ஒருவகைக் காளகர்ணி முத்திரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அங்கசுத்தி தொடும் முதலியவைகளின் அதிதெய்வங்களைக் காட்டுவது



விபூதி தரிக்கும் இடங்கள் அளவுகளைக் காட்டுவது (பின்புறம்)



விபூதி தரிக்கும் இடங்கள் அளவுகளைக் காட்டுவது (முன்புறம்)



விபூதி தரிக்கும் இடங்களையும் தொடும் இடங்களையும் காட்டுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 9

## ஒழிபு நிலைக் குறிப்புகள்
## (நூலிற் பொருந்தும் பகுதிகளுடன் சேர்த்துச் சிந்திக்கவும்)

### 9.1. திருவாதவூரடிகள் புராணத்திலிருந்து,

1.1 **ஆன்மார்த்தலிங்க பூசைத் தானங்கள்** அ) திருப்புலீச்சரம் - வியாக்கிரபாத முனிவர், ஆ) திருநாகேச்சரம் - பதஞ்சலி முனிவர், இ) திருவாதவூரடிகள் - சிதம்பர எல்லைத் தபோவனம். பிச்சாபுரம். அங்கே அவர், 'தத்துவ முடிவி லாடுந் தாண்டவந் தம்முட் கண்டு நித்தலுஞ் சென்று மன்றி னிமலனை யிறைஞ்சி யன்பா யிருந்தார்'

1.2. **எழில்ஞானபூசையாவது**, பிருதிவி முதலிய தத்துவங்களை யெல்லாம் சடமாகக்காணும் **பூதசுத்தியும்,** அவ்வாறுகாணல் திருவருளாலெனக் கருதும் **ஆன்மசுத்தியும்,** அக்கருத்தாலே கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் (புலனுணர்வுநிலை) அத்திருவருளாலென நிற்கும் **திரவியசுத்தியும்,** ஸ்ரீபஞ்சாக்கரங்களை ஐந்துமுதலாகக் கருதும் மந்திரசுத்தியும், சிவபெருமான் யாண்டும் நிறைந்திருக்கிறார் எனவுணரும் **இலிங்க சுத்தி**யுமாகிய ஐந்தானும் துதிப்பதாம்.

1.3. **சிவபெருமான் ஆகமாகி நிற்றல் :** 'செந்தமிழ்க் கன்புமிக்கார்' ஆதலின், தில்லைவாழந்தணர், 'கேட்ட வர்க ளெல்லோரும் கிளர்புளகங் குறுவேர்வு காட்டிடவொண் கண்ணீருங் கசிந்துருகு சிந்தையுமா யீட்டிய மெய்த் தவமுடையோ ரியம்பியவித் தமிழன்றி வீட்டுநெறிக் கினிச் சிவ நூல் வேறுளதோ வென்றார்கள்'. அங்ஙனங் கூறிய வேதத்தில் வல்ல தில்லைவாழந்தணர் நமச்சிவாய நாமம் முதலிய திருநாமங்களாற் துதித்த ஆகம அறிவினராய மணிவாசகரிடம் சென்று 'இதமுடனஞ் சலிசெய்து பண்ணுலவுஞ் சிவஞானப் பாடல் கொளும் படிநும்பா னண்ணுமரன் செய்ததென்(ன)னீ(நீ)ர் நவிலுமெனச் சொன்னார்கள்.' பின்னர் வாதவூரர் அவர்களுடன் தில்லையை யடைந்து 'பொருள் இவரே' யெனக்கூறி மறைந்தார். இந்நிகழ்வு 'வேதங்கள் ஐயாவென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்' 'ஆகம மாகிநின் றண்ணிப்பான்' என்றதை நிதர்சனமாக்கின. இறுதி இருபாக்கள்.

1.4 அ) 'ஞான நடம்பயில் சங்கர னாம மிருந்துள நெஞ்சினர்
மோன சுகந்த முடன்சிவ பூசை முயன்று நயந்தவர்
ஊனமி லன்பொடு தென்புலி யூரி லுறைந்து சிறந்தவர்
வானக மும்பர வுந்திரு வாசக வின்ப நுகர்ந்தனர்'

ஆ) 'ஈனமிகுந் துளதோலு மென்புநரம் புஞ்சீயு
மானவுடல் சிவருபமா மிதனைத் தெளியாம
லூனுடலுக் கிரைதேடி யுழன்றுலகிற் றடுமாறி
மாநரகிற் பகுதுமதோ மாயவலைப் படுவார்கள்'

**9.2. தொல்காப்பிய மெய்ப்பாட்டியலும் சித்தாந்தமும்** - முதற் பதினொரு சூத்திரங்களால் புறத்திணையின் பாற்பட்ட(அடங்கிய) மெய்ப்பாட்டியலை (அகவுணர்வுகள் புற வுடலுறுப்புகளால் வெளிவர) வகைப்படுத்திய தொல்காப்பியர் 12ம் சூத்திரத்தில் புறத்திணைக்கும் அகத்திணைக்கு மிடைப்பட்ட 32 மெய்ப்பாட்டியலைத் தொகுக்கின்றார். இவை இனிக் கூறப்போகும் அகத்தினைக்குரியதும் சித்தாந்தத்தில் வீட்டுநெறி தரும் மேலாலவத்தைக் குரியதுமான அடிப்படைகளாம். இறுதியில் இவை சிவபூசையிற் பயன்படுமாறும் உணர்த்தப்படும். இம் 32ம் இயமநியமங்கள் போலக் கடைப்பிடிக்க வேண்டியவை, விலக்கவேண்டியவை, நிலைமைக்கேற்பக் கைக்கொள்ள வேண் டியவையென அவரவர் தெரிந்து ஒழுகுமாறுள்ளன. சற்றே ஆழமான விடயங்களாதலால் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலும் சித்தாந்தமும் விருப்பொடு கற்று நன்கு விளங்கினால் மட்டும் மிகுபயனழிக்கும். அத்தகு தகுதிப்பாடுள்ள டாக்டர் அ. சொ. சுப்பையா அவர்களின் தொல்காப்பிய விரிவுரை நூற் கருத்துக்கள் இதில் இடம்பெறுகின்றன. ஆதலால் சுருக்கமாக அத்தகுநூல்களைப் பயிலும் ஆர்வத்தைத் தூ ண்டும் வகையில் ஓரளவாகத் தரப்படுகின்றது. இவை திருக்கோவை பயில விரும்புவோர்க்கும் திறுவுகோலாம்.

**9.2.1 முப்பத்திரண்டு மெய்ப்பாட்டியல்களாவன :**

**1. உடைமை**: செல்வம் - செல்வநுகர்ச்சி – உவகை. (பொய் பொய்யாக் கண்டபின் தான் இறைவனின் உடைமையென நினைப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவகை தோன்றலாம். உலக போகத்திலும் அது தோன்றலாம். உலோபி பேயாகப் பிறப்பான். பிறர்க்கிட்டுப் புகழடையாதவன் பூமிக்குப் பாரமாவான். தக்கார்க்கும் தனக்கும் பயன்பாடற்ற செல்வம் கள்வர் முதலியவற்றால் அழிந்துவிடும். அறிவுச்செல்வம் பிறருக்காம் பொழுது பெருகுவதுடன் அது ஒரு வித்யா தர்மமுமாகும்.

**2. இன்புறல் -** உடைமை பற்றி நினைதொறும் நிகழ்வது.

**3. நடுவு நிலைமை:** பகை, நொதுமல், நட்பு ஆகிய மூன்று நிலைகளிலும் அறவழி ஒப்பநிற்பது. 'கோடாமை சான்றோர்க்கணி' யென்றவாறு காம வெகுளி மயக்கம் நீங்கிய சான்றாண்மையில் நிகழ்வது. அத்தகையோன் செல்வம் அவன் சந்ததிக்கு உறுதியாம்.

**4. அருளல் -** தம்மிலும் எளியார்பால் இரக்கம். துறவியர்க்கு எவர்மாட்டும் உளதாய விசேட கருணை. அருளுடைமை செல்வத்துட் செல்வமாகும். அவர்க்கு பயப்படும்படியான தீங்குகள் நேராவாம். நரகமும் இல்லை. முன் அருளாமையாற் பின் துன்புறுவோர் அருளலைச் செய்தல் அவசியம். இவ்வுலகிற்குப் பொருள், அவ்வுலகிற்கு அருள்.

**5. தன்மை:** 'உள்ளும் புறம்பும் ஒருமைத்தே காட்சியவர்க்கு எள்ளுந்திற மேதுமில்' என்றபடியான மெய்ம்மை. 'எப்பொருள் எத்தன் மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'. எப் பொருளினிடத்தும் அதிற் சூக்குமமாய்ப் பொதிந்துள்ள உண்மைப் பொருள் - தன்மை காண்பதறிவு. அது ஒருமைத்த காட்சியராய விருப்பு வெறுப்பற்ற மெய்ஞ் ஞானிகளினாலேயே சாலும். 'இயல்வது கரவேல் ஈவது விலக்கேல்' என்றபடி வழங்கற் தன்மையுமாம். ஒருபொருளை அதன் தன்மை விளக்கும் ஓர் அலங்காரம் .

**6. அடக்கம் -** மன மொழி மெய்களாற் தீநெறிக்கட் செல்லாது அடங்கல். இறை, குரு, பெரியோர்பாற் பணிவு, பணிந்தமொழி, தணிந்தநடை, வாய்புதைத்தல் - நாவடக்கம், முதலாய நன்நெறி கொண்ட அடக்க முடையோன் சிறந்த செல்வனும், மேலோனுமாம்.

**7. வரைதல்- வரைபு-** இயமநியமங்கள் போலத் தகாதன நீக்கித் தக்கன தெரிந்தொழுகல். திருக்குறள், நல்வழி, மனுநீதிபோன்ற நூல் களிலுள்ளதைப் பயின்று தனக்குரியதாக்கல்.

**8. அன்பு:** இது இல்லறத்தானிடம் முதலில் வேண்டியவரிடம் செலுத்தப்பட்டு. முதிர்வில் அது, யாவரிலும் இரக்கத்திற்கு ஆதாரமாய் மனதிலெழும் நேயம் என்றாகி, அருளில் உய்க்கும். உயிர் உடல் சம்பந்தம் அன்பின் வழிவந்த வழக்கமாம். அன்பே சிவம்.

**9. கைம்மிகல் -** கையோங்கல் - கைநீட்டல் - இது சிறுமைப் பண்பு.

**10. நலிதல் -** நல்லோர்க்கு இன்னாசெய்து நெருங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. சூழ்ச்சி:** உண்மையைச் சுழற்றிப் (பொய்பேசி) பிறருக்குத் துன்பம் நேருமாறு உரைத்தல்.

**12. வாழ்த்தல் -** தன்னிலுஞ் சிறப்பாக உலகோர் வாழ நினைத்தல்.

**13. நாணுதல் -** நற்குணங்கள் பலவற்றையும் அறிந்து அவற்றை விடாது கைக்கொள்பவன் சால்புடையன்- சான்றோன். அவன் எல்லோருடைய குணங்களையும் அறிந்து ஒத்தொழுகுவான். அதுவே பண்புடைமையுமாம். அத்தகையோன் தனக்கொவ்வாத இழிந்த கருமங்களில் நாணுதலுடையன் ஆவான். நற்பெண்டிரின் நாணம், தம்முன் நிலையெண்ணி மனதில் வெட்கமுறல் எனினுமாம் (அகம்).

**14. துஞ்சல் -** உறக்கம், மனவொடுக்கம்.

**15. அரற்று:** மனதாலன்றி மொழியாலும் புலம்பல்.

**16. கனவு:** சொப்பனாவத்தை யெனும் நிலையில் வாய் வெருவுதல்.

**17. முனிதல் -** அருளும் சினமுமின்றி இடைநிகர்த்ததாய் வெறுத்தல். வைராக்கியம் எனினுமாம். முனிவர் முனிதலால் அப் பெயர் பெற்றனர்.

**18. நினைதல் -** விருப்பொடு எண்ணுதல். 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும், ஆதலால் தன்முனைப்புடனாய எண்ணம் இன்ப துன்பத்திற்காய வாயில். 'யாவுஞ் சிவமயம்' எனவே நினைக்குக.

**19. வெருவுதல் -** அஞ்சுதல். 'அஞ்சுதல் அஞ்சாமை பேதமை'. 'மற்றோர் தெய்வம் உண்டென நினைந்தெம் பெம்மாற் பற்றிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே' - திருவாசகம்.(தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும் - முதியோர் வாக்கு)

**20. மடிமை:** சோம்பல். தாமசம்.'முயன்றின்மை இன்மை புகுத்திவிடும்.'

**21. கருதல் -** (எல்லாஞ் சிவன்செயல் என்னாது) அனுமானித்தல்.

**22. ஆராய்ச்சி:** தேடுதல், சோதித்தல், ஆராய்தல்.

**23. விரைவு:** வேகம், வேண்டுதல். (வேகம் கொடுத்தாண்ட வேந்தன்)

**24. உயிர்ப்பு:** பெருமூச்சு. ஆணவத்தின் குணங்களில் ஒன்று.

**25. கையாறு:** வினை ஒழித்து (தொழிலாற்றாது) அயர்தல்.

**26. இடுக்கண் -** துன்பம். 'இடுக்கண் வருங்கால் நகுக'.

**27. பொச்சாப்பு -** பாதுகாத்துச் செல்கின்ற பொருளின்கண் யாதாயினு மோர் நிகழ்ச்சியால் இடையறவுபடுதல். (மனநெகிழ்ச்சி- மறதி)

**28. பொறாமை:** அழுக்காறு. அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்ற தறம்'. குறள்

**29. வியர்த்தல் -** மனம் புழுங்கல். (சைவர்களின் மெய்ப்பாடு

**30. ஐயம்-** ஒன்றின்மேல் இதுவோ அதுவோவென இருபொருட்தன்மை கருதும் தடுமாற்றம். (அறியாமை பழவினையால் நிகழ்வது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31. மிகை -** இளமை மீது வரும் தருக்கு.

**32. நடுக்கு:** ஐயம் அச்சம் கோபம் அன்பு என்பவற்றால் மனநடுக்கம்.

இவை அக புற வாழ்விரண்டிற்கும் பொது. மத்தியாலவத்தையுடன் பொருந்துவதால் உடலுள் ஏற்படும் புறப் புலப்பாடுகள்.

**9.2.2. அகனைந்திணை (அகன் - உள்ளான ஐந்திணை)க்குரிய மெய்ப்பாடுகள்.** சித்தாந்தத்தில் இது மேலாலவத்தைக்குரியது. தோல்காப்பிய 13 முதல் 20ஆம் சூத்திரம் வரை அகத்திணை ஐந்தினுக்கும் ஒத்தனவாய் மேலாலவத்தையுடன் பொருந்தும். இம் மெய்ப்பாடுகள் நந்நான்காக 6 பகுதிகளாய் (24) ஆக்கப்பட்டுள்ளன. அவை புதுமுகம் புரிதல் (புதியநாட்டத்தை விரும்புதல்) முதலாக கையறவுரைத்தல் ஈறான 24ஆம். (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பினைந்திணையையும் பார்க்க.)

இதில் **புதுமுகம்புரிதல்** என்பது பேரின்பப்பொருளில் (திருக்கோவையார்) ஆன்மா அசுத்த மாயையினின்றும் நீங்கிச் சுத்தமாயையில் நுழைதலைக் குறிக்கும். (**குறிப்பு** - இன்பம், அதுவரும் வழி, அநுபோகம், அநுபவம் முதலியயாவும் அடிப்படையில் ஒன்றே. அது சங்க நூல் களில் 40 துறைகளாக வரைவு செய்யப்பட்டுள்ளன. அந்நாற்பதும் சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் கொள்வோர் நோக்கிற் பயனாகும். சிவன் விருப்பப்படி மணிவாசகர் பாடி சிவனாலேயே எழுதப்பட்ட திருக்கோவையார் சிறந்ததோர் உதாரணம்.) ஆதலின் புதுமுகம்புரிதல் முதலாய அனைத்து மெய்ப்பாடுகளும் ஆழ்ந்த உள்மனத்து நிகழக் கூடியனவாகவும் ஆழ்ந்த உள்ளுணர்வு உடையோரே நுண்ணிதின் அறியக்கூடியதாகவுமே உள்ளன. சிலவற்றை விரித்து நோக்கலாம். புதுமுகம்புரிதல் - உயிர் பொதுவாக அசுத்த மாயையினாலாய கீழுடம்பிற் பரவித் தொழிற்படினும் அவற்றைப் படிமுறை கடந்து சிவஞானமுதிர்வு பெற்று ஒவ்வோர் ஆதாரத்திலும் உரியமுறையில் வழிபட்டுத்தேறி மேல்நோக்கிச் செலுத்தி இறுதியிற் பிற்யூட்டறி யென்ற (மூளைப்பகுதியிற் தங்கிய) சுத்தமாயா தத்துவத்தை யணைந்து சிவதத்துவத்துட் சேரும். (இன்பமானது, மனம் புத்தியாகிய உடற் பகுதிகளில் நிகழ்ந்து முகத்தால் வெளிப்படுவது.)

பிருதிவி முதல் 24 ஆத்ம தத்துவங்களையும் பின் காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் பிரகிருதி ஆகிய வித்யா தத்துவங்களையுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பின்னரேயே சிவதத்துவத்தில் இறுதியான **(வித்யாதத்துவத்திற்) புகுந்து சிவபூசை செய்யமுடியும்.** நாதம் முதலாக விரியும் சுத்த மாயையின் கீழ்ப்பகுதி சுத்தவித்தை. அதில் உருத்திரர் வீற்றிருந்தருளுவார். ஆதலின் 24உம் 7உமான 31 அசுத்தமாயையிற் தொடக்குறுபவர் தத்துவாதீதராக விளங்கும் சிவனைப் பூசிக்கத் தகுதியுடையாரல்லர். இத் தகுதியையும் சுத்ததத்துவத் தொடர்பு மூலமே பெறலாம். அதற்குப் பூசகர் தாம் 31 தத்துவங்களையுங் கடந்து மேலும் வித்யாதத்துவத்துட் புகுந்ததாகத் தன்னைப் பாவிக்கவேண்டும். இது சிவனுடன் நெருங்கிய தொடர்பினை பூசகருக்கு உண்டாக்கும்.

**9.2.3.** இனி 3ஆம் பகுதியிற் தொல்காப்பியம் கூறும் முதலாவதான **அல்குல் தைவரல்** என்ற மெய்ப்பாட்டினை நோக்கலாம். இதன் சிற்றின்பப்பொருள் தலைவியானவள் தன் ஆடை நெகிழ்ந்ததைக் கண்டு திருத்தும்போது அடிவறிற்றுப் பகுதி ஆடையைத் தடவிச் சரி செய்தல். இறுதியான **இருகையும் எடுத்தல்** என்பது நாணத்தால் இருகைகளையும் மேலெடுத்தல். இவற்றின் பேரின்பப்பொருளை உடற்கூற்றின் அடிப்படையில் நோக்கலாம். சிரசு ஆனந்தமய கோசத்திற்காய தானம். அங்கே பெருமூளையின் இருகூறுகளுக்கும் நடுவே இறைவனின் பிச்சாண்டிக்கோல ஆண்மைப் பொலிவுடனான மூன்றாம் நாளமுண்டு. அதன்கீழ் பெண்மைத் தானமாகிய பிற்யூட்டறி சுரப்பியுண்டு. ஆநந்தமய கோசத்திலும் உயிருக்கு (அகக்)கருவிகரணங்கள் உள்ளன. அவை சுத்தமாயையினால் ஆகிப் பேரின்பத் தானத்தில் நுண்மையாயுள்ளன. ஆழ்நிலைத் தியானத்தின்போது சுத்தமாயா நுண்ணுடம்பினுள் நுளையும் ஆன்மா. தூய நுண் கரங்கள் இரண்டைத் (அகத்தும் புறத்தும்) தூக்கிக் குவித்து புருவநடுவுள் முன்னேறுகின்றது. அப்போது அது பிற்யூட்டறி என்ற பெண்மைத் தானத்தைத் தொட்டுச் செல்வதால் அல்குல் தைவரல், இருகையும் எடுத்தல் என்றாகின்றது. சிவன் கரங்குவிவாரைக் கண்டு உள்மகிழ்தலும் சிரங்குவிவாரை ஓங்குவித்தலுங் காண்க. மேலுந் தொல்காப்பியமும் திருக்கோவையும் கற்றின்புறுக. தைவரல் - தடவல்

**9.2.4. ஊனக்கண்ணும் ஞானக்கண்ணும்** மெய்ப்பாட்டு இறுதிப் பா,

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்மைப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, நூலுணர்வின்றி நுண்ணுணர்வுடனேயே அகவுணர்வுகளின் வெளிப்பாடாகிய மெய்ப்பாடுகளை உணரலாம். அது அரிதாதலின் அகக்கண்ணாலும் நுண்செவியாலும் பெறுகிற ஆழ்ந்த அனுபவ நுண்ணுணர்வினை மட்டும் புரியமுடியும். புரியட்டகாயத்திலும் (மனோமய கோசம்) கண்முதலிய உறுப்புக்கள் உள்ளன. சிவனின் நெற்றி - அக்கினிக்கண் போல நமக்கு ஞானக் கண்ணுள்ளது. இது மூன்றாம் நாளம். மூன்றாம்பிறை வடிவினது. பெருமூளையின் நடுவிலுண்டு. இதனுள்ளே விரிந்திருக்கும் அமுதத்திற்கேற்ப (CSF) விரிந்தும் சுருங்கியும் இயங்கும். இதுவே பாடலிற் 'கண்' எனப்பட்டது. இது புருவநடுவை நோக்கி பிற்யூட்டறியைத் தூண்டுகிறது. (ஞானிகளுக்கு 3ம் கண் புறத்தில் வெளிப்படாமலேயே அகத்திற் காணும்.)

**ஆன்ம அல்குல்** தலை மையத்திலுள்ளது pituitary gland – the master gland. இதன் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கு மேற்ப நமது உடல்வளர்ச்சியும். உள்ளஎழுச்சியும் அமையும். இதுவே ஆஞ்ஞா சக்கரமெனும் ஆணைத்தானம். இவ்விடத்திலேயே இறைவன் எமது மூன்றாம் நாளத்தை இயக்கி ஆண்மைப் பொலிவேற்றி தலைவியாகிய உயிரைப் புணர்ந்து பேரின்பத்தினை வழங்குவான். அப்போது அது ஆன்ம ஆவுடையாராகின்றது. (அண்டம், பிண்டம், லிங்கம் யாவும் ஒரே தன்மையன.) அதனாலது அல்குலாகின்றது. **நுண்செவி:** சிரங்குவிகையில் சிவனின் பரநாதஒலி கேட்கும். அப்போது pituitary நுண்செவியாகின்றது. அதிநுண்ணிய சிவத்தைப்புரிய ஆனந்தமயகோசமென்னும் பிற்யூட்டறியிலுள்ள நுண்காது நுண்விழிகளின் இயக்கம் சீராகக் குவிந்திருக்கவேண்டும். இதனைத் திருவுந்தியார் 'திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று நிருத்தனைக் கும்பி டென் றுந்தீபற நேர்பட அங்கே நில்லென் றுந்தீபற' என்கின்றது. திருச்சிலம்போசை பரநாதம், நிருத்தனின் காட்சியொளி பரவிந்து. செவிவழியோடிய கண் என இலக்கியங்கள் குறிப்பது நுண்செவியை நோக்கி நெற்றிக்கண் என்ற மூன்றாம் நாளம் நீண்டிருத்தலையாம்.

**9.3. பிராமணியங்காத்தல்:** சிவாச்சாரிய பரம்பரையிற் தோன்றிய அனைவரும் ஒரு காரணத்தை உத்தேசித்து ஆசார்யாபிஷேகம் செய்துகொள்ளல் வேண்டும் என்ற எண்ண மில்லாமல் உரியகாலத்தில் ஆசார்யாபிஷேகம் செய்யப்பெற்று ஆத்மார்த்த பரார்த்த பூஜைகளைச் செய்து இகபர சித்தியை அடையவேண்டும் என அகோரசிவாசாரியாரின் க்ரியாக்ரம த்ஜோதி முகவுரை கூறும். காலத்தின்கோலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரைபுகள், சிவாகம வரம்புகள் மீறப்பட்டு சிவாகம மணமே தட்டாத சுமார்த்த(சங்கர)பாதம் சேவித்தலால் சைவம் தன்மானமிழக்கின்றது. மேலும், பீஷ்மர் தர்மபுத்திரருக்குக் கூறியவற்றிலிருந்து, இந்நூலிற் கூறியவற்றிற்கு ஆதாரமான, மேலுஞ்சில கருத்துக்கள். ('மஹாபாரதம் பேசுகிறது'- சோ - பகுதி 2)

**பிராமணர் -** வேதங்களைக்கற்று விதிமீறாது நற்குணங்களோடு வாழ்பவர். **அப்பிராமணர்கள்:** 1) **வைசிகர்** போல பிழைப்பிற்காகப் பசுக்கள், ஆடுகள் வளர்த்தல் மற்றும் ஏனைத் தொழில்களில் ஈடுபடுபவர்கள். 2) **ஷத்திரியர்** போல இன்பநாட்டமும், மற்றையோற்குப் பாதுகாப்பு, தண்டனை வழங்குபவர்கள். 3) தமக்கென விதிக்கப்பட்ட (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவற்றுடன் மற்றெவ்வுயிற்கும் செந்தண்மை பூண்டொழுகலாதி) எல்லாக் கருமங்களையும் விடுத்து, **சூத்திரர்** போன்று வாழ்பவர்கள். வேதம் ஓதாத பிராமணரை அரசன் கூலியின்றி வேலைசெய்யப் பணிக்கலாம். கூலிக்காக மட்டும் தெய்வத்தைப் பூசிப்பவர், பிழைப்பிற் கெனவே சோதிடங் கூறுபவர்கள் கடல்கடந்து செல்லும் பிராமணர் சண்டாளர். (இன்று இடம் பெயர்ந்தோர் சார்பாகக் கடல்கடக்கும் நிலையிருப்பினும் தத்தமது வைதிககுல ஒழுக்கங்களை இயன்றமட்டிற் கைக்கொள்ளாது ஏனையோர்போல மாயவலைக்கு உட்படுவோரும் சண்டாளரே.) வேதங்களை அவமதிக்கும் பிராமணன் நரகஞ்சென்று பல காலத்தின்பின் பூமியிற் இழிபிறப்பாய புழுவாவன். ஓதல் முதலாய ஆறு கடமைகளுடன், அஹிம்சை, புறங்கூறாமை, விருந்தினரை வணங்கி உபசரித்தல், அடக்கம், உண்மை தவறாமை, தவம், தர்மங்காத்தல் என்பவற்றை மீறுபவன் நாடுகடத்தப்படுவன். இத்தகைய பிராமணர்களினாலும், பிறப்பால் இழிகுலமாக இருந்தும் முறைப்படி தீட்சைபெற்று சிவபுண்ணிய ஈடுபாடுடையோன் அறவோனாகின்றதாலும், பிராமணீயம் என்பது அதற்கு மிகச் சார்பான பிறப்பாலா? அன்றி வாழ்க்கை நெறியாலா? என்ற ஆய்வும் எழுந்துள்ளது. (10.5ம் பார்)

வேதம் யாவருக்கும் பொதுவானதால் அதிற் கூறப்பட்ட அன்றாட நற் பழக்கவழக்கங்கள் வேதம் அறிந்தோராற் பயின்றுவருதல் அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் கூடிப் பழகும் வாய்ப்பிருப்பின் அவற்றையறியலாம். உதாரணமாக இந்நூலிற் கூறிய போசன விதியுடன் மேலும் அறியவேண்டிய சில: வடக்காகப் போடப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழையிலையின் வெட்டியபகுதி உண்பவரின் வலக்கைப்பக்கமாகவும், மேற்பகுதியில் இடமிருந்து வலமாக உப்புத்தூள், உறைப்பு துவர்ப்பு முதலாய அறுசுவையுணவுகளும், பொரியல் வகைகளும் வலமூலையில் சிறிதளவு பாயாசமும். (முதலிற் பசியால்வரும் அமிலந் தணிக்கவும் பின் இறுதியிற் கூடியஅளவும்) நடுவிற் சாதமும் அருகில் நீரும் இருத்தலவசியம். வாழையிலையிற் சாப்பிடல் லட்சுமீகரம், முடி கருமையாதல், பித்தமுதலாய வியாதி நீக்கமெனப் பல நன்மைகள் தரும். உண்ணுந்திசை வடக்குத்தவிர, கிழக்கு – ஆயுள், மேற்கு– பொருள், தெற்கு– புகழ் என்பவற்றைத் தரும். இரவில் இஞ்சி, பாகல், கஞ்சி, கட்டித்தயிர், கீரை, நெல்லியென்பன ஆகா. பொரி தவிர ஏனையவை இரும்பு அகப்பை தவிர்ந்த கரண்டிகளாற் பரிமாறவேண்டும். பந்திகுலைத்து ஒருவர் முன்னெழுந்தால் மீதியிலைகள் எச்சிலாகும். அவசரமாயின் இருபுறமும் நீரால்(மதில்போல)கோடிட்டு எழலாம். உண்டபின் மெதுவாக நூறடியுலாவுக. வேதம் பொது ஆதலினாலும், அவற்றின் ஒழுக்கங்களை அநேக வைதிகர் பேணுவதாலும் இவற்றைப் பிராமணோத்தமர்களிடங் கேட்டறிக. முகமதியரும் தமது சமயநூற் பழக்கங்களில் உறுதியாயுள்ளனர். (ஆகமம் சிறப்பாக சைவருக்காயது என்பதேயன்றிச் சைவர் வேதமுரணானவர்கள் அல்ல). இவற்றாற் பண்பட்டு தீதிநூல்களுங் கற்று பிரவேச தீட்சையுடன் இல்லற தர்மங்காத்து பின் விசேடதீட்சை பெற்றுச் சிவபூசை யாற்றுபவர் மானிடப் பிறப்பின் பலனையடைகின்றார். (10.5 ஆம் பக். 43 பார்க்க).

**9.4. மந்திரங்கள் -** இதனை சைவசித்தாந்தம், விஞ்ஞானம், முதுமொழி ஆகிய தொடர்புபட்ட பல்கோணங்களினூடாக விளங்கிக் கொள்ளலாம். சித்தாந்தநோக்கு நூலிற் பல இடங்களிலுங் காட்டப்பட்டது. சுருக்கமாக வன்னங்கள் 51 (எழுத்துக்கள்-அட்சரங்கள்), பதங்கள் 81 (சொற்கள்), மந்திரங்கள் (பொருள்மிக்க சொற்கூட்டங்கள்) 11. இவை எல்லா மொழிகட்கும் ஆன்மீகரீதியல் அடிப்படையானதால் தேவபாஷை யெனப்படும் வடமொழியிலுள்ள சொற்பிரபஞ்சங்களாகிய வன்னங்கள் க்ஷ முதலான 51. இவை எந்தவொரு மனிதனதும் உடலில் உந்திமுதல் உச்சியீறாகவுள்ள பல்வேறு ஸ்தானங்களிலிருந்து அதிர்ந்து ஒலிப்பவை. பதங்கள் நமோநம முதல் ஓம் ஈறான 81. மந்திரங்கள் ஈசானம் (ஈசானாய நம:) முதல் அஸ்திரம் (அஸ்திராய நம:) ஈறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. விபரம் நூலில் அத்துவாவிரிவு பார்க்க. இனி, விஞ்ஞானரீதியில் பஞ்சபூதங்களில் ஒலி, ஒளி யென்பன உலகத் தோற்றத்திற்குக்கும் ஒடுக்கத்திற்கும் சூக்கும காரணிகளாகின்றன. சித்தாந்தத்தில் இவை நாதபிந்துக்களெனப்பட்டு 36 தத்துவங்களின் தோற்றமுறையில் முதலாவதாயும் ஒடுக்கமுறையில் இறுதியாயுமுள்ளன. உலகம் பொருட்பிரபஞ்சம், ஒலிப்பிரபஞ்சமென இருவகைத்தாயமை பாகம் மூன்றிற் தரப்பட்து. (10.11ம் பார்க்க) வன்னங்கள் நூலுறுதியிலுண்டு.

மேற்கண்ட சத்தப்பிரபஞ்சம் அலைவடிவில் ஓர் ஊடகத்தினை ஆதாரமாகக்கொண்டு பரவி உயிர்களின் காதுகளை வந்தடையும். இவை கடல் இரைச்சல் போன்ற பொருள் அற்றவையாயும் 'அம்மா' போன்ற பொருள் உள்ளவையாயும், 'அ..ம்..மா..தா..யே..' யென இசைகலந்த பொருட் சிறப்புள்ள இயலிசையாயும் வேறுபட்ட செய்திகளின் ஊடாக உயிருக்கு அனுபவங்களை விளைவிக்கும். பொருள்மிக்க ஓசைகள் ஆகாயத்திற் சஞ்சரிப்பதும், முனிவர்களால் மட்டும் உணரப்படுவதுமான ஓமெனும் பிரணவஓசையும், உயிர் வர்க்கங்களால் ஆக்கப்படும் அநாகத வோசையெனும் சொல்லோசையுமென இரண்டாம். உயிர்கள் இத்தகைய சொற்பிரபஞ்சத்தினூடாகவும் வினையாற்றுகின்றன. ஆலயங்களில் திருமுறையோதல் பஜனை அல்லது கச்சேரி செய்யமுன் ஓம் (அ உ ம் , ஸ ப ஸ்) கூறி ஒலிகளை உடலில் ஒழுங்குபட சுருதியுடன் (ஆறாதார தெய்வங்களாற்) செறிவித்தும் பின் நிகழ்ச்சியை ஒலியின் விரிவாக்கமாக ஆற்றி முடிவில் முன்போல் அவற்றை ஓமில் முடித்து சற்றே தியானத்தில் அமர்ந்து வணங்கியும் எழுகின்றோம். இதிலிருந்து பெறப்படுவது, ஓம் சப்தப் பிரபஞ்சத்தின் விரிவிற்கும் ஒடுக்கத்திற்கும் ஆதாரமாகி தெய்வாம்சம் பொருந்தியுள்ளதென்பதாம்.

ஆதலின் கச்சேரி பஜனையென்பவற்றிலும் பார்க்க சுருக்கமும் ஆற்றலுமிக்க ஒலிக் கூட்டங்களை இறைவனே முனிவர் வாயிலாக வகுத்தமைத்துள்ளான். அவையே மந்திரங்கள். எதனைக் குறித்து அவை அமைந்துள்ளனவோ அதனை மனத்திலிருத்தி மீளமீள உச்சரிக்கையில் அவை தம் ஆற்றலை வெளிப்படுத்தித் தன்னை நினைப்பவரைக் காக்கும். இதன் காரணமாகவே பழமொழிகளும் எழுந்தன. அவை, 'மந்திரம் நினைப்பவரைக் காப்பது', 'நிறைமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறை மொழி தானே மந்திர மென்ப', 'மூத்தோர் சொல் வார்த்தையமுதம்', 'தலையணை மந்திரம்' போன்ற பல. இதனை ஆழமாக நோக்கின் ஒளவை மொழி (ஆத்திசூடி, நல்வழி), திருக்குறள், திருமுறைகள், குறிப்பாகத் திருமந்திரம், சித்தாந்தப் பாடல்கள், திருப்புகழ் யாவும் விரிந்த தமிழ் மந்திரங்களே. திருமுறைகள் பல்வேறு அற்புதங்களையாற்றியதனைப் பெரியபுராணத்தால் அறிக. இன்றும் அவற்றால் இடர்களைதல், கிரகதோசம் அகற்றலாகிய பல பயன் கொள்வாருளர். சுருக்கமும், ஆழமும் மிக்க சமஸ்கிருதம் கற்றோர் மத்தியில் வேதாகமங்கள், சாத்திரங்கள், இலக்கியங்கள் போன்றவற்றிற் பயன்பட்டிருப்பினும் பேச்சுவழக்கில் சொற்பமாகவே பயன்பட்டது. இந் நிலையில் தமிழரின் தொன்மையானதும் பெயர் குறியாது பொதுவிற் தலைமகன் தலைமகள் எனக் காப்பியத் தலைமை கொண்ட தொல்காப்பியம் மானிட வாழ்விற்கே வரம்பமைத்து வரைவு செய்து இல்லறசுகங்காட்டி காஞ்சித் திணை மூலம் வீட்டிலிட்டுச் செல்வது நுண்மை மிகுந்த அறிவினோரால் மட்டும் விளங்க முடிவது. இதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன, தலைவன் தலைவியற் கிடையான சொல்லாடலாற் பொலியும் உணர்வுகளை, இன்பமிகு பாவடிவங்களிற் தருவன. காதலையும் வீரத்தையும் தமிழ் பின்னிப் பிணைப்பது. இதுமட்டுமன்றி சங்ககாலத்து இக் காதற் பண்பாடு மேலுஞ் சிறக்கும் வண்ணம் சிவனார், இதே அகத்துறை இலக்கணத்தினூடாக பேரின்பத்தினை விளைவிக்கும், தம்மையும் (சிவனையும்) ஆன்மாவையுங் காப்பியத் தலைவர்களாகக் கொண்டு, திருக்கோவையாரை மணிவாசகர் மூலம் தந்துள்ளார். ஆகவே **தொல்காப்பியமும் தொல்சமயமும்** தமிழும் சைவமும் எனப்படலாம்.

**9.5. திருமூலர் கூறிய இலங்கை சிவபூமி என்றதற்காய அண்மைக்கால ஆதாரங்கள்:** வவுனியா மருதங்குளத்திலுள்ள எண்கோணலிங்கம் புராதனமானதும் ஆய்வுக்குரியதுமாகும் என்ற தலைப்பில் 4.3.2016ல் வெளிவந்த வீரகேசரிக் கட்டுரையின் சுருக்கம். :- அடங்காப் பற்று வன்னிப்பிரதேசத்தில் புராதன குளங்கள்பல கட்டப்பட்டுள்ளன. ஆறுகளுக்கும் குளங்களுக்கும் அருகே அமைக்கப்பட்டுள்ள நாகசிலைகளும் இலிங்கங்களும் புராதன காலத்தை அடையாளங் காட்டுகின்றன. குளக்கட்டுகளிற் பிள்ளையார் வழிபாடு இடம் பெறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். பிள்ளையாராகக் கருங்கல்லுத் துண்டு (தண்டு) ஒன்று பிரதிஷ்டை செய்யப்படுவது வழக்கம். மருதங்குளத்தின் வலது கரையிலமைந்துள்ள பிள்ளையார் கோவில் மடாலய மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலைகளுக்கருகே பெரிய செங்கற்கள் இரண்டு வைக்கப்பட்டுள்ளன. இவை புராதனமானவை; ஆய்வுக் குரியன. இதுபோன்ற செங்கற்கள் வாவெட்டிமலை, தட்டயமலை, முதலியாகல்லுமலை, கற்சிலைமடு, சமளங்குளம் ஆகிய பகுதிகளிற் சிதைந்த நிலையிற் புராதன எழுத்துவடிவங்களுடன் காணப்படுகின்றன. பிற்காலத்தில் வைத்த பிள்ளையார் சிலைக்குப் பின்னால் காணப்படும் லிங்கம் எண்கோண வடிவிலுள்ளமை மிக அதிசயமான செய்தியாகும்.

**குறிப்பு : 5.1** பிள்ளையார் தோற்றம் முதலிற் கந்தபுராணத்திற் தரப்பட்டுள்ளது. **5.2** சைவத்தமிழர் பண்பாட்டில் திராவிட (தமிழினஞ் சார்) தேசங்களாயிருந்து பின் (சரிவர நிறுவப்படாத காரணங்களால்) அழிவுற்ற மொஹஞ்சதாரோ ஹரப்பா (இன்றைய பாகிஸ்தான்) பண்பாட்டிற் காணப்பட்டவை இலிங்க வணக்கங்களேயாம். திருமூலர், காரைக்காலம்மையார் போன்றோரும், திருமுறைகளும் சிவவணக்கத்திற்கே அதிக இடந்தந்துள்ளனர். இந்நூலின் ஆரம்பத்திலும் இது சுட்டப்பட்டுள்ளது. பிள்ளையாரும் சிவபூசை செய்தமை கணபதீஸ்வரம் போன்ற தலங்களால் அறியக்கிடக்கின்றது. காணாத அருவினுக்கும் குறி சிவலிங்கம் உருவினுக்கும்.

**5.3**) பிற்கால வழிபாட்டு முறைகள் முற்கால வழிபாட்டு இடங்களிலேயே அமைதல் நுண்ணிதின் அறியக்கிடக்கின்றது. (அ) கதிர்காமத்தில் சைவம் அல்லாத 2000 வருட வழிபாடுகள் முன்னூறு யுகங்கடந்த முருகவழிபாட்டையும் விஞ்சுமளவு விரிவடைந்துள்ளன. (ஆ) ஈழத்து இந்துசமய வரலாற்று ஆய்வு நூலில் பழைய சிவ, நாக, முருக வழிபாட்டிடங்கள், குகைகள் பிறமதத் துறவிகளுக்குத் தானமாக வழங்கப்பட்டது பற்றி கல்வெட்டு ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன. (ஈழத்து இந்து சமய வரலாறு - பேராசிரியர் சிற்றம்பலம்). பின் அவர்கள் மூலவரை அகற்றினாலும் மக்கள் எதிர்ப்பைச் சமாளிக்க, முன்பிருந்த சைவச்சிலைகளை தமது பிரானின் சிலைக்கு சுற்றிவர (பரிவாரங்களாக - காவற் தெய்வங்களாக) வைத்து பாரம்பரிய வணக்கமுறையினை மக்கள் தொடருமாறு செய்தனர். இதனை இன்றுங்கூட அவதானிக்கலாம். கதிர்காமத்திலும் பிறமத கட்டிடங்கள் பெருகினும் மானசீக முருக வணக்கமே மேம்பட்டு நிற்பதனை அவதானிக்கலாம். (இ) கிறித்தவ ஆலயங்களும் பெரும்பாலும் அவ்வாறே. நல்லூர் இன்றைய சங்கிலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையமைந்த இடத்தின் பின்பாக அன்று இடிக்கப்பட்ட சைவாலய அல்லது தீர்த்தக்கரை மட அத்திபாரங்களுக்கு அருகில் கிறித்தவ தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளதை இனறுங் காணலாம்.

**5.4**) சிவக்குடும்ப தெய்வங்கள் ஞானிகளின் மாசறுகாட்சியில் அமைந்த மக்கள் வணக்கத்திற்கான தோற்றங்களேயன்றி அத்தெய்வங்கள் யோனிவாய்ப்பட்டு ஒரு தாய்வயிற்றில் உதித்தவையல்ல. கால தேச வர்த்தமானங் கடந்தவை. ஆதலின் குறித்த காலத்திற் தோன்றி கடவுளராகக் கொள்ளப்படுபவற்கு அவை பரிவாரமாதல் முறையற்றதொன்றாகும்.

**எமது கருத்து** :- எண்கோணவடிவு எப்பக்கத்திலிருந்தும் வழிபட வாய்ப்பாக உள்ளது. சிவனை ஈசானமுதலிய பஞ்சமுகத்தினனாகக் கண்டே இந் நூலிலும் பிறவற்றிலும் பூசை முறைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. எட்டு என்பது இந்திரனாதி எண்திசைத் தெய்வங்கள், சிவனின் அட்டமூர்த்தம், அட்டகுணம் என்பவற்றைக் கருதும். இலிங்கம் எண்கோண வடிவி லானமை ஆய்வுக்குரியது. இந்நூலிற் பலவித இலிங்கப் பிரதிமைகள் சேர்க்கப்பட்டிருப்பினும் இப்பத்திரிகைச் செய்தி வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் இடந்தருவதுடன் இந்தியாவைவிட ஈழமே சிவவழிபாட்டுத் தொன்மைக்குச் சான்றாகவுள்ளது என்பதையும் பறைசாற்றி நிற்கின்றது. (கட்டுரை தொடர்கின்றது), இத்துடன் மருதங்குளத்திலுள்ள புராதன கட்டிடமும் எண்கோண வடிவில் அமைந்துள்ளமையும் ஆய்வுக்குரிய ஒன்றாகும். இப்பகுதிகளிற் காணப்படும் அனேக இலிங்கங்களின் மேற்பகுதி வட்டமாகவுள்ளது. எண்கோண வடிவிலான பகுதி புதைக்கப்பட்டும் உள்ளது. கிமு 3000 அளவில் ஆண்ட இராவணனின் காலமுதல் இவையுள்ளன.' எனக் கட்டுரை கூறினும் இராமாயணம் கலியுகத்திற்கும் முற்பட்டதால் இலங்கை சிவபூமி என்பதற்காய ஆதாரமே இதுவாம்.

### 9.6. பெரியபுராண சைவத்தமிழர், அந்தணர் வாழ்வொழுக்கங்கள்:

**9.6.1 முப்போதும் திருமேனி தீண்டுவார்** - சிவப்பிராமணியப் பெருமை

அ) எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்பொதும் அர்ச்சிப்பார் முதற்சைவ ராம்முனிவர்

ஆ) தெரிந்துணாண் முப்போதுஞ் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியஅர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே உரியன அப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ.

### 9.6.2. பரமனையே பாடுவார்

தென்றமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புட்காணாப் பரமனையே பாடுவார்

### 9.6.3. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

காரணபங் கயம்ஐந்தின் கடவுளர்தம் பதங்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத்
தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார் தனிமன்றுள்
ஆரணகா ரணக்கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தார்

**விளக்கம் :** தாமரைவடிவினதாய ஆறாதாரங்களில் முதல் ஐந்தின் கடவுளர்களாகிய பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் ஆகிய பதங்களை கிரியாயோக அனுபவ முறையிற் கடந்து, அதன்மேலே உச்சந்தலையிலுள்ள (அபர)சிவனை நாதாந்தத் தாரணையால் (தாரணை - இது அட்டாங்க யோகத்தில் சமாதி நிலைக்கு முன்னான ஏழாம் நிலை.) அடைந்தவர் சிவனடிசேர்வர்.

| இல | உயிரினம் | தலம் | இல | உயிரினம் | தலம் |
|---|---|---|---|---|---|
| 1 | அணில் | குரங்கணில் முட்டம் | 16 | நாரை | திருநாரையூர் |
| 2 | ஆமை | திருக்கச்சூர் | 17 | ஜடாயு பறவை | திருச்சிராப்பள்ளி |
| 3 | ஈ | திருஈங்கோய்மலை | 18 | பாம்பு | திருப்பாம்புரம் |
| 4 | எறும்பு | திருவெறும்பியூர் | 19 | நண்டு | திருந்துதேவன்குடி |
| 5 | காகம் | குரங்கணில் முட்டம் | 20 | முயல் | திருப்பாதிருப்புலியூர் |
| 6 | கருடன் | திருச்சிறுகுடி | 21 | மயில் | மயிலாடுதுறை |
| 7 | கழுகு | திருக்கழுக்குன்றம் | 22 | வெள்ளையானை | பெண்ணாகடம் |
| 8 | கருங்குருவி | திருவலிவலம் | 23 | கருப்பு யானை | திருக்காளஹஸ்தி |
| 9 | சிலந்தி | திருவானைக்கா | 24 | ஐராவதம் | திருப்பணந்தாள் |
| 10 | குரங்கு | திருக்குரக்காவல் | 25 | காமதேனு | தில்லை ஸ்தானம் |
| 11 | எலி | திருமறைக்காடு | 26 | பூனை | மேலப்பாதி |
| 12 | தேனீ | நன்னிலம் | 27 | தவளை | ஆத்தூர் |
| 13 | வண்டு | திருநல்லூர் | 28 | மீன் | கோவில் தேவராயன்பேட்டை |
| 14 | பசு | ஆவூர் பசுபதீஸ்வரம் | 29 | நாகம் | தேப்பெருமாநல்லூர் |
| 15 | பன்றி | திருச்சிவபுரம் | 30 | வாசுகி பாம்பு | கோவில் திருமாளம் |

### 9.8. திருவிளையாடற் புராணத்திலிருந்து : சைவச் சூழலில் முகிழ்ப்பன

### 9.8.1. திருநாட்டுச் சிறப்பு: சிலவற்றின் பொருள்விளங்க அடைப்பினுட் சொற்பிரிவு தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவினர்) ரீ(ஈ)ச னேசத் தொண்டினர் பசிக்கு நல்லூண்,
டி(தி)றவினைப் பிணிக்குத் தீர்க்கு மருந்துடற் பனிப்புக்(கு) கா(ஆ)டை,
உறைவிடம பிறிதும் நல்கி யவரவ ரொழுகிச் செய்யும்,
அறவினை யி(இ)டுக்க ணீக்கி யருங்கதி யுய்க்க வல்லார். - பா30

நிச்சலு மீ(ஈ)ச னன்பர் நெறிப்படிற் (சந்தித்தால்) சிறார்மேல் வைத்த,
பொச்சமி லன்பு மன்னர் புதல்வரைக் கண்டா லன்ன,
அச்சமுங் கொண்டு கூசி யடிபணிந் தினிய கூறி,
இச்சையா றொழுகி யுள்ளக் குறிப்பறிந் தேவல் செய்வார். - பா 31

நறைபடு கனிதேன் பெய்த பாலொடு நறுநெய் வெள்ளம்,
நிறைபடு செம்பொன் வண்ணப் புழுக்கலா னிமிர்ந்த சோறு,
குறைவற வுண்டு வேண்டும் பொருள்களுங் கொள்மி னென்ன,
மறைமுத லடியார் தம்மை வழிமறித் தருத்து வார்கள். - பா 32

கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து,
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை,
மண்ணி டைச்சில வி(இ)லக்கண வரம்பிலா மொழிபோல்,
எண்ணி டைப்படக் கிடந்ததா வெ(எ)ண்ணவும் படுமோ - பா 57

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது(ம்) முதலை,
உண்ட பாலனை யழைத்தது(ம்) மெ(எ)லும்புபெண் ணுருவாக்,
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்,
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர். - பா 58

வெம்மை யால்விளை(வு) வ(அ)ஃகினும் வேந்தர் கோல் கோடிச்,
செம்மை மாறினும் வறுமைநோய் சிதைப்பினுஞ் சிவன்பாற்,
பொய்மை மாறிய பத்தியும் பொலிவுங்குன் றாவாய்த்,
தம்மை மாறியும் புரிவது தருமமந் நாடு - பா 59.
வ(அ)ஃகுதல் - குறைதல், கோடு - மாறுபாடு

**9.8.2. திருநகரச் சிறப்பு**

1. வருவிருந்(து) தெ(எ)திர்கொண் டேற்று நயனுரை வழங்கு மோசை,
அருகிருந் தடிசி(ல்) லூட்டி முகமனன்(கு) க(அ)றையு மோசை,
உரைபெறு தமிழ்பா ராட்டு மோசைகேட் டுவகை துள்ள,
இருநிதி யளிக்கு மோசை யெழுகட(ல்) ல(அ)டைக்கு மோசை.- பா 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அருந்தின ரருந்திச் செல்ல அருந்து கின்றாரு மாங்கே,
இருந்தினி தருந்தா நிற்க இன்னமு தட்டுப் பின்னும்,
விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி,
வருந்திவிண் ணோக்கு(ம்) மோரே(ஓர் ஏ)ருழவர்போல் வாடி நிற்பர். - பா 56

3. வேதமு மங்க மாறு மிகுதியும் புராண நூலின்,
பேதமுந் தெரிந்தோ ராலும் பிறர்மதங் களைய வல்ல,
வாதமு மதமேற் கொண்டு மறுத்தலு நிறுத்த வல்ல,
போதமு முடையோ ராலும் பொலிந்தன கழக மெல்லாம்.
- பா 85 (ஆங்காங்கே ம் சேர்க்க)

4. தெய்வ நீறுமைந் தெழுத்துமே சிதைக்கல னாக,
எவ்வ மாசிரு வினையுடம் பெடுத்துழல் பிறவிப்,
பௌவ மேழையுங் கடந்தரன் பதமலர்க் கரைசேர்,
சைவ மாதவ ருறைமடத் தனிமறு குரைப்பாம். - பா 88 - சைவர் வீதி.

**விளக்கம்** : சிதைக்கலன் - அழியும் உடம்பிற்கோர் ஆபரணம், எவ்வ மாசிரு வினையுடம்பு - விருப்பு வெறுப்புடன் ஆற்றும் நல்வினை, தீவினை இரண்டும் முறையே நல்ல, தீய பிறப்பிலாழ்த்தும். பிறப்பு என்பது எவ்வகையாலும் குற்றமுடையதே. காரணம் மீளவும் அது வினையில் ஆழ்த்தும். எவ்வம் - குற்றம். பிறப்பில்லாப் பெருவாழ்வே சைவர்காம்.

5. எங்கு மீசனைப் பூசைசெய் திகபர மடைவார்,
எங்கு மன்பரைப் பூசைசெய் தெழுபிறப் பறுப்பார்,
எங்கு மாகமஞ் செவிமடுத் ததிர்வினை தடுப்பார்,
எங்க நாயகன் வடிவுணர்ந் திருள்மலங் களைவார். - பா 89 - சைவர் வீதி

6. அழிவி லானுரை யாகம மிலக்கமாய்ந் தவற்றுள்,
விழுமி தாகிய விதியினும் விலக்கினு **மடியைத்**,
**தழுவு தொண்டர்கண்** மைந்தர்கள் சாதகர் பாசங்,
கழுவி வீடருள் போதகக் காட்சியர் பலரால். - பா 90 - சைவர் வீதி
**விளக்கம்** - இதில் அடியைத் தழுவு தொண்டர்கள் என்பது – சரியைவழி நிற்போர், மைந்தர்கள் - சிரியை வழி நிற்போர், சாதகர் - யோகவழி நிற்போர், போதக் காட்சியர் - மெய்ஞ்ஞானிகள்.)

7. மறைக ளாகமம் பொதுச்சிறப் பெனச்சிவன் வகுத்து,
முறையி னோதிய விதிவிலக் குரைகளு முடிவில்,
அறையும் வீடுமொன் றிரண்டெனும் பிணக்கற வமைந்த,
குறைவி லாச்சிவ யோகியர் குழாங்களும் பலவால். - பா 91 - சைவர் வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. குழலுந் தும்புரு நாரதர் பாடலுங் குனித்தச்.
சுழலுங் கொம்பனா ராடலு மூவர்வாய்த் துதியும்,
விழவின் செல்வமுஞ் சுருதியுந் திசையெலாம் விழுங்கும்,
முழவுங் கண்டுயி லாதது முன்னவன் கோயில். - பா 92

9. புண்ணி யம்புரி பூமிபா ரதில்வரு போகம்,
நண்ணி யின்புறு பூமிவா நாடென்ப நாளும்,
புண்ணி யம்புரி பூமியு மதில்வரு போகம்,
நண்ணி யின்புறு பூமியு மதுரைமா நகரம். பா-103.

**விளக்கம்:**- போகம் 8ஆவன - பெண், ஆடை. அணி. உணவு, தாம்பூலம், பரிமளம் (வாசனை), இசை, பூம் படுக்கை). இந்திர போகங்கள் புண்ணியஞ் செய்வார்க்கு இடைக்கால (அவாந்தர) இன்பந் தந்தாலும் அதிற் தொடர்ந்து அழுந்தாத வைராக்கியம் - வெறுப்புக் கொண்ட வர்களுக்கு மேற் பதவிகள் கிட்டிப் புலன் கடந்த இன்பமடைவர் என்பது சைவாகமம். கந்த புராணபடனப் பலனும் இதுவே : இந்திரராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவி சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி யதனைச் சேவ்வர் ... என்பது அது. பதமுத்திகளின் கீழிருந்துமேலான ஒழுங்கு: பத்தாம் படலமான **மலையத் துவசனை அழைத்த படல 28ஆம்** பாவின் உரையாற் பெறப்படும். அது வருமாறு : **1) புவலோகம்** - சந்திர சூரியர் முதலோர் வசிக்கும் பதம், **2) சுவலோகம்** - இந்திரன் இருக்கும் பதம், **3) மகலோகம்** - இருடிகள் முதலியோர் இருக்கும் பதம், **4) சனலோகம்**- பிதிர் முதலியோர் இருக்கும் பதம், **5) தவலோகம்**- சனகர் சனந்தனர் முதலியோர் தவஞ்செய்திருக்கும் பதம், **6) சத்தியலோகம்-** பிரமதேவர் இருக்கும் பதம், **7). நவலோகம்** - திருமால் வசிக்கும் பதம், **8) சிவலோகம் -** உமை சமேதராக சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் பதம். உயிர் வினையாற்றும் பூலோகத்துடன் எல்லாமாக பதங்கள் ஒன்பதாம். (7.10, 7.13, பக்கம் 467, 468, 469 பக்கம்0

### 9.8.3 திருக்கயிலாயச் சிறப்பு

1) வரங்க டந்தரு ளௌமுது வானவர் முனிவோர்,
கரங்க டந்தலை முகிழ்த்திடக் கருணைசெய் தவிச்சை,
உரங்க டந்துரை யுணர்வெலாங் கடந்தரு மறையின்,
சிரங்க டந்தவ னிருக்கது திருக்கயி லாயம். - பா 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) புரந்த ராதிவா னவர்பதம் போதுறை புத்தேள்,
பரந்த வான்பதஞ் சக்கரப் படையுடைப் பகவன்,
வரந்த வாதுவாழ் பதமெலா நிலைகெட வருநாள்,
உரந்த வாதநின் றூழிதோ றோங்கு மவ் வோங்கல். - பா 2

(இது சிவலோக உயர்வை, மேன்மையை யுரைப்பது.)

**9.8.4. புராண வரலாறு** – புராணகாரணன் சிவபெருமான், சிவபரத்துவம்:

**3) வேத வாகம புராணமே மிருதியே முதலா,**
**ஓது நூல்களின் றுணிபொரு ளுலகெலாம் பயந்த,**
**பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர்** பெரிய,
போத மாதவ வுனக்கியாம் புகல்வதொன் றுளதால். - பா 8.

**விளக்கம் :** போதமாதவன் சூதமாமுனிவர். இதில் அடியைத் தழுவு தொண்டர்கள் என்பது சரியைவழி நிற்போர், மைந்தர்கள் - கிரியைவழி நிற்போர், சாதகர் - யோகவழி நிற்போர், போதக்காட்சியர் - மெய்ஞ்ஞானிகள். சிவபரத்துவத்தினைத் தகுந்தோர் கேட்க உரைப்பவர்.)

**9.8.5. இந்திரன் பழிதீர்த்த படலம்** - குருநிந்தைக் குற்றம் அகலல்:

4) ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிக னெண்ணித் தீர்க்குந்,
**தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்ப தன்றிப்,**
**பேசுவ தெவனோ** தன்பாற் பிழைத்தகா ரணத்தால் வந்த
வாசவன் பழியைத் தீர்ப்பான், குரவனே வழியுங் கூற.- பா 68

**விளக்கம்** : தேசிகன் - குரு, வாசவன் - இந்திரன், வழி – உபாயம், குரவன் - வியாழபகவான்.)

**9.8.6. வெள்ளையானைச் சாபந்தீர்த்த படலம் .** திருக்குறள் கூறும் அறம் பொருள் இன்பமெனும் நான்கு புருஷார்த்தங்களில் முதல் மூன்றைக் கடந்து, அதற்கான இந்திரலோக இன்பந் துய்த்து, அதற்பின் வைராக்கியத்தால் நான்காம் புருஷார்த்தமாகிய வீடுபேறடைதல் பற்றியது.

5) இம்மையி லறமுன் மூன்றா லெய்திய பயனை யெய்தி,
அம்மையின் மகவா னீரே ழுரும்பத மளவும் வானில்,
வெம்மையில் போகமூழ்கி வெறுப்புவந் தடைய வுள்ளச்,
செம்மையில் விளைபே ரின்பச் சிவகதிச் செல்வ ராவார். - பா 31

**9.8.7. திருநகரங்கண்ட படலம் .** தோத்திரமாக (பா22) சதாசிவவடிவு கூறலும் தமது வைராக்கியமின்மை யெனும் ஆன்மீகப் பேறடையும் ஆற்றாமைக்கு (பா23) வருந்துதலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணம்,
சரண மங்கல மாகிய தனிமுதல் சரணஞ்,
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்,
சரண மும்பர்க ணாயக பசுபதி சரணம். பா- 22

7) ஆழி ஞாலமே லாசையு மமரர்வான் பதமேல்,
வீழு மாசையும் வெறுத்தவர்க் கன்றிமண் ணாண்டு,
பீழை மூழ்கிவா னரகொடு பிணிபடச் சுழலும்.
ஏழை யேங்களுக் காவதோ வெந்தைநின் கருணை. - பா 23

8) உத்தம குலத்து நாற்பெருங் குடியு முயர்ந்தவு மிழிந்தவு மயங்க,
வைத்தவு மான புறக்குடி மூன்று மறைவழுக் காமனு வகுத்த,
தத்தம நெறிநின் றொழுகவை திகமுஞ் சைவமும் தருமமுந் தழைப்பப்,
பைத்தெழு திரைநீர் ஞாலமேற் றிலகம் பதித்தென நகர்வளம் படுத்தான். - பா 45.

மனு நீதி - **குடிமை** பற்றியது. (பிராமணியங் காத்தல்)

# அத்தியாயம் 10 பின்னிணைப்புகள்

## 10.1 (9.3ன் தொடராக வரும்) 'குஞ்சிதபாதம்'

குஞ்சிதபாதம் என்றதும் அது ஆனந்தத் தாண்டவரின் தூக்கிய திருவடி யென்பதனை யாரும் அறிவர். நூலின் ஆரம்பத்திற் குறிப்பிட்டவாறு,

**பிறவிநோக்கும் அதனடைவும்** :
"ஊனடைந்த உடம்பின் பிறவியே தானடைந்த உறுதியைச் சாருமால்,
தேனடைந்த மலர்ப்பொழிற் தில்லையுள் மாநடஞ்செய் வரதர்பொற் றாள்தொழ"

என்பதுடன், சிறப்பாக ஆன்மார்த்த சிவபூசையே அதற்காய உகந்த வழி என்பதும் அதுவும் '**கிரியையென மருவுவன யாவும் ஞானத்தின் நிமித்தம்**' என்றபடி மெய்ஞ்ஞானம், பதி ஞானம். திருவடிஞானம் என்றெல்லாம் புகழப்படும் முத்திநெறி காட்டும் உண்மைஞானம் கிரியை(சிவபூசாபாக) முதிர்வில் கிரியை கிரியாயோகமாகியபின் பெறப்படும் என்றுங் கண் டோம். அது, இப்பிறப்பிலோ மறுபிறப்பிலோ முத்தி நிட்சயஞ் செய்யும் என்பதும் உண்மை.

சிவசோதியுட் கலந்தமை, மூலஸ்தானத்திற் சென்று மறைந்தமை, வெள்ளை யானையிலும் மந்திரமோதப்பட்ட குதிரையிலும் கைலாயஞ் சென்றமை, வானிற் பார்வதி பரமேஸ்வரராக கணங்கள் சூழவந்து தம்மோடணைத்தமை ஆகிய செய்திகளை புராணங்கள் கல்வெட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றால் அறிந்துள்ளோம். **இனி நாமறிந்த அண்மை நிகழ்வாக,** அன்றாடம் பரார்த்தத்திற்கு முன்பாக ஆன்மார்த்த சிவபூசையாற்றி, "ஓம் மிர்த்திஞ்சயாய நமஹ:" எனவோதியவாறே 10.01.2006ல் "குஞ்சிதபாதம் அணைந்துவிட்டார்" என மஹான்களால் வியக்கப்பட்ட ஒருவரே வற்றாப்புகழ் மிக்க குஞ்சிதபாதக்குருக்கள் அவர்கள். "குஞ்சிதபாதம்" என்ற நினைவஞ்சலியில் வரும் சில வரிகள்:-

1. 1949 மட்டில் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தில் குருக்களானமை தொட்டு சிவனடி சேரும்வரை ஆன்மார்த்தம் பரார்த்தம் இரண்டினையும் சிறப்புடன் செய்து வந்தார். 2. 'ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார் எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார்'

3. சைவக் கோவில்கள் மட்டும் சைவசமய தத்துவங்களைத் தமது உறுப்புகளாக உணர்த்தி நிற்கின்றதென்பதில் உறுதியாயும், 'ஸர்வதேவ தாஸ்வருபம்' என்பதை விளக்கியும் வாழ்ந்தார்.

4. சிறுவர்கள் நித்தியானுஷ்டானத்திற் சிறப்பாக விளங்க சந்தியாவந்தனம் ஆன்மார்த்த சிவபூஜை போன்ற நூல்களைத் தெளிவாக எழுதியுள்ளார்.

5. தமது ஊக்கத்தினாற் பிள்ளைகள் எடுத்த பெருமுயற்சி காரணமாக கணணியிற் கிரந்த எழுத்து வடிவமைத்தல் பத்ததிகளைப் பதிப்பிக்க செய்து வழிசமைத்தார்.

6. நித்திய சிவபூஜாதுரந்தரர். இன்மொழி, நேரியசிந்தனை, திறம்படக் கருமமாற்றல் போன்ற நல்லியல்புகள் உடையவர்.

7. 'சற்குரு என்பவருக்கு சாஸ்திரங்களில் அறிவும் கிரியை நுட்பங்களுமே சிறப்பாகும்'என்ற ஆகமவிதிக்கமைந்த ஆசாரியராகவும் சற்குருவாகவும் வாழ்ந்து அந்தணர்களுக்குரிய வைதிக சைவ ஆசார அனுஸ்டானங்களையும் நித்திய சிவபூஜையையும் நியமமாக ஆற்றி வந்துள்ளார். 'ஆசார்ய: மனசாயத் வாக்ருத் சாயா பரமேஸ்வரர் புருஷஸ்ய சரியே அஸ்மின் பாத்யாப்யந்தர சம்ஸ்திதம்' என்ற காரணாகமக் கூற்றுப்படி ஆச்சாரியா ரொருவரின் நினைவின் வண்ணமே இறைவன் தோன்றுகிறான் எனும்படி அகப்பூசையினால் சித்தம் அழகியவராய் ஆனந்த சொருபராய்ச் சிவப்பணி ஆற்றியவர்.

8. குருக்கள் அவர்களின் வாழ்வின் பல்பரிணாம (மேற்கண்ட) அம்சங்கள் இளைய தலைமுறையினரால் அறிந்து கடைப்பிடிக்க வேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அவரது சிவபூசைச் சிறப்பினால் அவர் திருவெம்பாக் காலத்தில் அதுவும் சுவர்க்கவாயில் ஏகாதசியன்று சுவர்க்கம் சென்றுள்ளமை இந்துக்களுக்கு நல்ல செய்தியாக அமைந்துள்ளது.

10 வேதாகமங்களையும் தமிழையும் தக்க குருமூலம் கற்றதுடன் தமது சமூக சௌளம், உபநயனம், விவாகம், ஷஷ்டி பூர்த்தி என்பவற்றுடன் சந்தேகநிவர்த்தி செய்தும் உதவியுள்ளார்.

11. சிவத்திருமன்ற ஆரம்ப(2000)காலந்தொட்டு போஷகராயும், தீட்சாகுருவாயு மிருந்துள்ளார்.

**10.2 ஆகம சித்திரங்கள்** 1. ஆறாதாரங்கள் 2. வேதிகைகள் 3. பஞ்சாசனங்களுடன் கூடிய வேதிகை 4. பஞ்சாசனம் (தனித்தனி - கூர்மாசனம், அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம்) என்பனவற்றைத் தொடரும் பக்கங்களிற் காண்க.

**10.3 கற்பூரதீப மகிமை :** எல்லாத் தீபங்களிலும் கற்பூரதீபமே விசேடமானது. சிவாகமங்கள் சொல்லும் கற்பூர நீராஞ்சனம் தற்பொழுது ஆலயங்கள் பலவற்றிற் காட்டப்படுவதில்லை. 1000 தேங்காயெண்ணெய்த் தீபமும், 100 நெய்த் தீபமும் ஒரு கற்பூர தீபமும் சமபலனைக் கொடுக்குமாம். காரணம் அக்கினி வசப்பட்டதும் தனது தூல வுருவை (ரூபத்தினை) அழித்து சூக்கும ஒளியுருவை-அருவுருவைக் கொடுத்து மறைவது கற்பூரதீபம். அது, உயிர்கள் தாம் பக்குவப்பட்டதற்கு அடையாளமாக சிவமுதலுடன் அத்துவிதமாய் ஒன்றித் தமது அடையாளங்களை இழந்து அவனடியிலின்புறுதலைக் குறிக்கும். அதாவது, தமதுள் நின்றியற்றும் ஆதி முதலை - சிவாக்கினியை குரு உணர்த்த உணர்ந்து அதன் வசப்பட்டதும் சாத்வீகம் மேம்பட்டு பசுத்துவமும் நீங்கிச் சிவத்துவம் அடைதலை (வெள்ளொளி யாதலை) நினைவூட்டும். அதனால் அவ்வுயிர் மேலும் கருவுட் புகாத தன்மையாகிய பிறவாப் பெருநிலையடையும். கரு (இனிப்)பூரோம் என்பதே கருப்பூரம் என்றாயிற்று எனலாம்.

**10.4 தத்துவப்பட விளக்கம் :** (7.10ன் இறுதிக்காயது.) சித்தாந்தப்படம் ஒன்று கொழும்பு விவேகானந்த சபையிற் துலங்கிக் கொண்டிருப்பதை அவதானித்து, அதனை கைப்பிரதியாக்கி வரைந்து சிவத்திருமன்ற சித்தாந்த வகுப்பிற் பயன்படுத்தியதால் நல் விளக்கம் பெற்றவர் பலர். சிலர் மேற்கொண்டு பயின்று பல்கலை-சித்தாந்த-மேற்பட்டமும் பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படமும் மற்றும் அதேபோன்ற (இணைப்புப் படம் பார்க்க) திருவாவடுதுறை ஆதீன ஏற்பாட்டில் சரஸ்வதிமஹால் வெளியிட்ட படமும் **36 தத்துவங்கள் தொடர்பாக வகைப்படுதல்** : 1) அவ்வவற்றிற்காய (அபக்குவ மல சுத்தவித்தை விஞ்ஞானகலர், சப்தகோடி மகாமந்திரர், அட்டவித்தியேசுரர். அணுசதாசிவர் போன்ற தொகுப்பாயும் தனித்துமுள்ள நாமத்துடன் கூடிய) புவனங்கள், 2) அவை அசுத்தாத்துவா, மிச்ராத்துவா, சுத்தாத்துவா என வகைப்படல், 3) நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்யாகலை, சாந்திகலை. சாந்தியாதீதகலை என வகைப்படல், 4) பிருதிவி, அப்பு, தேயு, வாயு என 5 மண்டலங்களாதல், 5) தூல அல்லது மூலப் பிரகிரதிமாயை, சூக்குமப் பிரகிருதி அல்லது அசுத்தமாயை, பரப்பிரகிருதி அல்லது சுத்தமாயை என்றாதல், 6) ஆன்ம வித்யா சிவதத்துவங்கள் என்றாதலுமாம். புவனங்கள்: 1-16 வரை பூமியின்கீழ், 97-106வரை பூமியின்மேல், 17-98 பூமி. மேலும், அத்துவாக்கள் உடலில் அமைதல், மந்திரம், பதம், வன்னம் என்பவற்றின் வடமொழி விபரம் என்பனவுங் காண்க. (படம் பக். 467, 468, 469).


**அண்டம், பிண்டம் ஒன்றாதலைக் கோவிலமைப்பிலும் இலிங்க அமைப்பிலுங் காணலாம்.** யாவும் 36 தத்துவக் கூட்டத்திலடக்கம். அது இவை சிவசக்தியிலடக்கம். ஒடுக்க முறையில்36 அல்லது விரிவுமுறையில் முதலாவதான தத்துவமான சிவம் லிங்க உச்சியிலும், ஞானிகளின் தலையுச்சியிலும் உள்ளது. அவ்விடத்திலிருந்தே யாவும் விரியும் யாவும் ஒடுங்கும். அந்த அபரசிவன்மேற் **பரசிவன் பராசத்தியுடன் சூரியமண்டல நடுவிற் சிவசூரியனென** தத்துவாதீதனாயுளன். **படத்திலில்லாத** (பிரணவங்கடந்த) **அந்நிலைகள் கீழிருந்து மேலாக:** 1. அருள் 2. இச்சா 3. கிரியா, 4 ஞான சக்திகளின் தரிசனம் 5. ஞானாதீதம் 6. ஆத்மரூபம் 7. ஆத்ம 8. பரை தரிசனங்கள் 9. பரைவியாப்தி 10. பரையோகம் 11. பரைபோகம் 12. ஆத்மசுத்தி 13. சுகரூபம் 14. சுகாதீதம் 15. சிவரூபம் 16. சிவதரிசனம் 17. சிவயோகம் 18. சிற்பரானந்த தரிசனம் 19. சிற்பரானந்த யோகம். அதன்மேலுள்ளது பரமானந்தாவச சாயுச்சிய சிவபோகமாகும். (3.2 துகளறுபோத குறிப்புகளோடு சிந்திக்கவும்.)

இந்நூலில் 36 தத்துவ விளக்கமும் அதன் மேல் சிவசூரிய மண்டலம் வரையான விளக்கமும் எழுத்திலேயே தரமுகின்றது. தெளிவான படம் திருவாவடுதுறை ஆதினத்திலும் விவேகான்நத சபையிலுமுண்டு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாதாரங்கள்.....





இதனுடைய தனித்தனி விளக்கங்கள் அடுத்த பக்கங்களில்.

இதன் விரிவு அடுத்தபக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ஷடுத்தாசனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணவேதிகை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மாசனம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யோகாசனம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மாசனம்




அஷ்டபத்மம்

1. அணிமாமயதளம்
2. லகிமாமயதளம்
3. மகிமாமயதளம்
4. ஹரிமாமயதளம்
5. பிராகாம்யமயதளம்
6. ஈசித்வமயதளம்
7. வசித்வமயதளம்
8. சர்வக்ஞதாமயதளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.5 பிராமணியங்காத்தல் தொடர்பாக மேலுஞ்சில -** இவ்விடயம் பற்றி ஏலவே குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதன் முக்கியத்துவங் கருதி9.3 இல் பல்லாற்றானும் ஆயவேண்டியுள்ளது. பொதுமக்கள் அல்லது அடியார் நோக்கு. தர்மகர்த்தாக்கள் நோக்கு, பிராமணியர்தம் நோக்கு, ஞானியர் நோக்கு எனக் காண்கையில் திருமூலர் போன்ற ஞானியர் நோக்கினை ஏலவே கண்டுள்ளோம். பிராமணர், பக்தனையும் சிவனையும் (அல்லது பொதுவில் அருள் வழங்கு நிலையிலுள்ள மூலவரையும்) இணைக்கும் பாலமாக இருப்பது அவரின் முக்கியத்துவத்தைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. பாலம் உறுதி தவறின் யாது நிகழும்? பாலத்தைச் சிலர் தகர்க்க முயன்றால் யாது நிகழும்? என்பதைக் கற்பனை பண்ணிப் பார்த்தால் **திருமூலரின் உபதேசங்கள் கண்டனங்கள்** என்பன தெளிவுறும்.

**1) பா226** - (ஜி.வரதராஜன் உரை ஆதாரம்) காயத்திரியாய்க் கருதுகின்ற சூரியனாய காயத்திரியை அதன் மந்திரத்தாற் செபிக்க அந்தணர் விரும்புவர். அன்பெனுந் தேரிற் சென்று சிவமாகிய நேயப் பொருளோடு பொருந்தியவராய் தனுகரணபுவன போகங்களாகிய மாயாகாரியங்களை விரும்பாது வென்று விளங்குவர். **குறிப்பு :-** அங்ஙனமின்றி அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் உடையோரின் செயல் அறமற்றதாதலின் அவர் அந்தணர் என்போர் அறவோரெனும் இலக்கணத்தை மீறியவராகின்றார் என்பது வள்ளுவம்

**2. பா 229-** வேதியர் வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்.

**3. பா 230** நூலும் சிகையும் பூண்பதனால் ஒருவர் அந்தணராவதில்லை. இடைகலை பிங்கலை சுழுமுனை (பிராணாயாம விளக்கம் பார்க்கவும்) ஆகிய மூன்று நாடிகளையும் ஒன்றாக்கி உணர்வதே வேதமுடிவு என்பதனையே முப்புரிநூலுணர்த்தும் என்பதனை அறிந்தொழுக வேண்டும்.

**4. பா 231** மனத்தோடு பொருந்தியதாகிய உலக இன்பங்களை விட்டு மெய்ப்பொருள் அறிவுடையாரே அந்தணராவார்.

**5. பா 234** - "அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச், சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி, நந்துதல் இல்லை நரபதி நன்றாகும், அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே" யாவரிலும் அருள் உள்ளங் கொண்டவரும் (வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் எனும்படி) வேதமுடிவாகிய **சிவனை இடைவிடாது நினைப்பவருமாகிய அந்தணர் அடைகின்ற (தங்கி வாழுகின்ற) வளமான பூமி வளங்குன்றாது. அந்நாட்டு அரசனும் (தர்மகர்த்தாவும்) நன்றாவன்.** (அதற்காக அவர்கள்) காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைகளில் ஆகுதி (அக்கினி காரியம்) செய்வார்கள். அதனாற் தம் பற்றுக்களையும் நீக்குவர்.

**5. பா 240 அரசையும் அந்தணரையும் இணைத்துக் கூறுவது**:- வேதநெறி கூறும் அகமும் புறமும் ஒத்த வேட மின்றி அப்பிராமணராய்த் திரிவோரை அரசன் தண்டனை முதலியவற்றால் நெறிப்படுத்தல் கடன். அது வீடுபேற்றினையுந் தரும். (தண்டனை என்பது கசப்பானாலும் அது பிறவி நோய்க்கு மருந்தேயாம் ஆதலின் புராணபடங்களில் "இறைவன் தண்டித்தருளினார்" என்றே பயன் கூறப்படும்.). தொடர்ச்சியாக **பா 241ல்** ஆடம்பரத்திற்காக அணியும் நூலும் சிகையும் களையப்படின் அது நாட்டிற்கு நன்றெனப்படுகின்றது. **பா 242** - வேடதாரிகளை ஞானிகளைக் கொண்டு சோதித்து **ஞானம் உண்டாக்குதல் நாட்டிற்கு நன்றாம்.**

**6.பா 243**- அறநெறி நிற்கும் **அந்தணத் தன்மையோரையும்** தேவரும் வணங்கும் மெய்யடியாரையும் பசுக்களையும் மகளிரையுங் காத்தல் அரச கடன். அங்ஙனமின்றி அவன் யுத்தவெறிபிடித்து அலைதல் குற்றமாம். பிராணனது இயக்கத்தை ஒடுக்கும் பிராணாயாமத்தால் மூலாதாரத்து மூண்டெழுகனலைச் சிரசின் மேலேற்றி அங்குள்ள வெள்ளொளியைக் கொண்டு மதிமண்டலம் அறிந்து அதிற்தோன்றும் ஆனந்தத்தேன் பருகாது மதிமயக்கும் கள்ளுண்போரையும் அரசன் தண்டிக்கவேண்டும்.

**7. பா247** ஏலவே கண்ட தத்தம் சமயத்தகுதி நில்லார் பற்றியது.

மேலும், பா 224 'அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர், செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய், தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச், சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே'. அதாவது, அந்தணராகிய அறவோர் **பிறப்பினை அறுக்கும் தொழிலை** உடையவர். (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனினுமாம்). **அக்கினி காரியஞ் செய்து முப்பொழுதும் சந்தியாவந்தனம்** போன்ற நற்செயல் புரிந்து, இராப்பகலற்ற காலை மாலை வேளைகளிற் **வேதம் ஓதி, தமது நியமமான கருமங்களை ஆற்றுவர்.**

இந்நிலை அன்று கடைப்பிடிக்கப்பட்டு இருந்தாலும் நாட்டு நிலைகள், ஆலய எசமானரின் அறிவீனம், அறிந்தும் செயற்படுத்தாமை, தர்மகர்த்தாக்கள் தாமே சமய ஒழுக்கந் தவறல் என்பவற்றால் யாரையும் தட்டிக்கேட்பாரற்ற நிலை உருவாகியே விட்டது. அதனால் நிர்வாகம், அடியார் அல்லது பக்தர், அந்தணர் அல்லது அர்ச்சகர் என்போரிடையே தொழிலுறவேயன்றி நேயத் தொடர்பிழந்த நிலையுருவாகி அன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமென்பது ஆலயச் சூழலிலேயே மறக்கப்பட்டுள்ளது. இதுவே திருமந்திரம் பா 234 கூறும் நாட்டுக் கேட்டிற்குக் காரணமாயிற்று. அப் பாடற் பிரகாரம் **அந்தண்மை கொண்டோர் வாழும் உலகே மேம்படும்.** பா 224இலும் முன்னரும் கூறப்பட்ட பிராமணியங் காக்காவிடின் நாடு கெட்டழியும். ஆதலின் பிராமணியத்தினை - அந்தண்மையினைக் காக்க அந்தணரும் அவரோடு சம்பந்தப்பட்டோரும் முன்வரல் கடன். அவ்வாறு காக்கப்பட்டாலே அந்தணர் கிரியைகளை ஞான நிமித்தமாக ஆற்றுவர். கிரியை என்ற பதம் விரிவுடையதாயினும் இங்கே அது ஆன்மார்த்தத்தினையே குறித்தல் காண்க.

**10.6 'கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும்"** - இவ்வரிகள் சிவப்பிரகாச நூலின் பத்தாம் பாடல் முதல்வரிகள். இதுபற்றி 7.4ல் குறிப்பிடப் பட்டிருந்தாலும் **இதனைச் சரிவரப் புரியாத நிலை உணரப் பட்டுள்ளதால் இதன் விரிவும் உண்மைத் தாற்பரியமும் தரப்படுகின்றன. அப்பாடலாவது :-**

"கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் உண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கள்
மருவியிடும் உயர்ஞான மிரண்டாம் மாறா
மலமகல அகலாத மன்னு போதத்
திருவருளொன்று ஒன்றதனைத் தெளிய வோதும்
சிவாகமம்என் றுலகறியச் செப்பு நூலே."

**அதாவது,** கிரியாவிதிப்படி தீக்கை செய்து உபாயச் சரியை கிரியை யோகம் அனுட்டித்து முடிந்தால் அதின் பிரயோசனம் பின்பு ஞானவிதிப்படி யனுட்டிக்கும்படி கூட்டுவிக்கும். (அங்ஙனமாக) ஞானவிதிப்படி உண்மைச் சரியை கிரியை யோகம் அனுட்டித்தவர்க்கு அச்சிவபுண்ணிய முதிர்ச்சி பாகம் வருமளவும் சாலோகாதி பதவி பொருந்தும். பின்பு ஞானத்தை யடைவர். அம் மேலான (வீடுதரும்) ஞானம் இரண்டு விதம். அநாதியாயுள்ள பாசம் நீங்கும்படி அறிவுக்கறிவாய் விட்டுநீங்காத திருவருளொன்று. அத்திருவருளைத் தெளிய ஓதும் சிவாகமம் ஒன்று. அவ்வாறு சரியை கிரியா யோகம் முற்றுதலினாலே பாகம் வந்தவர்களுக்கு இந்நூல் (சிவப்பிரகாசம்) மூலம் திருவருள் ஞானவிளக்க முண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படியான சிந்தனையுரையை நன்கு விளங்கினால், அந்தணர் தாம் கருதும் **தொழிலாக - காமியமாகச் செய்யும் கிரியைக்கும் இதிற் குறிப்பிடும் கிரியைக்கும் வேறுபாடு காண்பர்.** அங்ஙனங் காணின் மட்டுமே 7.4ற் கூறியதன் தாற்பரியத்தை யுணர்ந்து **பரார்த்தத்தின் முன்பாக ஆன்மார்த்தம் செய்ய இனியாவது விரும்புவர்.** இக்கிரியை பற்றி 'புத்திர மார்க்கம் புகலின்' என முன்கண்ட சித்தியார் பா272 பார்க்க.

வேதத்தின் ஞானகாண்டம் மறக்கப்பட்டதால் புத்தம் உருவாயிற்றென்பதும் ஞானகாண்டம் தொழிற்பட்டதும் புத்தம் (பாரதத்தில்) மறைந்ததென்பதும் உண்மை. இனியும் அந்நிலை வராதிருக்க **யாவரும் தங்கடனுணர்ந்து பிராமணியத்தையும் சைவத்தையுங் காப்போம்.**

**10.7. பிராணாயாமம், சிவோகம்பாவனை, அகப்பூசை என்பவற்றிற்குப் பயனாகும் திருமந்திரப் பாக்களும் படத்துடன் கூடிய விளக்கங்களும் :**

1) "மகார நடுவே வளைத்திடுஞ் சத்தியை, ஒகாரம் வளைத்திட் டும்பிளந் தேற்றி, அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய், நகார வகாரநற் காலது நாடுமே' - நூறுதி ப. 470 திருமந்திரமும் விளக்கமும் பக்கம் 941.

அதாவது, உந்திக் கமலத்தில் வளைந்து சுருண்டு கிடக்கும் குண்டலினி சத்தியை கீழ்நோக்காது அச்சத்தியை ஒகாரம் விளங்கும் புருவநடுவுக்குச் செலுத்தி, அகரம் என்ற சிவம் அறிவு மயமாய் இருக்குமிடம் தலையாக வும், அதன் அக்கினித் தன்மையை வெளிப்படுத்துந் திறன் இருகண்களில் விளங்குவதாகவும், சுவாதிட்டானத்திலுள்ள அபானனாகிய நகாரம் கண்டத்தில் வகாரமாய் நாதத்தை விளைக்கும் சுழுமுனையாவதை விரும்பிப் பெறுங்கள். **விளக்கம்** : மகாரம் - உந்திக்கமலம். அகரம் உகரம் பொருந்திய இடம் புருவநடு. உம்பிளந் தேற்றுதலாவது கீழ்நோக்குந் தன்மை அற்றிருத்தல். இதனால் (ஞான நடனம்) சி வா ய அமைந்து (ஊன நடனம்) நம கீழ்ப்படுத்தப்படும். நகாரம் நோக்கிச் சென்ற அபானனே வகாரமாய்க் கண்டத்தில் தாலுமூலத்தில் அருட்சத்தியாய் விளங்குகிறது. (முத்தி பஞ்சாக்கரம் சிவாயநம)

2) 'காலை நடுவுறக் காயத்தில் அக்கரம், மாலை நடுவுற ஐம்பது மாவன, மேலை நடுவுற வேதம் விளம்பிய, மூலம் நடுவுற முத்திதந் தானே' - பா 955. அதாவது, சுழுமுனையில் விளங்குஞ் சிவன் இடகலை பிங்கலையாக உடலில் 50 அக்கரமாய் விரிந்தான். உயிர் மயக்கமுற்றுச் சூரிய சந்திரனைப் பற்றியபோது அவ் வைம்பதும் விளங்கி நின்றன. சிரசின் மேல் விளங்கும் சிவன் வேதத்தாற் புகழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்ட பிரணவத்தை எழுப்பி சகஸ்ரதள நடுவில் நிறுத்தினவர்க்கு முத்தி அளித்தான். **விளக்கம் :** பிரணவமொன்றே 50 எழுத்துக்களாக ஆறாதாரங்களிலும் விரிந்து விளங்கியது. சிரநடுவிற் பிரணவத்தை அமைத்தபோது அவ்வைம்பதும் இல்லாதொழிந்தன.

3) 'நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று, பாவிக ளத்தின் பயனறி வாரில்லை, ஓவிய ராலும் அறியவொண் ணாதது, தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே' - பா 956. அதாவது, சுவாதிட்டான சக்கரத்திலுள்ளது நல்ல எழுத்தாகிய நகாரம். அதன் பயனைப் பாவிகள் அறியவில்லை. அந்தப் பிரமனாலும் அறிய முடியாதது. அதிற் சிவன் தேவியுடன் மகிழ்ந் திருந்தான். **விளக்கம்** : காம நிகழ்விற் காமேசுரன் காமேசுரியாய் இருந்து உலகோரின் போகவிருப்புப் பூர்த்திபெற அநுக்கிரகித்து அருளுகின்றான்.

'நிலைபெறு சுவாதிட்டான நின்சிவ அனலும் நீயும்
இலகிய தன்மை நெஞ்சத்து இறைஞ்சுவம் உரைக்க மாட்டோம்' - ஆனந்தலகரி

**10.8 காயத்திரி மந்திரம் -** நாதப்பிரமமாகிய குடிலையிலிருந்து அகார உகார மகாரமாகிய மூன்றுங் கூடிய பிரணவம் விந்து நாதங்களோடு தோன்ற அவற்றின் கண்ணிலிருந்து அற்புதமும், வேதமந்திர ரூபமும், பலமும் பெருகற்கேதுவான மூன்று பேதபாதத்தாற் காயத்திரி பிறந்தது. 'பரமசிவத்தின் ஞான இச்சா கிரியா சத்தியாகிய ஒளியானது எவ்வாறு ஞான இச்சா கிரியா சத்திகளைச் செலுத்துகின்றதோ அந்த முக்கிய பொருளை, அதாவது அந்தப் பராசத்தி ஒளியைத் தியானிக்கின்றேன்' என்பது காயத்திரியின் பொருளாயிற்று. சிவகாயத்திரி - ஓம் தந்மஹேசாய வித்மஹே வாக்விசுத்நாயதீ மஹி தந்நோசிவ: ப்ரசோதயாத்.

**10.9 சிவ விளக்கம் (நாவலர்) -** அநாதியேயுள்ள முற்றறிவு முற்றுத் தொழிலாகிய சிவத்துவம் எனும் அதிசுத்தம் இயைதலாற்றான் (யி போன்ற ஶீபி) **ஶிவஃ** என்பதில் **ஶ** ஒலியுண்டு. தாது கிடைத்தல் எனப் பொருள்படுதலின் இறுதிக்காலத்து உலகமெல்லாம் தம்மிடத்து ஒடுங்கிக் கிடத்தலாற்றான் சற்சனங்களுடைய மனங்கள் தம்பாற் கிடத்தலினாற்றான் ஶீபி என்னுந் தாது மெலிவித்தலெனவும் கூருவித்தலெனவும் பொருள்படும். ஆதலான் ஆன்மாக்களின் பாசசத்தியை மெலிவித்துச் சிற்சக்தியைக் கூருவித்தலாற்றான் காந்திப் பொருள் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ பூபி என்னுஞ் சொல் வர்ணவிவரியயம் (எழுத்து மாற்றம்) உறுதலினாற்றான் (அவர்) சிவ மெனப்படுவர்.

(**குறிப்பு - 1.** பூபி என்றதன் சரியான வடிவம் மந்திரம் பதம் வன்னம் எனும் சொற்பிரபஞ்சத்தில் ஒன்றான வன்னம் அல்லது அக்கரம் 51ல் உயிரெழுத்து 16 போக மெய்யெழுத்து 35ல் முப்பதாவது எழுத்து. இந்நூலின் பின்னிணைப்பில் வன்னம் என்பதில் வரும். **குறிப்பு 2.** இந்த 51 அட்சரங்களும் 'அகரமுத லெனவுரைசெய் ஐம்பத்தொ ரட்சரமும் ...' எனவரும் திருப்புகழிலும் குறிக்கப்பட்ட பெருமைத்து. **குறிப்பு 3**- இவ் வைம்பத் தொன்றில் உ, ஊ, ஒ, ஔ, ஹ, ஷ, ல, ணு, த, ந, வ, ய என்பன தமிழ் மற்றும் சம்ஸ்கிருதத்தில் மிகச்சிறு மாற்றத்துடன் உள்ளன. ஏனையவை அதற்கு முற்பட்ட தேவநாகரியிலும் உள்ளன.)

**10.10 இந்து பற்றிய மேலதிகக் குறிப்புகள்:-** (ஆதாரம்)'யாதுமாகி' பப்ளிக்கேஷன் டிசம்பர் 2002) இந்து எனும் இடைக்கால சொற்பிரயோகத்தால் அனாதியான சைவம் திட்டமிட்டு நசுக்கப்படுதலை காலஞ்சென்ற கலாநிதி பண்டிதர் மு.கந்தையா உட்படப் பல அறிஞர்கள் ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியும் பலன் மிகச் சிறிதாகவேயுள்ளது. காரணம் நுணுக்கமான அதன் தாக்கத்தைப் புரிபவர்கள் உண்மைச் சிவநெறி நிற்பவர்கள் மட்டுமே. அத்தகையோர் தொகை குறைவடையும் நிலையில் எழும் இந்நூலின் நோக்கத்தை நிறைவுசெய்ய மீளமீள இதனைத் தெளிவுபடுத்தல் நங்கடனன்றோ. விடாப்பிடியாக இந்துவெனுஞ் சொல்லை ஆதரிப்போர் சனாதன சிவசமயமான சைவத்தை அதன் சித்தாந்த தத்துவத்தை அறியாதது மட்டுமல்ல ஏலவே தாம் சமயப்போர்வையுட் பெற்றுவந்த சமூக, அரசியல் சார்ந்த பெயர், புகழ் முதலிய உலோகாயத ஆதாயங்களைக் காப்பாற்றத் துடிப்பவர்கள். ஏலவே இந்நூலிற் குறிப்பிட்ட இந்து, ஆகம (கோயில்)வழிபாடு, பிராமணீயம், ஸ்மார்த்தம், சங்கரர் கொள்கை, அவர் பெயராலியங்கும் மடம் என்பன பற்றி ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளோம். இவற்றைத் தொகுக்கும் படியான விதத்தில் 'யாதுமாகி பப்ளிகேசன் 'என்ற சஞ்சிகையின் ஆதாரத்துடனும் எமது குறிப்புகளுடனும் மேலதிகச் செய்திகளைத் தருகின்றோம். நீறு பூசும் ஒவ்வொரு சைவனும் இதனை யறிந்து திருநீற்றின் ஒளிவிளங்கச் செய்தல் அவர்தங் கடன் என்பதனை மிக ஆர்வத்தடன் தெரிவிக்க விளைகின்றோம். இக்கருத்துக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சஞ்சிகை முறைப்படியாகத் தகுந்த துறைசார் பேராசிரியர்களின் பேட்டிகள் மூலம் எடுத்தளித்திருப்பது கவனத்திற் கொள்ள வேண்டியது. 'இந்து' என்ற சொல்லும் அதன் அடிப்படையும் பொது(வெகு) மக்களுக்கு எதிரானவை. ஆனால் படித்த நகர்ப்புறஞ் சார்ந்த, ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் 'இந்து' எனுஞ் சொல்லால் ஏமாந்து போகிறார்கள். கிறித்தவர், இஸ்லாமியர், பௌத்தர் என்பது போல இந்துவும் ஒரு (சமய)அடையாளச் சொல் என நம்புகின்றனர். (**குறிப்பு 1**. குறிப்பாக இந்தியாவைப் பொறுத்தமட்டில் சாதி என்பதுதான் பிரதானமான அடையாளம். இலங்கையிலும் அது இருக்கவே செய்தாலும் பெரும் பிரச்சனையாக அது உருவெடுக்கவில்லை. மத அடையாளம் மேற்சாதியினருக்கு என்பதும் நோக்கத் தக்கது.) பிரதான அம்சங்கள் சில :-

**1. சொற்பொருள்** - இந்து என்ற சொல் இந்தியாவிலே பிறந்த வேதங்களிலோ, உபநிஷதங்களிலோ, ஆரண்யகங்களிலோ, பிராமண்யங்களெனும் பழைய இலக்கியங்களிலோ இராமாயண, பாரத இதிகாசங்களிலோ இல்லை. (**குறிப்பு 2**- கிறித்துவுக்கு முன்பின்னான சங்கத்தமிழ் முதலாகத் தொடர்ந்த பன்னிரு (சைவத்) திருமுறைகள், ஆழ்வார் பாசுரங்கள் 14ம் நூற்றாண்டைய மெய்கண்ட சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள், திருப்புகழ், வள்ளலார் பாடல்கள் உள்ளிட்ட எதிலும் இந்து எனுஞ் சொல் பாவிக்கப்படவில்லை). இச்சொல் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பாவிலிருந்து கீழ்த்திசை நாடுகள் பற்றி ஆராய வந்தவர்களாற் பயன்படுத்தப்பட்ட சொல். இந்திய மொழிகள் எதிலும் இச்சொல்லுக்கு வேர் கிடையாது. எனினும் இச்சொற் பயன்பாடு எத்தகைய தாக்கத்தைத் தருகின்றது, தந்தது என்பதைச் சங்கராச்சாரியாரின் 'தெய்வத்தின் குரல்' புலப்படுத்துதலை ஊன்றி அவதானித்தாற் புரியும். அதில் "இந்து வெனும் பொதுப் பெயரால் நாம் பிழைத்தோம்" எனக் குறிப்பிடப் பட்டதிலிருந்து பிராமணர் அச்சொல்லுக்கான அதிகார அங்கீகாரத்தைப் பிரித்தானிய காலணியாட்சியிற் பெற்றுப் பயனடைந்தனர். இன்று ஆர். எஸ். எஸ். காரர் கொண்டாடும் சேர் வில்லியம் யோன்ஸ் என்பவர் 1799ல் உள்ளக நீதி நெறிகளைத் தொகுக்கையில் அதற்கு **Hindu law** எனப் பெயரிட்டார். இதனால் இந்துவெனுஞ் சொல் அரச அங்கீகாரம் பெற்றது. **குறிப்பு 3** - பாரதத்தைப் பிரித்தானியர் வரமுன் நெடுங்காலமாக ஆண்ட தமிழ் நாட்டு மூவேந்தருள்ளிட்ட வட, மத்திய, தென்பகுதி மன்னராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் இந்துவெனுஞ் சொல் பாவனையிலிருந்ததில்லை. பாரதத்தின் வடமேற் பாய்கின்ற ஆறு, சந்திரன் என்பன இந்துவெனப் படுதலுக்கும் சமயங்குறித்த பிரித்தானியரின் இச்சொல்லுக்கும் சம்பந்த மேதுமில்லை. மேலும், இச்சொல்லுக்கு திராவிட, ஆரிய மொழிகளிலோ அவர் தம் சமயங்களிலோ அங்கீகாரம் இல்லை.)

**2. இந்துவிற்கான பழைய சொல் யாது?** - இந்து நதிக்கு இப்பால் வாழும் மக்களைக் குறிப்பதற்கு வெள்ளைக்காரர் இச்சொல்லைப் பயன்படுத்தினர். நம் நாட்டில் (இந்திய, இலங்கை) பழைய இனப் பாகுபாடாய் இரு மொழிக்குடும்பங்களை - கலாசாரங்களைக் குறிக்குஞ் சொற்கள் ஆரியமும் (பிற்கூறு சிங்களம்) திராவிடமும் (முற்கூறு தமிழ்) தான். இவையே மிகப்பழைய அங்கீகாரங் கொண்டவை. சங்க காலத்தில் ஆரியம் என்ற சொல் "ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் ' என வடநாட்டாரைக் குறித்து வந்துள்ளது. **குறிப்பு 4.-** தமிழ் கி.பி. முன்னான சங்ககாலத்திற்கு முந்திய பழமை வாய்ந்தது. அதில் வரும் பாடல்கள் 'என்மனார் புலவர்' என இருத்தலின் சங்கந் தோன்ற முன்னாகவே தமிழ்ப் புலவர் இருந்தமை தெளிவாகின்றது.) திராவிடம் என்ற சொல் 13ஆம் நூற்றாண்டிலிருந்து முதலில் வடமொழி நூல்களில் தென்னாட்டவரைக் குறித்து வந்திருக்கின்றது. **குறிப்பு 5-** மதத்தில் இந்து, மொழியில் திராவிடம் போலவே இசையில் கருநாடகம் என்ற சொல்லாட்சி வந்ததனை எமது 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்ற ஆய்வு நூலிற் குறிப்பிட்டுள்ளோம். அதன்படி, அவ்வக்கால ஆட்சியாளர் செல்வாக்கினால் அவர்கள் தேவைக்கேற்ப இத்தகு சொல்லாட்சிகள் ஆக்கம் பெற்று அதனால் அவை அவ்வம் மொழிசார் ஆட்சிக்குப் பயன்பட்டன.) திராவிடம் என்ற சொல் தமிழ்நாட்டில் உருவானதற்கு ஆதாரமில்லை. **குறிப்பு 6** - த்ரீ, திரீ, திரி என்பவை முறையே ஸமஸ்கிருத, ஆங்கில (இது ஆரியக் குடும்பத்தின் பிற்கால மொழி), தமிழ் மொழிகள் குறிக்கும் மூன்றைக் கருதும். திரிகோண (தக்கண) வடிவிலமைந்த தென்பாரதம் அதற்கு வடக்காக உள்ளவர்களால் திர(ா)விடம் எனப்பட்டதென்பது அங்கீகரிக்கத் தகுந்ததே. முற்குறித்த கருநாடக (சங்கீதம்) என்பதில் அச்சொல் பழமையான (தமிழ்) இசை என்பதையே கருதிற்று. காலப்போக்கில் தெலுங்கரின் ஆட்சியில் அந்த இசை அவர்களால் வளர்க்கப்பட்டு கருநாடக சங்கீதமாயிற் றென்பது. உண்மை. பாணர், கூத்தர், விறலியர் என்ற இசைக் குழுமங்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பண்பாட்டுடன் சங்கமித்திருக்கையில் தமிழிசை ( பாணபத்திரன் வரலாற்றில் சிவன் தமிழிசை பாடியமை - திருவிளையாடற் புராணம் ) எனவொன்று இருந்திருக்கவில்லை என்பார் பற்றி என்னதான் கூறுவது?. அவர்கள் தம் கருநாடக இசைக் குருமாருக்கு அடிபணிந்தே அப்படிக் கூறுகின்றனர்).

திராவிடம் என்ற சொல் தென்னாட்டு மக்கள் மொழியாகவும் சிறப்பாக தமிழர் மொழியாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நம்மாழ்வாரின் திருவாய்மொழி "திராவிட உபநிஷத்" எனப்படுகின்றது. இரவீந்திரநாத் தாகூர் நான்கு தென்மாநில மொழிகளை திராவிடமென பாரத தேசியகீதத்திற் குறிப்பிடுகின்றார். இதனால் ஆரிய, திராவிட என்ற சொற்களுக்கமைந்த வரலாறு போல இந்து என்ற சொல் மரபு ரீதியிலான வரலாறு பெறாதமை தெளிவாகின்றது.

**3. இந்துக்கள் என யாரைக் குறிக்கலாம்.?** அரச அங்கீகாரம் பெற்றிருந்தாலும் இந்துவென்ற சொல் சமயச் சார்புடைய சொல் அல்ல. அதற்கு நேரிடையான வரைபு கிடையாது. கிறித்தவர், இஸ்லாமியர், பார்சியர் அல்லாத இந்தியர் (பரிதாபமாக) இந்துக்கள் எனப்பட்டனர் என்பதே கசப்பான உண்மை. (**குறிப்பு 7 -** இந்துவென்பது பாரதத்திற் தோன்றிய சமயமெனக் கொள்ளின் கடவுளை ஏற்காத புத்தமும் இந்து வெனப்படலாமே என்பது ஜவஹர்லால் நேருவின் ஆதங்கம். அவரும் இந்து என்பது மதஞ்சார்ந்த சொல்லல்ல வென்கின்றார்). ஒரு மதத்திற்கு அதன் கடவுள், ஆகமங்கள் (சமயநூல்கள்), குறித்த வழிபாட்டு நெறிகள் (சைவத்தில் இந்நூல் சிவஞானபோதம்) என்பன அடிப்படையான அம்சங்கள். பதி பசு பாசக் கொள்கை எனவும் கருதலாம். இந்துவிற்கு இத்தகு அடையாளம் ஏதுமில்லை. இதன் விளைவாக, சட்டப்படி இந்துக்களெனப்பட்ட சீக்கியர் இன்று தாம் இந்துக்களல்ல என்கின்றனர்.

**4. சைவமும் வைணவமும் -** சைவம், வைணவம், ஸ்மார்த்தம் அல்லாத 100க்கு மேற்பட்ட வழிபாட்டுமுறை பயிலும் மக்கட்திரள்கள் பாரதத்திலுண்டு. அ) **ஸ்மார்த்தர்** - இவர்கள் வேதத்தை மட்டும் நம்புபவர்கள். கடவுளை மதிக்காதவர். ஆ) **சைவர்** - சிவனை முழுமுதற் பொருளாகவும் கடவுளாகவும் கொள்பவர்கள்.(விபரம் இந்நூலில் உண்டு). சிவன் கோவிலின் கருவறையுள் நுழைபவர்கள் சிறப்பாக சிவப்பிராமணர். பொதுவாகப் பிராமணர் எனப்படும் எல்லாருமல்ல. இ) அதுபோலவே **வைணவப்** பிராமணருமாம். ஈ) **'ஐயர்'** வேதங்களை மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புபவர்கள். வேதம் ஸ்மிருதி (சொல்லப்படுவது) எனவும் படும். இது குருசீடமுறையிற் சொல்லவும் கேட்கவும் படுவது. பார்ப்பன ரல்லாத பிறர் அறியாதவண்ணம் மறைத்துத் தாமே மனப்பாடம் செய்து வைப்பர். இங்ஙனமாதலின் அது 'மறை' எனப்படலாயிற்று. ஸ்மிருதியே அவர்களின் கடவுள். இவர்கள் ஆதிசங்கரருக்குப் பின்னர் (அவரின்) அத்வைதக் கொள்கை சார்ந்தவர்கள் **குறிப்பு 8** - இந்நூலிற்கூறிய சுமார்த்தர் பற்றிய கருத்துக்களுடன் ஒப்ப நோக்கின் ஸ்மிருதியென்பது வேதம் என்பதைவிட அதனைத் தழுவி மனுமுதலியோர் செய்த ஸ்மிருதி (நினைப்புகள்) என்ற கருத்தும் நோக்கற்பாலது.) 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' என்றபடி அத்வைதப்பொருள் சங்கரர், மாத்துவிகர் முதலானோரால் மாறுபடினும் சைவசித்தாந்தம் அதன் உண்மைநிலை கண்டமையினை ஏலவே கூறியிருந்தோம்.

ஸ்மார்த்தர்களுக்கு பரமார்த்திகமெனும் உயர்ந்த தத்துவ நிலையிலே கடவுள் என்றொருவர் கிடையாது. ஆதலால் இதுவும் நாத்திக மெனப்படத் தகுந்ததே. கோவிலுள் வடமொழி அர்ச்சனைக்குப் பதிலாக வேதத்தை மட்டும் சொல்வர். இது தகாதது. கோவிலுள் இடைகழி மண்டபத்தினையுந் தாண்டியே வேதமோதவேண்டும். இதனால் பார்ப்பனர் வேதபார்ப்பனர் கோயிற் பார்ப்பனர் என இருவகைப்பட்டுள்ளனர். கோயிலிலும் சைவ, வைணவ என இருவகைப் பார்ப்பனர் உள்ளனர். இவர்கள் சிவாச்சாரியார், பட்டாசாரியார் எனப்படுவர்.
உ) இவ் விருவகையினரும் சாதி அடிப்படையில் மேலும் வேறுபடுவர்.
ஊ) இந்நெறிகளுள் வராத கீழ்நிலைத் தெய்வங்களான மாடன், காடன், மற்றும் பல்வேறான பெயரடை கொண்ட அம்மன் முதலியவற்றை வணங்குவோரும் உள்ளனர்.
**குறிப்பு 10 -** இவர்களே எண்ணிக்கையில் அதிகமென்பது உண்மையான வீட்டுநிலை பெறும் நெறியினரின் குறைவினைக் காட்டி நிற்கின்றது. பெரும்பாலானோர் உலோகாயத இடைநிலைக் காமியப் பேற்றினையே விரும்புகின்றனர். இதன் காரணம், இந்நூலிற் குறித்த 'ஊனடைந்த உடம்பின் பிறவியே தானடைந்த உறுதியைச் சாருமால் தேனடைந்த மலர்ப்பொழிற் தில்லையுள் மாநடஞ்செயும் வரதர்பொற் றாழ்தொழ' என்ற பாடற்பொருளை உணராமையேதான்.)

**5. சங்கரராச்சாரியார் -** இவர் மேற்குறித்த கடவுளை நம்பாத ஸ்மார்த்தப் பிரிவினைச் சார்ந்தவரே. ஆயினும் பல்வேறு காரணங்களுக்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலுக்குச் செல்கின்றார் என ஆய்வினர் குறிப்பிடுகின்றனர். முக்கிய காரணம் தாமும் ஆஸ்த்திகரே என மக்கள் மத்தியில் அறிமுக மாதற்காம். கோயில் பல்வேறு மக்களுங் கூடுமிடம். ஸ்மார்த்தர் தவிர பெரும்பாலானவர் கடவுளைப் பயபக்தியுடன் வழிபட்டு உய்திபெறவே அங்கே செல்கின்றனர். (கதிர்காம முருகனை வணங்காதவர்களே இல்லை என்பது இலங்கையிற் கண்கண்ட உண்மை.) **அஹம் பிரமாஸ்மி** யென்பதைக் கடவுளுந் தாமும் ஒன்றென்பவர்க்கு ஏது கடவுளுறைவிடமான கோயில்வணக்கம்.) **குறிப்பு 11. இச்சொல் உட்பட்ட வேத மஹா வாக்கியங்களின் உண்மைப்பொருள் சைவசித்தாந்தத்திற்கு என்றும் முரணானவை யல்ல. தாம்தாம் கருதும் அவசித்தாந்தப் பொருளினால் வேறுபடுதல் வேதத்தின் தவறல்ல.** இச்சொல் யானே பிரமமென வெளித்தோற்றத்திற் படினும் உண்மையில் அது ' சிவோகம்பாவனை' யைக் குறிக்கும் சொல். விபரம் இந்நூலிலுண்டு.) திருநீறு பூசும் அவர் தம் கையெழுத்தினை "நாராயண ஸ்மிருதி" யெனப் போடுவார். பிறருக்கு சைவ மடாதிபதிகள் போல நீறளிப்பதில்லை. சிவபூசை, வைணவஆராதனை யென்பவற்றிற்காய தராதரமற்றதால் அவற்றைச் செய்வதில்லை. ஸ்மிருதிகளைச் சொல்வதையே கடவுளாகக் கொள்வர். இனி, காமகோடி பீடம் என்ற சொல்லும் பிரச்சினைக்காய தென்பதும் ஆய்வாளர் நோக்கு.

**6. ஆகம வழிபாடு -** இது ஆலயஞ்சார்ந்த பூசைகள் வழிமுறைகளின் தொகுப்பாகும். உதாரணம் சிவாலயங்களுக்குக் காரணாகமம், காமியாகமம். இவை வட தென்(தமிழ்) மொழிகளில் இருந்தன. சைவம் வைணவம் இரண்டும் வெவ்வேறான ஆகமங்கள் கொண்டவை. இவை வேதசம்பந்தமற்றவை. காரணம் இன்று வழக்கிலில்லாத இந்திர, வருண முதலாய கீழ்நிலைக் கடவுளர்களின் தற்காலிக வேள்விச்சாலைகள் கொண்ட வழிபாடுகளே வேதத்திலிருந்தன. வேதகாலத்தில் கோயில்கள் இருக்கவில்லை. கோயில்களை மதிக்கும் ஆகம வழிபாட்டினர் சங்கராச்சாரியாரை ஏற்பதில்லை. அன்றுமுதல் இன்றுவரை கோவில்கள் ஆகம முறையிலன்றி 'இந்துநெறி', 'இந்துமதம்' என்ற சொல்லடிப்படையில் நடக்கவில்லை. இனி, சில விவேகபூர்வமான நடைமுறைகளை காஞ்சிமடம் கோயில்களை மையயப்படுத்தி இந்துப் போர்வையில் ஆக்கிரமிக்கின்றது. (**குறிப்பு 12 -** கண்கண்ட உண்மையாக சீர்காழி ஞானசம்பந்தர் வாழ்ந்த இடத்தில் பார்ப்பனச் சிறுவர்களுக்கு வேதம் பயில்விக்கின்றனர். அங்குள்ள சுவர்களில் பல பிழைகளுடன் தமிழாகரனான சம்பந்தர் பாடல்கள் சிதைந்த நிலையிலுள்ளன.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.11 மந்திரமும், வடமொழிப் பயனும், அறியாதோர் எதிரலைகளும் -** நூலின் பிரதான பகுதிகளின் நிறைவின் பின் ஒழிபாக, உண்மைக்(கள) நிலைமை யறிந்து மேலதிகமாக வருபவையே 10.4 இலிருந்து எழுதப்படுபவை. இவை முன்கண்ட தலைப்புகளுடன் கூடியவையேயாம். இவ்வகையில் நூலாதாரங்களுடன் எழுதப்படும் கருத்துக்களுங்கூட ஆசாரமின்மை, பக்குவமின்மை, நன்கு சிந்தியாமை, விரிவான நூலறிவு (சுருதி), மதிநுட்பம்(யுக்தி), சுய அனுபவம் என்பன அற்ற நிலையில் சிலரால் மறுதலிக்கப்படுமென்பது சிந்தனைக்கு எட்டியுள்ளது. ஆதலின் நூலினை இறுதிசெய்யமுன் அவற்றை இயன்றவரை தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக மந்திரமோதும் வேதியரை மனம் நோகச் செய்வோர் பற்றி திருமூலர் கூறுவது:-

"மந்திரம் ஓரெழுத் துரைத்த மாதவர், சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர், நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு, வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே'- **பா 533**

அதாவது, மந்திரங்களுக்கு முதன்மையாய் முதலில் ஓதப்படும் சமஸ்டிப் பிரணவமான ஓரெழுத்து ஒருமொழி எனப்படும் ஓம் எனும் பிரணவத்தினை முன்னிறுத்தி ஒதும் குருநிலையிலுள்ளவர் மனம் நோக (அவரோதும் மந்திரங்களை இகழ்தல் முதலான) தீமை செய்தவர் இழிவான பிறப்பான நாயாய் பல்வேறு பிறவியெடுத் துழன்றபின் இழிதொழிலாற்றும் புலையராகி மண்ணில் மடிவர் என்பதாம். **பா254** கூறுவது, தாம் இகழப்பட்டமை காரணமாக சிவனடியார் கலங்கிடின் தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும். இந்திரபதம், மானிட ஆட்சிபீடம் யாவும் நாசமாகும். ஆதலின் முன்கண்டவாறு யாவருங் கூடி, அந்தண்மை காத்து ஆன்மார்த்தம் செய்யும் அந்தணருக்குச் சரீர, பொருள் மற்றும் இடவசதி போன்றவை செய்து உதவுவதுடன் அவரை யாரும் புண்படுத்தாமல் அறங்காவலர், மெய்யடியாருள்ளிட்ட யாவரும் பார்த்துக் கொள்ள வேண்டும். பிரதானமாக அறங்காவலர் அந்தணரிடைப் பரஸ்பர நம்பிக்கையும் அன்பு கலந்த அந்நியோன்யமும் ஆலய சிறப்பிற்கு அத்திபாரமாம்.

இனி இப்பகுதியின் தலைப்பினை நோக்கின் மந்திரங்கள் அந்தணரோதும் வடமொழியிலும் திருமந்திரம், ஏனைத் திருமுறைகள் போன்றவை தென்மொழியிலும் அமைந்தாலும் அவை இடம், பொருள் ஏவல் என்றபடி ஓதும் இடங்கள், நோக்கங்கள், வேளைகளுக்கேற்ப மாறுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகள் இராசராசன் காலந்தொட்டோ அதற்கும் முன்னராகவோ சரியாகவேயுள்ளன.

**குறிப்பு:-** அரசவை அறிஞரை, குருமாரை ஆலோசித்து ஆண்ட மன்னராட்சி நீங்கி இன்று சைவத்தமிழரின் ஆட்சியற்ற மேய்ப்பாரற்ற நிலையிற் குழப்பங்கள் ஏற்படவே செய்யும். இதற்கு உறுதிமிக்கோரின் செயற்பாடுகள் அவசியம் என்பதும் ஏலவே யோகசுவாமி போன்றோரால் உணரப்பட்டுமன்றி எதிர்வுகளும் கூறப்பட்டுள்ளன. 'யாவும் எப்பவோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்புமில்லை' யென்ற அவரே, 'நீங்கள் ஒன்றும் அவர்களிடமிருந்து பெறமாட்டீர்கள் கந்தபுராணம் படியுங்கள்' என்றமையும் சிந்திக்கப்பட வேண்டியதே. நாமே நமக்கு விதிவழி.) இதிகாசம், புராணம், திருமுறை, சித்தாந்தம் எதிலும் வடமொழி மதிக்கப்பட்டே வந்துள்ளமையும் காண்க.

மன்னரால் ஏற்படுத்தப்பட்டுக் காலாகாலமாக - மரபாக வந்த நடைமுறைகள் குறிப்பாக இலங்கையில் இன்றும் நிலைப்பினும், போர்ச்சூழலால் அன்னிய ஆதிக்கம் தலைதூக்கப்பட்டதால், மரபுகள், கீதையிற் கூறியபடி தள்ளாடும் நிலை உருவாகியுள்ளன. முதிர்ச்சி நிலைப் பேராசிரியர்களும் இந்நிலைபற்றி ஆதங்கப்படுகின்றனர். மேலும் அத்தகையோர் பார்வையிற் தென்னிந்திய அரசாட்சியினரின் வாக்குவங்கித் தேவைகளுக்காக தனித்தமிழ்ப் பூசை ஊக்கப்படுத்தப் படுகின்றது. சமுகத்தில் தாழ்ந்தோர் தொகை பெருகுவதாலும் அவர்கள் பிராகிருதர் எனும்படியான ஆன்மீகத்தேடல் அற்ற சமூகமாக இருப்பதாலும் அவரை வசீகரிக்க சிறுசமூகமாயுள்ள அந்தண்மை மிக்கோர் செயலை இழிவுபடுத்தவும் இடைஞ்சற்படுத்தவுங் கங்கணங்கட்டி நிற்கின்றனர். இத்தனை ஆயிரங் கோயிற் தெய்வங்களும் சினிமா முதற்கொண்ட சைவ இழிவுபடுத்தலைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனவா?

**எமது பதிலாக வரக்கூடியது,** நூல்வாயிலாக மந்திரம் பற்றி:- சித்தியார் பாடல்களான 77- மந்திர மத்துவாவின், 78- சுத்தமாம் விந்துத் தன்னில், 259- 'மந்திரங்கள் முதலைந்தும், 260- வித்தையின் மந்திர மிரண்டு, 261- சாந்தியா தீதகலை தன்னின் மந்திரங்கள், அப்பரின் விண்ணுற வடுக்கிய என்ற பாக்களின் முழுக் கருத்தையும் கற்றுணர்க என்பதாம். ஒன்றைப்பற்றி விமர்சிக்கமுன் அதுபற்றி ஆயவேண்டியது தர்மம். ஆதலின் மறுப்போர் தாமே கற்றுணர்ந்து தெளிகவெனவிடுக. அருட் குறிப்பினால் அவரும் மற்றையோரும் அப்பாக்களின் பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவிலுணரத் திருவாவடுதுறை ஆதீனத்தால் வெளியிடப்பட்ட நூலிலுள்ள அத்துவாக்களின் சித்திரங்கள் 467, 68, 69 பக்கங்களில் வரும். உயிர்களை உய்விக்கும் 6 வழி-அத்துவாக்களில் மந்திரம் என்பது சொற்பிரபஞ்ச வழியாகும். தெளிவுரை 7.10, 7.13, 7.5ல்காண்க)

மேலும் சித்தியார் ஒன்பதாம் சூத்திர 8ஆம் (300ம்)பாடல் "அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும் **அரனுருவும் அஞ்செலுத்தால் அமைந்தவையும் அறிந்திட்டு**" எனவருகின்றது. நம்மவர் வாக்கிலும் மனதிலும் அகப்படாது, ஞானிகளின் அறிவிற் தோன்றும் சிவன் சாமானியர் கும்பிடும்வண்ணம் ஆலயங்களில் - கற்சிலையில் பிராமணோத்தமரின் மந்திர கிரியை பாவனைகளாலே வெளிப்பட்டு அடியவருக்கருளுந் திறம் அறிந்து மகிழ்வுகூர ஆடிப்பாடி தத்தம் மொழியிற் பரவித்துதிக்க வெனக் கூறி அறியாதோரை வழிப்படுத்தல் தர்மம். அங்ஙனமின்றி அவரை இகழ்தல் தருமமல்ல. "மந்திர வடிவமாம் சதாசிவ லிங்கம்" என்ற பெரியபுராணப் பாவும் நினைவு கூரத்தக்கது. திருந்திய மொழி யெனும் சமஸ்கிருதத்தின் முன்பாக தேவநாகரியில் மந்திரங்கள் எழுதப்பட்டன. (9.4 ம் பக்கம் பார்க)


**பொதுநோக்கிற் பார்ப்பதாயின்,** மந்திரமென்பது குருவாயிலாக மறைபொருள் உணர்த்துவது. அதற்கு மொழியிலக்கணத்தை விட குறிப்பால் பக்குவப்பட்ட ஒருவர் விளங்குமாறு ஓசை உணர்த்தும் பொருளே பிரதானம். பூசைவேளையிலும் புஸ்பம், ஜலம், கமலம், பத்திரி, கனி போன்றசொற்கள் முறையே பூ, நீர், தேங்காய், வேப்பிலை, தேசிக்காய் போன்றவற்றை கிராமியக் கோயில்களிலுங்கூட அந்தணரல்லாத பூசகர்களால் கையாளப்படுவது இரகசியத்தன்மை காக்கவேயாம். பூசை உதவியாளருக்கே புரியும் சொற்கள் இன்னமும் உண்டு. இரகசியங் காத்தலெனும் உத்தியின் விரிவாகவே அந்தணர் முன்கண்டவாறும் எமது பூசைமுறைகளிற் கூறியவாறும் திரைமறைவில் இறைவனை மந்திர கிரியா பாவனைகளால் கல்லில் வரவழைத்து அவருக்கு வேண்டிய தாம்பூல முட்பட்ட16 வகை உபசாரங்களுஞ் செய்தபின்னரேயே பிறர் கும்பிட்டு உய்திபெறும் படியான பல்வேறு சடங்குகளுடன் கூடிய காமியப்பலன் தரும் வேண்டுதல்கள் கோவில்களில் இடம்பெறுகின்றன. பக்தர் பெறும் இப்பயனை, முறைப்படி அந்தணர்கள் ஆகமநூற் பிரகாரம் அமைத்து அதன் வழி நித்திய நைமித்தியங்களை ஆற்றாமல் யாரும் பெற்றுவிட முடியாதென்பதனை உணர்க.

மந்திரங்களின் சிறப்பம்சமான 7 அந்தங்கள்(கோடிகள்) உடைய சொற்கள் யாவரும் புரியம்படியான சொற்பொருளற்றவை. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை தம்மட்டிற் பூசகருக்கும் இறைவனுக்கும் விளங்குபவை. அவை இன்னதையே குறிக்கும் என்பதனை இந்நூலின் மந்திரங்கள் என்ற அத்தியாய இறுதியிற் காணலாம். ஆயினும் அவற்றின் சந்தங்கள் உச்சரிப்புகளே பொருளை மறைமுகமா யுணர்த்தும் பாங்கிலுள்ளமை அவற்றின் சிறப்பம்சமாகும். மந்திரசுத்தி யென்பது சிவபூசை ஆரம்பத்தில் ஆற்றவெண்டிய பஞ்சசுத்திகளிலொன்று. அச்சுத்தியாவது மந்திரங்களைச் சரியாக சுருதிசுத்தமாக குரு உணர்த்தியவாறு உச்சரிப்பதையே குறிக்கும். அவ்வாறு உச்சரிக்கையில் அது தர்ப்பையால் விஞ்ஞான பூர்வமாக உறிஞ்சப்பட்டு அதனைச் சேருமிடத்தில், உதாரணமாக சிவாக்கினிலிருந்து கும்பத்திலும் (நூலாலாகும் நாடிசந்தானமும் பயனாகும்) அதிலிருந்து சிலாவிக்கிரக மூர்த்தியிலும் சேர்க்கும். மேலும் பிராமணோத்தமரிடங் கேட்டறிந்து, கிரியைகளையும் அவதானிக்குக. பேச்சுமொழிகள் ஆலய மற்றும் கிரியை பிரார்த்தனைக்காய மொழிகளிலிருந்து இன்றும் வேறுபடல் எல்லா மதங்களிலும் உண்டு. உலகவினை முதலாய ஐந்து நல்வினைகளுள் அத்தியான்மிக வினை எனும் **சிவபூசையும்,** அதிமார்க்கவினையெனும் யோகமும், மந்திரவினை அல்லது **ஞானநூற் பயிற்சி** வினைகளும் ஒன்றினினொன்று ஏற்றப் படிமுறையில் உள்ளன.




சுவாதிட்டான முதல் சுழுமுனை மார்க்கமாகச் செல்லும் நமசிவாயப் பஞ்சாக்கரம். இதுவே இறைவனின் நிற்கு நிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்திருமன்ற வெளியீடுகளும் அநுசரணைகளும்

**நூலாசிரியரின் முன்னைய நூல்கள்**

1. கந்தசஷ்டி விரதமும் கந்தபுராணக் கருவும் (கைநூல்) 1997, 2. அந்தணரும் அக்கினி காரியமும் (கைநூல்) 1997, 3. திருப்புகழை விருப்பமொடு (கைநூல்) அநுசரணை 2009, 4. ஏழிசையாய் இசைப்பயனாய் (சிவமுத்தமிழ், வாக்கேயகாரர், இசையாளர்) 612பக்க ஆய்வு நூல். யாழ். பல்கலைக்கழகத்திலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் 2014ல் வெளியிடப்பட்டது.

**சித்தாந்த ஆசிரியர் வி சங்கரப்பிள்ளை அவர்களின் நூல்கள்**

1. சிவத்திரு வடிவங்கள் 2001, 2. பிரணவக் கலை விளக்கு 2003

**மன்ற ஸ்தாபகர் பண்டிதர் கலாநிதி மு.கந்தையா அவர்களின் நூல்கள்.**

1. சனாதன சைவ விளக்கம் (பிரசுரத் தொகுப்பு) 2002, 2. சிவஞானசித்தித் திறவுகோல் (மறுபதிப்பு) 2006, 3. சைவஞான விளக்கம் (கட்டுரை, திருமுகத் தொகுப்பு) 2007, 4. திருக்கேதீஸ்வர மான்மியம் 3ஆம், 5ஆம் காண்டம் 2006 அநுசரணை

**ஏனையவை** - தெய்வத் தமிழிசை (மறுபதிப்பு) 2008 பேராசிரியர் ஞானா குலேந்திரன், 3 திருப்புகழ் அறுபது தெளிவுரை மு. தியாகராசா,

**இறுவட்டுக்கள்** 1. பண்ணிசைப் பயிற்சி, 2. திருவாசக முற்றோ தல், 3. திருப்புகழிசை அறுபது, 4. ஏழிசையாய் இசைப்பயனாய் - 10 கச்சேரிகள். இதில் 70 பாடல்களிற் 10 திருமுறைகள் ஏனை 60ற் பிரதானமானவை தமிழிசை மும்மணிகளினதும் ஏனைய தமிழ் வாக்கேயகாரர்களினதும். சில தெலுங்கிலுமுண்டு.

குறிப்பு : இந்நூலாசிரியரின் நூலாக வரவிருப்பது "இறைகளே டிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைத்த வாழ்வு" எனும் தலைப்பில் தொல்காப்பியமும் தொல்சமயமும் பற்றிய நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. சிவபூசை முறைகள் - காஞ்சி தொண்டைமண்டலஆதீன குருமகாசந்நிதான 1988 குருபூசை விழாவில் மகாவித்துவான் சி அருணைவடிவேல் முதலியார் தொகுத்து, கோவில்பட்டி, திருமுறைமன்றம் வெளியிட்டது.

2. சிவபூசை விளக்கம் - இலங்கை, அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள். திருக்கேதீஸ்வர ஆலய குருகுல வெளியீடு - 1965.

3. சிவபூஜா பத்ததி - பேராசிரியர் சி. சுவர்ணகாளீச்சுரன், 2008.

4. சிவஞானபோத மாபாடியம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், கொடிக்கவி, திருவருட்பயன், திருவுந்தியார்.

5. துகளறுபோதம். 6 (எட்டு) அஷ்டப் பிரகடனங்களில் தத்துவத்திரயம்.

7. பன்னிரு திருமுறைகளிற் பெரும்பாலானவை.

8. புராணங்கள் :- திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பெரியபுராணம், திருக்கேதீஸ்வர மான்மியம். (கலாநிதி பண்டிதர் மு. கந்தையா), தக்ஷிணகைலாச (திருக்கோணேஸ்வர) புராணம்.

9 கந்தர் கலி வெண்பா - குமரகுரூபர சுவாமிகள்.

10. சிவத்திருவடிவங்கள்- சித்தாந்தி வீ.சங்கரப்பிள்ளை - சிவத்திருமன்றம்

11. பிரணவக்கலை விளக்கு- வி.சங்கரப்பிள்ளை - சிவத்திருமன்றம்.

12. தில்லைத் திருக்கோயில் - டாக்டர் ச. மெய்யப்பன்.2009 - சென்னை.

13. சித்தாந்த ஞானக் களஞ்சியம் - இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா நினைவு வெளியீடு 2003.

14. சனாதன சைவ விளக்கம் - கலாநிதி பண்டிதமணி மு கந்தையா, சிவத்திருமன்ற வெளியீடு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 'திருப்புகழை விருப்பமொடு' - சிவத்திருமன்றம். 16. மகாபாரதம்.

16 ஆகமச்சித்திரங்கள் பாகம் 3 - பிரம்மஸ்ரீ சாம்ப - சோமாஸ்கந்த குருக்கள்

17. சித்தாந்த விளக்கப்படம் - சரஸ்வதி மஹால் நூல், ஆய்வு நிலைய வெளியீடு

18. சித்தாந்தப்பட விளக்கம் - திருவாவடுதுறை ஆதீனம்.

19. 'யாதுமாகி பப்ளிகேசன்' டிசம்பர் 2002 ராமசுவாமி கோயில், சன்னதிவீதி, பாளயங்கோட்டை.

20. திருக்குறள், தொல்காப்பியம்

**'புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண் டருள்புரியா நிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை**
**நண்ணறியாமல் நழுவுகின் றார்களேெ - திருமந்திரம்.'**

'ஆரிடர் தெளிய வென்று ஆலமா நீழற் கண்ணே
நாரியின் பாகன் ஞான நற்குரு வானா னென்ன
**நேரிய நெறியில் மக்கள் நிறைவுடன் மகிழ்ந்து வாழ**
**சீரிய எண்ணம் கொள்ளும் சிவத்திரு மன்றம்** வாழ்க''
(முன்னாள் சிவத்திரு மன்றத் தலைவர் புராணவித்தகர் திரு.மு. தியாகராசா அவர்கள் இயற்றியது.)

'சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்' முற்றிற்று.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. மேலதிக பல்குறிப்புகள்

பின்வரும் அத்தியாயங்களிற் சேரவேண்டிய குறிப்புகள்

தீட்சை (தீக்ஷை) – (2.1 ப9, 7.1.1 ப194) தீட்சை முறைகளால் மலங்கள் கழலும் முறை :- தீ – தானம். க்ஷீ – க்ஷயம் (சேதம்). புத்தி முத்தி தானமும் பாசக்ஷயமும் செய்வது தீக்கை. விபரம் - 'நோக்கான் மாயைபரிசத்தா லுண்மைவினை மந்திரச் சொல்லாற், றாக்குஞ்சுத்த மாயையது தியானந் தன்னாற் சாருமலம், பார்க்குமிகு பாவனையா லேபகைத்த திரோதம் யோகத்தாற், றேக்குமான்மா போதமிவை சேரக் கழலுங் கண்டீரே'. (பொருள் 2.1ன் இறுதி பார்க்க)

**'சிவாயநம' 'சி'** ஆதல் - (3.1 ப36) முத்திவிரும்பிச் சிவ பூசை புரிவோர் தமது கிரியா யோக பலத்தால் ஞானங் கைவர வேண்டிக் குருவாகி உள்நின் றுணர்த்தும் சிவனரு ளால் ஓதும் முறை :- சிவாயநம – சிவயவசி - சிவய - சியவ - சிவ - சி (பட்டினத்தார் பாடல்)

'மாயநட் டோரையும் மாயா மலமெனும் மாதரையும், வீயவிட்
டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந் தாயுடன்
கூடிப்பின் தாதையைச் சேர்ந்துபின் றாயைமறந் தேயும
தேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே'-

பதிப்பிரமாணம்-சிவம் - 3.2(ஊ) ப39, 7.10.1 ப253

பாசஞான பதிஞானங்களால் அறியப்படாதவராய், சுட்டுணர் விறந் தறிதலாகிய பதிஞான மொன்றாலே அறியப்படும் ஞான சூரியனா யுள்ளவர் . சிவப்பிரகாசப் பாடல் :-

பலகலைஆ கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான் நிலவும்அரு
உருவின்றிக் குணங்குறிக ளின்றி நின்மலமாய் ஏகமாய்
நித்த மாகி அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆநந்த உருவா யன்றிச் செலவரிதாய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வதுதற்
சிவமென்பர் தெளிந்து ளோரே'

தெரிதல் - கூறுசெய்தல் - பகுத்தறிதல், அலகி லுயிர்க் குணர் வாகி - எண்ணிறந்த ஆன்மாக்களுக்கு அறிவாகி, அசலமாய் - சலிப்பற்றதாய்-அசைவிலதாய், அகண்டிதமாய் - கூறுபடாததாய், அன்றிச் செலவரிதாய் - மாறுபட்டவர்களுக்குச் சென்று கூடுதற் கரிதாய், செல்கதியாய் - வழிபட்டவர் சென்று பொருந்துகைக் கிடமாகிய முத்திநெறியாய், தற்சிவம் - உண்மையான சிவம்.

பரிதியின் கிரணங்கள் - சத்திரூபங்கள் - (3.2(7) ப45)

பரிதியிற் கிரணம்போற் பிரிவுற்றுச் சமவாயம் (ஒருபொருளின் இருதன்மை) ஆகியும், அநந்தசத்தி ரூபையாயுமுள்ளவள் பராசத்தி. சித்தாந்தப் படத்தின் மேலே சூரியனைப்போல கிரணங்களை வீசிக்கொண்டிருப்பதுதான் ஞானசூரியன் என்னும் சிவசூரியன். ஆதிற் தோன்றிச் சூழப்பிரிந்து நிற்குங் கதிர்கள் கடவுளின் அநந்தசக்திகளைக் குறிக்கும். ஆக்கிரணக் கற்றைகளின் தொகுப்பே பராசத்தியாகும்.

சிவசூரியன் - 6 ப91, 7.7 ப250 உபதேசவிளக்கம்

'சூரியன் சிவன்கண் சீவன் சுடரொளி யருண்ம லந்தான்
கூரிரு ளாகுங் கண்டான் கொள்ளிரு ளொளியா நீங்கிச்
சூரிய ஒளிநேர் நிற்கிற் சூரிய னாமக் காலைப் பேரிரு
ளொளியாய் நித்தியம் பெறுந்திரி பொருண்மழந் திப்பால்.'

சூரியன் சிவனின் கண். சீவன் தனக்கன்னியமான மலத்தோ டத்துவிதப் படலால் தனது சுயஒளி (அறிவு) மழுங்கி மயக்க இருளடையும். சிவத்தை மறைக்கும் திரோதம் விலகிச் சிவசூரிய ஒளியோடு நேர்நிற்கின் அது தன் சுய ஒளியான சூரியஒளி பெறும். ஆதனால் இருளகன்று யாவும் ஞானஒளி மயமாய் சிவத்தோடொன்றி அத்துவிதப்பட்டு என்றும் இன்புற் றிருக்கும் எனப் பொருள் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையிற் சிந்திக்கவேண்டிய மேலுஞ்சில பாடல்கள்:

அ. 'சத்தசத்தைச் சாரா தசத்சறியா தங்கண் இவை உய்த்தல்சத சத்தாம் உயிர்.' இத் திருவருட்பயன் பாடல் கூறுவதாவது, சத்தாகிய சிவத்துக்கு அசத்தாகிய பாசத்தைப் பொருந்தி யறிந்து பொய்யென்று நீங்க வேண்டிவதில்லை. அசத்தாகிய பாசம் சடமாகையினாலே ஒன்றையும் அறியச் செய்யாது. ஆயின், சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பாசத்தையும் விசாரித்தறிகிறது சதசத்தாகிய ஆன்மா. இது, உயிரானது, பளிங்குபோல நிறச்சூழலில் அந்நிறமாயும் வெளி யில் வெள்ளொளியாயும் சூரியஒளியின் உதவியுடன் நிற்றல் போலாம். அதாவது கூகையின் கண்ணுக்கு சூரியப்பிரகாசம் இருளாயிருப்பது போல நிலைபெற்ற ஞானக் கண்ணினாலே காணாத ஆன்மாக்களுக்கு ஞானமெல்லாம் அஞ்ஞானமாயிருக் கும். பதி காட்டக்க காணும் ஞானமென்றும் அவனருளாலே அவன்தாள் வணங்கியென்றும் கூறப்படுவது மிதுவே.

மேலும் இந்நிலையில், ஆன்மா ஞானம்பெறுதற்கு உபாயம் சிவஞானபோததத்தாற் தரப்படும்.

'பன்னிறங் காட்டும் படிகம் போ லிந்திரியந், தன்னிறமே காட்டுந்
தகை நினைந்து – பன்னிறத்துப், பொய்ப்புலனை வேறுணர்ந்து
பொய்பொய்யா மெய்கண், மெய்ப்பொருட்குத் தைவதமாம் வேறு'.

அதாவது, தன்னாற் சாரப்பட்ட பன்னிறங்களினியல்பே தன்னிற் காட்டிநிற்கும் பொது வியல்புடைய படிகம்போலத் தன்னாற் சாரப்பட்ட இந்திரியங்களி னியல்பையே சார்ந்ததன் வண்ண மாய்த் தன்னில் விளக்கிநிற்குந் தனது பொதுவியல்பை முன்ன ராகவே சிந்தித்தறிந்துகொண்டு, பின்னர், அந்நிறங்கள் படிகத் திற்கு வேறென் றறியுமாபோலப் பலவகை இயல்புடைய பொது வியல்பைச் செய்யும் பொறிகளைத் தன்னின் வேறெனத் தெளிந்து அவற்றாலாய அப்பொதுவியல்பு பொய்யா யொழியு மாறு தனது சிறப்பியல்பை உணர்ந்தானாயின் அவ்வசத்தாகிய பொறிகளுக்கு வேறாகிய சிவசத்தினதியல்பு தன்னில் விளங்கச் செய்யுமாகையின் அச்சிவத்திற்கு அடிமையாம் என்ற வாறு. பொது - தனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிய மானவற்றின் தொடர்பாலாயுது சிறப்பு - தனது சுயரூபம். பொதுவினைத் தடத்தம் எனினுமாம்.

பாச, பசு, பதி(இறை) ஞானங்கள் - 7.1.3 ப204

'இருவகையாம் மாயையி லுண்டான ஞான
மெவ்வளவுண் டவ்வளவும் பாச ஞானம் மருவியதற்
போதத்தாற் சித்தி முத்தி மதித்தழுந்து நிட்டைபசு
ஞான மாகும் பரவுமிவை அஞ்ஞானம் பாச ஞானம்
பசுஞானஞ் சுதந்திரஹீ னன்றா னென்றே யிருவகைஞா
னமுநீங்கி யருளா லாவி யீசனடி கூடலிறை ஞான மாமே'
- சிவஞானதீபம்.

சக்திபேதந் தோன்றல் - சதாசிவரூப அகவல் - 3.2(7) ப45, 7.7 ப250, 7.10.5ம் .6ம் ப256

'அன்ன சிவமா யிரமா யதிலொன் றுன்னிய பரையதி
லாயிரத் தொருகூறாதியா யதிலோ ராயிரங் கூற்றொடு
பேத மிச்சை யதிலா யிரம்பிறி விங்குள ஞானம தீரைந்
நூற்றொரு பங்கு தொழிலிவை பஞ்சசத் திகளே'

கடவுள் தனது அபின்னாசத்தியாகிய பராசத்தியை யதிட்டித்து ஆன்மாக்களை மல இருளினின்றும் நீக்கி யிரட்சிக்கத் திருவுளங்கொண்டு அப்பராசத்தியின் ஆயிரத்தொருகூறாக ஆதி சத்தியைத் தோற்றுவிப்பார். அவ்வாறே ஆதிசத்தியின் கூறாக இச்சாசத்தியும் அதன் கூறாக ஞானசத்தியும் அதன் கூறாகக் கிரியாசத்தியும் தோன்றும். பராசத்தி – ஆன்மாக்களுக் கருளும் அனுக்கிரக மாத்திரையாய் அறிந்தும் அறிவித்தும் நிற்கும் ஞானமாகிய சிவசத்தி சொரூபம். ஆதிசத்தி – திரோத மெனும் மறைப்புச்சத்தி. எஞ்சிய வினைகளை யனுபவித்துத் தொலைக்க உயிர்கள் மீளப் படைக்கப்பட்டபோது அவற்றைப் பக்குவப்படுத்துதற்கான அவதரத்திற் தோன்றியதால் ஆதிசத்தி. மலத்தழுந்தி யனுபவம் பெறச் சிவத்தை மறைத்தருளுவதால் அருட்சத்தியுமாம். இச்சாசத்தி – சிவன் ஆன்மாக்களை யிரட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கத் திருவுளங் கொண்டநிலை ஞானசத்தி - இச்சை கொண்ட பின் அவ்வான்மாக்களுக்குரிய வினைப்பயன்களை யறிந்த அவதரம் (நிலை). கிரியாசத்தி – அவ்வா றறிந்தபின் வினைப்பயன்களை ஆன்மாக்களுக்கு ஊட்டும்பொருட்டு அவர் களைப் பிரபஞ்ச காரியத்துட்படுத்தும் அவதரம். இவ்வைந்து சத்திகளையும் சிவன் அதிட்டித்து நின்றலா லவனும் முறையே பரசிவன் திரோபவன், இச்சிதா, நாதா, கர்த்தா எனப்படுவான்.

கடவுள் - தத்துவாதீதம் - 10.1 ப253

எவ்வுயிருக்கும் தலைவராதலின் பதி யெனப்படுவான். (மொஹஞ்சதாரோ ஹரப்பா முத்திரைகளில் யோகசிவனைச் சுற்றிப் பல்வகைப்பட்ட மிருகங்கள் காணப்படுகின்றன.) முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து தத்துவாதீதனாய் உள்ளதாற் கடவுள் எனப்படுவான். அவன் பிரபஞ்சத்தைக் கடந்தும் உள்ளும் நிற்பவ னாதலினாலுங் கடவுள் என்பர்.

சிவதத்துவம் - 7.10.3 ப254, 7.13 ப349

முப்பத்தாறு மாயாதத்துவங்களில் சிருஷ்டி முறையில் முதல் 5(1-5)ஆயும் ஒடுக்கமுறையில் இறுதி5 (32-36) ஆயும் உள்ளது சிவதத்துவம். தத்தவாதீத பரசிவம் கருணையினால் ஆன்மாக் களை யிரட்சிக்க இச்சை கூர்ந்து குடிலையின் ஏகதேசத்தைக் கலக்க அதிலிருந்து 5 சிவதத்துவத்தின் முதலாவதான நாதமும் இதிலிருந்து விந்துவும் தோன்றும். நாதமென்பது சிவசூரியனுடைய கதிர் மாயை (குடிலை)யில் வந்து பொருந் தியவுடன் உண்டாகும் தொனியாகும். இது, நேர் எதிர் ஆகிய மின்சத்தியின் இருகூறுகள் ஒன்றோடொன்று சேரும்போது இடி மின்னல் போலத் தொனியும் பிரகாசமுந் தோன்றுதல் போலாம்.

தோன்றிய நாதத்திலிருந்து விந்து (புள்ளி அல்லது வட்டம்) தோன்றுமென்றது எவ்வாறெனில், தொனியானது ஆகாயத்திற் பரவும்போது உண்டாகும் வட்ட அலைவடிவே யெனலாம். (பௌதிக நூல் பார்க்க). இதை மரபாக வரும் பிள்ளையார் சுழி(உ) குறிக்கும். சுழன்று நீழுதல் முதல் எழுத்தின் ஆரம் பத்தையும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியான நீட்சியையுங் குறிக்கும். புள்ளி சுழன்று வட்டமாதல் (உ ன் கோட்டை நீக்கிக் காணின்)) உலக ஆதிமொழிகளான தமிழ்(அ), வடமொழி என்பவற்றிலும் அவற்றின் கிளைமொழிகளான சிங்களம், ஆங்கிலம்(a) என்பவற் றிலுமுள்ள முதலெழுத்திற் காணப்படும். இது, மொழிகள் யாவும் தத்துவ- இறைசம்பந்தமானவை யென்பதை யுணர்த்தும். எனவே விந்துவிலிருந்து அட்சரங்கள் தோன்றுமென்பது வரிவடிவிற் புள்ளியிலிருந்தும் ஒலிவடிவில் தொனியின் வட்டத்திலிருந்துஞ் சகல எழுத்துக்களுந் தோன்றுவதாம். இதை 'அகர முதல எழத்தெல் லாம்...' என்றார் திருவள்ளுவர். சிவனுக்குத் தன்னியல்பு (சிறப்புியல்பு) கூறும் போது உமாபதியார், 'அகர வுயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில்இறை நிற்கும் நிறைந்து' என்றார். சித்தாந்தப் படத்தில் தத்துவங்கள் மணிக்கூட்டுச் சக்கரம்போற் காட்டப்பட் டிருக் கிறது. அது தத்துவங்களெல்லாம் ஒன்றாலொன் றசைக் கப்பட்டு இயங்குதலைக் குறிக்கும். 'பஞ்சாரம் சக்ரம் பரிவர்த்ததே பிரது' என்பது தைத்திரீய ஆரண்ய மந்திரம். இவ்வைந்து சக்கரங்களுக்கும் படைப்பு முதலாய 5 ஆரங்களையுடைய சக்கரம் மேலுளதென்பதாம். அது தத்தவங் கடந்த பரசிவமாம். 5 ஆரமென்பது 5 சிவதத்துவங்கள். இவை நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை யென்பன. நாதத்துவ அதிபதி சிவமாதலின் அது சிவம் எனவும் படும். அது ஆன்மாக்களுக்கு அறிவை எழுப்பு வது. மேல் விரிவினை அத். 7.10, 7.13ல் பார்க்க.

வேண்டும் வரம் - 7.19 ப363 (கந்தபுராணம்)

சிவனை அடிமுடிதேடியு மறியாப் பிரமவிட்டுணுக்களின் ஆற்றா மைகளைக் கண்டிரங்கிச் சிவன்தன் சோதியுருக் கரந்து மலை (அண்ணாமலை)யாகிக் காட்சிகொடுத்தபோது அவர்கள் செய்த சிவபூசையையேற்றுத் சரணமெனும்படி வேண்டிய வரமழித்தான்.

'வேண்டு நல்வரங் கேண்மினீ ரென்றலும் விசும்பிற் றாண்ட
வம்புரி பகவ! நின் சரணமே யரணாப் பூண்டி டுந்தலை
யன்பருள் என்றலும் புரிந்து காண்ட குந்தழற் சோதியு
ளிமைப்பினிற் கலந்தான்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத்துவாக்களில் (மனிதனில் அமையும்) நான்கு படங்கள் 7.10.10 ப 264, 7.13 ப. 350 நூலிறுதிபார்.

## வன்னம்

வன்னமென்பது வர்ணமென்னும் வடமொழிச் சிதைவு. வர்ணம் - அக்கரம்.

அக்கரங்கள் முன்னர்க் கூறியபடி விந்து சத்தியின் காரியங்களாகும். அவை,

𑌅, 𑌆, 𑌇, 𑌈, 𑌉, 𑌊, 𑌋, 𑍠, 𑌌, 𑍡, 𑌏, 𑌐, 𑌓, 𑌔, 𑌅𑌂, 𑌅𑌃

என்னும் உயிரெழுத்துப் பதினாறும்,

𑌕, 𑌖, 𑌗, 𑌘, 𑌙, 𑌚, 𑌛, 𑌜, 𑌝, 𑌞, 𑌟, 𑌠, 𑌡, 𑌢, 𑌣, 𑌤, 𑌥, 𑌦, 𑌧,

𑌨, 𑌪, 𑌫, 𑌬, 𑌭, 𑌮, 𑌯, 𑌰, 𑌲, 𑌵, 𑌶, 𑌷, 𑌸, 𑌹, 𑌳, 𑌕𑍍𑌷

என்னும் மெய்யெழுத்து முப்பத்தைந்தும் ஆக ஐம்பத்தொன்று. அவற்றுள் 𑌅 முதல் 𑌅𑌃 வரை பதினாறும் சாந்தியாதீத கலையிலும், 𑌕, 𑌖, 𑌗 எனு மூன்றுஞ் சாந்திகலையிலும், 𑌘 முதல் 𑌞 வரை ஏழும் வித்தியாகலையிலும் 𑌟 முதல் 𑌳 வரை இருபத்துநான்கும் பிரதிட்டா கலையிலும், 𑌕𑍍𑌷 ஒன்றும் நிவர்த்தி கலையிலும் அடங்கும்.

அகார முதலிய உயிரெழுத்துக்களுக்கு அதிபதி சிவமும், ககார முதலிய மெய் யெழுத்துக்களுக்கு அதிபதி சத்தியுமாவர். மேலும் அவைகள் எட்டு வர்க்கங்களாகப் பிரிக்கப்படின் அகாராதி பதினாறுக்கும் அதிதேவதை கணேசர்; ககாராதிக்ஷகாராந்த மான ஏழுவர்க்கங்களுக்கும் அதிதேவதை பிராமியாதி சப்தமாதர்கள். அகாராதி பதினாறு எழுத்துக்களும் பராசத்திக்குச் சூக்கும ரூபமென்றும், ககாராதி முப்பத் தைந்து எழுத்துக்களும் தூலரூபமென்றுங் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றிமறத்தல் நன்றன்று.**

பாடசாலைக்கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, இசை மற்றும் பண்பயிற்சி என்பன, முறையே குடும்ப மூத்த (ஆசிரிய) சகோதரர்கள், சங்கீத வித்துவான்களான குப்பிழான் செல்லத்துரை, அளவெட்டி நடராசா, கொல்லன்கலட்டிச் செல்லத்துரை ஆகிய குரவர்களால் அளிக்கப்பட்டமையால் அவர்கள் நன்றிக்குரியவர்கள்.

சித்தாந்தக் கல்வி, சரியை மற்றும் கிரியைப் பயில்வு என்ற வகையில் முறையே கலாநிதி ஏழாலை பண்டிதமணி மு. கந்தையா, பன்னாலை சித்தாந்தி வி. சங்கரப்பிள்ளை, ஏழாலை வடபத்திரகாளி அம்பாள் பூசகர் க. பொன்னுத்துரை, வவுனியா தத்புருஷதேசிகர் சிவராசாக் குருக்கள் ஆகியோரும் மனமார நினைவுகூரப்படுகின்றனர்.

இந்நூலின் சித்தாந்தப் பகுதியையும் எழுத்துப் பிழைகளையும் திருத்தம் செய்த மன்ற உபதலைவரும் தற்புருஷதேசிகரும் சட்டத்தரணியுமான திருமதி க. சொர்ணலிங்கம் அவர்களுக்கும் இதனை முதலில் அச்சுப்பதித்த ஹரே பிறன்ரேஸ் (வெள்ளவத்தை) அவர்களுக்கும், நன்கு வடிவமைத்த ஆர்.எஸ்.ரி நிறுவனத்தாருக்கும், திறம்பட நூலாக்கிய ஹரிகரன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.


யாவற்றுக்கும் மேலாக, சிவனே மானிட குருமூர்த்தமென அடியேனது அண்ணா, அக்கா இருவருக்கும் ஊடாக கனாக்காட்சி மூலம் விஷேட தீட்சையினை வவனியா சிவராசாக் குருக்களிடம் பெறுமாறு உணர்த்தியமை இந்நூலின் உருவாக்கத்திற்கு அடிப்படைக் காரணம் என்பதை நினைந்துருகி நன்றி மீதுருகின்றோம். மேலும் யோகசுவாமிகளின் வாக்கால் சாமானிய குடிப்பிறந்து மேலோர் வழிநடந்து பல்துறையறிவு பெற்றாலும் தகுதிக்கு மேலான ஆசையாலுந்தப்பெற்றெழுதிய இப்புனிதநூலை அங்கீகரிப்பார் யாரோ என ஏங்கிய நிலையில் தெய்வாதீனமான தொடர்புகளால் எம்மைச் சற்றேனும் வாடவிடாது நேரிலும் எழுத்திலும் ஊக்கியோரே இந்நூலைப் பொறுத்தவரை என்றும் மறக்க முடியாதவர்கள். அவர்களின் திருவார்த்தைகளை அணிந்துரை முதலியவற்றிற் காண்க. இறுதியாகப் பிரதான நூல்களைத் தந்துதவிய செ. நவனீதகுமார் M.A, பூ. சோதிநாதன் M.A ஆகியோரும் மறக்க முடியாவர்களே.

1. "குருவே சிவமெனக் கூறினன் நந்தி, குருவே சிவமென் பதுகுறித் தோரார், குருவே சிவனுமாய்க் கோனுமாய்க் நிற்கும், குருவே யுரையுணர் வற்றதோர் கோவே"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. "தன்னை அறிவித்துத் தான்றானாய்ச் செய்தானைப், பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே, தானேதா னாச்செய்தும் தைவமென்றுந் தைவமே, மானே தொழுகை வலி." (1- திருமந்திரம், 2- சிவஞானபோத இறுதி வெண்பா). தான் தானாய்ச் செய்தல் - சிவோகம்பாவனை கைவரச்செய்தல். தைவம் என்றுந்தைவம் - சிவோகம்பாவனை கைவரினும் தெய்வம் தெய்வமே பசு பசுவே. தீட்சைமுறைகளால் உன்னை எண்குணனாக்கும் குருவை இனி மறவாதே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து : ஒளிமயமான சிவாயநம ஓதில் நமசிவாய கலாதிடமானை மூலாதாரம் வழி பிரமரந்திரம் செல்லும் என்பதாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வா | ய | ந | ம |
| ம | சி | வா | ய | ந |
| ந | ம | சி | வா | ய |
| ய | ந | ம | சி | வா |
| வா | ய | ந | ம | சி |

921. மகார நடுவே வளைத்திடுஞ் சத்தியை
ஒகாரம் வளைத்திட் டும்பினைத் தேற்றி
அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரநற் காலது நாடுமே.

பதப்பொருள் : மகாரம் நடுவே வளைத்திடுஞ் சத்தியை - உந்திக் கமலத்தில் வளைந்து சுருண்டு கிடக்கும் குண்டலினி சத்தியை. ஒகாரம் வளைத்திட்டு உம்பினைத் தேற்றி - கீழ்நோக்காது அச்சத்தியை ஒகாரம் விளங்கும் புருவ நடுவுக்குச் செலுத்தி. அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய் - அகாரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிவம் அறிவு மயமாய் இருக்கும் இடம் தலையாகவும். அதன் அக்கினித் தன்மையை வெளிப்படுத்தும் திறன் இரு கண்களில் விளங்குவதாகவும், நகார வகார நற்காலது நாடும் - சுவாதிட்டானத்திலுள்ள அபானனாகிய நகாரம் கண்டத்தில் வகாரமாய் நாதத்தை விளக்கும் சுழுமுனையாவதை விரும்பிப் பெறுங்கள்.

**விளக்கம்** : மகாரம் - உந்திக் கமலம் ஓ + அ + உ. அகரம் உகரம் பொருந்திய இடம் புருவநடு. உம்பினத தேற்றுதலாவது, கீழ்நோக்கும் தன்மை அறநிறுத்தல். இதனால் சி, வா, ய அமைந்து ந, ம கீழ்ப்படுத்தப்படும். நகாரம் நோக்கிச் சென்ற அபானனே வகாரமாய்க் கண்டத்தில் தாலுமூலத்தில் அருட்சத்தியாய் விளங்குகிறது.

**கருத்து** : குருமுகமாகத் தீட்சை பெற்றுச் சாதனம் செய்தால் சூக்கும 8
சிவாலயம் அமையும் என்பதாம்.

**922.** **நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்**
**ஆடு மவர்வாய் அமர்ந்தங்கு நின்றது**
**நாடு நடுவுள் முகநம சிவாய**
**வாடுஞ் சிவாயநம புறவட்டத் தாயதே.**

**பதப்பொருள்** : பிரணவம் நடுவாக இருபக்கமும் நாடும் - விரும்பும் பிரணவத்தை ஆக்ஞையில் நடுவாக இருபக்கமும் பொருந்திய சிவாக்கினியான ஒளியைக் கொண்டு நோக்குங்கள். ஆடும் அவர்வாய் அமர்ந்தங்கு நின்றது - அது அசைவினை உண்டாக்கும் சாதகரது வாயில் பொருந்தி நின்றது. நாடும் நடுவுள் முகம் நமசிவாய - அப்போது அண்ணாக்கினுள்ளே உண்டாவது நமசிவாயவாம். ஆடும் சிவாயநம புற வட்டத்தாயது - பின் வெளியில் சிரசைச் சூழவுள்ள பகுதியில் விளங்குவது சிவாயநம என்பது.

**விளக்கம்** : பிரணவத்தை நடுவாக இருகண் பார்வையையும் பொருத்தி நோக்க வேண்டும். அப்போது அண்ணாக்குப் பிரதேசத்தில் உணர்வாகப் பாய்வது நமசிவய ஆகும். அது சிரசைச் சூழ சோம வட்டமாக விரிந்து விளங்குவதே சிவாயநம ஆகும். 9

**கருத்து** : இதுவே பிரணவயோகம் என்பதாம்.

**923.** **ஆயுஞ் சிவாய நமமசி வாயந**
**வாயு நமசிவா யயநம சிவா**
**வாயுமே வாய நமசிவெனு மந்திர**
**மாயுந் சிகாரந் தொட்டந்தத் தடைவிலே.**

ஆராயப்பெற்ற

சி வா ய ந ம
ம சி வா ய ந
ந ம சி வா ய
ய ந ம சி வா
வா ய ந ம சி

என்னும் மந்திரம் சிகாரந் தொட்டுச் சிகாரம் ஈறாகச் சக்கரத்தில் 10
அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.40 ன் பதப்பொருள் - அவ்வென்ற போதினில் உவ்வெழுத்தாலித்தால் - அகர கலையாகிய சந்திரன் இடக்கண்ணின்மேல் உதிக்க உகர கலையாகிய சூரியன வலப்புறத்திலிருந்து இடப்புறமாக மாதி ஈசானிய திக்கில் அ, உ, ம என்ற மூன்றும் பொருந்தினால். உவ்வென்ற முத்தியுருகிக் கலந்திடும் - உகரத்தால உணர்த்தப்படும் ஒளி கிட்டி நித்தியமான நிலை மறைந்திருந்தது வெளிப்படும். மவ்வென்றென்னுள்ளே வழிப்பட்ட நந்தியை எவ்வணஞ் சொல்லுகேன் - மகரமாகிய அக்கினியில் என்னுடலில் வழிபட்ட குரு மண்டலத்தின் பெருமை எவ்வண்ணம் சொல்லக்கூடும். சிவனின் அழியாத ஒளிநிலையே சத்தி மண்டலமாகிய - ஒளி மண்டலம். ஒளி மண்டலமே குரு மண்டலமாகும். எந்தை இயற்கை - அஃது எந்தையாகிய பரமேசுரனது இயற்கையாம்.

விளக்கம் : முத்தி - முதல் நிலை அல்லது முதற்பொருள். உவ்வென்ற முத்தி உருகிக் கலந்திடல் என்பது, தீட்சைக்கு முன் கன்னித் திக்கில் கன்னி ராசியில் விளங்கிய சூரியன் தீட்சைக்குப் பின் அதன் வட்டம் பூர்த்தியாகிப் பிடரி வழியாக ஈசானிய திக்கில் மீன ராசியை அடையும் என்றபடி. அப்பொழுது ஒளி அமையும் என்க.

கருத்து : பிரணவத் தியானத்தால் உண்டாகிய அனுபவத்தை இயம்ப முடியாது என்பதாம். 40

954. நீரில் எழுத்திவ் வுலக றிவது
வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை அறிவா ரவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் தாமே.

பதப்பொருள் : நீரில் எழுத்திவ் வுலகறிவது - நீர்மேல் எழுத்துப் போல இவ்வுலகியல் அறிவு நிலையற்றதாகும். வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை - சிதாகாய மண்டலத்தில் விளங்கும் பிரணவமாகிய ஓர் எழுத்தைக் கண்டு அதன் அறிவைப் பெறுபவர் யாரும் இல்லை. யாரிவ்வெழுத்தை அறிவாரவர்கள் ஊனில் எழுத்தை உணர்கிலர்தாம்-யாரொருவர் இவ்வெழுத்தை அறிந்தாரோ அவர் பிரமனால் தலையில் எழுதப்படும் எழுத்தை மீளவும் அடையமாட்டார்கள். அதாவது மீண்டும் பிறக்க மாட்டார்கள்.

கருத்து : பிரணவ யோகம் அறிந்தார்க்குப் பிறப்பு அறும் என்பதாம். 41

955. காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்
மாலை நடுவுறு ஐம்பது மாவன
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூலம் நடுவுற முத்திதந் தானே.

பதப்பொருள் : காலை நடுவுறக் காயத்தில் அக்கரம் - சுழுமுனையில் விளங்கும் சிவன் இடகலை பிங்கலையாக உடலில் ஐம்பது அக்கரமாய் நிறைந்தான். மாலை நடுவுற ஐம்பது மாவன - உயிர் மயக்கமுற்றுச் சூரிய கிரணைப் பற்றிய போது அவ்வைம்பதும் விளங்கி நின்றன. மேலை நடுவுற வேதம் விளம்பிய மூலம் நடுவுற முத்தி தந்தான் - சிரசின்மேல் விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிவன் வேதத்தால் புகழ்ந்து கூறப்பட்ட பிரணவத்தை எழுப்பிச் சகஸ்ரதள நடுவில் நிறுத்தினவர்க்கு முத்தியை அளித்தான்.

விளக்கம் : பிரணவமாகிய ஒன்றே ஐம்பது அக்கரங்களாக ஆறு ஆதாரங்களிலும் விரிந்து விளங்கியது. சிரசின் நடுவில் பிரணவத்தை அமைத்தபோது ஐம்பது அக்கரங்களும் இல்லாதொழிந்தன என்க. கால்- சுழுமுனை. மால்- மயக்கம்.

கருத்து : பிரணவத்தை எழுப்பிச் சகஸ்ரதள நடுவில் நிறுத்தினவர்க்கு முத்தி கிட்டும் என்பதாம். 42

956. **நாபியின் கீழது நல்ல எழுத்தொன்று**
**பாவிக ளத்தின் பயனறி வாரில்லை**
**ஓவிய ராலும் அறியவொண் ணாதது**
**தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே.**

**சகஸ்ரதளம்**





சுவாதிட்டான முதல் சுழுமுனை மார்க்கமாகச் செல்லும் நமசிவாயப் பஞ்சாக்கரம். இதுவே இறைவனின் நிற்கு நிலையாகும்.

பதப்பொருள் : நாபியின் கீழது நல்ல எழுத்தொன்று - சுவாதிட்டான சக்கரத்தில் உள்ளது நல்ல எழுத்தாகிய நகாரம். பாவிகளத்தின் பயனறிவாரில்லை - அவ்வெழுத்தின் பயனைப் பாவிகள் அறியவில்லை. ஓவியராலும் அறியவொண்ணாதது - அந்தப் பிரமனாலும் அறிய முடியாதது. தேவியுந் தானுந் திகழ்ந்திருந்தான் - அவ்வெழுத்தில் தேவியும் சிவனும் சிறப்புடன் மகிழ்ந்திருந்தனர்.


விளக்கம் : காமத்திலே காமேசுரன் காமேசுரி வடிவில் இருந்து உலகினர் விருப்பம் பூர்த்தி பெற அனுக்கிரகம் செய்தருளுகின்றான் என்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தத்துவாத்துவா.



வன்ணத்துவா.



பதாத்துவா.





மந்திராத்துவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









எண்கோண லிங்கம்



சிதைந்த செங்கல் அடையாளம்




ஆதி எண்கோண லிங்கம் முன்னாக பிள்ளையார்




எண்கோண லிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இரணை இலுப்பைக் குள எண்கோண லிங்கம்

சரிந்து வைக்கப்பட்டுள்ள எண்கோண லிங்கம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூசை முறைகளிற் சித்தாந்த விளக்கம்

(ஆன்மார்த்தம்)



செ. சொர்ணலிங்கம்

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே.

எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பானாகும் - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகழியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமா காளைதாதை கழலடி காணலாமே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

ISBN 978-955-4767-01-0

விலை - ரூபா 1200

வெளியீடு :

சிவத்திருமன்றம், கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org